இலங்கை மின்சார சபை

# வருடாந்த அறிக்கை

# 2022





# பொருளடக்கம்


எமது நோக்கு, எமது செயற்பணி மற்றும் எமது அடிப்படை விழுமியங்கள் 2
எமது சுற்றுச் சூமல் கொள்கை 3
ஒரே பார்வையில் 4
எங்களது வேலைப் படை 5
கடந்தகாலச் செயலாற்றுகைகள் 6
நிறுவனத் தகவல்கள் 7
நிறுவனக் கட்டமைப்பு 8
துணைக் கம்பனிகளுடன் இ.மி.ச.இன்
நிறுவனக் கட்டமைப்பு 10
தலைவரின் மீளாய்வு 12
பொது முகாமையாளரின் மீளாய்வு 14
இலங்கை மின் பரிமாற்ற முறைமையின் வரைபடம் 16
செ5யற்பாட்டு மீளாய்வு
- மின் பிறப்பாக்கல் பிரிவு 18
- மின் பரிமாற்றப் பிரிவு 24
- விநியோகப் பிரிவுகள் 30
- செயற்றிட்டங்கள் பிரிவு 38
- சொத்து முகாமைத்துவப் பிரிவு 43
- நிறுவன உபாயப் பிரிவு 47
- நிதிசார் இடர் முகாமைத்துவம் 50
- தொழினுட்ப இடர் முகாமைத்துவம் 51
- மின்சாரத் தொழில்துறையின் நிலைபேற்றுத் தன்மைக்கான எமது அனுகுமுறை 53
- நிறுவன சமூகப் பொறுப்புடைமை அறிக்கை 58
- நிதிப் பிரிவு 61
- நிதிசார் மீளாய்வு 65
- பத்து வருடப் பொழிப்பு 70

பெறுமதி சேர்க்கப்பட்ட அறிக்கை 71
நிறுவன ஆளுகை அறிக்கை 72
பணிப்பாளர் சபை 74
பணிப்பாளர்களின் அறிக்கை 76
இலாபம் அல்லது நட்டக் கூற்று 80
முற்றுமடங்கிய வருமானக் கூற்று 81
நிதி நிலைமைக் கூற்று 82
காசுப் பாய்ச்சல் கூற்று 83
உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று - குழுமம் 84
உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று - சபை 86
நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் 87
ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 154
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் 173
சுருக்கக் குறியீடுகள் 243

# எமது நோக்கு

வளமான வாழ்விற்கு மின்சாரம்

# எமது செயற்பணி

எமது அடிப்படை விழுமியங்களைக் கடைப்பிடிக்கின்ற அதே வேளை முழு இலங்கைக்கும் மின்சார வழங்கலில் செயற்றிறனானதும் ஒருங்கிணைக்கப்பட்டதும் சிக்கனமானதுமான முறைமை ஒன்றினை விருத்தி செய்தலும் பேணுதலும்.

# எமது அடிப்படை விழுமியங்கள்

தரம்

பாதுகாப்பு

வினைத்திறனும் விளைதிறனும்

அர்ப்பணிப்பு

நிலைத்திருக்கும்தன்மை

தேசத்திற்கான சேவை

# எமது சுற்றுச்சூழல் கொள்கை



சமனலவேவ நீர்த்தேக்கம்

இ.மி.ச. ஆனது இயற்கையானதும் மனிதனால் உருவாக்கப்பட்டதுமான சுற்றுச்சூழலைப் பேணுவதற்காகவும் நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்காகவும் அதன் சகல வணிக நடவடிக்கைகளையும் பொருத்தமான முறையில் முகாமை செய்கிறது. சுற்றுச்சூழல் பிரச்சினைகளைக் கையாள்வதில் வெளிப்படைத்தன்மையுடன் இருப்பதன் மூலம் பொதுமக்கள், வாடிக்கையாளர்கள், அதிகாரசபைகள், ஊழியர்கள் மற்றும் உரிமையாளர்களின் வகிபாகம் மீதான எமது செயற்பாடுகளில் நம்பகத்தன்மையை உருவாக்குவதற்கு நாங்கள் முனைந்துள்ளோம். எமது செயற்பாடுகளில் சுற்றுச்சூழல் கருத்தாய்வுகளைக் கூட்டிணைத்து ஒருங்கிணைக்கின்ற கொள்கையை நாங்கள் தீவிரமாகப் பின்பற்றுகின்றோம்.

# ஒரே பார்வையில்

தாபிக்கப்பட்டது
1969

தீவளாவிய அடிப்படையில்
இலங்கை

6,936,735 Nos.
மின்சார இணைப்புகள்

14,520 GWh
மின்சார விற்பனை

24,272 Nos.
ஊழியர்கள்
தீவளாவிய ரீதியில்

1,062,344 LKR மில்லியன்
மொத்தச் சொத்துகள்

4,084 MW
மொத்தக் கொள்ளளவு

2,260 MW
மீள்புதுப்பிக்கத்தக்கவையின் கொள்ளளவு

535 MW
மேற்கூரை சூரியசக்தி PV கொள்ளளவு

3,253 km
மின் பரிமாற்ற மார்க்கங்கள்

188,648 km
மின் விநியோக மார்க்கங்கள்

33.65 LKR/kWh
அலகொன்றின் சராசரிக் கிரயம்

21.24 LKR/kWh
அலகொன்றின் விற்பனை விலை

308,457 ரூபா மில்லியன்
வருமானம்

430,509 ரூபா மில்லியன்
விற்பனைக் கிரயம்

# எங்களது வேலைப் படை-2022-12-31 இல்

## வேலைப் படை




## சேவை வகைகள்




## வயதுப் பகுப்பாய்வு




## சேவைப் பகுப்பாய்வு




## வகை ரீதியான பகுப்பாய்வு





லக்ஷபான நீர்த்தேக்கம்

# கடந்தகாலச் செயலாற்றுகைகள்

| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த சக்திப் பிறப்பாக்கம் (GWh) | 11,962 | 12,423 | 13,154 | 14,249 | 14,773 | 15,985 | 16,556 | 16,392 | 17,378 | 16,576 |
| NCRE பிறப்பாக்கம்* (GWh) | 1,179 | 1,217 | 1,467 | 1,160 | 1,464 | 1,832 | 1,761 | 1,866 | 2,922 | 2,937 |
| உயர்ந்தபட்சக் கேள்வி (MW) | 2,164 | 2,152 | 2,283 | 2,453 | 2,523 | 2,616 | 2,669 | 2,717 | 2,802 | 2,708 |
| மின்சார விற்பனை (GWh) | 10,621 | 11,063 | 11,786 | 12,785 | 13,431 | 14,091 | 14,611 | 14,286 | 15,214 | 14,520 |
| நுகர்வோர் கணக்குகள் (Nos.) | 5,210,761 | 5,417,532 | 5,648,132 | 5,964,194 | 6,193,131 | 6,354,281 | 6,500,641 | 6,636,266 | 6,809,528 | 6,936,735 |
| முறைமைச் சக்தி இழப்புகள் (%) | 11.1 | 10.9 | 10.4 | 10.3 | 8.5 | 8.3 | 8.2 | 9.1 | 8.7 | 8.8 |
| வருமானம் (மில்.இல.ரூபா) | 194,147 | 202,645 | 188,684 | 206,811 | 218,450 | 229,571 | 242,950 | 238,911 | 248,776** | 308,457 |
| சராசரி விற்பனை விலை (ரூபா/kWh) – (a) | 17.93 | 18.50 | 16.00 | 16.18 | 16.26 | 16.29 | 16.63 | 16.72 | 16.37 | 21.24 |
| விற்பனைப் புள்ளியில் சராசரிக் கிரயம் (ரூபா/kWh) – (a) | 16.94 | 20.00 | 15.07 | 18.08 | 20.34 | 19.12 | 24.12 | 21.67 | 19.42 | 33.65 |
| ஆண்டின்போது வீடுகளுக்கான மின்னூட்டம் (Nos.) | 198,484 | 178,300 | 198,166 | 277,038 | 181,627 | 118,077 | 108,315 | 98,829 | 125,277 | 94,768 |

* - NCRE (சிறிய நீர்மின், காற்றாலை, சூரியஒளி, தாவர மூலம், உயிர்த்திணிவு மற்றும் மாநகரக் கழிவுகள்)

** - மீளமைக்கப்பட்டது

(a) - தற்காலிகமானது

# நிறுவனத் தகவல்கள்

**சட்ட அமைப்பு**

இலங்கை மின்சார சபை என்பது 1969 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டம், 1979 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றால் திருத்தம் செய்யப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினாலும் 2013 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தினாலும் தாபிக்கப்பட்ட ஒரு நிறுவன அமைப்பாகும்.

**சபை உறுப்பினர்கள்**

**தலைவர்**

திரு. எம். எம். சீ. பேர்டினான்டோ 2022-06-12 வரை
திரு. என். எஸ். இலங்ககோன் 2022-06-13 இலிருந்து இன்று வரை

**துணைத் தலைவர்**

திரு. என். எஸ். இலங்ககோன் 2022-06-12 வரை

**பொதுத் திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்**

திரு. எஸ். டீ. யூட் நிலுக்ஷன் 2022-01-10 வரை
திரு. எம். ஆர். வீ. ஆர். மீபுர 2022-01-11 இலிருந்து இன்று வரை

**உறுப்பினர்கள்**

திரு. எம். எம். நயீமுதீன்
திரு. ஆர். விக்கிரமாராய்ச்சி
கலாநிதி. பி. விஜயரத்ன
திரு. ஜீ. பீ. என். எம். அபேயசேகர
திரு. டீ. பீ. எம். சந்தன 2022-12-12 இலிருந்து இன்று வரை

**சபைச் செயலாளர்**

திருமதி. எச். ஆர். பீ. பத்வேரிய

**பொது முகாமையாளர்**

பொறி. எம். ஆர். ரணதுங்க 2022-01-12 வரை
பொறி. (கலாநிதி) டீ. சீ. ஆர். அபேயசேகர 022-01-13 இலிருந்து 18.12.2022 வரை
பொறி. ஜீ. ஏ. டீ. ஆர். பீ. சேனவிரத்ன 2022-12-19 இலிருந்து

**நிறுவன முகாமை**

**மேலதிகப் பொது முகாமையாளர் (மின் பிறப்பாக்கம்)**

பொறி. ஏ. ஆர். நவமன்னி

**மேலதிகப் பொது முகாமையாளர் (மின் பிரிமாற்றம்)**

பொறி. பீ. டபிள்யு. ஹெந்தஹேவா 2022-05-30 வரை

**மேலதிகப் பொது முகாமையாளர (மின் பரிமாற்றம் - கம்பியில்லாச் செயற்பாடுகள்)**

பொறி. பீ. டபிள்யு. ஹெந்தஹேவா 2022-05-31 இலிருந்து

**மேலதிகப் பொது முகாமையாளர (மின் பரிமாற்றம் - கம்பிச் செயற்பாடுகள்)**

பொறி. எஸ். சீ. தித்தெனிய 2022-05-31 இலிருந்து 2022-12-25 வரை
பொறி. எச். டீ. சீ. ஜயரத்ன 2022-12-26 இலிருந்து

**மேலதிகப் பொது முகாமையாளர் (DD 1)**

பொறி. ஜே. மீகொட

**மேலதிகப் பொது முகாமையாளர் (DD 2)**

பொறி. (திருமதி) ரீ. ஏ. கே. ஜயசேகர

**மேலதிகப் பொது முகாமையாளர் (DD 3)**

பொறி. ஜீ. ஜே. அழுத்கே

**மேலதிகப் பொது முகாமையாளர் (DD 4)**

பொறி. ஜீ. ஏ. டீ. ஆர். பீ. சேனவிரத்ன 2022-12-18 வரை
பொறி. என். டபிள்யு. குமாரசிங்க 2022-12-19 இலிருந்

**மேலதிகப் பொது முகாமையாளர் (சொத்து முகாமை)**

பொறி. கே. கே. எஸ். தசநாயக்க

**மேலதிகப் பொது முகாமையாளர் (நிறுவன உபாயம்)**

பொறி. (கலாநிதி) டீ. சீ. ஆர். அபேயசேகர 2022-01-12 வரை
பொறி. கே. கே. எஸ். தசநாயக்க (பதில்) 2022-02-03 இலிருந்து 2022-12-18 வரை
பொறி. (திருமதி) எம். எம். என். முனவ்வரா 2022-12-19 இலிருந்து

**மேலதிகப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள்)**

பொறி. எச். எஸ். சோமதிலக

**நிதி முகாமையாளர்**

திரு. ரீ. கே. லியனகே

# நிறுவனக் கட்டமைப்பு 2022



பிரதிப் பொது முகாமையாளர் (வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயம்)
பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்பாட்டு உபாயம் மற்றும் செயன்முறை அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (தகவல் தொழினுட்பம்)
பிரதிப் பொது முகாமையாளர் (ஆய்வு மற்றும் அபிவிருத்தி)

பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவனம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்புகள்)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமை மற்றும் நிலைமைக் கண்காணிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (தொடர்பாடல்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு - வடக்கு)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு - தெற்கு)

பிரதிப் பொது முகாமையாளர் (சக்தி சந்தைப்படுத்தல்)
பிரதிப் பொது முகாமையாளர் (சக்திக் கொள்வனவு)
பிரதிப் பொது முகாமையாளர் (தனியார் மின்வலு அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி பெறுகை மற்றும் செயலாற்றுகைக் கண்காணிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (முறைமைக் கட்டுப்பாடு)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்ற வடிவமைப்பு மற்றும் சூழல்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றம் மற்றும் மின் பிறப்பாக்கல் திட்டமிடல்)
மேலதிக நிதி முகாமையாளர் (மின் பரிமாற்றம்)

பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (மத்திய மாகாணம் I)
பிரதிப் பொது முகாமையாளர் (மத்திய மாகாணம் II)
பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம் வடக்கு)
மேலதிக நிதி முகாமையாளர் ( விநியோகப் பிரிவு 2)

பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (தென் மாகாணம் I)
பிரதிப் பொது முகாமையாளர் (தென் மாகாணம் II)
பிரதிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம் தெற்கு I)
செயற்றிட்டப் பணிப்பாளர் (விதுலக்பய)
மேலதிக நிதி முகாமையாளர் (விநியோகப் பிரிவு 4)

பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமை மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (சிவில் வேலைகள் மற்றும் கட்டடங்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (வேலைப் பட்டறை மற்றும் துணைச் சேவைகள்)
பிரதிப் பொது முகாமையாளர் (பயிற்சி)
மேலதிக நிதி முகாமையாளர் (சொத்து முகாமை)

மேலதிக நிதி முகாமையாளர் (நிறுவனம்)
மேலதிக நிதி முகாமையாளர் (தலைமையகம்)
மேலதிக நிதி முகாமையாளர் (திறைசேரி முகாமை)

பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவன அலுவல்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமை - நீர் மின்னியல்)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமை - நீர் இயந்திரவியல்)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமை - அனல் மின்னியல்)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமை - அனல் இயந்திரவியல்)
பிரதிப் பொது முகாமையாளர் (அணைக்கட்டு பாதுகாப்பு, சூழல் மற்றும் சிவில் கட்டமைப்புப் பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (சக்தி விற்பனை)
பிரதிப் பொது முகாமையாளர் (பிறப்பாக்கல் பாதுகாப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (லக்'பான தொகுதி)
பிரதிப் பொது முகாமையாளர் (மகாவலி தொகுதி)
பிரதிப் பொது முகாமையாளர் (அனல் தொகுதி)
பிரதிப் பொது முகாமையாளர் (சமனல தொகுதி)
பிரதிப் பொது முகாமையாளர் (பிறப்பாக்கல் செயற்றிட்டங்கள்)
மின்வலு ஆலை முகாமையாளர் (லக்விஜய மின்வலு ஆலை)
மேலதிக நிதி முகாமையாளர் (பிறப்பாக்கல்)

பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (விநியோக ஒருங்கிணைப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (கொழும்பு நகர்)
பிரதிப் பொது முகாமையாளர் (வட மத்திய மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (வட மேல் மாகாணம் I)
பிரதிப் பொது முகாமையாளர் (வட மேல் மாகாணம் II)
செயற்றிட்டப் பணிப்பாளர் (கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்திச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மின்சார வழங்கல் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் செயற்றிட்டத்திற்கான உதவி)
மேலதிக நிதி முகாமையாளர் (விநியோகப் பிரிவு 1)

பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (சப்பரகமுவ மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (ஊவா மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம் தெற்கு II)
மேலதிக நிதி முகாமையாளர் ( விநியோகப் பிரிவு 3)

பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவனம் மற்றும் செயற்றிட்டங்கள் ஒருங்கிணைப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல் ஆலோசனைச் சேவைகள்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்ற நிருமாணச் செயற்றிட்டங்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றச் செயற்றிட்டங்கள்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (விரிநிலங்கள் நீர் மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (பாரிய கொழும்பு மின் பரிமாற்ற, விநியோக இழப்பைக் குறைக்கும் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் EEII செயற்றிட்டம் - கட்டம் II)
செயற்றிட்டப் பணிப்பாளர் (LNG)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் - கட்டம் I)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் - கட்டம் II)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (தேசிய மின் பரிமாற்றம் மற்றும் DND & EI செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மின்வலு முறைமையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (திருகோணமலை நிலக்கரி மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (உமா ஓயா நீர் மின்வலுச் செயற்றிட்டம்)
மேலதிக நிதி முகாமையாளர் (செயற்றிட்டங்கள்)

பிரதிப் பொது முகாமையாளர் (ஒருங்கிணைப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி)
பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல் சோதனை)
பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்

பிரதம சட்ட அலுவலர

முகாமையாளர் புலனாய்வுகள்

சபைச் செயலாளர்

# துணைக் கம்பனிகளுடன் இ.மி.ச.இன் நிறுவனக் கட்டமைப்பு - 2022



# முகாமைத்துவ மீளாய்வு



ரந்தெனிகல மின்வலு நிலையம்

# தலைவரின் மீளாய்வு



> சிறப்பான செயற்பாட்டிற்கான எமது அர்ப்பணிப்பு எங்கள் வெற்றியின் உந்துசக்தியாக இருக்கிறது. எமது மின்வலுப் பிறப்பாக்கல் கொள்ளளவுகளை உத்தமமாக்குதல், வினைத்திறனான மின் பரிமாற்றம் மற்றும் மின் விநியோக முறைமைகளை உறுதி செய்தல், மற்றும் எங்கள் சேவைகளின் நம்பகத்தன்மையையும் தரத்தையும் மேம்படுத்துவதற்காக மேம்பட்ட தொழினுட்பங்களை நடைமுறைப்படுத்தல் என்பவற்றில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம்.

அன்பான பெறுமதிமிக்க நாட்டதாரர்களே,

எமது சாதனைகள், சவால்கள் மற்றும் மாறுகின்ற சக்தி தளத்தில் முன்னோக்கிச் செல்லும் பாதையைப் பிரதிபலிக்கின்ற இலங்கை மின்சார சபைத் தலைவரின் மீளாய்வை முன்வைப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

2022 ஆம் ஆண்டு இ.மி.ச. இற்கு ஒரு முக்கியமான ஆண்டாக இருந்தது. எப்பொழுதும் வளர்ச்சியடைந்து வருகின்ற தொழிற்றுறைப் பரப்பில் வெற்றிகரமாகப் பயணித்து, நெகிழ்ச்சி மற்றும் தழுவலை நாங்கள் தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றோம். பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், சபையானது குறிப்பிடத்தக்க மைல்கற்களை அடைந்து, வலுவான செயற்றிறனைப் பேணியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறப்பான செயற்பாட்டிற்கான எமது அர்ப்பணிப்பு எங்கள் வெற்றியின் உந்துசக்தியாக இருக்கிறது. எமது மின்வலுப் பிறப்பாக்கல் கொள்ளளவுகளை உத்தமமாக்குதல், வினைத்திறனான மின் பரிமாற்றம் மற்றும் மின் விநியோக முறைமைகளை உறுதி செய்தல், மற்றும் எங்கள் சேவைகளின் நம்பகத்தன்மையையும் தரத்தையும் மேம்படுத்துவதற்காக மேம்பட்ட தொழினுட்பங்களை நடைமுறைப்படுத்தல் என்பவற்றில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். எவ்வாறாயினும், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியிலிருந்து இ.மி.ச. தன்னைத் தனிமைப்படுத்திக்கொள்ள முடியவில்லை என்பதுடன் எரிபொருள் வழங்கலின் கடுமையான பற்றாக்குறையுடன் போராடி வருகிறது. இது எமது மின்சாரப் பிறப்பாக்கல் ஆற்றலைக் கணிசமானளவுக்குப் பாதித்துள்ளது. இதன் விளைவாக, நாடு முழுவதும் கட்டாய மின்வெட்டுகளை அமுல்படுத்துவதற்கான கடினமான முடிவினை நாங்கள் எதிர்கொண்டிருந்தோம். மேலும், இந்த மின்வெட்டுகளின் காரணமாக மீளாய்வு ஆண்டில் மொத்தமாக 799.2 GWh மின்சாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்த மின்வெட்டுகள் தற்காலிகமானதாக இருந்த போதிலும், துரதி'டவசமாக எங்கள் மதிப்புமிக்க நுகர்வோருக்கு அசௌகரியத்தையும் சிரமத்தையும் ஏற்படுத்தியிருந்தது, இதற்காக நாங்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றோம்.

நிலைபேற்றுத் தன்மையின் அதிகரித்து வருகின்ற முக்கியத்துவத்தை உணர்ந்து, தூய்மையான மற்றும் பசுமையான சக்தி ஆதாரங்களை நோக்கித் திரும்புவதற்கான எங்கள் முயற்சிகளை நாங்கள் தீவிரப்படுத்தியுள்ளோம். சூரிய ஒளி மற்றும் காற்று உள்ளிட்ட மீள்புதுப்பிக்கத்தக்க சக்திச் செயற்றிட்டங்களை நாங்கள் ஊக்குவித்து, வசதி செய்துள்ளோம். எமது கார்பன் தடத்தைக் குறைத்து மிகவும் நிலைபேறான எதிர்காலத்திற்கு பங்களித்துள்ளோம். இதன் விளைவாக, மீளாய்வு ஆண்டில் இ.மி.ச. மேற்கூரை சூரியசக்தி கொள்ளளவை 29% இனால் அதிகரிக்க முடிந்தது. இதனால் மொத்த மேற்கூரை சூரியசக்தி கொள்ளளவு 535 MW ஆக மாறியது. இதற்கு மேலதிகமாக, மின்தொகுப்புக்கு இணைக்கப்பட்ட சூரிய சக்தியின் கொள்ளளவும்கூட 30% இனால் அதிகரித்திருந்தது. மேலும் 2022 ஆம் ஆண்டிற்கான மின்வலுப் பிறப்பாக்கத்தில் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியின் பங்கு 52% ஆகப் பதிவாகியிருந்தது.

எங்கள் சேவைகளை தொடர்ந்தும் மேம்படுத்தி, வாடிக்கையாளர்களின் வளர்ந்துவரும் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட புத்தாக்கமான தீர்வுகளை வழங்குவதன் மூலம் அவர்களின் திருப்திக்கு நாங்கள் முன்னுரிமை அளித்துள்ளோம். நிகழ் நேரத் தகவல்கள் மற்றும் தடையற்ற தொடர்புகளுடன் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அதிகாரமளிக்க டிஜிடல் தளங்கள் மற்றும் திறன் தொழினுட்பங்களை நாங்கள் நடைமுறைப்படுத்தியுள்ளோம். CEBAssist முறைமை ஆனது, இ.மி.ச. சேவைகளை டிஜிடல்மயப்படுத்து வதற்காக விருத்தி செய்யப்பட்ட ஒரு யதார்த்தமான தீர்வுத் தளம் ஆகும். இந்தச் செயன்முறைகளுக்கு SLASSCOM இலிருந்து பொதுத் துறையில் சிறந்து விளங்குவதற்கான விருதும் BCS ஸ்ரீ லங்கா அத்தியாயத்திடமிருந்து சிறந்த டிஜிடல்மயமாக்கல் செயன்முறை இயக்கி விருதும் ஆண்டின் காலப்பகுதியில் இரு முறை வழங்கப்பட்டிருந்தன.

2022 ஆம் ஆண்டானது நிதிசார் கண்ணோட்டத்தில் இ.மி.ச. இற்கு ஒரு சவால்மிகுந்த ஆண்டாகக் காணப்பட்டது. எங்களது விடாமுயற்சியும் உபாய நடவடிக்கைகளும் இருந்த போதிலும், நிறுவனத்திற்கு நிகர நட்டத்தை ஏற்படுத்திய பல தடைகளை நாங்கள் சந்தித்துள்ளோம். உலாகளாவிய பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட உயர்வு, அதாவது எரிபொருள், நிலக்கரி மற்றும் பிற பொருள்களில் ஏற்பட்ட உயர்வு, பரிமாற்று விகிதத்தின் தேய்மானம், வட்டி வீதங்களின் அதிகரிப்பு அதேபோல் செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விதிப்பனவு இன்மை என்பன நிகர நட்டத்தில் அழுத்தத்தை ஏற்படுத்தியிருந்தன. 2022 ஆகஸ்ட் மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட விதிப்பனவுத் திருத்தமானது மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் அதிகரித்த பண்டங்களின் விலைகளை ஈடுகட்டுவதற்குப் போதுமானதாக இருக்கவில்லை. நிதிசார் விவேகம், சிறப்பான செயற்பாடு மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகியவற்றின் அர்ப்பணிப்பில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். எங்கள் உபாய முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் வளர்ந்துவரும் தொழிற்றுறைப் பரப்புக்கு ஏற்றவாறு மாற்றியமைப்பதன் மூலமும் நாங்கள் இலாபத்தை மீட்டெடுப்பதற்கும் நிறுவனத்திற்கு நிலைபேறான நீண்ட கால மதிப்பை உருவாக்குவதற்குமான எங்களது ஆற்றலில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

முடிவாக, சபையின் உறுப்பினர்கள், எங்கள் பங்குதாரர்கள், பொது முகாமையாளர் தலைமையிலான ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் வழங்கிய அசைக்க முடியாத ஆதரவுக்கும் அர்ப்பணிப்புக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எங்களது வலுவான அடித்தளம், திறமையான வேலைப்படை மற்றும் சிறந்து விளங்குவதற்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவற்றுடன் சவால்களை வழிநடத்தவும் வரவிருக்கும் வாய்ப்புகளை கைப்பற்றவும் இ.மி.ச. சிறந்த நிலையில் உள்ளது என நான் நம்புகின்றேன்.

**என்.எஸ். இலங்ககோன்**
தலைவர்,
இலங்கை மின்சார சபை



சுன்னாகம் உப மின்நிலையம்

# பொது முகாமையாளரின் மீளாய்வு



> “எங்கள் நுகர்வோரின் அதிகரித்துவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, எங்கள் வலையமைப்பின் மின் பரிமாற்ற உட்கட்டமைப்பை விரிவாக்குவதன் மீது நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். வட மத்திய மாகாணம், மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணங்களில் புதிய மின்தொகுப்பு உபமின் நிலையங்களையும் மின் பரிமாற்ற மார்க்கங்களையும் நிர்மாணிப்பது உள்ளிட்ட பல பிரதான செயற்றிட்டங்களை நாங்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளோம்”

அன்பான பெறுமதிமிக்க நாட்டதாரர்களே,

பொது முகாமையாளர் என்ற வகையில், நிதியாண்டு 2022 இற்கான இலங்கை மின்சார சபையின் வருடாந்த மீளாய்வைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். உலகிலுள்ள பல மின்வலுக் கம்பனிகளுக்கும் இலங்கையிலுள்ள எமக்கும் கடந்த ஆண்டானது நிகழ்வுகள் நிறைந்த ஆண்டாகவும் மிகவும் சவால் மிகுந்த ஆண்டாகவும் விளங்கியிருந்தது. கோவிட் சகாப்தத்திற்குப் பிறகு, புதைபடிவ எரிபொருள்களுக்கான உலகளாவிய கேள்வி மீண்டும் அதிகரித்துவரும் வேளையில் பிராந்திய முரண்பாடுகள் காரணமாக எல்.என்.ஜீ. வழங்கல் மார்க்கங்களில் இடையூறுகள் உலகளாவிய எரிசக்தி நெருக்கடியை உருவாக்கின. உலக சந்தையில் நிலக்கரிக்கான கேள்வி வரலாறு காணாத உச்சத்தைத் தொட்டது. நிலக்கரி மற்றும் எண்ணெய் ஆகியன ஆண்டின் பெரும்பாலான நேரங்களில் தசாப்த காலப்பகுதியில் உயர் மட்டத்தில் விற்பனை செய்யப்பட்டன. பிரதானமாக இரண்டு காரணங்களால், அதன் தாக்கம் எம்மீது பெரியளவில் காணப்பட்டது. முதலாவது, மின்வலுப் பிறப்பாக்கத்திற்கு நாம் எண்ணெய்யையும் நிலக்கரியையும் அதிகம் சார்ந்திருப்பது. இரண்டாவது, நாட்டில் அந்நியச் செலாவணிக் கையிருப்பு குறைவடைந்த சூழ்நிலையை நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

மின்வலுப் பிறப்பாக்கத்திற்காக இறக்குமதி செய்யப்படும் புதைபடிவ எரிபொருளைச் சார்ந்திருப்பதைக் குறைத்து, மீள்புதுப்பிக்கத்தக்கவை போன்ற மாற்று ஆதாரங்களைத் தேடுவதற்கான நீண்டகாலத் தேவையை இந்த நெருக்கடியான சூழ்நிலை மீண்டும் உணர்த்தியது. ஆண்டின் காலப்பகுதியில், நாட்டில் மீள்புதுப்பிக்கத்தக்க மின்வலுப் பிறப்பாக்கத்தை மேம்படுத்துவதற்காக நாங்கள் குறிப்பிடத்தக்க பல நடவடிக்கைகளை எடுத்திருந்தோம். மேற்கூரை சூரிய மின்சக்தி வாடிக்கையாளர்கள் தற்போது தங்களது ஒப்பந்த நுகர்வுத் தேவைக்கு அப்பாலான கொள்ளளவுகளை நிறுவ முடியும். மேற்கூரை சூரியசக்தி வாடிக்கையாளர்கள் அதிக அளவில் இருக்கும் இடங்களில் எங்களுடைய வலையமைப்பு மேம்படுத்தல்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டுள்ளோம். மேற்கூரை இணைப்புகளை வழங்கும் செயன்முறை நெறிப்படுத்தப்பட்டு, நிகழ்நிலைப்படுத்தப்பட்டுள்ளது. எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் இத்தகைய ஏற்பாடுகளைப் பயன்படுத்தி 150 MW மேற்கூரை சூரியசக்தி மற்றும் 66 MW தரையிலான சூரியசக்தி என்பவற்றை இந்த ஆண்டில் வலையமைப்புக்குச் சேர்த்திருந்தனர். இது வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் 23.3% அதிகரிப்பையும் மின்பிறப்பாக்கல் கொள்ளளவின் அடிப்படையில் 28.8% அதிகரிப்பையும் ஏற்படுத்தியது.

எங்கள் வலையமைப்பில் 35 MW தூய சக்திக் கொள்ளளவைச் சேர்க்கும் வகையில் விரிநில நீர் மின்வலு ஆலை இவ்வாண்டில் தொடங்கப்பட்டது. பசுமையான எதிர்காலத்திற்கான நிலைபேறான சக்தித் தீர்வுகளை விருத்தி செய்வதற்கான எங்களது முயற்சியில் இது ஒரு முக்கியமான நிகழ்வைக் குறிக்கிறது. இந்த ஆலையின் வருடாந்த மின்பிறப்பாக்கம் 126 GWh ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, நாட்டின் நீர் மின்வலு ஆற்றலை அதிகரிப்பதற்கான வழிகளை நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம். நீர்ப் பிடிப்புத் திறனை அதிகரிப்பதற்காக காசல்றீ நீர்த்தேக்கத்தின் மீது கட்டப்பட்ட மிகைத்தேக்க வீழ்கதவுகள் இதுபோன்ற புத்தாக்கமான நடைமுறைப்படுத்தல் ஒன்றாகும். அதனை மேலும் மீள்தன்மையடையச் செய்வதற்கு மிகைத்தேக்க வீழ்கதவுகள் இப்பொழுது கட்டமைப்பொன்றுடன் மாற்றீடு செய்யப்பட்டுள்ளன. இது தேவைக்கு ஏற்ப கூடுதல் நீரை வெளியேற்றுவதைக் கட்டுப்படுத்தும் இயலுமையைக் கொண்டிருக்கும். செயற்பாட்டின் முதல் வருடத்திலேயே எங்கள் முயற்சி

பலனளித்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் 3 மாதங்களுக்கும் மேலாக, காசல்றீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் மிகைத்தேக்க வீழ்கதவுகள் பகுதியில் இருந்ததுடன் அதன் மின்பிறப்பாக்கிகள் முழுக் கொள்ளளவில் இயங்கியிருந்தன.

2022 நிதியாண்டில் மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்தி 52.1% சக்தியைப் பிறப்பாக்கம் செய்துள்ளோம் என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பல ஆண்டுகளாக, எங்களது மின்தொகுப்புடன் இணைக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் உறுதியான அதிகரிப்பொன்று காணப்பட்டது. சேவைகளை பின்தங்கிய மற்றும் கிராமப்புறப் பகுதிகளுக்கு விரிவுபடுத்துவதற்கான எங்கள் முயற்சிகள் பலனளித்துள்ளன. இதன் விளைவாக, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் எங்கள் வாடிக்கையாளர் தளம் 1.9% இனால் அதிகரித்திருந்தது.

செயற்பாட்டு சிறப்பம்சங்கள் மற்றும் மின் பரிமாற்ற, விநியோக இழப்புகளைக் குறைப்பதற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மீதான இ.மி.ச. இன் கவனக்குவிப்பானது குறிப்பிடத்தக்க பெறுபேறுகளைத் தந்துள்ளது. கடந்த ஆண்டுகளில் தெற்காசிய அளவுகோல்களுடன் ஒப்பிடுகையில் இ.மி.ச. கணிசமானளவு குறைந்த இழப்பையே அடைந்திருப்பதைப் பதிவு செய்வதில் நாங்கள் பெருமிதம் கொள்கின்றோம்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட விதிப்பனவு முறையியலானது மின்சாரச் சட்டத்திற்கு இணங்க, வழங்கல் கிரயத்தை முழுமையாக வசூலிக்க வேண்டிய அதே வேளை வெவ்வேறு பயனர் குழுக்களிடையே விதிப்பனவானது கிரயத்தைப் பிரதிபலிக்கின்ற அடிப்படையில் அமைய வேண்டும். எவ்வாறாயினும், கடந்த பல ஆண்டுகளாக இது இல்லாததால் பெரும் நட்டம் ஏற்பட்டிருந்தது.

2022 ஆம் ஆண்டு, சவால்மிகுந்த பொருளாதார நிலையின் கீழ், உயிர் வாழ்வதற்காக இ.மி.ச. அதன் வாடிக்கையாளர் விதிப்பனவை சிறிதளவு திருத்துவதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் (PUC) அங்கீகாரத்தை பெற முடிந்த ஆண்டாக இருந்தது. முந்தைய விதிப்பனவுத் திருத்தம் 2014 இல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிலவும் நெருக்கடிமிக்க பொருளாதார நிலைமையின் கீழ் எந்தவொரு விலைச் சீராக்கமும் எங்கள் நுகர்வோருக்கு சவாலானதாக இருக்கும் என்பதை நாங்கள் புரிந்து கொண்டுள்ள அதே சமயம் எமது நுகர்வோருக்கும் எமது செயற்பாடுகளின் நிலைபேற்றுத்தன்மைக்கும் அது கொண்டு வருகின்ற நன்மைகளைக் கருத்திற்கொண்டு. நேர்மறையான வெளிச்சத்தில் இந்த அபிவிருத்தியை முன்னிலைப்படுத்துவது அவசியமாகும்.

இத்தகைய கிரய அழுத்தங்களில் சிலவற்றைத் தணிப்பதற்கு மேற்கூறிய விதிப்பனவு உயர்வை நடைமுறைப்படுத்திய போதிலும் பண்டங்களின் விலை அதிகரிப்பின் பரிமாணமானது எங்களது ஆரம்பக் கணிப்புகளை விஞ்சியதாகக் காணப்பட்டது. இதன் விளைவாக உயர்ந்தளவு செயற்பாட்டுச் செலவினங்கள் ஏற்பட்டதுடன் எங்கள் நிதிச் செயலாற்றுகை மீது ஒரு சுமையையும் ஏற்படுத்தியது. இது ஆண்டின் இறுதியில் நிகர இழப்பொன்று ஏற்பட வழிவகுத்திருந்தது. இலங்கை ரூபாவின் செங்குத்தான தேய்மானம் மற்றும் ஆண்டின் காலப்பகுதியில் நிலவிய உயர் வட்டி வீதங்கள் என்பன எங்களின் நிதிக் கிரயங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை ஏற்படுத்தியதன் விளைவாக எங்களுக்குப் பாதகமாகச் செயற்பட்டன.

எங்கள் நுகர்வோரின் அதிகரித்துவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, எங்கள் வலையமைப்பின் மின் பரிமாற்ற உட்கட்டமைப்பை விரிவாக்குவதன் மீது நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். வட மத்திய மாகாணம், மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணங்களில் புதிய மின்தொகுப்பு உபமின் நிலையங்களையும் மின் பரிமாற்ற மார்க்கங்களையும் நிர்மாணிப்பது உள்ளிட்ட பல பிரதான செயற்றிட்டங்களை நாங்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளோம். இதன் விளைவாக, கெஸ்பாவ மற்றும் களுத்துறை ஆகிய இடங்களில் 220 kV இன் 19 km தூர மின் பரிமாற்ற மார்க்கங்கள், 132kV இன் 11 km தூர மின் பரிமாற்ற மார்க்கங்கள் மற்றும் இரண்டு 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் என்பன மின் பரிமாற்ற வலையமைப்புக்குச் சேர்க்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, விநியோக வலையமைப்பின் அபிவிருத்திகளும்கூட இறுதிப் பயனர் தேவைகளுக்கு வசதியளிப்பதற்காகச் செய்யப்பட்டன.

ஆண்டு நெடுகிலும், நிறுவனத்தினுள் பல்வேறு பிரிவுகள் மற்றும் மட்டங்களில் விரிவான மற்றும் இலக்குப்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நாங்கள் ஒழுங்கு செய்திருந்தோம். இதன் விளைவாக ஏறத்தாழ 6,000 ஊழியர்கள் இந்த ஆண்டில் பயிற்றப்பட்டனர். இந்தப் பயிற்சிகள் ஊழியர்கள் தமது வகிபாகங்களை பயனுறுதிமிக்க வகையில் ஆற்றுவதை இயலச் செய்வதற்கும் மாறிவரும் தொழில்துறைப் போக்குகளுக்கு ஏற்ப மாறுவதை இயலச் செய்வதற்கும் உதவும்.

நாங்கள் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை அடைந்த மற்றுமொரு பகுதி எங்கள் சேவைகளை தன்னியக்கப்படுத்தியதும் டிஜிடல்மயப்படுத்தியதுமாகும். "CEBAssist" செயலித் தொகுப்பானது மேலும் மேலும் பல வசதிகளை உள்ளடக்கியதாக விரிவடைந்து எங்கள் வாடிக்கையாளர்களுக்கு நிகழ்நிலையில் சேவைகளை வழங்குகிறது. புதிய மின்சார இணைப்புகள் மற்றும் மேற்கூரை சூரியசக்தி இணைப்புகள் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை தற்போது நிகழ்நிலையில் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் அவற்றின் முன்னேற்றத்தின் நிலையையும் கண்காணிக்கலாம். IT தொழில்துறையானது தயாரிப்புகளை விருத்தி செய்வதில் எங்களது முயற்சிகளை அங்கீகரித்துள்ளதுடன் அதன் உயர் தரம் மற்றும் வாடிக்கையாளர்கள் மீது அது ஏற்படுத்திய தாக்கத்திற்காக ஆண்டின் காலப்பகுதியில் மேலும் பல விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளோம்.

போக்குவரத்தினைப் பாதித்த எரிபொருள் நெருக்கடி, உலகளாவிய தொற்று நோய்த் தாக்கம் மற்றும் எங்கள் செலவுகளைக் குறைப்பதற்காக குறிப்பிட்ட ஊழியர் நன்மைகளைக் குறைத்தல் போன்ற பல கஸ்டங்கள் இருந்த போதிலும் நிறுவனத்தின் வெற்றிக்கு மகத்தான பங்களிப்பை வழங்கிய இ.மி.ச. இன் அனைத்து ஊழியர்களையும் நான் பாராட்ட விரும்புகிறேன். நாட்டில் நிலவிய மிகக் கடினமான நிதிச் சூழ்நிலையிலும் எனக்கு ஆதரவாக இருந்த அனைத்து ஊழியர்களுக்கும் எனது நன்றிகள்.

இது சாதனைகள், சவால்கள், வளர்ச்சி ஆகியவற்றால் நிரப்பப்பட்ட ஓர் ஆண்டாக இருப்பதுடன் நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து சாதித்ததையிட்டு நான் பெருமையடைகின்றேன். மேலும் சவால்கள் நிறைந்த இந்த ஆண்டில், ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கிய சபையின் தலைவர் மற்றும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் எனது மனப்பூர்வமான பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் உங்கள் அனைவருக்கும் நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த இருண்ட ஆண்டின் ஒரு வெள்ளிக் கோடாக அமைந்தது என்னவெனில், மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக்கான எமது முயற்சி துரிதப்படுத்தப்பட்டமை ஆகும். அதிகரித்துவரும் மக்கள் நலன் மற்றும் கடந்த ஆண்டில் நாங்கள் நடைமுறைப்படுத்திய திட்டங்கள் என்பன காரணமாக, எங்களின் கனவு விரைவில் நனவாகும்.



**பொறியியலாளர் (கலாநிதி) டீ. சீ. ஆர். அபேயசேகர**
பொது முகாமையாளர்

# இலங்கை மின் பரிமாற்ற முறைமையின் வரைபடம் - 2022



செயற்பாட்டு மீளாய்வு

# மின் பிறப்பாக்கல் பிரிவு



லக்விஜய மின்வலு நிலையம்

# மின் பிறப்பாக்கல் பிரிவு

மின் பிறப்பாக்கல் பிரிவானது இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான அனைத்து மின்வலு நிலையங்களையும் இயக்கி, பராமரித்து புனரமைப்புச் செய்கிறது. இந்தப் பிரிவானது நிறுவப்பட்ட கொள்ளளவு 1,378.4 MW உடன் பதினேழு நீர் மின்வலு நிலையங்களையும் நிறுவப்பட்ட கொள்ளளவு 654 MW உடன் ஏழு எண்ணெய் எரிப்பு அனல் மின்வலு நிலையங்களையும் நிறுவப்பட்ட கொள்ளளவு 900 MW உடன் ஒரு நிலக்கரி எரிப்பு மின்வலு நிலையத்தையும் நிறுவப்பட்ட கொள்ளளவு 103.5 MW உடன் ஒரு காற்றாலை மின்வலு நிலையத்தையும் கொண்டிருக்கிறது. இ.மி.ச. யாழ்ப்பாண குடாநாட்டைச் சூழவுள்ள தீவுகளில் ஒரு சில டீசல் மின்வலு நிலையங்களையும்கூட இயக்குகிறது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இ.மி.ச. இற்குச் சொந்தமான மின்வலு நிலையங்களில் நிறுவப்பட்டுள்ள மொத்தக் கொள்ளளவு 3,036 MW ஆக இருந்தது.

## மின்வலு நிலையங்களின் செயலாற்றுகை

மன்னாரில் உள்ள காற்றாலை மின்வலு நிலையம் மற்றும் மகாவலி நீர் (மகாவலி தொகுதி) ஆகியவற்றின் அனைத்து மின்வலு நிலையங்களினதும் இயக்கத்திலிருந்தான மின்சாரப் பிறப்பாக்கத்தின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டு திருப்திகரமான ஓர் ஆண்டாக இருந்தது. 2022 ஆம் ஆண்டில் மகாவலி தொகுதியிலுள்ள மின்வலு நிலையங்கள் 2,797.7 GWh இனைப் பிறப்பாக்கம் செய்திருந்ததுடன் 2022 ஆம் ஆண்டிற்காக அதன் திட்டமிடப்பட்ட பிறப்பாக்கத்தில் 98% இற்கும் அதிகமாக அந்தத் தொகுதியினால் பிறப்பாக்கம் செய்ய முடிந்திருந்தது.

2022 ஆம் ஆண்டில் களனி ஆற்று நீர் (லக்ஷபான தொகுதி) மூலம் இயங்கும் ஒரு தொகுதி மின்வலு நிலையங்களின் மொத்த வருடாந்த மின் பிறப்பாக்கம் 1,737.6 GWh ஆகப் பதிவாகியிருந்த அதே வேளை வளவை கங்கை, களு கங்கை மற்றும் கல்லோயா ஆற்று நீர் மூலம் இயங்கும் சமனல தொகுதிக்கான மொத்த வருடாந்த மின் பிறப்பாக்கம் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 730.5 GWh ஆகப் பதிவாகியிருந்தது. சமனல தொகுதியானது 2022 ஆம் ஆண்டிற்கான அதன் மின் பிறப்பாக்க இலக்கில் 97% இற்கும் அதிகமானவற்றை பூர்த்தி செய்திருந்தது.

2022 ஆம் ஆண்டில் அனல்மின் தொகுதியின் மொத்த வருடாந்த மின் பிறப்பாக்கம் 1,339.4 GWh ஆக இருந்த அதே வேளை LVPP (லக்விஜய மின்வலு ஆலை) இற்கான மொத்த மின் பிறப்பாக்கம் 5,173.8 GWh ஆகும்.

2022 ஆம் ஆண்டில், இ.மி.ச. இன் மின் பிறப்பாக்கக் கலவை ஆனது உரு G1 இல் தரப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டிற்கான மின்வலு நிலையங்கள் ரீதியான மின் பிறப்பாக்கப் பங்களிப்புகள் மற்றும் ஏனைய தொடர்புடைய காரணிகள் என்பன அட்டவணை G1 தொடக்கம் G3 வரை தரப்பட்டுள்ளது.




*உரு G1: இ.மி.ச. மின் பிறப்பாக்கல் கலவை - 2022*

குறிப்பு: விரிநில மின்வலு நிலையம் வர்த்தக ரீதியான செயற்பாட்டில் இல்லாததால் அதிலிருந்தான நீர் மின்வலுப் பிறப்பாக்கம் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

*அட்டவணை G1: இ.மிச. இற்குச் சொந்தமான நீர் மின்வலு நிலையங்கள் மற்றும் காற்றாலை மின்வலு நிலையம் ஆகியவற்றின் பங்களிப்பு*

| மின்வலு நிலையம் | நிறுவப்பட்ட கொள்ளளவு (MW) | பிறப்பாக்கம் (GWh) | கிடைப்பனவுக் காரணி (%) | ஆலைக் காரணி (%) |
|---|---|---|---|---|
| **மகாவலி தொகுதி** | **920.3** | **3144.9** | | |
| விக்டோரியா | 210 | 907.5 | 100.0 | 49.4 |
| கொத்மலை | 201 | 526.5 | 99.9 | 30.0 |
| மேல் கொத்மலை | 150 | 505.3 | 100.0 | 38.6 |
| ரந்தெனிகல | 122.6 | 419.8 | 99.8 | 39.4 |
| ரன்தம்பே | 50 | 197.2 | 99.8 | 46.4 |
| உக்குவளை | 40 | 169.9 | 91.7 | 48.6 |
| போவத்தென்ன | 40 | 59.2 | 99.8 | 17.0 |
| நில்லம்பே | 3.2 | 12.3 | 99.3 | 42.4 |
| தம்பபவனி | 103.5 | 347.2 | 89.6 | 39.9 |
| **லக்ஷபான தொகுதி** | **353.8** | **1,737.6** | | |
| லக்ஷபான | 153.8 | 938.9 | 95.0 | 69.8 |
| பொல்பிட்டிய | 90 | 513.3 | 97.4 | 65.2 |
| கன்யோன் | 60 | 147.4 | 75.0 | 28.1 |
| விமலசுரேந்திர | 50 | 138.0 | 86.0 | 31.6 |

# மின் பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)

*அட்டவணை G1: இ.மி.ச. இற்குச் சொந்தமான நீர் மின்வலு நிலையங்கள் மற்றும் காற்றாலை மின்வலு நிலையம் ஆகியவற்றின் பங்களிப்பு (தொடர்ச்சி)*

| மின்வலு நிலையம் | நிறுவப்பட்ட கொள்ளளவு (MW) | பிறப்பாக்கம் (GWh) | கிடைப்பனவுக் காரணி (%) | ஆலைக் காரணி (%) |
|---|---|---|---|---|
| **சமனல தொகுதி** | **207.8** | **730.5** | | |
| சமனலவெவ | 120 | 325.1 | 97.8 | 31.2 |
| குக்குளேகங்கை | 75 | 372.1 | 94.2 | 60.9 |
| உடவளவை | 4 | 15.9 | 90.9 | 46.8 |
| இங்கினியாகல | 8.8 | 17.4 | 71.3 | 17.8 |
| **மொத்தம்** | **1,481.9** | **5,613.0** | | |

குறிப்பு: தம்பபவனி தவிர ஏனைய அனைத்தும் நீர் மின்வலு நிலையங்களாகும்.

அட்டவணை *G2:* இ.மி.ச. இற்குச் சொந்தமான அனல் எண்ணெய் மின்வலு நிலையங்களின் பங்களிப்பு

| மின்வலு நிலையம் | | நிறுவப்பட்ட கொள்ளளவு (MW) | பிறப்பாக்கம் (GWh) | கிடைப்பனவுக் காரணி (%) | ஆலைக் காரணி (%) |
|---|---|---|---|---|---|
| சபுகஸ்கந்த | நிலையம் A | 80 | 168.3 | 82.1 | 28.5 |
| | நிலையம் B | 80 | 295.2 | 96.0 | 48.7 |
| களனிதிஸ்ஸ இணைந்த சுற்று | எரிவாயு விசையாழி (GT) | 110 | 421.9 | 77.4 | 32.1 |
| | நீராவி விசையாழி (ST) | 55 | | 74.7 | 26.1 |
| களனிதிஸ்ஸ GT - 07 | | 115 | 77.0 | 94.0 | 8.0 |
| களனிதிஸ்ஸ Frame V GTs | | 80 | 10.3 | 37.1 | 2.0 |
| டீசல் மின்வலு ஆலைகள் (50x1 MW) | | 50 | 44.1 | 75.0 | 93.0 |
| உத்துரு ஜனனி | | 24 | 82.6 | 80.8 | 41.2 |
| மிதவை | | 60 | 237.4 | 96.8 | 45.2 |
| தீவுகளிலுள்ள சிறிய மின் பிறப்பாக்கிகள் | | | 2.6 | | |
| **மொத்தம்** | | **654** | **1,339.4** | | |

*அட்டவணை G3: இ.மி.ச. இற்குச் சொந்தமான நிலக்கரி மின்வலு நிலையத்தின் பங்களிப்பு*

| லக்விஜய மின்வலு நிலையம் | நிறுவப்பட்ட கொள்ளளவு (MW) | மொத்தப் பிறப்பாக்கம் (GWh) | நிகர பிறப்பாக்கம் (GWh) | கிடைப்பனவுக் காரணி (%) | ஆலைக் காரணி (%) |
|---|---|---|---|---|---|
| அலகு 01 | 300 | 2,252.2 | 2,033.0 | 90.5 | 85.7 |
| அலகு 02 | 300 | 1,441.2 | 1,295.4 | 99.8 | 54.8 |
| அலகு 03 | 300 | 2,036.4 | 1,845.3 | 82.4 | 77.5 |

## முக்கிய நிகழ்வுகள்

### கொத்மலை மின்வலு நிலையத்தில் 800 kVA உலர் - வகை துணை மின்மாற்றி - இல. 01 இன் மாற்றீடு

கொத்மலை மின்வலு நிலையத்திலுள்ள உலர் - வகை துணை மின்மாற்றி இல. 01 ஆனது 40 வருடங்கள் பழமையானதாக இருந்ததால் அது, கொத்மலை மின்வலு நிலையத்தின் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் பொருட்டு 2022 மே மாதம் இத்தாலியின் ELKIMA இனால் தயாரிக்கப்பட்ட புதிய மின்மாற்றி ஒன்றினால் மாற்றீடு செய்யப்பட்டது.

### கொத்மலை மின்வலு நிலையத்தில் அலகு 01 இன் இலத்திரனியல் ஆளி ஒரு புதிய டிஜிடல் ஆளியினால் மாற்றீடு

அலகு 01 இல் தற்போதிருக்கின்ற இலத்திரனியல் வகை ஆளியானது அதற்கான உதிரிப்பாகங்களும் துணைப் பொருள்களும் வழக்கிழந்து போன காரணத்தால் ஆளி அலகின் நம்பகத் தன்மையையும் செயற்பாட்டு நெகிழ்வுத் தன்மையையும் மேம்படுத்தும் பொருட்டு ஒரு புதிய டிஜிடல் ஆளியினால் மாற்றீடு செய்யப்பட்டது. புதிய ஆளியானது 03 வார காலத்தினுள் ஒஸ்ரியா, அன்ரிட்ஸ் இன் தொழினுட்ப அணி மற்றும் இ.மி.ச. இன் ஊழியர்கள் ஆகியோரால் நிறுவப்பட்டு, சோதனை செய்யப்பட்டு இயக்குவதற்கான அதிகாரமளிக்கப்பட்டது. ஆளி கட்டுப்பாட்டாளர் முறைமையானது 2022-06-07 ஆந் திகதி முதல் முழுமையாக இயங்கியது.

### உக்குவளை மின்வலு நிலையத்தில் 220 V DC மின்கல வைப்பக மாற்றீடு

பல தசாப்தங்களாக சேவையில் உள்ள மின்கல வைப்பகம் சேதமடைந்திருப்பதுடன் அடிக்கடி செயலிழப்பதன் காரணமாக பௌதிக ரீதியில் சேதமடைந்திருந்தது. எனவே, மின்சாரத் துண்டிப்பு ஏற்படும்போது நம்பகமான காப்பு மின்சார வழங்கலை உறுதி செய்வதற்கும் மின் பிறப்பாக்க அலகுகளின் தொடக்கத்தில் நம்பகமான மின்சார வழங்கலை வழங்குவதற்காகவும் உக்குவளை மின்வலு நிலைய ஊழியர்களால் ஒரு புதிய மின்கல வைப்பகம் நிறுவப்பட்டது.

### உக்குவளை மின்வலு நிலையத்தில் அலகு 02 இன் விசையாழி மற்றும் தலைப்பகுதி - உறை என்பன மாற்றீடு

06 வருடங்களுக்கும் மேலாக நடைபெறும் மண்ணரிப்பு காரணமாக அலகு 02 இன் தலைப்பகுதி உறையிலிருந்து நீர்க் கசிவு ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக அந்த அலகு செயலிழந்துள்ளது. OEM இடமிருந்து வெளிநாட்டு மேற்பார்வைச் சேவைகள் பெறப்படாது இ.மி.ச. ஊழியர்களால் பழுதுபார்ப்பு மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க, பழுதுபார்ப்பு வேலைகளும் விசையாழி மற்றும் தலைப்பகுதி உறையின் மாற்றீடு என்பனவும் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.



*உரு G2: உக்குவளை PS இல் மின்கல வைப்பக மாற்றீடு*

### காசல்றீ நீர்த்தேக்கத்தின் சேமிப்புக் கொள்ளளவை உயர்த்துதல்

தற்போதுள்ள நுழைவு வாயில் ஏற்பாடுகளின் வரையறைகள் காரணமாக கீழ்நிலையில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படும் இடரைத் தவிர்ப்பதற்காக காசல்றீ அணையின் கீழ்மட்டத்தில் பராமரிக்கப்பட வேண்டியிருந்தது. இதனால், உயர்ந்தபட்ச சேமிப்பை அடைய முடியாதிருந்தது. இதற்கு ஒரு தீர்வாக, யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையினால் (JICA) சுயமாக ஒழுங்குபடுத்தப்பட்ட நீர் கட்டுப்பாட்டு அணை வாயில்கள் முன்மொழியப்பட்டன. இதனால் நீர்த்தேக்கத்தின் மட்டமானது அபாயகரமான உயர் மட்டத்திற்கு உயர்வதைத் தடுக்கும் பொருட்டு வாயிலைக் குறைக்கும் வசதியுடன்கூடிய இயற்கையான கசிவுப்பாதை போன்று கசிவு நீர் பாய்கிறது. அதற்கிணங்க, 2022 ஆம் ஆண்டில் காற்றியக்க சுய ஒழுங்குபடுத்தப்பட்ட நீர்க் கட்டுப்பாட்டு முகடு வாயில் முறைமை அமைக்கப்பட்டு வெற்றிகரமாக இயக்கப்பட்டதால், நீர்த்தேக்கத்தின் பயனுறுதிமிக்க கொள்ளளவு 5.6 GWh இனால் அதிகரித்துள்ளது.

### தம்பபவனி காற்றாலை மின்வலு நிலையத்தில் உள்ள பிளேடுகளை மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாக்க அவற்றின் பாதுகாப்பை மேம்படுத்தல்

தம்பபவனி காற்றாலை மின்வலு நிலையத்தில் ஐந்து விசையாழி பிளேட்டுகள் மின்னல் தாக்கத்தின் காரணமாக கடுமையாகச் சேதமடைந்து, மாற்றப்பட வேண்டியிருந்தன. மேலும், ஆரம்பத்தில் நிறுவப்பட்ட மின்னல் பாதுகாப்பு முறைமையானது இ.மி.ச. உடன் இணைந்து வெஸ்டாஸ், OEM இனால் தற்போதுள்ள சூழல் நிலைமைகளுக்கு ஏற்றவாறு மேம்படுத்தப்பட்டது.



*உரு G3: தம்மபவனி காற்றாலை மின்வலு நிலையத்தின் மின்னல் பாதுகாப்பு அமைப்பை மேம்படுத்துதல்*

### கன்யோன் மின்வலு நிலையத்தில் சுரங்கப் பரிசீலனையும் பழுதுபார்ப்புகளும



உரு G4: கன்யோன் சுரங்கப் பரிசீலனை

கன்யோன் குளத்தின் நீரில் நிற மாற்றம் அவதானிக்கப்பட்டதன் பின்னர் கன்யோன் மின்வலு நிலையம் குறைந்த சுமையுடன் இயங்க வேண்டியிருந்ததுடன் காரணங்களைக் கண்டறிவதற்காக சுரங்கப் பரிசீலனையையும் முன்னெடுக்க வேண்டியிருந்தது. அதற்கிணங்க, சுரங்கப் பரிசீலனையானது 27 வருட செயற்பாட்டின் பின்னர் 2022 சனவரியில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பரிசீலனையானது இ.மி.ச. நிபுணர்களையும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஆலோசகர்களையும் உள்ளடக்கிய ஒரு அணியினால் மேற்கொள்ளப்பட்டது. சுரங்கப் பாதையின் செயலிழப்பின்போது, கொங்கிறீட் சேதங்களை சரிசெய்தல், அனைத்து உருக்கிலான பொருள்களுக்கும் தீந்தை பூசுதல், சேற்றை அகற்றுதல், அலகு 02 மதகு மார்க்கத்தை சுத்தம் செய்தலும் தீந்தை பூசுதலும் மற்றும் பாதுகாப்பு வால்வினை சுத்திகரித்தலும் வால்வு சீல் இனை மாற்றீடு செய்தலும் போன்றவை சுரங்கத்தின் சரியான பௌதிக நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பழுதுபார்ப்பு வேலைகளுக்கான மொத்தச் செலவு இ.மி.ச. மேந்தலைகள் நீங்கலாக ரூபா 48.1 மில்லியன் ஆகும். இந்த வேலைகள் 2022-03-30 இல் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டன.

### LVPP இல் அலகு 02 இன் "மட்டம் A" முழுமைத் திருத்தம்

"மட்டம் A" வகை முழுமைத் திருத்தம் என்பது ஆறு வருட ஆலைகளின் செயற்பாட்டிற்குப் பிறகு 300 இற்கும் மேற்பட்ட அனுபவம் வாய்ந்த பணியாளர்கள் தேவைப்படும் பெரிய அளவிலான முழுமைத் திருத்தம் ஆகும். இ.மி.ச. இன் சொந்தப் பணியாளர்கள், உள்நாட்டுத் தொழினுட்ப ஊழியர்கள் மற்றும் OEMs உள்ளிட்ட வெளிநாட்டு நிபுணர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் 75 நாட்கள் வேலையை நிறைவு செய்ய அட்டவணைப்படுத்தப்பட்டது. முழுமைத் திருத்தம் 2022-06-18 ஆந் திகதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டதுடன் சீனக் குழுவினரிடையேயான கோவிட் 19 பரவலுக்கு மத்தியிலும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது. இந்த முழுமைத் திருத்தத்திற்கான செலவு ரூபா 5.5 பில்லியன் ஆகும்.



உரு G5: மின்பிறப்பாக்கி நிலைக்கூற்றின் பிரித்தெடுப்பு

### சபுகஸ்கந்த மின்வலு நிலையத்தில் B நிலையத்தின் சாத்தியமான அதிகபட்ச அனுப்பீட்டை மீளவும் நிறுவுதல்

நிலையம் B இன் ரேடியேட்டர் வைப்பகத் தொகுதியின் சிதைவு காரணமாக அதன் அதிகபட்ச அனுப்பீடானது தடைப்பட்டது. எனவே வெப்பமான காலநிலை நிலைமைகளிலும்கூட சாத்தியமானளவு அதிகபட்ச அனுப்பீட்டை மீள நிறுவுவதற்காக ரேடியேட்டர் வைப்பகம் மாற்றீடு செய்யப்பட்டது. இந்த மாற்றீடானது ரூபா 580 மில்லியன் மொத்தச் செலவில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது.

### லக்விஜய மின்வலு நிலைய நிலக்கரி முற்றத்தின் கையாளும் கொள்ளளவை உயர்த்துதல்

நிலக்கரி மின்வலு நிலையத்தை இயக்குவதில் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவமானது, கிடைக்கக்கூடிய நிலக்கரி இருப்பினை அதிகரிக்க முடியுமாயின் ஆலையின் நம்பகத்தன்மையை மேலும் மேம்படுத்த முடியும் என்பதை அடையாளங் காட்டியது. எனவே, மோசமான காலநிலை, நிலக்கரி பெறுகையின் தாமதங்கள் மற்றும் நிலக்கரியை கையாளும் முறைமையிலுள்ள பிரச்சினைகள் ஆகியவற்றினால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை தவிர்க்கும் பொருட்டு, நிலக்கரி சேமிப்பு மற்றும் தற்போதுள்ள நிலக்கரி முற்றத்தின் கையாளும் கொள்ளளவை 1.21 MMT ஆக உயர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க, இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் கனரக பராமரிப்புக் கட்டடம், தங்குமிட கட்டடம் ஆகியவற்றின் நிருமாணமும் நிலக்கரி முற்றத்தின் விரிவாக்கமும் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் முறையே 42%, 64.8% மற்றும் 70.1% ஆகிய முன்னேற்றங்களைப் பதிவு செய்தன.

### களனிதிஸ்ஸ மின்வலு நிலையத்தின் கொள்ளளவை உயர்த்துதல்

நீண்ட கால மின் பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம் (LTGEP) 2015-2034 ஆனது மொத்த மின்வலு செயலிழப்பு சூழ்நிலையில் கொழும்புக்கான மின்சாரத்தை விரைவாக மீட்டெடுப்பதற்கு வசதியளிக்கக்கூடிய பின்வரும் நன்மைகளுடன் 3 x 35 MW எரிவாயு விசையாழிகளை நிறுவுவதற்கு முன்மொழிந்திருந்தது.

- உச்சப் பாவனை நேரத்தில் நீர் மின்வலுவின் கிடைப்பனவில் தங்கியிருப்பதைக் குறைத்தல்.
- தேவைப்படும்போது முறைமையின் முதன்மை / இரண்டாம் நிலை அதிர்வெண் கட்டுப்படுத்தும் மின்பிறப்பாக்கியாக செயற்படுத்தல்.
- தற்போதுள்ள குறைந்த வினைத்திறனைக் கொண்ட இ.மி.ச. இற்குச் சொந்தமான டீசல் மின்பிறப்பாக்கிகளை மாற்றுதல

அதற்கிணங்க, இந்தச் செயற்றிட்டமானது வழங்குநர்களின் கடன் நிதி ஏற்பாடுகளின் கீழ் உருவாக்கப்பட்டது. ஒப்பந்தத்தை 2023 யூலையில் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் செயற்றிட்டத்தை 2024 அக்டோபர் மாதத்தினுள் நிறைவு செய்ய அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

## உற்பத்தி செலவு

2022 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி செலவு அட்டவணை G4 இல் சித்தரிக்கப்பட்டுள்ளது.

*அட்டவணை G4: உற்பத்தி செலவு*

| தொகுதி | மின்வலு நிலையம் | மின்வலு நிலையம் (GWh) | திரண்ட உண்மையான செலவினம் (ரூபா மில்லியன்) | சராசரி அலகு மொத்தக் கிரயம் (ரூபா /KWh) |
|---|---|---|---|---|
| **அனல்** | KPS - எரிவாயு விசையாழிகள் | 87.3 | 5,129.2 | 58.75 |
| | KPS - இணைந்த சுற்று | 421.9 | 16,787.1 | 39.79 |
| | சபுகஸ்கந்த | 463.5 | 30,887.8 | 66.64 |
| | தீவுகளிலுள்ள சிறிய மின்பிறப்பாக்கிகள் | 2.6 | 363.0 | 139.62 |
| | உத்துறு ஜனனி | 82.6 | 5,495.8 | 66.54 |
| | மிதவை PS | 237.4 | 14,925.6 | 62.87 |
| | டீசல் மின்வலு ஆலைகள் (50 x 1 MW) | 44.1 | 2,565.5 | 58.17 |
| | **மொத்த அனல் - எரிபொருள்** | **1,339.4** | **76,153.9** | **56.86** |
| **நிலக்கரி** | **நிலக்கரி** | **5,173.8** | **138,731.8** | **26.81** |
| **மொத்த அனல்** | | **6,513.2** | **214,885.7** | **32.99** |
| **மகாவலி** | விக்டோரியா | 907.5 | 647.1 | 0.71 |
| | கொத்மலை | 526.5 | 1,135.0 | 2.16 |
| | உக்குவளை | 169.9 | 353.0 | 2.08 |
| | போவத்தென்ன | 59.2 | 209.6 | 3.54 |
| | ரந்தெனிகல/ ரன்தம்பே | 617.0 | 1,004.7 | 1.63 |
| | நில்லம்பே | 12.3 | 103.8 | 8.44 |
| | மேல் கொத்மலை | 505.3 | 1,459.1 | 2.89 |
| | தம்பபவனி | 347.2 | 1,746.0 | 5.03 |
| | **மொத்த மகாவலி** | **3,144.9** | **6,658.3** | **2.12** |
| **லக்ஷபான** | பழைய மற்றும் புதிய லகஷபான | 938.9 | 1,317.2 | 1.40 |
| | பொல்பிட்டிய | 513.3 | 867.3 | 1.69 |
| | விமலசுரேந்திர | 138.0 | 500.2 | 3.62 |
| | கன்யோன் | 147.4 | 619.0 | 4.20 |
| | **மொத்த லக்ஷபான** | **1,737.6** | **3,303.7** | **1.90** |
| **சமனல** | சமனலவெவ | 325.1 | 1,378.4 | 4.24 |
| | குக்குளே | 372.1 | 519.5 | 1.40 |
| | இங்கினியாகல | 17.4 | 144.1 | 8.28 |
| | உடவளவை | 15.9 | 179.1 | 11.26 |
| | **மொத்த சமனல** | **730.5** | **2,221.1** | **3.04** |
| **மொத்த நீர் / காற்று** | | **5,613** | **12,183.1** | **2.17** |
| **மொத்த இ.மி.ச. (மின் பிறப்பாக்கல் புள்ளியில்)** | | **12,126.2** | **227,068.8** | **18.73** |

*மூலம்: சக்தி விற்பனைக் கிளை*

குறிப்புகள்

1. CPC/ நிலக்கரி கொடுப்பனவுத் தாமத வட்டிக் கட்டணங்கள், குறுகிய/ நீண்ட கால வட்டிக் கட்டணங்கள் போன்ற நிதிக் கிரயத்தின் கூறுகள், செலவுக் கணிப்பீட்டில் உட்படுத்தப்படவில்லை.
2. விரிநில மின்வலு ஆலையிலிருந்தான மின் பிறப்பாக்கமானது வர்த்தக ரீதியான மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் செயற்பாட்டில் இல்லாததால் அது கவனத்தில் கொள்ளப்படவில்லை.
3. சக்திக் கட்டணமானது எரிபொருள் மற்றும் எரிபொருளற்ற கட்டணங்கள் இரண்டையும் உள்ளடக்கியுள்ளது.
4. சக்திச் செலவினைக் கணிப்பிடும்போது துணைச் சக்திச் செலவு கவனத்தில் கொள்ளப்பட்டது.

செயற்பாட்டு மீளாய்வு

# மின் பரிமாற்றப் பிரிவு



மன்னார் நடுக்குடா உபமின் நிலையம்

# மின் பரிமாற்றப் பிரிவு

இ.மி.ச. ஆனது கட்டடங்கள், பராமரிப்பு, மற்றும் மின் பரிமாற்ற உட்கட்டமைப்பை இயக்குதல் ஆகியவற்றுக்கும் மின் பரிமாற்ற மின்தொகுப்பு வழியாக மின்சார ஓட்டத்தை முகாமை செய்வதற்கும் முறைமையானது தொடர்ந்தும் நம்பகமானதாகவும் பாதுகாப்பானதாகவும் இருப்பதை உறுதி செய்வதற்கும் சட்டநியதியான பொறுப்பைக் கொண்டிருக்கிறது. இதற்கு மேலதிகமாக, நாட்டிற்கென எதிர்வுகூறப்படும் மின்சாரத்திற்கான கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு போதுமானளவு மின் பிறப்பாக்கத்தைக் கொண்டிருப்பது இ.மி.ச. இன் கடமை ஆகும்.

இ.மி.சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மேற்படி சட்டநியதியான கடப்பாடுகளை முறையாக நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்கு பின்வரும் செயற்பாட்டு நோக்கங்கள் மின் பரிமாற்றப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன:

- வினைத்திறனான, ஒருங்கிணைக்கப்பட்ட, நம்பகமான மற்றும் சிக்கனமான மின் பரிமாற்ற முறைமையொன்றை விருத்தி செய்வதும் பேணுவதும்.
- நுகர்வோருக்கு பாதுகாப்பான, நம்பகத்தன்மை வாய்ந்த மற்றும் சிக்கனமான மின்சார வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக விநியோக உரிமதாரர்களுக்கு தொகையளவில் மின்சாரத்தைப் விற்பனை செய்வதும் பெறுவதும்.
- மின்சாரத்திற்காக எதிர்வுகூறப்பட்ட கேள்வியைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானளவு மின் பிறப்பாக்கல் கொள்ளளவு இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துவது.
- 132 kV மற்றும் 220 kV இற்கான முறைமை மின் பரிமாற்ற மின்னழுத்து வேறுபாடுகளை ±10 % இனுள்ளும் 50 Hz மீடிறனை ±1 % இனுள்ளும் பேணுவது.

2022 இல், மின் பரிமாற்றப் பிரிவை இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பதற்கு சபை தீர்மானித்தது. அவையாவன, மின் பரிமாற்ற கம்பியில்லாத் தொழிற்பாடுகள் பிரிவு மற்றும் மின் பரிமாற்ற கம்பித் தொழிற்பாடுகள் பிரிவு. இந்த இரு பிரிவுகளும் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்ட நோக்கங்களை மிகவும் வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் அடைவதற்காகத் தாபிக்கப்பட்டுள்ளன.

### மின் பரிமாற்றப் பிரிவின் செயலாற்றுகை

2022 ஆம் ஆண்டிற்காக அறிக்கையிடப்பட்ட மின்சாரத்திற்கான கேள்வி 15,942.2 GWh ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 4.6% குறைவானதாகும். 2022 ஆம் ஆண்டில் மின் பிறப்பாக்கம் குறைவாக இருந்ததால் திட்டமிடப்பட்ட மின் தடைகள் ஊடாக கேள்விப் பக்க முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட்டது.

2022 இல் இ.மி.ச. இற்குச் சொந்தமான நீர் மின்வலு ஆலைகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சக்தி 5,364.3 GWh ஆகும். இது ஆண்டில் செய்யப்பட்ட மொத்த மின் பிறப்பாக்கத்தில் 33.6% ஆக இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.9% குறைவானதாக இது பதிவு செய்யப்பட்டது. இ.மி.ச. இற்குச் சொந்தமான தம்பபவனி காற்று மின்வலு ஆலையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மின் பிறப்பாக்கம் 347.2 GWh ஆக இருந்ததுடன் இது மொத்த மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி (NCRE) பிறப்பாக்கத்தில் 11.8% ஆகப் பதிவு செய்யப்பட்டது.

லக்விஜய மின்வலு ஆலையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வருடாந்த சக்தி 5,173.8 GWh ஆக இருந்ததுடன் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் மொத்த மின் பிறப்பாக்கத்திற்கான இதன் பங்களிப்பு 32.5% என அறிக்கையிடப்பட்டது. IPP அனல் (எண்ணெய்) மின்வலு ஆலைகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மின் பிறப்பாக்கம் 1,127.7 GWh ஆக இருந்ததுடன் இது மொத்த மின் பிறப்பாக்கத்திற்கு 7.1% பங்களிப்பாக அறிக்கையிடப்பட்டிருந்தது. ACE மின்வலு (எம்பிலிப்பிட்டிய) மற்றும் ACE மின்வலு (மாத்தறை என்ற பெயர்களைக் கொண்ட IPP ஆலைகள் முறையே 2022-03-28 தொடக்கம் 2022-09-28 வரை மற்றும் 2022-04-20 தொடக்கம் 2022-10-20 வரை ஆகிய ஆறு மாத ஒப்பந்தக் காலப்பகுதியில் இயக்கப்பட்டன. ஆலைத் தீர்மானமொன்றின் அடிப்படையில் மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கையின் (PPA) முடிவுறுத்தல் காரணமாக ஒப்பந்தக் காலம் காலாவதியாவதற்கு முன்னர் IPP ஆலை சோஜிட்ஸ் (களனிதிஸ்ஸ) CEBக்கு மாற்றப்பட்டது.

மாநகரத் திடக் கழிவு, தாவரமூலம் மற்றும் உயிர்த்திணிவு என்பன இலங்கையில் தற்போது NCRE (ஏனையவை) இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மின்வலுப் பிறப்பாக்க மூலங்கள் ஆகும். NCRE (ஏனையவை), IPPs இலிருந்து 2022 ஆம் ஆண்டிற்காக கொள்வனவு செய்யப்பட்ட மொத்த சக்தி 2,589.8 GWh (மேற்கூரை சூரியசக்தி மின் பிறப்பாக்கம் உள்ளிட்ட) ஆக இருந்ததுடன் மேற்கூரை சூரிய சக்தியில் இருந்து வாங்கப்பட்ட மொத்த திறன் 530 GWh ஆகும். 2022 இல் மொத்த மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியின் பங்களிப்பு 52.1% (இ.மி.ச. இன் நீர்மின் மற்றும் காற்றாலை மின் பிறப்பாக்கம்) ஆகும்.




*உரு T1: 2022 ஆம் ஆண்டிற்கான சக்திப் பிறப்பாக்கல் கலவை*

குறிப்புகள் : விரிநிலங்கள் மின்வலு நிலைய மின் பிறப்பாக்கத்துடன்

வருடாந்த மின்சாரப் பிறப்பாக்கம் மற்றும் மாதாந்த மின்சாரப் பிறப்பாக்கம் ஆகியவற்றுக்கான வெவ்வேறு சக்தி மூலங்களின் பங்களிப்புகள் முறையே உரு T2 மற்றும் உரு T3 ஆகியவற்றில் சித்தரிக்கப்பட்டுள்ளன.




*உரு T2: வருடாந்த மின்சாரப் பிறப்பாக்கத்திற்கான வெவ்வேறு சக்தி மூலங்களின் பங்களிப்பு - 2022 / 2021*

காலநிலையில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் மாதத்திலுள்ள நாட்களின் எண்ணிக்கை ஆகியவற்றால் ஆண்டு முழுவதுமான மாதாந்திர மின்வலுப் பிறப்பாக்கத்தின் வேறுபாடுகள் பாதிக்கப்படலாம். இதற்கு மேலதிகமாக, மின்வலுப் பிறப்பாக்கத்தின் பற்றாக்குறை காரணமாக ஆண்டு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட திட்டமிடப்பட்ட மின் தடைகள்கூட சராசரி நாளாந்த மின் பிறப்பாக்கல் வடிவத்தில் பிரதிபலிக்கிறது.




*உரு T3: மாதாந்த மின்சாரப் பிறப்பாக்கம் (நிகர) – 2022*

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் சராசரியான நாளாந்த மின் பிறப்பாக்கத்தின் மாறுபாட்டின் ஒப்பீடு உரு T4 இல் சித்தரிக்கப்பட்டுள்ளது. மின் பிறப்பாக்கப் பற்றாக்குறை காரணமாக 2022 ஆம் ஆண்டில் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட மின் தடையின் தாக்கமும்கூட இந்த ஒப்பீட்டில் பிரதிபலிக்கிறது.




*உரு T4: சராசரி நாளாந்த சக்திப் பிறப்பாக்கம் (நிகர) இன் மாறுபாடுகள் - GWh/day - 2021/2022*

உயர்ந்தபட்ச நாளாந்த மின் பிறப்பாக்கமான 48.2 GWh ஆனது 2022-03-23 ஆம் திகதி பதிவாகியிருந்ததுடன் வருடாந்த ஆகக் குறைந்த நாளாந்த மின் பிறப்பாக்கமாக 28.7 GWh ஆனது 2022-11-07 ஆந் திகதி பதிவாகியிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச நாளாந்த மின் பிறப்பாக்கப் பெறுமதிகளில், NCRE (ஏனையவை) மின் பிறப்பாக்கப் பெறுமதிகள் சேர்க்கப்படவில்லை.

2022 ஆம் ஆண்டில் உயர்ந்தபட்ச இரவு நேர உச்சப் பாவனையானது 2022-01-31 ஆந் திகதி 19:00 மணிக்குப் பதிவாகியிருந்தது. அந்த நேரத்தில் மின்சாரத்திற்கான கேள்வியானது 2,708.1 MW இனை அடைந்திருந்தது. பொதுவாக, ஆண்டின் உயர்ந்தபட்ச இரவு நேர உச்சப் பாவனையானது வரட்சியான பருவ காலத்திலுள்ள ஒரு மாதத்திலேயே பதிவாகும். எனினும், இந்த இயல்புநிலை ஆனது 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட மின் தடைகளால் பாதிப்புக்கு உள்ளாகியது. ஆண்டின் உயர்ந்தபட்ச இரவு நேர உச்சப் பாவனை ஏற்பட்ட நாளின் கால் மணித்தியால ரீதியான மின் பிறப்பாக்கல் விபரங்கள் உரு T5 இல் சித்தரிக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் உயரந்தபட்ச பகல் நேர உச்சப் பாவனையான 2,358.1 MW ஆனது 2022-02-22 ஆந் திகதி 16:00 மணிக்கு பதிவாகியிருந்தது. பகல்நேர உச்சப் பாவனையும்கூட அட்டவணைப்படுத்தப்பட்ட மின் தடைகளின் தாக்கத்திற்கு உள்ளாகியிருந்தது. குறைந்தபட்ச முறைமைக் கேள்வியாக 832.9 MW ஆனது 2022-12-26 ஆந் திகதி 03:00 மணிக்கு பதிவாகியிருந்தது.




*உரு T5: முறைமை மின் பிறப்பாக்க விபரம் - 2022-01-31 இல்*

கடந்த மூன்று வருடங்களுக்களில் பதிவு செய்யப்பட்ட வருடாந்த உயர்ந்தபட்ச இரவு உச்சப் பாவனை நாட்களின் நாளாந்த சுமை வளையிகளின் ஒரு ஒப்பீடு கீழே உரு T6 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு *T6:* கடந்த மூன்று வருடங்களில் காணப்பட்ட வருடாந்த உயர்ந்தபட்ச இரவு நேர உச்சப் பாவனை நாட்களின் சுமை வளையிகள் (தீவளாவிய ரீதியிலான அட்டவணைப்படுத்தப்பட்ட மின் தடைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன).

### திட்டமிடப்பட்ட மின் தடைகள்

நாட்டில் நிலவிய நிதி நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறையின் காரணமாக குறைந்தளவான மின் பிறப்பாக்கத்துடனேயே 2022 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. இதன் விளைவாக, இ.மி.ச. தீவளாவிய ரீதியில் அட்டவணைப்படுத்தப்பட்ட மின் தடைகளை மேற்கொண்டதன் மூலம் கேள்விப் பக்க முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்தியிருந்தது. இத்தகைய மின் தடை காரணமாக வழங்கப்படாத மொத்த சக்தி 799.2 GWh ஆகும். மாதாந்த உயர்ந்தபட்சமாக வழங்கப்படாத சக்தி மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் மதிப்பிடப்பட்ட அளவுகள் முறையே 157.7 GWh மற்றும் 117.6 GWh ஆகும். மின் தடையானது முன்னரே திட்டமிடப்பட்ட நேரத் துண்டங்களின் அடிப்படையில் பகல் நேர உச்சப் பாவனை நேரம் மற்றும் இரவு நேர உச்சப் பாவனை நேரம் ஆகிய காலப்பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. குறைந்தபட்ச மாதாந்திர வழங்கப்படாத சக்தி 3.9 GWh ஆக இருந்ததுடன் இது சனவரி மாதத்தில் பதிவாகியிருந்தது. இந்த மாதத்தில் ஆறு நாட்கள் மாத்திரமே மின் தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

### நீர்த்தேக்க செயலாற்றுகை

2022 ஆம் ஆண்டு 880.2 GWh என்ற மொத்த நீர் சேமிப்புடன் ஆரம்பமானது. இது முழுமையான சேமிப்பான 1,207.3 GWh இன் 72.9% ஆகும். ஆண்டின் காலப்பகுதியில் நீர்த்தேக்கங்களுக்குக் கிடைக்கப் பெற்ற உட்பாய்வானது 5,418.2 GWh ஆகக் காணப்பட்டது. இது கணிசமானளவு ஈரமான மற்றும் உயர் உட்பாய்வு ஆண்டைக் குறிக்கிறது. ஆகக் குறைந்த சேமிப்பாக 2022-04-02 ஆந் திகதி பதிவான 315.5 GWh காணப்படுகிறது. ஆண்டின் இறுதியில் காணப்பட்ட சேமிப்பு 915.7 GWh ஆகும். இது மொத்த முறைமைச் சேமிப்பில் 75.9% ஆகும். உயர்ந்தபட்ச சேமிப்பான 1112.6 GWh ஆனது 2022-11-06 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருந்தது. தென்மேல் பருவ மழை மற்றும் இரண்டாவது இடைப்பட்ட பருவ மழை (அக்டோபர் - நவெம்பர்) காலப்பகுதி முழுவதும் பெறப்பட்ட அதிக உட்பாய்வுகளைத் தொடர்ந்து, மொத்த சேமிப்பு அளவில் 92.2% பதிவாகியிருந்தது. ஆண்டின் இரண்டாவது அரையாண்டு காலப்பகுதியில் முறைமைக்கு 3,637.5 GWh உட்பாய்வு கிடைக்கப் பெற்றது.

ஆண்டின்போதான உயர்ந்தபட்ச மாதாந்த உட்பாய்வானது சராசரி நாளாந்த உட்பாய்வான 30.8 GWh உடன் ஆகஸ்ட் மாதம் (955.1 GWh) பதிவு செய்யப்பட்டிருந்தது.

ஆண்டிற்கான பிரதான நீர் மின்வலு நிலையங்களில் (அனுப்பீடு செய்யத்தக்க) பதிவு செய்யப்பட்ட நீர் மின்வலுப் பிறப்பாக்கம் 5,364.3 GWh ஆக இருந்ததுடன் சிறிய நீர் மின்வலுப் பிறப்பாக்கம் 1,376.7 GWh ஆக இருந்தது. இதன் விளைவாக, அதிக உட்பாய்வு காரணமாக நீர் மின்வலுப் பிறப்பாக்கமானது சராசரி நிலைமையையும்விட சிறந்த பெறுபேற்றினைக் காட்டுகிறது. நீர்மின் சேமிப்பு மாறுபாடானது உரு T7 இல் தரப்பட்டுள்ளது.




உரு *T7: நீர்மின் சேமிப்பு மாறுபாடுகள்*

## NCRE செயற்றிட்டங்களின் செயலாற்றுகை

“பசுமை சக்தியின் ஒருங்கிணைப்பை உத்தமமாக்கல்” என்ற இலக்கிற்கு இணங்க, இ.மி.ச. ஆனது மொத்தக் கொள்ளளவு 30 MW கொண்ட 21 தரையில் பொருத்தப்பட்ட சூரியசக்தி PV செயற்றிட்டங்களை வெற்றிகரமாக இயக்கியது. இதற்கு மேலதிகமாக, விதிப்பனவுச் செயன்முறை மற்றும் விலைமனுச் செயன்முறையின் ஊட்டத்தின் கீழ் 74 செயற்றிட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் பூர்த்தியடைந்துள்ள சூரியசக்தி PV செயற்றிட்டங்கள் மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற செயற்றிட்டங்கள் ஆகியவற்றின் விபரங்கள் அட்டவணை T1 தொடக்கம் அட்டவணை T3 வரை சித்தரிக்கப்பட்டுள்ளன

அட்டவணை *T1: 33 kV* மற்றும் அதற்கும் அதிகமான மின்னழுத்தத்தில் இயக்கப்படும் தரையில் பொருத்தப்பட்ட சூரியசக்தி *PV* செயற்றிட்டங்களின் விபரங்கள்.

| மின்தொகுப்பு உபமின் நிலையம் | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | இயக்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கொள்ளளவு (ஆறு) |
|---|---|---|
| அநுராதபுரம் | 2 | 2 |
| ஹபரணை | 1 | 1 |
| மஹியங்கணை | 6 | 6 |
| மாகோ | 3 | 3 |
| பல்லேகல | 5 | 5 |
| பன்னல | 2 | 2 |
| ஹொரணை | 1 | 1 |
| வவுணதீவு | 1 | 10 |
| **மொத்தம்** | **21** | **30** |

அட்டவணை *T2:* ஊட்ட விதிப்பனவுச் செயன்முறையின் கீழ் நடைபெறுகின்ற செயற்றிட்டங்களின் விபரங்கள்

| வர்க்கம் | செயற் திட்டங்களின் எண்ணிக்கை | மொத்தக் கொள்ளளவு (ஆறு) | உபமின் நிலையம் | நிலை |
|---|---|---|---|---|
| சிறிய நீர்மின் | 7 | 8.04 | கேகாலை, நாவலப்பிட்டி, மலிபோட, ரிகில்லகஸ்கட | ஊட்டத்தின் விதிப்பனவின் கீழ் SPPA கைச்சாத்திடப் பட்டுள்ளதுடன் இயக்குவதற்கான அதிகாரம் வழங்கல் நிலுவையில் உள்ளது. |
| சூரிய சக்தி | 3 | 12.9 | எம்பிலிப்பிட்டி, பெலியத்த, வவுணதீவு | |
| உயிர்த்திணிவு (தாவரமூலம் மற்றும் உயிர் வாயு | 1 | 5 | அம்பாறை | |
| **மொத்தம்** | **11** | **25.94** | | |

அட்டவணை *T3:* விலைமனுச் செயன்முறையின் கீழுள்ள செயற்றிட்டங்களின் விபரங்கள்

| திட்டங்கள் | ஆலைகளின் எண்ணிக்கை | மொத்தக் கொள்ளளவு (MW) | உபமின் நிலையங்கள் | நிலை |
|---|---|---|---|---|
| 90 X 1 MW சூரியசக்தி PV | 32 | 32 | - | நிருமாண வேலைகள் நடைபெறுகின்றன |
| 10 MW பொலநறுவை சூரியசக்தி PV | 1 | 10 | வாழைச்சேனை | |
| 60 MW காற்று மின்வலு (மாறுபடும் கொள்ளளவு 1-10 MW) | 1 | 10 | திருகோணமலை | LOI வழங்கப்பட்டு, செயற்றிட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| | 2 | 15 | மன்னார் | |
| | 2 | 10 | மாதம்பே | |
| 150 MW சூரியசக்தி PV (மாறுபடும் கொள்ளளவு 1-10 MW) | 24 | 157 | 23 மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் | விலைமனு மதிப்பீடு நடைபெறுகிறது. |
| 100 MW சியம்பலாந்துவ சூரியசக்தி PV | 1 | 100 | எதிமலே | |
| 30 MW சூரியசக்தி PV (மாறுபடும் கொள்ளளவு 1-5 MW) | - | 30 | பெலியத்த, மாத்தறை, பல்லேகல, நாவலப்பிட்டி, வவுணதீவு | |
| 40 MW சூரியசக்தி PV (கொள்ளளவு 5 MW) | - | 40 | காலி, கப்பல்துறை | |
| 20 MW காற்று மின்வலு (மாறுபடும் கொள்ளளவு 2.5-10 MW) | - | 20 | மன்னார் | |
| 70 MW சூரியசக்தி PV (மாறுபடும் கொள்ளளவு 1-5 MW) | - | 70 | 11 மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் | |
| **மொத்தம்** | 63 | 494 | | |

### முக்கிய நிகழ்வுகள்

மின் பரிமாற்றப் பிரிவானது நாடு முழுவதும் நம்பகமான மற்றும் வினைத்திறனான மின்சாரப் பரிமாற்றத்தை உறுதி செய்வதில் முக்கிய வகிபாகமொன்றை ஆற்றியதன் மூலம் 2022 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க மைல்கற்களை எட்டியுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான பிரிவின் முக்கிய நிகழ்வுகள் கீழே தரப்பட்டுள்ளது.

### எதிர்காலத்திற்கான திட்டமிடல்

நீண்ட கால மின் பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம் (LTGEP) 2023-2042 ஆனது அங்கீகாரத்திற்காக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் (PUCSL) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் வெளிப்படுத்தப்பட்ட கொள்கை இலக்குகளை அடைவதற்கு, 2023 – 2030 காலப் பகுதியில் 5,646 MW RE கொள்ளளவை சேர்ப்பதற்கும் 2031 – 2042 காலப்பகுதியில் 8,180 MW கொள்ளளவைச் சேர்ப்பதற்கும் எதிர்பார்க்கப்படுவதுடன் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட 70% புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்கை இலக்குகளை அடைய 2023 - 2030 மற்றும் 8,180 MW 2031 - 2042 இல் 5646 MW RE திறன் சேர்க்கைகள் திட்டமிடப்பட்டது. கொள்ளளவின் குறிப்பிடத்தக்களவு மட்ட சேர்ப்பனவுகள் (விசேடமாக காற்று மற்றும் சூரியசக்தி PV) இந்தத் திட்டத்தின் திட்டமிடல் நெடுகிலும் முன்மொழியப்பட்டுள்ளது. .

### கிரகத்தைப் பாதுகாத்தல்

உலகளாவிய காலநிலை மாற்றங்களைத் தணிப்பதற்காக அறிவிக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க, 2030 ஆம் ஆண்டிற்குள் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களைப் பயன்படுத்தி நாட்டின் மின்சாரத் தேவையின் 70% இனைப் பூர்த்தி செய்வதற்கு இ.மி.ச. உறுதிபூண்டுள்ளது. இந்த உறுதிப்பாட்டை உண்மையாக்க, 2022-11-23 ஆந் திகதி "2023-2026 இலிருந்து தேசிய மின்தொகுப்பிற்கு மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களை அனுப்புவதற்கான பாதை" என்ற அறிக்கை வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையானது குறைந்தபட்ச உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுடன் தேசிய மின்தொகுப்பிற்கு மீள்புதுப்பிக்கத்தக்க சக்திகளின் ஒருங்கிணைப்பை உத்தமமாக்குவதற்கான வழிகாட்டலை வழங்கும் என்பதுடன் 2030 ஆம் ஆண்டிற்குள் 70% மீள்புதுப்பிக்கத்தக்க சக்திகளின் இலங்கினை அடைவதற்கான வழியையும் உருவாக்கும்.

### முறைமை அபிவிருத்திகள்

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கீழ்வரும் மின்வலு ஆலைகள், மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் மற்றும் மின் பரிமாற்ற மார்க்கங்கள் என்பன மின் பரிமாற்ற வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன

*அட்டவணை T4: மின்பரிமாற்ற முறைமை அபிவிருத்திகள் - 2022*

| வலையமைப்பு மூலக்கூறு | கொள்ளளவு./ மின்னழுத்த மட்டம் |
|---|---|
| விரிநில மின்வலு நிலையம் | 35 MW |
| களுத்துறை GS (132 kV / 33 kV) | 63 MW |
| கெஸ்பேவ GS (132 kV / 33 kV) | 63 MW |
| புதிய ஹபரண SS (220 kV / 132 kV) | 500 MW |
| ஹம்பாந்தோட்டை SS (220 kV / 132 kV) | 500 MW |
| பியகம SS (220 kV / 33 kV) | 126 MW |
| பாதுக்க - பன்னிப்பிட்டிய 220 kV இணைப்புகள் | 19.2 km |
| களுத்துறை-மத்துகம 132 kV இணைப்புகள் (உள் மற்றும் வெளி இணைப்புகள்) | 4.8 km |
| கெஸ்பேவ 132 kV (உள் மற்றும் வெளி இணைப்புகள்) | 6.5 km |

செயற்பாட்டு மீளாய்வு

# விநியோகப் பிரிவுகள்



# விநியோகப் பிரிவுகள்

வாடிக்கையாளர்களுக்கு உயர் தரம் வாய்ந்த மின்சார வழங்கல் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான பொறுப்பைக் கொண்டிருப்பதால் விநியோகப் பிரிவுகள் நிறுவனத்தில் ஒரு முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றன. இ.மி.ச. மொத்த விற்பனைத் தொகையில் 89% இனைக் கையாளுகின்ற அதே வேளை எஞ்சிய தொகை, இ.மி.ச. இன் ஒரு துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனியால் (LECO) நிறைவேற்றப்படுகிறது.

ஒட்டுமொத்த இ.மி.ச. விநியோக முறைமையும் விநியோகப் பிரிவு 1 (DD1), விநியோகப் பிரிவு 2 (DD2), விநியோகப் பிரிவு 3 (DD3), விநியோகப் பிரிவு 4 (DD4) என பூகோள ரீதியில் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிப்பானது பிரதானமாக நிருவாக மற்றும் செயற்பாடுகளை இலகுவாக்குவதற்காகவும் வினைத்திறன் மற்றும் மின்வழங்கலின் தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான இலக்குப் போட்டியை அடைந்து கொள்வதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதாகும்.

விநியோக வலையமைப்பானது 33 kV மற்றும் 11 kV இடைநிலை மின்னழுத்த (MV) மார்க்கங்களையும், 400 V தாழ் நிலை மின்னழுத்த (LV) மார்க்கங்களையும் விநியோக மின்மாற்றிகளையும் கொண்டிருக்கிறது. 220 kV மற்றும் 132 kV மின்பரிமாற்ற முறைமைகள் நாடு பூராகவும் உள்ள மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் ஊடாக விநியோக வலையமைப்புக்கு மின்வலுவை மாற்றுகின்றன.

## செயற்பாட்டுக் கட்டமைப்பு

விநியோகப் பிரிவுகள் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன் இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்படுகின்ற மாகாணங்கள் நாட்டிலுள்ள நிருவாக மாகாணங்களுடன் சரியாகப் பொருந்தாமல் இருக்கலாம். ஒரு மாகாணம் சேவை வழங்கப்படுகின்ற நுகர்வோரின் எண்ணிக்கையைப் பொறுத்து பல பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு பிரதேசம் பல நுகர்வோர் சேவை நிலையங்களாக (CSCs) மேலும் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவின் கீழும் வருகின்ற மாகாணங்கள் மற்றும் பிரதேசங்கள் ஆகியன கீழே அட்டவணை D1 தொடக்கம் அட்டவணை D4 வரை சித்தரிக்கப்பட்டுள்ளன.

## செயற்பாட்டுப் பிரதேசம்

விநியோகப் பிரிவு 1 ஆனது வட மேல் மாகாணம், வட மாகாணம் மற்றும் வட மத்திய மாகாணம் ஆகியவற்றை முழுமையாகவும் மேல் மாகாணத்தை பகுதிளயவிலும் 19 பிரதேச அலுவலகங்கள் ஊடாக உள்ளடக்குகிறது. விநியோகப் பிரிவு 1 ஆனது ஐந்து மாகாணங்களை உள்ளடக்கியுள்ளது. அவையாவன, வடமேல் மாகாணம் I, வடமேல் மாகாணம் II, வட மத்திய மாகாணம், வட மாகாணம், மற்றும் கொழும்பு நகர். 2022 ஆம் ஆண்டில், வடமேல் மாகாணம் I உம் வடமேல் மாகாணம் II உம் நான்கு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. வட மத்திய மாகாணமானது மூன்று பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன் வட மாகாணமும் கொழும்பு நகரும் நான்கு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. (அட்டவணை D1) .

*அட்டவணை D1: விநியோகப் பிரிவு 1 இன் செயற்பாட்டுப் பிரதேசங்கள்*

| பிரிவு | மாகாணம் | பிரதேசம் |
|---|---|---|
| விநியோகப் பிரிவு 1 | வட மேல் I | சிலாபம், குளியாப்பிட்டி, வென்னப்புவ, புத்தளம் |
| | வட மேல் II | குருநாகல், வாரியப்பொல, நாரம்மல, மாகோ |
| | வட மத்திய | அநுராதபுரம், கெக்கிராவ மற்றும் மின்னேரியா. |
| | வடக்கு | யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் கிழக்கு, கிளிநொச்சி மற்றும் வவுனியா |
| | கொழும்பு நகர் | கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, கொழும்பு மேற்கு மற்றும் கொழும்பு கிழக்கு |

விநியோகப் பிரிவு 2 ஆனது கிழக்கு மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்தை முழுமையாகவும் மேல் மாகாணம் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களை பகுதியளவிலும் உள்ளடக்கியதாக 25 பிரதேச அலுவலகங்களைக் கொண்டுள்ளது 2022 இல் இந்த நான்கு மாகாணங்களில், கிழக்கு மாகாணம் ஐந்து பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள அதே வேளை மத்திய மாகாணம் I ஆறு பிரதேசங்களாகவும் மத்திய மாகாணம் II ஏழு பிரதேசங்களாகவும் மேல் மாகாணம் வடக்கு ஏழு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது (அட்டவணை D2).

*அட்டவணை D2: விநியோகப் பிரிவு 2 இன் செயற்பாட்டுப் பிரதேசங்கள்*

| பிரிவு | மாகாணம் | பிரதேசம் |
|---|---|---|
| விநியோகப் பிரிவு 2 | கிழக்கு மாகாணம் | அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வாழைச்சேனை மற்றும் கல்முனை |
| | மத்திய மாகாணம் I | தம்புள்ள, கலகெதர, கண்டி நகர், கட்டுகஸ்தோட்டை, குண்டசாலை, மாத்தளை |
| | மத்திய மாகாணம் II | கேகாலை, மாவனெல்ல, பேராதனை, நுவரெலியா, கினிகத்தென்ன, நாவலப்பிட்டி, ஹங்குராங்கெத்த |
| | மேல் மாகாணம் வடக்கு | கம்பஹா, களனி, நீர்கொழும்பு, ஜா-எல, திவுலப்பிட்டிய, வெயாங்கொட மற்றும் கிரிந்திவெல |

விநியோகப் பிரிவு 3 ஆனது மேல் மாகாணத்தின் ஒரு பகுதியையும் (மேல் மாகாணம் தெற்கு II) சப்ரகமுவ மாகாணம் மற்றும் ஊவா மாகாணம் ஆகியவற்றையும் உள்ளடக்குகிறது. வெள்ளவாய பிரதேசமானது மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் ஊவா மாகாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் 2022 ஆம் ஆண்டின் இறுதியில், மேலுள்ள அனைத்து மாகாணங்களும் அட்டவணை D3 இல் தரப்பட்டதைப் போன்று ஐந்து பிரதேசங்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை D3: விநியோகப் பிரிவு 3 இன் செயற்பாட்டுப் பிரதேசங்கள்

| பிரிவு | மாகாணம் | பிரதேசம் |
|---|---|---|
| விநியோகப் பிரிவு 3 | மேல் மாகாணம் தெற்கு II | பண்டாரகம, ஹோமாகம, அவிசாவளை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மற்றும் ஹொரணை |
| | சப்ரகமுவ | இரத்தினபுரி, கஹாவத்தை, ருவன்வெல்ல, எஹலியகொடை மற்றும் எம்பிலிப்பிட்டிய |
| | ஊவா | பதுளை, தியத்தலாவ, மொணராகலை மஹியங்கணை மற்றும் வெள்ளவாய |

விநியோகப் பிரிவு 4 ஆனது மேல் மாகாணத்தின் ஒரு பகுதியையும் (மேல் மாகாணம் தெற்கு I), தென் மாகாணத்தை முழுமையாகவும் சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் சில பகுதிகளையும் உள்ளடக்குகிறது. 2022 இல் உள்ளவாறு மேல் மாகாணம் தெற்கு I ஆனது நான்கு பிரதேசங்களை உள்ளடக்குகின்ற அதே வேளை தென் மாகாணம் I ஆனது நான்கு பிரதேசங்களை உள்ளடக்குவதுடன் தென் மாகாணம் II ஆனது மூன்று பிரதேசங்களை உள்ளடக்குகிறது

*அட்டவணை D4: விநியோகப் பிரிவு 4 இன் செயற்பாட்டுப் பிரதேசங்கள்*

| பிரிவு | மாகாணம் | பிரதேசம் |
|---|---|---|
| விநியோகப் பிரிவு 4 | தென் மாகாணம் I | அம்பலாங்கொடை, காலி, அக்குரஸ்ஸ, பத்தேகம |
| | தென் மாகாணம் II | தங்காலை, ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை |
| | மேல் மாகாணம் தெற்கு I | இரத்மலானை, களுத்துறை, தெஹிவளை மற்றும் மத்துகம |

மாகாணங்களுக்குப் புறம்பாக, ஒவ்வொரு பிரிவினதும் நீடித்திருக்கத்தக்க செயற்பாட்டிற்குத் தேவையான ஆதரவுச் சேவைகளை மேற்கொள்வதற்காக அனைத்து விநியோகப் பிரிவுகளிலும் மூன்று பிரத்தியேகமான கிளைகள் தாபிக்கப்பட்டுள்ளன. அவையாவன, செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்புக் கிளை, திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கிளை மற்றும் வர்த்தகம் மற்றும் நிறுவனக் கிளை. மேலும், விநியோகப் பிரிவு 1 ஆனது விநியோக ஒருங்கிணைப்புக் கிளையையும் கொண்டிருக்கிறது.

#### விநியோகப் பிரிவுகளின் பிரதான நோக்கங்கள்

- வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில் செயற்பாடு சார்ந்த மற்றும் பராமரிப்பு வினைத்திறனை மேம்படுத்தல்.
- வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பயனுறுதிமிக்கதும் வினைத்திறனானதுமான விநியோக வலையமைப்பு கட்டுப்பாட்டு நிலையங்கள் (DNCC) மற்றும் பிற தொடர்பாடல் பிரயோகங்களைப் பேணுதல்.
- நிறுவனத் திட்டத்தை நிறைவேற்றும் வகையில் பிரதேச தந்திரோபாய நடவடிக்கைகள் மற்றும் தேவையான வளங்களுக்கான தொழினுட்பத் திட்டமிடல்.
- முறைமை இழப்புகளைக் குறைக்கின்ற அதே வேளை சர்வதேச நியமங்களுடன் இணக்கமாக இருக்கும் வகையில் நம்பகத்தன்மை, தரம், பாதுகாப்பு மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான மின்சார விநியோக முறைமையின் அபிவிருத்தியை உறுதிப்படுத்தல்.
- துல்லியமான பாதீடு, நிதியிடல் மற்றும் கண்காணிப்பு ஊடாக முறையான நிதி முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தல்.
- வருமானங்களை உரிய நேரத்தில் சேகரிப்பதன் மூலம் காசுப் பாய்வு முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தல்.
- முறையான பொருள் முகாமைத்துவச் செயன்முறையை உறுதிப்படுத்தல்.
- பிந்தைய கேள்விப் பக்க முகாமைத்துவ எண்ணக்கருக்கள் மற்றும் வாடிக்கையாளர் விழிப்புணர்வு ஊடாக சக்திப் பாதுகாப்பை ஊக்கப்படுத்தல்.
- நவீன தொழில்துறைக்கு பொருத்தமான வகையில் நியமங்கள், விவரக்குறிப்புகள், நடைமுறைகள் ஆகியவற்றையும் வடிவமைப்புகள், நிருமாணங்கள், செயற்பாடுகள் மற்றும் பராமரிப்புகள் ஆகியவற்றுக்கான முகாமைத்துவத் தகவல்களையும் மீளாய்வு செய்தலும் இற்றைப்படுத்தலும்.
- அதிநவீன தொழினுட்பங்களை விருத்தி செய்வதற்காக ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தல்.
- ஆற்றல்மிகு வேலைப்படையை உருவாக்குதலும், கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக அவர்களுக்கு வெற்றிக்கான வாய்ப்புகளை உச்சப்படுத்தலும்.
- செயற்பாடுகள் நிகழும் சூழலை பாதுகாப்பதிலும் முற்காப்பு செய்வதிலும் அர்ப்பணிப்பை வெளிக்காட்டுதல்.
- தற்போதைய அரசாங்கக் கொள்கைகளின்படி மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல்களுக்கு வசதியேற்படுத்துதல்.




*உரு D1: விநியோக வரைபடம் - 2022*

# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)

**விநியோகப் பிரிவுகளின் எல்லை**

2022 ஆம் ஆண்டிற்கான பிரதான உட்கட்டமைப்பு மற்றும் தொழிற்பாட்டு புள்ளிவிபரங்கள், விநியோக உட்கட்டமைப்பு சேர்த்தல்கள் மற்றும் விதிப்பனவு ரீதியான நுகர்வோர், விற்பனை மற்றும் வருமானப் பகுப்பாய்வுத் தரவுகள் என்பன அட்டவணை D6 தொடக்கம் அட்டவணை D9 வரை தரப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஐந்து ஆண்டுகள் காலப்பகுதியில் நிறுவனத்தின் நுகர்வோர் அதிகரிப்பு தொடர்பான விபரங்கள் உரு D3 இல் காட்டப்பட்டுள்ளது.

*அட்டவணை D5: பிரதான உட்கட்டமைப்பு மற்றும் தொழிற்பாட்டுப் புள்ளிவிபரங்கள்*

| விபரம் | DD1 | DD2 | DD3 | DD4 |
|---|---|---|---|---|
| சேவைப் பிரதேசம்[1] (சதுர கி.மீ.) | 26,931 | 17,935 | 11,036 | 6,694 |
| பிரதேசங்கள் (எண்ணிக்கை) | 19 | 25 | 15 | 11 |
| நுகர்வோர் சேவை நிலையங்கள் (எண்ணிக்கை) | 61 | 91 | 53 | 42 |
| கட்டுப்பாட்டு நிலையங்கள் (எண்ணிக்கை) | 4 | 3 | 3 | - |
| அழைப்பு நிலையங்கள் (எண்ணிக்கை) | 4 | 3 | 3 | 1 |
| தொகையளவு நுகர்வோர் (எண்ணிக்கை) | 5,006 | 4,014 | 2,444 | 1,994 |
| சில்லறை நுகர்வோர் (எண்ணிக்கை) | 1,993,938 | 2,382,773 | 1,409,781 | 1,136,783 |
| மொத்த நுகர்வோர் (எண்ணிக்கை) | 1,998,944 | 2,386,787 | 1,412,225 | 1,138,777 |
| SAIDI (நிமிடங்கள் / வாடிக்கைளாளர் / ஆண்டு) | 1,625 | 3,627 | 5,470 | 5,202 |
| SAIFI (குறுக்கீடுகள் / வாடிக்கையாளர் / ஆண்டு) | 8 | 27 | 39 | 34 |
| கொள்வனவு செய்யப்பட்ட மின்சார அலகுகள் (GWh) | 4,190 | 4,723 | 1,006 | 1,774 |
| நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்ட மின்சார அலகுகள் (GWh) | 4,021 | 4,499 | 2,552 | 1,897 |
| விநியோக இழப்பு (%) | 5.5% | 7.3% | 5.6% | 6.9% |
| விற்பனை செய்யப்பட்ட அலகுகளிலிருந்து சம்பாதிக்கப்பட்ட வருமானம் (ரூபா மில்லியன்) | 90,691.74 | 93,547.37 | 54,015.20 | 40,551.56 |
| சராசரி விற்பனை விலை (LKR/ kWh) | 22.56 | 20.79 | 21.16 | 21.38 |
| பெறத்தக்க நிலை (மாதங்கள்) | 1.3 | 1.3 | 1.5 | 1.4 |
| புதிய இணைப்புகளின் எண்ணிக்கை (எண்ணிக்கை) | 32,729 | 47,182 | 28,406 | 18,890 |

[1] மின்சார வலையமைப்பு இல்லாத காடுகள் மற்றும் தீவுகள் உள்ளடக்கப்படாதன

*அட்டவணை D6: விநியோக உட்கட்டமைப்பு சேர்த்தல்கள் - 2022 ஆம் ஆண்டு*

| விபரம் | அலகு | DD1 | DD2 | DD2 | DD4 |
|---|---|---|---|---|---|
| **விநியோக மார்க்கங்கள் (மேந்தலை)** | | | | | |
| 33 kV (மார்க்க நீளம்) | km | 1,274.8 | 355.3 | 85.6 | 19 |
| 11 kV (மார்க்க நீளம்) | km | 17.9 | - | - | 0.4 |
| LV (சுற்று நீளம்) | km | 1009.8 | 106.4 | 537.1 | - |
| **நிலத்தடி கம்பிவடங்கள்** | | | | | |
| 33 kV (மார்க்க நீளம்) | km | 1.5 | 0.5 | 0.4 | - |
| 11 kV (மார்க்க நீளம்) | km | 37.2 | 3.8 | 0.4 | 0.4 |
| LV (சுற்று நீளம்) | km | 28.2 | 1.2 | - | 0.1 |
| **உபமின் நிலையங்கள்** | | | | | |
| 33/11 kV முதன்மை உபமின் நிலையங்களின் எண்ணிக்கை | Nos. | 1 | - | - | 2 |
| LV விநியோக உபமின் நிலையங்களின் எண்ணிக்கை | Nos. | - | 349 | 178 | 93 |

*அட்டவணை D7: விதிப்பனவு வகை ரீதியான நுகர்வோர் கணக்குகளின் எண்ணிக்கை*

| விபரம் | DD1 | DD2 | DD3 | DD4 |
|---|---|---|---|---|
| வீட்டு நுகர்வு | 1,681,960 | 2,061,074 | 1,234,848 | 992,444 |
| சமயத்தலம் | 14,477 | 14,615 | 7,978 | 6,129 |
| தொழில்துறை | 37,360 | 15,417 | 9,236 | 6,802 |
| ஹோட்டல் | 119 | 244 | 42 | 159 |
| அரசாங்கம் | 2,157 | 2,870 | 2,785 | 1,503 |
| பொது நோக்கு | 260,796 | 292,016 | 157,196 | 131,739 |
| விவசாயம் | 2,075 | 551 | 140 | 1 |
| **மொத்தம்** | 1,998,944 | 2,386,787 | 1,412,225 | 1,138,777 |

*அட்டவணை D8: விதிப்பனவு வகை ரீதியான விற்பனைகள் - GWh இல்*

| விபரம் | DD1 | DD2 | DD3 | DD4 |
|---|---|---|---|---|
| வீட்டு நுகர்வு | 1,471.6 | 1,731.9 | 980.5 | 859.8 |
| சமயத்தலம் | 32.7 | 25.1 | 11.6 | 11.2 |
| தொழில்துறை | 1,003.8 | 1,818.5 | 1,013.3 | 495.9 |
| ஹோட்டல் | 105.9 | 59.4 | 8.2 | 71.6 |
| அரசாங்கம் | 79.8 | 59.6 | 24.8 | 43.1 |
| பொது நோக்கு | 1,285.0 | 767.5 | 514.1 | 395.8 |
| விவசாயம் | 1.4 | 0.6 | 0.1 | 0.002 |
| தெரு விளக்கு | 40.6 | 36.6 | - | 19.8 |
| **மொத்தம்** | 4,020.7 | 4,499.4 | 2,552.5 | 1,897.1 |

*அட்டவணை D9: விதிப்பனவு வகை ரீதியான வருமானம் - ரூபா மில்லியனில்*

| விபரம் | DD1 | DD2 | DD3 | DD4 |
|---|---|---|---|---|
| வீட்டு நுகர்வு | 29,564.3 | 32,216.8 | 18,057.8 | 16,541.8 |
| சமயத்தலம் | 541.6 | 418.6 | 182.7 | 176.5 |
| தொழில்துறை | 20,653.6 | 37,179.1 | 20,907.2 | 10,507.3 |
| ஹோட்டல் | 2,208.3 | 1,338.7 | 199.1 | 1,500.4 |
| அரசாங்கம் | 1,911.8 | 1,430.5 | 599.2 | 984.3 |
| பொது நோக்கு | 35,778.8 | 20,949.4 | 14,066.5 | 10,841.3 |
| விவசாயம் | 33.4 | 13.6 | 2.7 | 0.03 |
| தெரு விளக்கு | - | 0.6 | - | - |
| **மொத்தம்** | 90,691.7 | 93,547.4 | 54,015.2 | 40,551.6 |




| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|
| DD1 | 1,832,829 | 1,875,852 | 1,916,904 | 1,966,215 | 1,998,944 |
| DD2 | 2,178,082 | 2,229,774 | 2,276,715 | 2,339,605 | 2,386,787 |
| DD3 | 1,291,700 | 1,320,826 | 1,347,949 | 1,383,819 | 1,412,225 |
| DD4 | 1,051,668 | 1,074,187 | 1,094,696 | 1,119,887 | 1,138,777 |

*உரு D3: நுகர்வோர் அபிவிருத்தி*

### மின்சாரத்திற்கான அனுகல்

தரப்பட்ட மாகாணம் ஒன்றிலுள்ள மக்களின் மின்சாரத்திற்கான எளிதான மற்றும் இலகுவான அனுகலானது ஒப்பீட்டளவில் மாகாணத்தின் அபிவிருத்தி மட்டத்தில் தங்கியுள்ளது. பதினைந்து மாகாணங்களில் கொழும்பு நகர், மேல் மாகாணம் வடக்கு, மேல் மாகாணம் தெற்கு 1, தென் மாகாணம் தெற்கு I மற்றும் தென் மாகாணம் தெற்கு II ஆகிய ஐந்து மாகாணங்களும் மின்சாரத்திற்கான 100% அனுகலை அடைந்துள்ளன. மின்னூட்டலின் நன்மைகளைக் கவனத்தில் கொண்டு, நன்கொடை அளிக்கும் அமைப்புக்கள், இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் இ.மி.ச. ஆகியவற்றால் செய்யப்பட்ட நிதிசார் அர்ப்பணிப்புகள் ஊடாக மின்சாரத்திற்கான 100% அனுகலை அடைவதற்கு கிராமிய மின்னூட்டல் செயற்றிட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.




*உரு D2: மின்சாரத்திற்கான அனுகல் - 2021/2022*

### மின்னூட்டல் திட்டங்களும் விரிவாக்கங்களும்

கிராமிய சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக கிராமிய மின்னூட்டல் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அண்ணளவாக 208 கிராமிய மின்னூட்டல் திட்டங்களும் 486 இற்கும் மேற்பட்ட விரிவாக்கல் திட்டங்களும் 570 மில்லியன் மொத்தக் கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டன.




*உரு D4: கிராமிய மின்னூட்டம் - 2022*

### மேற்கூரை சூரியசக்தி (PV)

“பசுமை சக்தியின் ஒன்றிணைப்பை உத்தமமாக்கல்” என்ற இலக்கிற்கு ஏற்ப, மின் நுகர்வோர் தமது வளாகங்களிலுள்ள மேற்கூரைகளில் மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்வதற்கும் தங்களுடைய மின் பிறப்பாக்கத்தை இ.மி.ச. முறைமையுடன் ஒத்திசைவாக்கும் அதே வேளை நிகர அளவீடு, நிகரக் கணக்கீடு மற்றும் நிகர + மற்றும் நிகர ++ ஆகிய நான்கு திட்டங்களின் கீழ் சக்தியை நுகர்வதற்கும் முறைமைக்கு ஏற்றுமதி செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 2022 ஆம் ஆண்டின் இறுதியில் சூரிய சக்தி PV இணைப்புகளின் விபரங்கள் கடந்த D10 இல் சித்தரிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை D 10: 2022 ஆம் ஆண்டின் இறுதியில் சூரிய சக்தி PV இணைப்புகளின் விபரங்கள்.

| பிரிவு | உருப்படி | நிகர அளவீடு | நிகரக் கணக்கீடு | நிகர + |
|---|---|---|---|---|
| DD1 | நுகர்வோர் (எண்ணிக்கை) | 3,485 | 5,374 | 1,016 |
| | நிறுவப்பட்ட கொள்ளளவு (MW) | 29.1 | 50.7 | 62.5 |
| | சக்தி ஏற்றுமதி (GWh) | 17.7 | 45.5 | 78.5 |
| DD2 | நுகர்வோர் (எண்ணிக்கை) | 2,304 | 6,046 | 602 |
| | நிறுவப்பட்ட கொள்ளளவு (MW) | 19.6 | 54.0 | 96.7 |
| | சக்தி ஏற்றுமதி (GWh) | 6.9 | 53.9 | 109.9 |
| DD3 | நுகர்வோர் (எண்ணிக்கை) | 2,311 | 4,284 | 523 |
| | நிறுவப்பட்ட கொள்ளளவு (MW) | 13.8 | 35.2 | 66.7 |
| | சக்தி ஏற்றுமதி (GWh) | 8.2 | 30.0 | 74.9 |
| DD4 | நுகர்வோர் (எண்ணிக்கை) | 2,033 | 4,871 | 529 |
| | நிறுவப்பட்ட கொள்ளளவு (MW) | 14.9 | 45.0 | 46.5 |
| | சக்தி ஏற்றுமதி (GWh) | 8.2 | 43.0 | 53.0 |

*குறிப்பு: 2022 இல் நிகர ++ வாடிக்கையாளர்கள் இல்லை*

ஆண்டுகளுக்கான சூரிய சக்தி PV இணைப்புகளிலிருந்தான சக்தி ஏற்றுமதிகளின் அபிவிருத்தி விபரங்கள் உரு D5 இல் சித்திரிக்கப்பட்டுள்ளது.




| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|
| DD1 | 19 | 43 | 77 | 115 | 142 |
| DD2 | 8 | 33 | 73 | 116 | 171 |
| DD3 | 9 | 33 | 61 | 79 | 113 |
| DD4 | 11 | 30 | 59 | 80 | 104 |

*உரு D5: கடந்த ஐந்து ஆண்டுகளில் சூரிய சக்தி PV பங்களிப்புகளின் அபிவிருத்தி – GWh இல்.*

## முக்கிய நிகழ்வுகள்

**நட்சத்திரத் தரமிடல் நிகழ்ச்சித் திட்டம் ஊடாக வாடிக்கையாளர் திருப்தி**

"வாடிக்கையாளர்களுக்கான உயர் தரமான மின்சார வழங்கலும் சேவைகளும்" என்ற இலக்கிற்கு ஏற்ப, இ.மி.ச. சேவையின் தரத்தை மேம்படுத்துவதன் மீது தனது கவனத்தைச் செலுத்துகிறது. இதனால், நிறுவன உபாயப் பிரிவானது வாடிக்கையாளர் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக நுகர்வோர் சேவை நிலையங்களுக்கான (CSCs) நட்சத்திரத் தரமிடல் நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. அதற்கிணங்க, விநியோகப் பிரிவுகளின் மேலதிகப் பொது முகாமையாளர்களுக்கு நட்சத்திர தரமிடல் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இறுதிப் பணியாக 7 ஆவது நட்சத்திர மட்டத்தில் ISO 9001:2015 தர முகாமைத்துவ முறைமைச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதாகும்.

நட்சத்திரத் தரமிடல் நிகழ்ச்சித் திட்டமானது 2022 ஆம் ஆண்டில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டதுடன் விநியோகப் பிரிவு 2 இன் 47 CSC களுக்கு 3 ஆவது நட்சத்திர விருதுக்கான செயன்முறை இந்த ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. நட்சத்திரத் தரமிடல் நிகழ்ச்சித் திட்டத்தில் சிறந்த செயற்பாட்டை வெளிப்படுத்திய CSC களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. அதற்கிணங்க, லிந்துலை / தலவாக்கலை, ஜா-எல மற்றும் குருந்துவத்த CSC கள் முறையே 1 ஆம், 2 ஆம், 3 ஆம் இடங்களைப் பெற்றிருந்தனர். இதற்கு மேலதிகமாக, சேவைகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்த CSC கள் மற்றும் நுகர்வோருக்கு தரமான மற்றும் நம்பகமான மின்வலு வழங்கலைப் பேணிய CSC களும் பாராட்டப்பட்டன.



*உரு D6: 1 ஆம் இடம் - நட்சத்திரத் தரமிடல் திட்டத்தில் சிறந்த செயலாற்றுகையை வெளிக்காட்டிய CSC*

**புவியியல்சார்ந்த தகவல் முறைமையின் நடைமுறைப்படுத்தல் (GIS)**

துல்லியமான வலையமைப்பு வரைபடமொன்றைக் கொண்டிருப்பதற்காக விபரமான, பயனர் - நேயம்மிக்க, புவியியல்சார்ந்த தகவல் முறைமை (GIS) WPSII இனால் விருத்தி செய்யப்பட்டது. இது MV மற்றும் LV வலையமைப்புகளுக்கு விரிவான, புவி-குறியிடப்பட்ட சொத்துத் தரவுத்தளமொன்றாகவும் செயற்படும். ArcGIS ஒன்லைன் சேவைகள் மற்றும் பல்வேறு இணையச் செயலிகளைப் பயன்படுத்தி இயங்குதளம் விருத்தி செய்யப்பட்டுள்ளது. மாகாண மற்றும் பிரிவின் வெவ்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கையடக்கத் தொலைபேசிச் செயலியொன்று விருத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், CEBAssist என்ற விருது வென்ற உள்ளகரீதியில் உருவாக்கப்பட்ட மென்பொருளின் கீழ், விருத்தி செய்யப்பட்ட ஒரு தொகுதியான "GEOAssist" இற்கு அதே அம்சங்களை கூட்டிணைப்பதன் மூலம் அதன் தளத்தை முழு இ.மி.ச. இற்கும் விஸ்தரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**விநியோகப் பராமரிப்பு செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கு ஒரு மென்பொருள் கருவியை விருத்தி செய்தல்**

"அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய செயற்பாட்டுச் சிறப்பு" என்ற இலக்கின் வெளிச்சத்தில் இ.மி.ச. எப்பொழுதும் செயன்முறைகளை டிஜிடல்மயமாக்குவதை ஊக்குவிக்கிறது. அதற்கிணங்க, விநியோகப் பராமரிப்பு நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்கு ஒரு மென்பொருள் கருவி விருத்தி செய்யப்பட்டள்ளது. இந்தக் கருவி WPS I இல் ஒரு முன்னோடிச் செயற்றிட்டமாகப் பயன்படுத்தப்பட்டதுடன் இந்தக் கருவி பராமரிப்புச் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கு பெரிதும் உதவியது. இதன் விளைவாக உற்பத்தித்திறன் மேம்பட்டு, வேலையில்லா நேரமும் கிரயமும் குறைக்கப்பட்டது. பயனர் நேய இடைமுகம், நிகழ்நேர புதுப்பிப்புகள், திட்டமிடல் மற்றும் முன்கணிப்பு அம்சங்கள் ஆகியவை இந்த மென்பொருளை விநியோகப் பராமரிப்பு அணிகளுக்கு இன்றியமையாத கருவியாக மாற்றியுள்ளன. இலகுவான பயன்பாடு, நிகழ் நேர புதுப்பிப்புகளைப் பெறுவதற்கான ஆற்றல், திட்டமிடுவதற்கும் முன்கணிப்புச் செய்வதற்குமான வசதிகள், மேம்பட்ட உற்பத்தித்திறன் மற்றும் செலவுச் சேமிப்பு போன்ற உள்ளார்ந்த நன்மைகள் காரணமாக, இந்தக் கருவியின் பயன்பாட்டைத் தொடர்வதற்கும் இ.மி.ச. முழுமைக்கும் அறிமுகப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

செயற்பாட்டு மீளாய்வு

# செயற்றிட்டங்கள் பிரிவு



விரிநிலங்கள் மின்வலு நிலையம்

# செயற்றிட்டங்கள் பிரிவு

இலங்கை மின்சார சபையின் செயற்றிட்டங்கள் பிரிவானது வெளிநாட்டு, இலங்கை அரசாங்க மற்றும் இ.மி.ச. இன் பாரியளவான நிதியுதவியின் கீழான மின் பிறப்பாக்கல் மற்றும் மின் பரிமாற்றச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் நோக்கத்திற்காக 2010 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. இந்தச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலானது முழு மின்வலு முறைமையினதும் கொள்ளளவை மேம்படுத்துவதிலும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதிலும் பிரதான வகிபாகத்தை வகிக்கின்றன.

ரூபா 48.2 பில்லியனுக்கும் அதிக பெறுமதியான செயற்றிட்ட வேலைகளை கையாள்வதற்கும் மேற்கொள்வதற்கும் வேண்டியிருந்ததால் 2022 ஆம் ஆண்டு செயற்றிட்டங்கள் பிரிவுக்கு மற்றுமொரு சவால் மிகுந்த ஆண்டாக அமைந்திருந்தது.

2022 இல் முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்ட நடவடிக்கைகளின் விபரங்கள் கீழ்வருமாறு:

### விரிநிலங்கள் நீர் மின்வலுச் செயற்றிட்டம்

விரிநிலங்கள் நீர் மின்வலுச் செயற்றிட்டம் என்பது களனி கங்கையில் கட்டப்பட்டுள்ள ஒரு நீரோட்ட வகை நீர் மின்வலு அபிவிருத்தி ஆகும். இந்தச் செயற்றிட்டத்தின் பிரதான நோக்கம் தற்போதுள்ள சமனல (பொல்பிட்டிய) மின்வலு நிலையத்தில் கீழ்நிலை நீரோட்டத்தில் உள்ள நீர்மின் ஆற்றலை அறுவடை செய்வதாகும். இந்தச் செயற்றிட்டத்தின் பிரதான தளங்கள் கொழும்பில் இருந்து வட -கிழக்காக கிட்டத்தட்ட 90 கிலோமீற்றர் தூரத்தில் கித்துல்கல நகருக்கு அருகில் அமைந்துள்ளன. பிரதான அணை, பிரதான சுரங்கம், திசைதிருப்பும் சுரங்கம், மின்வலு இல்லம், ஆளி முற்றத் தளம் ஆகியவை உள்ளிட்ட செயற்றிட்டத்தின் பிரதான நிருமாண வேலைகள் மற்றும் மின் பரிமாற்ற மார்க்கம் என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டின் முற்பகுதியில் தேசிய மின்தொகுப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

கித்துள்கல பிரதேசத்தில் படகுச் சவாரி விளையாட்டுச் செயற்பாடுகளைப் பாதுகாப்பதற்காக இ.மி.ச. சீரான நீர் விடுவிப்பினை பேண வேண்டியுள்ளது. இதன் விளைவாக வருடாந்த சக்திப் பிறப்பாக்கத்தில் குறைவு ஏற்படும்.

விரிநிலங்கள் நீர் மின்வலுச் செயற்றிட்டமானது UNFCCC இன் தூய அபிவிருத்திப் பொறிமுறையின் (CDM) கீழ் பதிவினைப் பெற்றுக் கொண்ட இலங்கையின் முதலாவது பெரிய அளவிலான நீர் மின்வலு நிலையமாகும்.



*உரு P1: மின்வலு நிலைய ஆளி முற்றம்*

### மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டம்

மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டம் நான்கு துண்டங்களை உள்ளடக்கியுள்ளது. அவையாவன, துண்டம் A1 – ஆயத்த வேலைகள், துண்டம் A2 – பிரதான குடியியல் வேலைகள், துண்டம் B – இயந்திர மற்றும் மின்னியல் வசதிகள், துண்டம் 3 – செயற்றிட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை ஆதரவு. செயற்றிட்ட விபரங்கள் மற்றும் தனித்தனியான செயற்றிட்டக் கூறுகளின் முன்னேற்றம் என்பன கீழே சித்தரிக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| **ஆலைக் கொள்ளளவு** | 30.5 MW | |
| **நிதியுதவி ஏற்பாடுகள** | ADB கடன் இல. 3146 (SF)/3147-SRI) | |
| **மதிப்பிடப்பட்ட செயற்றிட்டக் கிரயம்** | **வெளிநாட்டு நிதியுதவி** | அமெ.டொலர் 113.9 மில்லியன் |
| | GOSL **நிதியுதவி (இ.மி.ச.)** | ரூபா 3,958 மில்லியன் |
| **பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி** | 2024 மே | |
| **எதிர்பார்க்கப்படும் வருடாந்த சக்தி** | 100 GWh | |
| **செயற்றிட்டக் கூறு** | **பௌதிக முன்னேற்றம்** | **ஒப்பந்தகாரர்** |
| ஆயத்த வேலைகள் | 76% | வீ.வீ. கருணாரத்ன அன்ட் கம்பனி |
| பிரதான குடியியல் வேலைகள் | 40% | சீனா கெஜோபா குறூப் கம்பனி லிமிட்டெட் |
| இயந்திர மற்றும் மின்னியல் வசதிகள் | 28% | டொங்பான்ங் எலக்ரிக் இன்டநஷனல் கோப்பரேஷன், சீனா |

### உமா ஓயா பல நோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டம்

உமா ஓயா பல நோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டம் (UOMDP) ஆனது நீர்ப்பாசனத் அமைச்சினால் (MOI) நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்தச் செயற்றிட்டத்தின் மின் இயந்திரவியல் வேலைகளுக்கான தொழினுட்ப ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கு UOMDP செயற்றிட்ட முகாமைத்துவ அலகிற்கு (PMU) இ.மி.ச. இன் தொழினுட்ப உத்தியோகத்தர்கள் ஒதுக்கப்பட்டுள்ளனர். செயற்றிட்டத்தின் விபரங்கள் கீழே சித்தரிக்கப்பட்டுள்ளன

| | |
|---|---|
| **மொத்தச் செயற்றிட்டக் செலவு** | 530 மில்லியன் அமெ.டொலர் |
| **ஒப்பந்தகாரர்** | FARAB கம்பனி (FC), ஈரான் |
| **பூர்த்திசெய்ய எதிர்பார்க்கும் திகதி** | 2023 ஆகஸ்ட் |
| **பௌதிக முன்னேற்றம்** | 98.5% |



*உரு P 2: ரந்தெனிய ஆளி முற்றம்*

## திரவநிலை இயற்கை எரிவாயுச் செயற்றிட்டம் (LNGP)

மிதக்கும் களஞ்சிய மீள்வாயுவாக்கல் அலகு (FSRU) மற்றும் நங்கூரமிடல் முறைமையின் அபிவிருத்தி ஊடாக கெரவலப்பிட்டிய மற்றும் களனிதிஸ்ஸ ஆகிய இடங்களில் மின்வலு ஆலைகளுக்கான LNG I வழங்க முடியும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் இ.மி.ச. இன் செயற்றிட்டங்கள் பிரிவு எடுத்திருந்தது.

FSRU I BOO அடிப்படையிலும் நங்கூரமிடல் முறைமையை BOOT அடிப்படையிலும் கெரவலப்பிட்டிய கரையோரத்தில் நிலைநிறுத்துவதற்கான சர்வதேச போட்டி விலைமனுச் செயன்முறையைப் பின்பற்றி ஒரு தகைமைபெற்ற செயற்றிட்ட முன்மொழிவாளர் தேர்வு செய்யப்பட்டார். 2022 ஆகஸ்ட்டில், அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு (CANC) செயற்றிட்ட உடன்படிக்கையை அங்கீகரித்ததுடன் ஒப்பந்தத்தை வழங்குவதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் நிலுவையில் உள்ளது.

இதற்கிடையில், BOOT அடிப்படையில் கெரவலப்பிட்டி மற்றும் களனிதிஸ்ஸவில் அமைந்துள்ள மின்வலு ஆலைகளுக்கு FSRU இலிருந்து இயற்கை எரிவாயு குழாய் அமைப்பு முறைமையை நிருமாணிப்பதற்கு தகுதிவாய்ந்த செயற்றிட்ட முன்மொழிவாளரை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) தெரிவு செய்துள்ளது. குழாய் அமைப்பு முறைமையை நிலைநிறுத்துவதற்கான ஒப்பந்த உடன்படிக்கை பற்றி செயற்றிட்ட முன்மொழிவாளருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதுடன் CANC இடமிருந்து வரைவு செயற்றிட்ட உடன்படிக்கைக்கான அங்கீகாரத்திற்கு காத்திருக்கப்படுகிறது.

இ.மி.ச. 2025 ஆம் ஆண்டிற்குள் மின்வலு நிலையங்களின் பாவனைக்கு LNG கிடைக்கச்செய்வதை உறுதிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறது.

## மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்

2022-12-31 இல், நடைபெற்றுக் கொண்டிருக்கும் மின் பரிமாற்ற அபிவிருத்திகளின் முன்னேற்றம் அட்டவணை P1 இல் தரப்பட்டுள்ளதுடன் கீழே தரப்பட்டுள்ள முன்னேற்றப் பட்டை நிறங்கள் திட்டமிடப்பட்ட முன்னேற்றத்திற்கு எதிராக உண்மையான முன்னேற்றத்தின் விலகலை அடையாளப்படுத்துகிறது.

| | |
|---|---|
| விலகம் < 10% எனின் | |
| 10% < விலகல் < 25% எனின் | |
| 25% < விலகல் < 50% எனின் | |
| 50% < விலகல் < 100% எனின் | |

*அட்டவணை P1: நடைபெற்றுக்கொண்டிருக்கும் செயற்றிட்டங்களின் பௌதிக ரீதியான முன்னேற்றம்*

| செயற்றிட்டம் ∴ கிளை | பொதி | செலவு ரூபா மில்லியன் | 2022-12-31 இல் பௌதிக முன்னேற்றம் | பூர்த்தியடையும் திகதி |
|---|---|---|---|---|
| **மின் பரிமாற்றச் செயற்றிட்டம்** | PMU 01: தூய்மையான சக்தியை உட்கிரகிக்கத்தக்க பரிமாற்றத் திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு முந்தைய நடவடிக்கைகள் | 405 | 68.4% | 2025 டிசெம்பர் |
| | PMU 02: தூய்மையான சக்தியை உட்கிரகிக்கத்தக்க பரிமாற்றத் திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு முந்தைய நடவடிக்கைகள் | 462 | 50% | 2025 டிசெம்பர் |
| | மன்னார் நடுக்குடா எம்பிலிப்பிட்டிய மின்தொகுப்பு உபமின் நிலைய விரிவாக்கல் செயற்றிட்டம் | 3,605 | 50% | 2023 டிசெம்பர் |
| **திருகோணமலை நிலக்கரி மின்வலுச் செயற்றிட்டம்** | ஹபரணை - வெயாங்கொடை 220 kV மின் பரிமாற்ற மார்க்கச் செயற்றிட்டம் துண்டம் A உபமின் நிலையத்தின் நிருமாணம் | 6,958 | 99.5% | 2023 யூன் |
| | ஹபரணை - வெயாங்கொடை 220 kV மின் பரிமாற்ற மார்க்கச் செயற்றிட்டம் துண்டம் B மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம் | 17,770 | 98.5% | 2023 செப்ரெம்பர் |

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

| செயற்றிட்டம் ∴ கிளை | பொதி | செலவு ரூபா மில்லியன் | 2022-12-31 இல் பௌதிக முன்னேற்றம் | பூர்த்தியடையும் திகதி |
|---|---|---|---|---|
| மின் பரிமாற்ற நிருமாணச் செயற்றிட்டங்கள் | மாதம்பே – அம்பாறை 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் மீள்நிருமாணம் | 3,206 | 10.0% | 2025 சனவரி |
| | விக்டோரியா – ரண்தம்பே 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம் | 1,400 | 5.0% | 2024 டிசெம்பர் |
| | அத்துருகிரிய – கொலன்னாவ 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் விரிவாக்கம் | 170 | 13.0% | 2024 யூன் |
| | பூநகரி – கிளிநொச்சி 220 kV D/C மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம் | 3,400 | 9.0% | 2025 டிசெம்பர் |
| | கொலன்னாவை – பன்னிப்பிட்டிய 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் மீள் நிருமாணம் | 960 | 6.0% | 2024 யூன் |
| | களனிதிஸ்ஸ – கொலன்னாவை 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் உயரத்தை அதிகரித்தல் | 702 | 9.0% | 2024 ஏப்ரல் |
| | புதிய அநுராதபுரம் GS இல் 2x50 MVAr உலை மற்றும் மன்னார் GS இல் 1x50 MVAr உலை ஆகியவற்றின் நிறுவல் | 1,463 | 100.0% | 2023 மார்ச் |
| | வேகவத்தை மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் (2x 45 MVA) நிருமாணம் | 1,898 | 76.0% | 2023 டிசெம்பர் |
| | களனிதிஸ்ஸ 132 kV GIS இன் விரிவாக்கம் | 464 | 80.0% | 2024 மார்ச் |
| | நிலையத்தில் இரண்டு 220 kV இரட்டை பஸ்பார் மின் பரிமாற்ற மார்க்க நுழைவு வழியின் நிருமாணம் | 291 | 98.0% | 2023 மார்ச் |
| | கொட்டுகொட விரிவாக்க வேலைகள் | 73 | 68.0% | 2023 யூன் |
| | பலாங்கொடை விரிவாக்க வேலைகள் | 67 | 55.0% | 2023 யூலை |
| | அத்துருகிரிய விரிவாக்க வேலைகள் | 15 | 53.0% | 2023 மே |
| | இரத்மலானை மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் இரண்டு 33 kV ஊட்டி நுழைவு வழிகளின் நிருமாணம் | 148 | 100.0% | 2023 செப்ரெம்பர் |
| | ரண்தம்பே ஆளி முற்றத்தில் 220 kV GIS இன் நிருமாணம் | 2,809 | 6.0% | 2025 டிசெம்பர் |
| | விக்டோரியா PP இல் 220 kV 1 ½ தடை முறைமை ஒன்றின் நிருமாணம் | 229 | 8.0% | 2023 டிசெம்பர் |
| | ரந்தெனிகல (உமா ஓயா நீர் மின்வலுச் செயற்றிட்டம்) இல் 132 kV ஆளி முற்றத்தின் நிருமாணம் | 350 | 85.0% | 2023 யூன் |
| | அம்பாறை GS இல் 132 kV ஒற்றை பஸ்பார் மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம் | 85 | 5.0% | 2023 டிசெம்பர் |
| பாரிய கொழும்பு மின்பரிமாற்ற மற்றும் இழப்பை குறைக்கும் செயற்றிட்டம் | கெரவலப்பிட்டி தொடக்கம் கொழும்பு L வரை இரண்டாவது 220 kV கம்பிவடத்தின் நிருமாணம் | 9,119 | 9.5% | 2024 அக்டோபர் |
| | கொழும்பு நகர் மின் பரிமாற்ற வலையமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் - கட்டம் 2 | 30,295 | 0.0% | 2025 யூன் |

| செயற்றிட்டம் ∴ கிளை | பொதி | செலவு ரூபா மில்லியன் | 2022-12-31 இல் பௌதிக முன்னேற்றம் | பூர்த்தியடையும் திகதி |
|---|---|---|---|---|
| பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு செயற்றிட்டம் - கட்டம் II | கெஸ்பேவ மற்றும் களுத்துறை GSS இன் நிருமாணமும் புதிய அநுராதபுரம் மற்றும் பழைய அநுராதபுரம் GSS இன் விரிவாக்கமும் | 2,738 | 100.0% | 2023 பெப்ரவரி |
| | கட்டம் 2 – தொகுப்பு 9 : கெரவலப்பிட்டியில் 220 kV ஆளியிடல் நிலையம் | 2,910 | 42.0% | 2023 செப்ரெம்பர் |
| | PMU 2 – தொகுப்பு 3 / துண்டம் A1 – கொழும்பு B GSS இன் நிருமாணம், கொழும்பு C – கொலன்னாவை 132 kV 800s qmm கம்பிவடத்தின் ஒற்றை உள் மற்றும் வெளி இணைப்பு, கொழும்பு C மற்றும் கொலன்னாவை GSS இன் விரிவாக்கம் | 1260.8 | 97.0% | 2023 மே |
| | PMU 2 – தொகுப்பு 3 / துண்டம் A2 – கொட்டுகொட, கொலன்னாவை, பாதுக்க, ஹொரண, தெஹிவளை மற்றும் மாதம்பே GSS இன் விரிவாக்கம் | 2316.32 | 98.5% | 2022 டிசெம்பர் |
| | PMU 2 – தொகுப்பு 8 / துண்டம் B – அம்பலாங்கொடை 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விரிவாக்கம், பன்னல 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விரிவாக்கம் மற்றும் 132/33 kV 31.5 MVA இன் 2 கூறு மின்மாற்றிகளின் வழங்கல் | 1493.9 | 16.0% | 2024 சனவரி |
| | SESRIP: தொகுப்பு 7 – துண்டம் A1: பன்னிப்பிட்டிய மின்தொகுப்பு உபமின் நிலையங்களில் 100M var BSC இன் நிறுவல் | 1103.5 | 88.9% | 2023 பெப்ரவரி |
| | SESRIP: தொகுப்பு 7 – துண்டம் A2: பியகம மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் நிலைக்கூறு Var முறைமை (SVS) இன் நிறுவல் | 1680.8 | 71.0% | 2023 மே |
| | SESRIP: தொகுப்பு 7 – துண்டம் A3: கொழும்பு நகர் மின்தொகுப்பு உபமின் நிலையங்களில் தடை ஆளியிடப்பட்ட மின்தேக்கி வைப்பகங்களின் நிறுவல் மற்றும் துல்ஹிரிய மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் துண்டிக்கப்பட்ட தடை ஆளியிடப்பட்ட மின்தேக்கி வைப்பகங்களை மாற்றீடு செய்தல் | 1704.8 | 0.0% | 2023 டிசெம்பர் |
| | தொகுப்பு 1/துண்டம் B - புதிய பொல்பிட்டிய - ஹம்பாந்தோட்டை TL | 5,794 | 93.8% | 2023 மார்ச்சு |
| | தொகுப்பு 2/துண்டம் B2 A - கட்டுமானம் பாதுக்க - ஹொரணை 132 kV TL | 592 | 41.3% | 2023 யூன் |
| தேசிய மின் பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் EI செயற்றிட்டம் | தொகுப்பு 1 : 400 kV, 220 kV மற்றும் 132 kV மின் பரிமாற்ற மார்க்கங்களின் நிருமாணம் | 13,003 | 60.2% | * |
| | தொகுப்பு 2 : மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் நிருமாணமும் விரிவாக்கமும் | 7,418 | 90.0% | ஏப்பிரல் 2023 |
| | தொகுப்பு 3 : மின் பரிமாற்ற மார்க்கங்களின் (220 kV, 132 kV) நிருமாணம் | 12,000 | 60.0% | ** |
| | தொகுப்பி 4 : விநியோக உபமின் நிலையங்கள் மற்றும் கம்பிவடங்களின் (33 kV, 11 kV, 0.4 kV) நிருமாணம் | 4,594 | 40.0% | |

* பணம் செலுத்தாததால் ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார்.

** பணம் செலுத்தாத காரணத்தால் ஒப்பந்தகாரர் ஒப்பந்தத்தை முடிவுறுத்தியுள்ளார்.

## இந்த ஆண்டில் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள்

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக வழங்கல் சங்கிலியில் ஏற்பட்ட தடங்கல்களே செயற்றிட்ட நிருமாணங்களின்போது இந்தப் பிரிவு எதிர்நோக்கிய முதலாவது சவாலாக அமைந்திருந்தது. எரிபொருள் மீது அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட தடைகள் நிருமாணப் பொருள்களினதும் உபகரணங்களினதும் விநியோகத்தில் தாமதங்கள் ஏற்பட வழிவகுத்தன. மேலும், வெளிநாட்டிலிருந்தான உபகரண வழங்கல்கள்கூட வெளிநாட்டு நாணயங்களின் பற்றாக்குறை காரணமாக தாமதமடைந்தன. இது செயற்றிட்ட கால எல்லையில் குறிப்பிடத்தக்களவு தாமதத்தை உருவாக்கியது.

இரண்டாவதாக, இலங்கை ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்ட தேய்வானது நிருமாணப் பொருள்களின் விலைகளில் அதிகரிப்பை ஏற்படுத்தியதால் ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டங்களையும் தாண்டி ஒப்பந்தகாரர்கள் கணியங்களின் விலைப்பட்டியலில் (BOQ) பாரியளவு திருத்தத்தை தேவைப்படுத்திய தால், நிருமாணச் செயற்றிட்டங்களில் குறிப்பிடத்தக்களவு பாதிப்பு ஏற்பட்டது. அந்த நேரத்தில் திருத்தப்பட்ட BOQ களை அங்கீகரிப்பது கடினமானதால். அது நிருமாண வேலைகளின் தாமதத்திற்கு வழிவகுத்ததுடன் செயற்றிட்டக் கால எல்லையையும் பாதித்திருந்தது.

இதற்கு மேலதிகமாக, வெளிநாட்டு நிதியுதவியில் பெறப்பட்ட கடன்களை நிறுத்துவதானது செயற்றிட்ட முன்னேற்றத்தையும் மீளாய்வு ஆண்டின் காலப்பகுதியில் பூர்த்தியடைவதையும் வெகுவாகப் பாதித்திருந்தது. இதன் விளைவாக, செயற்றிட்டங்களுக்கான நிதி பற்றாக்குறையாக இருந்தது. இது நிருமாணச் செலவுகள், உபகரணக் கொள்வனவுகள் போன்ற செயற்றிட்டச் செலவினங்களைச் சமாளிப்பதற்கு கடினமான நிலையைத் தோற்றுவித்தது.

செயற்பாட்டு மீளாய்வு

# சொத்து முகாமைத்துவப் பிரிவு



லக்விஜய மின் உற்பத்தி நிலையம்

# சொத்து முகாமைத்துவப் பிரிவு

சொத்து முகாமைத்துவப் பிரிவானது நிறுவனத்தின் சொத்துக்கள் வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக அவற்றை மேற்பார்வை செய்து பராமரிப்பதற்குப் பொறுப்பாக இருக்கிறது. இந்தப் பிரிவு இ.மி.ச. இன் பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்திக்காக இ.மி.ச. இல் ஒரு முக்கிய வகிபாகத்தை வகிப்பதுடன் கீழே விபரிக்கப்பட்டவாறு ஐந்து கிளைகளையும் கொண்டிருக்கிறது.

மனித வளங்களை உத்தமமான வகையில் பயன்படுத்துவதன் மூலம் சொத்துகள் முகாமைத்துவப் பிரிவின் முறையான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவது சொத்துகள் முகாமைத்துவம் மற்றும் நிறுவனக் கிளையின் பொறுப்பாகும். இ.மி.ச. காணிகள் மற்றும் கட்டடங்களை சிறப்பான முறையில் முகாமை செய்வதும் சட்டநியதித் தொழிற்பாடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வண்ணம் பிரதான வணிக நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனைய நோக்கங்களுக்காக இருக்கின்ற வளங்கள் மற்றும் சொத்துக்களைப் பயன்படுத்துவதன் மூலம் மேலதிக வருமானமொன்றை ஈட்டுவதும் இந்தக் கிளையின் பிரதான பொறுப்புகளாகும்.

குடியியல் வேலைகள் மற்றும் கட்டடங்கள் கிளையானது (CW&B) புதிய கட்டடங்களின் நிருமாணம், தற்போதிருக்கின்ற கட்டடங்களின் புனரமைப்புகள் மற்றும் விரிவாக்கங்கள் மற்றும் இ.மி.ச. இற்குச் சொந்தமான சுற்றுலா பங்களாக்கள் மற்றும் தலைமை அலுவலகக் கட்டடத்தின் பராமரிப்பு ஆகியவற்றை கவனிக்கிறது. மிகப் பிந்தைய மென்பொருளைப் பயன்படுத்தி கட்டமைப்புசார் வடிவமைப்புகளையும் தொடர்புடைய வரைதல்களையும் மேற்கொள்வதற்காக CW&B இன் கீழ் கட்டமைப்புசார் வடிவமைப்பு அலகு தாபிக்கப்பட்டுள்ளது

விபத்துக்கள் மற்றும் காயமடையும் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக ஊழியர்களிடையே சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வையும் பாதுகாப்பான வேலைச் சூழலையும் உறுதிப்படுத்துவதன் மூலம் நிறுவனத்தினுள் பாதுகாப்புக் கலாசாரத்தை மேம்படுத்துவதே தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கிளையின் நோக்கமாகும்.

பயிற்சிக் கிளையானது ஊழியர்களுக்கு தங்களது திறன்கள், அறிவு மற்றும் ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்வதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கி, வழங்குவதற்குப் பொறுப்பாக இருக்கிறது. தொழினுட்ப முன்னேற்றம் காரணமாக எப்போதும் மாறிவருகின்ற தொழினுட்பத் திறன்கள், அறிவின் தேவைகளைத் தெரிந்து கொள்ளவும் நுகர்வோர் எதிர்பார்ப்புகளை முழு அளவில் திருப்திப்படுத்துவதற்கு எங்களது ஊழியர்களின் அணுகுமுறைகளை மேம்படுத்தவும் பயிற்சி ஒரு இன்றியமையாத கருவியாகும். இந்தக் கிளையின் கீழ் தாபிக்கப்பட்ட பிலியந்தலை பயிற்சி நிலையமானது மின்னியலாளர், மின்தடப் பணியாளர், எந்திரவினைஞர் மற்றும் பற்றுவைப்பவர் தரங்களில் NVQ மட்டம் 4 சான்றிதழ்களை வழங்குவதற்கு அங்கீகாரம் பெற்றுள்ளது.

வேலைப்பட்டறை மற்றும் துணைச் சேவைகள் கிளையானது மின்வலு ஆலை அலகு, மின்தூக்கிகள் அலகு, காற்று பதனமாக்கி மற்றும் குளிர் பதனப்படுத்தல் அலகு, மத்திய வேலைப்பட்டறை மற்றும் வாகன பழுதுபார்ப்பு அலகு என நான்கு செயற்பாட்டு அலகுகளைக் கொண்டுள்ளதுடன் கோரிக்கையின் பேரில் உபகரணங்களுக்கான சுத்திகரிப்புகள், பழுதுபார்ப்புகள், பராமரிப்புகள் தொடர்பான சேவைகளை வழங்குவதில் ஈடுபடுகிறது.

இதற்கு மேலதிகமாக, நிறுவனத்திலுள்ள சகல உயிர்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்புக்கு இந்தப் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பாதுகாப்புப் பிரிவு பொறுப்பானதாக இருக்கிறது.

## செயற்பாட்டுச் செயலாற்றுகை

### பயிற்சி

பயிற்சிக் கிளையானது 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 5,917 இ.மி.ச. பயிற்சியாளர்களுக்கு பயிற்சிகளை வழங்கியிருந்தது. அதன் விபரங்கள் அட்டவணை A1 இல் தரப்பட்டுள்ளது.

*அட்டவணை A1: 2022 ஆம் ஆண்டில் பயிற்றப்பட்ட ஊழியர் எண்ணிக்கை*

| பயிற்சிப் பாடநெறி /வகை | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | பிலியந்தலை பயிற்சி நிலையம் | காசல்றீ பயிற்சி நிலையம் |
| MLTS | 297 | - |
| தொழினுட்பத் தரம் | 2,662 | 561 |
| எழுதுநர்கள் மற்றும் அதனோடிணைந்த சேவை | 1,258 | - |
| அலுவலக ஊழியர் சேவை | 156 | - |
| பொறியியலாளர்களுக்கான CPD | 393 | 34 |
| எழுதுநர்களுக்கான CPD | 180 | 129 |
| தொழினுட்பத் தரத்தினருக்கான CPD | 13 | 140 |
| வெளி நிறுவனங்கள் | - | 94 |
| **மொத்தம்** | 4,959 | 958 |

2022 ஆம் ஆண்டில் நோய்த் தொற்று பரவலின் பின்னர் வெளிநாட்டுத் தொழினுட்பப் பயிற்சிகள், பரிசோதனைகள் மற்றும் ஏனைய உத்தியோகபூர்வ விஜயங்களுக்கு இ.மி.ச. தனது ஊழியர்களை அனுப்ப முடிந்திருந்தது. அதற்கிணங்க, 21, 67, 16 ஊழியர்கள் முறையே வெளிநாட்டு தொழினுட்பப் பயிற்சி, பரிசோதனைகள் மற்றும் உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்டிருந்தனர்.

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் காலப்பகுதியில் பயிற்சிக் கிளையினால் ஏனைய உள்நாட்டு நிறுவனங்களில் பயிற்சிக்காக 24 நிறைவேற்றுத்தர அதிகாரிகளையும் 7 MLTS இனரையும் அனுப்ப முடிந்திருந்தது. இதற்கு மேலதிகமாக, இக்கிளையானது 396 பொறியியல் பட்டதாரிகளுக்கும் டிப்ளோமா மட்ட மாணவர்களுக்கும் நிறுவனத்தினுள்ளே தொழில்துறைப் பயிற்சியைப் பெறுவதற்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

மேலும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் காலப்பகுதியில் கிளையானது முதலுதவிப் பயிற்சி, தீப் பாதுகாப்புப் பயிற்சி மற்றும் உற்பத்தித்திறன் பயிற்சி ஆகியவற்றை முறையே 984, 206 மற்றும் 86 ஊழியர்களுக்கு வழங்கியிருந்தது. இந்தப் பயிற்சிகளுக்கு மேலதிகமாக, 1,626 பதவியுயர்வுப் பரீட்சைகளையும் 371 ஆட்சேர்ப்புக்கான பரீட்சைகளையும் 2022 ஆம் ஆண்டில் நடத்தியிருந்தது.

**டீசல் மின்பிறப்பாக்கிகள், யுஊ அலகுகள், மின்தூக்கி அலகுகள் மற்றும் இ.மி.ச. வாகனங்களின் பழுதுபார்ப்பும் பராமரிப்பும்**

டீசல் மின்பிறப்பாக்கிகள், AC அலகுகள், மின்தூக்கி அலகுகள் மற்றும் இ.மி.ச. வாகனங்களில் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புகளின் விபரங்கள் அட்டவணை A2 இல் சித்தரிக்கப்பட்டுள்ளன.

*அட்டவணை A2: வேலைப்பட்டறைகள் மற்றும் துணைச் சேவைகளின் செயலாற்றுகை விபரங்கள்*

| வேலை வகை | வேலைகளின் எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட கிரயம் (ரூபா மில்லியன்) |
|---|---|---|
| டீசல் மின்பிறப்பாக்கிகளின் வாடகைக்கமர்த்தல், பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு வேலைகள் | 323 | 524 |
| காற்று பதனமாக்கி அலகுகளின் வருடாந்த பராமரிப்பு சேவைகள், புதிய நிறுவல்கள், பழுதுபார்ப்புகள் மற்றும் புனரமைப்புகள் | 628 | 376.5 |
| மின்தூக்கி அலகுகளின் வருடாந்த பராமரிப்பு சேவைகள், புதிய நிறுவல்கள், பழுதுபார்ப்புகள், புனரமைப்புகள், சோதனைகள் மற்றும் ஆலோசனை சேவைகள் | 52 | 46.8 |
| உருவாக்கங்கள், உற்பத்திகள், வாகனங்களின் பழுதுபார்ப்புகள் மற்றும் சுத்திகரிப்புகள் | 447 | 48.6 |

உள்ளக ரீதியான வாகன சுத்திகரிப்பு வசதியானது நவீன சேவைத் தொழினுட்பத்தையும் தர முகாமைத்துவ முறைமைகளையும் கூட்டிணைத்ததன் மூலம் மேம்படுத்தப் பட்டது. அதற்கிணங்க, ஆண்டின் காலப்பகுதியில் 302 வாகனங்கள் சுத்திகரிப்புச் செய்யப்பட்டதுடன், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 30% அதிகரிப்பைப் பதிவு செய்திருந்தது.



*உரு A1: வாகன சுத்திகரிப்பு வேலை*

**கட்டட நிருமாணங்கள், பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு**

சிவில் வேலைகள் மற்றும் கட்டடங்கள் கிளையினால் முன்னெடுக்கப்பட்ட கட்டட நிருமாணம், பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு வேலைகளின் செயலாற்றுகை அட்டவணை A3 இல் சித்தரிக்கப்பட்டுள்ளன.

*அட்டவணை A3: கட்டட நிருமாணங்கள், பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புகளின் செயலாற்றுகை - 2022 ஆம் ஆண்டு*

| வேலை விபரம் | பெறுமதி (ரூபா மில்லியன்) |
|---|---|
| பிலியந்தலை பயிற்சி நிலையத்தில் இரு தளங்களைக் கொண்ட வேலைப்பட்டறை கட்டடத்தின் நிருமாணம் | 44 |
| கொலன்னாவையில் மின்னியல் வேலைப்பட்டறையின் புனரமைப்பும் நுழைவுப் பாதையின் நிருமாணமும் | 11.5 |
| கதிர்காமத்தில் சுற்றுலா பங்களாவின் மேம்படுத்தல் | 51.4 |
| பொலநறுவையில் பிரதேச அலுவலகத்தின் உள்ளக அமைப்பு வேலைகள் | 11.7 |
| DGM (CRR) - மின் பரிமாற்ற அலுவலகத்தின் இடமாற்ற வேலைகள் | 9.9 |
| **மொத்தம்** | **128.5** |

**தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமும் பாதுகாப்புப் பரிசீலனைகளும்**

2022 ஆம் ஆண்டில் பாதுகாப்பான வேலைச் சூழலை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களினதும் பாதுகாப்புப் பரிசீலனைகளினதும் விபரங்கள் அட்டவணை A4 இல் சித்தரிக்கப்பட்டுள்ளன.

*அட்டவணை A4: சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களினதும் பரிசீலனைகளினதும் விபரம்*

| பிரிவு | பாதுகாப்புப் பரிசீலனைகளின் எண்ணிக்கை | பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் | |
|---|---|---|---|
| | | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
| மின் பிறப்பாக்கம் | 2 | 3 | 99 |
| மின் பரிமாற்றம் | - | 1 | 60 |
| மின் விநியோகம் | 19 | 29 | 1,663 |
| ஏனையவை | 1 | 9 | 338 |
| **மொத்தம்** | 22 | 42 | 2,160 |

**விபத்துகளின் பொழிப்பு**

பாதுகாப்பான வேலைச் சூழலை உறுதிப்படுத்துவது இ.மி.ச. இன் மூலோபாய ரீதியான பொறுப்பாகும். விபத்து இல்லாத பாதுகாப்பான வேலைச் சூழல் மற்றும் சுகாதாரமான வேலைச் சூழலை உருவாக்குவதற்கான பொறுப்பு தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கிளையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான நிறுவன விபத்துகளின் பொழிப்பு உரு A2 இல் தரப்பட்டுள்ளதுடன் நிறுவனமானது பாதுகாப்பான வேலைச் சூழலை உறுதிப்படுத்துவதற்காக மின்வலு ஆலைகள், மின்தொகுப்பு உபமின் நிலையங்களினதும் களப் பணியாளர்களால் மேற்கொள்ளப்படும் கள வேலைகளினதும் பாதுகாப்புடன் தொடர்புடைய பரிசோதனைகளை/கள விஜயங்களை விரிவாக்குவதற்குத் திட்டமிடுகிறது.




*உரு A4: ஒப்பந்தகாரர்களின் ஊழியர்களையும் உள்ளடக்கிய உயிர்ச்சேதம் மற்றும் அறிக்கையிடத்தக்க விபத்துகள்*

## காணி மற்றும் கட்டடங்களின் விபரங்கள்

2022 ஆம் ஆண்டின் இறுதியில் இனங்காணப்பட்ட, அளவீடு செய்யப்பட்ட மற்றும் பெறுமதி மதிப்பிடப்பட்ட காணிகள் மற்றும் கட்டடங்கள் பற்றிய விபரங்கள் முறையே அட்டவணை A5 மற்றும் அட்டவணை A6 இல் தரப்பட்டுள்ளன

*அட்டவணை A5: 2022 ஆம் ஆண்டின் இறுதியில் காணி விபரங்கள்*

| பிரிவு | காணிகளின் எண்ணிக்கை | காணியின் பரப்பு | | | பெறுமதி ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|
| | | ய | சு | ° | |
| விநியோகப் பிரிவு 1 | 206 | 157 | 0 | 31.6 | 8,206 |
| விநியோகப் பிரிவு 2 | 398 | 138 | 1 | 35.5 | 5,252 |
| விநியோகப் பிரிவு 3 | 128 | 66 | 2 | 0.9 | 3,420 |
| விநியோகப் பிரிவு 4 | 161 | 66 | 3 | 1.1 | 3,835 |
| சொத்து முகாமைத்துவம் | 5 | 45 | 2 | 14.6 | 5,366 |
| மின் பரிமாற்றம் | 123 | 409 | 2 | 6.3 | 15,413 |
| மின் பிறப்பாக்கம் | 3092 | 6274 | 2 | 19.1 | 689 |
| **மொத்தம்** | **4,113** | **7,158** | **2** | **29.2** | **42,181** |

*அட்டவணை A6: 2022 ஆம் ஆண்டின் இறுதியில் கட்டடங்களின் விபரங்கள்*

| பிரிவு | காணிகளின் எண்ணிக்கை | பரப்பு 000' சதுர அடியில் |
|---|---|---|
| விநியோகப் பிரிவு 1 | 271 | 2,701.3 |
| விநியோகப் பிரிவு 2 | 417 | 3,336.9 |
| விநியோகப் பிரிவு 3 | 215 | 2,083.1 |
| விநியோகப் பிரிவு 4 | 168 | 3,448.7 |
| சொத்து முகாமைத்துவம் | 75 | 253.4 |
| மின் பரிமாற்றம் | 110 | 477.8 |
| மின் பிறப்பாக்கம் | 1,044 | 2,966.7 |
| செயற்றிட்டங்கள் | 30 | 103.0 |
| நிறுவன உபாயம் | 8 | 81.8 |
| **மொத்தம்** | **2,338** | **15,452.7** |

## முக்கிய நிகழ்வுகள்

- “பயன்படுத்தப்படாதுள்ள வளங்களிலிருந்து வருமானத்தை ஈட்டுதல்” என்ற நிறுவன உபாயத்திற்கு அமைய மிதவை விமானங்கள் மற்றும் படகுச் சேவைகளை இயக்குதல் போன்ற சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காக நீர்த் தேக்கங்கள் குத்தகைக்கு விடப்பட்டன. காசல்றீ நீர்த் தேக்கத்தில் படகுச் சேவை மற்றும் மிதவை விமான இயக்கத்திற்காக MJF ஹோல்டிங்ஸ் அன்ட் சப்ரோன் ஏவியே'ன் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட இரண்டு உடன்படிக்கைகளும் இவ்வாண்டிலும் வெற்றிகரமாகத் தொடரப்பட்டதுடன் காசல்றீ நீர்த்தேக்கத்தில் படகுகளை இயக்குவதற்காக பாம் றிஸோட் கலெக்ஷன் (பிரைவேட்) லிமிட்டெட்டுடன் ஒரு புதிய உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டது.
- காணி சம்பந்தப்பட்ட தரவுகளை நேரடியாக “CEBAssist” என்ற தரவு முகாமைத்துவ முறைமையில் சேமிப்பதற்கு இ.மி.ச. மாகாணங்களிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட பாவனையாளர்கள் அதனை அணுகுவதற்கான வழிமுறை தாபிக்கப்பட்டது.
- முறையான உரித்து ஆவணங்கள் இல்லாத, இ.மி.ச. இனால் பயன்படுத்தப்படும் காணிகளின் உரித்தினைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை பத்திரமொன்று வரைவு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.
- CEB Assist பதிவேட்டின் தயாரிப்பு வெற்றிகரமாகத் தொடரப்பட்டதுடன், மின் பிறப்பாக்கல் பிரிவில் 326 காணித் துண்டங்களும், ஏனைய பிரிவுகளில் 8 காணித் துண்டங்களும் அடையாளங் காணப்பட்டதுடன் மொத்தமாக 2022 ஆம் ஆண்டின் இறுதியில் மின் பிறப்பாக்கல் பிரிவில் அடையாளம் காணப்பட்டிருந்த காணித் துண்டங்களின் எண்ணிக்கை 3,092 ஆகவும் ஏனைய பிரிவுகளில் அடையாளம் காணப்பட்டிருந்த காணித் துண்டங்களின் எண்ணிக்கை 1,021 ஆகவும் காணப்பட்டது.
- அதிகாரமளிக்கப்படாத ஆக்கிரமிப்புகளின் விபரங்களைச் சேகரிப்பதற்காக மவுசாகலை நீர்த்தேக்க வளாகங்களில் சமுதாய ஆய்வு படம் A3 இல் காட்டப்பட்டுள்ளபடி தொடங்கப்பட்டது.



*உரு A3: மவுசாகலை நீர்த் தேக்க வளாகத்தில் ஆய்வுப் பணிகள்*

செயற்பாட்டு மீளாய்வு

# நிறுவன உபாயப் பிரிவு




நட்சத்திர மதிப்பீடு விருதுகள் நிகழ்ச்சி - கடவத்தை

# நிறுவன உபாயப் பிரிவு

நிறுவன உபாயப் பிரிவானது வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயக் கிளை (B&OS), நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் (CS&RA) கிளை, தொழிற்பாட்டு உபாயம் மற்றும் செயன்முறை அபிவிருத்தி (FS&PD) கிளை, தகவல் தொழினுட்பக் (IT) கிளை, ஆய்வு மற்றும் அபிவிருத்திக் (R&D) கிளை என்ற ஐந்து கிளைகளைக் கொண்டிருக்கிறது.

இ.மி.ச. இன் பிரதான வணிக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான உபாயங்களை வடிவமைக்கின்ற முக்கிய பணி (B&OS) கிளையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, நிறுவனத் திட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்ட உபாயங்களை நிறைவேற்றுவதில் நிறுவனத்தின் செயலாற்றுகையைக் கண்காணிப்பதற்கும் நிறுவன பிம்பத்தை மேம்படுத்துவதற்கும் இந்தக் கிளை பொறுப்பாக உள்ளது. மின் பிறப்பாக்கம், மின் பரிமாற்றம் மற்றும் இ.மி.ச. இற்கு வழங்கப்பட்ட மின் விநியோக உரிமங்களுடன் தொடர்புடையதும் அவற்றிலிருந்து எழுகின்றதுமான சகல விடயங்களையும் (CS&RA) கிளை கையாள்வதுடன் அவற்றை உரிமதாரர்கள் அதே போன்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) ஆகியவற்றுக்கிடையில் ஒருங்கிணைப்புச் செய்கிறது. மேலுள்ளவற்றிற்கு மேலதிகமாக, இந்தக் கிளையானது இறுதிப் பயனர் மின்சார விதிப்பனவு தொடர்பான பிரச்சினைகள் மற்றும் விதிப்பனவு பற்றிய ஆய்வுகள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் கையாள்வதற்கும் பொறுப்பாக இருக்கிறது. இக்கிளையானது இ.மி.ச. இன் நிறுவன உபாய உருவாக்கங்களையும்கூட ஒருங்கிணைப்புச் செய்கிறது.

FS&PD கிளையானது தொழிற்பாட்டு உபாயங்கள், கொள்கைகளை விருத்தி செய்வதிலும் இ.மி.ச. இன் செயன்முறை அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறது. சகல முறைமைகளும் நடைமுறைகளும் ஆவணப்படுத்தப்பட்டு, தொடர்புடைய செயற்பாட்டு மற்றும் தொழிற்பாட்டுக் கையேடுகளில் கூட்டிணைக்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கு இந்தக் கிளை பொறுப்பானதாகும்.

IT கிளையானது இ.மி.ச. இன் வணிகச் செயன்முறைகளை விளங்கிக்கொண்டு, வினைத்திறனையும் வாடிக்கையாளர் திருப்தியையும் கொண்டுவருகின்ற பொருத்தமான தொழினுட்பத்துடன் அவற்றை நெறிப்படுத்துவதற்கான பொறுப்பைக் கொண்டிருக்கிறது. டிஜிடல்மயப்படுத்துவதற்கான தேவையைப் பூர்த்தி செய்வதில், IT கிளையானது நான்கு உபாயங்களைப் பயன்படுத்துகிறது. அவையாவன, உள்ளக ரீதியான அபிவிருத்திகள் நிறுவனத்தின் தேவைகளுக்காக தனிப்பயனாக்கப்பட்ட ஆயத்தநிலை தயாரிப்புகள் வெளியிலுள்ள IT கிளைகளிலிருந்தான அபிவிருத்திகளையும் புத்தாக்கங்களையும் பின்பற்றுதல் மற்றும் வெளிமூலமிடுதல்.

R&D கிளையானது மூன்று அலகுகளைக் கொண்டுள்ளது. அவையாவன, கேள்விப் பக்க முகாமைத்துவ அலகு, ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகு மற்றும் ஒளியூட்டலுக்கான பிராந்திய நிலையம் (RCL). R&D கிளையானது கேள்விப் பக்க முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கும் உள்ளக மற்றும் கூட்டு ஆய்வு, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் பொறுப்பானதாகும். இந்தக் கிளையானது ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பில் மொரட்டுவைப் பல்கலைக்கழகம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் (MoU) ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

## முக்கிய நிகழ்வுகள்

### இறுதிப் பயனர் மின்சார விதிப்பனவுத் திருத்தம்.

இந்தப் பிரிவானது கிரயப் பிரதிபலிப்பைக் கொண்ட மின்சார விதிப்பனவுகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு உபாயரீதியான பொறுப்பைக் கொண்டிருக்கிறது. எவ்வாறாயினும், மின்வலு வணிகத்துடன் தொடர்புடைய கிரயக் காரணிகள் வேகமாக அதிகரித்திருந்த போதிலும் அரசாங்கக் கொள்கைத் தீர்மானம் காரணமாக 2014 ஆம் ஆண்டிலிருந்து விதிப்பனவானது தொடர்ந்தும் மாற்றமடையாது காணப்பட்டது. அதே சமயத்தில், விதிப்பனவு முறையியலானது 2021 சனவரியில் திருத்தம் செய்யப்பட்டதுடன், சீரான தேசிய விதிப்பனவை (UNT) பூரணப்படுத்துவதற்கான பொறுப்பு, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடமிருந்து (PUCSL) இ.மி.ச. இற்கு மாற்றப்பட்டிருக்கிறது. மறு புறத்தில், எரிபொருள் விலைகள் பல சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலருக்கு எதிராக உள்நாட்டு நாணயத்தை மிதக்க விடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. அதற்கிணங்க, இ.மி.ச. ஆனது 2022 யூன் மாதத்தில் 229% விதிப்பனவு அதிகரிப்பை PUCSL இடம் கோரியிருந்தது. மிக வேகமாக உயர்ந்து செல்கின்ற செலவினங்களைச் சமாளிப்பதில், எட்டு ஆண்டு கால மௌனத்தின் பின்னர், PUCSL ஆனது நாளாந்தம் 3 மணித்தியாலம் என்ற மின்சாரத் தடைக்கான அங்கீகரிக்கப்பட்ட அட்டவணையுடன் 2022-08-10 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மின்சார விதிப்பனவை 75% இனால் அதிகரிப்பதற்கு அனுமதி அளித்திருந்தது.

எவ்வாறாயினும், விதிப்பனவுத் திருத்தம் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மின் தடைகளுக்கு மத்தியிலும், இ.மி.ச. 2022 ஆம் ஆண்டில் ரூபா 272.9 பில்லியன் என்ற மொத்த நிகர நட்டத்தைச் சந்தித்திருந்தது. இது PUCSL இனால் வழங்கப்பட்ட 75% விதிப்பனவு அதிகரிப்புக்கான அங்கீகாரம் போதியதாக இல்லை என்பதையே காட்டுகிறது.

### சேவைகளுக்காகக் கிடைக்கப்பெற்ற அங்கீகாரங்கள்

CEBAssist" முறைமையானது இரண்டு விருதுகளை வென்றிருந்தது. அவையாவன, SLASSCOM இடமிருந்தான பொதுத் துறையில் அதிசிறந்த அங்கீகார விருது மற்றும் BCS இலங்கை அத்தியாயத்திடமிருந்தான சிறந்த டிஜிடல்மயப்படுத்தப்பட்ட செயன்முறையைக் கொண்டிருப்பவருக்கான விருது. இடைநிலை மின்னழுத்தப் பராமரிப்பு முகாமைத்துவ முறைமையானது (MVMMS) உள்ளக அபிவிருத்தி வகையின் கீழ் NBQSA - 2022 இல் சிறப்பு விருதைப் பெற்றுக் கொண்டது. அதே சமயத்தில் சக்தி முகாமைத்துவ முறைமையானது (EMS) 2022 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இ.மி.ச. புத்தாக்கப் போட்டியில் விசேட விருதைப் பெற்றுக்கொண்டது.



*உரு C1: SLASSCOM விருதுகள்*

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரிவில் இடம்பெற்ற பிற முக்கிய நிகழ்வுகள் கீழே தரப்பட்டுள்ளன

– மேற்கூரை சூரிய சக்தி PV பிரயோக செயன்முறைப்படுத்தல் முறைமை என்ற ஒரு புதிய தொகுதி "CEBAssist" இற்குச் சேர்க்கப்பட்டது. இது மின் விநியோகப் பணியாளர்கள் சூரிய சக்தி PV தடையகற்றல் கோரிக்கைகள், இணைப்புக்கான விண்ணப்பங்கள், உள்ளக ரீதியான வேலைகள், களப் பரிசோதனைப் பணிகள் மற்றும் ஏனைய விடயங்களை கையாண்டு செயன்முறைப்படுத்துவதற்கு அனுமதிக்கிறது.

– லக்விஜய மின்வலு ஆலை நிருவாகக் கட்டடம், இ.மி.ச. தலைமையக சிற்றுண்டிச்சாலைக் கட்டடம் மற்றும் மின் பரிமாற்ற நிருமாணச் செயற்றிட்டங்கள் கட்டடம் ஆகியவற்றுக்கான மேற்கூரை சூரிய சக்தி PV முறைமைகள் வடிவமைக்கப்பட்டதுடன், நம்பகமான மற்றும் துல்லியமான சக்தி எதிர்வுகூறல் முறைமை ஒன்றை உருவாக்குவதற்கான சூரிய சக்தி PV முறைமைகளுக்கான தேசிய சக்தி எதிர்வுகூறல் மாதிரியொன்றும் விருத்தி செய்யப்பட்டது.

– IT கிளையினால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக இ.மி.ச. இன் உள்ளக வாடிக்கையாளர்களுக்கு புதிதாக விருத்தி செய்யப்பட்ட தன்னியக்க IT சேவைப் பணியக மென்பொருள் தொடங்கப்பட்டது.

– நுகர்வோர் சேவை நிலையங்களால் (CSC) வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்துவதற்காக நட்சத்திரத் தரமிடல் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டமானது இ.மி.ச. இன் ஒட்டுமொத்த சேவைத் தரம் மற்றும் வாடிக்கையாளர் திருப்தியில் நேர்மறையான தாக்கத்தைக் ஏற்படுத்தியிருந்தது. 2022-12-31 இல், இ.மி.ச. இன் நட்சத்திரத் தரமிடல் திட்டமானது, குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை அடைய வழிவகுத்தது. இது பெரும்பாலான CSC கள் 2 ஆவது நட்சத்திர நிலையை அடைவதற்கும் விநியோகப் பிரிவு 2 இலுள்ள (DD2) அரைவாசிக்கும் மேற்பட்ட CSC கள் 3 ஆவது நட்சத்திர நிலையை அடைவதற்கும் வழி வகுத்தது.

– விளம்பரப்படுத்தல் மற்றும் அச்சிடல் கிரயங்களை குறிப்பிடத்தக்களவு குறைப்பதற்காக டிஜிடல் வெளியீட்டு முறைகளைப் பின்பற்றியதன் மூலம் பல புத்தாக்கமான கிரயக் குறைப்பு உபாயங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன. மின் தடை அறிவித்தல்கள் மீள வடிவமைப்புச் செய்யப்பட்டதால், வெளியீட்டுக்கான கிரயங்கள் குறைந்ததுடன் விரிவான தகவல்களுக்கு வாசகர்களை இ.மி.ச. இன் இணையத்தளத்திற்கு அனுப்பும் QR குறியீட்டைக் கொண்டு, தற்போது காகிதங்களில் வெளியிடப்பட்ட விரிவான தகவல்களை மாற்றுவதற்கு முன்கூட்டியே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

– இ.மி.ச. மற்றும் அதன் விடயப் பரப்புகள் பற்றி பொது மக்களுக்கு தெளிவூட்டுவதற்காக இ.மி.ச. இன் யூ - ரியூப் அலைவரிசைக்கு Singhala Word என்ற கலந்தாய்வு நிகழ்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டது.

– மாற்றமடைந்து வருகின்ற வணிகச் சூழல்கள், தொழினுட்ப அபிவிருத்திகள், உட்கட்டமைப்பு அபிவிருத்திகள், அதிகரிக்கின்ற டிஜிடல்மயப்படுத்தல்கள் போன்றவற்றை கணக்கிற் கொள்வதற்காக இ.மி.ச. முழுமைக்குமான மனித வள மதிப்பீடானது பூர்த்தி செய்யப்பட்டதுடன் புதிய வேலை நியமங்களும் தயாரிக்கப்பட்டன.

– மதிப்பீட்டுச் செயன்முறையை சீராகவும், மிகவும் பயனுறுதிமிக்க வகையிலும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்காக சகல மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட புதிய செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைகளும் படிவ வடிவமைப்புகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

– இ.மி.ச. இன் லீவு ஒழுங்குவிதிகள் திருத்தப்பட்டு, வெளியிடப்பட்டன (மூன்றாவது பதிப்பு). மேலும், "சம்பளங்களும் வேதனங்களும் கையேடு" மற்றும் "இடமாற்ற விதிகள்" என்பனவும் திருத்தப்பட்டு சபை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டன.

– பயனர்களுக்கான மேன்முறையீட்டு தேடல் அனுபவத்தை வழங்குவதற்காக அகன்ற அம்சங்கள் மற்றும் மேம்பட்ட ஆய்வுச் செயற்பாடுகளுடன் சுற்றறிக்கைகள், கையேடுகள் மற்றும் ஆவணங்கள் முறைமை (CMDS) என்பன மீளமைக்கப்பட்டன.

– உச்சப் பாவனைக்கான தேவை நிலவும் காலப்பகுதியில் புதைபடிவ எரிபொருள் பாவனையை குறைப்பதற்காகவும் அதன் மூலம் பச்சைவீட்டு வாயு வெளியீட்டைக் குறைப்பதற்காகவும் யுஎஸ்எயிட் ஸ்ரீ லங்கா சக்தி நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து கட்டுநாயக்கா ஏற்றுமதிச் செயன்முறை வலயத்தில் தேவையைப் பூர்த்தி செய்யும் முன்னோடிச் செயற்றிட்டமொன்றின் அபிவிருத்தி தொடங்கப்பட்டது.

.

செயற்பாட்டு மீளாய்வு

நிதிசார் இடர் முகாமைத்துவம்

தொழினுட்ப இடர் முகாமைத்துவம்

மின்சாரத் தொழில்துறையின் நிலைபேற்றுத்
தன்மைக்கான எமது அணுகுமுறை

நிறுவன சமூகப் பொறுப்புடைமை அறிக்கை



# நிதிசார் இடர் முகாமைத்துவம்

மாற்றமடைகின்ற இ.மி.ச. இன் செயற்பாட்டுச் சூழலில், இடர் ஊக்கிகளை முகாமை செய்வது இ.மி.ச. ஐ நிதிசார் ரீதியில் உறுதியானதாக்குகின்ற முக்கிய நோக்கங்களை அடைவதற்கான மூலோபாயங்களை நடைமுறைப்படுத்துவதில் ஒரு முக்கிய அங்கமாக மாறியுள்ளது. எனவே, இ.மி.ச. இன் பணியை அடைந்து கொள்வதற்கு வலுவான இடர் முகாமைத்துவத்தின் அடிப்படைகள் கட்டாயமாக இருத்தல் வேண்டும். இந்த வகையில், நிதிப் பிரிவானது பின்வரும் குறிப்பான நோக்கங்களை அடைய முயல்கிறது.

1. பிரதான இடர்களை இனங்காணுதல்.
2. போதுமான கட்டுப்பாடுகள் இருப்பதை உறுதிப்படுத்தல்.
3. வெளிவாரியான மற்றும் உள்வாரியான சூழல்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு பதிலிறுக்கும் வகையில் பிரதான இடர்களை மறுபரிசீலனை செய்தல்.
4. இடர்களை அளவீடு செய்தல்.
5. பிரதான இடர்களைத் தணித்தல்.

அதற்கிணங்க, நிதிப் பிரிவானது நிதிசார் இடர் பற்றிய கண்ணோட்டத்தில் பாதுகாப்பின் முதலாவது வரிசையாக இடர் அணுகுமுறையை செயற்படுத்துகிறது. இடர் முகாமைத்துவ அணுகுமுறையின் பாதுகாப்பின் இரண்டாம் மற்றும் மூன்றாம் வரிசைகள் முறையே நிறுவன முகாமைத்துவ அணி (CMT) மற்றும் சபைக் கணக்காய்வுக் குழு / வெளிவாரியான கணக்காய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இறுதிப் பொறுப்பு பணிப்பாளர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய இடர் ஆளுகை மாதிரியில், பிரிவானது அதன் தாக்கம் மற்றும் தணிப்பு உபாயங்களுடன் கீழே பட்டியலிடப்பட்ட பிரதான இடர் காரணிகளை பின்பற்றுகிறது.

| இடர் | தாக்கம் | இடர் மட்டம் | தணித்தல் உபாயம் |
|---|---|---|---|
| வட்டி வீத இடர் | - இ.மி.ச. உயர்ந்தபட்ச கடன் எல்லை வரை கடன்களைப் பெற்றுள்ளது.<br>- அனைத்து காலக் கடன்களும் நிறையேற்றப்பட்ட முதன்மை கடன் வீதத்தை (WPLR) அடிப்படையாகக் கொண்டவை. எனவே, அனைத்து கடன் வட்டி வீதங்களும் விரைந்து அதிகரித்ததால் உயர்ந்த காசு வெளிப்பாய்வு உருவாகியிருக்கிறது. | அதிகம் | - பரவலைக் குறைப்பதற்காக வங்கிகளுடன் பேச்சுவார்த்தை.<br>- நிலையான வட்டி வீத நிதிக் கருவிகளுக்கான வற்புறுத்தல். |
| பரிமாற்ற வீத இடர் | - நிலக்கரி, எரிபொருள் மற்றும் உதிரிப்பாகங்கள் போன்றவற்றின் உள்ளீட்டு விலைகள் அதிகரிப்பு.<br>- LC இன் தாமதம் காரணமாக வழங்கல் சங்கிலிக்கான தடங்கல்கள். | அதிகம் | - முன்னோக்கிய ஒப்பந்தத்தின் வற்புறுத்தல்.<br>- வெளிநாட்டு நாணயத்தில் கட்டணப் பட்டியலிட வற்புறுத்தல்.<br>- கொடுப்பனவு நிபந்தனைகள் பற்றிய பேச்சுவார்த்தை.<br>- முன்கூட்டிய நாணய முற்பதிவுகள் |
| கடன் இடர் | - வாடிக்கையாளர்களிடமிருந்து கொடுப்பனவுகள் தாமதமடைவதால் அது திரவத்தன்மையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. | குறைவு | - வாடிக்கையாளர்களிடமிருந்தான கொடுப்பனவுகளுக்கு எதிராக வழங்குநர்களுக்கான கொடுப்பனவை வரைபடமாக்கல். |
| பொருள் இடர் | - மின் பிறப்பாக்கல் கிரயத்தின் அதிகரிப்பு.<br>- செயற்றிட்டங்களின் அதிக செலவு. | அதிகம் | - நிலையான விலை ஒப்பந்தங்கள்.<br>- பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள். |
| திரவத்தன்மை இடர் | - உயர்ந்தளவான பெனல் கட்டணங்கள்.<br>- வழங்கல் சங்கிலியில் உள்ள பிரச்சினைகள்.<br>- மின் துண்டிப்பு. | அதிகம் | - கடன்களை காலந்தாழ்த்திக் கொடுத்தல்.<br>- பேச்சுவார்த்தை மேற்கொள்ளல்.<br>- வசதியை மறுசீரமைத்தல். |

# தொழினுட்ப இடர் முகாமைத்துவம்

## இடரை இனங்காணுதல்

மின்சார அபாயங்கள் மற்றும் அதன் நடவடிக்கைகளின் தன்மை என்பவற்றால் இடர் தணிப்பு நடைமுறைகள் இ.மி.ச. நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக இருக்கின்றன. தரமான, நம்பகமான மற்றும் சிக்கனமான மின்சார வழங்குநர் என்ற வகையில், நிறுவனத்தின் முறையான தொழிற்பாட்டைப் பாதிக்கக்கூடிய இடர்களை இலங்கை மின்சார சபை இனங்கண்டுள்ளது.

இடர்களை இனங்கண்டு, அவை நிகழ்வதற்கான வாய்ப்பு மற்றும் அளவு, அதன் சாதகங்கள் மற்றும் பாதகங்கள் ஆகியவற்றுக்கு இணங்க வகைப்படுத்தி, பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பது மிகவும் முக்கியமானதாகும். இனங்காணப்பட்டு, வகைப்படுத்தப்பட்ட அதிக பின்விளைவு கொண்ட சில இடர்கள் பற்றி திட்டமிடல் செயன்முறைகள், நிறுவனத் திட்டம், நீண்ட கால மின் பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம், நீண்ட கால மின் பரிமாற்ற அபிவிருத்தித் திட்டம் மற்றும் பாதீடுகளில் சேர்க்கப்படுகின்றன. ஏனையவை பொறுப்பு வாய்ந்த பிரிவுகளால் அவசரகால நடைமுறைகளில் கையாளப்படுகின்றன

## நிதிசார் இடரும் தொழினுட்பச் செயலாற்றுகை மீது அதன் தாக்கமும்

கிரயப் பிரதிபலிப்பு / கிரய மீட்பு இறுதி உபயோகத்தர் விதிப்பனவைக் கொண்டிராதது அதிக பின்விளைவைக் கொண்ட இடர் காரணி ஒன்றாகும். அந்த இடர் நிதிச் செயலாற்றுகையை மாத்திரமின்றி தொழினுட்பச் செயலாற்றுகையையும்கூட பாதித்திருக்கிறது.

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் பிரிவு 30(2)(டி) இன் கீழ், அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஏற்படும் அனைத்து நியாயமான செலவுகளையும் மீட்பதற்கு இ.மி.ச. அனுமதிக்கப்படுகிறது. அந்தப் பிரிவானது இ.மி.ச. தனது அதிகாரமளிக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகளை நிதி ரீதியாக சாத்தியமான முறையில் தொடர முடியும் என்பதை உறுதிப்படுத்துகிறது. எவ்வாறாயினும், PUCSL இனால் அங்கீகரிக்கப்பட்ட கிரய மீட்பு விதிப்பனவு ஒன்றைக் கொண்டிராமை, இ.மி.ச. அதன் முக்கிய தொழிற்பாடுகளை வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் ஆற்ற முடியாமலிருக்கின்ற இடரை அதிகரித்திருந்தது.

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பகுதி ஏ இன் கீழ், இ.மி.ச. தனது கிரயங்களை மீட்பதற்காக விதிப்பனவுகள் மற்றும் கட்டணங்களை வகுத்தமைப்பதற்கு அதிகாரத்தைக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த அதிகாரம் இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் இரத்துச் செய்யப்பட்டு, ஒழுங்குபடுத்துநரான இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு (PUCSL) அவ்வதிகாரம் வழங்கப்பட்டது. அரசின் கொள்கையாக நாடு முழுவதும் ஒரே சீரான தேசிய விதிப்பனவை (UNT) அரசு கொள்கையாகக் கொண்டிருப்பதால், UNT நடைமுறையிலிருக்கும் காலப்பகுதியில் சகல நுகர்வோருக்கும் ஏற்புடைய வகையில் இறுதிப் பயனர் விதிப்பனவு அட்டவணையை நிர்ணயிப்பது PUCSL இன் பொறுப்பாகும். ஒரு தனி உரிமதாரர் அவ்வாறு செய்ய முடியாது. இருப்பினும், 2014 இல் விதிப்பனவில் குறைப்பொன்று செய்யப்பட்ட பின்னர், நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமையின்போது, கிரயத்தைப் பிரதிபலிக்கின்ற விதிப்பனவு முறையைக் கொண்டிருக்காத காரணத்தால் இ.மி.ச. மீது அதிகரித்த நிதிச் சுமையைக் கருத்திற்கொண்டு 2022 ஆகஸ்டிலும் அதன் பின்னர் 2023 பெப்ரவரியிலும் மாத்திரம் விதிப்பனவு அதிகரிப்பொன்று மேற்கொள்ளப்பட்டது. இந்த விதிப்பனவு அதிகரிப்பானது எதிர்காலத்தில் இ.மி.ச. செலவு செய்யும் கிரயங்களை மீட்டெடுக்க வழியமைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறைந்த கிரய மின்வலு ஆலைகளை நிருமாணிப்பதற்கான இயலாமைகூட நிதிசார் நட்டத்தை அதிகப்படுத்தியது. அதிகரிக்கப்பட்ட மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி இலக்குகள் மற்றும் திரவநிலை இயற்கை எரிவாயு (LNG) ஆகியவற்றின் அடிப்படையிலான மின் பிறப்பாக்கத்துடன், இ.மி.ச. மின் பிறப்பாக்கக் கிரயத்தைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கிறது.

## போதுமானளவு பிறப்பாக்கல் கொள்ளளவு இன்மையால் ஏற்படும் இடர்

இ.மி.ச. இன் நீண்ட கால மின் பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டங்களில் அடையாளம் காணப்பட்டவாறான மின்வலுக் கொள்ளளவுகள் (நீண்ட காலத் தேவைகள் மற்றும் இடைக் கால நிறுத்த இடைவெளி தேவைகள் ஆகிய இரண்டிற்குமான) திட்டமிட்டபடி நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் இ.மி.ச. விரும்பியதைவிட குறைந்த கொள்ளளவு இருப்பு எல்லையுடன் இயங்குகிறது. திட்டமிடப்பட்ட பிறப்பாக்கல் சேர்க்கைகளை உரிய நேரத்தில் நிருமாணிக்க முடியாமையானது ஒரு பாதகமான சுழற்சியை உருவாக்குகிறது. குறைந்த இருப்பு எல்லையானது தற்போதுள்ள மின்வலு ஆலைகளை தடுப்புப் பராமரிப்பு அல்லது வேறு வழக்கமான பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காக அட்டவணைப்படி எடுப்பதிலிருந்து தடுக்கிறது. அது இயந்திரங்களின் நம்பகத்தன்மையைப் பாதிப்பதுடன் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு கிடைக்கக்கூடிய கொள்ளளவை மேலும் குறைக்கிறது. கொள்ளளவு இருப்பின் பற்றாக்குறையானது சுமை உதிர்வுக்கும் முறைமை செயலிழக்கின்ற மோசமான நிலைக்கும் வழிவகுக்கும். மேலும், முறைமையில் போதுமானளவு மின் பிறப்பாக்கக் கொள்ளளவு இருப்பு இல்லாமையானது இ.மி.ச. நீண்ட கால வறட்சியின்போதும் அல்லது ஒரு பெரிய மின் பிறப்பாக்கல் அலகின் செயலிழப்பை ஈடுசெய்யும்போதும் குறுகிய கால துணை மின்வலுவைப் பெற வேண்டியேற்படுகிறது.

## வலையமைப்பு விரிவாக்கல் இடர் - வலையமைப்பு விரிவாக்கத்தின் தாமதம்

எதிர்கால மின்வலு ஆலைகளிலிருந்து மின்வலுவைக் காவுவதற்கும் மிகவும் நம்பகரமான முறையில் அதிகரிக்கின்ற சக்திக் கேள்விகளுக்கு அதனை வழங்குவதற்குமான உயர், இடைநிலை மற்றும் தாழ் மின்னழுத்தங்களுக்கான வலையமைப்பு விரிவாக்கங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. இவை புதிய மின் பரிமாற்ற மற்றும் விநியோகச் சுற்றுக்களை நிருமாணித்தல், புதிய உபமின் நிலையங்களை விருத்தி செய்தல் / நிருமாணித்தல், மின்தொகுப்பின் தரத்தை மேம்படுத்தல் போன்றவற்றை உள்ளடக்குகிறது. மின் பிறப்பாக்கல் ஆலைகளிலிருந்து மின்வலுவை வெளியெடுப்பதற்கு புதிய மின் பரிமாற்ற மார்க்கங்களை நிருமாணிப்பது மின் பிறப்பாக்கல் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடன் சரியான நேரத்தில் செய்யப்பட வேண்டும். முந்தையவற்றின் தாமதம் பிந்தையவற்றிலிருந்து மின்வலுவை வெளியெடுப்பதில் தாமதத்தை ஏற்படுத்துகிறது. அத்துடன், 20 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் சேவையில் இருக்கின்ற இடைநிலை மட்ட மின்னழுத்த வலையமைப்பில் உள்ள கச்சிதமாக எரிவாயு காப்பிடப்பட்ட உபமின் நிலையங்கள் உள்ளிட்ட சில சொடுக்கிபல்லினைகளின் (சுவிட்ச்கியர்) நம்பகத்தன்மையை பகுப்பாய்வு செய்வதற்கு நேரம் வந்துள்ளது. நீர் வழங்கல், பெற்றோலியம் மற்றும் ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் பகுதிகள் போன்ற தொழில்துறைகளுக்கு முக்கிய பயன்பாட்டுச் சேவையை வழங்குகின்ற அத்தகைய உபமின் நிலையங்களின் நம்பகத்தன்மையானது அந்தப் பிரதான சேவைகள் மற்றும் தொழில்துறைகளுக்கான தடையற்ற மின் வழங்கலை உறுதி செய்வதற்கு மாற்று மின்வலு வழங்கல் தெரிவுகளைக் கொண்டிருக்கின்றனவா என்பதை அறிய புதிய கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும். மேலும், மின்தொகுப்பு நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கு மாற்றீடு செய்யப்பட வேண்டிய வயதான மின்தொகுப்பு உபகரணங்களும் காணப்படுகின்றன மின் பிறப்பாக்கம் மற்றும் பரிமாற்ற வலையமைப்புகள் இரண்டிலும் உபரிநிலை இல்லாமைக்கு மத்தியில் அத்தகைய மாற்றீடுகளுக்கான நிதியைப் பெற்றுக்கொள்வதும் அத்தகைய பணிகளை மேற்கொள்வதும் கடுமையான சவால் மிகுந்ததாகும். வலையமைப்பு உபகரணத்துடன் இணைந்த இடர்கள், தோல்வி நிகழ்வுகளை முன்கூட்டியே அறிய உதவுகின்ற சொத்து முகாமைத்துவக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதன் மூலம் ஓர் அளவிற்குக் குறைக்கப்படுகின்றன. இதனால் கால தாமதமின்றி அல்லது எந்தவொரு அனர்த்தத்தையும் ஏற்படுத்தாமல் சீக்கிரம் சரிசெய்யும் நடவடிக்கைகள் தொடங்கப்பட முடியும்.

## எரிபொருள் வழங்கல் இடர்

மின்சார உற்பத்தியில் கிட்டத்தட்ட 50% ஆனவை நிலக்கரி மற்றும் எரிபொருள் எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் இ.மி.ச. இல் தடையற்ற மின்சார வழங்கலை மேற்கொள்வதற்கு எரிபொருளைப் பாதுகாப்பது அசியமானதாகும். எரிபொருள் வழங்கல் இடர் என்பது மின் பிறப்பாக்கத்திற்குத் தேவையான எரிபொருள்களின் விநியோகம், சேமிப்பு அல்லது கிடைப்பதில் காணப்படும் இடையூறுகள் அல்லது தடைகளின் சாத்தியத்தை உள்ளடக்கியதாகும். விநியோகச் சங்கிலித் தடங்கல்கள், புவிசார் அரசியல் பதற்றங்கள், இயற்கை பேரழிவுகள், ஒழுங்குமுறை

# தொழினுட்ப இடர் முகாமைத்துவம் (தொடர்ச்சி)

மாற்றங்கள், விலை ஏற்ற இறக்கங்கள் அல்லது சக்திக் கொள்கைகளின் மாற்றங்கள் போன்ற பல்வேறு காரணிகளால் இது ஏற்படலாம். 2022 ஆம் ஆண்டில் இதே போன்றதொரு நிலைமையை நாங்கள் அனுபவித்ததுடன் கேள்விப் பக்க நடவடிக்கையாக திட்டமிடப்பட்ட மின் தடைகளை அறிமுகப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இது நாட்டின் சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அதற்கிணங்க, இந்த இடரை முகாமை செய்வது நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யநம்பகமான மற்றும் தடையற்ற மின்சாரம் வழங்குவதை உறுதிசெய்வதற்கு முக்கியமானதாகும். இ.மி.ச. ஆனது எரிபொருள் மூலங்களின் பல்வகைப்படுத்தல், நீண்ட கால எரிபொருள் ஒப்பந்தங்களில் ஈடுபடுதல், சேமிப்பு வசதிகளை மேம்படுத்தல், மீள்புதுப்பிக்கத்தக்கவைகளுக்கு மாறுதல், மற்றும் எரிபொருள் வழங்கல் இடர் முகாமைத்துவ மூலோபாயங்களாக தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் எதிர்பாராத் திட்டமிடல் ஆகியவற்றை வலியுறுத்தியுள்ளது.

### மனித வள இடர் - திறன்மிக்க மற்றும் ஊக்கமளிக்கப்பட்ட வேலைப் படையொன்றைப் பராமரிப்பதில் உள்ள சவால்கள்

திறன்மிக்க வேலைப்படையைக் கொண்டிருப்பது அருவச் சொத்து ஒன்றாக இருப்பதுடன் இது வலையமைப்பு உபகரணத்தின் சிறந்த பராமரிப்புக்கு முக்கியமானதாகும். தேசத்திற்கான தரமான சேவையை வழங்க நினைக்கும் இ.மி.ச. இன் முக்கிய வணிகத்தைப் பேணுவதற்கு பணியாளர் ஊக்கம் முக்கியமானதாகும். அத்துடன், தொழில்துறைப் பிணக்குகளைத் தவிர்ப்பதற்கு ஊழியர் திருப்தி பிரதானமானதாகும். இ.மி.ச. தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக ஒரு திறன்மிக்க வேலைப்படையை பேணுகிறது. கோவிட் 19 நோய்த் தொற்றானது இந்த நடைமுறையின் தொடர்ச்சித் தன்மையை பாதகமான முறையில் பாதித்திருந்த போதிலும், இந்த நிபுணத்துவத்தைப் பேணுவதற்காக இயலுமையை விருத்தி செய்வதற்கும் பணியாளர்களை ஊக்கப்படுத்துவதற்குமென விரிவான நிகழ்நிலை நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் நிலவுகின்ற கொள்கைகள் மற்றும் மோசமான பொருளாதார நிலைமைகள் என்பன திறன்மிக்க வேலைப் படையைத் தக்கவைப்பதில் சவால்களை உருவாக்கியிருந்தன.

### கடன் வழங்கும் முகவராண்மைகளின் அழுத்தம் காரணமாக முன்னுரிமைப் பிரதேசங்களிலிருந்து நிதிகள் திசைதிருப்பப்படும் இடர்

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 38 இன் கீழ், சபையின் சேவைகளின் அபிவிருத்திக் கிரயத்தின் நியாயமான விகிதத்தை நிறைவேற்றுவதற்கு சபையின் வருவாய் போதுமானதாக இருக்கிறது என்பதை உறுதிப்படுத்தும் கடமை சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், அத்தகைய நிதிகளைப் பெறுவதற்கு இ.மி.ச. இற்கு கிடைக்கப்பெற்ற "கருவி" அதாவது விதிப்பனவுகள் மற்றும் கட்டணங்களை நிர்ணயிக்கின்ற அதிகாரம், 2009 இல் இ.மி.ச. இடமிருந்து எடுக்கப்பட்டதுடன் அது இலங்கை மின்சாரச் சட்டத்தின் மூலம் PUCSL இடம் கையளிக்கப்பட்டது. சொந்த நிதிகள் கிடைக்காமை என்பது மின் பிறப்பாக்கச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் மற்றும் மின் பரிமாற்ற / விநியோக வலையமைப்பு மேம்பாட்டுச் செயற்றிட்டங்களுக்கு, குறிப்பாக சர்வதேச நிதிகளைப் பெற முடியாத ஒரு பொதுவான பிரச்சினையாகக் காணப்படுகிறது. மின்வலுத் துறையின் முதலீட்டுத் தீர்மானங்கள் மின்சாரத்திற்கான கேள்வி, மாறிவரும் அரசாங்கக் கொள்கைகள், நாட்டததாரர்களின் எதிர்பார்ப்புகள், வழங்கல் சங்கிலிப் பிரச்சினைகள், வணிக ஒருங்கிணைப்புகள் அதே போன்று காலநிலை தொடர்பான கொள்கைகளில் இருந்தான அழுத்தங்கள் உள்ளிட்ட சிக்கலான காரணிகளின் ஒரு கலவையால் வடிவமைக்கப்படுகின்றன. புதைபடிவ எரிபொருட்கள், அரசுக்குச் சொந்தமான பயன்பாட்டுக் கட்டமைப்புக்கள் போன்றவற்றைப் பற்றிய உலகின் மாறுபட்ட பார்வைகளைப் பூர்த்தி செய்ய நிதி வழங்கும் நிறுவனங்களும் தங்கள் சொந்த நிதிக் கொள்கைகளை உருவாக்கியுள்ளன. கடன் உடன்படிக்கைகள் வாயிலாக நிபந்தனைகளை வலியுறுத்துவது, முன்னுரிமைப் பகுதிகளைக் காட்டிலும் கடன் வழங்கும் நிறுவனங்கள் கடன் வழங்கத் தயாராக இருக்கின்ற பகுதிகளுக்கு வரையறுக்கப்பட்ட கடன் பெறுகை வெளியைப் பயன்படுத்தவும் இ.மி.ச. இனை கட்டாயப்படுத்தியுள்ளன.

### பொதுக் கருத்து இடரும் பயன்பாட்டுத் திட்டங்களுக்கான சவால்களும்

நாட்டின் மொத்தச் சக்திப் பயன்பாட்டில் மின்சாரக் கணக்குகள் 14% மாத்திரமே. ஆயினுங்கூட, மின்சாரத் துறையானது ஊடகங்கள், அரசுசாரா நிறுவனங்கள், சுற்றுச்சூழல் அழுத்தக் குழுக்கள் போன்றவற்றிலிருந்து அதிக கவனத்தை ஈர்க்கிறது. இது, மீதமுள்ள 86% ஐ விட அதிக வர்த்தக நாட்டம் காரணமாக இருக்கலாம். மின்வலு முறைமை என்பது மிகவும் விசேடத்துவம் மிக்க ஒரு பகுதியாகும். அதனைப் புரிந்து கொள்வதற்கு ஆழ்ந்த அனுபவமும் வெளிப்பாடும் தேவை, அது பொது மக்களின் புரிதலுக்கு அப்பாற்பட்டதாகும். இதனால் பொதுமக்களுக்கும் ஊடகங்களுக்கும் பயன்பாட்டுத் திட்டங்கள் மற்றும் முடிவுகளைப் பற்றிய நியாயப்படுத்தல்களை நம்ப வைப்பது மிகவும் கடினமானது. மின்வலுத் துறை மிகவும் கவர்ச்சிகரமான வணிக வாய்ப்புகளை வழங்குவதால், அவர்கள் ஈடுபடக்கூடிய வணிகப் பகுதிகளை ஆதரிப்பதற்கும் அவர்கள் வர்த்தகம் செய்யும் தொழில்நுட்பங்களுக்கு வழிவகை செய்வதற்கும் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை மாற்றுவதற்கான வணிக ஆர்வத்தைக் கொண்ட குழுக்களிடமிருந்தான அழுத்தத்தின் கணிசமானளவு இடர் காணப்படுகிறது.

### கொள்கை மாற்றத்தினால் ஏற்படும் இடர்

மின்வலுச் செயற்றிட்டங்கள் நீண்ட பேறு காலத்தைக் கொண்டவை. எனவே, முன்கூட்டியே அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடங்குவதற்காக, தேவையான திகதிக்கு முன்பே திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. மின்வலு விரிவாக்கத்திற்கான திட்டமிடலுக்குக்கூட குறிப்பிடத்தக்க காலம் எடுக்கும். எனவே, அரசாங்கக் கொள்கைகள் தெளிவானதாகவும் உறுதியானதாகவும் இருத்தல் வேண்டும். மாற்றமடைகின்ற மற்றும் சீரற்ற அரசாங்கக் கொள்கைகள் பயன்பாட்டுத் திட்டமிடல் மற்றும் செயற்றிட்ட அமுலாக்கங்களுக்கு முன்னால் பாரிய சவால்களையும் இடர்களையும் உருவாக்குகின்றன.

### இணையப் பாதுகாப்பு இடர்

இ.மி.ச. அதிகரித்த வகையில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனமாக மாறிவருகின்றது. பெரும்பாலும் அனைத்துக் கிளைகளும் வலையமைப்புச் செய்யப்பட்டு ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. இது அவைகளை வெளிவாரியான இணையத் தாக்குதலால் மிகவும் பாதிக்கக்கூடியதாக ஆக்குகிறது. ஏனெனில் ஓர் இடத்தில் ஊடுருவல் ஏற்படின் அது வலையமைப்பின் ஊடாக அனைத்து இடங்களுக்கும் பரவக்கூடும்.

இ.மி.ச. போன்ற மின்சாரப் பயன்பாடுகளால் பொதுவாகப் பயன்படுத்தப்படும் செயற்பாட்டுத் தகவல் தொழில்நுட்ப முறைமையானது தொடர்பாடல் மற்றும் கட்டுப்படுத்தல் நோக்கங்களுக்காக தகவல் தொழில்நுட்பவியலில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. எவ்வாறாயினும், இந்தச் செயற்பாடுகளும் முறைமைகளும் பெரும்பாலும் தனிமைப்படுத்தப்பட்ட அமைப்புகளாக செயற்படுத்தப்பட முனைப்புக் காட்டப்படுவதுடன் முகாமைத்துவ தகவல் தொழில்நுட்ப முறைமைகளைப் போலல்லாது வெளிப்புறத்துடன் குறைந்தளவு இணைப்புகளைக் கொண்டுள்ளன. மேலும், செயற்பாட்டுத் தகவல் தொழில்நுட்ப முறைமைகள் வெளிப்புறத்துடன் இணைக்கப்படும்போது, அவை உயர் முடிவிட பாதுகாப்புச் சாதனங்களை நுழைவுவாயில்களாகக் (Gateways) கொண்டிருக்கின்றன. எனவே, அவைகளுக்கு வெளியிலிருந்து வரும் தாக்குதல்கள் மற்றும் ஊடுருவல்களின் சற்றே குறைந்தளவான அச்சுறுத்தல்களே காணப்படுகின்றன. இருப்பினும், இணையத் தாக்குதல்களின் இடர் எப்போதும் இருக்கிறது. இது பாதுகாப்பு முறைமைகளில் உள்ள ஓட்டைகளை தாக்குபவர்கள் சுரண்டுவதன் காரணமாக இருக்கலாம். அத்துடன் மனித வழுக்கள் மற்றும் தவறுகள் காரணமாக இருக்கலாம். எனவே, தம்வசப்படுத்துவதற்கான இடரைக் குறைப்பதற்கு சரியாக ஒழுங்கமைக்கப்பட்டு முகாமிக்கப்பட்ட சாதனங்களும் வலிமையான தகவல் தொழினுட்பக் கொள்கைகளும் தேவையாகும்.

# மின்சாரத் தொழில்துறையின் நிலைபேற்றுத் தன்மைக்கான எமது அணுகுமுறை

மின்சாரத் துறையின் நிலைபேற்றுத் தன்மைக்கான இ.மி.ச. இன் அணுகுமுறையானது நுகர்வோருக்கு நம்பகமானதும் மலிவான விலையிலும் மின்சாரத்தை வழங்குகின்ற இலக்கினை மையப்படுத்தியதாக உள்ள அதே வேளை மின்சாரப் பிறப்பாக்கம், பரிமாற்றம் மற்றும் விநியோகம் ஆகியவற்றால் ஏற்படும் சூழல் தாக்கங்களைக் குறைப்பதுமாகும். தொழில்துறையானது நீண்ட காலத்திற்கு நிலைபேறானதாக இருப்பதை உறுதி செய்வதற்காக அணுகுமுறையானது பொருளாதாரச் சமநிலை, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கரிசினைகளுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது.




## பொருளாதார நிலைபேற்றுத்தன்மை

பொருளாதார நிலைபேற்றுத்தன்மை என்பது மின்சாரத் தொழில்துறையில் ஒரு முக்கிய அம்சமாகக் காணப்படுகிறது. ஏனெனில், இது மின்சார சேவைகளை நீண்ட காலத்திற்கு நிதிசார் ரீதியாக நிலைபேறான வகையில் வழங்குவதை உறுதி செய்கிறது. தொழில்துறையில் பொருளாதார நிலைபேற்றுத்தன்மையை ஊக்குவிப்பதற்கான ஒரு உத்தி என்பது செலவைப் பிரதிபலிக்கின்ற விதிப்பனவுகளை நடைமுறைப்படுத்துவதாகும். நுகர்வோருக்கு விதிக்கப்படுகின்ற விலைகள் மின்சார சேவைகளை வழங்குவதற்கான செலவுகளை துல்லியமாகப் பிரதிபலிக்கும் என்பதால், மின்சாரத் தொழில்துறை நிதிசார் ரீதியாக ஒப்பேறக்கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு கடந்த 14 ஆண்டுகளுக்கும் மேலாக செலவைப் பிரதிபலிக்கும் விதிப்பனவொன்றை இ.மி.ச. கோரியிருந்தது. செலவைப் பிரதிபலிக்கின்ற விதிப்பனவானது இந்தத் துறை முதலீட்டை ஈர்ப்பதற்கும் அதன் உட்கட்டமைப்பை நீண்ட காலத்திற்குப் பேணுவதற்கும் உதவுவதுடன் சக்திச் சேமிப்பை ஊக்கப்படுத்துவதற்கும் சக்திப் பயன்பாட்டைக் குறைப்பதற்கும் ஒரு பயனுள்ள கருவியாக இருக்கின்றது. மேலும் அது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் மிகவும் நிலையானதும் நம்பகமானதுமான சக்தி வழங்கலை உறுதிப்படுத்துவதற்கும் உதவுகிறது.

மறுபுறத்தில், முறைமைகள் நம்பகமானதாகவும் வினைத்திறனுடையதாகவும் நிகழ்நிலைப்படுத்தப் பட்டதாகவும் இருப்பதை உறுதி செய்வதற்கு மின்வலு நிறுவன உட்கட்டமைப்பில் முதலீடுகளைச் செய்தல் வேண்டும். இ.மி.ச. இன் நீண்ட கால மின் பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம் (LTGEP) பொருளாதாரக் கோட்பாடுகள் மற்றும் இலங்கையில் கணிசமான அளவு உட்கட்டமைப்பு முதலீடுகளைக் கணக்கிலெடுத்து தயாரிக்கப்படுகிறது. நீண்ட கால மின் பரிமாற்றத் திட்டம் மற்றும் பிரிவுகளின் மின் விநியோகத் திட்டங்கள் என்பன அவ்வேளையில் மின் பிறப்பாக்கல் நிலையங்களை சுமை மையங்களுடன் உகந்ததாக இணைக்கும்.

மேலும், அவர்கள் சம்பாதித்ததைவிட அதிகமாக செலவழிக்கவில்லை என்பதை உறுதி செய்வதற்கு செயற்பாடு சார்ந்த செலவுகளை கவனமாக முகாமை செய்வது முக்கியமானதாகும். இதற்காக செயல்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவுகளையும் உட்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் மீதான மூலதனச் செலவுகளையும் பயனுறுதிமிக்க வகையில் முகாமை செய்தல் வேண்டும். அதற்கிணங்க, இ.மி.ச. ஆனது நிறுவனம் மற்றும் நாட்டின் பொருளாதார நிலைபேற்றுத்தன்மையைப் பாதுகாக்க நீர்பாசனத் தேவைகளின் முறையான தொழிற்பாட்டை தொந்தரவு செய்யாத வகையில் உகந்த மின் பிறப்பாக்க அனுப்பீட்டையும் மின் பிறப்பாக்கல் கலவையின் பொருத்தமான சமநிலையையும் உறுதி செய்கிறது. இதன் விளைவாக, இ.மி.ச. யினால் 2022 ஆம் ஆண்டில் அனுபவித்த உயர் பணவீக்கத்தின் கீழ், ரூபா 33.65 / kWh என்ற வீதத்தில் சராசரி உற்பத்திக் கிரயத்தைப் பேண முடிந்தது. எவ்வாறாயினும், 2022 ஆகஸ்ட்டில் செய்யப்பட்ட விதிப்பனவுத் திருத்தத்தின் பின்னரும்கூட நிதிசார் நிலைபேற்றுத்தன்மையை பாதகமான முறையில் பாதித்த செலவைப் பிரதிபலிக்கும் விதிப்பனவு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இ.மி.ச. இன்னும் ரூபா 21.24 / kWh என்ற குறைந்த வீதத்திலேயே மின்சாரத்தை விற்பனை செய்கிறது. ஒட்டுமொத்தத்தில், இலங்கையிலுள்ள மிகப்பெரிய மின்சார நிறுவனம் என்ற வகையில் இ.மி.ச. ஆனது நீண்ட கால முன்னோக்கு, செயலூக்கமான முகாமைத்துவம் மற்றும் தொடர்ச்சியான மேம்பாடு ஆகியவற்றின் ஊடாக பொருளாதார நிலைபேற்றுத்தன்மையை அடைவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு உறுதிபூண்டுள்ளது. எங்களது செலவுகள் மற்றும் வருமானத்தைச் சமநிலைப்படுத்துவதன் மூலமும் எங்கள் செயல்பாடுகளை உகந்ததாக்குவதன் மூலமும் மாறிவரும் சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப மாறுவதன் மூலமும் நம்பகமான மற்றும் மதிப்புமிக்க சேவை வழங்குநராக இருக்க முடியுமென நாங்கள் நம்புகின்றோம்.

# மின்சாரத் தொழில்துறையின் நிலைபேற்றுத் தன்மைக்கான எமது அணுகுமுறை (தொடர்ச்சி)

## சமூக நிலைபேற்றுத்தன்மை

மின்சாரத் தொழில்துறையின் முன்னோடி என்ற வகையில், இ.மி.ச. அதன் நுகர்வோர் மற்றும் நாட்டதாரர்களின் நல்வாழ்வுக்கு உதவும் அதே வேளை சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற சேவைகளை வழங்குவதற்கு உறுதிபூண்டுள்ளது. அதற்கிணங்க, இ.மி.ச. சில ஆண்டுகளுக்கு முன்பே 100% மின்மயமாக்கலை அடைந்துள்ளதுடன் சமூக நிலைபேற்றுத்தன்மைக்கான அடித்தளத்தையும் அமைத்துள்ளது. இந்தச் சாதனையானது சமூகத்தின் வாழ்க்கை முறைகள் வியத்தகு முறையில் மேம்பட்டதையும் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள் மக்களுக்குத் திறந்துவிடப்பட்டுள்ளதையும் உறுதி செய்கிறது.

மேற்கூறிய பிரதான சாதனைகளைத் தவிர, நிறுவனம் தற்போது தனது வாடிக்கையாளர்களுக்கு தரமானதும் நம்பகமானதுமான சேவையை வழங்குவதிலும் அதிநவீன தொழினுட்பத்தின் ஊடாக செயற்பாட்டுச் சிறப்பினை அடைந்து கொள்வதிலும் கவனம் செலுத்துகிறது. இந்த இலக்கிற்கு இணையாக இ.மி.ச. ஆனது மேற்கூரை சூரிய சக்தி PV பிரயோகச் செயன்முறையை சீரமைப்பதற்காக விருது வென்ற CEBAssist என்ற செயலியின் கீழ் மேற்கூரை சூரிய சக்தி PV பிரயோக செயன்முறைப்படுத்தல் தொகுதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலும், நிறுவனமானது ஊழியர் நலனை மேம்படுத்தவும் நேர்மறையான பணியிட கலாசாரத்தை வளர்க்கவும் சமூகப் பொறுப்பு மற்றும் நிலைபேற்றுத்தன்மைக்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்புக்கு ஆதரவளிக்கவும் பயிற்சிச் செயலமர்வுகள் ஊடாக தனது ஊழியர்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. அதன்படி 4,959 ஊழியர்களுக்கு 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பயிற்சி அளிக்கப்பட்டது.

## சுற்றுச்சூழல் நிலைபேற்றுத்தன்மை

பசுமை சக்தியின் ஒருங்கிணைப்பை மேம்படுத்தி, அனல் மின் பிறப்பாக்கத்தின் பாதகமான சுற்றுச்சூழல் விளைவுகளைக் குறைப்பதன் மூலம் சுற்றுச்சூழல் நிலைபேற்றுத்தன்மையை மேம்படுத்துவதற்கும் சுற்றுச்சூழல் தாக்கங்களைக் குறைப்பதற்கும் இ.மி.ச. உறுதிபூண்டுள்ளது. அதற்கிணங்க, நிறுவனமானது தனது மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கான முயற்சியை தொடர்ந்தும் முன்னெடுப்பதுடன் ஆண்டின் இறுதியில் வருடாந்த மின் பிறப்பாக்கத்திற்கான மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியின் பங்களிப்பு 52% ஆகக் காணப்பட்டது. இதில், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் வெற்றிகரமாக இயங்கத் தொடங்கிய பதினெட்டாவது நீர் மின்வலு நிலையமான விரிநிலங்கள் நீர் மின் நிலையத்தின் சக்திப் பங்களிப்பும் உள்ளடங்குகிறது. இந்த நீர் மின்வலுச் செயற்றிட்டமானது மீள்புதுப்பிக்கத்தக்க சக்தித் துறையை மேம்படுத்தி, எங்கள் மின்வலுப் பிறப்பாக்கக் கொள்ளளவை அதிகரித்தது மட்டுமன்றி, நிலைபேறான அபிவிருத்தியின் எங்கள் பிரதான விழுமியத்தை மேம்படுத்தி பொறுப்புமிக்க நிறுவன குடிமக்கள் என்ற எங்கள் நிலையை வலுப்படுத்தியது.

மேலும், பசுமை சக்தி ஒருங்கிணைப்பையும் சக்தி சேமிப்பையும் ஊக்குவிப்பதற்காக பல்வேறு ஊடகங்கள் ஊடாக பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

மறுபுறத்தில், கீழே விபரிக்கப்படுவதைப் போன்று புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான மின் பிறப்பாக்கத்தால் ஏற்படக்கூடிய பாதகமான சுற்றுச்சூழல் தாக்கங்களை முகாமை செய்வதற்கு இ.மி.ச. அதன் முயற்சிகளை தொடர்ந்தும் எடுத்திருந்தது.

## தூசு தணிப்பும் கண்காணிப்பும்

தூசு என வரையறுக்கப்படுகின்ற நுண்ணிய நிலக்கரித் துகள்கள் தென்மேல் பருவகாலத்தில் புழுதியாக லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் மற்றும் அதை சுற்றி மேலெழும்புவது பாரிய பிரச்சினையாக இருக்கிறது. நீரைப் பயன்படுத்தி தூசியை அடக்குதல் மற்றும் காற்றைக் கட்டுப்படுத்தல் என்பன LVPP இற்கு உள்ள இரண்டு சாத்தியமான தீர்வுகளாக அடையாளங் காணப்பட்டுள்ளன. அதற்கிணங்க, உலர் நிலக்கரி உறைவிப்பு தெளிப்பான் முறைமைகள் என்று அழைக்கப்படும் நீர் தெளிக்கும் முறைமைகள், உலர் நிலக்கரி தெளிப்பான் முறைமைகள், நுண் தெளிப்பான் மற்றும் பண்படுத்திகளுடன் இணைக்கப்பட்டுள்ள படம் S1 தூசு ஊதுலை செயற்பாடுகள் மற்றும் நிலக்கரிக் குவியலின் ஈரமான மேற்பரப்புக்கு தெளிப்பு வவுசர்கள் மற்றும் நகர்த்தக்கூடிய தெளிப்பான் முறைமைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி அணுகல் பாதைகளை ஈரமாக்குதல் என்பன தூசினைக் கட்டுப்படுத்துவதற்காக நிலக்கரி முற்றத்தில் தாபிக்கப்பட்டுள்ளன.



*உரு S1: நிலக்கரி முற்றத்தில் தூசு அடக்கும் நடவடிக்கை*

மேலும், LVPP ஆனது நிலக்கரி முற்றத்தின் மேற்குப்புற எல்லைப் பகுதியில் 460 மீற்றர் உம் நிலக்கரி முற்றத்தின் தெற்கு மற்றும் கிழக்கு எல்லைகளை உள்ளடக்கியதாக 1183 மீற்றர் உம் கொண்ட காற்றுத் தடுப்பான்களை வைத்திருக்கிறது. 2022 ஆம் ஆண்டில் எங்களது நிலக்கரி முற்றத்தை "ஈரமான" நிலையில் பராமரித்து, குடியிருப்பாளர்களுக்கு தூசு செல்வதைத் தடுக்க முடிந்தமையானது அதனை ஒரு வெற்றிகரமான ஆண்டாக ஆக்கியிருந்தது.



*உரு S2: காற்றுத் தடுப்பான்கள்*

தொடர்ச்சியான ஈரமாக்கும் செயன்முறை, சமப்படுத்தல் மற்றும் சுருக்குதல், மணலிலிருந்து மூடுதல், தாவர வளர்ச்சியை எளிதாக்குதல் ஆகியவை சாம்பல் முற்றத்தில் தூசு உருவாவதை கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட பிரதான நடைமுறைகளாகும். பறக்கும் சாம்பலை போட்டி போட்டு விற்பனை செய்தல் மற்றும் கீழ்ப்பகுதி சாம்பலை பல்வேறு தயாரிப்புகளுக்குமான மூலப் பொருளாகப் பயன்படுத்துதல், சாம்பல் முற்றங்களில் கொட்டப்பட்ட சாம்பலை சீமெந்துக்கல் உற்பத்திக்குப் பயன்படுத்துதல் என்பன சாம்பல் திறந்த வெளியில் கொட்டப்படுவதை கட்டுப்படுத்தும்.



உரு S3: சாம்பலிலிருந்து தயாரிக்கப்பட்ட சீமெந்துக் கற்கள்

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான பறக்கும் சாம்பல் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் பெறுபேறு கீழேயுள்ள வரைபில் சித்தரிக்கப்பட்டுள்ளது.




உரு S4: பறக்கும் சாம்பல் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

மேலும், சுற்றியுள்ள கிராமங்களில் தொடர்ச்சியான தூசு கண்காணிப்புப் பணிகள் 2022 ஆம் ஆண்டின் தென்மேல் பருவ காலப் பகுதி முழுவதும் முன்னெடுக்கப்பட்டது.

**நீர் சுத்திகரிப்பும் கண்காணிப்பும்**

பிந்தைய சுத்திகரிப்பு மற்றும் மறுபயன்பாடு என்பன கழிவு நீர் ஓடைகளுக்கான நவீன போக்குகளாகும். தொழிற்சாலைக் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலைகள், சாக்கடை நீர் சுத்திகரிப்பு ஆலைகள், நிலக்கரி மற்றும் சாம்பல் நீர் சுத்திகரிப்பு ஆலைகள் ஆகியவை அவற்றின் வகிபாகத்தை சரியான முறையில் ஆற்றியிருந்ததுடன் தூசியை அடக்கும் நடவடிக்கைகளுக்காக மீண்டும் பயன்படுத்தக்கூடிய சுத்திகரிக்கப்பட்ட நீர் வெளியீட்டை உருவாக்குகின்றன. தொழில்துறை தொழினுட்ப நிறுவகத்தின் (ITI) ஊடாக நீரின் தரத்தைக் கண்காணித்தல் மற்றும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு அலகின் (EMU) ஊடாக நீரின் தரத்தை அளவீடு செய்தல் என்பன ஆண்டு நெடுகிலும் தொடர்ந்தது.

மேலும், நிலத்தடி நீர் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டமானது LVPP இனால் காலாண்டிற்கு ஒருமுறை (WRB) ஊடாக நடத்தப்படுகிறது. இது நிலைபேறான பயன்பாட்டை உறுதி செய்யவும் வளத்தின் நீண்ட ஆயுளைப் பாதுகாக்கவும் மின்வலு வளாகங்களிலும் அதனைச் சுற்றியுள்ள நிலத்தடி நீரின் நிகழ் நேர நிலைமையைக் கண்காணிக்கவும் உதவுகிறது.



உரு S5: ITI மாதிரியெடுப்பு

நீரின் தரக் கண்காணிப்பைத் தவிர, LVPP ஆனது WRB ஊடாக ஒவ்வொரு கிணற்றிற்கும் உந்துதல் சோதனையை (pumping test) செய்துள்ளது. ஐம்பத்தியொரு ஆழமற்ற குழாய் கிணறுகளை பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதுடன், உந்துதல் முறைகள், சுரண்டல் விகிதங்கள் மற்றும் நீர் பம்புகளின் வகைகள் என்பன பற்றி LVPP இற்கு தினசரி பயிற்சி அளிக்கப்பட்டன.



படம் S6: நிலத்தடி நீர் மாதிரி

2021 ஆம் ஆண்டிற்கான நிலத்தடி நீர் பற்றிய அறிக்கை 2022 இல் வெளியிடப்பட்டது. பார உலோகங்கள் (As, Cd, Hg, Cr, Pb, and Ba) மற்றும் கடல் நீர் ஊடுருவல் தொடர்பான நிலத்தடி நீர் அட்டவணையில் LVPP இனால் எந்தப் பாதிப்பும் இல்லை என்பதை இந்த அறிக்கை வெளிப்படுத்தியது. மேலும், 2019 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட உந்துதல் முறையை செயற்படுத்தியதன் காரணமாக LVPP இல் நீரின் தரம் மேம்படுத்தப்பட்டது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

#### கடல்சார் சுற்றுச்சூழல் கண்காணிப்பு

குளிரூட்டும் நீர் வெளியேற்றம் மற்றும் கடல்சார் சுற்றுச்சூழல் கண்காணிப்பு என்பன இலங்கையில் மிகவும் புகழ்பெற்ற அரச நிறுவனங்களான ITI, NARA, MEPA ஆகிய நிறுவனங்கள் ஊடாக நடத்தப்பட்டன. இந்த நிறுவனங்கள் கடல்சார் சுற்றுச்சூழல் மீது மின்வலு ஆலையின் தாக்கத்தை மதிப்பிடுவதற்காக பல ஆய்வுகளையும் ஆராய்ச்சிகளையும் முன்னெடுத்திருந்தன. இந்த நிறுவனங்களின் நிபுணத்துவமும் அறிவும் எப்போதும் கடல்சார் சூழலில் உயிர்வாழும் மற்றும் உயிரற்ற கூறுகளைப் பாதுகாப்பதற்கு உதவுகின்றன. மின்வலு ஆலையின் வெளிப்பாய்வை அண்டியுள்ள பகுதியில் மீன்களின் பல்வகைத்தன்மை உயர்வாக இருந்ததுடன் இது வர்த்தமானியில் வெளியிடப்படாத பாதுகாக்கப்பட்ட கடல் பகுதியாக செயல்படுவதுடன் வளங்களின் மேம்பாட்டை சாதகமான வகையில் பாதிக்கிறது.

#### சுற்றுப்புறக் காற்றின் தரமும் புகைப்போக்கி உமிழ்வின் கண்காணிப்பும்

சுற்றுப்புறக் காற்றின் தரம், புகைப்போக்கி உமிழ்வுகள் மற்றும் தப்பிக்கும் தூசு ஆகியவற்றைக் கண்காணிப்பது வளிமண்டல நிலைமைகளுடன் தொடர்புடைய விளைவுகளாகும். மேலும் சம்பந்தப்பட்ட வளிமண்டல அளவுருக்களை அவதானிப்பது காலாண்டு மற்றும் பருவகால (வானிலைசார்ந்த பருவமழைக் காலங்கள்) அடிப்படையில் ITI ஊடாக மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறிய அவதானிப்புகளின் முடிவுகளாக அனைத்து சுற்றுப்புற காற்றின் தர அளவுருக்களும் 2022 ஆம் ஆண்டில் அதிகபட்ச அனுமதிக்கத்தக்க மட்டங்களை விடவும் குறைவாக இருந்தமை வெளிப்பட்டது.

மேலதிகமாக, எடுத்துச் செல்லக்கூடிய புகைக்குழாய் எரிவாயு பகுப்பாய்வு கருவியைப் பயன்படுத்தி வாராந்த உள்ளகக் கண்காணிப்பும் ஒவ்வொரு அலகினதும் தொடர்ச்சியான உமிழ்வுக் கண்காணிப்பு முறைமைகள் (CEMS) ஊடான தொடர்ச்சியான கண்காணிப்பும் ஆண்டு நெடுகிலும் புகைப்போக்கி உமிழ்வுகளைக் கண்காணிப்பதற்காக நடத்தப்பட்டன. அலகு 01 இன் CEMS ஆனது சமீபத்திய தொழினுட்பத்தை உள்ளடக்கிய ஒரு பிரித்தெடுத்தல் வகை CEMS இனால் அண்மையில் மாற்றீடு செய்யப்பட்டதுடன் இதில் தொலைநிலை கண்காணிப்பு வசதியும் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜய ஸ்ரீ மகாபோதி வளாகத்தைச் சுற்றி 2018 ஆம் ஆண்டில் தென்மேற்கு பருவமழை காலத்தில் சுற்றுப்புறக் காற்றின் தரக் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது. பத்து சோதனை அறிக்கைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளதுடன், மேற்கூறிய கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்ட முடிவுகள், அனைத்து கண்காணிப்பு அளவுருக்களும் அவற்றின் அதிகபட்ச அனுமதிக்கத்தக்க மட்டங்களை விடவும் குறைவாகவே இருந்ததை வெளிப்படுத்தின. அட்டவணை S1 அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட அளவைக் காட்டுகிறது. மற்றும் படம் 57 ஜெய சேர் மஹா போதி வளாகத்திலிருந்து எடுக்கப்பட்ட காற்றின் தர அளவீடுகளைக் காட்டுகிறது.

அட்டவணை S1: அதிகபட்ச அனுமதிக்கத்தக்க மட்டங்கள்

| அளவு | அலகு | அதிகபட்ச அனுமதிக்கத்தக்க மட்டம் |
|---|---|---|
| $PM_{10}$ | $\mu g/m^3$ | 100 |
| $PM_{2.5}$ | $\mu g/m^3$ | 50 |
| $SO_2$ | ppb | 30 |
| $NO_2$ | ppb | 50 |
| CO | ppb | 26,000 |
| $O_3$ | ppb | 100 |




*உரு S7: ஜய ஸ்ரீ மகா போதி வளாகத்தில் காற்றின் தர அளவீடு*

**சத்தம் மற்றும் அதிர்வுகளைக் கண்காணித்தல்**

LVPP ஆலையின் சத்தம் மற்றும் அதிர்வு மட்டங்கள் அனுமதிக்கத்தக்க வரம்பினுள் இருப்பதை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் ஒரு முறை சத்தத்தின் மட்டத்தைக் கண்காணிப்பதும் ஆண்டிற்கு ஒரு முறை அதிர்வு மட்டத்தைக் கண்காணிப்பதும் LVPP இன் ஒரு நடைமுறையாக இருக்கிறது. இது தொடர்பில் 2022 ஆம் ஆண்டிற்கான பெறுபேறுகள், சத்தம் மற்றும் அதிர்வு மட்டங்கள் இரண்டும் மின்வலு ஆலை இயக்கத்தின்போது அனுமதிக்கத்தக்க வரம்பினுள் காணப்படுவதை வெளிப்படுத்தின.

முடிவாக, நிலைபேற்றுத்தன்மையின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய மூன்று தூண்களிலும் நாங்கள் வகிக்கின்ற முக்கிய வகிபாகத்தை நாங்கள் ஏற்பிசைவு செய்கின்றோம். பச்சை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல், காற்று மற்றும் நீர் மாசடைதலைக் குறைத்தல், பல்லுயிர்த்தன்மையைப் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கான எமது முயற்சிகள் ஊடாக தூய்மையான, ஆரோக்கியமான, அதிக நிலைபேறான எதிர்காலத்தை நோக்கி நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். எங்கள் தொடர்ச்சியான முயற்சிகள் ஊடாகவும் புத்தாக்கம் மற்றும் எமது நாட்டதாரர்களுடனான ஒத்துழைப்பு ஆகியவற்றின் ஊடாகவும் எங்கள் நிலைபேற்றுத்தன்மைச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம்.

# நிறுவன சமூகப் பொறுப்புடைமை அறிக்கை

நாட்டின் மின்சாரப் பயன்பாட்டு நிறுவனம் என்ற வகையில், சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்தின்பாலான எங்கள் பொறுப்புடைமையை நாங்கள் ஏற்பிசைவு செய்கின்றோம். எங்கள் நுகர்வோருக்கு நம்பகமானதும் மலிவான விலையிலும் சக்தியை வழங்குகின்ற அதே வேளை பொறுப்புணர்வுடனும் நிலைபேற்றுத் தன்மையுடனும் எங்கள் வணிகத்தை நடத்துவதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். இந்த அறிக்கையானது எங்கள் நிறுவன சமூகப் பொறுப்புடைமை (CSR) முயற்சிகளையும் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்தின் மீதான அவற்றின் தாக்கங்களையும் கொண்ட ஒரு பொதுவான பார்வையைத் தருகிறது.

## சுற்றுச்சூழல் சார்ந்த முயற்சிகள்

மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களைப் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்த நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 இல், மின்தொகுப்பிற்கு இணைக்கப்பட்ட மற்றும் மேற்கூரை சூரிய சக்தி மூலமான மின் பிறப்பாக்கம் 32% அதிகரிப்பை எட்டியுள்ளது. இந்த அதிகரிப்பானது பிரதானமாக மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களை உள்ளீர்ப்பதற்கான எமது அர்ப்பணிப்பின் காரணமாக ஏற்பட்டதாகும்..




*படம் CSR1: மின்சார உற்பத்திக்கு சூரிய சக்தியின் பங்களிப்பு*

இதற்கு மேலதிகமாக, உச்சப் பாவனைக்கான தேவை காணப்படும் நேரத்தில் புதைபடிவ எரிபொருள் பாவனையைக் குறைப்பதன் மூலம் பச்சை இல்ல வாயு வெளியீட்டை குறைப்பதற்காக கட்டுநாயக்கா ஏற்றுமதி செயன்முறை வலயத்தில் தேவையைப் பூர்த்தி செய்யும் முன்னோடிச் செயற்றிட்டமொன்றை அபிவிருத்தி செய்வதை நாங்கள் ஆரம்பித்துள்ளோம்.

மேலும், லக்விஜய மின்வலு ஆலையும் கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரசபையும் (MEPA) இணைந்து தலவில பவளப் பாறைகளை மீளவும் வைப்பதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்துள்ளன. அதற்கிணங்க, 40 செயற்கையான பாறைப் பந்துகள் 2022 ஆம் ஆண்டில் கடினமான பருவகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தலவில பவளப் பாறைக்கு அருகில் வைக்கப்பட்டன. இந்த கடினமான பருவகாலத்தின் முடிவில், உயிர்ப்பான பவளத் துண்டுகள் இந்தப் பவளப் பாறை பந்துகளில் நாட்டப்படும் என்பதுடன் கடல் பரப்புக்கு அருகில் மீன்பிடி வளங்கள் மற்றும் உயிர் பல்வகைமையை விருத்தி செய்வதற்காக தலவில பாறைக்கருகில் செயற்கையான பவளப் பாறை உருவாக்கப்படும். இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கான மொத்த உத்தேசச் செலவு ரூபா 2.6 மில்லியன் ஆகும்..



*படம் CSR2: செயற்கை பாறை பந்துகள்*



*படம் CSR3: செயற்கை பாறை பந்துகளை நிலை நிறுத்துதல்*

மின் பிறப்பாக்கம், மின் பரிமாற்றம் மற்றும் மின் விநியோகச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது மரத்தின் ஒரு பகுதியை தறிப்பது முதல் காடழிப்பு வரை சுற்றுச் சூழல் விளைவுகள் மாறுபடலாம். ஒரு பொறுப்பான அரச நிறுவனம் என்ற வகையில், அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் தொடக்கத்திலிருந்தே கவனமாக திட்டமிடுவதன் மூலம் இந்தப் பாதிப்புகளைக் குறைக்க இ.மி.ச. முயற்சிக்கிறது. வன வளத் திணைக்களத்துடன் இணைந்து காடழிப்பை ஈடுசெய்யும் வகையிலான நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, இ.மி.ச. அதன் நீர்மின் தேக்கங்கள் உள்ள நீர்நிலைப் பகுதிகளில் 32,500 மரக்கன்றுகளை நாட்டியுள்ளது. இந்த உன்னதமான சமூக சேவையின் தொடர்ச்சியாக, சுற்றுச்சூழலை தூய்மையாகவும் அழகாகவும் வைத்திருப்பதை உறுதிப்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டில் 2500 இற்கும் மேற்பட்ட தாவரங்கள் நடப்பட்டன.

## சமூகம் சார்ந்த முயற்சிகள்

நாங்கள் செயல்படும் சமூகங்களுடன் சேர்ந்தியங்குவதன் முக்கியத்துவத்தை நாங்கள் அங்கீகரிக்கின்றோம். எங்கள் சமூக முயற்சிகளில் கல்வி, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்தல் அத்துடன் உள்ளூர் சமூகங்களுக்கு ஆதரவாக இருத்தல் போன்றவற்றில் கவனம் செலுத்துகின்றோம்.

2022 ஆம் ஆண்டில் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக பின்வரும் சமூக அபிவிருத்திச் செயற்றிட்டங்களை பூர்த்தி செய்துள்ளோம்.

சுற்றுச்சூழல் மற்றும் சமூக நன்மைகளைக் கொண்டிருக்கக்கூடியவாறு பயணிகளுக்கு சௌகரியத்தை ஏற்படுத்துவதன் மூலம் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்துவதற்காக ரூபா 4.3 மில்லியன் மொத்தச் செலவில் 10 பேருந்து நிழற்குடைகள் பாலாவி - கல்பிட்டி மற்றும் பாலாவி - புத்தளம் பிரதான பாதைகளுக்கருகில் அமைக்கப்பட்டன.



*படம் CSR4: பாலாவி - கல்பிட்டி வீதியில் பேருந்து நிலையங்கள்*

தரமான கல்விக்கான அணுகலை உறுதி செய்வதற்கும் சமூக சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கும் அத்துடன் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களது நல்வாழ்வுக்காகவுமென இலந்தடிய அரசினர் சிங்களப் பாடசாலையில் 25” x 80” அளவு கொண்ட பாடசாலைக் கட்டடத்தின் மேல் தளத்தின் நிருமாணப் பணிகள் ரூபா 9.2 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



*படம் CSR5: இலந்தடியா அரசாங்க சிங்களப் பாடசாலையில் பாடசாலை கட்டிடம் கட்டுதல்*

ஆரோக்கியமான மற்றும் துடிப்பான சமூதாயமொன்றுக்கு இன்றியமையாத சமூகத்தின் சொந்த உணர்வையும் சமூகத் தொடர்பையும் உயர்த்துவதற்காக மாம்புரிய மற்றும் நாரக்கல்லிய ஆகிய இடங்களில் இரண்டு சமுதாய மண்டபங்களின் நிருமாணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிருமாணத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 8.4 மில்லியன் ஆகும்.



*படம் CSR6: சமுதாய கூடம் கட்டுதல்*

செயற்பாட்டு மீளாய்வு

# நிதிப் பிரிவு



# நிதிப் பிரிவு

நிதிப் பிரிவானது நீண்ட கால நிலைபேற்றுத் தன்மைக்கும் வணிக நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கும் வசதியேற்படுத்துவதற்காக இ.மி.ச. இல் பிரதான வகிபாகமொன்றை ஆற்றுகிறது. நிதிப் பிரிவின் முதன்மையான நோக்கமானது சிறந்த தேர்வு நிபந்தனையை அடிப்படையாகக் கொண்டு, பயனுறுதிமிக்க நிதிசார் தீர்மானங்களை எடுப்பதன் மூலம் இலங்கை மின்சார சபையின் தொழிற்பாடுகளில் கிரய வினைத்திறனை அடைந்து கொள்வதாகும். நிதிப் பிரிவின் பிற நோக்கங்களும் தொழிற்பாடுகளுமாவன முகாமையின் தீர்மானமெடுத்தலுக்காக துல்லியமான நிதித் தகவல்களை வழங்குவது, கிடைக்கக்கூடிய நிதிகளை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துவதற்கான காசுப் பாய்வு மற்றும் நிதி முகாமைத்துவ உபாயங்களை வகுப்பது, பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகளில் உள்ள இடைவெளிகளை இனங்காண்பதற்கு நிதிச் செயலாற்றுகை தொடர்பில் அறிக்கையிடுவது, நிதிசார் இடர்களைத் தணிப்பதற்கு உபாயங்களை வகுப்பது, போதுமானளவு நிதிக் கட்டுப்பாடுகள் உள்ளன என்பதை உறுதிப்படுத்துவது, குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை உறுதி செய்வது, நிதி ரீதியாக சாத்தியமான மூலங்களிலிருந்து நிதிகளைப் பெறுவது, செயற்றிட்டங்களின் நிதிசார் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு செயற்றிட்டத்தின் நிதி தொடர்பான நடவடிக்கைகளை ஆற்றுவது என்பனவாகும்.

### மீளாய்வு ஆண்டு

2022 ஆம் ஆண்டில் ஒவ்வொரு தொழிற்பாட்டின் செயற்பாடுகளையும் மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முக்கியமான முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகளின் சுருக்கமான விளக்கம் கீழே தரப்பட்டுள்ளன.

வணிகச் செயற்பாட்டிற்குப் போதுமான திரவத்தன்மை மட்டங்களை அடைவதில் நிதிப் பிரிவு தொடர்ந்தும் சவால்களுக்கு உள்ளாகிறது. உள்நாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்தாமை மற்றும் உலகளாவிய நெருக்கடியால் கடினமான நிலைமை ஏற்பட்ட நேரத்தில், ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான போரின் எதிரொலியாக ஏற்பட்ட சந்தைகளின் உறுதியற்ற தன்மையானது வழங்கல் சங்கிலியில் மிகப் பெரியளவிலான குறுக்கீடுகளை உருவாக்கி மந்த நிலையை நோக்கி நகர்த்தியிருந்தது.

மேற்கூறிய சூழலில், இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியின் விலைகள் வானத்தை எட்டின. அந்நியச் செலாவணிக் கையிருப்பு குறைவடைந்ததன் காரணமாக, நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கான அந்நியச் செலாவணியை உள்நாட்டு வங்கி வலையமைப்புகளில் தேடிக் கண்டுபிடிப்பது கடினமாக இருந்தது. மேற்கூறியவற்றின் விளைவாக, வழங்குநர்களின் ஒப்பந்தத்தை கடப்பாடாக்கும் சவால் நிதிப் பிரிவுக்கு முன்வைக்கப்பட்டது. ஒப்பந்தக் கடப்பாடுகளைத் தீர்ப்பதில் தாமதங்கள் காணப்பட்ட போதிலும், தேவையான அந்நியச் செலாவணியை வழங்கிய இலங்கை மத்திய வங்கியின் தலையீட்டினால் நிதிப் பிரிவுக்கு நிலைமையை முகாமை செய்ய முடிந்திருந்தது.

இதற்கு மேலதிகமாக, அதிகரித்த நிலக்கரி விலைகள், எரிபொருள் எண்ணெய் விலைகளில் அடிக்கடி ஏற்படும் மேல்நோக்கிய திருத்தங்கள், வெளிநாட்டு நாணயமாற்றின் அதிகரித்த போக்குகள் ஆகியவற்றுக்கேற்ப மின் பிறப்பாக்கல் கிரயங்களும் அதிகரித்தன. அதே சமயத்தில், ஆண்டின் 3 ஆவது காலாண்டு வரை விதிப்பனவுகள் மாறாது காணப்பட்டமையின் விளைவாக தினசரி மின் பிறப்பாக்கத்திற்குத் தேவையான எரிபொருள் மற்றும் உபகரணங்களை வாங்குவதற்கு பெரும் பணப் பற்றாக்குறை ஏற்பட்டது. இது கட்டாயமாக நீடித்த மணித்தியால மின் வெட்டிற்கு வழிவகுத்தது.

இந்தச் சூழ்நிலையில் நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி வசதிகளை மேம்படுத்தியதன் மூலமும் வங்கிகளிலிருந்தான குறுங்கால மற்றும் நீண்டகால கடன் பெறுகைகளை மறுசீரமைத்ததன் மூலமும் நிதியிடப்பட்டதன் ஊடாக நிதிப் பிரிவானது காசுப் பாய்வு இடைவெளியை குறுக்கியது. மேலும், தேசிய பொருளாதாரத்தை குறைந்தளவு நேர மின்வெட்டுடன் நகர்த்துகின்ற ஆர்வத்துடன் வழங்குநர்களுக்கான கொடுப்பனவு காலந்தாழ்த்தப்பட்டது.

எவ்வாறாயினும், அரச பிணையங்களின் வீதங்கள் மிக உயர்வாக இருந்த காரணத்தால் நிதிச் செலவுகள் வரலாற்றிலேயே மிக அதிகமாக இருந்ததால் போட்டி வீதங்களில் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நிதிப் பிரிவானது நிதி நிறுவனங்களுடன் அயராது பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டியிருந்தது. ஆண்டின் பிற்பகுதியில் நீடித்த நிலுவையிலுள்ள விதிப்பனவுத் திருத்தத்தின் நடைமுறைப்படுத்தலுடன் காசுப் பாய்வுக்கான ஒரு நிவாரணம் வழங்கப்பட்டது. இது மின்சாரச் செலவை ஈடுகட்ட இன்னும் போதாமலேயே இருக்கிறது. எனவே, தொடர்ச்சியான வணிகச் செயற்பாட்டை உறுதி செய்வதற்காக காசுப் பாய்வு இடைவெளியை குறைப்பதற்கான வழிகள் மற்றும் நடவடிக்கைகளை ஆராய நிதிப் பிரிவுக்கு தொடர்ச்சியான அழுத்தம் காணப்பட்டது.

நிதியிடல் முகவராண்மை, செயற்றிட்ட முகாமைத்துவ அலகுகள் (PMUs), வெளி வளங்கள் திணைக்களம் (ERD) மற்றும் பொதுத் திறைசேரி ஆகியவற்றுக்கிடையே எழுகின்ற கடன் / கடன் பெறுகை தொடர்பான விடயங்களில் உதவுவதன் மூலம் இ.மி.ச. இன் அனைத்து வெளிநாட்டு நிதியுதவி செயற்றிட்டங்களுக்குமான ஒரு ஒருங்கிணைப்பு அலகாக நிதிப் பிரிவு தொழிற்படுகிறது. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் திறைசேரியின் ஒத்துழைப்புடன் கடனை (திறைசேரி ஊடாகப் பெறப்பட்ட செயற்றிட்டக் கடன்) உரிமையாண்மைக்கு மாற்றுவதற்கு இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்களை சீராக்கம் செய்வதில் நிதிப் பிரிவு ஈடுபட்டது.

நிதி ஒதுக்கீடு, கொடுப்பனவுகளை செயன்முறைப்படுத்தல் மற்றும் விநியோகங்களைக் கையாளுதல் என்பன இந்தப் பிரிவின் பிரதான தொழிற்பாடுகளில் சிலவாகும். சாதகமற்ற காசுப் பாய்வுகள் காரணமாக 2022 ஆம் ஆண்டு இ.மி.ச. இற்கு ஒரு முக்கிய ஆண்டாக அமைந்திருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பிரிவானது கொடுப்பனவுகளுக்கு முன்னுரிமை அளித்ததுடன் ஒவ்வொரு பிரிவுக்குமான நாளாந்த கொடுப்பனவு வரையறைகளை விதித்ததன் மூலம் கிடைக்கக்கூடிய நிதியை வினைத்திறனாக ஒதுக்கீடு செய்தது. மேலும், நிலக்கரி, ஐ.பீ.பீ. மற்றும் என்.சீ.ஆர்.ஈ. கொடுப்பனவுகளை முடிந்தவரை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தது.

சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன் வீதத்தின் அடிப்படையிலான காலக் கடன்களின் அனைத்து தவணைக் கொடுப்பனவுகளும் வட்டி வீத உயர்வு காரணமாக அதிகரிக்கப்பட்ட போதிலும் இ.மி.ச. ஆல் எந்தவொரு கடனையும் செயலற்ற வகைக்குள் நகர்த்தாது 2022 ஆம் ஆண்டிற்கான அனைத்து கடன் தவணைக் கொடுப்பனவுகளையும் செலுத்த முடிந்தது.

தொழினுட்ப அம்சங்களில், இலத்திரனியல் வங்கி வசதியானது மக்கள் வங்கியின் ஒருங்கிணைப்புடன் சகல பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2022 ஆம் ஆண்டில், கடன்பட்டோரிடமிருந்தான சேகரிப்புகளுக்காக உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து வசூல் செய்தல் மற்றும் பதிவழிப்பு நடைமுறைகள் பற்றிய வரைவொன்றைத் தயாரிப்பது ஆரம்பிக்கப்பட்டது. இது காசுப் பாய்வை மேம்படுத்தும் என்பதுடன் அறவிடமுடியாக் கடன் பதிவழிப்பையும் குறைக்கும்.

மேலும், நிதிப் பிரிவானது இ.மி.ச. ஊழியர்களின் நன்மைக்கான இ.மி.ச. இன் சேமலாப நிதியம் மற்றும் ஓய்வூதிய நிதியத்தை முகாமை செய்வதற்கும் பொறுப்பாக உள்ளது. ஆண்டின் காலப்பகுதியில் நிலையான வைப்பு வட்டி வீதங்களின் அதிகரிப்பு மற்றும் அதிக விளைச்சல் தரும் பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகளால் முதலீட்டின் மீதான வருவாய் / விளைச்சல் கணிசமானளவு மேம்பட்டது. இரு நிதியங்களினதும் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கான குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்வதற்காக 5% முதல் 8% வரையிலான குறைந்த வட்டி வீதத்தில் காணப்பட்ட கணிசமானளவு நிலையான முதலீட்டுப் பிணையங்களை முன்கூட்டியே மீளப் பெறுவதற்கான துணிச்சலான முடிவை இந்தப் பிரிவு எடுத்திருந்ததுடன் முதலீட்டின் மீதான அதீத வருமானத்துடன் 25% முதல் 29% வரையிலான வீத வீச்சினுள் மீண்டும் முதலீடு செய்யப்பட்டது. அதற்கிணங்க, ரூபா 845 மில்லியன் மற்றும் ரூபா 568 மில்லியன் என்பன முறையே ஓய்வூதிய நிதியம் மற்றும் சேமலாப நிதியம் ஆகியவற்றின் உயர்ந்தளவு விளைச்சலுக்கு பங்களிப்புச் செய்திருந்தன.

# நிதிப் பிரிவு

**திறைசேரி முகாமைத்துவம்**

நிதிக் கிளையானது, இடர் கட்டுப்பாட்டு நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் திறைசேரி முகாமைத்துவ நோக்கெல்லையில் அடையாளங் காணப்பட்ட வெளிப்படக்கூடிய இடர்களுக்குமான பொறுப்பை இ.மி.ச. இன் இடர் முகாமைத்துவ அணுகுமுறையின் முதல் வரிசையாகப் பாதுகாக்கிறது. திறைசேரி முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் பிரதான நடவடிக்கைகள் கீழ்வருமாறு:

- இ.மி.ச. அதன் வருமான வரம்புகளைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவதற்காக முதலீட்டு விளைச்சல் மற்றும் வருமானத்தை உத்தமமாக்குகிறது.
- சந்தையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப மாறுவதற்கு உகந்த போதுமானளவு திரவத்தன்மை மட்டங்களைப் பேணுதலும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளைப் பின்பற்றும்போதான இ.மி.ச. இன் செயற்பாடுகளும்.
- சில தெளிவாகக் குறிப்பிட்ட எல்லைகளுள் முதலீட்டுத் தீர்மானங்களை செயன்முறைப் படுத்துவதற்கான நடைமுறை மற்றும் நன்கு வரையறுக்கப்பட்ட வேலைச்சட்டகத்தை வழங்குதல்.
- இ.மி.ச. இன் முதலீட்டுச் சொத்துக்கள் / பிரிவுகளின் நிலை மற்றும் செயலாற்றுகையைக் கண்காணிப்பதற்கு நிறுவன முகாமைத்துவ அணியை (CMT) செயற்படுத்த நேரடியான, வெளிப்படையான அறிக்கையிடல் செயன்முறையைத் தாபித்தல்.
- முதலீட்டு நடவடிக்கையின் பாதுகாப்பு, திரவத்தன்மை, மற்றும் போதுமானளவு விளைச்சல் ஆகியவற்றை உறுதி செய்தல் (முன்னுரிமையின்படி).

**இ.மி.ச. சேமலாப நிதியம்**

இலங்கை மின்சார சபை சேமலாப நிதியம் (CEBPF) ஆனது 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் ஒரு தனியான சேமலாப நிதியமாகத் தொழிற்படுகிறது. நிதியத்தைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுள்ள இ.மி.ச. இன் சபை உறுப்பினர்களின் நெருங்கிய நுண்ணாய்வின்கீழ், நிதியத்தின் அலுவல்கள் பற்றிய ஒட்டுமொத்தப் பொறுப்பும் முகாமைத்துவக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் இந்நிதியமானது அதன் செயற்பாட்டு வரலாற்றில் அதிக இலாபத்தை வழங்கியிருந்தது. அசாதாரணமான சவால்மிக்க சூழ்நிலைகளை அனுசரித்து வளர்வதற்கான அதன் ஆற்றலை இது நிரூபிக்கிறது. சரியான நேரத்திலான தலையீடுகள் ஊடாக, வெளிப்படுகின்ற இடர்கள் மற்றும் வாய்ப்புகளை இனங்கண்டு அதற்கு முன்னோடியாக பதிலளிப்பதில் உள்ள நிதியத்தின் தொலைநோக்கு பார்வையானது இந்த ஆண்டின் வெற்றிக்கு வழிவகுத்தது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் அறிக்கையிடப்பட்ட நிதியத்தின் இலாபத்தன்மை மற்றும் உரிமையாண்மை மீதான வருமானம் ஆகியவற்றை உரு F 1 மற்றும் உரு F 2 என்பன சித்தரிக்கின்றன.




*உரு F2: சேமலாப நிதியத்தின் இலாபத்தன்மை*




*உரு F1: நிதியத்தின் உரிமையாண்மை மீதான வருமானம்*

தொற்றுநோய் தொடர்பான இடையூறுகள் 2022 இல் செயற்பாட்டுத் தளத்தில் தொடர்ந்தும் தாக்கத்தை ஏற்படுத்தியதால், இ.மி.ச. இன் சேமலாப நிதி இன்னுமொரு வருடம் வரை மாறும் தன்மையையும் நிச்சயமற்ற தன்மையையும் எதிர்கொள்ளும். இந்தச் சவால்மிகுந்த நிலைமை இருந்த போதிலும், நிதியமானது அதன் மூலோபாய தொலைநோக்குப் பார்வை மற்றும் பதிலளிக்கக்கூடிய தன்மையைப் பயன்படுத்தி அதன் அனைத்து நாட்டதாரர்களுக்கும் தொடர்ச்சியான ஸ்திரத்தன்மை மற்றும் மதிப்பு உருவாக்கத்துடன் சாதனை இலாபத்தை அளித்து வெளிப்புற தலைசுற்றலுக்கு வழிவகுத்தது.

நிதியத்தின் செயலாற்றுகையானது சரியான நேரத்திலும் வெளிப்படுகின்ற இடர்களின் பயனுறுதிமிக்க முகாமையின் மூலமும் உட்பதிக்கப்பட்டுள்ளது. முதலீட்டுத் தொகுப்பினை சரியான நேரத்தில் திரட்டுவதன் ஊடாக நிதியத்தின் திரவத்தன்மை மற்றும் நிலையான வைப்பு முதலீடுகளிலிருந்தான விளைச்சலை உத்தமமாக்குவதற்கு மூலோபாய வலியுறுத்தல் வழங்கப்பட்டது. அதற்கிணங்க, நிதியமானது வருமானம் மற்றும் இலாப வளர்ச்சியை முறையே 95% மற்றும் 108% ஆகப் பதிவு செய்திருந்தது. எவ்வாறாயினும், அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீதான பரிசீலனைகளின் அதிகரிப்பு, மற்றும் வாகன எரிபொருள் எண்ணெய் மற்றும் உதிரிப்பாகங்களுக்கான விலைகளின் அதிகரிப்பு என்பன இயக்கச் செலவுகளில் 57% தீவிர அதிகரிப்பை ஏற்படுத்தின.

2022 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் வரிச் செலவினங்கள் 17.2% இனால் சிறிதளவு குறைந்திருந்தது. எவ்வாறாயினும், 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க ஏயுவு சட்டத்தின் பிரிவு 25A (1) இன் கீழ் நிதிச் சேவைகள் மீதான VAT இற்கு உரித்தான நிதிகள் தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் விநியோகித்த வழிகாட்டலில் இதற்கான வரி வீதம் 15% எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. நிதியமானது வட்டி வருமானம் தொடர்பில் எவ்வித ஏயுவு இனையும் செலுத்தியிருக்கவில்லை ஆயினும் வட்டி வருமானம் தொடர்பில் 15% VAT விதிப்பானது நிதியத்தின் நிலைபேற்றுத்தன்மையை பலவீனமாக்கும்.

நிதியத்தின் சொத்துத் தளம் 2022 ஆம் ஆண்டில் 17.9% இனால் வளர்ச்சியடைந்து ரூபா 87.21 பில்லியனை அடைந்தது. மாறுகின்ற இடர் வருவாயை உத்தமமாக்குவதில் நிதியமானது தெரிவு செய்யப்பட்ட முதலீட்டு வாய்ப்புகளை மாத்திரமே பின்பற்றியது. நிலவிய செயற்பாட்டு நிலைமைகளின் கீழ் மொத்தச் சொத்துக்களில் 75.7% ஆக (முன்னைய ஆண்டின் 74.9% உடன் ஒப்பிடுகையில்) நிதியத்தின் முதலீடு கணக்கிற் கொள்ளப்பட்டது.

2022 டிசெம்பர் 31 இல் மொத்தப் பரிப்புக்கள் 22% இனால் குறைவடைந்த அதே நேரம் அங்கத்தவர்களின் மீதி 5.2% இனால் அதிகரித்து ரூபா 74.6 பில்லியனாகியது. நிதியமானது சுமார் 25,162 அங்கத்தவர் கணக்குகளைக் கொண்டுள்ளது எனினும், அதில் சுமார் 24,553 பேரே செயல் நிலையில் பங்களிப்புத் தொகை செலுத்துகின்ற அங்கத்தவர்களாக உள்ளனர். 2022 ஆம் ஆண்டிற்கான மொத்தப் பங்களிப்பு ரூபா 6.3 பில்லியனாகப் பதிவாகியிருந்த அதே நேரம் அந்தக் காலப்பகுதியில் அங்கத்தவர்களுக்கு திருப்பிச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 2.6 பில்லியனாகும். சேமலாப நிதியின் விவரங்கள் படம் F3 & F4 இல் சித்தரிக்கப்பட்டுள்ளன.

**10** ரூபா பில்லியன் வருமானம்

**87.2** ரூபா பில்லியன் மொத்தச் சொத்துகள்

**9.7** ரூபா பில்லியன் வரிக்கு பின்னரான இலாபம்

**58.4** ரூபா பில்லியன் நிலையான வைப்புகளில் முதலீடு




**5.3** ரூபா பில்லியன் தனிச்சங்களில் முதலீடு

**9.2** ரூபா மில்லியன் செயற்பாட்டுச் செலவினங்கள்

**25,162** அங்கத்தவர்கள்

**5.7** ரூபா பில்லியன் அங்கத்தவர் களுக்கான கடன்கள்

**9.2** ரூபா மில்லியன் அரசாங்கத்திற்கான வரி

உரு F3: 2022 இன் இறுதியில் சேமலாப நிதியம் - எண்களில்




உரு F4: அங்கத்தவர்களுக்கான பெறுமதி

நுஉழுெஅை ஏயடரந ஊசநயவழைெ



## இ.மி.ச. ஓய்வூதிய நிதியம்

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 12(j) இன் கீழ் 1994 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி ஓய்வூதிய நிதியம் தாபிக்கப்பட்டதுடன் பாதுகாவலரான இலங்கை மின்சார சபையால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவக் குழுவினால் முகாமை செய்யப்படுகிறது.

2022 ஆம் ஆண்டின் இறுதியில், ஓய்வூதிய அங்கத்தவர்கள் எண்ணிக்கை 8,105 ஆக இருந்ததுடன் நிதியத்திலிருந்து நன்மைகளைக் கோரும் செயல்நிலை ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கை 7,654 ஆக இருந்தது. கீழ்வரும் அட்டவணையானது கடந்த ஐந்து (05) ஆண்டுகளில் ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட மாற்றங்களைப் பொழிப்பாகத் தருவதுடன் இ.மி.ச. இற்குப் பொருத்தமான ஓய்வூதிய வயதை 61 ஆண்டுகள் வரை நீடிக்கின்ற அரசாங்கத்தின் கொள்கை காரணமாக 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையிலான ஓய்வூதியகாரர்களின் அதிகரிப்பின் சதவீதமானது வெகுவாகக் குறைந்துள்ளமையானது எதிர்வரும் ஆண்டுகளில் ஓய்வூதியகாரர்களின் எண்ணிக்கையில் ஏற்படக்கூடிய திடீர் பெருக்கத்தின் விளைவாக நிதியத்திற்கு ஏற்படும் எச்சரிக்கை மணியாக அமைந்திருப்பதை இது சுட்டிக் காட்டுகிறது.

அட்டவணை F1: கடந்த 5 ஆண்டுகளில் ஓய்வுதியகாரர் எண்ணிக்கையில் ஏற்பட்ட மாற்றம்

| ஆண்டு | ஓய்வூதிய காரர்களின் எண்ணிக்கை | ஓய்வூதியகாரர்களின் அதிகரிப்பு | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | மு |
| 2018 | 7,061 | 439 | 6.6% |
| 2019 | 7,533 | 472 | 6.7% |
| 2020 | 7,839 | 306 | 4.0% |
| 2021 | 8,057 | 218 | 2.8% |
| 2022 | 8,105 | 48 | 0.6% |

மேலும், முந்தைய நான்கு (04) ஆண்டுகளில் ஓய்வூதியப் பொறுப்புக்களின் தீர்ப்பனவுக்காக முதலீட்டின் விளைச்சல் போதுமானதாக இருக்கவில்லை, 2022 ஆம் ஆண்டில் பங்களிப்புகளின் சரிவுப் போக்கினை உரு F5 இல் சித்தரிக்கிறது. மேலே விபரிக்கப்பட்ட சூழ்நிலைகள் நிதியத்தினால் பின்பற்றப்பட்ட மூலோபாயங்களை மறுபரிசீலனை செய்வதற்கும் நிதியத்தின் நிலைபேற்றுத்தன்மையை நோக்காகக் கொண்ட மூலோபாயங்களைச் செதுக்குவதற்கும் திறைசேரி முகாமைத்துவக் கிளையை தூண்டுகின்றன. நிதியின் முதலீட்டு பிரிவு படம் F6 இல் காட்டப்பட்டுள்ளது.




*உரு F5: கடந்த 5 ஆண்டுகளில் ஓய்வூதிய நிதியில் ஏற்பட்ட மாற்றம்*




*உரு F6: முதலீட்டுப் பிரிவுகள்*

# நிதிசார் மீளாய்வு

கோவிட் 19 நோய்த் தொற்றின் பரந்தளவான தாக்கங்களுடன் நாட்டின் பொருளாதார பேரழிவும் கட்டமைப்புசார் பிரச்சினைகளும் மற்றும் உலகளாவிய ஏற்ற இறக்கங்களும் நாட்டினை ஒரு சமூக - பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியுள்ளன. பல பிரதான பேரினப் பொருளாதார குறிகாட்டிகள் பதிவு செய்ய முடியாத அளவுக்கு பலவீனமடைந்துள்ளன. அந்நியச் செலாவணி நெருக்கடியானது அத்தியாவசியப் பொருள்களில் குறிப்பாக எரிபொருள் பற்றாக்குறைக்கு வழிவகுத்தது. அதே வேளை இலங்கை ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்ட கடுமையான தேய்மானத்தின் விளைவாக 2022 ஆம் ஆண்டு முழுவதும் எரிபொருள் மற்றும் நிலக்கரியின் விலைகள் உயர்வடைந்தன. இந்த சவால் மிகுந்த ஆண்டில், இ.மி.ச., நாட்டின் தேசிய மின்வலு வழங்குநர் என்ற வகையில் தனது வகிபாகத்தை ஆற்றுவதற்குப் போராட வேண்டியிருந்தது. நீர்மின் பிறப்பாக்கத்திற்கான மழை இல்லாத நிலையில் அனல் மின்வலு ஆலைகளுக்கான எரிபொருள் வழங்கலுக்கும் காணப்பட்ட தொடர்ச்சியான இடையூறுகளுக்கு மத்தியில் தேவையை முகாமை செய்வதற்காக, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் சுழற்சி முறையில் கைமுறையாக மின் வெட்டினை அமுல்படுத்துவதற்கு இ.மி.ச. நிர்ப்பந்திக்கப்பட்டது.

## நிதிசார் செயலாற்றுகை

### வருமானம்

இ.மி.ச. அதன் செயற்பாட்டு வரலாற்றில் மிக உயர்ந்த வருமானத்தை வழங்கியதன் மூலம், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூபா 308.46 பில்லியன் என்ற 24% வருமான வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. இந்த வருமான வளர்ச்சியானது 2022-08-10 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அமுல்படுத்தப்பட்ட மேல்நோக்கிய விதிப்பனவுத் திருத்தத்தின் மூலம் அடிகோடிட்டுக் காட்டப்பட்டது. திருத்தத்திற்கு முன்னரான விதிப்பனவானது 2014 ஆம் ஆண்டிலிருந்து மாறாது காணப்பட்டிருந்த அதே வேளை அனைத்து பண்டங்களின் விலைகளும் மின்சார வணிகத்துடன் தொடர்புபட்ட ஏனைய கிரயக் காரணிகளும் தொடர்ந்து அதிகரித்து வந்திருந்தன. கைமுறையான சுமை குறைப்பு மற்றும் நாட்டில் நிலவும் சமூக - பொருளாதார நெருக்கடி காரணமாக சில்லறை மற்றும் தொகையளவு வாடிக்கையாளர்களின் குறைந்த நுகர்வு காரணமாக நாட்டின் மின்சாரத் தேவை 5% இனால் குறைவடைந்தது. கடந்த 5 ஆண்டுகளில் சக்தி விற்பனை மற்றும் வருமானத்தின் மாறுபாடு கீழே உள்ள படம் FR1 இல் சித்தரிக்கப்பட்டள்ளது.




*உரு FR1: சக்தி விற்பனை மற்றும் வருமானத்தின் மாறுபாடு*

### நிகர இலாபம் / (நட்டம்)

ஆண்டிற்கான நிகர நட்டமாக ரூபா 272.9 பில்லியன் பதிவாகியிருந்தது. இது இயக்க வரலாற்றில் மிக உயர்ந்த நட்டத்தைக் காட்டுகிறது. செயற்பாட்டு நட்டங்கள் 688% இனால் உயர்ந்துள்ளதுடன் அரசாங்கத்தின் கடனிலிருந்து உரிமையாண்மைக்கு மாற்றப்பட்ட தொகையினால் ஏற்பட்ட பரிமாற்ற நட்டம் ரூபா 94.7 பில்லியன் ஆகவும் காணப்பட்டது. இ.மி.ச. திறைசேரிக் கடன் தொகையான ரூபா 372 பில்லியனை இ.மி.ச. இன் அரசாங்க உரிமையாண்மை முதலீடுகளாக மாற்றுவதற்கு நிதி அமைச்சு தீர்மானித்திருந்தது. அதற்கிணங்க, புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்றிட்டக் கடன் நிலுவைத் தொகை தொடர்பில் 2022-12-31 இல் உள்ளவாறான வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீட்டின் விளைவாக அரசாங்கம் ரூபா 144 பில்லியன் பரிமாற்ற நட்டத்தை இ.மி.ச. இற்கு மாற்றியுள்ளது. இதில் ரூபா 94.7 பில்லியன் நடப்பு ஆண்டின் வருமானக் கூற்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நிகர நிதிக் கிரயத்தின் பின்னரான நட்டம் ரூபா 167.2 பில்லியன் என அறிக்கையிடப்பட்டது. இது ஒரு வருடத்திற்கு முன்பு இருந்த ரூபா 34.1 பில்லியனிலிருந்து 390% அதிகரிப்பைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. உலகளாவிய பொருள்களின் விலை அதிகரிப்பு அதாவது எரிபொருள், நிலக்கரி மற்றும் ஏனைய பொருள்களின் விலை அதிகரிப்பு, பரிமாற்ற வீதத்தின் தேய்மானம், வட்டி வீதங்களின் அதிகரிப்பு அத்துடன் செலவைப் பிரதிபலிக்கின்ற விதிப்பனவு இல்லாமை ஆகியன நிகர நட்டத்தின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தின. 2022 ஆகஸ்ட் மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட இறுதி உத்தியோகத்தர் விதிப்பனவுத் திருத்தமானது மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அதிகரித்த பொருள்களின் விலைகளை ஈடுசெய்யப் போதுமானதாக இருக்கவில்லை.

சுழற்சி முறையில் கைமுறையாக சுமை உதிர்ப்பு மற்றும் பொருளாதாரச் சுருக்கம் காரணமாக 2022 ஆம் ஆண்டில் மின்சாரத்திற்கான கேள்வி குறைவடைந்தது. இதன் விளைவாக, மின்சாரப் பிறப்பாக்கமும் குறைவடைந்தது.




* வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள் மீதான உண்மையான ஆதாயம் / (இழப்பு) ஏனைய வருமானத்துடன் ஈடுசெய்யப்பட்டது

*உரு FR2: நிதிசார் செயலாற்றுகை 2021/2022*

| | 2022 (ரூபா மில்லியன்) | 2021 - மீளமைக்கப் பட்டது (ரூபா மில்லியன்) | மாறுபாடு (%) |
|---|---|---|---|
| மின்சார விற்பனை | 308,457 | 248,776 | 24% |
| **பிற வருமானங்கள்** | 12,975 | 12,597 | 3% |
| நேரடி பிறப்பாக்கல் கிரயம் | (325,245) | (157,374) | 107% |
| **அரசாங்கத்திடமிருந்தான கடனிலிருந்து உரிமையாண்மைக்கு மாற்றுவதால் ஏற்படும் பரிமாற்ற இழப்பு** | (94,689) | - | 100% |
| வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள் மீதான உண்மையான இழப்பு | (11,059) | (505) | 2,092% |

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மின் பிறப்பாக்கம் 5% இனால் குறைவடைந்தது. அதைத் தொடர்ந்து மின்சாரத்திற்கான கேள்வி 5% இனால் குறைவடைந்தது.




*உரு FR3: விற்பனையும் மின் பிறப்பாக்கமும் GWh இல்*

மின் பிறப்பாக்கல் கலவை முந்தைய ஆண்டைப் போல இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருந்தது. அத்துடன் சிறியளவு நீர் மின்வலு ஆலைகளின் பங்களிப்பு கடந்த ஆண்டை விட வலுவிழந்து காணப்பட்டது. LVPP மின் பிறப்பாக்கிகள் தவிர்க்க முடியாத பராமரிப்புக்காக எப்போதாவது வெளியே எடுக்கப்பட்டதால் LVPP இன் மொத்த மின் பிறப்பாக்கம் 6% இனால் குறைவடைந்தது. எனவே இ.மி.ச. இன் அனல் மின்வலு ஆலை, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் சக்தித் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அதிக பங்களிப்பை அளிக்க வேண்டியிருந்தது. மின் பிறப்பாக்கல் கலவைக்கான இ.மி.ச. இன் காற்று மற்றும் மேற்கூரை சூரிய சக்தியின் அதிகரித்த பங்களிப்பானது முந்தைய ஆண்டைவிட நிதிச் செயலாற்றுகையை ஆக்கபூர்வமான வகையில் பாதித்தது. மேற்கூரைகளில் சூரிய பலகங்களை இணைப்பதற்கான தேவையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நெட் பிளஸ் / நிகர கணக்கீட்டுத் திட்டங்களுடன் சீராக வளர்ந்து வருகிறது.




*உரு FR4: பிறப்பாக்கள் கலவை*

**கிரயக் கட்டமைப்பு**

இ.மி.ச. இன் நேரடிப் பிறப்பாக்கல் கிரயம் மொத்தக் கிரயத்தில் 66.6% ஆகப் பதிவாகியிருந்தது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 107% அதிகரிப்பாகப் பதிவாகியிருக்கிறது. அதாவது ரூபா 157 பில்லியனிலிருந்து ரூபா 325 பில்லியனாக அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம் 2022 ஆம் ஆண்டில் எரிபொருள் மற்றும் நிலக்கரியின் விலைகள் வரலாறு காணாத அளவுக்கு அதிகரித்தமை ஆகும். சக்திப் பிறப்பாக்கத்தில் 6% தொய்வு ஏற்பட்டிருந்த போதிலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் 186% செலவு அதிகரிப்பானது நிலக்கரிச் செலவினங்களில் பிரதிபலித்திருந்தது. சக்திப் பிறப்பாக்கத்தின் 9% அதிகரிப்புடன் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் எரிபொருள் செலவானது 183% இனால் அதாவது ரூபா 68.9 பில்லியனிலிருந்து 24.4 பில்லியனாக அதிகரித்திருந்தது. இ.மி.ச. இன் நேரடி மின் பிறப்பாக்கல் செலவானது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. அதாவது, பண்டங்களின் விலை அதிகரிப்பு மற்றும் நாணயப் பரிமாற்று வீதத்தின் தேய்வு என்பன காரணமாக இச்செலவானது ரூபா 325 பில்லியனாகக் காணப்பட்டது. நிலவும் சூழ்நிலைகள் எல்லைகள் மீது அழுத்தத்தை ஏற்படுத்தியிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிச் செலவுகளின் பின்னரான நிகர நட்டம் ரூபா 133 பில்லியனால் அதிகரித்திருந்தது. 2022-08-10 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அமுல்படுத்தப்பட்ட விதிப்பனவுத் திருத்தமானது இந்தச் சிரமங்களைத் தாங்கிக்கொள்வதற்கு இ.மி.ச. இற்கு சிறிது உதவியது.

ஆண்டின் காலப்பகுதியில் இ.மி.ச. இன் மேந்தலைச் செலவினங்கள் 3% இனால் அதிகரித்திருந்தது. இது நாணயப் பரிமாற்று வீதத்தில் ஏற்பட்ட தேய்மானம் மற்றும் ஒப்பீட்டளவில் ஏற்பட்ட அதிக பணவீக்கம் காரணமாக ஏற்பட்ட பரிமாற்ற நட்டத்தைப் பிரதிபலிக்கிறது. அதே சமயத்தில், இ.மி.ச. இனால் ஆளணி கிரய முகாமைத்துவம் மீதான கடுமையான கட்டுப்பாடுகளுடன் ஆளணிக்கான கிரயங்களை 6% இனால் குறைக்க முடிந்தது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மின் பிறப்பாக்கல் நிலையில், நேரடி மின் பிறப்பாக்கல் கிரயத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது அலகொன்றின் சராசரிக் கிரயத்தின் அதிகரிப்புக்கு வழிவகுத்தது. அதாவது 12.38 LKR/kWh (மீளமைக்கப்பட்டது) இலிருந்து 23.01 LKR / kWh ஆக அதிகரித்திருந்தது.

இறுதி நுகர்வோருக்கான விற்பனை நிலையில், 2022 ஆம் ஆண்டிற்கான மின்சார அலகொன்றின் கிரயம் 33.65 LKR/kWh ஆக அமைந்திருந்தது. இது 2021 ஆம் ஆண்டில் 19.42 LKR/kWh (மீளமைக்கப்பட்டது) ஆகக் காணப்பட்டிருந்தது. அதற்கிணங்க, நேரடிப் பிறப்பாக்கல் கிரயத்தை உள்ளடக்கிய செயற்பாட்டுக் கிரயமானது முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 65% இனால் அதிகரித்திருந்தது.




*உரு FR5: கிரயக் கட்டமைப்பு 2021/2022*

**கடன் பெறுகைகளும் நிதிக் கிரயமும்**

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், இ.மி.ச. இன் நிதிச் செலவுகள் 104% இனால் அதாவது, ரூபா 20 பில்லியனிலிருந்து 41.8 ஆக அதிகரித்திருந்தது. இது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான (CPC) கொடுப்பனவுகள் தாமதமடைந்ததால் ஏற்பட்ட தாமத வட்டி 38% இனால் அதிகரித்ததன் காரணமாக தூண்டப்பட்டதாகும். அதாவது ரூபா 2.4 பில்லியன் மற்றும் சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களுக்கு 278%, அதாவது ரூபா 4.8 பில்லியன். நோய்த் தொற்று காரணமாக சேகரிப்புச் செயன்முறையில் ஏற்பட்ட இடையூறுகள் மற்றும் செலவைப் பிரதிபலிக்கும் விதிப்பனவுகள் இன்மை ஆகியவற்றால், ஏற்கனவே தடைப்பட்டிருந்த இ.மி.ச. இன் காசுப் பாய்வுகள் மீது கடுமையான பாதிப்பு ஏற்பட்டதுடன் CPC உள்ளிட்ட பிரதான வழங்குநர்களுக்கான தீர்ப்பனவுகளும் தடைப்பட்டன. இது தாமத வட்டியின் அதிகரிப்புக்கு வழிவகுத்தது.

2022 ஆம் ஆண்டில் ரூபா 101.5 பில்லியனாக இருந்த புதிய கடன்களுக்கு மத்தியில், வட்டிக் கிரயம் 114% இனால் அதிகரித்து ரூபா 26.3 பில்லியனாக உயர்ந்தது. இது வட்டி வீதங்களின் அதிகரிப்பையும் பிரதிபலிக்கிறது. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மத்திய வங்கியானது வரலாறு காணாதளவு வட்டி வீதங்களை உயர் வீதத்திற்கு அதிகரித்ததால், அது நிதிக் கிரயங்களில் அதிகரிப்பை ஏற்படுத்தியது. இ.மி.ச. இன் தொழிற்படு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மேம்படுத்தப்பட்ட மேலதிகப்பற்று வசதிகளை நிதிக் கிரயங்கள் மோசமாகப் பாதித்திருந்தன.




*உரு FR6: கடன் பெறுகைகள் எதிர் நிதிக் கிரயம் (ரூபா மில்லியன்)*

**நிதி நிலைமை**

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் இ.மி.ச. இன் சொத்துக்கள் 6% இனால் வளர்ச்சியடைந்து ரூபா 1,062 பில்லியனை அடைந்திருந்தது. இது மின் பிறப்பாக்க, மின் பரிமாற்ற மற்றும் மின் விநியோகத் துறைகளில் நடைபெறுகின்ற விரிவாக்கம் மற்றும் அபிவிருத்திகளையும் அதிகரித்த தொழிற்படு மூலதனத்தையும் பிரதிபலிக்கிறது. பிரதான பங்களிப்பாளர்களாக இருக்கின்ற ஆதனம், பொறி மற்றும் உபகரணம் அத்துடன் வியாபார மற்றும் ஏனைய வருமதிகளுடன் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் முறையே 5% மற்றும் 11% இனால் வளர்ச்சியடைந்தன.




*உரு FR7: சொத்துக்களின் வளர்ச்சி 2021/2022*

ஆதனம், பொறி மற்றும் உபகரணமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5% இனால் அதிகரித்து, மொத்த சொத்துத் தளத்தின் 84% ஐப் பிரதிபலித்தது. இது பிரதானமாக மின் பரிமாற்ற மற்றும் மின் விநியோக மார்க்கங்களிலும் குடியியல் பணிகளிலும் செய்யப்பட்ட முதலீடுகள் காரணமாக ஏற்பட்டதாகும். அதே வேளை, வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் 35% இனால் அதிகரித்து ரூபா 80.2 பில்லியனை அடைந்திருந்தது. இது பிரதானமாக லங்கா நிலக்கரி கம்பனிக்கு செலுத்தப்பட்ட முற்பணக் கொடுப்பனவு மற்றும் ஏனைய பொருள்களின் கொள்வனவுக்காகச் செய்யப்பட்ட முற்பண மற்றும் முற்கொடுப்பனவுகளால் ஏற்பட்ட ஒன்றாகும். நடைமுறைச் சொத்துக்கள் மொத்த சொத்துத் தளத்தில் 14% ஆக உள்ளது என கணக்கிடப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டில் 13% ஆகக் காணப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய இறுதி உபயோகத்தர் விதிப்பனவுத் திருத்தம் மற்றும்

நுகர்வோரின் செலவழிக்கத்தக்க வருமானம் தடைப்பட்டமை போன்ற காரணங்களாலும் மின்சாரத் துண்டிப்புகளை பிற்போடுவதற்கான அரசாங்கத்தின் தீர்மானம் மற்றும் நோய்த் தொற்று காலப்பகுதியில் சேகரிப்புச் செயன்முறையில் ஏற்பட்ட இடையூறுகள் போன்றவற்றாலும் மின்சாரத்துடன் தொடர்பற்ற கடன்பட்டோர் தொகை 11% இனால் வளர்ச்சியடைந்தது.

சமீபத்திய ஆண்டுகளில் செலவைப் பிரதிபலிக்கும் இறுதி உத்தியோகத்தர் விதிப்பனவுகள் இல்லாத காரணத்தால் ஏற்பட்ட தொடர்ச்சியான நிதி இழப்புகள், இ.மி.ச. இன் மூலதன நிலையையும் நிதியிடும் தன்மையையும் மோசமாக்கியிருந்தன. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் நிகர நட்டமாக ரூபா 272.9 பில்லியன் இருந்த போதிலும், மொத்த உரிமையாண்மை 104% இனால் அதிகரித்து, ரூபா 354 பில்லியனை அடைந்திருந்தது. இது பிரதானமாக ரூபா 372 பில்லியன் திறைசேரிக் கடன்களை இ.மி.ச. இல் அரசாங்க உரிமையாண்மை முதலீடுகளாக மாற்றியதன் காரணமாக ஏற்பட்டதாகும். அதே சமயத்தில், அரசாங்கமானது CPC இன் கொடுப்பனவுக்காக ரூபா 80 பில்லியனை மேலதிக உரிமையாண்மை முதலீடு ஒன்றாக மாற்றியிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் மொத்த உரிமையாண்மையானது மொத்தச் சொத்துக்களில் 33% நிதியளித்துள்ளது. இது முன்னைய ஆண்டில் மொத்தச் சொத்துக்களில் 17% ஆக இருந்தது.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில், கடனினால் நிதியளிக்கப்பட்ட இ.மி.ச. இன் மொத்தச் சொத்துக்களின் சதவீதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடனிலிருந்து உரிமையாண்மைக்குச் செய்யப்பட்ட மாற்றம் காரணமாக ஒப்பீட்டளவில் 46% இலிருந்து 26% ஆக மேம்பட்டுள்ளது. இ.மி.ச. கடன் நிதியிடல் செயற்றிட்ட நடைமுறைப்படுத்தல்களை தொடர்ந்தும் பின்பற்றி வருகிறது. இது நிதிச் செயற்றிட்டங்களுக்கான கடன்பெறுகைகளின் அதிகரிப்புக்கு வழிவகுத்திருந்தது. ரூபா 33.2 பில்லியன் கடன் பெறப்பட்டது. மேலும் நிதி தொழிற்படு மூலதனத்திற்காக ரூபா 44.9 பில்லியன் கடன் பெறப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட மேலதிகப்பற்று வசதி மற்றும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் புதிதாகப் பெறப்பட்ட காலக் கடன்கள் என்பன குறுங்காலக் கடன்களை 39% இனால் அதிகரித்து ரூபா 83.2 பில்லியனை அடைந்தது.




*உரு FR8: சொத்துக்களின் விபரங்கள் 2021/2022*




*உரு FR9: உரிமையாண்மை மற்றும் பரிப்புக்களின் விபரங்கள் 2021/2022*

| விகிதம் | 2022 | 2021 மீளமைக்கப்பட்டது |
|---|---|---|
| சொத்துக்களின் திரும்பல் | -25% | -3% |
| உரிமையாண்மையின் திரும்பல் | -99% | -19% |
| உரிமையாண்மைக்கான கடன் | 78% | 267% |
| சொத்துக்களுக்கான கடன் | 26% | 46% |
| நடப்பு விகிதம் | 0.40:1 | 0.45:1 |
| விரைவு விகிதம் | 0.25:1 | 0.23:1 |
| வட்டிக் காப்பு | -4.83 | -1.21 |
| மீளமைக்கப்பட்டது | -3.00 | 0.49 |

*உரு FR10: நிதி விகிதங்கள்*

**இறுதிப் பயனர் விதிப்பனவும் அரசாங்கக் கொள்கையும்**

வீட்டு வகை மற்றும் ஏனைய விதிப்பனவு வகைகளிலுள்ள குறைந்தளவு மின்சாரத்தை நுகரும் நுகர்வோருக்கு, விற்பனைப் புள்ளியிலுள்ள உண்மையான கிரயத்தைக் காட்டிலும் குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்குகின்ற அரசாங்கத்தின் கொள்கைக்கேற்ப இ.மி.ச. மின்சாரத்தை வழங்குகிறது.

எனவே, வீட்டு வகை மின்சாரத்தை அதிகளவில் நுகரும் நுகர்வோர், இந்தக் கிரயத்தின் ஒரு பகுதியை மேலதிகமாக தாங்கிக்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட அரசாங்கத்தின் மானியக் கொள்கை காரணமாக, 2022-12-31 இலுள்ளவாறான மொத்த நட்டம் ரூபா 182.58 பில்லியன் ஆகும். அதே வேளை அதிகளவில் நுகர்ந்த நுகர்வோரிடமிருந்து வசூலிக்கப்பட்ட மிகைக் கட்டணம் ரூபா 2.4 பில்லியன் ஆகும். எனவே, ஏனைய வருமானங்கள் தவிர்ந்த, இ.மி.ச. இற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 180.16 பில்லியன் ஆகும்.

அதற்கிணங்க, அரசாங்கத்தின் மானியக் கொள்கை காரணமாக இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்களில் ஏற்பட்ட நிகர தாக்கம் கீழ்வருமாறு:

| | 2022 (ரூபா மில்லியன்) | 2021 (மீளமைக்கப்பட்டது) (ரூபா மில்லியன்) |
|---|---|---|
| அரசாங்க கொள்கை காரணமாக ஏற்பட்ட நட்டம் /பற்றாக்குறை (தேவைப்பட்ட மானியம்) | (182,580) | (68,340) |
| வசூலிக்கப்பட்ட மிகை | 2,424 | 21,603 |
| **அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டிய நிகர மானியம்** | (180இ156) | (46இ736) |
| சேர்ப்பனவு / (கழிப்பனவு): | | |
| ஏனைய வருமானம் | 12,975 | 12,597 |
| **அரசாங்கத்திடமிருந்தான கடனிலிருந்து உரிமையாண்மை க்கான மாற்றத்தினால் ஏற்பட்ட பரிமாற்ற நட்டம்** | (94,689) | - |
| வரையறுக்கப்பட்ட நன்மை கடப்பாடுகள் மீதான உண்மையான நட்டம் | (11,059) | (505) |
| **நிதிக் கூற்றுக்களின்படி நிகர நட்டம்** | (272இ928) | (34இ644) |

# பத்து வருடப் பொழிப்பு

கடந்த பத்து வருடங்களுக்கான இலங்கை மின்சார சபையின் செயற்பாடுகள் மற்றும் சொத்துக்களது நிலையின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| 2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2022 ரூபா மில்லியன் | 2021 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன | 2020 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் | 2019 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் | 2018 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் | 2017 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் | 2016 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் | 2015 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் | 2014 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் | 2013 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டின் பெறுபேறுகள்** | | | | | | | | | | |
| வருமானம் | 308,457 | 248,776 | 238,911 | 242,950 | 229,571 | 218,450 | 206,811 | 188,684 | 202,645 | 194,147 |
| வீட்டு நுகர்வோருக்கு வழங்கப்பட்ட சலுகை | (1) | (196) | (5,908) | - | - | - | - | - | - | - |
| விற்பனைக் கிரயம் | (430,509) | (266,596) | (276,938) | (322,521) | (251,964) | (260,273) | (222,097) | (168,781) | (213,646) | (165,509) |
| மொத்த இலாபம் / (நட்டம்) | (122,053) | (18,016) | (43,935) | (79,571) | (22,393) | (41,823) | (15,286) | 19,903 | (11,001) | 28,638 |
| ஏனைய வருமானங்களும் ஆதாயங்களும் | 11,581 | 11,466 | 8,817 | 10,307 | 9,450 | 8,143 | 10,323 | 8,292 | 5,871 | 5,107 |
| நிருவாகச் செலவினம் | (16,354) | (8,290) | (7,131) | (7,280) | (5,832) | (5,110) | (4,965) | (4,086) | (3,146) | (2,556) |
| நிதி வருமானம் | 1,394 | 1,131 | 1,338 | 1,751 | 1,466 | 1,194 | 1,049 | 434 | 304 | 1,677 |
| நிதிக் கிரயம் | (41,749) | (20,431) | (19,522) | (22,526) | (13,036) | (8,415) | (4,312) | (5,134) | (7,030) | (10,601) |
| நிகர நிதிக் கிரயத்தின் பின்னர் இலாபம் / (நட்டம்) | (167,180) | (34,139) | (60,433) | (97,319) | (30,345) | (46,011) | (13,191) | 19,409 | (15,002) | 22,265 |
| அரசாங்கத்திடமிருந்தான கடனிலிருந்து உரிமையாண்மைக்கு மாற்றப்பட்டதால் ஏற்பட்ட பரிமாற்ற நட்டம் | (94,689) | - | - | - | - | - | - | - | - | - |
| வருமான வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) | (261,869) | (34,139) | (60,433) | (97,319) | (30,345) | (46,011) | (13,191) | 19,409 | (15,002) | 22,265 |
| வருமான வரிச் செலவினங்கள் | - | - | (53) | (39) | (50) | (232) | (263) | (61) | (95) | |
| பிற்போடப்பட்ட வரி (கட்டணம்) / மறுதலை | - | - | - | - | - | - | - | - | 995 | 1,326 |
| வரையறுக்கப்பட்ட நன்மை கடப்பாடுகள் மீதான உண்மையான ஆதாயம் / (இழப்பு) | (11,059) | (505) | (8,678) | (64) | (1,541) | (1,338) | (1,003) | 952 | (3,183) | (39) |
| **முற்றடக்க வருமானம்** | (272,928) | (34,644) | (69,164) | (97,422) | (31,936) | (47,581) | (14,457) | 20,300 | (17,285) | 20,900 |

| 2022 டிசெம்பர் 31 இல் | 2022 ரூபா மில்லியன் | 2021 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் | 2020 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் | 2019 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் | 2018 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் | 2017 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் | 2016 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் | 2015 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் | 2014 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் | 2013 (மீளமைக்கப் பட்டது) ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 894,860 | 852,072 | 819,248 | 781,517 | 747,012 | 724,068 | 704,695 | 694,415 | 681,471 | 648,130 |
| துணைக் கம்பனிகளில் முதலீடு | 912 | 912 | 912 | 912 | 912 | 912 | 912 | 912 | 785 | 785 |
| கூட்டு முயற்சிகளில் முதலீடு | 349 | 329 | 329 | 329 | 329 | 329 | 329 | 329 | 150 | 150 |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்தில் முதலீடு | 12,460 | 10,658 | 9,981 | 8,997 | 8,070 | 7,246 | 6,496 | 6,036 | 5,653 | 5,250 |
| பிற நிதிச் சொத்துக்கள் | 5,783 | 7,700 | 8,859 | 9,951 | 10,204 | 8,912 | 8,983 | 3,848 | 2,291 | - |
| பிற நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 2,496 | 851 | 1,074 | 1,489 | 1,242 | 961 | 949 | 896 | - | - |
| விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 0.076 | 0.076 | 0.076 | 0.076 | 0.076 | 0.655 | 1,022 | 1,025 | 1,023 | 1,021 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 145,484 | 131,446 | 116,617 | 110,576 | 102,338 | 89,065 | 80,968 | 69,391 | 72,662 | 91,423 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 1,062,344 | 1,003,967 | 957,020 | 913,771 | 870,107 | 831,494 | 804,354 | 776,852 | 764,035 | 746,759 |
| **பரிப்புக்கள்** | | | | | | | | | | |
| வட்டியைத் தாங்கும் கடன் மற்றும் கடன் பெறுகைகள் | 193,478 | 403,592 | 352,094 | 318,149 | 281,262 | 236,129 | 220,476 | 214,299 | 221,735 | 355,043 |
| நுகர்வோர் வைப்புகள் | 16,720 | 16,300 | 15,641 | 15,014 | 14,311 | 13,557 | 12,753 | 11,484 | 10,458 | 9,722 |
| ஏற்பாடுகள் மற்றும் பிற பிற்போடப்பட்ட பரிப்புக்கள் | 33,001 | 21,615 | 20,121 | 10,482 | 10,038 | 8,622 | 7,262 | 6,116 | 6,572 | 3,236 |
| அரச மானியங்கள் | 173 | 188 | 200 | 213 | 228 | 243 | 211 | - | - | - |
| பிற்போடப்பட்ட வருமானம் | - | - | - | - | - | - | - | 71,696 | 66,292 | 60,343 |
| ஒப்பந்தப் பரிப்புக்கள் | 102,613 | 99,518 | 95,771 | 89,746 | 86,335 | 82,564 | 77,628 | - | - | - |
| பிற்போடப்பட்ட வரிவிதிப்பு | - | - | - | - | - | - | - | - | - | 22,182 |
| நடைமுறைப் பரிப்புக்கள் | 361,932 | 289,037 | 208,447 | 223,803 | 145,712 | 123,682 | 72,661 | 43,630 | 64,147 | 69,134 |
| **மொத்தப் பரிப்புக்கள்** | 707,917 | 830,250 | 692,274 | 657,407 | 537,886 | 464,797 | 390,991 | 347,225 | 369,204 | 519,660 |
| **உரிமையாண்மை** | | | | | | | | | | |
| பங்களிக்கப்பட்ட மூலதனம் | 865,159 | 413,055 | 391,731 | 323,194 | 302,695 | 302,695 | 302,695 | 302,228 | 289,038 | 121,708 |
| ஒதுக்கங்கள் | 44,077 | 41,223 | 39,254 | 37,110 | 34,881 | 32,783 | 30,283 | 28,463 | 27,434 | 25,999 |
| கைக்கொள் இலாபம் | (554,810) | (280,560) | (166,239) | (103,940) | (5,355) | 31,219 | 80,385 | 98,936 | 78,359 | 79,392 |
| **மொத்த உரிமையாண்மை** | 354,427 | 173,717 | 264,746 | 256,364 | 332,221 | 366,697 | 413,363 | 429,627 | 394,831 | 227,099 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | 1,062,344 | 1,003,967 | 957,020 | 913,771 | 870,107 | 831,494 | 804,354 | 776,852 | 764,035 | 746,759 |

# பெறுமதி சேர்க்கப்பட்ட அறிக்கை

| | 2022 இலங்கை ரூபா மில்லியன் | 2021 இலங்கை ரூபா மில்லியன் (மீளமைக்கப்பட்டது) |
|---|---|---|
| **உருவாக்கப்பட்ட பெறுமதி** | | |
| வருமானம் | **308,457** | 248,776 |
| வேறு வருமானம் | **11,581** | 11,466 |
| நிதி வருமானம் | **1,394** | 1,131 |
| வெளியாட்களால் வழங்கப்பட்ட வளங்களுக்கான செலவு | **(281,395)** | (143,792) |
| **நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட மொத்த பெறுமதி** | **40,037** | 117,582 |
| **பெறுமதி விநியோகிக்கப்பட்டது** | | |
| **ஊழியர்களுக்கு சம்பளமாகவும் வேறு நன்மைகளாகவும்.** | **44,980** | 47,863 |
| **அரசாங்க வருமானத்திற்கு** | | |
| வருமான வரி | **-** | - |
| ஏனைய வரிகள் | **11,913** | 3,504 |
| **மூலதனக் கடன் கொடுத்தவர்களுக்கு** | | |
| கடன்களுக்கான வட்டி | **41,749** | 20,431 |
| **சமூகத்திற்கு** | | |
| கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு | **172** | 24 |
| கோவிட் காரணமாக வழங்கப்பட்ட சலுகைகள் | **1** | 196 |
| மாணிய விலையில் மின்சாரம் வழங்கப்பட்டது | **180,156** | 46,736 |
| **வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்திற்காக தக்கவைக்கப்பட்ட பெறுமதி** | | |
| தக்கவைக்கப்பட்டது | **(272,928)** | (34,644) |
| தேய்மானம் | **33,994** | 33,471 |
| **நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்ட மொத்த பெறுமதி** | **40,037** | 117,582 |

# நிறுவன ஆளுகை அறிக்கை

இலங்கையின் மிகப் பெரிய மின்வலுப் பயன்பாட்டு நிறுவனம் என்ற வகையில், சிறந்த நிறுவன ஆளுகை நடைமுறைகளின் முக்கியத்துவத்தை நாங்கள் ஏற்பிசைவு செய்கின்றோம். இ.மி.ச. இன் செயல்பாடுகள் மற்றும் நீண்ட கால நிலைபேற்றுத்தன்மையை வழிநடத்தும் மற்றும் கட்டுப்படுத்தும் சிறந்த நடைமுறைகள் மற்றும் செயன்முறைகளை நாங்கள் பயன்படுத்துகின்றோம். இந்த நடைமுறைகளும் செயன்முறைகளும் அடிப்படையில் தீர்மானமெடுத்தலையும் நிறுவனத்தின் செயற்பாட்டு இயலுமையையும் எளிதாக்குகிறது. அதே நேரம், நேர்மை, பொறுப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் ஆரோக்கியமான சமநிலை ஒன்றையும் பேணுகிறது. எங்கள் வணிகத்தின் அனைத்து அம்சங்களிலும் நிறுவன ஆளுகையின் மிகவுயர்ந்த நியமங்களை நிலைநிறுத்துவதற்கு நாங்கள் முயற்சிக்கின்றோம். இந்த அத்தியாயம் எங்கள் ஆளுகை வேலைச்சட்டகத்தையும் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளையும் கோடிட்டுக் காட்டுகிறது.

## ஆளுகை வேலைச்சட்டகம்

நிறுவனமானது நியாயமான, பொறுப்பான, வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறத்தக்க முறையில் முகாமை செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் எங்கள் ஆளுகை வேலைச்சட்டகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வேலைச்சட்டகம் கீழ்வரும் பிரதான மூலகங்களை உள்ளடக்கியுள்ளது.

## பணிப்பாளர் சபை

எங்கள் சபையானது, இ.மி.ச. இன் விவகாரங்களை கூட்டாக மேற்பார்வையிடுகின்ற சுதந்திரமான, நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது. நிறுவனத்தின் செயலாற்றுகையை மீளாய்வு செய்யவும் மூலோபாய வழிநடத்தல்களை அமைக்கவும் முகாமைக்கு வழிகாட்டல்களை வழங்கவும் என சபையானது தொடர்ந்தும் கூடுகிறது. இந்தச் சபையானது நேரடியாக அரசாங்கத்திற்கு பொறுப்புக்கூறத்தக்கதாகும். எனவே அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் இ.மி.ச. இன் மேற்பார்வை, ஆளுகை மற்றும் முகாமையுடன் இணைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இ.மி.ச. ஆனது அதன் நாட்டதாரர்களின் நலனுக்காகவும் அவர்கள் ஒழுங்குமுறை வேலைச்சட்டகத்தினுள் முழு இணக்கத்துடன் இயங்குவதையும் உறுதிசெய்யும் கடமையையும் கொண்டிருக்கின்றனர்.

## முகாமை

சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நிறுவனத்தின் செயல்பாடுகளை பயனுறுதிமிக்க வகையிலும் வினைத்திறனாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் முகாமிப்பதற்கும் எங்கள் முகாமைத்துவ அணி பொறுப்புடையதாக இருக்கிறது. இந்த அணியானது நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பொறுப்புக்கூறத்தக்கதாக இருப்பதுடன் நிலைபேறான வளர்ச்சியை அளிப்பதற்கும் ஊக்குவிக்கப்படுகிறது.

## கொள்கைகளும் நடைமுறைகளும்

எங்கள் செயல்பாடுகளை ஆளுகை செய்கின்ற மற்றும் விதிகள், ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதை உறுதி செய்கின்ற கொள்கைகளையும் நடைமுறைகளையும் நாங்கள் தாபித்துள்ளோம். இந்தக் கொள்கைகள் நேர்மை, பொறுப்புக்கூறல், பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை போன்ற பகுதிகளை உள்ளடக்கியுள்ளன. தாபிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டங்கள், நன்கு தாபிக்கப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச பெறுகை வழிகாட்டல்களுக்கு ஏற்ப போட்டித்தன்மை வாய்ந்த பெறுகைச் செயன்முறைகள், உறுதியான ஒழுக்காற்று நடைமுறைகள் போன்றவை வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காக நடைமுறையில் இருக்கின்றன. உள்ளகக் கணக்காய்வுகள், பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழு (கோப்), மற்றும் பிற பாராளுமன்றக் குழுக்களின் ஊடாக தொடர்ச்சியான கண்காணிப்பும் மீளாய்வுகளும், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் நிறுவனம் இணக்கமாகச் செல்வதை மேலும் உறுதி செய்கின்றன

## நாட்டதாரரின் ஈடுபாடு

வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள், ஊழியர்கள் மற்றும் சமுதாயத்தினர் உள்ளிட்ட எங்கள் நாட்டதாரர்களின் கரிசனைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைப் புரிந்து கொள்வதற்காக நாங்கள் அவர்களுடன் தொடர்பில் இருக்கின்றோம். அனைத்து நாட்டதாரர்களுடனும் வெளிப்படைத்தன்மையான மற்றும் திறந்த தொடர்பாடலைப் பேணுவதற்கு நாங்கள் முயற்சிக்கின்றோம். .

## உள்ளகக் கணக்காய்வுச் செயலாற்றுகை

உள்ளகக் கணக்காய்வு என்பது இ.மி.ச. நிறுவன ஆளுகையின் ஒரு முக்கிய அங்கமாகும். இது இ.மி.ச. இன் உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர் முகாமைத்துவம் மற்றும் ஆளுகைச் செயன்முறைகள் ஆகியவற்றின் சுயாதீன மதிப்பீடொன்றை வழங்குவதுடன் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் உள்ளகக் கொள்கைகளுடன் நிறுவனத்தின் இணக்கத்தைக் கண்காணிப்பதற்கும் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடு பொறுப்பானதாக உள்ளது. இ.மி.ச. இன் உள்ளகக் கணக்காய்வுக் கிளையானது தமது நிறுவன ஆளுகைப் பொறுப்புகளை முன்னெடுப்பதற்கு உதவுகின்ற அதே வேளை நிறுவனத்தினுள் பயனுறுதிமிக்கதும் வினைத்திறனானதுமான வணிக மற்றும் செயல்பாட்டுச் செயன்முறைகளை மேம்படுத்தவும் ஊக்குவிக்கவும் உதவுகிறது.

அதற்கிணங்க, அனைத்து அலகுகள் மற்றும் கிளைகளிலும் இனங்காணப்படும் இடர் மற்றும் ஊழியர் கிடைப்பனவின் மட்டத்தைக் பொறுத்து கணக்காய்வு மேற்கொள்ளப்படுகிறது. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் காலப்பகுதியில் கிளையினால் பின்வரும் கணக்காய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டன.

*அட்டவணை CGR1: 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் விபரங்கள்*

| கணக்காய்வின் தன்மை | கணக்காய்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| வருமானக் கணக்காய்வுகள் | 24 |
| முறைமைக் கணக்காய்வுகள் | 30 |
| **விசேட புலனாய்வுகள்** | 15 |
| கணக்காய்வுக் குழு அறிக்கைகள் | 22 |
| சபைத் தகவல்கள் | 4 |
| **மொத்தம்** | **95** |

கணக்காய்வுகள், CEB இல் நடைமுறைப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட நடைமுறைகள் இன்னும் சரியாக உள்ளதா மற்றும் அவை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் திறம்பட நிர்வகிக்கப்படுகிறதா என கண்டறிய நடைமுறை கணக்காய்வுகள் அதிகமாக கவனம் செலுத்தப்பட்டது.



வவுனியா சோலார் பேனல் பூங்கா

# பணிப்பாளர் சபை

## என். எஸ். இலங்ககோன்

| | |
|---|---|
| **பதவி** | தலைவர் |
| **பதவிக்காலம்** | 2022 யூன் 13 இலிருந்து |
| **திறன்களும் அனுபவமும்** | இலங்கை மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளிலும் கருவி மதிப்பீடு மற்றும் கடல்விமான மதிப்பீடு ஆகியவற்றைக் கொண்ட ஒரு தகுதிவாய்ந்த வர்த்தக விமானி. இவர் இலங்கையிலுள்ள தேசிய வணிக முகாமைத்துவ நிறுவகத்திலிருந்து மனித வள முகாமைத்துவத்தில் டிப்ளோமா பட்டமும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் தலைவராக, பணிப்பாளராக மற்றும் சிரேஷ்ட முகாமையாளராக வணிக முகாமைத்துவத்தில் 16 வருட கால அனுபவத்தைக் கொண்டிருக்கிறார். அத்துடன் சிறந்த நிறுவன ஆளுகை விதிமுறைகளையும் நடைமுறைகளையும் மற்றும் நேர்மை மற்றும் நன்னடத்தையின் மிகவுயர்ந்த தரங்களை மேம்படுத்துவதற்கான வேலைகளையும் தாபித்துள்ளார். |
| **பிற நிறுவனங்களில் வகிக்கின்ற வகிபாகம்** | தலைவர் - ஸ்ரீ லங்கா எனேஜீஸ் (பிரை.) லிமிட்டெட்.<br>தலைவர் - வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலுக் கம்பனி<br>பணிப்பாளர் - லங்கா இலக்ரிசிற்றி கம்பனி (பிரை.) லிமிட்.<br>பணிப்பாளர் - LTL ஹோல்டிங்ஸ் (பிரை.) லிமிட்.<br>பணிப்பாளர் - LTL டிரான்ஸ்போமர்ஸ் (பிரை.) லிமிட்.<br>பணிப்பாளர் - LTL கல்வனைசர்ஸ் (பிரை.) லிமிட். |

## எம். எம். நயீமுதீன்

| | |
|---|---|
| **பதவி** | சபை அங்கத்தவர் |
| **பதவிக்காலம்** | 2020 சனவரி 17 இலிருந்து |
| **திறன்களும் அனுபவமும்** | SLAS இன் விசேட தர அதிகாரி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் முகாமையாளர்களின் சக உறுப்பினர். இவர் SLIDA இலிருந்து பொது முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து பொருளியல் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் பொது நிருவாகத்தில் சான்றிதழையும் பொது முகாமைத்துவத்தில் சான்றிதழையும்கூட பெற்றுள்ளார். இவர் உயர் மட்ட தலைமைத்துவப் பதவிகளில் 16 வருட கால அனுபவத்துடன் பொதுத் துறை முகாமையாளராக ஏறத்தாழ 26 வருட அனுபவத்தைக் கொண்டிருக்கிறார். இவர் கொள்கைச் சீர்திருத்தங்கள், நிறுவன ரீதியான வலுப்படுத்தல்கள், செயற்றிட்ட முகாமைத்துவம், பெறுகை மற்றும் மனித வளங்கள் தொடர்பில் அரச நிறுவனங்களை வழிப்படுத்தியதற்காக பாராட்டப்பட்டவர். |
| **பிற நிறுவனங்களில் வகிக்கின்ற வகிபாகம்** | |

## எம். ஆர். வி. ஆர். மீபுர

| | |
|---|---|
| **பதவி** | சபை அங்கத்தவர் |
| **பதவிக்காலம்** | 2022 சனவரி 11 இலிருந்து |
| **திறன்களும் அனுபவமும்** | இவர் அடிலெய்ட் பல்கலைக்கழகத்திலிருந்து நிதி மற்றும் வணிகப் பொருளியலில் முதுமாணிப் பட்டத்தையும் கொழும்புப் பல்கலைக் கழகத்திலிருந்து வணிகக் கல்வியில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து மனித வள முகாமைத்துவத்தில் விசேட பட்டத்தையும் பெற்றுள்ளார்.<br>இவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சக உறுப்பினர், பொது நிதி மற்றும் அபிவிருத்தி கணக்கியலில் நிறுவகத்தின் இணை உறுப்பினர், இலங்கை சான்றிதழ் முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் ஒரு உறுப்பினர், இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகத்தின் ஒரு சிரே'ட உறுப்பினர் மற்றும் இலங்கை கணக்காளர் சேவையின் உறுப்பினர்.<br>இவர் 2021.01.18 ஆந் திகதியிலிருந்து 2021.07.21 ஆந் திகதி வரை பொது நிறுவனங்கள் திணைக்களத்தில் பதில் மேலதிக பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றியுள்ளார். 2013-05-15 ஆந் திகதியிலிருந்து 2019-01-20 ஆந் திகதி வரை பொது நிறுவனங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் (கொள்கைத் தீர்மானம்) ஆகவும் 2012 மே மாதம் தொடக்கம் 2013 மே மாதம் வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் கணக்காளர் (வருமானம் மற்றும் மீளளிப்பு) ஆகவும் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 மே மாதம் வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் கணக்காளர் (வழங்கல்கள்) ஆகவும் 2008 தொடக்கம் 2009 வரை பொது நிறுவனங்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ஆகவும் 2007 தொடக்கம் 2008 வரை தொழிற்பயிற்சி மற்றும் தொழினுட்பப் பயிற்சி அமைச்சின் கணக்காளராகவும் 2005 தொடக்கம் 2007 வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தில் கணக்காளர் (ICASL பயிற்சித் தேவைகள்) ஆகவும் 2002 தொடக்கம் 2005 வரை பிரதேச செயலக (neSt) கணக்காளராகவும், 1999 தொடக்கம் 2002 வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்கள திறைசேரிக் கிளையில் கணக்காய்வுப் பரிசோதகராகவும் பணியாற்றியுள்ளார். |
| **பிற நிறுவனங்களில் வகிக்கின்ற வகிபாகம்** | 2021-07-21 தொடக்கம் 2022-12-31 வரை நிதிக் கொள்கை திணைக்களத்திற்கான மேலதிக பணிப்பாளர் நாயகம். |

## கலாநிதி பீ. விஜயரத்ன

| | |
|---|---|
| **பதவி** | சபை அங்கத்தவர் |
| **பதவிக்காலம்** | 2021 சனவரி 7 இலிருந்து |
| **திறன்களும் அனுபவமும்** | இவர் கலாநிதிப் பட்டத்தையும் (அமெரிக்கா), பொது நிருவாக முதுமாணிப் பட்டத்தையும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் PIM BSC விசேட பொது நிருவாகப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை நிருவாக சேவை உறுப்பினராக பொதுத் துறையில் 35 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருக்கிறார். இவர் இ.மி.ச. இற்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் விவசாய அமைச்சின் செயலாளராக பணியாற்றியிருந்தார். இவர் இளைஞர், திறன் அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளராகவும் இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாகவும் பதவி வகித்திருந்தார். |
| **பிற நிறுவனங்களில் வகிக்கின்ற வகிபாகம்** | |

| ரூபன் விக்கிரமாராய்ச்சி | |
|---|---|
| **பதவி** | சபை அங்கத்தவர் |
| **பதவிக்காலம்** | 2020 ஏப்ரல் 24 இலிருந்து |
| **திறன்களும் அனுபவமும்** | இவர் களனிப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பட்டதாரியாக இருப்பதுடன் தனியாள் முகாமைத்துவத்தில் பட்டப் பின் டிப்ளோமைவையும் பெற்றுள்ளார். இவர் இ.மி.ச. உள்ளகக் கணக்காய்வுக் கிளை மற்றும் விசேட புலனாய்வுகள் கிளை ஆகியவற்றில் 36 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருக்கிறார். மேலும், இவர் இ.மி.ச. இன் பணிப்பாளர் சபை, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர், ஒழுக்காற்று மேன்முறையீட்டு சபையின் உறுப்பினர் மற்றும் ஊழியர் குறைகேள் குழு ஆகியவற்றிலும் கடமையாற்றியுள்ளார். இவர் இ.மி.ச. இன் விசேட புலனாய்வுகள் கிளையின் நிறுவன தலைவராகவும் இருந்தார். |
| **பிற நிறுவனங்களில் வகிக்கின்ற வகிபாகம்** | |

| ஜீ. பீ. என். எம். அபேசேகர | |
|---|---|
| **பதவி** | சபை அங்கத்தவர் |
| **பதவிக்காலம்** | 2021 டிசெம்பர் 24 இலிருந்து |
| **திறன்களும் அனுபவமும்** | இவர் கலைப்பிரிவில் (சமூகவியல்) முதுமாணிப் பட்டத்தையும், வணிக முகாமைத்துவத்தில் பட்டப் பின் டிப்ளோமாவையும், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டில் டிப்ளோமாவையும் பொது முகாமைத்துவத்தில் சான்றிதழையும் அரச முகாமைத்துவத்தில் சான்றிதழையும் பெற்றுள்ளார்.<br><br>இவர் இலங்கை நிருவாக சேவையின் (SLAS) ஓர் உறுப்பினராக அரச சேவையில் 22 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன் நீதி அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளராக முன்னனுபவத்தையும் கொண்டிருக்கிறார். இதற்கு மேலதிகமாக, பல அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும் பணிப்பாளராகவும் பதவி வகித்துள்ளார். |
| **பிற நிறுவனங்களில் வகிக்கின்ற வகிபாகம்** | கைத்தொழில் அமைச்சின் மேலதிக செயலாளர். |

| டீ. பீ. எம். சந்தன | |
|---|---|
| **பதவி** | சபை அங்கத்தவர் |
| **பதவிக்காலம்** | 2022 டிசெம்பர் 12 இலிருந்து |
| **திறன்களும் அனுபவமும்** | இவர் இலங்கை, கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் கலாநிதிப் பட்டம் படித்துக் கொண்டிருக்கிறார்.<br><br>இவர் மொரட்டுவை பல்கலைக்கழகத்திலிருந்து கட்டமைப்புசார் பொறியியல் வடிவமைப்புகளில் பொறியியல் முதுமாணிப் பட்டத்தையும், மொரட்டுவை பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிருவாக முதுமாணிப் பட்டத்தையும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து குடிசார் பொறியியலில் டீஎஸ்சீ பொறியியல் (சிறப்பு) பட்டத்தையும் பெற்றுள்ளார்.<br><br>இதற்கு மேலதிகமாக, கீழே தரப்பட்டுள்ளவாறு அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் பல பிரதான முகாமைத்துவ மட்டப் பதவிகளை வகித்த அனுபவத்தைக் கொண்டுள்ளார்.<br><br>- உதவிப் பொது முகாமையாளர் (MD&T) – தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை (NWSDB) - (2017-07-01 இருந்து 2020-01-06 வரை)<br>- பிரதம பொறியியலாளர் /PM (நிரந்தர) – NWSDB (O&M- பாரிய கொழும்பு கழிவுநீர்)/ பதில் PM (GPOBA செயற்றிட்டம்) - (2010-06-23 இலிருந்து 2017-06-30 வரை)<br>- பிரதம பொறியியலாளர் (நிரந்தர) – NWSDB (O&M- பாரிய கொழும்பு கழிவுநீர்) - (2010-04-05 இருந்து 2010-06-22 வரை)<br>- பிரதம பொறியியலாளர் (பதில்) – NWSDB (P&D)/NWSDB (O&M- பாரிய கொழும்பு கழிவுநீர்) - (2009-10-01 இலிருந்து 2010-04-04 வரை)<br>- பிரதம பொறியியலாளர் (மேலதிக கடமை) - NWSDB (P&D) – (2009-07-01 இலிருந்து 2009-09-30 வரை)<br>- சிரேஷ்ட பொறியியலாளர் – NWSDB (P&D) - (2006-01-10 இலிருந்து 2009-06-30 வரை)<br>- பொறியியலாளர் (வகுப்பு 1) – NWSDB (P&D) – (2005-07-01 இலிருந்து 2006-01-09 வரை)<br>- பொறியியலாளர் (வகுப்பு 11) – NWSDB (FFP) – (2001-07-01 இலிருந்து 2005-06-30 வரை)<br>- பயிற்சிப் பொறியியலாளர் - NWSDB (P&D) - (2001-01-01 இலிருந்து 2001-06-30 வரை)<br>- குடிசார் பொறியியலாளர் - மெகா என்ஜினியரிங் (பிரை.) லிமிட் - (2000-06-26 இலிருந்து 2000-12-31 வரை)<br>- செயற்றிட்டப் பொறியியலாளர் - கார்லன்ட் கண்டி (பிரை.) லிமிட். - (1999-09-01 இலிருந்து 2000-06-25 வரை). |
| **பிற நிறுவனங்களில் வகிக்கின்ற வகிபாகம்** | தலைவர் - அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனம் (07-01-2020 இலிருந்து 06-08-2022 வரை) |

# பணிப்பாளர்களின் அறிக்கை

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 49 இற்கு இணங்க, இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை (சபை) 2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

## முக்கிய செயற்பாடுகள்

மின் பிறப்பாக்கம், பெறுகை, மின் பரிமாற்றம், பயனுறுதிமிக்க மின் விநியோகம் மற்றும் மின்சார விற்பனை என்பனவே சபையின் முக்கிய செயற்பாடுகளாக இருக்கின்றன. நாட்டின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு முரணான எந்தவொரு செயற்பாட்டிலும் சபை ஈடுபடுவதில்லை.

## துணைக் கம்பனிகளும் கூட்டு முயற்சிகளும்

துணைக் கம்பனிகள் மற்றும் கூட்டு முயற்சிகளின் முக்கிய செயற்பாடுகள் பற்றி பக்க இல. 87 இல் உள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளின் கீழ் தரப்பட்டுள்ளது. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் சபை மற்றும் குழுமத்தின் முக்கிய செயற்பாடுகளின் தன்மையில் குறிப்பிடத்தக்க எவ்வித மாற்றங்களும் இல்லை.

## குழுமக் கட்டமைப்புக்கான மாற்றங்கள்

ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட குழுமக் கட்டமைப்புக்கான மாற்றங்கள் பற்றிய விபரங்கள் இந்த வருடாந்த அறிக்கையில் பக்க இல. 116 தொடக்கம் 117 வரையிலுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 12 மற்றும் 13 இல் தரப்பட்டுள்ளன.

## ஆண்டிற்கான செயலாற்றுகையின் மீளாய்வு

பக்க இல. 12 தொடக்கம் 13 வரையில் உள்ள தலைவரின் செய்தியில் சபை. குழுமத்தின் ஆண்டிற்கான செயலாற்றுகை சுட்டிணைக்கப்பட்டுள்ளது. பக்க இல. 14 தொடக்கம் 15 வரையுள்ள பொது முகாமையாளரின் மீளாய்வில், மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் இடம்பெற்ற சபைச் செயற்பாடுகளின் விபரமான விளக்கம் தரப்பட்டுள்ளது. பக்க இல. 65 தொடக்கம் 69 வரையுள்ள "நிதிசார் மீளாய்வு" என்ற தலைப்பிடப்பட்ட பகுதியில் சபையின் நிதிசார் செயலாற்றுகை மற்றும் நிலைமை என்பன விபரமாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. சபையின் விவகாரங்களில் நியாயமான மீளாய்வைத் தருகின்ற இந்த அறிக்கைகள் வருடாந்த அறிக்கையின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

## பங்களிக்கப்பட்ட மூலதனம்

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இ.மி.ச. சட்டத்தின்படி 1969 இல் இ.மி.ச. தாபிக்கப்பட்டதன் பின்னர், இ.மி.ச. அரசாங்க மின் திணைக்களத்தைப் பொறுப்பேற்றதிலிருந்து (னுபுநுா)இ இ.மி.ச. பொறுப்பேற்ற நிகரச் சொத்துக்களின் பெறுமதியையும் குறிப்பிட்ட மூலதன அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்காக புழுளுடு இனால் செய்யப்பட்ட பங்களிப்புகளையும் பங்களிக்கப்பட்ட மூலதனம் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. பங்களிக்கப்பட்ட மூலதனம் பற்றிய விபரங்கள் பக்க இல. 122 இலுள்ள நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இல. 22 இல் தரப்பட்டுள்ளன.

## தனிச்சங்களின் வழங்கலும் பயன்பாடும்

2022 ஏப்ரல் மாத காலப்பகுதியில், ரூபா 20 பில்லியன் பெறுமதியான சிரேஷ்ட பாதுகாப்பற்ற பட்டியலிடப்பட்ட மீட்கத்தக்க தரமதிப்பீட்டு தனிச்சங்கள், 9.35% என்ற நிலையான கூப்பன் வீதத்திலும் 5 வருட முதிர்வுக் காலத்துடனும் ரூபா 100 என்ற விநியோக விலையில் வழங்கியிருந்தது.

தனிச்சங்களின் வழங்கல் ஊடாகத் திரட்டப்பட்ட நிதி (ரூபா 20 பில்லியன்) முழுவதும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்தும் (நிதியில் 30%) ஏனைய சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களிடமிருந்தும் (ஐ.பீ.பீ.) (நிதியில் 70%) பெறப்பட்ட கடன் வசதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது.

## தனிச்ச வர்த்தகத் தகவல்கள்

2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தனிச்ச வர்த்தகம் தொடர்பான தகவல்கள் கீழ்வருமாறு:

| | |
|---|---|
| அதிகபட்ச விலை | 88.61 |
| குறைந்தபட்ச விலை | 88.61 |
| **இறுதியாக வர்த்தகம் செய்த விலை** | 88.61 |
| வர்த்தகம் செய்த அளவு | 507,900 |
| இறுதியாக வர்த்தகம் செய்த திகதி | 2022-01-20 |

## நிறுவன சமூகப் பொறுப்புடமை (ஊளுசு)

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டின் காலப்பகுதியில் நிறுவன சமூகப் பொறுப்புடமை தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் பக்க இல. 58 - 59 இலுள்ள நிறுவன சமூகப் பொறுப்புடமை அறிக்கை எனத் தலைப்பிடப்பட்டுள்ள பகுதியில் தரப்பட்டுள்ளது.

## மின்சாரத் துறையின் நிலைபேற்றுத்தன்மைக்கான எமது அணுகுமுறை

சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நிலைபேற்றுத்தன்மையின் சரியான சமநிலையைப் பேணியவாறு இ.மி.ச. அதன் செயற்பாடுகளை ஆற்றுவதற்கு உறுதிபூண்டுள்ளது. சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நிலைபேற்றுத்தன்மையை அடைவதற்கான இ.மி.ச. இன் அணுகுமுறை பக்க இல. 53 - 57 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

விவகாரங்களின் உண்மையான மற்றும் நியாயமான பார்வையைப் பிரதிபலிக்கும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான பொறுப்பு பணிப்பாளர்களைச் சார்ந்ததாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டம் ஆகியவற்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்படுகின்றன என பணிப்பாளர்கள் கருதுகின்றனர். துணைக் கம்பனிகளைப் பொறுத்தவரை, நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கவும் தயாரிக்கப்படுகின்றன

## கணக்காய்வாளரின் அறிக்கை

இலங்கை சனநாயக சோ'லிசக் குடியரசு அரசியலமைப்பின் உறுப்புரை 154 இன் ஏற்பாடுகள் மற்றும் 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 51 ஆகியவற்றுக்கு இணங்க, இலங்கை மின்சார சபையின் கணக்காய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதி காணப்படுகிறார். சபையின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் சபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2022 டிசெம்பர் 31 இலான ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் ஆகியன இந்த வருடாந்த அறிக்கையில் பக்கம் 154 இல் தரப்பட்டுள்ளன.

## கணக்கீட்டுக் கொள்கைகள்

குழுமமும் சபையும் அவற்றின் நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKASs) மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (SLFRSs) ஆகியவற்றிற்கிணங்க தயாரிக்கின்றன. நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பில் பின்பற்றப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் பக்க இல. 87 தொடக்கம் 104 வரை தரப்பட்டுள்ளன. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் சபையினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் எவ்வித பொருண்மைசார் மாற்றங்களும் இல்லை.

## சபையுடனான ஒப்பந்தங்களில் சபை அங்கத்தவர்களின் நாட்டம்

நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 39.4 இல் வெளிப்படுத்தப்பட்டவற்றைத் தவிர, 2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் சபையுடனான எந்தவொரு ஒப்பந்தம் தொடர்பாகவோ அல்லது முன்மொழியப்பட்டுள்ள ஏதாவது ஒப்பந்தம் தொடர்பாகவோ பணிப்பாளர்கள் எவ்வித நேரடியான அல்லது மறைமுகமான நாட்டத்தையும் கொண்டிருக்கவில்லை.

## ஊதியக் குழு

இலங்கை மின்சார சபை பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு அரசாங்க நிறுவனமாகும். அதற்கிணங்க, நிருவாக நடைமுறைகளும் கட்டுப்பாட்டு நடைமுறைகளும் சுற்றறிக்கைகள், சட்டங்கள் போன்றவற்றால் ஆளுகை செய்யப்படுகின்றன. இ.மி.ச. பணிப்பாளர்களின் ஊதியமானது நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட PED 3/2015 ஆம் இலக்க பொது நிறுவன சுற்றறிக்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதால் ஊதியக் குழுவொன்றைத் தாபிப்பது இ.மி.ச. இற்கு தேவையற்றதாகும்.
கீழ்வரும் உப குழுக்கள் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளன.

1. ஊழியர் குறைகேள் குழு
2. ஒழுக்காற்று மேன்முறையீட்டு சபை
3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

## ஊழியர் குறைகேள் குழு

இ.மி.ச. இன் ஊழியர்கள் / முன்னாள் ஊழியர்களின் தனிப்பட்ட மனக்குறைகளைக் கையாள்வதற்காக சபையால் நியமிக்கப்பட்ட ஓர் உப குழுவே ஊழியர் குறைகேள் குழு (EGC) ஆகும்.

இந்தக் குழுவானது இ.மி.ச. இன் இரண்டு சபை அங்கத்தவர்களையும் பல சிரேஷ்ட நிறைவேற்றுத்தர அதிகாரிகளையும் உள்ளடக்கியுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான குழுவின் சபை அங்கத்தவர் விபரம் கீழ்வருமாறு:

| பெயர் | இ.மி.ச. இல் வகிக்கும் பதவி | குழுவில் வகிக்கும் பதவி | பதவிக்காலம் |
|---|---|---|---|
| திரு. என்.எஸ். இலங்ககோன் | துணைத் தலைவர் | தலைவர் | 2020-12-16 தொடக்கம் 2022-06-13 வரை |
| கலாநிதி பி. விஜயரத்ன | சபை அங்கத்தவர் | தலைவர் | 2022 டிசெம்பர் தொடக்கம் இன்று வரை |
| திரு. ரூபன் விக்கிரமாராய்ச்சி | சபை அங்கத்தவர் | அங்கத்தவர் | 2020 தொடக்கம் இன்று வரை |

ஏனைய அங்கத்தவர்கள் கீழ்வருமாறு

| பெயர் | இ.மி.ச. இல் வகிக்கும் பதவி |
|---|---|
| பொறி. எச்.எம்.கே.ஜே. வீரசூரிய | DGM (C&C), DD 02 |
| பொறி. ஆர்.கே.பீ.எஸ். குணதிலக | DGM (CA), Gen. Division |
| பொறி. பீ.ஏ.ஜே.பீ.கே. பெரேரா | DGM (P) |
| திருமதி. டபிள்யூ.பீ.ஜீ.சீ.எஸ். ஜயலத் | Actg. AFM (Corporate) |
| பொறி. எம்.ஐ.எம். இர்ஷாத் | CE (Policy) |
| திருமதி. பீ.ஆர். கந்தபன்கொட | HRM |

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குழுவானது உத்தியோகபூர்வமாக இரண்டு தடவைகள் கூடியதுடன் இ.மி.ச. இன் ஊழியர்கள் / முன்னாள் ஊழியர்களின் 38 தனிப்பட்ட மனக்குறைகள் பற்றி மீளாய்வு செய்திருந்தது.

கூட்டக் குறிப்புகள் அங்கீகாரத்திற்காக சபைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இ.மி.ச. இன் பொது முகாமையாளர் அந்தந்த முடிவுகளை உரியவாறு செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவாக எடுப்பார்.

சபைச் செயலாளர் இந்த உப குழுவின் சபை கூட்டுநராக செயற்படுகிறார்.

## ஒழுக்காற்று மேன்முறையீட்டு சபை

சபையின் மற்றுமொரு உப குழுவாக இருப்பது ஒழுக்காற்று மேன்முறையீட்டு சபை ஆகும். இந்தக் குழு இ.மி.ச. ஊழியர்களின் ஒழுக்காற்று விடயங்களைக் கையாள்வதற்காக அமைக்கப்பட்டது. இந்தக் குழு 2022 நிதியாண்டில் உத்தியோகபூர்வமாக இரண்டு தடவைகள் கூடியதுடன் ஒன்பது வழக்குகளையும் கையாண்டிருந்தது.

குழுக் கூட்டத்தின் கூட்டக் குறிப்புகள் அங்கீகாரத்திற்காக சபைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இ.மி.ச. இன் பொது முகாமையாளர் அந்தந்த முடிவுகளை உரியவாறு செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவாக எடுப்பார்.

2022 ஆம் ஆண்டிற்கான குழுவின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. சபைச் செயலாளர் இந்த உப குழுவின் சபை கூட்டுநராக செயற்படுகிறார்.

| பெயர் | இ.மி.ச. இல் வகிக்கும் பதவி | குழுவில் வகிக்கும் பதவி | பதவிக்காலம் |
|---|---|---|---|
| திரு. என்.எஸ். இலங்ககோன் | துணைத் தலைவர் | தலைவர் | 2022 பெப்ரவரி வரை |
| கலாநிதி. பி. விஜயரத்ன | சபை அங்கத்தவர் | தலைவர் | 2022-10-28 தொடக்கம் |
| திரு. ரூபன் விக்கிரமாராய்ச்சி | சபை அங்கத்தவர் | அங்கத்தவர் | 2019-03-27 தொடக்கம் இன்று வரை |
| திரு. ஜீ.பீ.என்.எம். அபேயசேகர | சபை அங்கத்தவர் | அங்கத்தவர் | 2022-10-28 |
| திரு. எல்.கே.எஸ்.யூ. தர்மகீர்த்தி | சபை அவதானிப்பாளர் | அங்கத்தவர் | 2021-10-06 தொடக்கம் இன்று வரை |
| திரு. பீ.எஸ். பத்திரத்ன | ஓய்வுபெற்ற மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் | அங்கத்தவர் | 2018-12-07 தொடக்கம் இன்று வரை |

### கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழு என்பது ஆளுகை அமைப்பின் ஓர் உப குழு ஆகும். இது நிதிசார் அறிக்கையிடல், நிறுவன இடர் முகாமைத்துவம், வருமானத்தை உறுதிசெய்யும் தொழிற்பாடுகள், உள்ளகக் கட்டுப்பாட்டுச் செயன்முறைகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வையும் சட்டநியதிக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளையும் மேலோட்டமாகப் பார்வையிடுவதில் சபையின் மேற்பார்வை கண்காணிப்பில் சபைக்கு உதவுகிறது.

கணக்காய்வுக் குழுவின் சாசனத்தில் தேவைப்படுத்தப்பட்டதன்படி, இக்குழுவானது ஆண்டிற்கு நான்கு தடவையாவது கூடுகிறது. இதற்கு நிதி அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சபை அங்கத்தவர் தலைமை வகிக்கிறார். இந்தக் குழுவில் நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்கள் உள்ளடங்குகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் சுயாதீனமானவர்கள். 2022 ஆம் ஆண்டிற்கான குழுவின் அங்கத்தவர்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பெயர் | பதவி | குழுவில் வகிக்கும் பதவி |
|---|---|---|
| திரு. எம்.ஆர்.வீ.ஆர். மீபுர | சபை அங்கத்தவர் | தலைவர் |
| திரு. எம்.எம். நயீமுதீன் | சபை அங்கத்தவர் | அங்கத்தவர் |
| திரு. பி. விஜேரத்ன | சபை அங்கத்தவர் | அங்கத்தவர் |
| திரு. ஆர். விக்கிரமாராய்ச்சி | சபை அங்கத்தவர் | அங்கத்தவர் |

இ.மி.ச. இன் பொது முகாமையாளர், இ.மி.ச. இன் நிதி முகாமையாளர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பிரதிநிதி, மின்வலு மற்றும் சக்தி அமைச்சின் பிரதிநிதி ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அழைக்கப்படுகின்றனர். குழுவின் சபை கூட்டுநராக உள்ளகக் கணக்காய்வுத் தலைவர் செயற்படுகிறார்.

நிதி அறிக்கையிடல், இடர் முகாமைத்துவம், வெளிவாரியான மற்றும் உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடுகளின் மீளாய்வு ஆகியவற்றின் மீதான உள்ளக கட்டுப்பாட்டிற்கான நிறுவனத்தின் ஒட்டுமொத்த வேலைச்சட்டகத்தை இக்குழு மீளாய்வு செய்கிறது. 2022 ஆம் ஆண்டில் குழுவானது நான்கு முறை கூடியதுடன் தங்களது விரிவான அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி வெளிவாரியான மற்றும் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்ததுடன் ஏற்கனவேயுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை வலுப்படுத்தத் தேவையான இடங்களில் செயல்படுத்தக்கூடிய மேலதிகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் தணிப்பு தந்திரோபாயங்களையும் பரிந்துரைத்துள்ளது.

ஆண்டு முழுவதும் நடத்தப்பட்ட குழுக் கூட்டங்களுக்கு வருகை தந்தோர் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| சபை அங்கத்தவர் | கணக்காய்வுக் குழுக் கூட்டத்திற்கான வரவு |
|---|---|
| திரு. எம்.ஆர்.வீ.ஆர். மீபுர | 4 |
| திரு. எம்.எம். நயீமுதீன் | 4 |
| திரு. பி. விஜேரத்ன | 2 |
| திரு. ஆர். விக்கிரமாராய்ச்சி | 4 |

### உறவுமுறைத் தரப்பு பரிவர்த்தனைகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 24 இன் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப உறவுமுறைத் தரப்பு வெளிப்படுத்தல்கள், ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுகளில் குறிப்பு இல. 39 இல் விவரிக்கப்பட்டுள்ளது.

### சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குதல்

பணிப்பாளர்கள் தமது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டியவரை, குழுவானது சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு முரணான எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறார்கள்.

### நிலுவையிலுள்ள வழக்கு

நிலுவையிலுள்ள வழக்குகள் காரணமாக எழுகின்ற எதிர்பாரா பொறுப்புகள், ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுகளில் குறிப்பு இல. 37.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சட்டநியதிக் கொடுப்பனவுகள்

அரசாங்கம் மற்றும் ஊழியர்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய அனைத்து சட்டநியதிக் கொடுப்பனவுகளும் உரிய நேரத்தில் செலுத்தப்பட்டுள்ளன என்பதை சபை உறுதிப்படுத்துகிறது

### ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதியாண்டின் இறுதிக்கும் இந்த அறிக்கைத் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்துகைகள் தேவைப்படுகின்ற எவ்வித பொருண்மைசார் நிகழ்வுகளும் ஏற்படவில்லை என்பது பணிப்பாளர்களின் கருத்தாக உள்ளது.

### தொடர்ந்தியங்கும் தன்மை

சபையின் வளங்கள் அதன் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு போதுமானதாக இருக்கின்றன என்பதில் பணிப்பாளர்கள் உறுதியாக இருக்கின்றனர். எனவே, நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும்போது தொடர்ந்தியங்கும் தன்மையின் அடிப்படை பிரயோகிக்கப்பட்டுள்ளது.

## வருடாந்த அறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பான ஊளுநு பட்டியல் தேவைப்பாடுகளுடன் இணங்குதல்

| பட்டியல் விதி, இல | வெளிப்படுத்தல் தேவைகள் | தொடர்பு / கருத்துகள் | பக்க இல. |
|---|---|---|---|
| 7.6 (i) | நிதியாண்டில் நிறுவனத்தின் பணிப்பாளர்களாக இருந்த நபர்களின் பெயர்கள். | பணிப்பாளர்களின் அறிக்கை | 74 - 75 |
| 7.6 (ii) | ஆண்டின் காலப்பகுதியில் நிறுவனம் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் முக்கிய செயற்பாடுகள் மற்றும் மாற்றங்கள், ஏதும் இருப்பின். | பணிப்பாளர்களின் அறிக்கை. கணக்காய்வு செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 12.1 | 76, 116 |
| 7.6 (iii) | வாக்குரிமை மற்றும் வாக்குரிமையற்ற பங்குகளை வைத்திருக்கும் 20 பெரிய உரிமையாளர்களிடம் உள்ள பங்குகளின் பெயரும் எண்ணிக்கையும் அத்துடன் வைத்திருக்கும் அத்தகைய பங்குகளின் சதவீதமும். | பொருத்தமற்றது | - |
| 7.6 (iv) | பொதுமக்கள் வைத்திருக்கும் சதவீதம். | பொருத்தமற்றது | - |
| 7.6 (v) | ஒவ்வொரு நிதியாண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் நிறுவனத்தின் பங்குகளில் ஒவ்வொரு பணிப்பாளர்களும் பிரதம நிறைவேற்று அதிகாரியும் வைத்திருக்கின்ற பங்குகள் பற்றிய ஒரு கூற்று. | பொருத்தமற்றது | - |
| 7.6 (vi) | நிறுவனத்தின் எதிர்பார்க்கத்தக்க பொருள் இடர் காரணிகள் தொடர்பான தகவல்கள். | இடர் முகாமைத்துவ அறிக்கை | 50 - 52 |
| 7.6 (vii) | நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் தொழில்துறை தொடர்புகளுடன் தொடர்புடைய பொருள் பிரச்சினைகள் பற்றிய விபரங்கள். | ஆண்டின் காலப்பகுதியில் எவ்வித பொருள் பிரச்சினைகளும் இடம்பெறவில்லை. | - |
| 7.6 (viii) | நிறுவனம் வைத்திருக்கும் காணிகளின் அளவுகள், அமைவிடங்கள், பெறுமதிகள் மற்றும் கட்டடங்களின் எண்ணிக்கையும் முதலீட்டு ஆதனங்களும். | சொத்து முகாமைப் பிரிவு | - |
| 7.6 (ix) | நிறுவனத்தின் குறிப்பிடு மூலதனத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் பங்குகளின் எண்ணிக்கை. | பொருத்தமற்றது | - |
| 7.6 (x) | உரிமையாண்மைப் பிணையங்களின் ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள வைத்திருப்பாளர்களின் எண்ணிக்கையின் வழங்கல் திட்டமும் அவர்களின் மொத்த வைத்திருப்புகளின் சதவீதமும். | பொருத்தமற்றது | - |
| 7.6 (xi) | விகிதங்கள் மற்றும் சந்தை விலைத் தகவல்கள்: | | |
| | ஒப்பீட்டு ரீதியான அரச பிணையங்களின் வட்டி வீதம், கடன்/ உரிமையாண்மை விகிதம், வட்டிக் காப்பு, விரைவுச் சொத்து விகிதம். | நிதிசார் மீளாய்வு | 69 |
| | ஆண்டின் காலப்பகுதியில் இருந்த சந்தை விலை மற்றும் விளைச்சல் (அதிகபட்ச விலை / குறைந்தபட்ச விலை /வர்த்தகம் செய்யப்பட்ட இறுதி விலை. | பணிப்பாளர்களின் அறிக்கை | 76 |
| | கடன் மதிப்பீட்டில் காணப்பட்ட ஏதாவது மாற்றங்கள் | கடன் மதிப்பீட்டில் எவ்வித மாற்றமும் இல்லை. | - |
| 7.6 (xii) | பெறுமதியானது புத்தகப் பெறுமதியிலிருந்து கணிசமானளவு வேறுபடின், காணியின் சந்தைப் பெறுமதி மற்றும் நிறுவனங்கள் அல்லது அதன் துணைக் கம்பனிகளின் நிலையான சொத்துக்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்களும். | பொருத்தமற்றது | - |
| 7.6 (xiii) | ஆண்டின் காலப்பகுதியில் பொதுமக்களுக்கான விநியோகம், உரிமைகள் விநியோகம் மற்றும் தனிப்பட்ட விற்பனைகள் ஊடாக நிறுவனம் திரட்டிய நிதிகள். | பொருத்தமற்றது | - |
| 7.6 (xiv) | ஒவ்வொரு ஊழியர் பங்கு உரிமை அல்லது இருப்புத் தேர்வுத் திட்டம் தொடர்பான தகவல்கள். | பொருத்தமற்றது | - |
| 7.6 (xv) | விதிகளின் பிரிவு 7 இலுள்ள 7.10.3, 7.10.5 (c) மற்றும் 7.10.6 (c) விதிகள் தொடர்பில் நிறுவன ஆளுகை நடைமுறைகள் தொடர்பான வெளிப்படுத்துகைகள். | பணிப்பாளர் சபை விபரங்கள் மற்றும் பணிப்பாளர்களின் அறிக்கை | 74 - 79 |
| 7.6 (xvi) | கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, நிறுவனத்தின் மொத்தச் சொத்துக்களில் 5% அல்லது உரிமையாண்மையில் 10% ஐ விஞ்சிய, இதில் எது குறைவானதோ அது தொடர்பான உறவுமுறைத் தரப்பு பரிவர்த்தனைகள். | கணக்காய்வு செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இல. 39. | 149 |

# கணக்காய்வு செய்யப்பட்ட கூட்டிணைத்த நிதி அறிக்கை
## இலாபம் அல்லது நட்டக் கூற்று

2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| தொடரும் செயற்பாடுகள் | குறிப்பு | குழுமம் 2022 | குழுமம் 2021 மீளமைக்கப்பட்டது | சபை 2022 | சபை 2021 மீளமைக்கப்பட்டது |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 4 | 374,626,063 | 290,885,609 | 308,457,234 | 248,776,409 |
| வீட்டுப் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் | 5 | (765) | (195,709) | (765) | (195,709) |
| விற்பனைக் கிரயம் | | (471,350,692) | (291,572,012) | (430,509,030) | (266,596,386) |
| **மொத்த இலாபம்/(நட்டம்)** | | (96,725,394) | (882,112) | (122,052,561) | (18,015,686) |
| ஏனைய செயற்பாட்டு வருமானமும் ஆதாயமும் | 6 | 27,282,467 | 18,070,822 | 11,581,152 | 11,465,996 |
| விநியோகக் கிரயம் | | (288,296) | (205,209) | - | - |
| ஏனைய செலவினம் | | (8,565,929) | (3,293,915) | - | - |
| நிர்வாக செலவினம் | | (22,806,333) | (13,172,097) | (16,353,884) | (8,290,064) |
| **செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | | (101,103,485) | 517,489 | (126,825,293) | (14,839,754) |
| நிதி வருமானம் | 7.1 | 4,228,389 | 3,286,672 | 1,394,312 | 1,131,379 |
| நிதிச் செலவினம் | 7.2 | (46,689,936) | (22,517,712) | (41,749,028) | (20,430,641) |
| நிதிக் கிரயம் - தேறியது | | (42,461,547) | (19,231,040) | (40,354,716) | (19,299,262) |
| கூட்டுத் தொழில்முயற்சி நட்டப் பங்கு | 13 | (6,373) | (5,080) | - | - |
| **நிகர நிதிச் செலவுக்கு பின் இலாபம் அல்லது நட்டம்** | | (143,571,405) | (18,718,631) | (167,180,009) | (34,139,016) |
| உரிமையாண்மையாக மாற்றுவதன் ஊடாக ஏற்படும் பரிமாற்ற இழப்பு | 22.1 | (94,688,683) | - | (94,688,683) | - |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)** | 8 | (238,260,088) | (18,718,631) | (261,868,692) | (34,139,016) |
| வருமான வரிச் செலவினம் | 9.1 | (1,827,397) | (3,169,923) | - | - |
| பிற்போட்ட வரி (அறவீடு)/மீளமைத்தல் | 9.2 | 756,684 | (45,132) | - | - |
| **தொடரும் செயற்பாடுகளிலிருந்து ஆண்டிற்க இலாபம்/(நட்டம்)** | | (239,330,801) | (21,933,686) | (261,868,692) | (34,139,016) |

**கீழ்வருமாறு பகிரப்படுகின்றது:**

| | 2022 | 2021 |
|---|---|---|
| தாய்க் கம்பனியின் பங்குதாரர்களுக்கு | (250,647,151) | (29,259,828) |
| கட்டுப்பாடற்ற வட்டி | 11,316,350 | 7,326,142 |
| | (239,330,801) | (21,933,686) |

பக்கங்கள் 87 முதல 153 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# கணக்காய்வு செய்யப்பட்ட கூட்டிணைத்த நிதி அறிக்கை
## முற்றுமடங்கிய வருமானக் கூற்று

2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| | | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|---|
| | குறிப்பு | 2022 | 2021 | 2022 | 2021 |
| தொடரும் செயற்பாடுகள் | | | மீளமைக்கப்பட்டது | | மீளமைக்கப்பட்டது |
| **ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)** | | (239,330,801) | (21,933,686) | (261,868,692) | (34,139,016) |
| **ஏனைய முற்றுமடங்கிய வருமானம்** | | | | | |
| பிந்திய தொழில் நலக் கடப்பாடுகள் மீதான உள்ளபடியான நட்டம் | | (10,948,707) | (377,986) | (11,058,850) | (504,579) |
| உள்ளபடியான ஆதாயம்/நட்டம் மீதான பிற்போட்ட வரித் தாக்கம் | | (34,876) | (33,122) | - | - |
| வெளிநாட்டு துனை நிறுவன செயற்பாட்டு மாற்றல்கள் மீதான பரிமாற்று வேறுபாடுகள் | | 8,307,720 | 935,845 | - | - |
| FVOCI நிதிச் சொத்துக்கள் மீதான நியாயப் பெறுமதி ஆதாயம் | | 411,257 | 1,082,877 | - | - |
| FVOCI கருவிகளின் நியாயமான மதிப்பில் நிகர மாற்றங்கள் மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி | | (93,831) | (92,688) | - | - |
| பணப்புழக்க ஹெட்ஜ் இருப்பு வேறுபாடு | | (3,172,261) | - | - | - |
| **வரி தேறிய மொத்த முற்றுமடங்கிய வருமானம்** | | (244,861,499) | (20,418,760) | (272,927,542) | (34,643,595) |

**கீழ்வருமாறு பகிரப்படுகின்றது:**

| | 2022 | 2021 |
|---|---|---|
| தாய்க் கம்பனியின் பங்குதாரர்களுக்கு | (259,628,280) | (28,862,085) |
| கட்டுப்பாடற்ற வட்டி | 14,766,781 | 8,443,325 |
| | (244,861,499) | (20,418,760) |

பக்கங்கள் 87 முதல் 153 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

## நிதி நிலைமைக் கூற்று

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| | | குழுமம் | | | சபை | | |
|---|---|---|---|---|---|---|---|
| சொத்துக்கள் | குறிப்பு | 2022 | 2021 மீளமைக்கப்பட்டது | சனவரி 01 இல் உள்ளவாறானது 2021 மீளமைக்கப்பட்டது | 2022 | 2021 மீளமைக்கப்பட்டது | சனவரி 01 இல் உள்ளவாறானது 2021 மீளமைக்கப்பட்டது |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 10 | 928,252,264 | 872,461,307 | 837,407,716 | 894,718,428 | 851,937,543 | 818,473,484 |
| அருவச் சொத்துக்கள் | 11 | 509,746 | 513,347 | 512,457 | 141,626 | 133,997 | 161,509 |
| உபகம்பனிகளில் முதலீடுகள | 12 | - | - | - | 911,813 | 911,813 | 911,813 |
| கூட்டுத் தொழில்முயற்சியில் முதலீடு | 13 | 39,304 | 25,677 | 30,757 | 348,606 | 328,606 | 328,606 |
| பெறவேண்டிய நிதிக் குத்தகை | 14 | 31,452,406 | 20,465,468 | 19,588,944 | - | - | - |
| பிறநடைமுறையல்லா நிதிச்சொத்துகள் | 15 | 28,870,304 | 28,054,665 | 24,418,096 | 5,782,582 | 7,700,399 | 8,859,225 |
| ஏனைய நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 16 | 3,625,768 | 1,830,583 | 2,160,224 | 2,495,752 | 851,383 | 1,073,891 |
| காப்புறுதி ஒதுக்கத்தில் முதலீடு | 17 | 12,460,350 | 10,657,598 | 9,980,730 | 12,460,350 | 10,657,598 | 9,980,730 |
| **மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்** | | 1,005,210,142 | 934,008,645 | 894,098,924 | 916,859,157 | 872,521,339 | 839,789,258 |
| விற்பனைக்கான நடைமுறையல்லா சொத்துக்கள் | 18 | 76 | 76 | 76 | 76 | 76 | 76 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | | |
| இருப்புக்கள் | 19 | 63,089,691 | 74,986,599 | 53,412,274 | 53,805,349 | 63,926,113 | 45,522,065 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 20 | 123,364,557 | 83,903,022 | 74,069,309 | 66,868,889 | 55,865,351 | 59,052,954 |
| தொடர்புடைய தரப்பிலிருந்து வருமதி | 21 | - | - | - | 13,304,651 | 3,612,627 | 5,322,241 |
| பெறவேண்டிய நிதிக் குத்தகை | 14 | 688,914 | 825,121 | 1,015,236 | - | - | - |
| ஏனைய நமைுறை நிதிச்சொத்துக்கள் | 15 | 25,575,582 | 29,922,547 | 33,652,650 | 2,358,209 | 2,601,739 | 2,826,654 |
| காசும் வங்கி மீதிகளும் | 32 | 22,122,521 | 15,309,470 | 9,719,896 | 9,147,367 | 5,439,757 | 3,604,157 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | 234,841,265 | 204,946,759 | 171,869,365 | 145,484,465 | 131,445,587 | 116,328,071 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 1,240,051,483 | 1,138,955,480 | 1,065,968,365 | 1,062,343,698 | 1,003,967,002 | 956,117,405 |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | | | | | | |
| **மூலதனம் மற்றும் உரிமையாண்மை** | | | | | | | |
| பங்களிக்கப்பட்ட மூலதனம் | 22 | 865,159,371 | 413,054,569 | 391,730,584 | 865,159,371 | 413,054,569 | 391,730,584 |
| ஒதுக்கங்கள் | 23 | 63,975,736 | 59,080,517 | 52,807,113 | 44,077,095 | 41,222,599 | 39,253,986 |
| நிறுத்திவைத்த இலாபம்/(நட்டம்) | | (525,009,550) | (261,521,211) | (227,074,122) | (554,809,643) | (280,560,300) | (244,636,490) |
| **தாய்க் கம்பனி உரிமையாளர்களிற்கு பகிரத்தக்க உரிமையாண்மை** | | 404,125,557 | 210,613,875 | 217,463,575 | 354,426,823 | 173,716,868 | 186,348,080 |
| கட்டுப்பாடற்ற நட்டம் | | 52,515,406 | 39,335,587 | 34,649,119 | - | - | - |
| **மொத்த உரிமையாண்மை** | | 456,640,963 | 249,949,462 | 252,112,694 | 354,426,823 | 173,716,868 | 186,348,080 |
| **நடைமுறையல்லா பொறுப்புக்களும் பிற்போட்ட வருமானமும்** | | | | | | | |
| வட்டிக் கடன்கள், கடன்படுகைகள் | 24 | 220,994,937 | 421,649,216 | 406,099,931 | 193,477,785 | 403,592,008 | 405,017,867 |
| நுகர்வோர் வைப்புக்கள் | 25 | 16,719,938 | 16,299,865 | 15,640,570 | 16,719,938 | 16,299,865 | 15,640,570 |
| ஏற்பாடுகள், பிற பிற்போட்ட பொறுப்புக்கள் | 26 | 34,529,132 | 23,289,438 | 21,798,853 | 33,001,021 | 21,615,200 | 20,120,599 |
| அரசாங்க மானியம் | 27 | 650,456 | 491,359 | 278,934 | 172,663 | 188,347 | 200,334 |
| ஒப்பந்தப் பொறுப்புக்கள் | 28 | 108,215,345 | 104,566,763 | 100,694,745 | 102,613,052 | 99,518,157 | 95,770,723 |
| பிற்போட்ட வரியீடு | 29 | 84,699 | 712,684 | 541,752 | - | - | - |
| | | 381,194,507 | 567,009,325 | 545,054,785 | 345,984,459 | 541,213,577 | 536,750,093 |
| **நடைமுறைப் பரிப்புக்கள்** | | | | | | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 30 | 290,627,593 | 245,367,541 | 211,909,197 | 271,129,209 | 221,808,101 | 201,048,104 |
| செலுத்தவேண்டிய பங்கிலாபம் | | 1,373,813 | 1,618,538 | 905,034 | - | - | - |
| தொடர்புடைய தரப்பினருக்கு சென்மதி | 31 | - | - | - | 6,267,928 | 6,214,207 | 4,213,941 |
| வட்டிக் கடன்கன், கடன்படுகைகள் | 24 | 106,994,467 | 71,042,881 | 52,999,459 | 83,264,513 | 59,743,483 | 26,486,421 |
| செலுத்தவேண்டிய வருமானவரி | | 3,220,140 | 3,967,733 | 2,987,196 | 1,270,766 | 1,270,766 | 1,270,766 |
| | | 402,216,013 | 321,996,693 | 268,800,886 | 361,932,416 | 289,036,557 | 233,019,232 |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | 1,240,051,483 | 1,138,955,480 | 1,065,968,365 | 1,062,343,698 | 1,003,967,002 | 956,117,405 |

பக்கங்கள் 87 முதல் 153 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

பணிப்பாளர் சபையும் முகாமைத்துவமும் இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு பொறுப்பாக உள்ளன.

| ..................... | ..................... | ..................... | ..................... |
|---|---|---|---|
| தலைவர் | துணைத் தலைவர் | பொது முகாமையாளர் | நிதி முகாமையாளர் |

திகதி: 2023.09.19

கொழும்பு

# கணக்காய்வு செய்யப்பட்ட கூட்டிணைத்த நிதி அறிக்கை

## காசுப் பாய்ச்சல் கூற்று

2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|
| | 2022 | 2021<br>மீளமைக்கப்பட்டது | 2022 | 2021<br>மீளமைக்கப்பட்டது |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து/(பயன்படுத்திய) காசுப் பாய்ச்சல்** | | | | |
| வரிக்கு முன்னர் இலாபம்/(நட்டம்) | (238,260,088) | (18,718,631) | (261,868,690) | (34,139,016) |
| **சீராக்கம்:** | | | | |
| ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு | 35,862,446 | 34,809,316 | 33,948,035 | 33,095,688 |
| சீராக்கங்கள் | 12,536 | | | |
| பாவனையாளர் பங்களிப்பின் காலத்தேய்மானம் | (4,281,308) | (4,487,145) | (4,281,308) | (4,058,249) |
| அரசாங்க மானியம் மீதான காலத்தேய்மானம் | (471,096) | (15,068) | (15,685) | (15,068) |
| முதலீடுகளில் இருந்தான வருமானம் | (1,519,355) | (1,359,813) | - | - |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை இலாபம்/(நட்டம்) | 58,394 | 149,507 | 25,654 | 135,046 |
| குத்தகை வட்டி | 10,747 | 12,775 | 10,747 | 12,775 |
| நிதிக் கிரயம் | 46,679,189 | 22,634,864 | 41,738,280 | 20,417,868 |
| பழுதடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத இருப்பு ஏற்பாடு | (343,274) | 337,770 | (342,386) | 331,159 |
| விலை முரண் ஏற்பாடு | 23,808 | (2,037,510) | 23,808 | (2,037,510) |
| கடன்பட்டோர் நட்டக்கடன் ஏற்பாடு | 1,589,841 | 1,649,777 | (1,578,762) | 1,747,552 |
| அறவிட முடியா கடன் பதிவழிப்பு | 907,163 | 345,653 | 907,163 | 345,653 |
| மின்சார வாகன உயிர்ப்பித்தல் வருமானம் | (4,488) | (2,696) | (4,488) | (2,696) |
| கூட்டுத்தொழில் முயற்சி இலாப/(நட்டப்) பங்கு | 6,373 | 5,080 | - | |
| கற்புலானாகச் சொத்துக்களின் காலத்தேய்மானம் | 78,818 | 60,832 | 45,616 | 48,442 |
| நிதி வருமானம் | (2,702,202) | (2,041,285) | (1,394,313) | (1,131,378) |
| பங்கிலாப வருமானம் | (516,129) | (6,908,775) | (274,221) | (2,519,496) |
| அந்நியச் செலாவணி இலாபம்/(நட்டம்) | 98,324,112 | (676,679) | 94,632,401 | 676,368 |
| பெறவேண்டிய நிதிக் குத்தகை மீதான வருமானச் சீராக்கம் | 1,853,641 | 1,600,538 | - | |
| குறித்துரைத்த நலத் திட்டங்கள் | 1,655,664 | 1,301,341 | 1,380,133 | 1,067,140 |
| ஓய்வூதிய நிதியம் மீதான தனியாள் கிரயம் | (110,953) | 717,208 | (110,953) | 717,208 |
| முற்செலுத்திய பதவியினர் கிரயம் | 863,216 | 556,360 | 863,216 | 556,360 |
| **தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னர் செயற்பாட்டு இலாபம் இலாபம்/(நட்டம்)** | (60,282,945) | 27,933,420 | (96,295,753) | 15,247,846 |
| இருப்புக்களில் (அதிகரிப்பு)/குறைவு | 12,615,938 | (20,679,002) | 10,844,322 | (17,579,674) |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளின் (அதிகரிப்பு)/குறைவு | (40,494,677) | (4,578,392) | (19,323,187) | 9,859,521 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளின் (அதிகரிப்பு)/குறைவு | 71,012,994 | 30,403,302 | 73,679,921 | 18,539,379 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவான காசு** | (17,148,690) | 33,079,327 | (31,094,697) | 26,067,072 |
| செலுத்திய நிதிக் கிரயம் | (45,408,340) | (19,928,688) | (40,467,431) | (17,685,265) |
| ஓய்வூதிய நிதியக் கடப்பாடுகள் | (1,271,929) | (921,523) | (942,210) | (794,325) |
| செலுத்திய வருமான வரி | (2,367,502) | (2,190,520) | - | |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து /(பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்** | (66,196,461) | 10,038,596 | (72,504,338) | 7,587,481 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து /(பயன்படுத்திய) காசுப் பாய்ச்சல்** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவும் மூலதன முடிவுறா வேலைகளும் | (90,242,299) | (73,030,040) | (77,900,802) | (70,323,587) |
| கற்புலனாகாச் சொத்துக்களின் கையேற்றல் | (57,075) | (21,088) | (57,075) | (20,930) |
| சுட்டு முயற்சியில் முதலீடு | (20,000) | - | (20,000) | - |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்தில் மீள் முதலீடு | (1,802,752) | (676,868) | (1,802,752) | (676,868) |
| காப்புறுதி எஸ்கிரோ நிதியத்திலிருந்தான வட்டி வருமானம் | 1,523,707 | 663,841 | 1,523,707 | 663,841 |
| நிதிச் சொத்துகளில் முதலீடு | 1,425,188 | (140,931) | - | - |
| கையகப்படுத்திய கட்டுப்பாடற்ற நாட்டம் | 67,500 | 51,975 | - | - |
| பெற்ற பங்கிலாபம் | 957,041 | 6,908,775 | 715,133 | 3,119,790 |
| பெற்ற வட்டி | 3,417,261 | 2,746,863 | 531,097 | 575,018 |
| நிலையான சொத்து கைதவிர்த்தல் காசு சேகரிப்பு | 167,171 | (131,759) | 120,374 | (135,046) |
| செலுத்திய பங்கிலாபம் | (5,990,343) | (2,660,377) | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து/(பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்** | (90,554,601) | (66,289,609) | (76,890,318) | (66,797,782) |
| **நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்து/(பயன்படுத்திய) காசுப் பாய்ச்சல்** | | | | |
| பங்களிப்பு மூலதனத்திலிருந்து வருமானம் | 80,000,000 | - | 80,000,000 | - |
| பாவனையாளர் பங்களிப்பு | 7,642,888 | 10,669,518 | 7,642,888 | 10,669,518 |
| மின்சார வாகன ஈ-அட்டை கொடுப்பனவுகள் | 4,488 | 2,796 | 4,488 | 2,796 |
| ஆர்எச்சீபி செயற்திட்டத்திற்காக கிடைத்த நிதி | 8,986 | 24,558 | 8,986 | 24,558 |
| மானியம் - பெறப்பட்டவை | - | 3,082 | - | 3,082 |
| பாவனையாளர் வைப்பு - மீளளிக்கத்தக்க | (341,275) | (146,050) | (341,275) | (146,050) |
| பெற்ற பாவனையாளர் வைப்புக்கள் | 761,348 | 805,345 | 761,348 | 805,345 |
| குத்தகைக் கடன்கொடுத்தோர்/(குத்தகைக் கொடுப்பனவு) தேறிய அசைவு | (147,740) | (172,675) | (44,776) | (64,099) |
| வட்டிக் கடன்கள் மற்றும் ஏனைய பெறுகைகள் | 103,686,181 | 91,263,883 | 78,997,829 | 80,269,493 |
| வட்டிக் கடன்கள் மற்றும் ஏனைய பெறுகைகளை மீளளித்தல் | (47,772,310) | (41,588,962) | (35,705,960) | (31,460,088) |
| முன்னுரிமைப் பங்குகளை மீட்புச் செய்தல் | (1,657,331) | (732,087) | - | - |
| **நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்து /(பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்** | 142,185,235 | 60,129,408 | 131,323,528 | 60,104,556 |
| **காசினதும் காசுக்கு சமமானவற்றினதும் தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | (14,565,827) | 3,878,395 | (18,071,128) | 894,255 |
| **ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு காசும் காசுக்கு சமமானவைகளும்** | (3,037,807) | (6,916,202) | (8,701,967) | (9,596,222) |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறு காசும் காசுக்கு சமமானவைகளும்** | (17,603,634) | (3,037,807) | (26,773,095) | (8,701,967) |

பக்கங்கள் 87 முதல் 153 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# கணக்காய்வு செய்யப்பட்ட கூட்டிணைத்த நிதி அறிக்கை
## உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று

2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| குழுமம் | பங்களித்த மூலதனம் | மூலதன ஒதுக்கம் | தேய்மான ஒதுக்கம | சொத்து மீள்வைப்பு ஒதுக்கம் |
|---|---|---|---|---|
| **2020 சனவரி 01 இல் மீதி** | 391,730,584 | 19,337,879 | 25,000 | 312,494 |
| ஆண்டின் போதான முன்னைய ஆண்டுச் சீராக்கம் | - | - | - | - |
| **2021 சனவரி 01 இல் மீதி (மீளமைக்கப்பட்டது)** | 391,730,584 | 19,337,879 | 25,000 | 312,494 |
| ஆண்டிற்கான இலாப/(நட்டம்) | - | - | - | - |
| ஓய்வூதிய நல கட்டுப்பாடுகள் மீதான உள்ளவாறான நட்டம் | - | - | - | - |
| நியாய பெறுமதி ஊடான ஓஸிஐ முதலீடு மீதான தேறிய இலாப நட்டம் | - | - | - | - |
| பரிமாற்று சமப்படுத்தல் ஒதுக்கம் | - | 306,670 | - | - |
| **மொத்த முற்றுமடங்கிய வருமானம்** | - | 306,670 | - | - |
| கடன் மூலதன மாற்றத்துக்கான ஒதுக்கம் | 17,915,014 | - | - | - |
| புத்தளம் நிலக்கரி மின்வலு செயற்திட்டம் | 3,408,971 | - | - | - |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்திலிருந்தான வட்டி வருமானம் | - | - | - | - |
| சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | - | - |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | 1,000 | - |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வட்டி | - | 24,558 | - | - |
| முதலீட்டு ஒதுக்கம் | - | - | - | - |
| சொத்துகள் மாற்றீடு செய்வதற்கான ஒதுக்கம் | - | - | - | (223,968) |
| வளர்ச்சி ஒதுக்கம் | - | - | - | - |
| துணைக் கம்பனிகளின் பங்கு வழங்கல் | - | - | - | - |
| பங்கிலாப கொடுப்பனவு - எல்ரீஎல் | - | - | - | - |
| பங்கிலாப கொடுப்பனவு - லெகோ | - | - | - | - |
| **31 டிசம்பர் 2021 நிலவரப்படி இருப்பு** | 413,054,569 | 19,669,107 | 26,000 | 88,526 |
| **2022 சனவரி 01 இல் மீதி (மீளமைக்கப்பட்டது)** | 413,054,569 | 19,669,107 | 26,000 | 88,526 |
| காலப்பகுதிக்கு இலாப/(நட்டம்) | - | - | - | - |
| ஓய்வூதிய நலனாளிகள் மீதான உள்ளபடியான ஆதாயம்/(இழப்பு) | - | - | - | - |
| நியாய பெறுமதி ஊடான ஓஸிஐ முதலீடு மீதான தேறிய இலாப நட்டம் | - | - | - | - |
| பரிமாற்று சமப்படுத்தல் ஒதுக்கம் | - | 2,779,173 | - | - |
| பணப்பாய்வு ஹெட்ஜ் ரிசர்வ் | - | - | - | - |
| **மொத்த முற்றுமடங்கிய வருமானம்** | - | 2,779,173 | - | - |
| உரிமைத்துவத்திற்கான கடன்களின் மாற்றம் | 251,629,768 | - | - | - |
| புத்தளம் நிலக்கரி மின்வலு செயற்திட்டம் | 120,475,034 | - | - | - |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்திலிருந்தான வட்டி வருமானம் | - | - | - | - |
| சிபிசி கொடுப்பனவுகளுக்கான மேலதிக உரிமையாண்மை முதலீடு | 80,000,000 | - | - | - |
| சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | - | - |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | 1,000 | - |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வட்டி | - | 8,986 | - | - |
| கூடுதல் வரி | - | - | - | - |
| முதலீட்டு ஒதுக்கம் | - | - | - | - |
| லெக்கோ சீராக்கல் | - | - | - | - |
| துணைக் கம்பனிகளின் பங்கு வழங்கல் | - | - | - | - |
| பங்கிலாப கொடுப்பனவு - எல்ரீஎல் | - | - | - | - |
| **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | 865,159,371 | 22,457,266 | 27,000 | 88,526 |

பக்கங்கள் 87 முதல் 153 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# கணக்காய்வு செய்யப்பட்ட கூட்டிணைத்த நிதி அறிக்கை

## உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று

2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

| முதலீட்டு ஒதுக்கம் | சுய காப்புறுதி ஒதுக்கம் | நியாயப் பெறுமதி ஒதுக்கம் | அபிவிருத்தி ஒதுக்கம் | காசுப்பாய்ச்சல் ஹெட்ஜ் ஒதுக்கம் | நிறுத்திவைத்த வருமானம் | கட்டுப்பாடற்ற வட்டி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 6,330,541 | 20,647,190 | 6,126,684 | 27,325 | - | (148,673,699) | 34,651,586 | 330,515,584 |
| - | - | - | - | - | (78,400,423) | (2,467) | (78,402,890) |
| 6,330,541 | 20,647,190 | 6,126,684 | 27,325 | - | (227,074,122) | 34,649,119 | 252,112,694 |
| - | - | - | - | - | (29,259,828) | 7,326,142 | (21,933,686) |
| - | - | - | - | - | (449,693) | 38,586 | (411,107) |
| - | - | 540,767 | - | - | - | 449,422 | 990,189 |
| - | - | - | - | - | - | 629,175 | 935,845 |
| - | - | 540,767 | - | - | (29,709,521) | 8,443,325 | (20,418,759) |
| - | - | - | - | - | - | - | 17,915,014 |
| - | - | - | - | - | - | - | 3,408,971 |
| - | 663,841 | - | - | - | - | - | 663,841 |
| - | 1,279,214 | - | - | - | (1,279,214) | - | - |
| - | - | - | - | - | (1,000) | - | - |
| - | - | - | - | - | - | - | 24,558 |
| 3,671,322 | - | - | - | - | (3,671,322) | - | - |
| - | - | - | - | - | 223,968 | - | - |
| - | - | - | 10,000 | - | (10,000) | - | - |
| - | - | - | - | - | - | 28,350 | 28,350 |
| - | - | - | - | - | - | (3,285,207) | (3,285,207) |
| - | - | - | - | - | - | (500,000) | (500,000) |
| 10,001,863 | 22,590,245 | 6,667,451 | 37,325 | - | (261,521,211) | 39,335,587 | 249,949,462 |
| 10,001,863 | 22,590,245 | 6,667,451 | 37,325 | - | (261,521,211) | 39,335,587 | 249,949,462 |
| - | - | - | - | - | (250,647,151) | 11,316,350 | (239,330,801) |
| - | - | - | - | - | (11,019,462) | 35,769 | (10,983,693) |
| - | - | 171,547 | - | - | - | 145,879 | 317,426 |
| - | - | - | - | - | - | 5,528,547 | 8,307,720 |
| - | - | - | - | (912,497) | - | (2,259,764) | (3,172,261) |
| - | - | 171,547 | - | (912,497) | (261,666,613) | 14,766,781 | (244,861,609) |
| - | - | - | - | - | - | - | 251,629,768 |
| - | - | - | - | - | - | - | 120,475,034 |
| - | 1,523,707 | - | - | - | - | - | 1,523,707 |
| - | - | - | - | - | - | - | 80,000,000 |
| - | 1,320,803 | - | - | - | (1,320,803) | - | - |
| - | - | - | - | - | (1,000) | - | - |
| - | - | - | - | - | - | - | 8,986 |
| - | - | - | - | - | (511,782) | (461,498) | (973,280) |
| - | - | - | 2,500 | - | (2,500) | - | - |
| - | - | - | - | - | 14,359 | 14,280 | 28,639 |
| - | - | - | - | - | - | 67,500 | 67,500 |
| - | - | - | - | - | - | (1,207,244) | (1,207,244) |
| 10,001,863 | 25,434,755 | 6,838,998 | 39,825 | (912,497) | (525,009,550) | 52,515,406 | 456,640,963 |

# கணக்காய்வு செய்யப்பட்ட கூட்டிணைத்த நிதி அறிக்கை
## உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று

2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| சபை | பங்களித்த மூலதனம் | ஏனைய மூலதன ஒதுக்கம் | ஆர்எச்சீப ஒதுக்கம் | கடன் மீட்பு ஒதுக்கம் | பெறுமானத் தேய்வு ஒதுக்கம் | சுய காப்புறுதி ஒதுக்கம் | நிறுத்திவைத்த வருமானம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **2020 சனவரி 01 இல் மீதி** | 391,730,584 | 165,446 | 985,239 | 17,447,062 | 25,000 | 20,631,239 | (166,239,106) | 264,745,464 |
| ஆண்டின் போதான முன்னைய ஆண்டுச் சீராக்கம் | - | - | - | - | - | - | (78,397,384) | (78,397,384) |
| **2021 சனவரி 01 இல் மீதி (மீளமைக்கப்பட்டது)** | 391,730,584 | 165,446 | 985,239 | 17,447,062 | 25,000 | 20,631,239 | (244,636,490) | 186,348,080 |
| ஆண்டிற்கான இலாப/ (நட்டம்) | - | - | - | - | - | - | (34,643,596) | (34,643,596) |
| காப்புறுதி ஒதுக்க நிதியத் திலிருந்தான வட்டி வருமானம் | - | - | - | - | - | 663,841 | - | 663,841 |
| கடன் மூலதன மாற்றத்தக்கான ஒதுக்கம் | 17,915,014 | - | - | - | - | - | - | 17,915,014 |
| புத்தளம் நிலக்கரிச் செயற்திட்டம் | 3,408,971 | - | - | - | - | - | - | 3,408,971 |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | - | - | 1,000 | - | (1,000) | - |
| சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | - | - | - | 1,279,214 | (1,279,214) | - |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வட்டி | - | - | 24,558 | - | - | - | - | 24,558 |
| **2021 திசெம்பர் 31 இல் மீதி (மீளமைக்கப்பட்டது)** | 413,054,569 | 165,446 | 1,009,797 | 17,447,062 | 26,000 | 22,574,294 | (280,560,300) | 173,716,868 |
| **2022 சனவரி 01 இல் மீதி (மீளமைக்கப்பட்டது)** | 413,054,569 | 165,446 | 1,009,797 | 17,447,062 | 26,000 | 22,574,294 | (280,560,300) | 173,716,868 |
| காலப்பகுதிக்கு இலாப/(நட்டம்) | - | - | - | - | - | - | (272,927,540) | (272,927,540) |
| காப்புறுதி ஒதுக்க நிதியத் திலிருந்தான வட்டி வருமானம் | - | - | - | - | - | 1,523,707 | - | 1,523,707 |
| உரிமைத்துவத்திற்கு கடன்களை மாற்றுதல் | 251,629,768 | - | - | - | - | - | - | 251,629,768 |
| புத்தளம் நிலக்கரிச் செயற்திட்டம் | 120,475,034 | - | - | - | - | - | - | 120,475,034 |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | - | - | 1,000 | - | (1,000) | - |
| சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | - | - | - | 1,320,803 | (1,320,803) | - |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட வட்டி | - | - | 8,986 | - | - | - | - | 8,986 |
| சிபிசி கொடுப்பனவுகளுக்கான மேலதிக உரிமை | 80,000,000 | - | - | - | - | - | - | 80,000,000 |
| **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | 865,159,371 | 165,446 | 1,018,783 | 17,447,062 | 27,000 | 25,418,804 | (554,809,643) | 354,426,823 |

பக்கங்கள் 87 முதல் 153 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள்

2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

## 1. கூட்டிணைப்புத் தகவல்கள்

### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை மின்சார சபையானது 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது. சபையின் தலைமை பணிமனை இல 50. சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை, கொழும்பு 02 இல் அமைந்துள்ளது.

### 1.2 ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள்

சபையின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை மின்சார சபை (சபை) மற்றும் அதன் சகல துணைக் கம்பனிகள் (குழுமம்) உள்ளிட்டஅவ்வாறு ஒன்றிப்புச் செய்யப்பட வேண்டிய நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குகின்றது.

### 1.3 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

**சபை**

மின்சாரத்தின் பிறப்பாக்கம், கொள்வனவு,மின்பரிமாற்றம், விளைவுதிறனான விநியோகம் மற்றும் விற்பனை போன்றன இந்த ஆண்டின்போது சபையின் பிரதான செயற்பாடுகளாக காணப்பட்டன

சபையின் துணைக் கம்பனிகளினதும் கூட்டுத்தொழில் முயற்சியினதும் பிரதான செயற்பாடுகள் கீழ்வருமாறு

### 1.3.1 துணைக் கம்பனிகள்

**அ) வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனி) கம்பனி**

இலங்கை மின்சார சபையிலிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்து காலி, களுத்துறை, மொறட்டுவை, களனி, நுகேகொடை, கோட்டே மற்றும் நீர்கொழும்பில் அமைந்துள்ள கம்பனியின் கிளைகள் ஊடாக, வீட்டு மற்றும் கைத்தொழில் வாடிக்கையாளருக்கு சில்லறையாக விற்பனை செய்வதே இந்த ஆண்டில் கம்பனியின் பிரதான செயற்பாடுகளாக காணப்பட்டன. குழுமத்தின் துணை கம்பனிகள் மின் மானிகளின் உற்பத்தி மற்றும் வியாபாரம் உள்ளிட்ட மின் விநியோகத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளன.

**ஆ) வரையறுக்கப்பட்ட LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி**

ஆண்டின் போது, கம்பனியின் முக்கிய செயல்பாடுகள் அதன் கீழுள்ள துணை கம்பனிகளின் முதலீடுகளை வைத்திருப்பதாகும். குழுமத்தின் துணை கம்பனிகள் மின் பிறப்பாக்கம், மின் பிறப்பாக்கத்துடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்,மின்மாற்றிகள் மற்றும் மின் கம்பங்களை உற்பத்தி செய்தல் மற்றும் கால்வனைசிங் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன.

**இ) வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனி) கம்பனி**

நுரைச்சோலையில் உள்ள நிலக்கரி மின்வலு ஆலையில் மின்வலு பிறப்பாக்கத்திற்காக உயர்தரமான, குறைந்த கந்தக நிலக்கரியினை வழங்குதல்.

**ஈ) வரையறுக்கப்பட்ட சிறிலங்கா எனர்ஜீஸ் (தனி) கம்பனி**

பரிமாற்றக் கம்பிவழிகளையும் துணை மின்நிலையங் களையும் நிர்மாணித்தல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்திட்டங்களை நிர்மாணித்துப் பராமரித்தல் மற்றும் மின் எரிசக்தி பிறப்பாக்கத்துக்குத் தேவையான வேலைகளிலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அபிவிருத்திக்குத் தேவையான செயல்பாடுகளிலும் ஈடுபடுதல்,மின்மானி பெட்டிகளை உற்பத்திசெய்தல் மற்றும் சபையின் சேவைகளுக்காக ஆட்சேர்ப்பில் ஈடுபட்டு மனிதவளத்தை வழங்குதல் என்பன கம்பனியின் பிரதான செயற்பாடுகள் ஆகும்.

குழுமத்தின் துணை கம்பனிகள் சபை மற்றும் நீர் மின்வலு பிறப்பாக்கச்சேவைகளுக்கான ஆட்சேர்ப்பை மேற்கொண்டு மனிதவளத்தை வழங்குவதில் ஈடுபட்டுள்ளன.

### 1.3.2 கூட்டுத்தொழில் முயற்சி

**வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலு கம்பனி**

இலங்கை மின்சார சபையின் தேசிய கட்டகத்திற்கு மின் சக்தியை பிறப்பித்து விற்பனை செய்தலே கம்பனியின் பிரதான செயற்பாடாகும். .கம்பனி தற்போது நிலக்கரி மின் நிலையம் அமைக்கும் செயற்திட்டத்தை கைவிட்டுள்ளது. இருப்பினும், சம்பூரில் 50 மெகாவாட் சூரிய மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது

### 1.4 தாய்க் கம்பனி மற்றும் சபையின் இறுதியான தாய்க் கம்பனி

சபை மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு கீழ் இயங்குகின்றது. பணிப்பாளர்களின் அபிப்பிராயத்தின் படி, சபையின் இறுதியான தாய்க் கம்பனியும் கட்டுப்பாட்டு அதிகாரியுமாக இலங்கை அரசாங்கம் காணப்படுகின்றது.

### 1.5 வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி

இலங்கை மின்சார சபையின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்காக 2023.10.10 ஆந் திகதி பணிப்பாளர் சபையால் அதிகாரம் வழங்கப்பட்டது.

## 2. தயாரிப்பு அடிப்படையும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

### 2.1 தயாரிப்பின் அடிப்படை

குழுவின் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகள் நிதிச் சாதனங்கள் ' இலாப அல்லது இழப்பு மூலம் நியாயமான மதிப்பு மற்றும் விரிவான வருமானத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் அளவிடப்படும் நிதிக் கருவிகள தவிர வரலாற்று செலவு முறையின் கீழ் திரட்டப்பட்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன ' ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் வழங்கப்படுகின்றன. வேறுவிதமாக குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய அனைத்து பெறுமதிகளும் கிட்டிய ரூபா ஆயிரத்திற்கு (ரூ.000) சுறுக்கப்படுகின்றன.

ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் முன்னைய காலத்துடன் தொடர்புடைய ஒப்பீட்டுத் தகவல்களை வழங்குகின்றன. அத்துடன், ஒரு கணக்கீட்டுக் கொள்கையின் பின்னோக்கிய பிரயோகம் காணப்படுகையில்,முன்னைய காலத்தின் தொடக்கத்தில் குழுமம் மேலதிக நிதி நிலைமை கூற்றொன்றை சமர்ப்பிக்கின்றது. குறிப்பு 34 இல் வெளிப்படுத்தப்பட்ட காரணங்களால் 2020 சனவரி 1 ஆம் திகதியில் உள்ளவாறான ஒரு மேலதிக நிதிநிலைமை கூற்றை இந்த நிதிக் கூற்றுக்கள் வழங்குகின்றன

### 2.2 இணக்கப்பாட்டு அறிக்கை

இலாபம் அல்லது நட்டக்கூற்று, முற்றுமடங்கிய வருமானக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடனும் குறிப்புக்களுடனும் கூடிய குழுமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் (“நிதிக்கூற்றுக்கள்”) இலங்கை

பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (SLFRS/LKAS) இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. (சீஏ இலங்கை)

### 2.3 தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் படி குழுமத்தின் தொடர்ந்தியங்கு நிலை மதிப்பீடொன்றை பணிப்பாளர்கள் மேற்கொண்டதுடன் பின்வருன தவிர்த்து வியாபாரத்தை கலைப்பதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கான எதிர்பார்ப்பை அவர்கள் கொண்டிருக்கவில்லை.

**தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு – வரையறுக்கப்பட்ட ஹெலதனவி கம்பனி**

ஹெலதனவி கம்பனிக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையே 2009 மே 09 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ள மின்சார கொள்வனவு உடன்படிக்கை 2014 டிசம்பர் 08 ஆம் திகதி காலாவதியாகியது. உடன்படிக்கை காலாவதியானதன் பின்னர் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமை தொடர்பில் நிறுவனத்தின் பார்வையில் பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது.

அறிக்கை திகதியில் உள்ளவாறான தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் படியான நிறுவனததின் தொடர்ந்தியங்கும் ஆற்றல் பணிப்பாளர்கள் அவர்கள் தீர்மானித்தார்கள் தொடர்ந்தியங்கம் எண்ணக்கருவிற்கு அமைய நிறுவனத்தின் தொடர்ந்தியங்கம் இயலுமை மீது குறிப்பிடத்தக்க அளவு சந்தேகம் காணப்பட்டுவதனை அவர்கள் தீர்மானித்தார்கள். ஆகையால் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு வரையறுக்கப்பட்ட ஹெலதனவியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் பொருத்தமானதாக காணப்படவில்லை.

**தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு – லங்கா இன்டஸ்ட்ரியல் புரடக்கஸன் இன்ஜினியரிங் தனியார் கம்பனி**

2015 நவம்பர், 01 ஆம் திகதியில் இருந்து செயல்வலுப்பெறும் வண்ணம் அதன் இயக்கப்பாட்டை முடிவுருத்துவதற்கு பணிப்பாளர்கள் தீர்மானித்தார்கள் அத்துடன் அதன் இயக்கப்பாட்டை எல்.ரி.எல் டிரான்ஸ்போர்மஸ் தனியார் கம்பனிக்கு மாற்றுவதற்கு தீர்மானித்தார்கள் ஆகவே, தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவானது லங்கா இன்டஸ்ட்ரியல் புரடக்சன் இன்ஜினியரிங் பிரைவட் லிமிடட்டினது நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் பொருந்தவில்லை

**தொடர்ந்தியங்குதல் எண்ணக்கரு - ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் எச்ஆர் (பிரைவட்) லிமிடட்**

இக்கம்பனியின் பெரும்பான்மையான மனித சக்தி ஊழியர்கள் இலங்கை மின்சார சபையின் கீழ் நிரந்தர ஊழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த தீர்மானத்தின் காரணமாக, இந்த இடமாற்றத்திற்குப் பிறகு கம்பனியின் வருவாய் வெகுவாகக் குறைந்துள்ளது. எவ்வாறாயினும், அறிக்கையிடல் தேதியின்போது கம்பனி தொடர்பில் அவர்கள் என்ன செய்ய எண்ணுகிறார்கள் என்பது குறித்து பணிப்பாளர்கள் எந்த முடிவும் எடுக்கவில்லை என்பதாலும் கம்பனியைக் கலைக்க எந்த நோக்கமும் இல்லை என்பதாலும் கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணம் கொண்டுள்ளது என்ற அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.4 ஒப்பீட்டுத் தகவல்கள்

முன்னைய ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பித்தல் மற்றும் வகைப்படுத்தல் என்பன தேவைப்படுமிடத்து பின்வருவன உட்பட சிறந்த சமர்ப்பித்தல் மற்றும் நடப்பு ஆண்டுடன் ஒப்பிடத்தக்க விதத்தில் திருத்தப்பட்டுள்ளன.

### 2.5 ஒன்றித்தலின் அடிப்படை

ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் குழுமத்தினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கும். முதலீடு செய்யப்பட்டவர்களுடனான ஈடுபாடுகளிலிருந்து பல்வேறு திரும்பல்களை தொகுதி வெளிப்படுத்துகின்ற போதும் அல்லது உரிமையைக் கொண்டுள்ள போதும் முதலீடு செய்யப்பட்டவர்களின் மீது அதன் வலுவின் ஊடாக அத் திரும்பல்கள் மீது தாக்கம் செலுத்துவதற்கு ஆற்றல் உள்ளபோதும் கட்டுப்பாடு அடையப்படுகின்றது. விசேடமாக, குழுமக் கட்டுப்பாடுகள் மற்றும் முதலீடு செய்யப்பட்டவர்கள் இருப்பின், குழுமம்:

- முதலீட்டாளர் மீது வலுவைக் கொண்டிருக்கும். (அதாவது முதலீட்டாளர் தொடர்புடைய செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கு நடைமுறை ஆற்றலை தற்போதுள்ள உரிமைகள் வழங்கும்)
- முதலீட்டாளர்களுடனான ஈடுபாடு மூலம் மாறுபடும் வருவாய்கள் மழுது கொண்டுள்ள உரிமை முதலீட்டாளர் மீது அதிகாரம் செலுத்த கூடிய இயலுமை மூலம் அவர்களது வருவாய்கள் மீது தாக்கம் செலுத்துதல்.

  வாக்களித்தல் உரிமைகளில் அதிகமானவை பொதுவாக கட்டுப்பாட்டை கொடுக்கிறது. இந்த எடுகோளிற்கு உதவுவதற்காகவும் குழுமம் வாக்களித்தலில் பெரும்பான்மைக்கு குறைவாக கொண்டிருக்கின்ற அல்லது ஒத்த உரிமை முதலீட்டாளர் மீது காணப்படுகின்ற போது குழுமத்திற்கு முதலீடு செய்யப்பட்டவர்கள் மீது அதிகாரம் உள்ளதா என்பதனை மதிப்பிடுவதற்காக பின்வருவன உள்ளடங்கலாக அந்த சகல தொடர்புடைய விடயங்களையும் நிலமைகளையும் குழுமம் கருத்திற்கொள்கின்றது.
- முதலீட்டாளர்களின் ஏனைய வாக்குரிமை கொண்டுள்ளவர்களுடன் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகள்
- ஏனைய ஒப்பந்தரீதியான ஏற்பாடுகளிலிருந்து எழுகின்ற உரிமைகள்
- குழுமத்தின் வாக்களித்தல் உரிமைகள் மற்றும் எதிர்கால வாக்களித்தல் உரிமைகள்

துணைக் கம்பனிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| துணைக் கம்பனியின் பெயர் | கூட்டிணைக்கப்பட்ட நாடு | பிடிப்பு விகிதாசாரம் |
|---|---|---|
| வரையறுக்கப்பட்டடுவுடு ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி | இலங்கை | 63% |
| வரையறுக்கப்பட்டலங்கா மின்சார (தனி) கம்பனி (LECO) | இலங்கை | 55.2% |
| வரையறுக்கப்பட்டலங்கா நிலக்கரி (தனி) கம்பனி (LCC) | இலங்கை | 60% |
| வரையறுக்கப்பட்டசிறீ லங்கா எனர்ஜீஸ் (தனி) கம்பனி | இலங்கை | 100% |
| **துணைக் கம்பனியின் பெயர்** | **கூட்டிணைக்கப்பட்ட நாடு** | **பிடிப்பு விகிதாசாரம்** |
| திருகோணமலை கோல் பவர் கம்பனி லிமிடட் (TPCL) | இலங்கை | 50% |

ஏஸ்ரீஎல் ஹோல்டிங் (தனியார்) கம்பனியின் பின்வரும் உப துணைக் கம்பனிகள் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

| துணைக் கம்பனியின் பெயர் | பிடிப்பு விகிதாசாரம் |
|---|---|
| பிரைட் இன்டர்நெஷனல் பிரைவட் லிமிடட் | சிங்கப்பூர் |
| ராஜ் லங்கா பவர் கொம்பனி லிமிடட | வங்காள தேசம் |
| மகரிகாட் ஹைட்ரோபவர் பிரைவட் லிமிடட் | வங்காள தேசம் |
| மகரிகாட் ஹைட்ரோபவர் பிரைவட் லிமிடட் | நேபாளம் |
| ஆசியாரிக் இலக்ரிகல் & சுவிட்ச்கியர் பிரைவட் லிமிடட் | இந்தியா |
| ஃபர்னி லங்கா பவர் லிமிடட் | வங்காள தேசம் |

இலங்கை மின்சார சபை LECO, வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனி) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை எனர்ஜீஸ் (தனி) கம்பனி ஆகியவை 31 டிசம்பரில் முடிவடையும் ஆண்டை பொதுவான நிதியாண்டாகவும்,வரையறுக்கப்பட்ட LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி மற்றும திருகோணமலை கோல் பவர் கம்பனி லிமிடட் ஆகியவை மார்ச் 31 இல் முடிவடையும் ஆண்டை பொதுவான நிதியாண்டாகவும் கொண்டுள்ளன. எனினும், குறிப்பிட்ட கம்பனிகளின் கணக்காய்வாளர்கள் சான்றுபடுத்திய 31 டிசம்பரில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் குழுமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏதுவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

துணைக்கம்பனிகளின் மொத்த இலாப, நட்டம் ஒன்றித்த வருமானக் கூற்றில் உட்படுத்தப்பட்டு உள்ளதுடன், வெளிவாரி பங்குதாரர்களுக்கு உரிய வரிக்குப் பிந்திய இலாப, நட்டமானது இலங்கை மின்சார சபையின் பங்குதாரர்களுக்கு உரிய இலாப, நட்டத்தை கணித்தலில் “சிறுபான்மையினர் ஆர்வம்” என்ற தலைப்பின் கீழ் செம்மையாக்கம் செய்யப்பட்டுள்ளது.

சபை மற்றும் அதன் உபகம்பனிகளின் சகல சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றித்த நிதி நிலைமைக் கூற்றில் உட்படுத்தப்பட்டுள்ளன. உப கம்பனிகளின் நிகரச் சொத்துக்களில் வெளிவாரி பங்குதாரர்களின் நாட்டம் ஒன்றித்த நிதி நிலைமைக் கூற்றில் கட்டுப்படுத்தப்படாத ஆர்வம் என்ற தலைப்பின் கீழ் வேறாக காட்டுப்பட்டுள்ளது. ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தலில் குழுமக் கம்பனிகளுக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகளும் குழுமக் கம்பனிகளுக்கு இடையேயான கொடுக்கல் வாங்கல்களின் விளைவும் தேறாத இலாபங்களும் நீக்கப்பட்டுள்ளன.

கட்டுப்பாட்டை இழக்காது, துணைக் கம்பனியொன்றில் உரிமைநாட்ட மாற்றம், ஒரு உரிமையாண்மை கொடுக்கல் வாங்கலாக கொள்ளப்பட்டு கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. குழுமம் துணைக் கம்பனிமீதான கட்டுப்பாட்டை இழக்கும்பட்சத்தில் அது:

- துணைக் கம்பனியின் சொத்துக்கள் (நன்மதிப்பு உட்பட) மற்றும் பொறுப்புக்களை அங்கீகரிக்காதிருக்கும்.
- கட்டுப்பாடற்ற ஆர்வம் ஏதுமிருப்பின் அதன் முன்கொணரற் தொகையை அங்கீகரிக்காதிருக்கும்.
- உரிமையாண்மையில் பதிவு செய்யப்பட்ட திரண்ட நாணயமாற்று வித்தியாசங்களை அங்கீகரிக்காதிருக்கும்.
- நியாய பெறுமதிகளை கவனத்திற் கொண்டு பெறப்பட்ட பெறுமதியை அங்கீகரிக்கும்.
- தொடர்ந்து வைத்திருக்கும் முதலீடு ஏதுமிருப்பின், அதன் நியாய பெறுமதியை அங்கீகரிக்கும்.
- மிகை அல்லது பற்றாக்குறை ஏதுமிருப்பின் அதனை இலாப, நட்டத்தில் அங்கீகரிக்கும்.
- முன்னர் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தில் அங்கீகரித்த கூறுகளின் மேன்னிலை உரிமத்தின் பங்கினை பொருத்தமான வகையில் இலாப, நட்டத்தில் அல்லது நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களில் மீள்வகைப்படுத்தும்.

மூன்று கட்டுப்பாட்டுக் கூறுகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் மாற்றங்களைக் காட்டுகின்ற நிலமைகள் காணப்படுமாயின் உண்மையில் முதலீடு செய்யப்பட்டவர்கள் மற்றும்

கட்டுப்பாடுகள் உள்ளனவா அல்லது இல்லையா என்பதனை குழுமம் மீள்மதிப்பீடு செய்யும். துணைக் கம்பனிகள் மீது கட்டுப்பாட்டினை குழுமம் பெறுகின்றபோதே துணைக் கம்பனிகளின் ஒன்றிணைத்தல் இடம்பெறுவதுடன் துணைக் கம்பனியின் மீதான கட்டுப்பாட்டை குழுமம் இழக்கின்ற போது அது கைவிடப்படுகின்றது.ஆண்டின் போது துணைக் கம்பனியொன்றின் ஈட்டுதல் அல்லது கைதவிர்த்தலின் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் என்பன துணைக் கம்பனியின் கட்டுப்பாட்டை குழுமம் ஈட்டிய திகதியிலிருந்து குழுமம் கட்டுப்பாட்டை இழக்கும் வரை ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றது.

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் (ஓசீஐ) ஒவ்வொரு கூறும் இதன் விளைவாக கட்டுப்பாடற்ற ஆர்வத்தில் பற்றாக்குறை மீதி ஏற்படினும் குழுமத்தின் தாய்க் கம்பனியின் உரிமை பங்குதாரர்களுக்கும் கட்டுப்பாடற்ற ஆர்வமுள்ளவர்களிற்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. கூட்டிணைப்பின் நிமித்தம் குழுமம் முற்றாக இல்லாதொழிகையில் அங்கத்தவர்களிடையிலான கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், உரிமைத்துவம், வருமானம், செலவினம் மற்றும் காசுப்பாய்ச்சல்கள் அவசியமானவிடத்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுகின்றது. கட்டுப்பாடொன்றின் இழப்பல்லாத துணைக் கம்பனியின் உரிமைத்துவ ஆர்வத்திலான மாற்றம் உரிமைத்துவக் கொடுக்கல் வாங்கலொன்றாக பதிவுசெய்யப்படுகின்றது.

துணைக்கம்பனி ஒன்றின் மீதான கட்டுப்பாட்டை குழுமம் இழக்குமாயின் தொடர்புடைய சொத்துக்கள் (நன்மதிப்பு உள்ளடங்கலாக), பொறுப்புக்கள், கட்டுப்பாடற்ற ஆர்வம் மற்றும் உரிமைத்துவத்தின் ஏனைய கூறுகள் அங்கீகரிக்காதிருப்பதுடன்' இலாப நட்ட விளைவுகள் ஏதுமிருப்பின் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. தொடர்ந்தும் காணப்படுகின்ற எவையேனும் முதலீடுகள் நியாய பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

## 2.6 முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் பிரயோகிக்கப்பட்ட அடிப்படை கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. வேறுவிதத்தில் குறிப்பிடப்பட்டாலன்றி, இந்தக் கொள்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆண்டுகளிலும் நிலையானதாக பிரயோகிக்கப்பட்டுள்ளன

### 2.6.1 நடைமுறை எதிர் நடைமுறையல்லாத வகைப்படுத்தல்

சபை நடைமுறை/நடைமுறையல்லாத வகைப்படுத்தலின் அடிப்படையில் அதனுடைய நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்களை முன்னிலைப்படுத்துகின்றது. சொத்தொன்று நடைமுறைச் சொத்தாக இருப்பது எப்போதெனில்:

- சாதாரண செயற்பாட்டுச் சுற்றோட்டத்தில் தேறுமென எதிர்பார்க்கப்படுகின்ற அல்லது விற்பனைக்காக வைத்திருக்கப்படுகின்ற அல்லது நுகரப்படுகின்றவையாக இருத்தல
- பிரதானமாக வியாபார நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுபவையாக இருத்தல்.
- அறிக்கையிடல் திகதியின் பின்னரான பன்னிரெண்டு மாதத்தினுள் தேறுமென எதிர்பார்க்கப்படுவையாக இருத்தல். அல்லது,
- அறிக்கையிடல் திகதியின் பின்னரான குறைந்தபட்சம் பன்னிரெண்டு மாதத்தினுள் பரிமாற்றம் செய்தல் அல்லது பொறுப்பொன்றை தீர்ப்பதிலிருந்து விடுபட்டதாகவுள்ள காசும் காசுக்கு சமனானவையும்.

ஏனைய அனைத்துச் சொத்துக்களும் குழுமத்தினால் நடைமுறையல்லாதவையாக வகைப்படுத்தப்படுகின்றன.

பொறுப்பொன்று நடைமுறைப் பொறுப்பாக இருப்பது எப்போதெனில்:

- சாதாரண செயற்பாட்டுச் சுற்றோட்டத்தில் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றவையாக இருத்தல்.
- பிரதானமாக வியாபார நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுதல்.
- அறிக்கையிடல் திகதியின் பின்னரான பன்னிரெண்டு மாதத்தினுள் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுதல்.
- குறைந்தபட்சம் அறிக்கையிடல் திகதியின் பின்னரான பன்னிரெண்டு மாதத்திற்குப் பொறுப்பொன்றின் தீர்ப்பனவை பிற்போடுவதற்கு நிபந்தனை அற்ற உரிமை காணப்படாதிருக்கையில்.

ஏனைய அனைத்துப் பொறுப்புக்களையும் ˙சபை நடைமுறையல்லாதவையாக வகைப்படுத்தப்படுகின்றது.

பிற்போட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

### 2.6.2 வணிக சேர்க்கைகள், கட்டுப்பாடற்ற ஆர்வங்கள் மற்றும் நன்மதிப்பை கையகப்படுத்தலட

வணிகச் சேர்க்கைகள் கட்டம் கட்டமாக அடையப்படுகையில்,முன்பு வைத்திருக்கப்பட்ட எந்தவொருஉரிமைத்துவ ஆர்வமும் அதன் கையகப்படுத்தல்-திகதியில் நியாயமான பெறுமதியில் மீண்டும் அளவிடப்படுவதுடன் அதனால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டமானது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

கையகப்படுத்தல் முறையைப் பயன்படுத்தி வணிகச் சேர்க்கைகள் கணக்கீடு செய்யப்படுகின்றன. கையகப்படுத்தல் கிரயமானது, கையகப்படுத்தல் திகதியிலுள்ள நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட பரிமாற்றப்பட்ட உருப்படிகளின் ஒட்டுமொத்தமாகவும் கையகப்படுத்துபவர் மீதான கட்டுப்பாடற்ற ஆர்வத்தின் ஏதேனும் தொகையிலும் அளவிடப்படுகின்றது. ஒவ்வொரு வணிக சேர்க்கைக்கும், கையகப்படுத்துபவரின் கட்டுப்பாடற்ற ஆர்வத்தை நியாயமான பெறுமதியில் அளவிடுவதா அல்லது கையகப்படுத்துபவரின் அடையாளம் காணக்கூடிய நிகர சொத்துகளின் விகிதாசார பங்கை அளவிடுவதா என்பதை குழுமம்தெரிவு செய்கின்றது. கையகப்படுத்தல் தொடர்பான கிரயங்கள் ˙இடம் பெற்ற செலவுகளாகக் கருதப்பட்டு நிர்வாக செலவுகளில் உள்ளடக்கப்படுகின்றன.

குழுமம் ஒரு வணிகத்தை கையகப்படுத்தும்போது, பொருத்தமான வகைப்படுத்தல் எடுகோள்களைப் பயன்படுத்தி நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாக அது மதிப்பிடப்படுவதுடன், கையகப்படுத்தல் தேதியின் படியான ஒப்பந்த விதிமுறைகள், பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் தொடர்புடைய நிபந்தனைகளுக்கு ஏற்ப அங்கீகரிக்கப்படுகின்றன.

மாற்றப்பட்ட பரிசீலனையின் மொத்த தொகை கட்டுப்படுத்தப்படாத ஆர்வத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட தொகை முன்னர் வைத்திருந்த ஆர்வம்கையகப்படுத்திய தேறிய அடையாளம் காணக்கூடிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அதிகமாக காணப்படுமாயின் அந்த நன்மதிப்பானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றது. இந்த கையகப்படுத்தப்பட்ட தேறிய சொத்துகளின் நியாயமான பெறுமதியானது மாற்றப்பட்ட ஒட்டுமொத்த விடயங்களின் பெறுமதியைக் காட்டிலும் அதிகமாக இருந்தால்,அந்த ஆதாயம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

கையகப்படுத்தப்பட்ட தேறிய சொத்துகளின் நியாயமான பெறுமதி மாற்றப்பட்ட மொத்த பெறுமதியைக் காட்டிலும் அதிகமாக இருந்தால், குழுமம் அனைத்து சொத்துகளையும் சரியாக அடையாளம் கண்டுள்ளதா மற்றும் அனைத்து பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டுள்ளதா என்பதை மறுபரிசீலனை செய்து,கையகப்படுத்தல் தேதியில் அங்கீகரிக்கப்படுவதற்காக தொகைகளை அளவிடுவதற்குப் பயன்படுத்திய நடைமுறையை மீளாய்வு செய்கின்றது. மறுபரிசீலனையின பின் இதுவரை மாற்றப்பட்ட ஒட்டுமொத்த விடயங்களின பெறுமதியானது பெறப்பட்ட நிகர சொத்துக்களின் நியாயமான பெறுமதியைக் காட்டிலும் அதிகமாக இருந்தால்,அந்த ஆதாயம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பின்னர்,நன்மதிப்பானது ஏதேனும் திரட்டப்பட்ட நட்ட இழப்புகள் இருப்பின் அவை கழிக்கப்பட்டு அளவிடப்படுகிறது. நட்ட இழப்பு பரிசோதனை நோக்கத்திற்காக, ஒரு வணிகச் சேர்க்கையின் போது கையேற்கப்பட்ட நன்மதிப்பானது, கையகப்படுத்துபவரின் ஏனைய சொத்துக்கள் அல்லது பொறுப்புகள் அந்த அலகுகளுக்கு ஒதுக்கப்படுகின்றதா என்பதை கவனத்தில் எடுக்காமல் கையகப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து,இந்தச் சேர்க்கையினால் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற குழுமத்தின் ஒவ்வொரு காசு உருவாக்கும் அலகுகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

காசு உருவாக்கும் அலகுகளுக்கு நன்மதிப்பு ஒதுக்கப்பட்டு, அந்த அலகுக்கு உட்பட்ட செயற்பாட்டின் ஒரு பகுதி கைதவிர்க்கப்பட்டால், கைதவிர்க்கப்பட்ட இலாபம் அல்லது நட்டத்தை நிர்ணயிக்கும் போது கைதவிர்ப்புச் செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட நன்மதிப்பானது செயற்பாட்டின் முன்கொண்டு செல் தொகையில் உள்ளடக்கப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையில் கைதவிர்க்கப்பட்ட நன்மதிப்பானது கைதவிர்க்கப்பட்ட செயற்பாட்டின் ஒப்பீட்டு பெறுமதிகள் மற்றும் காசு உருவாக்கும் அலகு வைத்திருந்த பகுதியின் அடிப்படையில் அளவிடப்படுகிறது.

### 2.6.3 கூட்டுத்தொழில் முயற்சியில் முதலீடு

கூட்டுத்தொழில் முயற்சி என்பது கூட்டாக ஒழுங்குபடுத்தும் கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ள தரப்பினர்களின் கூட்டுத்தொழில் முயற்சிக்கான தேறிய சொத்துக்களை

வைத்துள்ள ஒரு கூட்டு ஒழுங்குமுறையாகும். கூட்டுக் கட்டுப்பாடென்பது ஏற்பாடொன்றின் கட்டுப்பாட்டினை பங்கிடுவதற்கான ஒப்பந்தரீதியான இணக்கப்பபடாகும். தொடர்புடைய செயற்பாட்டுகளின் தீர்மானத்தின் போது கட்டுப்பாட்டினை பங்கிடும் தரப்பினர்களின் கருத்து தேவையாயிருப்பின் மாத்திரம் இவ்விணக்கப்படாடு காணப்படும். திருகோணமலை பவர் கம்பனி லிமிடட் ஆனது இலங்கை மின்சார சபைக்கும் NTPC லிமிடட் இற்கும் இடையே கூட்டாக கட்டுப்படுத்தப்படுகின்றதோர் நிறுவகமாகும். கூட்டுக் கட்டுப்பாட்டினை நிச்சயிப்பதில் மேற்கொள்ளப்பட்ட கருதுகோள்கள் துணைக் கம்பனிகளின் மீதான கட்டுப்பாட்டினை நிச்சயிப்பதற்கு தேவையானவற்றை ஒத்திருந்தன.

அதன் கூட்டுத்தொழில்முயற்சி மீதான சபையினது முதலீடு, உரிமைத்துவ முறையினைப் பயன்படுத்தி கணக்கீடு செய்யப்படுகின்றது. உரிமைத்துவ முறையின் கீழ், கூட்டுத்தொழில் முயற்சி ஒன்றின் மீதான முதலீடு, ஆரம்பத்தில் கிரயத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. முதலீட்டின் முன்கொண்டுசெல் தொகை,கையேற்கப்பட்ட திகதியிருந்து கூட்டுத்தொழில்முயற்சியினது தேறிய சொத்துக்களில் சபையின் பங்கில் மாற்றங்களை அங்கீகரிப்பதற்காக சீராக்கப்படுகின்றது. கூட்டுத்தொழில் முயற்சியுடன் தொடர்புடைய நன்மதிப்பு, முதலீட்டின் முன்கொண்டு சென்ற தொகையில் உள்ளடக்கப்படுவதுடன் அது தனிப்பட்ட ரீதியில் காலத்தேய்மானத்திற்காக சோதிக்கப்படுவதில்லை. இலாபம் அல்லது நட்டக் கூற்று, கூட்டுத் தொழில் முயற்சியினது செயற்பாட்டு விளைவுகளின் சபையின் பங்கைப் பிரதிபலிக்கின்றது. முதலீடு மேற்கொள்ளப்படவரின் OCI இலாப ஏதேனும் மாற்றம் சபையினது OCI இன் பகுதியாக முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

அத்துடன், மாற்றமொன்று நேரடியாக கூட்டுத்தொழில் முயற்சியினது உரிமைத்துவத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கையில், அது பிரயோகிக்கத்தக்கதாக இருப்பின் எந்தவொரு மாற்றத்தினையும் உரிமைத்துவ மாற்றக் கூற்றிலுள்ள அதனது பங்கில் சபை அங்கீகரிக்கின்றது. சபைக்கும் கூட்டுத் தொழில் முயறிச்சிக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான தேறப்படாத ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள், கூட்டுத்தொழில் முயற்சியின் ஆர்வத்திலிருந்து நீக்கப்படுகின்றது. கூட்டுத்தொழில் முயற்சியொன்றின் இலாபம் அல்லது நட்டத்தில் சபைக்குரிய மொத்தப் பங்கானது இலாபம் அல்லது நட்டக் கூற்றின் முகப்பில் செயற்பாட்டு இலாபமல்லாது காண்பிக்கப்படுவதுடன் வரிக்குப் பிந்திய இலாபம் அல்லது நட்டத்திலும் கூட்டுத்தொழில் முயற்சியின் மீதான கட்டுப்பாடற்ற ஆர்வங்களிலும் பிரதிபலிக்கின்றது.

### 2.6.4 அந்நியச் செலாவணி பரிவர்த்தனை,அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகள்

#### (அ) தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

குழுமத்தின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபா (ரூபா) இல் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

#### (ஆ) கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகள்

அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவும் நாணயமாற்று விகிதங்களை உபயோகித்து சபை பதிவு செய்யும். அறிக்கையிடப்படும் திகதியிலுள்ள வெளிநாட்டு நாணயங்களில் எடுத்துரைக்கப்பட்ட நிதிசார்ந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அத்தகைய திகதியில் செயல்வலுப்பெறும் அதேவிடத்து நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி புழக்கத்திலுள்ள இலங்கை ரூபாவுக்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளன. வர்த்தகம் சாராத செயற்பாடுகளிலிருந்து எழுகின்ற சகல வித்தியாசங்களும் இலாப அல்லது நட்டத்திற்கு எடுக்கப்படுகின்றன.

அந்நியச் செலாவணியொன்றில் வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையில் அளவிடப்படுகின்ற நிதி சாராத விடயங்கள் ஆரம்ப கொடுக்கல் வாங்கல் தேதிகளில் நிலவிய நாணயமாற்று விகிதங்களைப் பயன்படுத்தி பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. நிதி சாராத விடயங்களின் பரிவர்த்தனையால் ஏற்படுகின்ற இலாபம் அல்லது நட்டமானது பரிவர்த்தனை வேறுபாட்டிற்கு வழிவகுத்த விடயத்தின் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஏற்ப அங்கீகரிக்கப்படுகிறது. (ஏனைய விரிவான வருமானத்தில் அல்லது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் இலாபம் அல்லது நட்டமாக அங்கீகரிக்கப்படுகின்ற விடயங்களின் பரிவர்த்தனை வேறுபாடுகளும் கூட முறையே ஏனைய விரிவான வருமானத்தில் அல்லது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன).

1969 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் 42 ஆம் பிரிவின் 6 ஆம் உபபிரிவுக்கு அமைவாக அந்நியச் செலாவணிக் கடன் மற்றும் வட்டி தொடர்பில் நாணயமாற்று ஏற்றத் தாழ்வுகளினால் ஏற்படும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு உரியதாகையினால் இலங்கை மின்சார சபை அவற்றை கருத்திற் கொள்வதில்லை. சென்மதியாகவுள்ள கடன் நிலுவைகள் சபை யினால் கடன் பெறப்பட்டபோது இணங்கப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன.

#### இ) வெளிநாட்டுச் செயற்பாடுகள்

வெளிநாட்டுச் செயற்பாடுகள் எனக் கருதப்படுகின்ற வெளிநாட்டு துணைக் கம்பனிகளினதும் கூட்டுத் தொழில் முயற்சிகளினதும் நிதி நிலைமைக் கூற்று மற்றும் வருமானக் கூற்று என்பன முறையே அறிக்கையிடல் தேதியில் நிலவுகின்ற மற்றும் சராசரி வருடாந்த நாணயமாற்று விகிதத்தில்இலங்கை ரூபாய்க்கு பரிவர்த்தனை செய்யப்படுகின்றன.

பரிவர்த்தனையில் எழுகின்ற நாணயமாற்று வேறுபாடுகள் நேரடியாக ஏனைய விரிவான வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஒரு வெளிநாட்டு நிறுவனத்தை கைதவிர்க்கும்போது,குறிப்பிட்ட அந்த வெளிநாட்டு செயற்பாட்டுடன் தொடர்புடைய ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட பிற்போட்ட ஒட்டுமொத்த தொகையானது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.6.5 வரிகள்

இக்காலப்பகுதிக்கான வரிச் செலவுகள் நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரிகளை கொண்டுள்ளன.பிற முற்றுமடங்கிய வருமானமாக அங்கீகரித்த வருமான அல்லது செலவு உருப்படியொன்று தொடர்புபட்ட மாற்றங்கள் நேரடியாக பிற முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிப்புச இலாபம் அல்லது நட்டம், வரிகள் முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

#### அ) நடப்பு வரிகள்

இக்காலப்பகுதிக்கான வரிச் செலவுகள் நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரிகளை கொண்டுள்ளன. மீளாய்வுகளுள் மற்றும் முன்னய காலப்பகுதிக்கான தற்போதைய வருமானவரிச் சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து அறவிட அல்லது அவருக்கு செலுத்தவேண்டிய தொகைகளில் மதிப்பிடப்பட்டுள்ளது. தொகைகளை கணிக்க உபயோகித்த வரி விகிதங்களும் வரிச் சட்டங்களும் கம்பனி தொழிற்பட்டு வரிவிதி வருமானத்தை பிறப்பிக்கும் நாட்டில் அறிக்கையிடற் திகதியில் சட்டமாக்கியுள்ள அல்லது கிட்டத்தட்ட சட்டமாக்கிய சட்டங்களின் அடிப்படையில் அமைந்தவையாகும். உரிமைத்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்படைய நடப்பு வருமான வரி உரிமைத்துவத்தில் அங்கிகரிக்கப்படுகின்றதேயன்றி வருமானக் கூற்றுக்களில் இல்லை.

வருமான வரிக்கான ஏற்பாடானது வரி நோக்கத்திற்காக சீராக்கப்பட்டவாறு, 2018 ஏப்ரல் 01 முதல் அமுலாகும் வகையில், 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது

### ஆ) பிற்போடப்பட்ட வரி

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகளுக்கும் நிதிக் கூற்றுக்களில் அவற்றின் முன் கொண்டு செல்லப்படும் தொகைகளுக்கும் இடையில் ஏற்படும் சகல தற்காலிக வித்தியாசங்கள் மீது பொறுப்பு முறையை உபயோகித்து பிற்போட்ட வருமான வரி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பின்வருவனவற்றைத் தவிர்த்து, அனைத்து வரிவிதிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளிற்கும் பிற்போட்ட வரிப் பொறுப்புகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

(i) வனிக இணைப்பாக அமையாத கொடுக்கல் வாங்கலொன்றில் அது கணக்கீட்டு இலாபத்தை அல்லது வரிவிதி இலாப நட்டத்தை பாதிக்காதபோது எழுகின்ற பிற்போடப்பட்ட வருமானவரிப் பொறுப்புக்கள், சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் ஆரம்ப அங்கீகரிப்பின் போது ஏற்படும் பிற்போட்ட வருமான வரிப் பொறுப்பு நீங்கலாக சகல தற்காலிக வரிவிதி வித்தியாசங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

(ii) துணைக் கம்பனிகளில், கூட்டுக் கம்பனிகளில் முதலீடுகள் மற்றும் கூட்டுத் தொழில்முயற்சிகளில் நாட்டங்கள் தொடர்புபட்ட வரிவிதிப்புக்கு உள்ளாகும் தற்காலிக வித்தியாசங்களைப் பொறுத்தமட்டில், தற்காலிக வித்தியாசத்தின் எதிர்ப்பதிவுக்கான கால அட்டவணையினை கட்டுப்படுத்தக்கூடியவை தவிர்ந்து, மற்றும் அது சாத்தியமானபோது, தற்காலிக வித்தியாசங்கள் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் எதிர்ப்பதிவு செய்யப்படமாட்டாது.

பின்வருவனவற்றை தவிர்த்து கழிக்கக்கூடிய வரி இழப்புக்களை எதிரீடு செய்வதற்காக வரிவிதிக்கத்தக்க இலாபம் காணப்படுகையிலும் பயன்படுத்தக்கூடிய போதிலும் அவ்வாறு பயன்படுத்தாத வரிச் செலவு மீதிகள் மற்றும் வரி இழப்புக்கள் முன்கொண்டு ெல்லப்படுகையிலும் அனைத்து கழிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகள், பயன்படுத்தப்படாத வரி செலவு மீதிகள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகள் ஆகியவற்றிற்காக பிற்போட்ட வரிச் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

(i) பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளுக்கு, கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள், பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளை பயன்படுத்த வரி விதி இலாபம் கிடைப்பது சாத்தியமான அளவுக்கு, சகல கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள், பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளுக்கு பிற்போட்ட வருமானவரிச் சொத்து அங்கீகரிக்கப்படும்.

(ii) துணைக் கம்பனிகளில், கூட்டுக் கம்பனிகளில் முதலீடுகள் மற்றும் கூட்டுத் தொழில்முயற்சிகளில் நாட்டங்கள் தொடர்புபட்ட கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்களைப் பொறுத்தமட்டில் பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்கள், தற்காலிக வித்தியாசங்களை பயன்படுத்துவதற்கு வரிவிதி இலாபங்கள் கிடைத்து, எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் அது எதிர்ப்பதிவு செய்யக்கூடிய அளவுக்கு மாத்திரம் அங்கீகரிக்கப்படும்.

பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்களின் முன் கொணரப்படும் தொகையானது அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு,பயன்படுத்தப்படும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களை அல்லது அவற்றின் பாகத்தை அனுமதிக்கும் வகையில் கிடைக்கக்கூடிய போதிய வரிவிதிக்கத்தகு இலாபம் இல்லையென்ற அளவுக்கு குறைக்கப்படுகின்றது.

அங்கீகரிக்கப்படாத பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீள மதிப்பிடப்பட்டு,பிற்போட்ட வரி சொத்துக்களை மீட்பதற்கு அனுமதிக்கும் சாத்தியமான எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபங்களிற்கு அங்கீகரிக்கப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அறிக்கையிடப்படும் திகதியிலுள்ளவாறு சட்டமாக்கப்பட்ட அல்லது அதன்பின்னர் சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதங்களின் (வரிசார்ந்த சட்டங்கள்) அடிப்படையில் சொத்து மாற்றப்படுகின்ற அல்லது பொறுப்பு தீர்ப்பனவு செய்யப்படுகின்ற போதுள்ள ஆண்டிற்கு ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் வரிவீதங்களில் அளவிடப்படுகின்றன.

இலாபம் அல்லது நட்டக் கூற்றுக்கு வெளியே அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய பிற்போட்ட வரியானதுஇலாபம் அல்லது நட்டக் கூற்றுக்கு வெளியே அங்கீகரிக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய பிற்போட்ட வரி ஏனைய முழுமையான வருமானத்தில் அல்லது நேரடியாக உரிமைத்துவத்தில் காணப்படும் முக்கியமான கொடுக்கல்வாங்கல் தொடர்பில் அங்கீகரிக்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட அந்த வரிகள் அதே வரிவிதிக்கத்தகு நிறுவனத்துடனும் மற்றும் அதே வரிவிதிப்பு அதிகாரத்துடனும் சம்பந்தப்படும் பட்சத்தில் நடைமுறை வரிப்பொறுப்புக்களுக்கு எதிரான நடைமுறை வரிச் சொத்துக்களை சமப்படுத்துவதற்கு சட்ட ரீதியில் நடைமுறைப்படுத்தக்கூடிய உரிமை இருந்தால், பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் மற்றும்

பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுகின்றன.

**பங்கிலாப வருமானம் மீதான வரி**

துணைக் கம்பனிகளிடமிருந்து பெறப்படும் பங்கிலாப வருமானம் மீதான வரி,இலாபம் அல்லது நட்டக் கூற்றில் செலவொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றது

**விற்பனைகள் வரி**

பின்வரும் சந்தர்ப்பங்களைத் தவிர்த்துவருமானம், செலவினம் மற்றும் சொத்து விற்பனை வரிகள் அவற்றின் தேறிய தொகையில் அங்கீகரிக்கப்படுகின்றன:

- சொத்தை அல்லது சேவையினை கொள்வனவு செய்கையில் ஏற்படுகின்ற விற்பனை வரி விதித்தல்களை அதிகாரத்தரப்பிடமிருந்து வசூலிக்க முடியாதுள்ள சந்தர்ப்பத்தில்,விற்பனை வரியானதுபொருந்துகின்றவாறு ஒன்றில் சொத்தின் கொள்வனவுக் கிரயத்தில் ஒரு பகுதியாக அல்லது குறித்த உருப்படிச் செலவின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்படுகையில்;
- விற்பனை வரித் தொகையினை உள்ளடக்கி குறிப்பிடப்படும் பெறவேண்டியவை மற்றும் செலுத்த வேண்டியவை காணப்படுகையில்;

  வசூலிக்கக்கூடிய விற்பனை வரி மற்றும் அதிகாரிகளிற்கு செலுத்த வேண்டிய தொகை என்பன நிதி நிலைமைக் கூற்றின் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவற்றின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகையில்;

## 2.6.6 இருப்புக்கள்

இருப்புக்கள் வழக்கிழந்த மற்றும் குறைவாக அசைவுருகின்ற விடயங்களுக்கு ஏற்பாடாகவுள்ள கொடுப்பனவுகளின் பின்னர் இருப்புக்காக உரிய கிரயம் மற்றும் நிகர தேறுகைப் பெறுமதியில் குறைந்த பெறுமதியில் அளவிடப்படும். நிகர தேறுகைப் பெறுமதி வழமையான வியாபாரத்தின்போது விற்கக்கூடிய பெறுமதியிலிருந்து பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கும் கிரயம் மற்றும் விற்பனை செய்யவதற்கு அவசியமான கிரயங்களை கழிக்க வரும் தொகையாகும். இருப்புக்கள் தற்போதைய அமைவிடம் மற்றும் நிலைக்கு கொண்டுவருவதற்கு இறுக்கப்படும் கிரயங்களில் கீழ்வருமாறு கணக்கிடப்படும்.

**இலங்கை மின்சார சபை**

பெரும்பாலும் பயன்படுத்தப்படும் மற்றும் வருடாந்த விலைப்பட்டியலில் நிரற்படுத்தப்படும் தொக்குகள் விநியோக பிரிவுகளில் நியம விலைகளிலும், ஏனைய (பிறப்பாக்க மற்றும் பரிமாற்றப் பிரிவுகள்) நுகர்பொருட்கள் மற்றும் உதிரிபாகங்கள் போன்றவை முதல் உள் முதல் வெளி முறையிலுள்ள விலைகளிலும் மதிப்பிடப்படுகின்றன.

எனினும், இ.மி.ச. நியம விலைகளில் மதிப்பிடப்பட்ட தொக்குகளை கிரயப் பெறுமதிக்கு குறைப்பதற்கு ஏதுவாக தேறாத இலாபங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

**வரையறுக்கப்பட்டலங்கா மின்சார (தனி) கம்பனி**

| | | |
|---|---|---|
| தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பொருட்கள் | - | நிறையளித்த சராசரி அடிப்படையின் மீது உண்மைக் கிரயத்தில் |
| வழிச்சரக்குகளும் ஏனையவையும் | - | உண்மைக் கிரயத்தில் மூலப் பொருட்கள்- நிறையளித்த சராசரி அடிப்படையின் மீது உண்மைக் கிரயத்தில |
| முடிவுப் பொருட்கள் மற்றும் முடிவுறா வேலைகள | - | சாதாரண நிலமைகளில் பொருளை உற்பத்தி செய்வதற்கு ஏற்படுகின்ற நேர் பொருள், நேர் கூலி மற்றும் நிலையான உற்பத்தி மேந்தலையின் பொருத்தமான பகிர்வின் அடிப்படையில். |

**வரையறுக்கப்பட்ட LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி**

| | | |
|---|---|---|
| மூலப் பொருட்கள் | - | முதல்-உள்-முதல் வெளி அடிப்படையில் உண்மைக் கிரயத்தில். |
| முடிவுப் பொருட்களும் முடிவுறா வேலையும் | - | நேர் பொருள், நேர் கூலி மற்றும் நிலையான உற்பத்தி மேந்தலையின் பொருத்தமான பகிர்வின் அடிப்படையில |
| நுகர்வுப் பொருட்களும் உதிரிப் பாகங்களும் | | முதல்-உள்-முதல் வெளி அடிப்படையில் உண்மைக் கிரயத்தில். |
| முடிவுப் பொருட்களும் முடிவுறா வேலையும் | - | முதல்-உள்-முதல் வெளி அடிப்படையில் உண்மைக் கிரயத்தில். முடிவுப் பொருட்களும் |
| வழிச்சரக்குகள் | - | உண்மைக் கிரயத்தில் |

## 2.6.7 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

**அ) இனங்காணல் அடிப்படை**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் அநேகமாக குழுவுக்கு கிடைக்கும் என்றிருந்தால் மற்றும் அதன் கிரயம் நம்பத்தகுந்தளவில் அளவிடப்பட முடியும் என்றிருந்தால் அவை இனங்காணப்படுகின்றன.

**ஆ அளவிடுதல் அடிப்படை**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத் தேய்மானம் மற்றும் திரண்ட சேத இழப்பு ஏதுமிருப்பின் அவற்றை கழித்த தொகையில் காட்டப்பட்டுள்ளன. அத்தகைய கிரயம் பிரதியீட்டுக் கூறுகளின் கிரயம், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உதிரிப் பாகங்களின் கிரயம் மற்றும் தேர்வு நிபந்தனைகள் திருப்தி செய்யப்படும் பட்சத்தில், நீண்டகால நிர்மான செயற்திட்டங்களின் கடன் படுகைக் கிரயம் ஆகியவற்றை உள்ளடக்கும். குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவை ஆதனம், பொறி மற்றும் உபகரண கணிசமான பகுதிகள் பிரதியீடு செய்ய வேண்டியிருப்பின், குழுமம் பிரதியீடு செய்யும் பகுதியின் நிகர ஏட்டுப் பெறுமதியை அங்கீகரிக்காதிருப்பதுடன், புதிய பகுதியை அதன் தொடர்புடைய பயன்தரு ஆயுட்காலம்

மற்றும் பெறுமானத் தேய்மானம் ஆகியவற்றின் அடிப்படையில் அங்கீகரிக்கும். அவ்வாறே, பாரிய பரீட்சிப்பு மேற்கொள்ளப்படும் போது அதன் கிரயம், அங்கீகரிப்பு நிபந்தனைகளை திருப்தி செய்தால் ஆதனம், பொறி மற்றும் உபகரண முன்கொணரற் தொகையில் அங்கீகரிக்கப்படும். ஏற்பட்ட ஏனைய அனைத்து திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு கிரயங்களும் இலாபம் அல்லது நட்டக் கூற்றுக்கு சாட்டப்படுகின்றது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முன்கொண்டு செல்லும் பெறுமதிகள் தேறாதிருப்பதற்கான நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளில் மாற்றங்கள் காணப்படுகையில் அந்த முன்கொண்டு செல்லும் பெறுமதிகள் நட்டக்கழிவுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன

**(இ) மூலதன முடிவுறா வேலை**

அறிக்கையிடல் தேதியில் பூரணப்படுத்தப்படாதுள்ள நிலையான சொத்துக்கள் தொடர்பாக ஏற்பட்ட மூலதனச் செலவுகள் மூலதன முடிவுறா வேலைகளாகக் காட்டப்பட்டு கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றது. அவை பூரணப்படுத்தப்பட்டவுடன், தொடர்புடைய சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு மாற்றப்படுகின்றன.

**(ஈ) இனங்காணாதிருத்தல்**

ஒரு ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதியானது அதன் அகற்றலின் அல்லது அந்தச்சொத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் ஏதுமில்லை என்பதன் பேரில் இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது. ஒருசொத்தின் இனங்காணாது விட்டு விடுவதிலிருந்து எழும் இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றுல் பெறுமதிக்கும் சொத்தின் முன்கொண்டு செல்லும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக கணக்கிடப்படுகிறது) அத்தகைய சொத்து இனங்காணாது விட்டுவிடப்படும் போது இலாப அல்லது நட்டக் கணக்கில் உள்ளடக்கப்படுகின்றது.

**(உ) பெறுமானத்தேய்வு**

குறித்த சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பொருளாதார பாவனை காலத்திற்கு பொருத்தமான காலப்பகு முழுவதற்கும் பதிவழிக்கக்கூடிய விதத்தில், நேர்கோட்டு அடிப்படையினைப் பயன்படுத்தி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படுகின்றது. இறையில்காணிகள் தொடர்பில் தேய்மான ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதில்லை.குறிப்பு 2.6.7 இல் விபரிக்கப்பட்டவாறு ஒரு சொத்தின் தேய்மானம் அந்தச் சொத்து விற்பனைக்கென வகைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்படும் திகதி அல்லது அந்தச் சொத்து இனங்காணாது விட்டுவிடப்படும் திகதி இதில் எது முன்னரோ அப்போது நிறுத்தப்படும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பாவனை காலம் கீழே தரப்பட்டுள்ளது.

| இலங்கை மின்சார சபை | |
|---|---|
| இறையிலி கட்டடம் மற்றும் குத்தகைக் காணி மற்றும் கட்டடங்கள் | 40 ஆண்டுகள் |
| சிவில் வேலைகள்: | |
| வழிந்தோடும் கான்கள் மற்றும் அணைக்கட்டுகள் | 100 ஆண்டுகள் |
| உருக்கு நீர்க்குழாய்கள் மற்றும் அது | 40 ஆண்டுகள் |
| சார்ந்த தொக்குகள் | |
| உபநிலையமும் ஆளித்தொகுதியும் | 35 ஆண்டுகள் |
| மின் பிறப்பாக்க பொறிகள்: | |
| பொறிஉட்பட்டசக்திவலு நிலையங்கள் (நீர்மின்) | 35 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (அனல்மின்) | 25 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (டீசல்) | 12-15 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (வாயு அமுக்கி) | 12 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (நிலக்கறி) | 30 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள்(காற்று) | |
| மின்கடத்தி கம்பி வழிகள்: 220kv,132kv மற்றும் 66kv | 35 ஆண்டுகள் |
| வினியோகக் கம்பி வழிகள்: | |
| HT நிலக்கீழ் - 33 kv | 50 ஆண்டுகள் |
| HT நிலக்கீழ் - 132 kv | 50 ஆண்டுகள் |
| HT நிலக்கீழ் - 11 kv | 40 ஆண்டுகள் |
| HT தலைக்கு மேலாகவுள்ள வழிகள் | 35 ஆண்டுகள் |
| LT நிலக்கீழ் | 40 ஆண்டுகள் |
| LT தலைக்கு மேலாகவுள்ள வழிகள் | 35 ஆண்டுகள் |
| LT ஊட்டும் தூண்கள் | 35 ஆண்டுகள் |
| நுகர்வோர் உபமின் நிலையம் | 35 ஆண்டுகள் |
| HT ஆளித்தொகுதி | 35 ஆண்டுகள் |
| முதன்மை, கட்டக உபமின் நிலையம் | 35 ஆண்டுகள் |
| பிரதான சேவை வழி | 35 ஆண்டுகள் |
| சேவை வழி - நிலக்கீழ் | 40 ஆண்டுகள் |
| SCADA மத்திய நிலையம் மற்றும் தொடர்பாடல் உபகரணம் | 15 ஆண்டுகள் |
| வாகனங்கள் - பயணிகள் போக்குவரத்து - இரு அல்லது மூன்று சக்கர வாகனங்கள் | 15 ஆண்டுகள் |
| வாகனங்கள் - பயணிகள் போக்குவரத்து - மற்றவை | 14 ஆண்டுகள் |
| கனரக வாகனங்கள் | 20 ஆண்டுகள் |
| மோட்டார் படகுகள் | 07 ஆண்டுகள் |
| இயந்திரங்களும் ஆயுதங்களும் | 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள | 05 - 15 ஆண்டுகள் |
| தளபாட பொருத்துக்கள் | 05 ஆண்டுகள் |
| சூரிய மின்வலு திட்டம் | 10 - 25 ஆண்டுகள் |

**வரையறுக்கப்பட்ட LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி**

| | |
|---|---|
| கட்டடங்கள் | 25 - 50 ஆண்டுகள் |
| பொறி மற்றும் இயந்திரம் | 8 - 20 ஆண்டுகள் |
| மின்சாரப் பொறி | 10 -20 ஆண்டுகள் |
| தொழிற்சாலை உபகரணம் | 10 ஆண்டுகள் |
| அகத் தொடர்பாடல் உபகரணம் | 10 ஆண்டுகள் |
| தீயணைப்பு உபகரணம் | 10 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 03-10 ஆண்டுகள் |
| தளபாடமும் பொருத்துக்களும் | 03- 10 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 04 ஆண்டுகள் |
| தொழிற்பாட்டு, பராமரிப்பு உதிரிப்பாகங்கள் | உள்ளபடியான பாவனை |
| சூரிய மின்சார PV பொறி | 15 ஆண்டுகளிற்கு மேல் |

**வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனி) கம்பனி**

| | |
|---|---|
| கட்டடங்கள் | 40 ஆண்டுகள் |
| உட்கட்டமைப்பு வழங்குதல் | |
| உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் CEB இடமிருந்து பெற்றுக்கொண்ட உப மின் நிலையங்கள், தலைக்கு மேலான கம்பி வழிகள் மற்றும் சேவைக் கம்பி வழிகள் | 10 ஆண்டுகள் |
| LECO நிருமானித்த உப மின் நிலையங்கள், தலைக்கு மேலான கம்பி வழிகள் மற்றும் சேவைக் கம்பி வழிகள் | 20 - 25 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 05-20 ஆண்டுகள் |
| கணனிகள் | 03- 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 03- 07 ஆண்டுகள் |
| பொறியும் இயந்திரமும் | 03- 04 ஆண்டுகள் |

**வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனி) கம்பனி**

| | |
|---|---|
| தளபாட, இணைப்புக்கள் | 5 ஆண்டுகள் |
| உபகரணங்கள் | 4 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 4 ஆண்டுகள் |
| கணனிகள் | 4 ஆண்டுகள் |
| குத்தகையிலுள்ள மேம்படுத்தல்கள் | 2 ஆண்டுகள் |
| வலைதள முறைமை | 2 ஆண்டுகள் |

**ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (பிரைவட்) லிமிட்**

| | |
|---|---|
| கட்டடங்கள் | 20 ஆண்டுகள் |
| தளபாடம், உபகரணம் மற்றும் கருவிகள் | 5 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 5 ஆண்டுகள் |
| அலுவலகம் மற்றும் ஏனைய உபகரணம | 5 ஆண்டுகள் |
| கணனிகள் | 5 ஆண்டுகள் |
| இன்ஜெக்ஷன் மோல்டிங் மெஷின் | 5 ஆண்டுகள் |

**வரையறுக்கப்பட்ட திருகோணமலை பவர் கம்பனி**

| | |
|---|---|
| தளபாட, இணைப்புக்கள் | 20 ஆண்டுகள் |
| தளபாடம், உபகரணம் | 5 ஆண்டுகள் |
| உபகரணம் | 5 ஆண்டுகள் |
| கணனிகள் | 3 ஆண்டுகள் |

ரூபா 15,000 இற்கு மேற்பட்ட சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டன.

இறுதி அறிக்கையிடல் தேதியிலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான அறிகுறிகள் காணப்பட்டு, அது பொருத்தமானதாக இருந்தால் சொத்துகளின் எஞ்சிய பெறுமதிகள், பயனுள்ள வாழ்க்கை காலம் மற்றும் தேய்மான முறைகள் ஆகியவை மீளாய்வு செய்யப்பட்டு,அதற்கேற்ப சீராக்கப்படுகின்றன.

**(ஊ) கடன்பெறுதல் கிரயங்கள்**

கடன்பெறுகை கிரயங்கள் நிதி பெறுவது தொடர்பில் சபை செலுத்தும் வட்டி மற்றும் கிரயங்களை கொண்டிருக்கும். எதிர்பார்க்கப்பட்ட உபயோகம் அல்லது விற்பனைக்கு தயாராக்க கணிசமான காலம் தேவைப்படும் சொத்துக்களான தகைமை பெறும் சொத்துக்களின் கொள்வனவு, நிருமானம் அல்லது உற்பத்தியுடன் தொடர்புபட்ட பொதுவான மற்றும் குறிப்பான கடன்படுகைக் கிரயங்கள் அந்தச் சொத்துக்களில் எதிர்பார்க்கப்பட்ட உபயோகம் அல்லது விற்பனைக்காக கணிசமான அளவில் தயார்படுத்தப்படும் வரையில் அந்தச் சொத்துக்களின் கிரயத்துடன் கூட்டப்படும். ஏனைய சகல கடன்படுகைக் கிரயங்களும் செலுத்தப்படும் காலத்திலேயே செலவாகக் கொள்ளப்படும்.

தகுதிவாய்ந்த சொத்துக்களுடன் தொடர்புடைய அவற்றின் நிலுவையிலுள்ளசெலவினங்களின் குறிப்பிட்ட கடன்பெறுகைகளின் தற்காலிக முதலீட்டின் மீது உழைக்கப்பட்ட முதலீட்டு வருமானம், மூலதனமாக்கலுக்கு தகுதியான கடன்பெறுதல் கிரயங்களிலிருந்து கழிக்கப்படுகின்றது.

### 2.6.8 விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள நடைமுறையல்லாச் சொத்துக்கள்

தொடர்ச்சியான பாவனையின் ஊடாக அன்றிஅடிப்படை ரீதியாக விற்பனை செய்யப்படுவதன் மூலம் முன்கொண்டுசெல் தொகை அறவிடப்படுமாயின் குழுமம் அந்த நடைமுறையல்லாச் சொத்துக்களை விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்துகின்றது. அவ்வாறு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளவையாக வகைப்படுத்திய நடைமுறையல்லாச் சொத்துக்கள், அவற்றின் முன்கொண்டுசெல் தொகை மற்றும் சந்தைப் பெறுமதியிலிருந்து விற்பனைக்கான கிரயம் கழிக்கப்பட்டுவரும் தொகை ஆகியவற்றில் குறைந்த பெறுமதியில் அளவிடப்படுகின்றது. விற்பனைக்கான கிரயங்கள் எனப்படுபவை, நிதிக் கிரயங்கள் மற்றும் வருமான வரிச் செலவுகளைத் தவிர்த்து, ஒரு சொத்தை அகற்றுவதற்கு நேரடியாக பகிரக்கூடிய கிரயங்களாகும்.

முகாமைத்துவத்தால் (பணிப்பாளர் சபை) வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் மீது விற்பனை மிகவும் சாத்தியமானதாக இருக்கையில் மாத்திரமே விற்பனைக்காக வைத்திருக்கப்படுதலின் வகைப்படுத்தலிற்கான அளவுகோள்கள் கருத்திற்கொள்ளப்படுகின்றன மற்றும் தற்போதுள்ள நிலையில் உடனடியாக விற்பனை செய்வதற்கு காணப்படும் சொத்தாகும்.

விற்பனையை பூரணப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் விற்பனையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்பட வாய்ப்பில்லை என்பதை அல்லது விற்பனைக்கான தீர்மானம் மீளப்பெறப்படாது என்பதைக் குறித்தல் வேண்டும். சொத்துக்களை விற்கும் திட்டத்திற்கு முகாமைத்துவம் கடப்பாடுடையதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் விற்பனைக்காக வகைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடத்திற்குள் விற்பனை பூரணப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வகைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் எதிர்பார்க்கப்படும் விற்பனையை பூரணப்படுத்தும் கடப்பாடு முகாமைத்துவத்துக்கு உள்ளது.

ஆதனம், பொறி மற்றும் உபாரணங்கள் விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்பட்ட பின்னர் அவற்றிற்கான பெறுமானத்தேய்வு செய்தல் நிறுத்தப்படுகின்றது.

விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்திய சொத்துக்களும் பொறுப்புக்களும் நிதி நிலைமைக் கூற்றில் புறம்பான நடைமுறை விடயங்களாக முன்வைக்கப்படுகின்றன.

#### அங்கீகரிக்காமை

விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டுள்ள நடைமுறையல்லா சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டவற்றை சபைத் தீர்மானத் திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் கைதவிக்கப்பதற்கு தவறும் பட்சத்தில் அவை மீண்டும் அவற்றின் இடைநிறுத்திய காலப்பகுதிக்கான பெறுமானத்தேய்வுச் சீராக்கத்துடன் சேர்த்து ஆதனம், பொறி உபகரணங்களுக்கு மீள-வகைப்படுத்தப்படும்.

### 2.6.9 நிதிசாராத சொத்துக்களின் கழிவுநட்டம்

எனில்,அச்சொத்தின் முன்கொண்டு செல்லல் பெறுமதி (அல்லது குறித்த சொத்து ஒதுக்கப்பட்டுள்ள காசு ஈட்டும் அலகு (CGU) நட்டக்கழிவுக்காக பரீட்சிக்கப்படுகின்றது. சொத்தென்றின் மீளப்பெறும் தொகையைக் காட்டிலும் அதன் முன்கொண்டு செல்லும் தொகை அதிகமாக இருப்பின் ஒரு நட்டக்கழிவு இனங்காணப்படுகிறது. திரும்பப் பெறக்கூடிய தொகை ஒரு சொத்தின் (அல்லது CGU இன்) நியாயமான மதிப்பை விட அதிகமாக இருப்பது,சொத்தின் சந்தைப் பெறுமதியிலிருந்து அதனை விற்பதற்கான செலவுகளை மற்றும் பயன்பாட்டிலுள்ள பெறுமதியை கழிப்பதனாலாகும்.பயன்பாட்டிலுள்ள பெறுமதியை மதிப்பிடுகையில்,வரிக்கு முந்தைய கழிவு விகிதத்தைப் பயன்படுத்தி, பணத்தின் காலப் பெறுமதி மற்றும் சொத்துக்கான குறிப்பிட்ட அபாயங்களின் தற்போதைய சந்தை மதிப்பீட்டை பிரதிபலிக்கின்ற அவற்றின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசோட்டங்களின் தற்போதைய பெறுமதிக்குகழிவுநீக்கம் செய்யப்படுகின்றன,

நட்டக்கழிவின் மதிப்பீட்டு நோக்கத்திற்காக, சபை முழுவதும் ஒரு தனிப்பட்ட காசு உருவாக்கல் அலகாக கருதப்படுகின்றது.

.தொடரும் செயற்பாடுகளின் நட்டக்கழிவு இழப்புகள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆகையால், சொத்தின் கொணரப்படும் தொகை அதன் மீளறவிடப்பட வேண்டிய தொகையை விஞ்சாது அல்லது நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடும் என்ற அந்தக் கொணரப்படும் தொகையையும் விஞ்சாது. அவ்வாறான நிலையில், சொத்துக்களின் முன்கொண்டு செல்லும் தொகை அதன் மீளப்பெறும் தொகைக்கு அதிகரிக்கப்படும். முன்னைய ஆண்டுகளில் சொத்துகளுக்கு எந்த நட்டக்கழிவு இழப்பும் அங்கீகரிக்கப்பட்டிருக்காவிட்டால்,அந்த அதிகரித்த தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கும் முன்கொண்டு செல்லும் தொகையை விட அதிகமாக இருக்க முடியாது. அவ்வாறான மீளவைத்தல்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.6.10 குத்தகைகள்

ஒருஒப்பந்தத்தின் தொடக்கத்தில், அந்த ஒப்பந்தத்தில் அல்லது உள்ளடக்கத்தில் ஒரு குத்தகை உள்ளதா என்பதை சபை மதிப்பிடுகிறது. அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையை ஒரு ஒப்பந்தம் உள்ளடக்கி இருப்பின், அந்த ஒப்பந்தம் என்பது ஒருகுத்தகை ஆகும். அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் உரிமையை ஒரு ஒப்பந்தம் தெரிவிக்கிறதா என்பதை மதிப்பிடுவதற்கு, சபை SLFRS 16 இல் உள்ள குத்தகைக்கான வரைவிலக்கணத்தை பயன்படுத்துகிறது.

### 2.6.10.1 குத்தகைதாரராக குழுமம்

குறுங்கால குத்தகைகள் மற்றும் குறைந்த பெறுமதியடைய சொத்துக்களின் குத்தகைகளைத் தவிர, அனைத்து குத்தகைகளுக்கும் ஒற்றை அங்கீகார மற்றும் அளவீட்டு அணுகுமுறையை குழுமம்பிரயோகிக்கின்றது. குத்தகைக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கான குத்தகைப் பொறுப்புக்களையும் குறித்துரைத்த சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையை பிரதிநித்துவப்படுத்துகின்ற பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களையும் குழுமம் அங்கீகரிக்கிறது.

#### பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள

குறித்துரைத்த சொத்துக்கள் பயன்படுத்துவதற்காக கிடைக்கும் போது குழுமம் பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களை அங்கீகரிக்கின்றது. ஏதேனும் திரண்ட தேய்மானம் மற்றும் நட்டக்கழிவு இழப்புக்கள் கழிக்கப்பட்டும் குத்தகைப் பொறுப்புக்களின் சீராக்கத்தின் பின்னரும் பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் கிரயத்தில் அளவிடப்படுகின்றன.பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களின் கிரயத்தினுள் அங்கீகரிக்கப்பட்ட குத்தகைப் பொறுப்புத் தொகை, ஏற்பட்ட ஆரம்ப நேரடி கிரயங்கள் மற்றும் குத்தகை தொடக்க திகதியில் பெறப்பட்ட குத்தகை சலுகைகள் கழிக்கப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகள் ஆகியவை உள்ளடங்குகின்றது. குத்தகை காலத்தின் முடிவில், குத்தகைக்கு விடப்பட்ட சொத்தின் உரிமையைப் பெறுவதற்கு சபை நியாயமான உறுதிப்பாட்டை கொண்டிருக்காவிட்டால், அங்கீகரிக்கப்பட்ட பயன்பாட்டு உரிமை சொத்துகள் அதன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் அல்லது குத்தகை காலத்திற்கு நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத் தேய்விடப்படுகின்றன. பயன்பாட்டு உரிமை சொத்துகள் நட்டக்கழிவுக்கு உட்பட்டவையாகும்.

குழுமத்தின் பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் உள்ளடங்கியுள்ளன.

#### குத்தகைப் பொறுப்புக்கள்

குத்தகையின் தொடக்க தேதியில், குத்தகை காலத்தின் மீது செய்யப்பட வேண்டிய குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியில் குத்தகைப் பொறுப்புக்களை குழுமம் அங்கீகரிக்கிறது. குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியை கணிப்பிடுகையில்,குத்தகையில் உள்ளடங்கியுள்ள வட்டி வீதத்தை உடனடியாக நிச்சயிக்க முடியாதிருக்கும் போது சபை குத்தகையின் தொடக்க திகதியிலுள்ள அதிகரிக்கும் கடன் வட்டி விகிதத்தைப் பயன்படுத்துகிறது. குத்தகையின் தொடக்க திகதிக்குப் பின்னர், குத்தகைப் பொறுப்புக்களின் அளவானது வட்டியின்அதிகரிப்பை பிரதிபலிக்கும் வகையில் அதிகரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகளுக்கு

ஏற்ப குறைக்கப்படுகிறது. அத்துடன்குத்தகையில் திருத்தமொன்று, குத்தகைக் காலத்தில் மாற்றமொன்று, நிலையான குத்தகைக் கொடுப்பனவுகளில் மாற்றமொன்று அல்லது குறித்த சொத்தை கொள்வனவு செய்வதற்கான மதிப்பீட்டில் மாற்றமொன்று காணப்பட்டால் குத்தகைப் பொறுப்புக்களின் முன்கொண்டு செல்லும் தொகை மீள அளவிடப்படுகின்றது.

குழுமத்தின் குத்தகைப் பொறுப்புக்கள் வட்டியுடன் கூடிய கடன்கள் மற்றும் கடன ் பெறுவனவுகளில் உள்ளடங்குகின்றன.

### 2.6.10.2 குத்தகை தருனராக குழுமம் - LTL ஹோல்டிங் (பிரைவட்) லிமிட்ட்

#### செயற்பாட்டுக் குத்தகை

குழுமம் சொத்துக்களின் உரிமை சம்பந்தமான கிட்டத்தட்ட முழுமையான இடர் மற்றும் பயன்களை மாற்றாத நீர்மின், காற்றாலை மின் மற்றும் அனல் மின் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், சொத்துக்கள் செயற்பாட்டுக்குத்தகையாக வகைப்படுத்தப்படும். சகல மின்வலுப் பொறிகளிலும் இருந்து குத்தகை வருமானமானது, குத்தகைச் சொத்துக்களிலிருந்து பெறப்படும் பயன்களின் காலஅட்டவணை தீர்மானிக்கப்படும் மிகப் பொருத்தமான மின்வலு உற்பத்தி அடிப்படையில், அங்கீகரிக்கப்படும். குத்தகை வருமானத்தை உழைப்பதில் ஏற்படும் தேய்மானம் உள்ளிட்ட கிரயங்கள் செலவுகளாக அங்கீகரிக்கப்படும். தேய்மானம் செய்யக்கூடிய குத்தகைச் சொத்துக்களுக்கான தேய்மானக் கொள்கை, ஒத்த சொத்துக்களுக்கு குழுமத்தின் தேய்மானக் கொள்கையாகவே இருக்கும்.

#### நிதிக்குத்தகை

ராஜ் லங்கா பவர் கம்பெனி லிமிடெட் மற்றும் பங்களாதேஷ் பவர் டெவலப்மென்ட் சபை மற்றும் லக்தனவி பங்களா பவர் லிமிடெட் மற்றும் பங்களாதேஷ் பவர் டெவலப்மென்ட் சபை ஆகியவற்றுக்கு இடையிலான உடன்படிக்கை ஏற்பாடுகளின் கீழ் “இ.்ப்ரிக் 4 - இன் படிகுத்தகை ஏற்பாடு ஒன்று உள்ளதா என்பதைத் தீர்மானித்தல்” பின்வரும் அளவுகோல்களின் திருப்திப்படுதல் காரணமாக “SLFRS-16- குத்தகைகள்” இன் கீழ் குத்தகைக்கு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டுமென குழுமம் கருதுகின்றது

- மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகளிலுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றுவது என்பது பங்களாதேஷில் அமைந்துள்ள குழுமத்தின் குறிப்பிட்ட மின்நிலையத்தின் பிரத்தியேக பயன்பாட்டைப் பொறுத்தது.
- மின் நிலையத்தை இயக்குவதற்கு பங்களாதேஷ் மின்சாரச பைக்கு உரிமை உண்டு அல்லது மின் உற்பத்தி நிலையத்தை இயக்க மற்றவர்களை அச்சபை வழிநடத்தும்.
- பங்களாதேஷ் மின் அபிவிருத்தி சபையைத் தவிர வேறு எந்தக் கட்சியும் நிறுவனத்தின் மின் உற்பத்தி நிலையத்தால் உற்பத்தி செய்யப்படும் எந்தவொரு உற்பத்தியையும் எடுப்பதற்கு முடியாதுள்ளதுடன் பங்களாதேஷ் மின் மேம்பாட்டு சபை செலுத்தும் ஒரு யூனிட்டிற்கான திறன் கட்டணம் வெளியீட்டை அடிப்படையாகக் கொண்டதல்ல.

  இந்தஏற்பாடு “எஸ்.எல்.எ.்.ப்.ஆர்.எஸ் 16” இன் கீழ் “நிதிகுத்தகை” என்று கணக்கீடு செய்யப்படுவதுடன் அதில் ராஜ் லங்கா கம்பெனி லிமிடெட் மற்றும் லக்தனவி பங்களா பவர் லிமிடெட் குத்தகைதாரராகவும், பங்களாதேஷ் பவர் டெவலப்மென்ட் சபை குத்தகைதாரராகவும் உள்ளன. குழுமத்தின் மின்வலு ஆலை பங்களாதேஷ் மின் மேம்பாட்டு சபைக்கு மாற்றப்படுகிறது.

### 2.6.11 அருவச் சொத்துக்கள்:

#### இனங்காணல் அடிப்படை

அருவச் சொத்துக்களிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் அநேகமாக குழுமத்துக்கு கிடைக்கும் என்றிருந்தால் மற்றும் அதன் கிரயம் நம்பத்தகுந்தளவில் அளவிடப்பட முடியும் என்றிருந்தால் அவை இனங்காணப்படுகின்றன.

#### அளவீட்டு அடிப்படை

தனியாக கொள்வனவு செய்யப்படும் அருவச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகரிப்பின் போது கிரயத்தில் அளவிடப்படும். வியாபார இணைப்பு ஒன்றின் போது கொள்வனவு செய்யப்படும் அருவச் சொத்துக்களின் கிரயம் கொள்வனவுத் திகதியில் உள்ள அவற்றின் சந்தைப் பெறுமதியாகும். ஆரம்ப அங்கீகரிப்பைத் தொடர்ந்து அருவச் சொத்துக்கள் அவற்றின் கிரயத்திலிருந்து திரண்ட காலத் தேய்மானம் மற்றும் திரண்ட சேத இழப்பு நட்டங்களை கழித்த தொகையில் முன் கொணரப்படும். அகத்தே உருவாக்கப்படும், மூலதனப்படுத்திய அபிவிருத்திச் செலவுகள் தவிர்ந்த, அருவச் சொத்துக்கள் மூலதனப்படுத்தப்படாது ஏற்பட்ட ஆண்டில் செலவாகக் கொள்ளப்படும்.

#### காலத்தேய்மானம் / நட்டக்கழிவு

அருவச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் முடிவுள்ளதாகவோ அல்லது முடிவற்றதாகவோ மதிப்பிடப்படும்.

முடிவுள்ள ஆயுட்காலத்தை கொண்ட அருவச் சொத்துக்கள் அவற்றின் பயன்தரு பொருளியல் ஆயுட்காலம் முழுவதற்கும் காலத் தேய்மானம் செய்யப்படுவதுடன் அவை சேத இழப்பிற்கு ஆளாகியமைக்கான குறிகாட்டிகள் இருக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் சேத இழப்பிற்காக மதிப்பிடப்படும். அருவச் சொத்து ஒன்றிற்கான காலத் தேய்மானக் காலமும், முறையும் குறைந்தது ஒவ்வொரு அறிக்கையிடற்கால முடிவிலும் மீளாய்வு செய்யப்படும். எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட்காலத்தில் அல்லது சொத்தில் அடங்கிய எதிர்கால பொருளியற் பயன்களின் எதிர்பார்க்கும் நுகர்வு முறையில் மாற்றங்கள், ஏற்றவாறு காலத் தேய்மானக் காலம் அல்லது முறையை மாற்றி கணக்கில் கொள்ளப்படுவதுடன், அவை கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமாகக் கொள்ளப்படும். முடிவுக் காலத்தை கொண்ட அருவச் சொத்துக்களின் காலத் தேய்மான செலவுகள் அருவச் சொத்துகளின் தொழிற்பாட்டுக்கு இசைய வருமானக் கூற்றில் செலவாக வகைப்படுத்தப்படும்.

#### சபை

மென்பாகங்கள் அவற்றின் பயனுள்ள 5 ஆண்டுகளிற்கு காலத்தேய்மானம் செய்யப்படுவதுடன் அனுமதிப்பத்திரங்கள் அதற்கான உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலம் முழுவதற்கும் காலத்தேய்மானம் செய்யப்படுகின்றது.

#### எல்.ரீ.எல். ஹோல்டிங் (பிரைவட்) லிமிட்ட்

கனணி மென்மாகங்கள் அவை கையகப்படுத்திய மற்றும் அபிவிருத்தி செய்த திகதியிலிருந்து 4 ஆண்டுகளிற்கு காலத்தேய்மானம் செய்யப்படுகின்றன.

**லங்கா மின்சார (தனியார்) கம்பனி லிமிடட்**

கணனி மென்பாக அனுமதிப்பத்திரங்கள் பயனுள்ள 5 ஆண்டுகளிற்கு காலத்தேய்மானம் செய்யப்படுகின்றன.

தொழில்நுட்ப திறன்கள் அவற்றின் 15 வருட ஒப்பந்த காலத்திற்குகாலத்தேய்மானம் செய்யப்படுகின்றன.

முடிவற்ற பயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் காலத் தேய்மானம் செய்யப்படுவதில்லை. அவை தனியாகவோ அல்லது காசு பிறப்பாக்க அலகு மட்டத்திலோ ஆண்டு தோறும் சேத இழப்புச் சோதனைக்கு ஆளாகும். முடிவற்ற ஆயுட்கால மதிப்பீடு முடிவற்ற ஆயுட்காலம் தொடர்ந்தும் ஏற்றுக் கொள்ளக்கூடியதா என்பதனை உறுதி செய்து கொள்வதற்கு ஆண்டு தோறும் மீளாய்வு செய்யப்படும். அவ்வாறு உறுதி செய்ய முடியாத போது, பயன்தரு ஆயுட் காலத்தின் முடிவற்ற காலத்திலிருந்து முடிவுள்ள காலத்திற்கான மாற்றம் பொருத்தமான அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**அங்கீகரிக்காதிருத்தல்**

அருவச் சொத்தொன்றின் அங்கீகரிப்பின்மையால் ஏற்படும் பெறுகை அல்லது இழப்பு அதன் நிகர விற்பனைப் பெறுவனவுக்கும் சொத்தின் முன்கொணரற் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக கணித்து சொத்து அங்கீகரிக்காதிருக்கையில் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

### 2.6.12 நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

#### 2.6.12.1 நிதிச் சொத்துக்கள்

நிதிச் சொத்துக்களின் ஆரம்ப அங்கீகரிப்பு மற்றும் அளவீடு

நிதிச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகரிப்பில் வகைப்படுத்தப்பட்டு, அதன்பின்னர், ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் ஊடாக நியாயப் பெறுமதி (எ.்.ப்வீஓசீஐ) யிலும்இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதி(எ.்.ப்வீபிஎல்) யிலும் காலத்தேய்மானக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

ஒரு நிதிச் சொத்து (ஒரு குறிப்பிடத்தக்க நிதிக் கூறு அல்லாத வியாபார பெறவேண்டியவையாக இல்லாதிவிடத்து) அல்லது நிதிப் பொறுப்பும்எ.்.ப்வீபிஎல் இல் இல்லாத ஒரு விடயத்தின் கையகப்படுத்தலுக்காக அல்லது வழங்கலுக்காக நேரடியாக பகிரத்தக்க அவ்வாறான கொடுக்கல் வாங்கல் கிரயங்களும்ஆரம்பத்தில் நியாயப்பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

ஒரு குறிப்பிடத்தக்க நிதிக் கூறு அற்ற ஒரு வியாபாரப் பெறவேண்டியவை ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் விலையில் அளவிடப்படுகிறது

**பிந்திய அளவீடு**

பிந்திய அளவீட்டு நோக்கத்திற்காக,நிதிசார்ந்த சொத்துக்கள் பின்வருமாறு நான்கு வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன

- காலத்தேய்மானக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)
- திரண்ட நயங்கள் மற்றும் நட்டங்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்தி ஓசீஐ ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)
- அங்கீகரிக்காதிருக்கும் திரண்ட நயங்கள் மற்றும் நட்டங்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதன் மூலம் ஓசீஐ ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள நிச்சயிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் (உரிமைத்துவ கருவிகள்)
- இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள

**காலத்தேய்மானக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)**

பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படுமாயின், கம்பனி நிதிச் சொத்துக்களை காலத்தேய்வுக் கிரயத்தில் அளவிடுகின்றது.

- ஒப்பந்த காசுப் பாய்ச்சலை சேகரிக்கும் நோக்குடன் வணிக முறையில் வைத்திருக்கப்படும் ஒரு நிதிச் சொத்ததாக காணப்படுதல்,

  மற்றும்

- நிதிச் சொத்தின் ஒப்பந்த விதிகள் குறிப்பிட்ட திகதிகளில் காசுப் பாய்ச்சலிற்கு வழிவகுத்து அவை அசல் மற்றும் வட்டி நிலுவைத் தொகைகளை மட்டுமே செலுத்துகின்றனவாக காணப்படுதல்.

காலத்தேய்வுக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள் பின்னர் பயனுள்ள வட்டிவீத (ஈஐஆர்) முறையினைப் பயன்படுத்தி அளவிடப்படுவதுடன் அவை நட்டக்கழிவிற்கு உட்படுகின்றன. சொத்தானது அங்கீகரிக்காது, மாற்றியமைக்கப்படாது அல்லது நட்டக்கழிவு அடையும் போது இலாபம் அல்லது நட்டத்தில் நயங்களும் நட்டங்களும் அங்கீகரிக்கப்படுகின்றன.

குழுமத்தின் காலத்தேய்வுக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்களில், வியாபார பெறவேண்டியவை, ஊழியர்களுக்கான கடன்கள், ஏனைய தரப்பினருக்கான கடன்கள் மற்றும்ஏனைய நிதிச் சொத்துக்களின் கீழுள்ள ஏனைய முதலீடுகள் என்பன உள்ளடங்குகின்றன

**ஓசீஐ ஊடாக நியாயப் பெறுமதியில் நிச்சயிக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)**

பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படுமாயின்,குழுமம்கடன் கருவிகளை ஓசீஐ இன் ஊடான நியாயப் பெறுமதியில் அளவிடுகின்றது.

- ஒப்பந்த காசுப் பாய்ச்சலை சேகரிக்கும் நோக்குடன் வணிக முறையில் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்ததாக காணப்படுதல்,

  மற்றும்

- நிதிச் சொத்தின் ஒப்பந்த விதிகள் குறிப்பிட்ட திகதிகளில் காசுப் பாய்ச்சலிற்கு வழிவகுத்து அவை அசல் மற்றும் வட்டி நிலுவைத் தொகைகளை மட்டுமே செலுத்துகின்றனவாக காணப்படுதல்.

ஓசீஐ ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள கடன் கருவிகளுக்கான வட்டி வருமானம், அந்நிய செலாவணி மறுமதிப்பீடு மற்றும் நட்டக்கழிவுகள் அல்லது மீளவைத்தல்கள் என்பனஇலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டு,கட்டக்கழிவுக் கிரயத்தில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்களைப் போன்றே இதுவும் கணிப்பிடப்படுகிறது. மீதமுள்ள நியாய பெறுமதி மாற்றங்கள் ஓசீஐ இல் அங்கீகரிக்கப்படுகின்றன. அங்கீகரிக்காதிருப்பதன் மீது,ஓசீஐ இல் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட நியாய பெறுமதி மாற்றமானது இலாபம் அல்லது நட்டத்திற்குமீழ்சுழற்சி செய்யப்படுகிறது.

**ஓசீஐ ஊடாக நியாயப் பெறுமதியில் நிச்சயிக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் (உரிமைத்துவ முதலீடுகள்)**

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், குழுமம் அதன் உரிமைத்துவ முதலீடுகளை எஸ்எல்எ.்.ப்ஆர்எஸ் 3 -இன் கீழ் விற்பனைக்காக வைத்திருக்காத அல்லது நிகழத்தக்கவையற்றாதாக ஓசீஐ இன் ஊடான நியாயப் பெறுமதியில் நிச்சயிக்கப்பட்ட உரிமைத்துவக் கருவிகளாக வகைப்படுத்துவதற்கு தெரிவுசெய்யலாம். வகைப்படுத்தலானது கருவிக்குக் கருவி என்ற அடிப்படையில் நிச்சயிக்கப்படுகின்றது. இந்த நிதிச் சொத்துக்களின் நயங்களும் நட்டங்களும் ஒருபோதும் இலாபம் நட்டத்திற்கு மீள்சுழற்சி செய்யப்படுவதில்லை. நிதிச் சொத்தின் ஒரு பகுதியை மீட்டெடுத்தல் போன்ற வருமானங்களிலிருந்து குழுமம் நலன் பெறுவது தவிர்ந்த,கொடுப்பனவுக்கான உரிமை உறுதிப்படுத்தப்படுகையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் பங்கிலாபம் ஏனைய வருமானமாக அங்கீகரிக்கப்படுவதுடன்,அத்தகைய ஆதாயங்கள் ஓசீஐ இல் பதிவுசெய்யப்படுகின்றது. ஓசீஐ ஊடாக நியாயமான பெறுமதியில் நிச்சயிக்கப்பட்ட உரிமைத்துவக் கருவிக் நட்டக்மிழிவு மதிப்பீட்டிற்கு உட்படுவதில்லை.

**நிதி சொத்துக்களின் மீள வகைப்படுத்தல்**

நிதி சொத்துக்களை நிர்வகிப்பதற்காக குழுமம் அதன் வணிக மாதிரியை மாற்றுகின்ற போது மற்றும் அவ்வாறான நிலையின் போது மாத்திரம் குழுமம் அதன் நிதிச் சொத்துக்களை மீள வகைப்படுத்துகின்றது. காலத்தேய்மானக் கிரயத்திலுள்ள, ஏனைய விரிவான வருமானத்தின் ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள அல்லது இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள நிதி சொத்துக்களை குழுமம் மீள வகைப்படுத்துமாயின்,முன்னைய மீள வகைப்படுத்தல் தேதியிலிருந்து அவ்வாறான மீள வகைப்படுத்தலை குழும் பிரயோக்கின்றது. அதன்போது குழுமம் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட ஆதாயங்கள்,நட்டங்கள் (குறைபாடு நட்டக்கழிவு இலாபங்கள் அல்லது நட்டங்கள் உட்பட) அல்லது வட்டி ஆகியவற்றை மீண்டும் வைப்பதில்லை.

காலத்தேய்மானக் கிரய அளவீட்டு வகையின் கீழ் மற்றும் இலாப அல்லது நட்ட அளவீட்டு வகையின் ஊடான நியாயப் பெறுமதியின் கீழ் இல்லாத நிதிச் சொத்தொன்றை குழும் மீண்டும் வகைப்படுத்தினால்,மீள வகைப்படுத்தல் தேதியில் அதன் நியாயப் பெறுமதி அளவிடப்படுகின்றது. நிதிச் சொத்தின் முன்னைய காலத்தேய்மானப் பெறுமதிக்கும் நியாயப் பெறுமதிக்கும் இடையேயான வேறுபாட்டிலிருந்து எழுகின்ற எந்த இலாபமும் அல்லதுநட்டமும்இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

காலத்தேய்மானக் கிரய அளவீட்டு வகையின் கீழ் மற்றும் ஏனைய விரிவான வருமான அளவீட்டு வகையின் ஊடான நியாயப் பெறுமதியின் கீழ் இல்லாத நிதிச் சொத்தொன்றை குழும் மீண்டும் வகைப்படுத்தினால், மீள வகைப்படுத்தல் தேதியில் அதன் நியாயப் பெறுமதி அளவிடப்படுகின்றது. நிதிச் சொத்தின் முன்னைய காலத்தேய்மானப் பெறுமதிக்கும் நியாயப் பெறுமதிக்கும் இடையேயான வேறுபாட்டிலிருந்து எழுகின்ற எந்த இலாபமும் அல்லது நட்டமும் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

ஏனைய விரிவான வருமான அளவீட்டு வகையின் ஊடான நியாயப் பெறுமதியின் கீழ் மற்றும் காலத்தேய்மான கிரய அளவீட்டு வகையின் கீழ் இல்லாத நிதிச் சொத்தொன்றை குழும் மீண்டும் வகைப்படுத்தினால், மீள வகைப்படுத்தல் தேதியில் அதன் நியாயப் பெறுமதியில் அந்த நிதிச் சொத்து மீள வகைப்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும்,முன்னர் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட ஆதாயம் அல்லது நட்டம் உரிமைத்துவத்தில் இருந்து நீக்கப்பட்டு மீள வகைப்படுத்தல் தேதியிலுள்ள நிதிச் சொத்தின் நியாயப் பெறுமதிக்கு எதிராக சீராக்கப்படுகிறது. இதன் விளைவாக, நிதிச் சொத்து எப்போதும் காலத்தேய்மானக் கிரயத்தில் அளவிடப்பட்டிருக்குமாயின்,மீள வகைப்படுத்தல் தேதியிலும் அது அளவிடப்படுகிறது. இந்த சீராக்கம் விரிவான வருமானத்தை பாதிக்கின்ற போதிலும், இலாபம் அல்லது நட்டத்தை பாதிப்பதில்லை. ஆகையால், இது மீள வகைப்படுத்தல் சீராக்கமாக காணப்படுவதில்லை. மீள வகைப்படுத்தல் விளைவொன்றாக பயனுள்ள வட்டி விகிதம் மற்றும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளின் அளவீடு என்பன சீராக்கப்படுவதில்லை.

ஏனைய விரிவான வருமான அளவீட்டு வகையின் ஊடான நியாயப் பெறுமதியின் கீழ் மற்றும் இலாபம் அல்லது நட்ட அளவீட்டு வகையின் ஊடான நியாயப் பெறுமதியின் கீழ் இல்லாத நிதிச் சொத்தொன்றை குழும் மீண்டும் வகைப்படுத்தினால்,நிதி சொத்தானது நியாயமான பெறுமதியிலேயே தொடர்ந்தும் அளவிடப்படுகிறது. முன்னர் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட ஆதாயம் அல்லது நட்டமானதுமீள வகைப்படுத்தல் தேதியில் மீள வகைப்படுத்தல் சீராக்கமொன்றாக உரிமைத்துவத்தில் இருந்து இலாபம் அல்லது நட்டத்துக்கு மீள மீள வகைப்படுத்தப்படுகிறது

**இனங்காணாது விட்டுவிடுதல்**

நிதிச் சொத்தொன்று பின்வரும் நிலமைகளில் அங்கீகரிக்கப்படுவதில்லை.

- காலாவதியாகிய சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான உரிமைகள் இருக்கின்ற போதும்.
- குழுமம், அத்தகைய சொத்திலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்கான தனது உரிமைகளை மாற்றிக்கொடுத்துள்ளது அல்லது ஹஒரு பாரப்படுத்தலுடடான' ஏற்பாட்டின் கீழ், ஒரு மூன்றாந்தரப்புக்கு பொருண்மையான தாமதமின்றி, தனக்குக் கிடைத்த காசுப்பாய்ச்சல்களை முழுமையாக செலுத்துவதற் கான ஒரு கடப்பாட்டைப் பொறுப்பேற்றுள்ளது எனும் போதும், இல்லையெனில் பின்வரும் இரண்டிலொரு விதத்தில்,

(அ) குழுமம், சொத்தின் சகல விதமான பொறுப்புக்களையும் மற்றும் சொத்துக்கள் வழங்கல்களையும் கணிசமானளவில் மாற்றிக் கொடுத்துள்ளது,

அல்லது.

(ஆ) குழுமம், அவ்வாறு சொத்தின் சகல விதமான பொறுப்புகளையும் மற்றும் சொத்துக்கள் வழங்கல்களையும் கணிசமானளவில் மாற்றிக் கொடுக்கவோ அல்லது பித்துவைக்க வோ இல்லையென்றாலும், சொத்தின் மீதுள்ள கட்டுப்பாட்டை மாற்றிக் கையளித்துள்ளது எனும் போதும், இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது.

குழுமம், ஒரு சொத்திலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான தனது உரிமைகளை மாற்றிக் கொடுத்துள்ளது அல்லது பாரப்படுத்தலூடான ஒரு ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளது எனும் போதும், மற்றும் சொத்தின் சகல விதமான பொறுப்புகளையும் மற்றும் சொத்துக்கள் வழங்கல்களையும் கணிசமானளவில்

மாற்றிக்கொடுக்கவோ அல்லது பித்துவைக்கவோ அல்லது தனது கட்டுப்பாட்டை மாற்றிக் கையளிக்கவோ இல்லை எனும் போதும், அந்த சொத்து கம்பனிக்கு அந்த சொத்தின் மீதுள்ள ஈடுபாட்டின் அளவுக்கு இணங்காணமல் விட்டுவிடப்படும். அத்தகைய சந்தர்ப்பத்தில், குழு அதனை தொடர்புடைய ஒரு பொறுப்பாக வும் இனங்காணும். மாற்றிக்கொடுக்கப்பட்ட சொத்துக்களும் மற்றும் தொடர்புடைய பொறுப்புக்களும் அந்தக் குழுவிடமுள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் என்பவற்றைப் பிரதிபலிக்கும் ஒரு அடிப்படையில் அளவிடப்படுகின்றன.

மாற்றிக் கொடுக்கப்பட்ட அந்த சொத்தின் மீதான ஒரு பிணையுத்தரவாத வடிவத்தைப் பெறுகின்ற தொடர் ஈடுபாடானது அந்த சொத்தின் உண்மையான கொணரப்படும் குறைந்த தொகையிலும் மற்றும் குழு மீளச்செலுத்துவதற்குத் தேவைப்படுத்தக் கூடும் எனும் ஆகக் கூடிய தொகையிலும் அளவிடப்படுகின்றது.

### 2.6.12.2 நிதி சார்ந்த சொத்துக்களின் நட்டக்கழிவு

நிதிசார்ந்த ஒரு சொத்துக்கு அல்லது நிதி சார்ந்த சொத்துக்கள் தொகுதிற்கு நட்டம் ஏற்பட்டிருக்கின்றதா என்பதற்கு தெளிவான ஏதாவதொரு சான்று காணப்படுகின்றதா என நிர்ணயித்துக்கொள்ளும் பொருட்டு அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் குழுஅத்தகைய சொத்தை மதிப்பிடும். நிதிசார்ந்த ஒரு சொத்துக்கு அல்லது நிதிசார்ந்த சொத்துக்களின் தொகுதிற்கு நட்டம் ஏற்பட்டிருக்கின்றது என ஊகிக்கப்படும், மற்றும் சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் நிகழ்ந்த (ஒன்று அல்லது அதற்கு அதிகமான) நிகழ்வுகளின் விளைவாக நட்டம் ஏற்பட்டுள்ளது என்பதற்கான தெளிவான ஒரு சான்று காணப்படும் பட்சத்தில் மாத்திரம், அந்த நிதி சார்ந்த சொத்துக்களின் அல்லது நிதிசார்ந்த சொத்துக்கள் தொகுதியின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மீது ஒரு தாக்கத்தைக் கொண்டுள்ள அந்த நட்டத்தை நம்பத்தகுந்தளவில் மதிப்பிடலாம். கணிசமானளவு நிதிசார்ந்த பிரச்சினை, கடன் செலுத்துவதில் தவறுகை அல்லது வட்டி அல்லது அடிப்படைக் கட்டணங்கள் செலுத்துவதில் தவறுகை, அத்தகைய பற்றுக்களும் பற்றுத்தொகுதிகளும் திவால் நிலைக்கு அல்லது ஏனைய நிதிசார்ந்த மீளொழுங்கமைப்புக்கு உள்ளாகுதல் முதலிய அம்சங்களை கடன் பற்றுக்கள் அல்லது கடன் பற்றுத் தொகுதிகள் கொண்டுள்ளன. என்பதை சுட்டிக்காட்டுகின்ற சுட்டிகளும், மற்றும் அந்த தவறுகையுடன் தொடர்புடைய பொருளாதார ரீதியான நிலைமைகள் அல்லது நிலுவைகளிலுள்ள மாற்றங்கள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களில் அளவிடக்கூடிய ஒரு குறைப்பு இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டுகின்ற அவதானிக்கக்கூடிய தரவுகள் என்பன நட்டம் தொடர்பான சான்று விடயத்தில் உள்ளடங்கியிருக்கலாம்.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயப் பெறுமதியில் வைத்திருக்கப்படாத அனைத்து கடன் கருவிகளினதும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்காக(நுஊடுள) ஒரு படியை கம்பனி அங்கீகரிக்கிறது. ஒப்பந்தத்திற்கு ஏற்ப செலுத்த வேண்டிய காசுப் பாய்ச்சலிற்கும் குழுமம் பெறுவதற்கு எதிர்பார்க்கின்ற அனைத்து அசல் பயனுள்ள அண்ணளவான வட்டி விகிதத்திற்கு கழிவுசெய்யப்பட்ட காசு பாய்ச்சலிற்கும் இடையிலான வேறுபாட்டின் அடிப்படையில் ECLs மதிப்பிடப்படுகின்றது. பிணைப்பின் விற்பனையிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள அல்லது ஒப்பந்த விதிமுறைகளுக்கு இணையான பிற கடன் மேம்பாடுகள் ஆகியவற்றை எதிர்பார்க்கப்படும் காசுப் பாய்ச்சல்கள் உள்ளடக்குகின்றது.

ECLs இரண்டு கட்டங்களில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படாத கடன் வெளிப்பாடுகளுக்கு

- அடுத்த 12 மாதங்களுக்குள் (12 மாத ECL) கடன் கிடைக்காமைக்கான சாத்தியமான நிகழ்வுகளால் ஏற்படும் கடன் இழப்புகளுக்காக ECL மேற்கொள்ளப்படுதல்.
- ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் இடரில் கணிசமான அதிகரிப்பு காணப்படுகின்ற கடன் வெளிப்பாடுகளுக்கு - கடன் கிடைக்காதிருப்பதற்கான காலத்தை பொருட்படுத்தாது,எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்களின் எஞ்சியுள்ள ஆயுட்காலம் (ECL ஆயுட்காலம்) முழுவதற்கும் நட்டப் படியொன்று தேவைப்படுதல்.

வியாபாரஇ வேண்டியவை மற்றும் ஒப்பந்த சொத்துக்களுக்காக ECLsஇனைக் கணிப்பிடுகையில் கம்பனி எளிமையான அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது. எனவே, கடன் இடரின் அபாயத்தில் மாற்றங்களைக் கண்காணிக்காத போதிலும்,மாறாக ஒவ்வொரு அறிக்கையிடல் தேதியிலும் ECLs இன் ஆயுட்காலத்தின் அடிப்படையில் இழப்புக்கான படியொன்றை அங்கீகரிக்கிறது. கம்பனி அதன் வரலாற்றுரீதியான கடன் இழப்பு அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு முன்னேற்றகரமான கணிப்பீட்டு அட்டவணையை நிறுவியுள்ளது

### 2.6.12.3 நிதிசார்ந்த பொறுப்புக்கள்

#### ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

நிதிசார்ந்த பொறுப்புக்கள் ஆரம்ப இனங்காணலின் போது எஸ்எல்எ∴ப்ஆர்எஸ் 9 இன் நோக்கெல்லையில் வகைப்படுத்தப்படுகின்றது. குழுமம் அதன் நிதிசார்ந்த பொறுப்புக்களின் வகைப்படுத்தலை ஆரம்ப அங்கீகரித்தலின் போது நிச்சயிக்கின்றது.

நிதிசார்ந்த சகல பொறுப்புக்களும் அடிப்படை ரீதியில் நியாய விலைப் பெறுமானத்தில் இனங் காணப்படுகின்றன. கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள், ஏனைய நிதிசார்ந்த பொறுப்புக்கள் என்பவற்றை பொறுத்த வரையில் கழிக்கப்பட்ட ஆகுசெலவில் இனங்காணப்படுகின்றன.

#### தொடர்ந்து வரும் அளவீடு

நிதி சார்ந்த பொறுப்புக்களின் அளவீடு பின்வருமாறு அவற்றின் வகுதியில் தங்கியிருக்கும்.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயப் பெறுமதி என வகைப்படுத்திய நிதிப் பொறுப்புக்கள் அதன்பின்னா் நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்படுவதுடன் ஏனைய பொறுப்புக்களாக வகைப்படுத்திய நிதிப் பொறுப்புக்கள் அதன்பின்னா் காலத்தேய்மானக் கிரயத்தில் அளவிடப்படும்.

#### இனங்காணாது விட்டுவிடுதல்

கடப்பாடு விடுவிக்கப்படும் அல்லது நீக்கப்படும் அல்லது காலாவதியாகும் போது நிதிசார்ந்த ஒரு பொறுப்பு இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது.

### 2.6.12.4 நிதிசார்ந்த கருவிகளை எதிரீடு செய்தல்

இனங்காணாது விட்டுவிடப்பட்ட தொகைளை சமப்படுத்தும் பொருட்டு தற்போது நடைமுறைப்படுத்தக்கூடிய சட்டமுறையான உரிமை அல்லது அதே சமயத்தில் சொத்துக்களையும் மற்றும் பொறுப்புக்களையும் ஒரு நிகர அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான

அல்லது உணரச்செய்வதற்கான ஒரு எண்ணம் இருந்தால் அல்லது இருக்கின்ற நேரத்தில் மாத்திரம் நிதிசார்ந்த சொத்துக்களும் மற்றும் நிதிசார்ந்த பொறுப்புக்களும் சமப்படுத்தப்பட்டு நிதி நிலைக் கூற்றில் பதியப்படுகின்றன.

### 2.6.12.5 நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதி

விற்பனைக்காக காணப்படுகின்ற மற்றும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள் போன்ற நிதிக் கருவிகளை ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் நியாயப் பெறுமதியில் குழுமம் அளவிடுகின்றது.

நியாயப் பெறுமதி என்பது ஒரு சொத்தின் விற்பனைக்காக கிடைக்கின்ற அல்லது அளவிடல் திகதியில் சந்தை பங்கேற்பாளர்களிடையே ஒரு ஒழுங்கான கொடுக்கல் வாங்கலில் ஒரு பொறுப்பை கைமாற்றுவதற்காக செலுத்தப்படும் விலையாகும்.

நியாய பெறுமதி அளவீடு என்பது சொத்தை விற்பதற்கு அல்லது பொறுப்பை கைமாற்றுவதற்கான கொடுக்கல் வாங்கல் நடைபெறுகிறது என்ற ஊகத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. அதாவது:

- சொத்து அல்லத பொறுப்புக்கான முதன்மை சந்தையில் அல்லது
- ஒரு முதன்மைச் சந்தை இல்லாத நிலையில், சொத்து அல்லது பொறுப்புக்கு மிகவும் சாதகமான சந்தையில்
- மிகவும் சாதகமான சந்தையை குழுவால் அணுக முடிதல் வேண்டும்.

ஒரு சொத்தின் அல்லது பொறுப்பின் நியாயப் பெறுமதியானது சந்தை பங்கேற்பாளர்கள் தங்கள் பொருளாதார சிறந்த நலனுக்காக செயல்படுவதாகக் கருதி சொத்தை அல்லது பொறுப்பை விலை நிர்ணயம் செய்யும் போது சந்தை பங்கேற்பாளர்கள் பயன்படுத்தும் அனுமானங்களைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

சூழ்நிலைக்கேற்பவும்நியாயப் பெறுமதியை அளவிடுவதற்கு போதுமான தரவு கிடைக்கின்ற போதும் தொடர்புடைய அவதானிக்கத்தக்க உள்ளீடுகளின் பயன்பாட்டை உச்சப்படுத்துகின்ற மற்றும் அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டை இழிவுபடுத்துகின்ற பொருத்தமான மதிப்பீட்டு நுட்பங்களை குழுமம் பயன்படுத்துகின்றது.

நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்படுகின்ற அல்லது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்ற அனைத்து சொத்துக்களும் பொறுப்புக்களும் நியாயப் பெறுமதி உயர்வரிசைக்கேற்ப வகைப்படுத்தப்பட்டு முழுமையாக நியாயப் பெறுமதிக்கு முக்கியத்துவமானதாக உள்ள ஆகக்குறைந்த மட்ட உள்ளீட்டின் அடிப்படையில் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

மட்டம் 1 - இனங்காண முடியுமான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களிற்காக செயற்படு சந்தையில்நிரற்படுத்திய (சீராக்கப்படாத) சந்தை விலைகள்.

மட்டம் 2 - நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்க நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கக்கூடிய ஆகக்குறைந்த மட்ட உள்ளீட்டிற்கான பெறுமதியிடல் நுட்பங்கள்.

மட்டம் 3 - நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்க நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக் முடியாத ஆகக்குறைந்த மட்ட உள்ளீட்டிற்கான பெறுமதியிடல் நுட்பங்கள்.

தொடர்ச்சியான அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படுகின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்காக வகைப்படுத்தலை மீள்மதிப்பீடு செய்வதன் மூலம் உயர் வரிசைக்குட்பட்ட மட்டங்களுக்கு இடையில் இடமாற்றங்கள் நிகழ்ந்துள்ளனவா என்பதனை (ஒட்டுமொத்தமாக நியாயப் பெறுமதி அளவீட்டுக்கு குறிப்பிடத்தக்க ஆகக்குறைந்த அளவிலான உள்ளீட்டின் அடிப்படையில்) ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் குழுமம் தீர்மானிக்கிறது.

குழுமத்தின் முகாமைத்துவம் ஏனைய விரிவான வருமானத்தின் ஊடாக அளவிடப்பட்ட நிரற்படுத்திய நிதிச் சொத்துக்கள் போன்ற தொடர்ச்சியான நியாயப் பெறுமதி அளவீட்டுக்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை தீர்மானிக்கிறது.

நியாயப் பெறுமதி வெளிப்படுத்தல்கள் நோக்கத்திற்காக, சொத்துக்கள்அல்லது பொறுப்புக்களின் தன்மை, பண்புகள் மற்றும் இடர்கள் மற்றும் மேலே விளக்கப்பட்டுள்ளபடி நியாய பெறுமதி உயர்வரிசை மட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் குழுமம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வகுப்புக்களைத் தீர்மானித்துள்ளது.

### 2.6.13 ஏற்பாடுகள்

பொறுப்புத் தொகையை மேற்கொள்ளக்கூடிய நம்பத்தகுந்த ஒரு மதிப்பீடு மற்றும் பொறுப்பு என்பவற்றைத் தீர்ப்பனவு செய்வதற்கு அவசியப்படுத்தப்படும் பொருளாதார நன்மைகள் பொதிந்துள்ள வளங்களின் வெளிப்பாய்ச்சல் அநேகமாக இருக்கலாம் என்ற கடந்த கால ஒரு விளைவின் பயனாக குழு தற்பொழுது ஒரு கடப்பாட்டை (சட்டமுறையாக அல்லது ஆக்கபூர்வ) கொண்டுள்ளது எனும் போது ஏற்பாடுகள் இனங் காணப்படுகின்றன.

பணத்தினது காலப் பெறுமானத்தின் தாக்கம்பொருண்மையானதாக இருப்பின்,பணத்தின் காலப் பெறுமதியின் நடப்புச் சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கின்ற எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களை ஒருவரிக்கு முற்பட்ட வீதத்தைப் பயன்படுத்தி கழிவுநீக்கம் செய்வதன் மூலம் ஏற்பாடுகள் நிச்சயிக்கப்படுவதுடன்,பொருத்தமானவிடத்து,காலப் பகுதிக்குரிய குறித்துரைத்த இடர்கள் நிதிக் கிரயமாக அங்கீகரிக்கப்படுகின்றது

### 2.6.14 ஓய்வூதிய நலக் கடப்பாடுகள்

#### விபரிக்கப்பட்ட நலத் திட்டம் - ஓய்வூதிய கடப்பாடு

ஒரு ஊழியர் ஓய்வின் போது ஓய்வூதியம் பெறுதலானது, வழமையாக அவரது வயது, சேவைக் காலம் மற்றும் வேதனம் போன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகளில் தங்கியுள்ளது.

விபரிக்கப்பட்ட நலஓய்வூதியத் திட்டம் தொடர்பாக நிதிநிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்பொறுப்பு, அறிக்கையிடற் கால இறுதியில் விபரிக்கப்பட்ட நலக்கடப்பாட்டின் இற்றைப் பெறுமதியிலிருந்து திட்டச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியை கழிக்க வரும் தொகையினை அங்கீகரிக்காத கடந்தகால சேவைக் கிரயங்களுக்காக செம்மையாக்கம் செய்ய வரும் தொகையாகும். விபரிக்கப்பட்ட நலக்கடப்பாடு எதிர்வு கூறப்பட்ட அலகுக் கிடைப்பனவினை உபயோகித்து சுயாதீன ஆயுள்முறை கணிப்பீட்டாளர்களினால் ஆண்டுதோறும் கணிக்கப்படும். விபரிக்கப்பட்ட

நலக்கடப்பாட்டின் இற்றைப் பெறுமதியானது மதிப்பிடப்பட்ட எதிர்கால காசு வெளிப்பாய்வுகளை, இலங்கையில் உயர்ந்த தரத்திலான பாரிய கூட்டிணைவுப் பிணைமுறிச் சந்தை இல்லாத காரணத்தால், அரச பிணை முறிகளின் வட்டி விகிதத்தை உபயோகித்து கழிவீடு செய்வதன்மூலம் தீர்மானிக்கப்படும். அரச பிணைமுறிகள் பயன்கள் செலுத்தப்படவுள்ள நாணயத்தில் இருப்பதுடன், அதன் முதிர்வுகாலம் தொடர்புபட்ட ஓய்வூதிய கடப்பாட்டுக் காலத்தை அண்மித்ததாக இருக்கும்.

எழுகின்ற ஏதேனும்உள்ளபடியான நயங்கள் அல்லது நட்டங்கள் உடனடியாக ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஓய்வூதியத் திட்டத்தில் மாற்றங்கள் - ஊழியர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு (ஒப்படைக் காலம்) சேவையில் இருக்கவேண்டும் என்ற நிபந்தனையை கொண்டிருந்தாலன்றி, கடந்தகால சேவைக்கிரயமானது உடனடியாக முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். இந்தச் சந்தர்ப்பத்தில் கடந்தகால சேவைக் கிரயம் ஒப்படைக் காலம் முழுவதற்கும் நேர்கோட்டு அடிப்படையில் காலத்தேய்மானம் செய்யப்படும்.

#### விபரிக்கப்பட்ட நலத் திட்டம் - பணிக்கொடை

விபரிக்கப்பட்ட நலத் திட்டம் - பணிக்கொடை, ஓய்வின்போது ஊழியர் ஒருவர் பெறும் பயன் தொகையை வரையறுக்கின்றது. இது வழக்கமாக சேவைக்காலம், ஊதியம் போன்ற ஒன்று அல்லது மேற்பட்ட காரணிகளில் தங்கியிருக்கும். விபரிக்கப்பட்ட நலத் திட்டம் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டத்தில் ஏற்பாடுசெய்துள்ள பணிக்கொடையை கொண்டுள்ளது.

நிதி நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட பணிக்கொடைப் பொறுப்பு என்பது, சுயாதீன மதிப்பீட்டாளர்களால் எதிர்வுகூறப்பட்ட அலகுக் கடன் முறையைப் பயன்படுத்தி அளவிடப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் திகதியில் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட நலப் பொறுப்புக்களின் தற்போதைய பெறுமதியாகும்.

எழுகின்ற எந்வொரு ஆதாயங்கள் அல்லது இழப்புகள் உடனடியாக பிற விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படும்.

பணிக்கொடைப் பொறுப்புக்காக வெளியில் முதலீட்டு நிதியம் ஆக்கப்படவில்லை.

#### விபரிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் உரிய சட்டவாக்கங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக உரிமை உடையவராவர். குழுமம் ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் மொத்த ஊதியத்தில் முறையே 12% மற்றும் 3% பங்களிப்பு செய்கின்றபோதிலும், இலங்கை மின்சார சபையானது ஊழியரின் மொத்த ஊதியத்தில் 15% இலங்கை மின்சார சபையின் சேமலாப நிதிக்கு பங்களிப்பு செய்கின்றது.

### 2.6.15 சுய காப்புறுதி ஒதுக்கம்

இலங்கை மின்சார சபையானது ஆண்டின் இறுதியில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் மொத்த பெறுமதியின் 0.1% இனை ஒவ்வொரு ஆண்டிலும் சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றுகின்றது. இலங்கை மின்சார சபையின் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கு ஏற்படும் இழப்புகளும் சேதங்களும் இந்த காப்புறுதி ஒதுக்கத்திற்கு தாக்கல் செய்யப்படும். இந்தத் தேவைகளுக்கான நிதியம் வேறான வங்கிக் கணக்கொன்றில் முதலீடு செய்யப்பட்டுள்ள பணத்திலிருந்து பெறப்படும்.

### 2.6.16 அரசாங்க மானியம்

அரசாங்க மானியங்கள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. அவை பெறப்படும் என்ற நியாயமான உத்தரவாதம் காணப்படுகையில், குழுமம் மானியத்துடன் தொடர்புடைய நிபந்தனைகளிற்கு இணங்குகின்றது. செலவினங்களை ஈடுசெய்வதற்கான குழுமத்திற்குரிய மானியங்கள் இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் செலவினம் அங்கீகரிக்கப்பட்ட அதே காலகட்டங்களில் முறையான அடிப்படையில் ஏனைய வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன. குழுமத்தின் சொத்தொன்றின் கிரயத்தை ஈடுசெய்வதற்கான மானியம்ங்கள், சொத்தொன்றின் பயனுள்ள ஆயுட்காலம் முழுவதற்கும் முறையான அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.6.17 காசும் காசுக்கு சமமானவைகளும்

நிதி நிலைமைக் கூற்றிலுள்ள காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் வங்கியிலும் கையிலும் உள்ள காசு மற்றும் விரைவாக காசாக மாற்றக்கூடிய மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைந்த உயர் திரவத்தன்மை வாய்ந்த குறுங்கால வைப்புக்களை உள்ளடக்குவதுடன் பெறுமதியில் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான இடரையும் இவை கொண்டுள்ளன.

காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக,காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் வங்கியிலும் கையிலும் உள்ள காசு மற்றும் குறுங்கால வைப்புக்களிருந்து நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப்பற்றைக் கழித்துப் பெறப்படுகின்றது.

### 2.6.18 வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்

பொருட்கள் அல்லது சேவைகளை வாடிக்கையாளருக்கு மாற்றுவதற்கு ஈடாக குழுமம் எதிர்பார்க்கின்ற அளவிற்கு வாடிக்கையாளருக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட அத்தகைய பொருள் அல்லது சேவையினை வாடிக்கையாளருக்கு மாற்றுவதன் மூலம் குறித்த பணியினை பூர்த்தி செய்கையில் குழுமம் அந்த வருவாயை அங்கீகரிக்கின்றது. அதற்கமைய, பின்வருமாறு குழுமம் வருமானங்களை அங்கீகரிக்கின்றது.

#### (அ) மின்சாரம் விற்பனை

வழங்கப்பட்ட சேவை இணைப்புக்களின் மூலம் வாடிக்கையாளர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்துகையில்,மின்சார விற்பனையிலிருந்தான வருமானத்தை குழுமம் அங்கீகரிக்கின்றது. வருமானத்தை அங்கீகரிக்கின்ற கட்டணமானது இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டண விகிதங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

வெளியீட்டு முறையைப் பயன்படுத்தி செயலாற்றல் கடப்பாடுகளின் முன்னேற்றத்தை குழுமம் அளவிடுகிறது. வெளியீட்டு முறை அங்கீகார வருவாய் என்பது வாடிக்கையாளருக்கு மாற்றப்பட்ட நேரடியான பெறுமதி அளவீடுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அதன்படி, குழுமம் வழங்கப்பட்ட

KWh மின்சாரத்தின் அடிப்படையில், மாதாந்த ரீதியான வருவாயை பதிவு செய்கிறது.

**(ஆ) நுகர்வோர் பங்களிப்பு**

உரிய நேரத்தில் மின்சாரத்தை வழங்குவதற்கு வசதியாக சொத்தை உருவாக்குவதற்கு வாடிக்கையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுவனவுகள் காலம் முழுவதற்கும் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஏனெனில், குழுமத்தினால் வழங்கப்பட்ட சொத்துக்களின் நலனை மின்சாரத்தை நுகர்கின்ற வாடிக்கையாளர்கள் காலம் முழுவதும் கூட்டாக அனுபவிப்பதனாலாகும். எனவே, பெற்றுக்கொள்ளப்பட்ட தொகைகள் சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் முழுவதற்கும் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

**இ ) மின்சார வாகனங்களை உயிர்ப்பித்தல் (Charging) வருமானம்**

சபையால் நிறுவப்பட்ட மின்சார வாகன சார்ஜிங் நிலையங்களில் தங்களது மின்சார வாகனங்களிற்கு வாடிக்கையாளர்களால் நுகரப்படும் மின்சாரம், அதற்காக வழங்கப்பட்டுள்ள முன்கூட்டியே செலுத்தும் அட்டைகளைப் (சநியனை ஊயசனள) பயன்படுத்துவதன் மூலம் உரிய மின்சாரக் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டவுடன் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

**(ஈ) ஒப்பந்தப் பொறுப்புக்கள்**

ஒரு ஒப்பந்தப் பொறுப்பென்பது குழுமம் ஏற்கனவே பரிசீலித்த வாடிக்கையாளருக்கு சேவைகளை மாற்றுவதற்காக கடமையாகும். எனவே மின்சார வாகனங்களை உயிர்ப்பிப்பதற்கான இலத்திரனியல் அட்டைகளில் எஞ்சியுள்ள முன்கூட்டியே செலுத்திய தொகை மற்றும் சேவை இணைப்புகளிற்காக நுகர்வோர் பங்களிப்பிலுள்ள பதிவழிக்காத தொகை என்பன குழுமத்தின் ஒப்பந்தப் பொறுப்புக்களாக கருதப்படுகின்றன.

### 2.6.19 நிதிக் கிரயம் மற்றும் வருமானம்

வட்டி வருமானம் அல்லது செலவினம்தாக்கமுள்ள வட்டி விகிதத்தைப் (EIR) பயன்படுத்தி பதிவு செய்யப்படுகின்றது.இந்த விகிதம்நிதியியல் கருவியின் எதிர்பார்க்கப்படும் ஆயுள் அல்லது குறுகிய காலமொன்றில் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகளின் உள்ளபடியான கழிவீட்டுவீதமாக இருப்பதுடன்,பொருத்தமாயின்,நிதி சொத்தின் அல்லது பொறுப்பின் முன்கொண்டு செல்லும் தொகையாகவும் இருக்கும்.

### 2.6.20 பங்கிலாபம்

உருவாக்கப்படுகின்ற கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கு பங்குதாரர்களிற்கு உரிமை காணப்படுகையில், பங்கிலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.6.21 ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் செலவினம்

**ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள்**

துணைக் கம்பனிகள், கூட்டுத்தொழில் முயற்சிகள் மற்றும் பிடிப்புக் கம்பனிகளிலுள்ள முதலீடுகள் உள்ளிட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் பிற நடைமுறையல்லாத சொத்துக்களின் கைதவிர்ப்பிலிருந்து எழுகின்ற தேறிய ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள் என்பன கைதவிர்ப்பிலிருந்து கிடைக்கின்ற வருவாயிலிருந்து அத்தகைய சொத்துகளின் முன்கொண்டு செல்லும் தொகை மற்றும் தொடர்புடைய விற்பனை செலவுகள் கழிக்கப்பட்ட பின்னர் வருமானக் கூற்றில் கணக்கீடு செய்யப்படுகின்றது.

**ஏனைய வருமானம் மற்றும் செலவினம்**

ஏனைய வருமானங்களும் செலவினமும் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.6.22 செலவின அங்கீகாரம்

அ) மின்வலு கொள்வனவு உடன்படிக்கையிலிருந்து (PPA) எழும் செலவுகள் உள்ளிட்ட செலவினம்,அவற்றுக்கு இடையேயான நேரடி தொடர்பு,ஏற்பட்ட கிரயங்கள் மற்றும் குறிப்பிட்ட வருமான விடயங்கள் உழைப்புகள் ஆகியவற்றின் அடிப்படையிலவிரிவான வருமான கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. வணிகத்தை நடத்திச் செல்வதற்கும் வினைத்திறனான முறையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை பராமரிப்பதற்கும் ஏற்பட்ட அனைத்து செலவுகளும் இலாபம் அல்லது நட்டக் கூற்றிற்கு சாட்டப்படுகின்றது

ஆ) இலாப அல்லது நட்டக் கூற்றை சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக "செலவினத் தொழிற்பாட்டு" முறையானது சபையின் செயலாற்றல் விடயத்தை நியாயமாக சமர்ப்பிக்கின்றது என்பதாக பணிப்பாளர்களின் அபிப்பிராயப்படுகின்றனர். எனவே அத்தகைய சமர்ப்பித்தல் முறை பிரயோகிக்கப்படுகிறது.

## 3. முக்கியமான கணக்கீட்டுத் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

குழுமத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு, அறிக்கையிடல் காலத்தின் இறுதியில் உள்ளவாறான வருமானம், செலவினம், சொத்துகள், பொறுப்புகள் மற்றும் நிகழ்த்தக்க பொறுப்புகளை வெளிப்படுத்துதல் ஆகியவற்றை பாதிக்கின்ற தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டுமென குழுமம் கோருகின்றது.

சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதாகக் கருதப்படும் எதிர்கால நிகழ்வுகளிற்கான எதிர்பார்ப்புகள் உள்ளிட்ட கடந்தகால அனுபவங்கள் மற்றும் பிற காரணிகளின் அடிப்படையில் மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகள் தொடர்ந்து மதிப்பீடு செய்யப்படுகின்றன.

இந்த அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் பற்றிய நிச்சயமற்ற தன்மையானது எதிர்காலத்தில் பாதிக்கப்படக் கூடிய சொத்துக்கள் அல்லது பொறுப்புகளின் முன்கொண்டு செல்லும் தொகைக்கு பொருண்மையான சீராக்கல் தேவைப்பாட்டு விளைவுகளை ஏற்படுத்தலாம். குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் செயன்முறையில்,முகாமைத்துவம் பல்வேறு வகையான தீர்ப்புகளை மேற்கொண்டுள்ளது. அந்த முகாமைத்துவத் தீர்ப்புகளில் நிதிக் கூற்றுக்களிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட தொகைகளின் மீது மிகவும் குறிப்பிடத்தக்க விளைவைக் கொண்டிருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டவை கீழே விவாதிக்கப்பட்டுள்ளன.

**புதுப்பித்தல் மற்றும் நிறுத்துதல் வழிமுறைகளைக் கொண்ட ஒப்பந்தங்களின் குத்தகை காலத்தை நிர்ணயித்தல் - குத்தகைக்கு எடுப்போனாக குழுமம்**

எந்தவொரு காலமும் நியாயமான நடைமுறைச் சாத்தியமானதாகக் காணப்பட்டு,அக்காலம் குத்தகையை

நீடிப்பதற்கானமாற்றுவழியினைக் கொண்டிருக்குமாயின் அல்லது எந்தவொரு காலமும் நியாயமான நடைமுறைச் சாத்தியமானதாக் காணப்பட்டு,குத்தகையை நிறுத்துவதற்கு ஒரு மாற்றுவழியினைக் கொண்டிருக்குமாயின் குழுமம்குத்தகை காலத்தை இரத்துச்செய்ய முடியாத குத்தகைக் காலம் என நிச்சயிக்கின்றது.

நீடித்தல் மற்றும் நிறுத்துதல் மாற்றுவழிகளை உள்ளடக்கிய பல குத்தகை ஒப்பந்தங்களை குழுமம் கொண்டுள்ளது. குத்தகையை புதுப்பிப்பதற்கான அல்லது நிறுத்துவதற்கானமாற்றுவழியில் எதனைப் பயன்படுத்துதல் நியாயமானது என்பதை மதிப்பீடு செய்வதில் குழு அதனது தீர்ப்பைப் பிரயோகிக்கின்றது. அதாவது, புதுப்பித்தல் அல்லது நிறுத்துதல் ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்கு பொருளாதார ஊக்கத்தை உருவாக்கும் அனைத்து தொடர்புடைய காரணிகளையும் அது கருத்திற் கொள்கின்றது. தொடக்க தேதிக்குப் பின்னர், குழுமம் தனது கட்டுப்பாட்டிலுள்ள மற்றும் புதுப்பிப்பதற்கு அல்லது நிறுத்துவதற்கான மாற்றுவழியை பயன்படுத்துகையில் சாத்தியமான அல்லது சாத்தியமற்ற ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வு அல்லது சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்பட்டால் குத்தகை காலத்தை மீள்மதிப்பீடு செய்கின்றது.

மேலும், நிறுத்துதல் மாற்றுவழிகளைக் கொண்ட காலங்கள்,அவை நியாயமான முறையில் பயன்படுத்தப்படாது என்று உறுதியாக இருக்கும்போது மட்டுமே குத்தகை காலத்தின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகின்றன.

**நிதிக் கருவிகளின் சந்தைப் பெறுமதி**

நிதிக்கூற்றில் பதிவுசெய்யும் நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதியினை செயற்திறனான சந்தையிலிருந்து பெறமுடியாதபோது, அவற்றின் சந்தைப் பெறுமதிகாசுப்பாய்வு கழிவீட்டு முறை அடங்கலான மதிப்பீட்டு நுட்பங்களை பாவித்து தீர்மானிக்கப்படும். இம் முறைகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமானவிடத்து அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்து பெறப்படுவதுடன் அவ்வாறு பெறுதல் சாத்தியமற்ற இடத்து சந்தைப் பெறுமதியை நிர்ணயித்தலில் ஓரளவு சுயதீர்ப்பு தேவைப்படும். இந்த சுயதீர்ப்பு திரவத்தன்மை இடர் மற்றும் மாறுபடத்தக்க உள்ளீடுகளின் கவனத்திற் கொள்ளலை அடக்கும். இக் காரணிகள் பற்றிய எடுகோள்களில் மாற்றங்கள் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்படும் சந்தைப் பெறுமதியில் தாக்கங்களை ஏற்படுத்தும்.

**நிதிசாராத சொத்துக்களின் சேதஇழப்பு நட்டங்களின் மீளாய்வு**

சேதஇழப்பு மீளாய்வின்மூலம் சொத்துக்கள் சேதஇழப்புக்கு ஆளாகியுள்ளனவா என்பதனை குழுமம் தீர்மானிக்கும். இது காசு பிறப்பாக்க அலகுகளின் "உபயோகப் பெறுமதி" யினை மதிப்பிடுதலை தேவைப்படுத்தும். உபயோகப் பெறுமதியை மதிப்பிடுவதற்கு காசு பிறப்பாக்க அலகிலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்காலக் காசுப்பாய்வுகளை முகாமை மதிப்பிடுவதுடன், அக் காசுப் பாய்வுகளின் இற்றைப் பெறுமதியை கணிப்பதற்கு பொருத்தமான கழிவுவிகிதத்தை தேர்ந்தெடுக்கவும் வேண்டும். இந்த மதிப்பீட்டிற்காக எதிர்பார்க்கும் எதிர்கால காசுப்பாய்வுகள் மற்றும் கழிவீட்டு விகிதங்களை குழுமம் மதிப்பிடவேண்டி உள்ளதனால், இவை நிச்சயமற்ற தன்மைக்கு ஆளாகின்றன.

**வியாபார மற்றும் ஏனைய வருமதிகளின் சேத இழப்பு நட்டங்கள்**

தனியாக மதிப்பிடப்பட்டு சேத இழப்பு அடையாததாக காணப்படும் வியாபார மற்றும் ஏனைய வருமதிகளை பொறுத்தமட்டில், தனியாக கணிசமற்றதான வருமதிகள் எல்லாம் நேரடியான சான்றுகள் இருந்து ஆனால் அவற்றின் தாக்கம் இன்னும் சரியாக தெளிவில்லாதபோது ஏற்பட்ட இழப்பு நிகழ்வு தொடர்பில் ஏற்பாடு செய்யவேண்டுமா எனத் தீர்மானிப்பதற்காக ஒத்த இடர் இயல்புகளைக் கொண்ட சொத்துக்களின் கூட்டமாகச் சேர்க்கப்பட்டு பின்னர் மதிப்பிடப்படும். கூட்டமான மதிப்பீடு, வருமதித் தொகுதியிலுள்ள தரவுகள் (நிலுவைக் காலங்கள், கடன் பயன்பாடு ஆகியன) மற்றும் இடர்சார்ந்த மற்றும் பெருளியற் தரவுகளில் (வேலையற்றோர் மட்டம், விலைச் சுட்டிகள் நாடுசார்ந்த இடர் மற்றும் வேறுபட்ட தனியார் குழுமங்களின் செயற்பாடு ஆகியன அடங்கலாக) அதிக அக்கறை கொள்வதன் தாக்கம் பற்றிய சுயதீர்ப்புக்கள் ஆகியவற்றை கணக்கிற் கொள்ளும்.

**வரிகள்**

குழுமம் வருமானவரி மற்றும் VAT அடங்கலாக ஏனைய வரிகளுக்கும் ஆளாகின்றது. நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் வரிவிதிப்பதற்கு வரிவிதி வருமானத்தை தீர்மானித்தல் ஆகியவற்றிற்கு ஏடுகுசுளு இனை கடைப்பிடிப்பது தொடர்பாக வரி வழிகாட்டிகள் இன்னும் கிடைக்காமையினால் நடப்பு, பிற் போட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான மொத்த ஏற்பாட்டை தீர்மானிப்பதில் கணிசமான சுயதீர்மானம் தேவைப்படுகின்றது. இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தறுவாயில் வரிச் சட்டங்களின் பிரயோக விளக்கம் தொடர்பாக நிச்சயமற்ற நிலை காணப்படுகின்றது. நடப்பு, பிற்போட்ட மற்றும் ஏனைய வரிகளுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை குழுமம் மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொண்டுள்ளது. இந்த விடயங்களின் காரணமாக இறுதி வரிப் பொறுப்புக்கள் ஆரம்பத்தில் பதிவு செய்த தொகைகளிலிருந்து வேறுபடுவதனால், அது வருமானம், பிற்போட்ட வரி மற்றும் ஏனைய வரிகளில் அந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட காலங்களில் தாக்கத்தினை கொண்டிருக்கும்.

**ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம்**

குழுமம் ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் சொத்துக்களின் ஈற்றுப் பெறுமதி, பயன்தரு ஆயுட்காலம் மற்றும் தேய்மான முறைகளை மீளாய்வு செய்யும். இந்தப் பெறுமதிகள், வீதங்கள் மற்றும் முறைகளை மதிப்பிடுதலில் முகாமையால் சுயதீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**விபரிக்கப்பட்ட நலத் திட்டங்கள் - பணிக்கொடை**

விபரிக்கப்பட்ட நலத் திட்டங்களின் (பணிக்கொடை) கிரயம் ஆயுட்கால முறை மதிப்பீட்டு நுட்பத்தை உபயோகித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டு நுட்பத்தில் கழிவு விகிதங்கள், சொத்திலிருந்து எதிர்பார்க்கும் வருவாய் விகிதம், எதிர்கால சம்பள அதிகரிப்பு ஆகிய பற்றி எடுகோள்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த திட்டங்களின் நீண்டகால இயல்பு காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் கணிசமான நிச்சயமற்ற தன்மைக்கு ஆளாகின்றன

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| 4. வருமானம் | குழுமம் 2022 | குழுமம் 2021 | சபை 2022 | சபை 2021 |
|---|---|---|---|---|
| விற்பனை | 374,626,063 | 290,885,609 | 308,457,234 | 248,776,409 |
| | 374,626,063 | 290,885,609 | 308,457,234 | 248,776,409 |

| 4.1 பிரிவு வருமானம் | குழுமம் 2022 | குழுமம் 2021 | சபை 2022 | சபை 2021 |
|---|---|---|---|---|
| மின்சார விற்பனை | 317,421,016 | 257,693,960 | 308,457,234 | 248,776,409 |
| பொருட்கள் விற்பனை | 7,669,372 | 6,889,127 | - | - |
| கல்வனைஸ் இயக்கப்பாடு | 1,911,510 | 1,661,318 | - | - |
| மின்சார பொறிகளின் வாடகை வருமானம் | 36,830,225 | 16,920,361 | - | - |
| நிதி குத்தகை மற்றும் மின் பிறப்பாக்கம் | 5,725,037 | 4,098,395 | - | - |
| மின் பொறிகளின் இயக்கப்பாடு மற்றும் பராமரிப்பு பணிகள் | 5,068,702 | 3,530,556 | - | - |
| ஏனைய இயக்கப்பாடுகள் | 201 | 91,892 | - | - |
| | 374,626,063 | 290,885,609 | 308,457,234 | 248,776,409 |

## 5. வீட்டுப் பாவனையாளருக்கு வழங்கிய சலுகைகள்

ரூ. 764,928 (2022) மற்றும் ரூ. 195,708,670 (2021) ஆகியவை எண் 20/1063/226/062 - 15 ஜூலை 2020 தேதியிட்ட அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் கோவிட் - 19 தொற்று நோய் காரணமாக 2020 மார்ச் முதல் மே வரையிலான காலகட்டத்தில் மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்காக உள்ளாட்டு நுகர்வோருக்கு வழங்கப்பட்ட தள்ளுபடியைப் பிரதிபலிக்கின்றது.

| 6. ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | குழுமம் 2022 | குழுமம் 2021 | சபை 2022 | சபை 2021 |
|---|---|---|---|---|
| பங்கிலாப வருமானம் | 516,129 | 6,908,775 | 274,221 | 2,519,496 |
| மின்சார நுகர்வின் மீதான தண்டம் | 35,073 | 4,704 | 35,073 | 4,704 |
| நுகர்வோரிடமிருந்து அறவீடு | 643,575 | 169,496 | - | - |
| ஆதனம், பொறி, உபகரண கைதவிர்த்தல் இலாபம் | 607,304 | 686,309 | 640,044 | 700,770 |
| நுகர்வோர் பங்களிப்பின் கால தேய்மானம் | 4,730,906 | 4,481,332 | 4,281,308 | 4,058,249 |
| அரச மானியத்தின் கால தேய்மானம் | 21,498 | 20,882 | 15,685 | 15,068 |
| பல்லின வருமானம் | 1,883,225 | 964,956 | 1,769,206 | 898,231 |
| அரசாங்க மானியத்துடன் தொடர்புடைய வருமானம் | 84 | 7,850 | 84 | 7,850 |
| அரச திணைக்கள வருமானம் | 527,969 | 204,145 | 527,969 | 204,145 |
| திரவமாக்கப்பட்ட சேதங்கள் | 1,291,086 | 199,570 | 1,291,086 | 199,570 |
| சாம்பல் விற்பனை | 669,461 | 787,226 | 669,461 | 787,226 |
| கேள்விப்பத்திர கட்டணம்/மீளளிக்காத வைப்புக்கள்/உத்தரவாத பெறுவனவு | 291,747 | 72,140 | 291,747 | 72,140 |
| கிரயம் மீளப்பெறும் பணி வருமானம் | 1,353,176 | 1,425,993 | 1,353,176 | 1,425,993 |
| சேவை இணைப்பு விண்ணப்பக் கட்டணம் | 6,337 | 9,467 | 6,337 | 9,467 |
| மின்சாரப் பட்டியல் மிகை அறவீடு | 425,755 | 563,085 | 425,755 | 563,085 |
| மின்னியல் வாகன எரிசக்தி அட்டை விற்பனை | - | 2 | - | 2 |
| நாணயங்களின் பரிமாற்றத்தில் லாபம் அல்லது இழப்பு | 14,279,142 | 1,564,890 | - | - |
| | 27,282,467 | 18,070,822 | 11,581,152 | 11,465,996 |

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| 7.1 நிதி வருமானம் | குழுமம் 2022 | குழுமம் 2021 | சபை 2022 | சபை 2021 |
|---|---|---|---|---|
| ஏனைய வைப்புக்களிலிருந்து வட்டி | 2,169,875 | 1,517,556 | - | - |
| ஏனைய பெறுகைகளிலிருந்து வட்டி | 25,649 | 85,702 | - | - |
| அரசு பத்திரங்களில் இருந்து பெறப்பட்ட வட்டி | 700,317 | 312,332 | - | - |
| முதலீட்டிலிருந்து வட்டி வருமானம் | 221 | 21,313 | 221 | 21,313 |
| லாபம் மற்றும் நஷ்டம் மூலம் நியாயமான மதிப்பில் நிதிச் சொத்துக்களிலிருந்து ஆதாயம்/(இழப்பு) | (58,920) | 97,874 | - | - |
| ஊழியர் கடன்களிலிருந்து வட்டி வருமானம் | 1,305,878 | 1,113,238 | 1,308,722 | 971,409 |
| சமுர்த்திக் கடன்கள் மீதான வட்டி | 57,714 | 117,799 | 57,714 | 117,799 |
| தொடர்புடைய தரப்புக் கடன்கள் மீதான வட்டி வருமானம் | 22,202 | 1,950 | 22,202 | 1,950 |
| ஏனைய நுகர்வோர் கடன்கள் மீதான வட்டி | 5,453 | 18,908 | 5,453 | 18,908 |
| | 4,228,389 | 3,286,672 | 1,394,312 | 1,131,379 |

| 7.2 நிதிக் கிரயம் | குழுமம் 2022 | குழுமம் 2021 மீளமைக்கப்பட்டது | சபை 2022 | சபை 2021 |
|---|---|---|---|---|
| மேலதிகப்பற்று வட்டிச் செலவு | 5,061,951 | 823,074 | 4,399,216 | 586,294 |
| நீண்ட கால குறுகிய கால பெறுகைகள் மீதான வட்டி செலவு | 22,701,601 | 9,228,252 | 18,579,030 | 7,415,826 |
| செயற்திட்டக் கடன்கள் மீதான வட்டிச் செலவினம் | 1,419,582 | 2,878,855 | 1,419,582 | 2,878,855 |
| கடனீட்டு வட்டி கணக்கு | 1,870,266 | 1,354,504 | 1,870,266 | 1,354,504 |
| குத்தகை வட்டி | 51,293 | 9,529 | 10,747 | 12,775 |
| ஐபிபி செலுத்தல் கணக்கு மீதான தாமதத்திற்கான வட்டி | 6,547,727 | 1,730,595 | 6,547,727 | 1,730,595 |
| சீபிசீ செலுத்தல் கணக்கு மீதான தாமதத்திற்கான வட்டி | 8,922,460 | 6,448,291 | 8,922,460 | 6,448,291 |
| நுகர்வோர் கடன்களுக்கு நிதியளிக்க பெறப்பட்ட கடன்களுக்கான வட்டி | 84,748 | 5,037 | - | 3,501 |
| நுகர்வோர் வைப்புக்கள் மீதான வட்டிச் செலவினம் | 30,308 | 39,575 | - | - |
| | 46,689,936 | 22,517,712 | 41,749,028 | 20,430,641 |

| 8. வரிக்கு முன்னர் இலாபம்/(நட்டம்) சாட்டப்பட்ட /(செலவுவைக்கப்பட்ட) பின்னர் | குழுமம் 2022 | குழுமம் 2021 மீளமைக்கப்பட்டது | சபை 2022 | சபை 2021 மீளமைக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| கணக்காய்வாளர் ஊதியம் - நடப்புவருட கட்டணம், செலவு | 23,471 | 28,933 | 9,038 | 17,040 |
| பணிப்பாளர் ஊதியம் | 9,136 | 129,906 | 3,580 | 4,061 |
| தேய்மானம் | 35,850,511 | 34,542,913 | 33,993,651 | 33,095,689 |
| ஆளணிக் கிரய உள்ளடக்கம்: | | | | |
| - குறித்துரைத்த நலத் திட்டக் கிரயம் - பணிக்கொடை | 1,655,664 | 1,301,341 | 1,380,133 | 1,067,140 |
| - குறித்துரைத்த பங்களிப்பு திட்டம் - ஊசேநி, ஊநநி | 4,884,690 | 4,795,792 | 4,404,433 | 4,371,493 |
| - ஏனைய பதவியணியினர் கிரயங்கள் | 45,672,648 | 46,059,399 | 39,130,466 | 42,379,538 |
| ஆதனம், பொறி, உபகரண கைதவிர்ப்பு (இலாபம்) நட்டம் | 58,394 | 149,507 | 25,654 | 135,046 |
| அருவச் சொத்துக்களின் காலத்தேய்மானம | 78,818 | 60,831 | 45,616 | 48,442 |
| பொதுமக்கள் உறவு மற்றும் விளம்பரம் | 16,771 | 12,810 | - | - |
| நன்கொடைகள் | 363 | - | - | - |
| அரசாங்க மானியம் | 471,096 | 15,068 | 15,685 | 15,068 |
| பழுதடைந்த மற்றும் மெதுவாக நகரும் இருப்புக்களின் நட்டம் | (343,274) | 337,770 | (342,386) | 331,159 |
| கடன்பட்டோர் மீதான நட்டக்கடன் ஏற்பாடு | 1,589,841 | 1,649,777 | (1,578,762) | 1,747,552 |

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| 9. வருமான வரிச் செலவினம் | குழுமம் 2022 | 2021 | சபை 2022 | 2021 |
|---|---|---|---|---|
| **9.1 நடப்பு வருமான வரி** | | | | |
| ஆண்டிற்கான சாதாரண செயற்பாடுகள் மீதான நடப்பு வருமான வரி | 2,084,757 | 2,486,388 | - | - |
| முந்தைய காலப்பகுதிக்கான நடப்பு வருமான வரி குறை/(மிகை) ஏற்பாடு | (257,360) | (30,939) | - | - |
| கூடுதல் கட்டண வரி மசோதாவுக்கான ஒதுக்கீடு - 2020/21 இன் வரி விதிக்கக்கூடிய வருமானத்தில் 25% | - | 714,474 | - | - |
| | 1,827,397 | 3,169,923 | - | - |
| **9.2 பிற்போடப்பட்ட வருமான வரி** | | | | |
| பிற்போட்ட வரி அறவீடு (எதிர்ப்பதிவு) குறிப்பு (29) | (756,684) | 45,132 | - | - |
| வருமான கூற்றில் காட்டப்பட்ட வருமான வரிச் செலவினம் | 1,070,713 | 3,215,055 | - | - |

| 9.3 நடப்பு வரிச் செலவினத்திற்கும் கணக்கீட்டு இலாபத்திற்கு இடையிலான கணக்கிணக்கம் | குழுமம் 2022 | 2021 | சபை 2022 | 2021 |
|---|---|---|---|---|
| வரிக்கு முந்திய இலாபம் | (238,261,579) | (3,498,430) | (261,868,692) | (21,450,369) |
| வரியிடலுக்கு அனுமதிக்கப்படாத செலவினம்/(வருமானம் | 133,501,835 | 35,634,075 | 128,938,436 | 33,799,786 |
| ஓய்வூதிய நிதியின் தேறிய தாக்கம் | (110,953) | 717,208 | (110,953) | 717,208 |
| வரியிடலுக்கு அனுமதிக்கப்பட்ட செலவினம்/(வருமானம்) | (81,162,844) | (45,765,389) | (78,772,407) | (43,389,025) |
| வணிகமல்லாத வருமானம்.்.விலக்களிக்கப்பட்ட வருமானம் | (5,216,579) | (8,337,331) | (359,812) | (2,675,965) |
| ஒருங்கிணைப்பு சீராக்கம் | - | (18,403) | - | - |
| **ஆண்டிற்கான வணிக நட்டம்** | (212,173,426) | (32,998,365) | (212,173,428) | (32,998,365) |
| **ஆண்டிற்கான வரிவிதிக்கத்தக்க வணிக இலாபம்** | 20,923,307 | 11,730,095 | - | - |
| ஏனைய வருமான மூலங்கள் | 3,651,297 | 3,459,735 | 1,013,401 | 1,245,099 |
| **மொத்த நியதிச்சட்ட வருமானம்** | 24,574,605 | 15,189,830 | 1,013,401 | 1,245,099 |
| ஆண்டில் பயன்படுத்திய வரி நட்டம் | (1,013,401) | (1,245,099) | (1,013,401) | (1,245,099) |
| **வரிக்கு உட்பட்ட வருமானம்** | 23,561,204 | 13,944,731 | - | - |
| வரிச் செலவினம் | | | | |
| (24% ரூ 30% வருடத்தின் போது) கம்பனி வரி வீதத்தில் | 1,681,743 | 2,088,932 | - | - |
| சகாய வரி வீதங்கள் | 57,430 | 44,065 | - | - |
| 14% பங்கிலாப வரி | 88,223 | 233,626 | - | - |
| **நடப்பு வரிக் கட்டணம்** | 1,827,396 | 2,366,623 | - | - |

குழுமத்தின் வரிச் செலவினம் குழுமத்திலுள்ள தனிப்பட்ட ஒவ்வொரு கம்பனியினதும் வரிவிதிக்கத்தக்க இலாபத்தின் அடிப்படையில காணப்படுகின்றது.

**9.3.2 பிரயோகிக்கத்தக்க வருமான வரி வீதங்கள்**

முழு அல்லது பகுதி விலக்குகளை அனுபவிக்கும் துணை நிறுவனங்களின் பின்வரும் வணிகங்களைத் தவிர 2022 (24% - 2021) க்கான முதல் ஒன்பது மாதங்களுக்கு 24% மற்றும் அடுத்த மூன்று மாதங்களுக்கு 30% என்ற நிலையான விகிதத்தில் குடியுரிமை நிறுவனங்களின் வரிப் பொறுப்பு கணக்கிடப்படுகின்றது. முழு அல்லது பகுதியளவு விலக்குகள் மற்றும் சலுகைகளை அனுபவிக்கும் துணை நிறுவனங்களின் பின்வரும் வணகங்களைத் தவிர

| துணை / துணை துணை | வணிக செயல்பாடு | வரி வீதம் |
|---|---|---|
| நிவிது (பிரைவட்) லிமிடட் | மின்சார பிறப்பாக்கம் | 14% |
| நிவிது அசுபினீல்லா (பிரைவட்) லிமிடட் | மின்சார பிறப்பாக்கம் | 14% |
| இன்.்.ப்ரா என்ட் என்ஜினீரிங் (பிரைவட்) லிமிடட் | வெளிநாட்டு நிர்மாண மற்றும் உட்கட்டமைப்பு செயற்திட்டங்கள் | விலக்களிப்பு |
| **வெளிநாட்டு உப துணைக் கம்பனிகள்** | | |
| ராஜ் லங்கா பவர் கம்பனி லிமிடட் | மின்சார பிறப்பாக்கம் - வங்கால தேசம் | விலக்களிப்பு |
| லக்தனவி பங்லா பவர் கம்பனி லிமிடட் | மின்சார பிறப்பாக்கம் - வங்கால தேசம் | விலக்களிப்பு |
| .்.பெனி லங்கா பவர் லிமிடட | மின்சார பிறப்பாக்கம் - வங்கால தேசம் | விலக்களிப்பு |
| ஆசியாடிக் இலக்ரிகல் என்ட் சுவிச்கியர் (பிரைவட்) லிமிடட் | சுவிட்ச்கியர் விற்பனை - இந்தியா | 33% |
| பிரைட் இன்டர்நெஷனல் பவர் (பிரைவட்) லிமிடட் | மின்வலுப் பொறியினை இயக்குதல் மற்றும் மின் பிறப்பாக்க உபகரணங்களை வழங்குதல் - சிங்கப்பூர் | 17.5% |

2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

## 10 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

## 10.1 குழுமம்

| 10.1.1 இறையில் சொத்துக்கள் மொத்த முன்கொணரற் தொகைகள் கிரயம் | 01.01.2022 இல் மீதி (மீளமைத்தது) | சேர்ப்பனவு / மாற்றல்கள் / ஈட்டல்கள் | சேர்ப்பனவு சீராக்கங்கள் | கைதவிர்ப்பு / மாற்றல்கள் | கைதவிர்ப்பு சீராக்கங்கள் | 31.12.2022 இல் மீதி |
|---|---|---|---|---|---|---|
| இறையிலி காணி | 11,274,125 | 14,267 | 569,686 | (7,010) | - | 11,851,068 |
| கட்டடம் | 24,911,841 | 1,372,637 | 125,682 | (1,972,731) | - | 24,437,429 |
| சிவில் வேலைகள் | 234,333,313 | - | 52,086 | - | - | 234,385,399 |
| பொறி, இயந்திரம் | 1,807,816 | 526,269 | 145,845 | (8,474) | - | 2,471,456 |
| மின்பிறப்பாக்கி பொறி | 323,509,208 | 7,337,503 | 1,536 | - | (46,580) | 330,801,667 |
| சூரிய அமைப்பு | 213,841 | - | 27,984 | (428) | - | 241,397 |
| கடத்தல் மற்றும் வினியோக இணைப்புகள் | 670,662,056 | 28,714,472 | 118,158 | (1,150,393) | (4,526) | 698,339,767 |
| மோட்டார் வாகனம் | 14,179,440 | 614,963 | 230,433 | (275,183) | - | 14,749,653 |
| பிற உட்கட்டமைப்பு | 24,952,209 | 1,304,416 | - | (130,285) | - | 26,126,340 |
| அலுவலக எனைய உபகரணங்கள் | 7,979,722 | 670,755 | 97,328 | (97,959) | (28,614) | 8,621,232 |
| தளபாட இணைப்புக்கள் | 672,195 | 27,630 | - | (6,506) | (1,439) | 691,880 |
| இயந்திர, உபகரணங்கள் | 6,777,375 | 641,840 | - | (8,337) | (582) | 7,410,296 |
| கொள்கல வதிவிடம் | 6,744 | - | - | - | - | 6,744 |
| | 1,321,279,885 | 41,224,752 | 1,368,738 | (3,657,306) | (81,741) | 1,360,134,328 |

| 10.1.2 செயற்திட்டச் சொத்துக்கள் மொத்த முன்கொணரற் தொகை கிரயத்தில் அல்லது மதிப்பீட்டில் | 01.01.2022 இல் மீதி (மீளமைத்தது) | சேர்ப்பனவு / மாற்றல்கள் / ஈட்டல்கள் | சேர்ப்பனவு சீராக்கங்கள் | கைதவிர்ப்பு / மாற்றல்கள் | கைதவிர்ப்பு சீராக்கங்கள் | 31.12.2022 இல் மீதி |
|---|---|---|---|---|---|---|
| இறையிலி காணி | 238,287 | - | - | - | - | 238,287 |
| கட்டடம் | 194,030 | - | - | - | - | 194,030 |
| மோட்டார் வாகனம் | 2,218,040 | 547,625 | 178,188 | (218,982) | - | 2,724,871 |
| அலுவலக மற்றும் ஏனைய உபகரணங்கள் | 115,601 | 10,062 | - | (8,120) | (224) | 117,319 |
| தளபாட பொறுத்துக்கள் | 9,344 | 673 | - | (2,062) | - | 7,955 |
| எந்திர, உபகரணங்கள் | 60,009 | 469 | 1,290 | - | - | 61,768 |
| | 2,835,311 | 558,829 | 179,478 | (229,164) | (224) | 3,344,230 |

| 10.1.3 மூலதன முடிவுறா வேலை | 01.01.2022 இல் மீதி | ஆண்டின் போது ஏற்பட்டது | சீராக்கங்கள் | ஆதனம், பொறி உபகரணத்திற்கு மாற்றியது | மறுவகைப் படுத்தப்பட்டது/ மாற்றப்பட்டது | 31.12.2022 இல் மீதி |
|---|---|---|---|---|---|---|
| மூலதன முடிவுறா வேலை (10.3) | 164,908,467 | 87,494,875 | 1,820,849 | (30,013,988) | (7,318,216) | 216,891,987 |
| **மொத்த முன்கொணரற் தொகை** | 164,908,467 | 87,494,875 | 1,820,849 | (30,013,988) | (7,318,216) | 216,891,987 |

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

## 10 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி)
## 10.1 குழுமம் (தொடர்ச்சி)

### 10.1.4 தேய்மானம்

| இறையிலி சொத்துகள் | 01.01.2022 இல் மீதி (மீளமைத்தது) | ஆண்டுக்கான கட்டணம் | சேர்ப்பனவு சீராக்கங்கள் | கைதவிர்ப்பு / மாற்றல்கள் | கைதவிர்ப்பு/ சீராக்கங்கள் | 31.12.2022 இல் மீதி |
|---|---|---|---|---|---|---|
| கட்டடம் | 8,315,241 | 627,506 | 16,105 | (288) | - | 8,958,564 |
| சிவில் வேலைகள் | 86,661,203 | 3,575,678 | 5,599 | - | - | 90,242,480 |
| பொறி, இயந்திரம் | 1,410,026 | 271,123 | 90,234 | (6,799) | - | 1,764,584 |
| மின்பிறப்பாக்கி பொறி | 193,240,882 | 11,233,669 | (5,001) | - | - | 204,469,550 |
| சூரிய அமைப்பு | 49,661 | 9,405 | - | - | - | 59,066 |
| கடத்தல் மற்றும் வினியோக இணைப்புகள் | 290,401,455 | 17,163,872 | (565) | (589,095) | (27) | 306,975,640 |
| மோட்டார் வாகனம் | 8,356,612 | 1,082,809 | 100,912 | (186,224) | - | 9,354,109 |
| பிற வழங்கள் உட்கட்டமைப்பு | 16,486,646 | 684,519 | - | (73,479) | - | 17,097,686 |
| அலுவலக ஏனைய உபகரணங்கள் | 5,523,152 | 712,632 | 20,839 | (41,676) | 167 | 6,215,114 |
| தளபாட பொருத்துக்கள் | 483,954 | 73,785 | 6,475 | (3,524) | - | 560,690 |
| இயந்திர, உபகரணங்கள் | 5,186,492 | 609,377 | - | (4,337) | (174) | 5,791,358 |
| கொள்கல இருப்பிடம் | 6,744 | - | - | - | - | 6,744 |
| | 616,122,068 | 36,044,375 | 234,598 | (905,422) | (34) | 651,495,585 |

### 10.1.5 தேய்மானம்

| செயற்திட்ட சொத்துக்கள் | 01.01.2022 இல் மீதி (மீளமைத்தது) | முடிவுறா வேலைக்கு மாற்றப்பட்டது / மாற்றங்கள் | சேர்ப்பனவு சீராக்கங்கள் | கைதவிர்ப்பு / மாற்றல்கள் | கைதவிர்ப்பு/ சீராக்கங்கள் | 31.12.2022 இல் மீதி |
|---|---|---|---|---|---|---|
| கட்டடம் | 97 | 4,851 | - | - | - | 4,948 |
| மோட்டார் வாகனம் | 991,960 | 135,486 | 178,188 | (114,699) | - | 1,190,935 |
| அலுவலக ஏனைய உபகரணங்கள் | 83,268 | 13,798 | 28 | (8,076) | (224) | 88,794 |
| தளபாட பொருத்துக்கள் | 6,945 | 555 | - | (1,966) | - | 5,534 |
| இயந்திர, உபகரணங்கள் | 51,128 | 5,875 | 1,290 | - | - | 58,293 |
| | 1,133,398 | 160,565 | 179,506 | (124,741) | (224) | 1,348,504 |

### 10.1.6 நிகர புத்தக மதிப்பு கிரயம் அல்லது மதிப்பீட்டில்

| | 2022 |
|---|---|
| இறையிலி காணி | 12,089,355 |
| கட்டடம் | 15,667,947 |
| சிவில் வேலைகள் | 144,142,919 |
| பொறி, எந்திரம் | 706,872 |
| மின்பிறப்பாக்கி பொறி | 126,332,117 |
| சூரியமின்சார பொறி | 182,331 |
| கடத்தல் மற்றும் வினியோக இணைப்புகள் | 391,364,127 |
| மோட்டார் வாகனம் | 6,929,480 |
| பிற வழங்கள் உட்கட்டமைப்பு | 9,028,654 |
| அலுவலக, ஏனைய உபகரணங்கள் | 2,434,643 |
| தளபாட பொருத்துக்கள் | 133,611 |
| இயந்திர, உபகரணங்கள் | 1,622,413 |
| | 710,634,469 |

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

## 10 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி)
## 10.1 குழுமம் (தொடர்ச்சி)

### 10.1.7 சொத்துக்களை பயன்படுத்தும் உரிமை

| கிரயம் | 01.01.2022 இல் மீதி | சேர்ப்பனவு சீராக்கங்கள் | கைதவிர்ப்பு சீராக்கங்கள் | 31.12.2022 இல் மீதி |
|---|---|---|---|---|
| காணி மற்றும் கட்டிடம் | 912,568 | 158,982 | - | 1,071,550 |
| மோட்டார் வாகனங்கள் | 256,138 | 17,592 | (17,592) | 256,138 |
| | 1,168,706 | 176,574 | (17,592) | 1,327,688 |

| பெறுமானத்தேய்வு | 01.01.2022 இல் மீதி | ஆண்டுக்கான கட்டணம் | கைதவிர்ப்பு சீராக்கங்கள் | 31.12.2022 இல் மீதி |
|---|---|---|---|---|
| காணி மற்றும் கட்டிடம் | 441,685 | 95,032 | 12,363 | 549,080 |
| மோட்டார் வாகனங்கள் | 33,911 | 22,500 | (3,611) | 52,800 |
| | 475,596 | 117,532 | 8,752 | 601,880 |

| தேறிய புத்தகப் பெறுமதி | 2022 | 2021 |
|---|---|---|
| காணி மற்றும் கட்டிடம் | 522,470 | 470,883 |
| மோட்டார் வாகனங்கள் | 203,338 | 222,227 |
| | 725,808 | 693,110 |

### 10.1.8 சொத்துக்களை பயன்படுத்தும் உரிமை உள்ளடங்கலாக ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | 2022 | 2021 |
|---|---|---|
| **தேறிய புத்தகப் பெறுமதி** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (மற்றும் 10.1.6) | 710,634,469 | 706,859,730 |
| மூலதன முடிவுறா வேலை (மற்றும் 10.3) | 216,891,987 | 164,908,467 |
| சொத்துக்களை பயன்படுத்தும் உரிமை (மற்றும் 10.1.7) | 725,808 | 693,110 |
| **சொத்துக்களை பயன்படுத்தும் உரிமை உள்ளடங்களாக ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மொத்தப் பெறுமதி** | 928,252,264 | 872,461,307 |

**10.1.9** குழுவின் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்து ஆலை மற்றும் உபகரணங்களின் முற்கொணரப்பட்ட தொகை 31.12.2022 இல் ரூ. 222,050 மில்லியன் (31.12.2021 இல் ரூ. 207,713 மில்லயன்).

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

## 10 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி)

## 10.2 சபை

### 10.2.1 மொத்த கொணரற் தொகைகள்

| இறையில் சொத்துக்கள் கிரயம் அல்லது மதிப்பீட்டில் | 01.01.2022 இல் மீதி (மீளமைத்தது) | சேர்ப்பனவு மாற்றல்கள் ஈட்டல்கள் | விற்பனைக்காக வைக்கப்பட்டத தில் இருந்து மாற்றப்பட்டது | சேர்ப்பனவு சீராக்கங்கள் | கைதவிர்ப்பு மாற்றல்கள் | 31.12.2022 இல் மீதி |
|---|---|---|---|---|---|---|
| இறையிலி காணி | 9,575,295 | 4,209 | - | - | - | 9,579,504 |
| கட்டடம் | 23,494,871 | 1,350,576 | - | (1,972,731) | - | 22,872,716 |
| சிவில் வேலைகள் | 234,333,313 | - | 52,086 | - | - | 234,385,399 |
| பொறி, இயந்திரம் | 785,687 | 1,564 | - | (7,819) | - | 779,432 |
| மின்பிறப்பாக்கி பொறி | 319,788,027 | 7,202,948 | 1,536 | - | (46,580) | 326,945,931 |
| சூரிய அமைப்பு | 96,985 | - | 27,984 | - | - | 124,969 |
| கடத்தல் மற்றும் வினியோக இணைப்புகள் | 670,662,056 | 28,714,472 | 118,158 | (1,150,393) | (4,526) | 698,339,767 |
| மோட்டார் வாகனம் | 12,328,058 | 506,939 | 69,650 | (239,443) | - | 12,665,204 |
| அலுவலக, ஏனைய உபகரணங்கள் | 3,640,231 | 228,338 | - | (72,823) | (28,614) | 3,767,132 |
| தளபாட பொருத்துக்கள் | 576,085 | 20,738 | - | (6,506) | (1,439) | 588,878 |
| இயந்திர, உபகரணங்கள் | 6,777,375 | 641,840 | - | (8,337) | (582) | 7,410,296 |
| | 1,282,057,983 | 38,671,624 | 269,414 | (3,458,052) | (81,741) | 1,317,459,228 |

### 10.2.2 செயற்திட்டச் சொத்துக்கள்

மொத்த கொணரற் தொகைகள்

| கிரயம் அல்லது மதிப்பீட்டில் | 01.01.2022 இல் மீதி | சேர்ப்பனவு மாற்றல்கள் ஈட்டல்கள | விற்பனைக்காக வைக்கப்பட்டத தில் இருந்து மாற்றப்பட்டது | சேர்ப்பனவு சீராக்கங்கள் | கைதவிர்ப்பு மாற்றல்கள் | 31.12.2022 இல் மீதி |
|---|---|---|---|---|---|---|
| இறையிலி காணி | 238,287 | - | - | - | - | 238,287 |
| கட்டடம் | 194,030 | - | - | - | - | 194,030 |
| மோட்டார் வாகனங்கள் | 2,218,040 | 547,625 | 178,188 | (218,982) | - | 2,724,871 |
| அலுவலக, ஏனைய உபகரணங்கள் | 115,601 | 10,062 | - | (8,120) | (224) | 117,319 |
| தளபாட பொருத்துக்கள | 9,344 | 673 | - | (2,062) | - | 7,955 |
| இயந்திர, உபகரணங்கள் | 60,009 | 469 | 1,290 | - | - | 61,768 |
| | 2,835,311 | 558,829 | 179,478 | (229,164) | (224) | 3,344,230 |
| **மொத்த தேய்மானமடையக்கூடிய சொத்துக்கள்** | 1,284,893,294 | 39,230,453 | 448,892 | (3,687,216) | (81,965) | 1,320,803,458 |

### 10.2.3 மூலதன முடிவுறா வேலை

| | 01.01.2022 இல் மீதி | முன்னைய ஆண்டு சீராக்கங்கள் இந்த ஆண்டில் மேற் கொள்ளப்பட்டது | ஆண்டின் போது ஏற்பட்டது | ஆதனம், பொறி உபகரணத்திற்கு மாற்றியது | மறுவகைப் படுத்தப்பட்டு மாற்றப்பட்டது | 31.12.2022 இல் மீதி |
|---|---|---|---|---|---|---|
| மூலதன முடிவுறா வேலை | 166,458,857 | (5,961,686) | 76,448,996 | (28,706,056) | (7,151,041) | 201,089,070 |
| **மொத்த முன்கொணரற் தொகை** | 166,458,857 | (5,961,686) | 76,448,996 | (28,706,056) | (7,151,041) | 201,089,070 |

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

## 10 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி)
## 10.2 சபை

### 10.2.4 தேய்மானம்

| கிரயம் அல்லது மதிப்பீட்டில் | 01.01.2022 இல் மீதி (மீளமைத்தது) | ஆண்டுக்கான கட்டணம் | சீராக்கங்கள் | கைதவிர்ப்பு மாற்றல்கள் | கைதவிர்ப்பு சீராக்கங்கள் | 31.12.2022 இல் மீதி |
|---|---|---|---|---|---|---|
| கட்டடம் | 8,037,420 | 581,043 | - | (288) | - | 8,618,175 |
| சிவில் வேலைகள் | 86,668,089 | 3,575,678 | 5,599 | - | - | 90,249,366 |
| பொறி, இயந்திரம் | 649,635 | 34,452 | - | (6,372) | - | 677,715 |
| மின்பிறப்பாக்கி பொறி | 191,614,211 | 10,988,190 | (5,001) | - | - | 202,597,400 |
| சூரிய அமைப்பு | 19,221 | 2,431 | - | - | - | 21,652 |
| கடத்தல் மற்றும் வினியோக இணைப்புகள் | 290,401,455 | 17,163,872 | (565) | (589,095) | (27) | 306,975,640 |
| மோட்டார் வாகனங்கள் | 6,699,347 | 896,536 | 69,585 | (165,749) | - | 7,499,719 |
| அலுவலக, ஏனைய உபகரணங்கள் | 2,856,460 | 329,713 | - | (41,271) | 167 | 3,145,069 |
| தளபாட பொருத்துக்கள் | 442,026 | 46,947 | - | (3,524) | - | 485,449 |
| இயந்திர, உபகரணங்கள் | 5,186,492 | 609,377 | - | (4,337) | (174) | 5,791,358 |
| | 592,574,356 | 34,228,239 | 69,618 | (810,636) | (34) | 626,061,543 |

### 10.2.5 தேய்மானம்

செயற்திட்டச் சொத்துக்கள்

| கிரயம் அல்லது மதிப்பீட்டில் | 01.01.2022 இல் மீதி | முடிவுறா வேலைக்கு மாற்றப்பட்டது மாற்றங்கள் | சேர்ப்பனவு சீராக்கங்கள் | கைதவிர்ப்பு மாற்றல்கள் | கைதவிர்ப்பு சீராக்கங்கள் | 31.12.2022 இல் மீதி |
|---|---|---|---|---|---|---|
| கட்டடம் | 97 | 4,851 | - | - | - | 4,948 |
| மோட்டார் வாகனங்கள் | 991,960 | 135,486 | 178,188 | (114,699) | - | 1,190,935 |
| அலுவலக, ஏனைய உபகரணங்கள் | 83,268 | 13,798 | 28 | (8,076) | (224) | 88,794 |
| தளபாட பொருத்துக்கள் | 6,945 | 555 | - | (1,966) | - | 5,534 |
| இயந்திர, உபகரணங்கள் | 51,128 | 5,875 | 1,290 | - | - | 58,293 |
| | 1,133,398 | 160,565 | 179,506 | (124,741) | (224) | 1,348,504 |
| மொத்த தேய்மானம் | 593,707,754 | 34,388,804 | 249,123 | (935,377) | (258) | 627,410,047 |

### 10.2.6 நிகர ஏட்டுப் பெறுமதிகள்

| கிரயம் அல்லது மதிப்பீட்டில் | 2022 | 2021 (மீளமைத்தது) |
|---|---|---|
| இறையிலி காணி | 9,817,791 | 9,813,581 |
| கட்டடம் | 14,443,623 | 15,651,383 |
| சிவில் வேலைகள் | 144,136,033 | 147,665,223 |
| பொறி, இயந்திரம் | 101,717 | 136,052 |
| மின்பிறப்பாக்கி பொறி | 124,348,531 | 128,173,816 |
| சூரிய அமைப்பு | 103,317 | 77,764 |
| கடத்தல் மற்றும் வினியோக இணைப்புகள் | 391,364,127 | 380,260,601 |
| மோட்டார் வாகனங்கள் | 6,699,421 | 6,854,792 |
| அலுவலக, ஏனைய உபகரணங்கள் | 650,588 | 816,104 |
| தளபாட பொருத்துக்கள் | 105,850 | 136,457 |
| இயந்திர, உபகரணங்கள் | 1,622,413 | 1,599,763 |
| | 693,393,411 | 691,185,536 |

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

## 10 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி)
## 10.2 சபை

### 10.2.7 சொத்துக்களை பயன்படுத்தும் உரிமை

| கிரயம் | 01.01.2022 இல் மீதி | சேர்ப்பனவுகள்/ சீராக்கம் | இடைநிறுத்தம்/ சீராக்கம் | 31.12.2022 இல் மீதி |
|---|---|---|---|---|
| காணி மற்றும் கட்டிடம் | 32,609 | - | - | 32,609 |
| மோட்டார் வாகனங்கள் | 256,138 | 17,592 | (17,592) | 256,138 |
| | 288,747 | 17,592 | (17,592) | 288,747 |

| பெறுமானத்தேய்வு | 01.01.2022 இல் மீதி | ஆண்டுக்கான கட்டணம் | இடைநிறுத்தம் சீராக்கம் | 31.12.2022 இல் மீதி |
|---|---|---|---|---|
| காணி மற்றும் கட்டிடம் | - | - | - | - |
| மோட்டார் வாகனங்கள் | 33,911 | 22,500 | (3,611) | 52,800 |
| | 33,911 | 22,500 | (3,611) | 52,800 |

| தேறிய புத்தகப் பெறுமதி | 2022 | 2021 |
|---|---|---|
| காணி மற்றும் கட்டிடம் | 32,609 | 32,609 |
| மோட்டார் வாகனங்கள் | 203,338 | 222,226 |
| | 235,947 | 254,835 |

### 10.2.8 சொத்துக்களை பயன்படுத்தும் உரிமை உள்ளடங்கலாக ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | 2022 | 2021 (மீளமைத்தது) |
|---|---|---|
| **தேறிய புத்தகப் பெறுமதி** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (குறிப்புகள் 10.2.6) | 693,393,411 | 691,185,536 |
| மூலதன முடிவுறா வேலை (மற்றும் 10.3) | 201,089,070 | 160,497,172 |
| சொத்துக்களை பயன்படுத்தும் உரிமை (மற்றும் 10.6.1,10.6.2) | 235,947 | 254,835 |
| **சொத்துக்களை பயன்படுத்தும் உரிமை உள்ளடங்கலாக ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மொத்தப் பெறுமதி** | 894,718,428 | 851,937,543 |

**10.2.9** குழுவின் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்து ஆலை மற்றும் உபகரணங்களின் முற்கொணரப்பட்ட தொகை 31.12.2022 இல் ரூ. 211,811 மில்லியன் (31.12.2022 இல் ரூ. 197,123 மில்லயன்).

2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

**10 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி)**

**10.3 மூலதன முடிவுறா வேலைகள் பின்வருவனவற்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.**

| செயற்திட்டங்கள் | குழுமம் 2022 | குழுமம் 2021 மீளமைக்கப்பட்டது | சபை 2022 | சபை 2021 மீளமைக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| மின்னுற்பத்திக் கருத்திட்டங்கள் | 5,037,469 | 6,388,599 | 5,037,469 | 6,388,599 |
| கடத்துகை கருத்திட்டங்கள் | 202,949 | 209,494 | 202,949 | 209,494 |
| விநியோக செயற்திட்டங்கள் | 42,395,464 | 40,984,893 | 42,395,464 | 40,984,893 |
| மேல் கொத்மலை நீர் மின்வலுச் செயற்திட்டம | - | 2,302 | - | 2,302 |
| கொழும்பு நகர மின்சார விநியோக அபிவிருத்திச் செயற்திட்டம் | - | 24,081 | - | 24,081 |
| புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உறிஞ்சல் கடத்தல் அபிவிருத்திச் செயற்திட்டம் | 19,574 | 6,158,899 | 19,574 | 6,158,899 |
| பசுமை மின்வலு அபிவிருத்தி வினைதிறன் முன்னேற்றச் செயற்திட்டம் | 33,778,351 | 24,233,919 | 33,778,351 | 24,233,919 |
| புத்தளம் நிலக்கரி நீர் மின்சார திட்டம் | 124,303 | 124,303 | 124,303 | 124,303 |
| ஹபரன, வெயன்கொட மின் கடத்தல் வழிச் செயற்திட்டம் | 16,948,983 | 15,645,409 | 16,948,983 | 15,645,409 |
| உமாஓய நீர் மின்சார அபிவிருத்திச் செயற்திட்டம் | 599,296 | 547,301 | 599,296 | 547,301 |
| தூய எரிசக்தி வலைப்பின்னல் வினைத்திறன் செயற்திட்டம் - மன்னார் கடத்தல் உட்கட்டமைப்பு செயற்றிட்ம் | 15,483 | 12,020 | 15,483 | 12,020 |
| தூய எரிசக்தி வலைப்பின்னல் வினைத்திறன் செயற்திட்டம் - 132Kv பரிமாற்றம் உட்டகட்டமைப்பு செயற்றிட்டம் | 1,879,956 | 1,855,379 | 1,879,956 | 1,855,379 |
| தூய எரிசக்தி வலைப்பின்னல் வினைத்திறன் செயற்திட்டம் - 220Kv பரிமாற்றம் உட்டகட்டமைப்பு செயற்றிட்டம் | 9,033,564 | 9,077,084 | 9,033,564 | 9,077,084 |
| பசுமை மின்வலு அபிவிருத்தி வினைதிறன் முன்னேற்றச் செயற்திட்டம் (கட்டம்1) | 7,345,230 | 6,917,781 | 7,345,230 | 6,917,781 |
| சீதாவக நீர் மின்வலுச் செயற்திட்டம் | 301,192 | 301,191 | 301,192 | 301,191 |
| தேசிய பரிமாற்றம் மற்றும் விநியோக வலையமைப்பு மேம்பாட்டு ஆற்றல் திறன் மேம்பாட்டு செயற்றிட்டம் | 43,123,274 | 16,013,156 | 43,123,274 | 16,013,156 |
| மன்னர் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் | 1,335,951 | 1,058,864 | 1,335,951 | 1,058,864 |
| திரவ இயற்கை எரிவாயு (எல்என்ஜி) திட்டம் | 96,218 | 66,383 | 96,218 | 66,383 |
| மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் (கட்டம் III) | 138,113 | 9,018 | 138,113 | 9,018 |
| மன்னார் நடுக்குடா மற்றும் எம்பிலிபிடிய உபமின் நிலைய விவாக்க செயற்திட்டம் | 67,248 | 21,198 | 67,248 | 21,198 |
| மின் பரிமாற்ற கட்டமான திட்டங்கள் | 6,184,639 | 4,639,200 | 6,184,639 | 4,639,200 |
| மொரகொல்ல நீர மின்வலுச் செயற்திட்டம் | 8,205,772 | 4,436,390 | 8,205,772 | 4,436,390 |
| பிரோட்லேண்ட் நீர் மின்வலு செயற்திட்டம் | 22,521,401 | 20,181,453 | 22,521,401 | 20,181,453 |
| மின்வலு முறைமை நம்பகத்தன்மை பலப்படுத்தல் செயற்திட்டம் | 741,525 | 398,590 | 741,525 | 398,590 |
| புதிய நிலக்கரி மின்வலு ஆலை செயற்திட்டம் | 167,618 | 167,313 | 167,618 | 167,313 |
| பாரிய கொழும்பு கடத்தல் வினியோக இழப்பு குறைத்தல் கருத்திட்டம் | 474,462 | 525,870 | 474,462 | 525,870 |
| தூய எரிசக்தி உறிஞ்சல் கடத்தல் செயற்திட்டம் - செ.மு.அலகு 1 | 69,583 | 2,283 | 69,583 | 2,283 |
| தூய எரிசக்தி உறிஞ்சல் கடத்தல் செயற்திட்டம் - செ.மு.அலகு 2 | 25,511 | 15,412 | 25,511 | 15,412 |
| நிறுவன வள திட்டமிடல் அமைப்பு செயற்றிட்டம் | 155,159 | 147,033 | 155,159 | 147,033 |
| சொத்து முகாமைத்துவ பிரிவிலுள்ள செயற்திட்டங்கள் | 95,497 | 332,354 | 95,497 | 332,354 |
| மின் கட்டமமைப்ப நம்பகத்தன்மை வலுப்படுத்தல் திட்டம் கட்டம் II தொகுதி 2 - பி.எம்.யு 1 | 1,803 | - | 1,803 | - |
| மின் கட்டமமைப்ப நம்பகத்தன்மை வலுப்படுத்தல் திட்டம் கட்டம் II தொகுதி 2 - பி.எம்.யு 2 | 1,210 | - | 1,210 | - |
| மின் கட்டமமைப்ப நம்பகத்தன்மை வலுப்படுத்தல் திட்டம் கட்டம் II தொகுதி 2 - பி.எம்.யு 3 | 2,272 | - | 2,272 | - |
| முடிவுறா வேலை - லெக்கோ | 1,711,302 | 1,327,754 | - | - |
| முடிவுறா வேலை - எல். டி. எல். | 14,058,697 | 3,076,288 | - | - |
| முடிவுறா வேலை - எஸ். எல். இ | 32,916 | 7,253 | - | - |
| **மூலதன முடிவுறா வேலைகளின் மொத்த பெறுமதி** | 216,891,985 | 164,908,467 | 201,089,070 | 160,497,172 |

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

## 11. அருவச் சொத்துக்கள்

| கிரயம் | குழுமம் 2022 | குழுமம் 2021 மீளமைக்கப்பட்டது | சபை 2022 | சபை 2021 மீளமைக்கப்பட்டது |
|---|---|---|---|---|
| சனவரி 01 இல் உள்ளவாறானவை | 520,842 | 477,018 | 307,042 | 286,112 |
| ஆண்டின் போது ஈட்டப்பட்டவை/இடம்பெற்றவை | 71,979 | 43,366 | 53,245 | 20,930 |
| செலாவணிப் பரிமாற்றல் வேறுபாடு | 8,963 | 460 | - | - |
கம்பனி அதன் இணைந்த கம்பனியான ∴பெனி லங்கா பவர் லிமிடெட் கம்பனிக்கு செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்காக (US நுகர்வோர் விலை சுட்டியின் (USCPI) படி தளம்பல் கொண்ட) ஒரு நிலையான விலை ஒப்பந்தத்ததை கொண்டுள்ளது.

## 39. தொடர்புடைய தரப்பு வெளிப்படுத்தல்கள்

### 39.1. இலங்கை அரசாங்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை அரசாங்கம் இ.மி.ச. இனை நேரடியாகக் கட்டுப்படுத்துகின்றமையால், குழுமம் இலங்கை அரசாங்கத்தினுடையது எனக் கருதப்படுவதுடன் கட்டுப்படுத்துகின்ற, கூட்டாகக் கட்டுப்படுத்துகின்ற அல்லது அரசாங்கத்தினால் குறிப்பிடத்தக்க அளவில் செல்வாக்குச் செலுத்துகின்ற ஏனைய தொடர்புடைய அரசாங்க நிறுவனங்கள் LKAS 24 “தொடர்புடைய தரப்பு வெளிப்படுத்தல்கள்” இற்கு அமைய தொடர்புடைய நிறுவனங்களாகும்.

குழுமமும் சபையும் இலங்கை அரசாங்கத்துடனும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுடனும் கொடுக்கல்வாங்கல்கள், ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் உடன்படிக்கைகளில் ஈடுபடுவதுடன் அறிவிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|---|
| | கொடுக்கல் வாங்கலின் தன்மை | 2022 | 2021 | 2022 | 2021 |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | எரிபொருள் கொள்வனவு | 71,852,617 | 21,759,060 | 71,852,617 | 21,759,060 |
| பொது முயற்சிகள் திணைக்களம் | செயற்திட்டக் கடன் பெறுதல் | 23,348,396 | 12,129,337 | 23,348,396 | 12,129,337 |
| மக்கள் வங்கி | வங்கி கடன் பெறுதல் | 41,975,584 | 18,620,253 | 41,975,584 | 18,620,253 |
| மக்கள் வங்கி | முதலீடுகள் | 3,354,206 | 7,620,953 | - | - |
| தேசிய சேமிப்பு வங்கி | வங்கி கடன் பெறுதல் | 1,250 | 1,250 | 1,250 | 1,250 |
| இலங்கை வங்கி | வங்கி கடன் பெறுதல் | - | 339,600 | - | - |
| இலங்கை வங்கி | முதலீடுகள் | 55,653 | 2,939,193 | - | - |
| அரசாங்க முதலீட்டு அடைமான வங்கி | வைப்புகள் | 43,183 | 46,504 | - | - |
| எச்டீஎப்சி வங்கி | வைப்புகள் | 1,157,662 | 1,020,029 | - | - |

அத்துடன், கீழே விபரிக்கப்பட்டுள்ள சாதாரண வியாபார செயற்பாடுகளுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள், இலங்கை அரசாங்கத்துடனும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுடனும் இடம்பெறுகின்றன.

மக்கள் வங்கியுடன் வங்கிக் கணக்குகளைப் பேணுதல் மற்றும் வங்கிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுதல்
நியதிச்சட்ட இறைகளையும் வரிகளையும் செலுத்துதல்
ஊழியர் ஓய்வூதிய நலன்களைச் செலுத்துதல் - EPF & ETF
தொலைபேசி, மின்சாரம் மற்றும் நீர்க்கட்டணங்களைச் செலுத்துதல்
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு மோட்டார் வாகன காப்புறுதிக் கட்டணங்களைச் செலுத்துதல்

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

## 39.2 இ.மி.ச. இன் உறவுமுறைத் தரப்புக் கொடுக்கல் வாங்கல்களும் உறவுமுறைத் தரப்புக் கம்பனிகளும்

சாதாரண வணிகச் செயற்பாடுகளில் இ.மி.ச. இனால் உறறவுமுறைத் தரப்பினர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பட்டியலொன்று கீழே தரப்படுகின்றது.

| | உறவுமுறை | கொடுக்கல் வாங்கலின் பெயர் தன்மை | 2022 | 2021 |
|---|---|---|---|---|
| லங்கா மின்சாரக் கம்பனி | துணைக் கம்பனி | | 29,651,359 | 22,917,476 |
| | | | 274,221 | - |
| | | | 817,049 | - |
| | | | (1,597,590) | 1,219,459 |
| LTL ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட் | துணைக் கம்பனி | | - | 2,519,496 |
| | | | (440,912) | (3,119,790) |
| லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட் | துணைக் கம்பனி | | 117,337,279 | 58,990,573 |
| | | | 69,008 | 55,464 |
| LTL டிரான்ஸ்போமர் லிமிடட் | உப துணைக் கம்பனி | பொருட்கள் கொள்வனவு | 1,035,050 | 831,252 |
| LTL கல்வனைஸ் (பிரைவட்) லிமிடட் | உப துணைக் கம்பனி | சேவைகள் பெறுவனவு | 333,397 | 333,424 |
| நிவிது (பிரைவட்) லிமிடட் | உப துணைக் கம்பனி | | 166,940 | 86,056 |
| நிவிது எசிபினல்ல (பிரைவட்) லிமிடட் | உப துணைக் கம்பனி | | 174,919 | 115,986 |
| பவன் தனவி லிமிடட் | உப துணைக் கம்பனி | | 396,904 | 157,398 |
| என்டி லெகோ மீற்றிங் கம்பனி (பிரைவட்) லிமிடட் | உப துணைக் கம்பனி | பொருட்கள் கொள்வனவு | 263,294 | 1,195,641 |
| லங்கா எனர்ஜீஸ் HR (பிரைவட்) லிமிடட் | உப துணைக் கம்பனி | ஸ்ரீ லங்கா எனெர்ஜிஸ் பொது முகாமையாளர் சம்பளத்தை திருப்பிச் செலுத்துதல் | 3,838 | 10,333 |
| கும்பலங்கமுவ மினிஹைட்ரோ (பிரைவட்) லிமிடட் | உப துணைக் கம்பனி | | 109,203 | 116,108 |
| டதுரு ஓயா மினி ஹைட்ரொ பவர் பிரைவேட் லிமிடெட் | உப துணைக் கம்பனி | | 106,153 | 94,781 |

## 39.3 குழுமத்திலுள்ள கம்பனிகளிடையிலான உறவுமுறைத் தரப்புக் கொடுக்கல் வாங்கல்கள்

| கொடுக்கல் வாங்கலின் தன்மை | LTL ஹோல்டிங் மற்றும் துணைக் கம்பனிகள | லங்கா மின்சாரக் கம்பனி மற்றும் துணைக் கம்பனிகள் | 2022 | 2021 |
|---|---|---|---|---|
| லங்கா மின்சாரக் கம்பனிக்கு மின்மாற்றிகளின் விற்பனை | 387,412 | - | 387,412 | 254,939 |
| செயற்பாட்டு மற்றும் பொறியியல் சேவைகள் | 4,844,749 | - | 4,844,749 | 3,812,889 |

## 39.4 குழுமத்திலுள்ள பிரதான முகாமைத்துவத் தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

சபையின் செயற்பாடுகளை திட்டமிட்டு, நெறிப்படுத்தி கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரமுள்ள தரப்பினரே சபையின் பிரதான முகாமைத்துவத் தரப்பினர்களாவர். சபையின் அவ்வாறான பிரதான முகாமைத்துவத் தரப்பினர்களாக அதன் பணிப்பாளர் சபையினரும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரும் காணப்படுகின்றனர்.

பிரதான முகாமைத்துவத் தரப்பினர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களுடன் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் ஏதுமிருப்பின் அவைகளும் பின்வரும் வெளிப்படுத்தலிற்காக கருத்திற்கொள்ளப்பட்டது.

| | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|
| (அ) பிரதான முகாமைத்துவத் தரப்பினரின் நன்மைகள் | 2022 | 2021 | 2022 | 2021 |
| குறுங்கால ஊழியர் நலன்கள் | 137,434 | 132,017 | 3,580 | 4,061 |
| தொழிலின் பின்னரான நலன்கள் | 12,960 | 13,941 | - | - |
| | 150,394 | 145,958 | 3,580 | 4,061 |

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

## 40. நிதிசார் இடர் முகாமைத்துவ குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள்

### 40.1 கண்ணோட்டம்

குழுமம் அதன் நிதிசார் கருவிகளின் பயன்பாட்டிலிருந்து பின்வரும் இடர்களை கண்டறிந்துள்ளது.

கடன் இடர்
திரவத்தன்மை இடர்
சந்தை இடர்

இந்த குறிப்பு மேலே உள்ள ஒவ்வொரு இடர்களுக்கும் குழுவின் வெளிப்பாடு குழுவின் நோக்கங்கள் இடர்களை அளவிடுதல் மற்றும் நிர்வகிப்பதற்கான நடைமுறைகள் மற்றும் செயல்முறைகள் மற்றும் குழுவின் மூலதன மேலாண்மை பற்றிய தகவல்களை வழங்குகிறது.

### 40.2 இடர் முகாமைத்துவ செயன்முறை

குழுமத்தின் இடர் முகாமைத்தவ செயன்முறையினை தாபித்து பயனுள்ள விதத்தில் கண்காணிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு ஒட்டுமொத்த பொறுப்புள்ளது. குழுமத்தினால் எதிர்கொள்ளப்படுகின்ற இடர்களை இனங்கண்டு பகுப்பாய்வு செய்தல், பொருத்தமான இடர் எல்லைகளை உருவாக்கி கட்டுப்படுத்துதல் மற்றும் எல்லைகளுடன் இணங்குதல் என்பவற்றிற்காக குழுமத்தின் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் தாபிக்கப்படுகின்றன.

குழுமத்தின் இடர் முகாமைத்துவ நடைமுறைகளுடன் இணங்கியொழுகுதலை எவ்வாறு முகாமைத்துவம் கண்காணிக்கின்றது என்பதனை பணிப்பாளர் சபை மேற்பார்வை செய்து குழுமத்தினால் எதிர்கொள்ளப்படுகின்ற இடர்கள் தொடர்பில் இடர் முகாமைத்துவ செயன்முறையின் போதுமான தன்மையினை மீளாய்வு செய்கின்றது. மேற்பார்வை செய்வதற்காக உயர்மட்ட முகாமையினால் குழுமத்தின் பணிப்பாளரிற்கு உதவப்படுகின்றது.

### 40.3 கடன் இடர்

கடப்பாட்டினை நிறைவேற்றத் தவறுகின்றமையால் நிதிக் கருவிகளின் ஒருதரப்பு இன்னொரு தரப்பிற்காக நிதி நட்டத்தினை ஏற்படுத்துவதே கடன் இடராகும்.

**சபையினதும் வரை. லங்கா மின்சார (தனியார்) கம்பனியினதும் கடன் கொள்கை வருமாறு**

மொத்தமாக நுகர்வோருக்கு பட்டியல்களைத் தீர்ப்பதற்காக 15 நாட்கள் கடன் தவணைக்காலம் அனுமதிக்கப்படுவதுடன் அதன்பின்னர், மின்துண்டித்தல் அறிவித்தல் வழங்கப்பட்டு அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுகின்றது. அதற்கமைய செயற்படத்தவறும் பட்சத்தில் மின்சாரம் துண்டிக்கப்படும்.

சாதாரண வாடிக்கையாளருக்கு பட்டியல்களைத் தீர்ப்பதற்காக 30 நாட்கள் கடன் தவணைக்காலம் அனுமதிக்கப்படுவதுடன் அதன்பின்னர், சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டு அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுகின்றது. அதற்கமைய செயற்படத்தவறும் பட்சத்தில் மொத்தமாக 40 நாட்களின் பின்னர் மின்சாரத்தை துண்டிப்பதற்கான அறிவித்தல் வழங்கப்படும்.

கடன் வசதியினை வழங்குவதற்கு முன்னர் கடன் தீர்ப்பினை பகுப்பாய்வு செய்வதன் மூலம் ஒவ்வொரு வாடிக்கையாளரதும் தனிப்பட்ட பண்புகள் கருத்திற் கொள்ளப்படுகின்றது. பயனுள்ள கட்டுப்பாடு மற்றும் உரிய நேரத்தில் சேகரித்தலிற்காக நிலுவை கடன்படுனர்களிற்கு காலப்பகுப்பாய்வினை மேற்கொள்வதன் மூலம் குழுமம் தாக்கமுள்ள கடன் கட்டுப்பாட்டு செயன்முறையினை அமுல்படுத்தியது.

### 40.4 திரவத்தன்மை இடர்

குழுவின் திரவத்தன்மை ஆபத்து கடப்பாடுகள் எழும்போது அதனை நிறைவேற்ற போதுமான பண வளங்கள் இல்லாததால் எழுகிறது. திரவத்தன்மை வளங்கள் குழுமத்தின் செயற்பாடுகளில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அதேவேளை முதலீட்டாளர், வாடிக்கையாளர் மற்றும் வழங்குனரின் நம்பகத் தன்மையினை தேய்வடையச் செய்து போட்டி நிலைமையினை நலிவாக்குகின்றது.

இது அனைத்து துறைகளிலும் மூலோபாய செயல்பாட்டு மூலதன மேலாண்மை திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் பெறத்தக்கவைகள் நெருக்கமாக கண்காணிக்கப்பட்டு கடனாளிகளின் காலம் குறைக்கப்படுகிறது. கவனமாக விற்பனையாளர் மதிப்பீடுகள் மற்றும் கொள்முதல் உத்திகள் உள்ளீடுகளுக்கு சரியான விலைகள் வழங்கப்படுவதையும் செயல்பாட்டு மூலதன சுழற்சியை மேம்படுத்த அதிகபட்ச கடன் காலங்கள் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதையும் உறுதி செய்கிறது.

செயற்பாட்டு மற்றும் ஏனைய நிதியீட்டத் தேவைகளிற்கு உதவுவதற்காக குறுங்கால மற்றும் நடுத்தரகால நிதிக் கருவிகளில் முதலீடு செய்வதன் மூலம் திரவத்தன்மை பேணப்படுகின்றது என்பதனை குழுமம் உறுதிப்படுத்துகின்றது. சகாய வட்டி வீதத்தில் மேலதிகப்பற்று எல்லைகளை அதிகரிப்பதற்கு வங்கியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதன் மூலம் குறுங்கால திரவத்தன்மை சிக்கல்கள் குறைத்துக் கொள்ளப்படுகின்றன

### 40.5 சந்தை இடர்

சந்தை விலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக நிதிக் கருவிகளின் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் நியாய பெறுமதி தளம்பலடைவதற்கான இடரே சந்தை இடராகும். சந்தை இடரானது செலாவணி இடர் மற்றும் வட்டி வீத இடர் என்பவற்றை உள்ளடக்குகின்றது. சந்தை இடரினால் பாதிக்கப்படும் நிதிக் கருவிகளில் கடன்களும் பெறுகைகளும், சேமிப்புகள் விற்பனைக்காக உள்ள முதலீடுகளும் உள்ளடங்குகின்றன.

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

**40.5.1அந்நியச் செலாவணி இடர்**

குழுமத்திலுள்ள கம்பனிகளின் குறித்துரைத்த தொழிற்பாட்டு நாணயமல்லாத நாணயத்தில் இடம்பெறுகின்ற விற்பனைகள் / கொள்வனவுகள் மீதான செலாவணி இடரை குழுமம் எதிர் கொள்கிறது. இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் யூஎஸ்டொலர் அல்லது யூரோ நாணயத்தில் இடம்பெறுகின்றன. எந்தவொரு பரிமாற்றுக் கொடுக்கல் வாங்கல்களிற்கும் எதிரான உள்ளக இடர்குறைத்தல் மூலம் குழுவினால் செலாவணி இடர் குறைக்கப்படுகின்றது. எதிர்கால கொடுப்பனவுகளிற்குச் சமமான தொகை பொருத்தமான நாணயங்களில் குறுங்கால வருமானமீட்டல் கருவிகளில் வைக்கப்பட்டு அவ்வாறானவை எப்பொழுது ஏற்படுகின்றதோ அப்போது கொடுப்பனவுகளிற்காக பயன்படுத்தப்படுகின்றது.

**40.5.2வட்டி வீத இடர்**

வட்டி வீதத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக நிதிக் கருவிகளின் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் நியாய பெறுமதி தளம்பலடைவதற்கான இடரே வட்டி வீத இடராகும். மிதக்கும் வட்டி வீதங்களுடன உள்ள குழுமத்தின் நீண்டகால கடன் கட்டுப்பாடுகளுடன் தொடர்புபடுகின்ற சந்தை வட்டி வீதங்களின் மாற்றங்களின் இடரை குழுமம் எதிர்கொள்கிறது. சந்தை தளம்பல்களை ஈடுசெய்யக்கூடிய நிலையான் மற்றும் மிதக்கும் வீதம் கலந்த வசதிகளைப் பேணுதல் அவ்வாறே வைப்புக்களைப் பேணுதல் ஆகியவற்றின் மூலம் குழுமம் அதன் பெறுகைகள் மீதான வட்டி வீத இடரை முகாமைத்துவம் செய்கின்றது. இலங்கை மின்சார சபை அரசாங்க நிறுவனமொன்றாக இருப்பதனால் வட்டி வீத இடரை குறைப்பதற்குச் சாதகமான வட்டி வீதங்களிற்காக வங்கிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றது.

**41 நியாயப் பெறுமதி**

நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதியானது பலவந்தப்படுத்தப்பட்ட அல்லது கலைத்தல் விற்பனை தவிர்ந்த தற்போதைய கொடுக்கல் வாங்கல்களின் போது விருப்பம் உள்ள இரு தரப்பினரிடையே பரிமாற்றத்தக்க நிதிக் கருவிகளின் பெறுமதியை உள்ளடக்குகின்றது.

நியாயப் பெறுமதியை மதிப்பிடுவதற்காக பின்வரும் முறைகளும் எடுகோல்களும் பயன்படுத்தப்பட்டன.

அ) குறைந்த முதிர்ச்சிக் காலத்தை கொண்டுள்ளமையால் காசும் காசுக்கு சமமானவைகளும், வியாபாரப் பெறவேண்டியவை,வியாபாரி செலுத்த வேண்டியவை வங்கி மேலதிகப் பற்றுக்கள் மற்றும் ஏனைய நடைமுறைப் பொறுப்புக்களை பெரும்பாலும் அண்ணளவாக அவற்றின் முக்கொண்டுசெல் தொகைகளில் முகாமைத்துவம் மதிப்பிடுகின்றது.

ஆ) நீண்டகால நிலையான வீத மாறும் வீதம் பெறவேண்டியவைகள் வட்டி வீதங்கள், குறித்துரைத்த இடர் காரணிகள், வாடிக்கையாளரின் தனிப்பட்ட கடன் மதிப்பு மற்றும் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் இடர் பண்புகள் போன்ற அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில், இந்த பெறவேண்டியவைகளின் எதிர்பார்த்த இழப்புக்களிற்கான கொடுப்பனவுகள் கருத்திலெடுக்கப்படுகின்றன. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, அவ்வாறான பெறவேண்டியவைகளின் முன்கொண்டுசெல் தொகைகள், கொடுப்பனவுகளின் தேறியவை என்பன அவற்றின் கணிக்கப்பட்ட நியாயப் பெறுமதிகளிலிருந்து பொருண்மையாக வேறுபட்டிருக்கவில்லை.

**41.1 நியாயப் பெறுமதியில் முன்கொணரப்பட்ட நிதிக் கருவிகள்**

குழுமம் நியாயப் பெறுமதியில் முன்கொணரப்பட்ட பின்வரும் நிதிக் கருவிகளை வைத்துள்ளது.

ஓ சி ஐ இன் ஊடான நியாயப் பெறுமதி (குறிப்பு 15)
இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயப் பெறுமதி (குறிப்பு 15)

**41.2 நியாயப் பெறுமதியில் முன்கொணரப்படாத நிதிக் கருவிகள்**

நியாயபூர்வமான நியாயப் பெறுமதிகளின் அண்ணளவான முன்கொண்டுசெல் தொகைகளில் உள்ளவை தவிர்ந்த, நிதிக்கூற்றுக்களில் நியாயப் பெறுமதியில் முன்கொணரப்படாதுள்ள குழுமத்தின் நிதிக் கருவிகளினது முன்கொண்டு கொண்டுசெல் தொகைகளும் நியாயப் பெறுமதிகளும் வகைப்படுத்தப்பட்டு, கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. இந்த அட்டவணையில் நிதி அல்லாத சொத்துக்கள் மற்றும் நிதி அல்லாத பொறுப்புகளின் நியாயமான மதிப்புகள் இல்லை.

| | கொண்டு செல்லும் | | நியாய பெறுமதி | |
|---|---|---|---|---|
| | 2022 | 2021 | 2022 | 2021 |
| மீளப்பெறும் வைப்புக்கள் | 127,828 | 82,646 | 127,828 | 82,646 |
| நிலையான வைப்புக்களின் முதலீடு | 17,798,879 | 23,500,045 | 17,798,879 | 23,500,045 |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் முதலீடு | 5,616,938 | 3,350,369 | 5,616,938 | 3,350,369 |
| ஏனைய வைப்புகளின் முதலீடுகள் | 71,399 | 125,945 | 71,399 | 125,945 |
| கம்பணி உத்தியோகத்தர்களுக்கான கடன் | 9,077,306 | 10,519,701 | 9,077,306 | 10,519,701 |
| வாடிக்கையாளர் கடன்கள் | 283,404 | 1,237,538 | 283,404 | 1,237,538 |
| தொகுதிக்கடன்களில் முதலீடுகள் | 55,034 | 62,406 | 55,034 | 54,828 |
| | 33,030,788 | 38,878,650 | 33,030,788 | 38,871,072 |

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

### 41.3 நியாயப் பெறுமதி உயர்வரிசை

வெளிப்புறமாக மேற்கோள் காட்டப்பட்ட விலைகள் அல்லது மாதிரிகளிற்காக அவதானிக்கப்படத்தக்க விலையிடல், உள்ளீடுகள் குறிப்பிடுவதன் மூலம் நியாயமான மதிப்புகள் தீர்மானிக்கப்படும் அனைத்து நிதிக் கருவிகளுக்கும் சுயாதீன விலை நிர்ணயம் அல்லது சரிபார்ப்பு பெறப்படுகிறது. செயற்படு சந்தையொன்றில் விற்பனை விலையொன்றை நேரடியாக அவதானித்தல் சாத்தியமற்றதாகும். அவ்வாறான நிலைமைகளில், நிதிக் கருவிகளின் நியாய விலைப் பெறுமதியினை நிச்சயிப்பதற்காக மிகவும் தொடர்புடையதும் நம்பகரமானதும் எனக் கருதப்படுகின்ற தகவல்களிற்கு உயர்மட்ட நிறையினை வழங்கி குழுமம் மாற்றுவழி சந்தைத் தகவல்களை பயன்படுத்துகின்றது.

பின்வரும் உயர்வரிசைக்கமைய நியாயப் பெறுமதி நிச்சயிக்கப்படுகின்றது.

மட்டம் 1: ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களிற்காக செயற்படு சந்தையிலுள்ள கூறப்பட்ட (சீராக்கப்படாத) சந்தை விலைகள்.
மட்டம் 2: பதிவுசெய்யப்பட்ட நியாயப் பெறுமதியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டுள்ள நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கக்கூடிய அனைத்து உள்ளீடுகளினதும் ஏனைய பெறுமதியிடல் நுட்பங்கள்.
மட்டம் 3: பதிவுசெய்யப்பட்ட நியாயப் பெறுமதியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டுள்ள உள்ளீடுகளாகப் பயன்படுத்தப்படுகின்ற அவதானிக்கப்படத்தக்க சந்தை தரவுகளின் அடிப்படையில் இல்லாத மதிப்பிடுதல் நுட்பங்கள்

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, நிதிநிலைமைக் கூற்றில் முன்னெடுத்துவரப்பட்ட நியாயப் பெறுமதியிலுள்ள பின்வரும் நிதி கருவிகளை குழுமம் வைத்திருந்தது

| நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட சொத்துக்கள் | மதிப்பீட்டுத் திகதி | 2022 | மட்டம் 1 | மட்டம் 2 | மட்டம் 3 |
|---|---|---|---|---|---|
| **ஓ.சீ.ஐ. இன் ஊடாக நியாயப் பெறுமதிலுள்ள நிதிச் ஊடாக நியாயப் பெறுமதிலுள்ள நிதிச் சொத்துக்கள்** | | | | | |
| விலைகூறாத உரிமைத்துவப் பங்குகள் | 31-Dec-22 | 15,343,010 | - | - | 15,343,010 |
| **இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள்** | | | | | |
| உரிமைத்துவப் பிணையங்களில் முதலீடு | 31-Dec-22 | 77,994 | 77,994 | - | - |
| **நியாயப் பெறுமதி வெளிப்படுத்தப்படுகின்ற சொத்தக்கள்** | | | | | |
| தொகுதிக்கடன்களில் முதலீடு | 31-Dec-22 | 55,034 | - | 55,034 | - |

எ.்.ப்வீ ஓசீஐ இன் மதிப்பீட்டிற்காக குறிப்பிடத்தக்களவில் அவதானிக்கப்பட இயலாத உள்ளீடுகள் - நிதிச் சொத்துக்கள்

**லங்கா மின்சாரக் கம்பனி (பிரைவட்) லிமிட்ட்**

விலைகூறப்படாத உரிமைத்துவ முதலீடுகளின் நியாயப் பெறுமதி சந்தைப் பெருக்கி முறையினை (Market Multiple Methodology) பயன்படுத்தி மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறையின் கீழான பெறுமதியானது வணிகமொன்றிற்கான எதிர்கால உழைப்புக்களின் (பேணத்தக்க ஒழைப்புக்கள்) பொருத்தமான மட்டங்களின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதுடன் இந்த உழைப்புக்களிற்கு பொருத்தமான பெருக்கியொன்றைப் பிரயோகித்து, வணிகத்திற்கான பெறுமதியொன்றில் மூலதனமாக்கப்படுகின்றது. கம்பனி வரிக்கு முன்னரான உழைப்புக்களை (EBIT) அதன் உழைப்பு அடிப்படையாக பிரயோகிக்கின்றது. வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிட்ட் இன் நியாயப் பெறுமதியினை மீளாய்வு செய்கையில் பயன்படுத்துவதற்கு ஒரு பொருத்தமான முறையினை இனங்காண்பதற்காக, ஆசிய வலயத்தில் பொசில் எண்ணெய் இனைப் பயன்படுத்தி மின்சார விநியோகத் தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டியலிடப்பட்ட கம்பனிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. நிறுவனத்தின் செயற்பாட்டுத் தன்மை மற்றும் அவற்றின் பருமண் என்பவற்றின் வேறுபாடுகளின் அடிப்படையில் விலகல்கள் மதிப்பிடப்பட்டன.

வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிட்ட் இன் சிறுபாண்மை தரப்பு காரணமாக, நேரடியான முகாமைத்துவத்தினை பிரயோகிக்க மற்றும் உள்ளகத் தகவல்களை பெறமுடியாத நிலையில் முகாமைத்துவம் உள்ளது. இருப்பினும், தொழிலின் தன்மை மற்றும் மின்வலு கொள்வனவு உடன்படிக்கையிலுள்ள பொதுவான பண்புகளைக் கருத்திற்கொண்டு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதிகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவுசெய்யப்பட்டுள்ள முன்கொண்டுசெல் பெறுமதிகளை ஒத்தவையாகவே காணப்பட்டன. கம்பனி 18.8மூ உரிமையை வெஸ்ட் கோஸ்ட் பிரைவேட் லிமிடெட் இல் கொண்டுள்ளது.

**எல்ரீஎல் ஹோல்டிங் (பிரைவட்) லிமிட்ட்**

விலைகூறப்படாத சாதாரண பங்குகளின் நியாயப் பெறுமதியானது கழிவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் (டீசீஎப்) முறையினைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்டுள்ளது. எதிர்வுகூறப்பட்ட காசுப் பாய்ச்சல்கள் மற்றும் கழிவீட்டு வீதங்கள் உள்ளிட்ட இந்த முறைக்கான உள்ளீடுகளுடன் சம்பந்தப்பட்ட சில எடுகோல்களை முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டுமென மதிப்பீடுகள் தேவைப்படுத்துகின்றன. வீச்சுக்குட்பட்ட பல்வேறு மதிப்பீடுகளின் சாத்தியங்களை, விலைகூறப்படாத உரிமைத்துவ முதலீட்டிற்கான நியாயப் பெறுமதியின் முகாமைத்துவ மதிப்பீட்டின் போது நியாயபூர்வமாக மதிப்பீடுசெய்து பயன்படுத்த முடியும். மட்டம் - 3.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

எனது PWR /A/CEB/CFA/01/22/51

திகதி 2023 திசெம்பர்

தலைவர்

இலங்கை மின்சார சபை

**இலங்கை மின்சார சபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியானதும் பிரமாண ரீதியுமான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மின்சார சபையினதும் ("சபை") அதன் துணைக் கம்பனிகளினதும் (குழுமம்) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும். எல்ரீஎல் ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட் மற்றும் திருகோணமலை பவர் கம்பனி லிமிடட் ஆகியவற்றின் நிதிக்கூற்றுக்கள், அந்தந்த துணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் கணக்காய்வு செய்யப்பட்டன.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, சபை இனதும் குழுமத்தினதும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.2.1 ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

1.2.1.1 பின்வரும் கம்பனிகளின் கீழே தரப்பட்டுள்ள அவானிப்புக்களின் அடிப்படையில் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**(அ) லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட்**

(i) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட விவரங்களின்படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி மீதி ரூபா 1,436.33 மில்லியனாக இருந்ததுடன் 2017/2018, 2018/2019 மற்றும் 2019/2020 மதிப்பீட்டு ஆண்டுகளில் அதன் மீது செலுத்த வேண்டிய அபராதம் ரூபா 1,436.33 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், வருமான வரி தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 12) 88 ஆம் பந்தியின் படி, செலுத்த வேண்டிய அபராதத் தொகை குறித்த தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை

(ii) SLFRS 9 - நிதிக் கருவிகளின் எனும் கணக்கீட்டு நியமத்தின் பந்தி 5.5.15 (அ) இன் படி, ஒரு நிறுவனம் எப்போதும் நட்டக் கொடுப்பனவை SLFRS 15 இன் நோக்கெல்லைக்கு உட்பட்டு, வாழ்நாள் முழுவதும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள், வியாபாரப் பெறவேண்டியவை அல்லது ஒப்பந்தச் சொத்துக்களுக்குச் சமமான தொகையில் அளவிட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனி அதன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள ரூபா 1,095.6 மில்லியன் வியாபாரப் பெறவேண்டியவை தொடர்பில் நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(iii) (நிலக்கரியை இறக்குமதி செய்யும் போது, சுங்கத்தின் நோக்கத்திற்கான பெறுமதியை மதிப்பிடுகையில், ஒரு கற்பனையான சீராக்கமாக உண்மையில் ஏற்பட்டிருக்காத 10 சதவீத வரி எல்லை சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், கம்பனி மீளாய்வாண்டில் ரூபா 9,419.6 மில்லியன் என்ற 10 சதவீத இலாப எல்லையினை வருவாயில் சேர்த்துள்ளதுடன் பின்னர் கம்பனி கடன்பட்டோருக்கான கழிவாக அத்தொகையை வழங்கி அதனை விற்பனை கிரயத்துக்கு சாட்டுதல் செய்துள்ளது. இதன் விளைவாக, விற்பனை கிரயம் மற்றும் வருவாய் என்பன ஒத்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(iv) கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, 2016 செப்தெம்பர் 19 முதல் 2018 ஏப்ரல் 09 வரையிலான கால கட்டத்தில் நிலக்கரி இறக்குமதியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதியை அறிவிக்காதது குறித்து ரூபா 205 மில்லியன் தொகையை கம்பனி இலங்கை சுங்கத்திற்கு தண்டமாக செலுத்தியிருந்தது. 2019 இல் கம்பனி செலுத்திய தண்டத் தொகையினை குறித்த ஆண்டிற்கான செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக இலங்கை சுங்கத்தின் பெ.சே.வ. (VAT) கணக்கின் கீழுள்ள பெ.சே.வ. கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கிற்கும் தவறுதலாக வரவு வைத்திருந்தது. அதன் விளைவாக, நிறுத்திவைத்த உழைப்புக்கள் ரூபா 205 மில்லியன் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் இலங்கை சுங்கத்தின் பெ.சே.வ. கணக்கு, பெ.சே.வ. கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கு என்பன முறையே ரூபா 158.2 மில்லியன் ரூபா 39.97 மில்லியன் மற்றும் ரூபா 6.8 மில்லியன் தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

(v) கம்பனி கப்பலேற்றல் இல. 123 இற்கான சுங்க பெ.சே.வ. ஆக ரூபா 136.2 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது. எனினும், சுங்கத்தின் வெளிப்படுத்தல் சான்றிதழின் படி, உண்மையான பெ.சே.வ. தொகை ரூபா 106.97 மில்லியன் ஆகும். எனவே, கம்பனி மேலதிகமாகச் செலுத்தியிருந்த தொகை ரூபா 29.2 மில்லியன் என்பது அவதானிக்கப்பட்டதுடன் இந்தத் தொகையை நிலுவையாக உள்ள தொகைக்கு எதிராக எதரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) மீளாய்வாண்டின் இறுதியில் இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய நான்கு நிலுவைத் தொகைகள் ரூபா 273.3 மில்லியனாக இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இ.மி.ச. இன் நிதிக்கூற்றுக்களின் படி நேரொத்த செலுத்த வேண்டிய நிலுவைகள் எதும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கூறப்பட்டுள்ள பெறவேண்டிய நிலுவைகளின் சரியான மற்றும் காணப்படும் தன்மையை நிச்சயிக்க முடியவில்லை.

(vii) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் லிமிடெட் இற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 547.7 மில்லியன் ஆன போதிலும், சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் லிமிடெட் சமர்ப்பித்த மீதி உறுதிப்படுத்தலின் படி, அத்தொகை ரூபா 1,271.9 மில்லியன் ஆகும். அதன்படி, ரூபா 724.2 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(viii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு லிபர்ட்டி கொமடிடீஸ் லிமிடெட் இடமிருந்து பெறவேண்டிய 50 சதவீத ஞபுளு கட்டணங்கள் மற்றும் முறையே ரூபா 8 மில்லியன் மற்றும் ரூபா 9.8 மில்லியன் சில்லறைக் கடன்பட்டோருடன் தொடர்புடைய சான்றுகளும் ஞபுளு லங்கா லிமிடட் இற்குச் செலுத்த வேண்டிய ரூபா 87.9 மில்லியன் மற்றும் ரூபா 12.2 மில்லியன் வியாபாரக் கடன்கொடுத்தோருடன் தொடர்புடைய சான்றுகளும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

**(ஆ) ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (பிரைவட்) லிமிடட்**

(i) முந்தைய ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 7.39 மில்லியன் தொகையான சில நிர்வாக மற்றும் நேரடி செலவுகள் LKAS 08 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் எனும் கணக்கீட்டு நியமத்தின் 42 ஆம் பந்தியின் பிரகாரம் முந்தைய ஆண்டுச் சீராக்கமாக நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படாது மீளாய்வாண்டுச் செலவினமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான இலாபம் அதே அளவு தொகையால் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) ரூபா 79.5 மில்லியன் பெறுமதியான இன்ஜெக்ஷன் மோல்டிங் மெஷினரி உட்பட ரூபா 100.08 மில்லியன் மதிப்புள்ள முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள், LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் எனும் நியமத்தின் 51 ஆம் பந்தியின் அடிப்படையில் அந்த சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுள்காலம் என்பவற்றை மீள மதிப்பாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படாமல் மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனியால் தொடர்ந்தும் பயன்படுத்தி வரப்பட்டிருந்தன.

(iii) கம்பனி அதன் கலிகமுவ காணிக்கான குத்தகை ஒப்பந்தத்தை 2017 யூலை 07 இலிருந்து 35 வருடங்களுக்கு மேற்கொண்டுள்ளது. எவ்வாறாயினும், குறித்த குத்தகை SLFRS – 16 இன் படி குத்தகைச் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமை மற்றும் குத்தகைப் பொறுப்பு ஆகியவை நிறுவனத்தின் நிதிநிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறுதி தாய் நிறுவனமான இலங்கை மின்சார சபை (இ.மி.ச.) இடமிருந்தான வியாபாரப் பெறவேண்டியவை ரூபா 165.31 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், இ.மி.ச. இன் நிதிக்கூற்றுக்களின் படி அந்தத் தொகை ரூபா 28.21 மில்லியன் ஆகக் காணப்பட்டமையால் ரூபா 137.1 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.

(v) கம்பனி நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பெறத்தக்க பிடித்துவைத்தல் வரி (WHT) நிலுவை தொகையான ரூ. 2.12 மில்லியனை மீளாய்வாண்டின் இறுதியிலேனும் செலுத்த வேண்டிய வருமான வரிக்கு எதிராக சாட்டியிருக்கவில்லை. மேலும், WHT சான்றிதழ்கள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவுமில்லை.

(vi) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி, 2022 திசெம்பர் இல் உள்ளவாறு தனியார் வணிக வங்கியொன்றில் இருந்து பெறப்பட்ட 06 காலக் கடன்களின் மொத்த மீதி ரூபா 80.86 மில்லியன் ஆனதுடன் மீதி உறுதிப்படுத்தலின் படி, அக்கடன் மீதி ரூபா 87.65 மில்லியன் ஆகும். அதன்படி, நிதிக் கூற்றுக்களிற்கும் மீதி உறுதிப்பாட்டிற்கும் இடையில் ரூபா 6.78 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(vii) 2019 முதல் திரட்டப்பட்டு முன்கொண்டுவரப்படிருந்த ரூபா 7.06 மில்லியன் இனங்காணப்படாத மொத்த வைப்புத்தொகையை அங்கீகரிக்க கம்பனி முறையான நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அத்தொகை நிதிக்கூற்றுக்களில் வியாபார மற்றும் பிற செலுத்த வேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

(viii) 2020 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா 30.77 மில்லியன் ஆனதுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமான வரிக் கணக்குகளின்படி (மதிப்பீட்டு ஆண்டு 2020∴2021 வரை) அந்தக் காலகட்டத்துடன் தொடர்புடைய வருமான வரி ரூபா 15.2 மில்லியன் ஆகும். அதன்படி, ரூபா 15.57 மில்லியன் வேறுபாடு காணப்பட்டதுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான சீராக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதிக்கூற்றுக்களின்படி, 2022 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய வருமான வரி மீதி ரூபா 43.88 மில்லியன் ஆனதுடன் கம்பனி 2015∴2016 மதிப்பீட்டு ஆண்டிலிருந்து வருமான வரி செலுத்தவில்லை.

(ix) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருளிருப்பு ரூபா 39.22 மில்லியனாக இருந்தது. இந்த பொருளிருப்பானது, ஆண்டு முடிவிற்குப் பிந்தைய தேதியில் கணினியால் வழங்கப்பட்ட விகிதங்களின் அடிப்படையில் நிறையளித்த சராசரி கிரயத்தை பயன்படுத்தி பெறப்பட்டுள்ளது. அதன்படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பொருளிருப்புத் தொகையின் சரியான தன்மையை கணக்காய்வில் கண்டறிய முடியவில்லை.

**(இ) லங்கா மின்சார (தனியார்) கம்பனி லிமிடட்**

(i) நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கருச் சட்டகத்தின் 5.5 ஆம் பந்தியின் படி, கொடுக்கல் வாங்கல்கள் அல்லது பிற நிகழ்வுகளிலிருந்து எழும் சொத்துக்கள் அல்லது பொறுப்புகளின் ஆரம்ப அங்கீகாரமானது வருமானம் மற்றும் தொடர்புடைய செலவுகள் இரண்டிலும் ஒரே நேரத்தில் அங்கீகரிக்கப்படும். வருமானம் மற்றும் தொடர்புடைய செலவுகளை ஒரே நேரத்தில் அங்கீகரிப்பது சில நேரங்களில் வருமானத்துடன் செலவுகளின் ஒப்பிடுதல் என குறிப்பிடப்படுகிறது. எவ்வாறாயினும், கம்பனி 2017, 2018, 2019, 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கொள்முதல் செய்யப்பட்ட சூரிய சக்தி விற்பனை வருமானத்தை அந்தந்த வருடங்களில் விற்பனையாக அங்கீகரித்திருந்த போதிலும், ரூபா 2,819.6 மில்லியன் தொகையான சூரிய சக்திக் கொள்வனவு கிரயத்தை (நிகர கணக்கீட்டு மற்றும் நிகர சேர்த்தல்) அந்தந்த ஆண்டுகளிற்கான விற்பனைக் கிரயமாக இனங்கண்டிருக்கவில்லை (அதற்கு பதிலாக, இலங்கை மின்சார சபையிடமிருந்து பெறத்தக்கது என கம்பனி அங்கீகரித்துள்ளது). இதன் விளைவாக, நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள், ஆண்டிற்கான இலாபம் மற்றும் பெறத்தக்க மீதி என்பன முறையே ரூபா 1,336.9 மில்லியன், ரூபா 1,482.7 மில்லியன் மற்றும் ரூபா 2,819.6 மில்லியன் தொகையால் 2022 திசெம்பர் 31 உள்ளவாறு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) LKAS - 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் எனும் நியமத்தின் பிரிவு 51 இன் படி, ஒரு சொத்தின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயனுள்ள ஆயுள் ஆகியவை குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்பதுடன், எதிர்பார்ப்புகள் முந்தைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபட்டால், அந்த மாற்றம்(கள்) LKAS 8 க்கு இணங்க கணக்கீட்டு மதிப்பீட்டில் ஏற்பட்ட மாற்றமாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். இருப்பினும், கம்பனியால் 2022 திசெம்பர் 31 இல் பயன்படுத்தப்படுகின்ற முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ரூபா 9,554.6 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் அவ்வாறு மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 2022 திசெம்பர் 31 இல் உள்ளபடி இலங்கை மின்சார சபை (இ.மி.ச.) இடமிருந்து இதர சேவைகளுக்காக பெறவேண்டிய மீதி ரூபா 2,826.6 மில்லியன் ஆனதுடன் இந்த மீதி 2017, 2018, 2019, 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக நிகர கணக்கீட்டு மற்றும் நிகர சேர்த்தல் முறைகளைப் பயன்படுத்தி எரிசக்தியை கொள்வனவு செய்தமைக்காக இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய ரூபா 2,819.6 மில்லியன் தொகையும் அதில் உள்ளடங்கியிருந்தது. இருப்பினும், இ.மி.ச. இன் மீதி உறுதிப்படுத்தலின் படி, கம்பனிக்குச் செலுத்த வேண்டிய தொகைகள் எதுவும் காணப்படாததுடன் நிகர கணக்கீட்டு மற்றும் நிகர சேர்த்தல் முறைகளைப் பயன்படுத்தி மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்காக இரு தரப்பினருக்கும் இடையே முறையான ஒப்பந்தம் காணப்படவில்லை. எனவே, அந்த நிலுவையின் அறவிடக்கூடிய தன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக கண்டறிய முடியாதிருந்ததுடன், கம்பனி மேற்படி தொகைக்கு எதிராக ரூபா 2,449.3 மில்லியன் மதிப்பிழப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தது.

(iv) இ.மி.ச. இன் முதன்மை துணை மின் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தும் நிலங்கள் மற்றும் கட்டிடங்களை கொள்வனவு செய்வதற்காக கம்பனி ரூபா 206.9 மில்லியன் தொகையை செலவிட்டிருந்ததுடன், அந்த தொகையானது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இ.மி.ச. இடமிருந்து பெறப்பட வேண்டிய மீதியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், கம்பனியின் நிலங்களில் முதன்மை துணை மின்நிலையங்களை அமைப்பது தொடர்பிலும் மேற்கூறிய நிலங்கள் மற்றும் கட்டிடங்களைப் பயன்படுத்துவது குறித்து இ.மி.ச. இடமிருந்து அறவிட வேண்டிய வேண்டிய கட்டணங்கள் தொடர்பிலும் கம்பனிக்கும் இ.மி.ச. க்கும் இடையில் முறையான ஒப்பந்தம் எதுவும் காணப்படவில்லை.

(v) சுய மின்வலு உற்பத்திக்காக இ.மி.ச. இடமிருந்து பெற வேண்டிய ரூபா 3.9 மில்லியன் ஐந்து வருடங்களுக்கும் மேலாக அறவிடப்படாமல் இருந்தது. சுய-மின்வலு உற்பத்தி தொடர்பாக கம்பனிக்கும் இ.மி.ச. க்கும் இடையில் முறையான ஒப்பந்தம் எதுவும் காணப்படாததுடன் அந்தத் தொகையின் மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு கிடைக்கவில்லை. எனவே, அந்த நிலுவையின் அறவிடக்கூடிய தன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக கண்டறிய முடியவில்லை.

(vi) கொள்வனவுக் கட்டளைகளின் பெறுமதிக்கும் உண்மையான கொடுப்பனவிற்கும் இடையே உள்ள வேறுபாடானது, கொள்வனவு முரண் கணக்கில் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதன்படி, தொடர்புடைய இருப்பு, சொத்து அல்லது இலாபம் அல்லது நட்டம் என அதனை அங்கீகரிப்பதற்குப் பதிலாக இலாபம் அல்லது நட்டத்தில் செயற்பாட்டுச் செலவுகளாக ரூபா 149.2 மில்லியன் சாட்டப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட சீராக்கல் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் அல்லது நட்டம், இருப்பு மற்றும் சொத்துக்கள் மீது தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதை கணக்காய்வில் நிராகரிக்க முடியாதுள்ளது.

(vii) 2022 திசெம்பர் 31 நிலவரப்படி காணப்பட்ட இனங்காணப்படாத வைப்புத்தொகையான ரூபா 6.7 மில்லியன் சில்லறைக் கடன்கொடுத்தோரில் சேர்க்கப்பட்டுள்ளது.

(viii) நிதிக்கூற்றுக்களின் படி, களனி, மொரட்டுவை, நுகேகொட மற்றும் நீர்கொழும்பு கிளைகளிலுள்ள நடைபெற்றுவரும் மூலதனப் பணிகளின் நிலுவைகள் 2022 திசெம்பர் 31 நிலவரப்படி முறையே ரூபா 45.7 மில்லியன், ரூபா 56 மில்லியன் ரூபா 183.5 மில்லியன் மற்றும் ரூபா 41.3 மில்லியன் ஆகும். இருப்பினும், நடைபெற்றுவருகின்ற மூலதன வேலைகளின் அறிக்கையின்படி, மேற்கூறிய நிலுவைகள் முறையே ரூபா 43.8 மில்லியன், ரூபா 55.3 மில்லியன் ரூபா 181.7 மற்றும் ரூபா 46.7 மில்லியன் ஆகும். அதன்படி, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நிலுவைகளிற்கும் நடைபெற்றுவருகின்ற மூலதன வேலைகளின் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள நிலுவைகளிற்கும் இடையே முறையே ரூபா 1.9 மில்லியன் ரூபா 0.7 மில்லியன் ரூபா 1.8 மில்லியன் மற்றும் ரூபா 5.4 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.

(ix) ரூபா 1.9 பில்லியன் திறைசேரி முறியுடன் தொடர்புடைய 2022 செப்டம்பர் 15 முதல் 2022 திசெம்பர் 31 வரையிலான காலத்திற்குரிய திறைசேரி முறிக் கொள்வனவுக் கழிவு மீதான காலத்தேய்மானத் தொகையான ரூபா 3.3 மில்லியன் தவறாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, 2022 திசெம்பர் 31 இல் உள்ளபடியான வட்டி வருமானம் ரூபா 6.6 மில்லியன் தொகையால் குறைத்தும் திறைசேரி முறிகள் மீதான முதலீடு அதே அளவு தொகையால் குறைத்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(x) 2022 ஆம் ஆண்டிற்காக ஒரே மாதிரியான தேசிய தீர்வைச் சீராக்கல் ஏற்பாடுகளை கம்பனி செய்திருக்கவில்லை. இருப்பினும், தகவல் இல்லாததால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளிற்கான தாக்கத்தை கணக்காய்வில் கண்டறிய முடியவில்லை.

(xi) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லங்கா பிராட் பேண்ட் நெட்வொர்க் (பிரைவேட்) லிமிடெட்டின் சாதாரண பங்குகளில் செய்யப்பட்ட ரூபா 5 மில்லியன் முதலீட்டுடன் தொடர்புடைய பங்குச் சான்றிதழ்கள் அல்லது வேறு போதியளவு பொருத்தமான ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(xii) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மின்சாரம் கொள்வனவு செய்தமைக்காக இ.மி.ச. க்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,799.3 மில்லியன் ஆன போதிலும், இ.மி.ச. இன் மீதி உறுதிப்படுத்தலின்படி, அந்த நிலுவைத் தொகை ரூபா 2,912.7 மில்லியன் ஆகும். அதன்படி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களிற்கும் மீதி உறுதிப்படுத்தலிற்கும் இடையே ரூபா 1,113.4 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(xiii) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் படி காணப்பட்ட இனங்காணப்படாத வங்கி வைப்புத் தொகையான ரூபா 16.2 மில்லியன் மற்றும் இனங்காணப்படாத பற்று வைத்தல் தொகை ரூபா 6.2 மில்லியன் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவற்றில், முறையே ரூபா 14.3 மில்லியன் மற்றும் ரூபா 5 மில்லியன் முறையே 06 மாதங்களுக்கும் மேலாக காணப்பட்டதுடன், அந்த இனங்காணப்படாத வங்கி வைப்பு மற்றும் பற்றுகள் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(xiv) கணக்கிணக்கம் செய்யப்படாத ரூபா 5.9 மில்லியன் வரவு மீதி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

(xv) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு என்டெ லொகோ மீற்றரிங் கம்பனி (பிரைவட்) லிமிடட் இற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 38.6 மில்லியன் ஆகும். கம்பனியால் பதிவுசெய்யப்பட்ட இந்தத் தொகையானது என்டெ லொகோ மீற்றரிங் கம்பனி (பிரைவட்) லிமிடட் இன் நிதிக்கூற்றுக்களில் கம்பனியிடமிருந்து பெறவேண்டிய தொகையாக ரூபா 22.8 மில்லியன் எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரு நிறுவனங்களுக்கிடையில் ரூபா 15.8 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.

(xvi) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு என்டெ லொகோ மீற்றரிங் கம்பனி (பிரைவட்) லிமிடட் இற்கு வழங்கப்பட்ட முற்பணம் ரூபா 136.3 மில்லியன் ஆகும். இருப்பினும், கம்பனியால் பதிவுசெய்யப்பட்ட இந்தத் தொகையானது என்டெ லொகோ மீற்றரிங் கம்பனி (பிரைவட்) லிமிடட் இன் நிதிக்கூற்றுக்களில் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய தொகையாக ரூபா 113.3 மில்லியன் எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரு நிறுவனங்களுக்கிடையில் ரூபா 23 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.

### 1.2.2 இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்எஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்குதல்

**(அ) நிதிசார் அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்க சட்டகம்**

(i) நியமத்தின் பந்தி 69 க்கு முரணாக, இருப்புச் சீராக்கல் கணக்கின் வரவு மீதியான ரூபா 139.48 மில்லியன் தொகையினை இருப்பின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்புகளின் கீழுள்ள ஏனைய செலுத்த வேண்டிய நிலுவைகளுக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) சட்டகத்தின் 4.3 ஆம் பந்திக்கு முரணாக, சபைக்குச் சொந்தமான ரூபா 7.06 மில்லியன் பெறுமதியான 51 சொத்துக்கள் ஊ.சே.நி. இன் செயற்பாடுகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) எல்கேஏஎஸ் 1 – நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

(i) நியமத்தின் பந்தி 69 க்கு முரணாக, இருப்புச் சீராக்கல் கணக்கின் வரவு மீதியான ரூபா 139.48 மில்லியன் தொகையினை இருப்பின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்புகளின் கீழுள்ள ஏனைய செலுத்த வேண்டிய நிலுவைகளுக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் சோதனையின்படி, DD 01 இன் கீழுள்ள கொழும்பு நகரப் பிராந்தியத்தின் மேலதிகக் கொடுப்பனவு காரணமாக ரூபா 41.58 மில்லியன் அசாதாரண செலவு நிலுவை உருவானதுடன், விநியோகப் பிரிவுகளின் இறுதிப்படுத்திய மொத்தக் கடன்பட்டோரிலுள்ள இறுதிப்படுத்திய சாதாரணக் கடன்பட்டோரின் அசாதாரண செலவு மீதியான ரூபா 13.16 மில்லியன் தொகையினை விசாரணை செய்து தீர்ப்பதற்கு அல்லது சபையின் வருமானத்திற்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படுவதற்குப் பதிலாக நியமத்தின் 32 வது பந்திக்கு முரணாக பெறத்தக்கவைகளுக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) எல்கேஏஎஸ் 2 - இருப்புக்கள் மற்றும் எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

சபையானது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக மேற்படி நியமங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்குப் பதிலாக நியமக் கிரய முறையை பிரயோகிக்கின்றது. இதன் விளைவாக, அவற்றின் மீது ஏற்பட்ட சாதக மேந்தலை விலை மற்றும் பொருள் விலை முரண்கள் முறையே ரூபா 2.93 பில்லியன் மற்றும் ரூபா 6.54 பில்லியன் கூட்டுத்தொகையாக காணப்பட்டது. அத்துடன் ரூபா 6.57 பில்லியன் கூட்டுத்தொகையான பாதக களஞ்சிய விலை முரணும் காணப்பட்டது. எனினும், அந்த மூலதன வேலைகள் தொடர்பில் தேவையான தகவல்கள் காணப்படாததன் காரணமாக நிதிக்கூற்றுக்களிலுள்ள செயற்பாட்டு விளைவுகள், சொத்துக்கள் மற்றும் உரிமைத்துவத்திற்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தை மதிப்பிட முடியாதிருந்தது.

**(ஈ) எல்கேஏஎஸ் 8 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்**

(i) இ.மி.ச. இனால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாகத் தேய்விடப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலமானது ஆதனம், பொறி மற்றும் உபகரண கணக்காய்வு நியமம் (எல்கேஏஎஸ் 16) இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முன்னைய மதிப்பீட்டிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றவை வேறுபட்டுக் காணப்படின் அது எல்கேஏஎஸ் 08 இன் படி சீராக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், ரூபா 211.81 பில்லியன் தொகையான முழுமையாகத் தேய்விடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றின் உண்மையான ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பிடப்பட்டு அதற்கமைய கணக்கீடு செய்யப்படாது தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(ii) நியமத்தின் பந்திகள் 41 மற்றும் 42 க்கு முரணாக, முந்தைய ஆண்டுகளில் 12 செயற்திட்டங்கள் தொடர்பில் நடைமுறையிலுள்ள வேலைகளாக அடையாளம் காணப்பட்ட ரூபா 1.47 பில்லியன் நிகர நாணயப் பரிவர்த்தனை இழப்பினை பின்னோக்கிச் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் கட்டணமாக அந்த ஆண்டின் நட்டத்திற்குச் சீராக்கப்பட்டிருந்தது. எனவே மீளாய்வாண்டுக்கான நட்டம் அதே அளவு தொகையால் அதிகமாகக் கூறப்பட்டுள்ளது.

(iii) 2020 முதல் 2022 வரையிலான காலப்பகுதியில் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு சபையால் 220மெ இன் கீழ் வழங்கப்பட்ட ரூபா 1.83 பில்லியன் மின்வலுவின் கிரயமானது சபை கம்பனியிடமிருந்து மின்வலுவை வாங்கியதற்காகப் பெற்ற ஒவ்வொரு மாத விலைப்பட்டியலிலும் இருந்து கழிக்கப்பட்டிருந்ததுடன் சபையால் மேற்படி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட மின்சாரத்தின் நிகர விலைப்பட்டியல் மதிப்பு கொள்வனவு செய்யப்பட்ட மின் வலுவின் கிரயமாக கணக்கிடப்பட்டது. எவ்வாறாயினும், நியமத்தின் பிரிவு 41 மற்றும் 42 இன் அடிப்படையில் மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1.83 பில்லியன் தொகையினை 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட மின் வலுவின் கிரயமான ரூபா 530.95 மில்லியனுக்கு பின்னோக்கிச் சீராக்குவதற்குப் பதிலாக, கொள்வனவு செய்யப்பட்ட பவர் தெர்மல் கணக்கில் (விற்பனைக் கிரயம்) வரவு வைக்கப்பட்டு சபையின் மேற்கு மாகாண வடக்கின் கீழுள்ள விநியோகப் பிரிவு 2 இன் செலுத்த வேண்டிய வர்த்தகக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மேற்படி தொகை 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் விநியோகப் பிரிவு 2 இல் பெற வேண்டியதாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

சொத்து முகாமைத்துவப் பிரிவிலுள்ள ரூபா 4.92 மில்லியன் மதிப்புள்ள அலுவலக உபகரணங்கள் மற்றும் நிதிப் பிரிவிலுள்ள ரூபா 12.34 மில்லியன் மதிப்புள்ள சொத்துக்கள் முறையே 2021 மற்றும் 2022 கணக்கெடுப்பின் போது பௌதீக ரீதியாக இல்லாதும், சேதமடைந்தும், பயன்படுத்த முடியாதும் செயலற்றும் காணப்பட்டமை அடையாளம் காணப்பட்டன. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியில் கணக்குப் புத்தகங்களை அதற்கேற்ப திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) LKAS 20 – அரசாங்க மானியங்களுக்கான கணக்கு மற்றும் அரசாங்க உதவியை வெளிப்படுத்துதல**

இலங்கை அரசாங்கம் மற்றும் இரண்டு வெளிநாட்டுக் கடன் வழங்கும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகளின் கீழ் இரண்டு செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக மீளச் செலுத்துவதற்கான பொறுப்பை ஏற்கும் வகையில் மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் இறுதியில் சபைக்கு ரூபா 40.9 பில்லியன் பெறப்பட்டதுடன் நியமத்தின் பந்தி 3 இன் அடிப்படையில் அதனை அரசாங்க மானியங்களாகக் கணக்கிடுவதற்குப் பதிலாக, இலங்கை அரசாங்கத்திடம் (சபையுடனான துணைக் கடன் உடன்படிக்கைகள் இல்லை) இருந்து பெறப்பட்ட வட்டிக் கடன்களாகவும் சபையின் கடன்களாகவும் கணக்கிடப்பட்டிருந்தது. அதுமட்டுமல்லாமல் ஏனைய இரண்டு செயற்திட்டங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் மற்றும் இரண்டு வெளிநாட்டு கடன் வழங்கும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகளின் கீழ் பெறப்பட்ட ரூபா 8.2 பில்லியன் தொகையினை துணைக் கடன் ஒப்பந்தங்களின்படி சபையின் உரிமைத்துவமாக எடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் இணங்கியிருந்த போதிலும் அத் தொகையும் சபையின் வட்டிக் கடன்களாக காட்டப்பட்டிருந்தன.

**(ஊ) LKAS 21 – அந்நிய செலாவணி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்களின் விளைவுகள்**

நியமத்தின் பிரிவு 23 (அ) இன் அடிப்படையில், வெளிநாட்டு நாணய விடயங்களை அறிக்கையிடல் காலத்தின் முடிவிலுள்ள நாணயப் பரிமாற்று விகிதத்தைப் பயன்படுத்தி ரூபாவிற்கு மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், சபையால் நேரடியாகப் பெறப்பட்ட நான்கு செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ஆறு வெளிநாட்டு நாணயக் கடன்களின் மதிப்பை இறுதி நாணயமாற்று விகிதங்களைப் பயன்படுத்தி சபை ரூபாவிற்கு மாற்றியமைத்திருக்காததுடன், நியமத்தின் பிரிவு 28 இன் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் அதற்கேற்ப அந்நிய செலாவணி இலாபம்/நட்டம் எதுவும் அங்கீகரிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், மேற்கூறிய ஆறு செயற்திட்டங்களில் இரண்டு செயற்திட்டங்களிற்கு கடனாகப் பெறப்பட்ட தொகைக்குரிய மீதி உறுதிப்படுத்தல்களின் படி, மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் வட்டியுடன் கூடிய கடன் மீதி மற்றும் வருடத்திற்கான நட்டம் ஏறத்தாழ ரூபா 6,485 மில்லியனால் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**(எ) SLFRS 09 – நிதிக் கருவிகள்**

(i) வியாபாரக் கடன்பட்டோர் மதிப்பிழப்பு ஏற்படுத்துதல் தொடர்பாக வெளியிடப்பட்ட 610 ஆம் இலக்க 2023 பெப்ரவரி 02 ஆம் தேதியிட்ட கணக்குச் சுற்றறிக்கை மற்றும் 2.4.5.4 ஆம் இலக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் படி, 1 வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள வியாபாரக் கடன்பட்டோர் மீது 100 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், மூன்று விநியோக பிரிவுகளில் உள்ள 4 மாகாணங்களுடன் தொடர்புடைய ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள வியாபாரக் கடன்பட்டோர் மீதிக்காக ரூபா 10.28 மில்லியன் குறைவாகவும் ரூபா 56.59 மில்லியன் அதிகமாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. எனவே, மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான நட்டம் ரூபா 46.31 மில்லியனால் அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) எதிர்பார்த்த கடன் இழப்பைக் கருத்தில் கொண்டு மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியிலுள்ள ரூபா 250 மில்லியன் நுகர்வோருக்கான கடன்கள் தொடர்பில் மதிப்பிழப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 196.87 மில்லியன் அல்லது மொத்த நுகர்வோர் கடன்களில் 79 சதவீதம் 5 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) நிதிக்கூற்றுக்களிற்கான கணக்கீட்டுக் கொள்கைகளின் கொள்கை இல. 2.4.5.2 இன் படி, சபையின் நிதிச் சொத்துக்கள், வியாபார மற்றும் பிற பெறத்தக்கவைகள், வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் ஊழியர்களுக்கான கடன்கள் ஆகியவை சபையின் வியாபாரக் கடன்பட்டோரின் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பை அங்கீகரிப்பதற்கான நிதிச் சொத்துக்களில் உள்ளடங்குகின்றன. இதற்காக சபை ஒரு குறிப்பிட்ட அணுகுமுறை மற்றும் வழிமுறையை அறிமுகப்படுத்தியிருந்த போதிலும், ஏனைய கடன்பட்டோர் தொடர்பில் எந்த குறிப்பிட்ட நடைமுறையும் அறிமுகப்படுத்தப்படாததுடன், இதில் சில்லறைக் கடன்பட்டோர், புனித இடங்களிலிருந்து பெறவேண்டிய நிலுவைகள் போன்றவை அடங்குகின்றன. அதன்படி, விநியோக பிரிவு 01 மற்றும் விநியோக பிரிவு 04 இலுள்ள முறையே ரூபா 208.06 மில்லியன் மற்றும் ரூபா 49.24 மில்லியன் தொகையான ஓராண்டிற்கும் மேலான நிலுவைக் கடன்பட்டோர் மீது முறையே ரூபா 33.95 மில்லியன் மற்றும் ரூபா 3.1 மில்லியன் மட்டுமே கடன்பட்டோர் மதிப்பிழப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், விநியோகப் பிரிவு 02 மற்றும் விநியோகப் பிரிவு 03 இல் முறையே ரூபா 148.47 மில்லியன் மற்றும் ரூபா 66.6 மில்லியன் என ஒரு வருடமாக நிலுவையில் உள்ள நிலுவைத் தொகைக்கு எந்த ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. அதேபோன்று ஐந்தாண்டுகளாக நிலுவையில் உள்ள ரூபா 300.24 மில்லியனுக்கு இணையான எதிர்பார்த்த கடன் இழப்பை சரியாகக் கண்டறியாமல் ரூபா 64.31 மில்லியன் மதிப்பிழப்பு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இந்த அவதானிப்புகளின் காரணமாக, நிதிக்கூற்றுக்களிலுள்ள நிதிச் சொத்துகளின் முன்கொண்டு செல்லும் மதிப்பின் சரியான தன்மையை கணக்காய்வில் கண்டறிய முடியாதுள்ளது.

(iv) சபையின் பரிமாற்றல் பிரிவிலுள்ள ரூபா 1.38 பில்லியன் தொகையான சில்லறைக் கடன்பட்டோர் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக காணப்படுவதுடன் அதிலுள்ள ரூபா 1.37 பில்லியன் தொகையானது AES Kelanithissa (Pvt) Ltd இடமிருந்து 2011 ஆம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ளது. இருப்பினும், மேற்கூறிய நியமத்தின் அடிப்படையில் அந்தக் கடனுக்காக எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பை சரியாக அங்கீகரிக்காமல், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் குறைபாட்டிற்காக ரூபா 563,330 மட்டுமே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**1.2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) இருப்பு பற்றாக்குறையுடன் தொடர்புடைய ரூபா 162.5 மில்லியன் வரவு மீதி மற்றும் இருப்பு மிகையுடன் தொடர்புடைய ரூபா 70.3 மில்லியன் செலவு மீதி என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2016/17 மதிப்பீட்டின் ஆண்டிலிருந்து 2019/20 வரை செலுத்தப்பட்ட கோரக்கூடிய கால அளவைத் தாண்டிய பொருளாதார சேவைக் கட்டணங்கள் (ESC) ரூபா 3.91 பில்லியன் விரிவான வருமான அறிக்கைகளில் செலவுகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, ஆண்டின் தொடக்கத்தில் காணப்பட்ட நிறுத்திவைக்கப்பட்ட நட்டம் மற்றும் மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டுக்கான நட்டம் என்பன முறையே ரூபா 2.7 பில்லியன் மற்றும் ரூபா 1.21 பில்லியனால் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.

(இ) விநியோகப் பிரிவுகளிலுள்ள ரூபா 16.9 பில்லியன் மதிப்பில் பூரணப்படுத்திய பல்வேறுபட்ட 11,429 வேலைகள், தொடர்புடைய சொத்துக் கணக்குகளுக்கு மாற்றப்படாமல், இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக முடிவுறா வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், 5 ஆண்டுகளுக்கும் மேலாக சொத்து முகாமைத்துவப் பிரிவின் முடிவுறா வேலைகள் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ள ரூபா 6.2 மில்லியன் மதிப்பிலான மூன்று முடிக்கப்பட்ட வேலைகளை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இவற்றிற்கான தேய்மானத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யாததால், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான நட்டத்தின் மீதான தாக்கத்தை தகவல் பற்றாக்குறையால் கண்டறிய முடியவில்லை.

(ஈ) அசாதாரண செலவு நிலுவைகள் எதிரீடு செய்யப்பட்டதன் காரணமாக விநியோகப் பிரிவுகளிலுள்ள முடிவுறா வேலைகள் மீதி ரூபா 12.82 மில்லியனால் குறைத்துக் குறப்பட்டிருந்தது.

(உ) 2018 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட கம்பஹா பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தின் நிர்மாணத்திற்காக ரூபா 107.47 மில்லியன் செலவானதுடன், மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் இறுதிக்குள் கூட அதனை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல், முடிவுறா வேலைகள் கணக்கில் சேர்க்கப்பட்டிருந்தது. மேலும், கணக்காய்வின் மூலம் செய்யப்பட்ட கணிப்பீடுகளின் படி, நிறுத்திவைக்கப்பட்ட நட்டம் மற்றும் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான நட்டம் என்பன முறையே ரூபா 9.12 மில்லியன் மற்றும் ரூபா 2.69 மில்லியனாகக் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) புத்தளம் நிலக்கரி மின் திட்டத்திற்காக (ii) கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 124.30 மில்லியன் பெறுமதியான நான்கு வாகனங்கள் 2014 இல் திட்டம் நிறைவடைந்த பின்னரும் மூலதனமாக்கப்படாது அதற்குப் பதிலாக, அந்தத் தொகையானது முடிவுறா வேலைகள் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், அந்த வாகனங்களின் தேய்மானம், திட்டம் முடிவடைந்த நாளிலிருந்து அங்கீகரிக்கப்படவில்லை. அதற்கு மேலதிகமாக இவ்வருட இறுதிவரை கூட இந்த வாகனங்களின் உரிமையை சபைக்கு மாற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(எ) 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிற்கான முன்னைய ஆண்டுச் சீராக்கல்களை 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் சபை செய்திருப்பது அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ள நிறுத்திவைக்கப்பட்ட நட்டம் ரூபா 89.6 பில்லியனால் திரிவுபடுத்தப்பட்டிருந்தது. எனவே, எதிர்வரக்கூடிய ஆண்டுகளில் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான இலாபத்தில் மாற்றங்களைச் செய்வதற்கான சாத்தியக்கூறுகளை கணக்காய்வில் நிராகரிக்க முடியாதுள்ளது.

(ஏ) வடமேல் மாகாணம் 2 இலுள்ள அசாதாரண செலவு நிலுவைகளை எதிரீடுசெய்ததன் காரணமாக விநியோக பிரிவு 01 இலுள்ள வாடிக்கையாளர் கடன் மீதிகள் ரூபா 23.97 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டுள்ளன.

(ஐ) ரூபா 89.57 மில்லியன் தொகையான வழிச் சரக்குகள் ஒரு வருடத்திற்கும் மேலாக கணக்குப் புத்தகங்களில் தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கப்படாமல் வைக்கப்பட்டுள்ளன. விநியோகப் பிரிவு 01 இலுள்ள வழிச் சரக்குத் தொகையான ரூபா 65.26 மில்லியன் பொருட்களிலுள்ள ரூபா 60.38 மில்லியன் என்பது லங்கா டிரான்ஸ்ஃபார்மர்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 5 ஆண்டுகளுக்கு முன்பு கால்வனிசங் செய்வதற்காக அனுப்பப்பட்ட மின்மாற்றிகளைக் குறிக்கின்ற போதிலும், மீளாய்வாண்டின் இறுதிரையிலும் அத்தொகை பெறப்பட்டிருக்கவில்லை.

(ஒ) வினியோக பிரிவு 03 இன் கீழுள்ள கூட்டிணைப்பு அலுவலகம் மற்றும் சப்ரகமுவ (துணைப் பொது முகாமையாளர்) அலுவலகம ஆகியவற்றிலுள்ள வழிச்சரக்குகளின் மீதியில் ரூபா 26.97 மில்லியன் அசாதாரண செலவு மீதி அவதானிக்கப்பட்டது.

(ஓ) 2002 ஆம் ஆண்டு முதல் பிரிவுகளுக்கிடையேயான நடப்புக் கணக்குகளிலுள்ள நிலுவைகள் புலனாய்வு செய்யப்பட்டு தீர்த்து வைக்கப்படாது, 2004 ஆம் ஆண்டில் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றப்பட்டதால், விநியோகப் பிரிவு 01 மற்றும் விநியோக பிரிவு 02 இலுள்ள ரூபா 557.94 மில்லியன் வரவு மீதியும் ரூபா 556.81 மில்லியன் செலவு மீதியும் தீர்க்கப்படாமல் உள்ளது.

(ஔ) 2019 செப்டம்பர் 24 ஆம் தேதியிட்ட 19/2622/113/074 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் படி லக்விஜய மின் உற்பத்தி நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கான செயற்திட்ட முகாமைத்துவ அலகு ஒன்றை சபை நிறுவியுள்ளது. இருப்பினும், ரூபா 167.31 மில்லியன் தொகை செலவிடப்பட்ட பின்னர் 2021 யூலை 26 அன்று அமைச்சரவையால் எடுக்கப்பட்ட அரசாங்கக் கொள்கையின் அடிப்படையில் 2021 அக்டோபர் 26 அன்று செயற்திட்டத்தை மூடுவதற்கான முடிவை பணிப்பாளர் சபை எடுத்தது. எவ்வாறாயினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் பதிவழிப்பதற்கு அல்லது உரிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் ரூபா 167.62 மில்லியன் தொகை மூலதன முடிவுறா வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

(ஃ) 23 வாகனங்களின் பெறுமதி மற்றும் அதன் மீதான திரட்டப்பட்ட தேய்மானம் என்பன லக்விஜய மின் நிலையத்தின் சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்படாததுடன் அதன் விளைவாக, போதிய தகவல் இல்லாததால் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்படவில்லை.

(க) 2022 பெப்ரவரி 15 அன்று வெளியிடப்பட்ட 2267ஃ13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு சமர்ப்பித்த விலைப்பட்டியல்களின் படி, விநியோகப் பிரிவுகள், பிறப்பாக்கப் பிரிவு மற்றும் விநியோகப் பிரிவு தொடர்பான 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த ஒழுங்குபடுத்தல் வரித் தொகை ரூபா 209.68 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 167.25 மில்லியன் மட்டுமே கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையால் ரூபா 42.43 மில்லியன் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(கா) மகாவலி வளாகத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழுள்ள சிவில் வேலைகளின் கீழ் ரூபா 63.54 பில்லியன் பெறுமதியான அணைப் பணிகள், சுரங்கப் பணிகள், டெயில்ரேஸ் பணிகள் மற்றும் உட்செலுத்தக் கால்வாய் ஆகியவை காட்டப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், கூறப்பட்ட தொகையின் சரியான தன்மை மற்றும் கையகப்படுத்துதல் அல்லது சபைக்கு அந்தந்த சொத்துக்களின் உரிமை ஆகியவை குறித்த தகவல்கள் இல்லாததால் கணக்காய்வில் அதனை மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

(கி) 2018 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் வங்கிக் கணக்கு இல. 85135 இலுள்ள ரூபா 7.29 மில்லியன் நேரடி வங்கி செலவு வைத்தல்கள் குறித்து விசாரணை செய்து முறையான கணக்குகளுக்குக் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல், தற்காலிகமாக வழிக்காசுக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

(கீ) தரப்படுத்தப்பட்ட மின் கொள்முதல் ஒப்பந்தத்தின் பந்தி 5.2 (ஆ) இன் படி, விற்பனையாளருக்கு நிலுவைத் தேதியில் அல்லது அதற்கு முன்னதாக அதாவது இ.மி.ச. இன் மின் நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள அதன் மின்மானியை வாசித்த தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குப் பின்னர், இ.மி.ச. பணம் செலுத்த வேண்டுமென்பதுடன் அவ்வாறு நிலுவைத் தொகைகள் குறித்த தேதிக்குப் பிறகு செலுத்தப்படாமல் இருந்தால், அவற்றிற்கு மாதாந்த முதன்மை விகிதத்தில் வட்டி செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், உரிய திகதிக்குள் பணம் செலுத்தாது 310 மின் உற்பத்தியாளர்களுக்கு 2023 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு ரூபா 26.9 பில்லியன் தொகை நிலுவையில் உள்ளமை அவதானிக்கப்பட்டது. மேலும், மின் உற்பத்தியாளர்களால் இ.மி.ச. க்கு விலைப்பட்டியல்களை சமர்ப்பிக்கையில், உரிய தேதிகளுக்குப் பிறகு செலுத்தப்படாத நிலுவைகளுக்கான வட்டிகள், மின் உற்பத்தியாளர்களால் குறித்த விலைப்பட்டியல்களில் அவ்வப்போது கோரப்பட்டதை கணக்காய்வில் அவதானிக்க முடிந்தது. அத்துடன், 2019 ஏப்ரல் முதல் 2023 ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில் 109 மின் உற்பத்தியாளர்களால் அவ்வாறு செலுத்தப்படாத நிலுவைத் தொகைக்கான வட்டியாக ரூபா 2.6 பில்லியன் கோரப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், மின் உற்பத்தியாளர்கள் கோரப்பட்ட வட்டியில் எந்தத் தொகையும் செலுத்தப்படவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் செலுத்த வேண்டிய வட்டிக்கான எந்த ஏற்பாடும் மதிப்பாய்வின் ஆண்டின் இறுதியில் கூட இ.மி.ச. இன் கணக்குப் புத்தகங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்க்கவில்லை.

### 1.2.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள

(அ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் (சீபிசீ) செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட மீதிக்கும் அத்திகதியில் உள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் சபையிடமிருந்து பெறவேண்டியதாக காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 4.62 பில்லியன் வித்தியாசம் காணப்பட்டது. மேலும், மேற்படி தொகையில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் ஏய்ப்புச் செய்யப்பட்ட ரூபா 753.61 மீல்லியன் தொகையும் காணப்படுவதுடன், இந்த விடயம் 2013 முதல் தொடர்ச்சியாக கடந்தகால கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2022 திசெம்பர் 22 அன்று பொது முயற்சிகள் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டத்தில், பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்கு உட்பட்டு சபையால் 2013 ஏப்ரல் 19 க்குப் பின்னரான ரூபா 330 மில்லியன் (ஏறத்தாழ) வட்டிக் கூறுகளை ஏற்குமாறு பணிப்பாளர் நாயகம் பரிந்துரைத்தார். எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் கூட பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெற்று அதன்படி செயல்படுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் படி, சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள துணை மின்சார விநியோக நம்பகத்தன்மை மேம்பாட்டுத் திட்டத்தின் முடிவுறா வேலைத் தொகைக்கும் திட்டத்தின் நிதிநிலை அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள தொடர்புடைய நிலுவைகளிற்கும் இடையே ரூபா 4.49 பில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(இ) ரூபா 423.76 மில்லியன் இனங்காணப்படாத வரவு மீதி விநியோக பிரிவு 1 இல் 2012 முதல் அறவிடப்படாமல் வைத்திருக்கப்பட்டுள்ளது. இருப்பினும், பாதிக்கப்பட்ட தனிப்பட்ட கடன்பட்டோர் கணக்குகளை ஆராய்ந்து சரி செய்யாமல் 2015 முதல் 2022 வரை அதிலிருந்து ரூபா 185.41 மில்லியன் தொகை விநியோகப் பிரிவுகளின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்குகள், பிற பொறுப்புக் கணக்குகள் போன்றவற்றுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஈ) பட்டியலிடல் முறைமை மற்றும் சில கிரய மையங்கள் தொடர்பில் பட்டியலிடல் கடன்பட்டோராக கணக்கினக்க கூற்றுக்களிற்கு எடுக்கப்பட்ட தொகைகளின் படி மொத்தக் கடன்பட்டோரிற்கும் சாதாரண கடன்பட்டோர் நிலுவைகளுக்கும் இடையே சில வேறுபாடுகள் காணப்பட்டன. அதன்படி, மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான மொத்த கடன்பட்டோர் மற்றும் சாதாரண கடன்பட்டோர் தொடர்பாக முறையே ரூபா 5.28 மில்லியன் மற்றும் ரூபா 423.85 மில்லியன் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. அதன்படி, வியாபாரக் கடன்பட்டோரின் சரியான தன்மையை கணக்காய்வில் நியாயமான முறையில் கண்டறிய முடியவில்லை.

(உ) 2022 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சேகரிப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கில் ரூபா 278.54 மில்லியன் வரவு மீதியும் ரூபா 1.52 மில்லியன் செலவு மீதியும் காணப்பட்டன. இருப்பினும், தீர்க்கப்படாதுள்ள ரூபா 273.32 மில்லியன் வரவு மீதி மற்றும் ரூபா 913.25 மில்லியன் செலவு மீதிகளிற்கான கணக்கிணக்கம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே சேகரிப்புக் கட்டுப்பாட்டு கணக்கிலுள்ள மீதிகளின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. அத்துடன், ரூபா 38.05 மில்லியன் இனங்காணப்படாத ஆரம்ப மீதியொன்று சேகரிப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கில் (அடையாளம் தெரியாத தொடக்கக் கடன் நிலுவை தவிர) உள்ளடக்கப்பட்டுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டதுடன் தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்காமல் ரூபா 3.14 மில்லியன் மற்றும் ரூபா 3.44 மில்லியன் தொகையான ஒரு வருடத்திற்கும் மேலான முறையே வரவு மற்றும் செலவு மீதிகள் சேகரிப்புக் கட்டுப்பாட்டு கணக்கில் இருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

(ஊ) 1998 முதல் 2021 வரையான காலத்தில் சேகரிக்கப்பட்ட ரூபா 68.99 மில்லியன் தொகையினை அகற்றுவதற்கு எரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாது தொங்கல் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(எ) WPS II – (விநியோகப் பிரிவு 03) இலிருந்து மின்சாரம் விநியோகப்பட்டமைக்காக ளுழதவைண முநடயவைொளைளய (ீஎவ) டுவன இலிருந்து பெற வேண்டிய ரூபா 38.76 மில்லியன் 2019 ஆம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ளது. இருப்பினும், அந்தக் கம்பனியின் பதிவுகளின்படி, அத்தொகை சபைக்குச் செலுத்த வேண்டியதாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபையின் நிதிக்கூற்றுக்களின் படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 752.22 மில்லியனுக்குச் சமமான தொகை களனிதிஸ்ஸ சட்டகம் V மறுசீரமைப்புத் திட்டத்தின் (860.25) முடிவுறா வேலையில் காணப்படுகின்றது. இருப்பினும், பிறப்பாக்கச் செயற்திட்டப் பிரிவில் பராமரிக்கப்படும் பதிவுகளின்படி அத்தொகை ரூபா 992.77 மில்லியனாக இருந்ததால், ரூபா 240.55 மில்லியனான கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஐ) சபையின் சொத்து முகாமைத்துவ பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பாக இரண்டு அரசு நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகைகளிற்கும் அந்தந்த அரசு நிறுவனங்கள் தொடர்பான சபையின் கணக்குப் புத்தகங்களுக்கும் இடையே ரூபா 22.24 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது.

(ஒ) சபையின் கணக்குப் புத்தகங்களின்படி, மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் பொது திறைசேரியிலிருந்து ரூபா 865.16 பில்லியன் பங்களிப்பு மூலதனமாகப் பெறப்பட்டிருந்தமை காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பொது திறைசேரியின் பதிவுகளின்படி, ரூபா 864.14 பில்லியனுக்கு சமமான தொகையானது சபைக்கான மூலதனப் பங்களிப்பாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே, மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் ரூபா 1.01 பில்லியன் வித்தியாசம் காணப்பட்டது.

(ஓ) சபையின் கணக்குப் புத்தகங்களில் காட்டப்பட்டுள்ள தொகைகள் மற்றும் குறித்த நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள புள்ளிவிவரங்களின் படி தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெறத்தக்கவைகள் மற்றும் தொடர்புடைய தரப்பினருக்குச் செலுத்த வேண்டியவைகளிற்கு இடையே முறையே ரூபா 1,126.29 மில்லியன் மற்றும் ரூபா 447.78 மில்லியன் என கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் காணப்பட்டன.

### 1.2.2.4 கணக்காய்வீற்கான சான்றின்மை

சபையால் நேரடியாகப் பெறப்பட்ட நான்கு வெளிநாட்டு நிதியுதவி கடன்களின் மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை. நிதிக்கூற்றுக்களின் படி இந்தக் கடன்களின் மொத்த நிலுவைத் தொகை ரூபா 55,078.65 மில்லியன் ஆகும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து, சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது குழுமத்தின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல்

முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் குழுமத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

குழுமத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் குழுமத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் குழுமத்தின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும;

### 1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்த ஒன்றித்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக குழுமத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக குழுமத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் குழுமம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- ஒன்றித்த நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒன்றித்த நிதிக்கூற்றுக்களின மீதி ஒரு அபிப்பிராயத்தை வெளிப்படுத்த குழுமத்திலுள்ள நிறுவனங்கள் அல்லது வணிக நடவடிக்கைகளின் நிதித் தகவல் தொடர்பான போதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கும். குழுமத்தின் கணக்காய்வின் திசை, கண்காணிப்பு மற்றும் செயல்பாட்டிற்கு நாங்கள் பொறுப்புடையவர்கள். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு மட்டுமே நான் பொறுப்பாக உள்ளேன்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 எனது இந்த அறிக்கையின் அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களால் ஏற்படுகின்ற தாக்கத்தைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை சபை பேணி வந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 இந்த அறிக்கையின் 1.2.1 (அ), (இ), (ஈ)(i), (உ) 1.2.2 (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (எ), (க), (கா), (கி) 1.2.3 (அ), (ஆ), (இ), (ஈ), (உ),(ஊ) ஆம் பந்திகளிலுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(ஐ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் அங்கத்தவர்கள் எவருக்கும் சபையுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

2.2.2 பின்வருவனவற்றைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது சபையின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

| விதிகள் / வழிகாட்டல்களுக்கான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டம் | |
| (i) (1) மற்றும் 43(1) ஆம் பிரிவு | ஒழுங்குபடுத்தல் தரப்பிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது ரூபா 5.07 பில்லியன் பெறுமதியான 60.33 புறா எரிசக்தி, மின் பிறப்பாக்கத்திற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத 3 சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களிடமிருந்து (IPPs) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) 28 28(3) ஆம் பிரிவு | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நுகர்வோர் வைப்புத் தொகைக்கான வட்டிக்கு சபை பணம் செலுத்தவில்லை அல்லது கணக்குப் புத்தகங்களில் ஏற்பாடு செய்யவில்லை. 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்ட விகிதத்தின் அடிப்படையில் கணக்காய்வில் செய்யப்பட்ட கணக்கீட்டின்படி, அதற்கு செலுத்த வேண்டிய வட்டி ரூபா 976 மில்லியன் ஆனதுடன் அதன்படி, 2022 திசெம்பர் 31 இல் செலுத்தப்படாத திரட்டப்பட்ட வட்டி ரூபா 9.06 பில்லியன் ஆகும். |
| (ஆ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 13(1)(இ) (i) (ஆ) பிரிவின் கீழ் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட மின்சாரப் பரிமாற்றம் மற்றும் மொத்த விநியோக உரிமத்தின் நிபந்தனை 30 இன் உப பிரிவு 10. | ஆணைக்குழுவின் முன் அனுமதி பெறாமல், மீளாய்வாண்டின் சனவரி 6 முதல் ஏப்ரல் 04 வரையிலான 11 நாட்களில் 9 மணி நேரம் 30 நிமிடங்களுக்கு மின் விநியோகத்தில் தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2021 நவம்பர் 17 ஆந் தேதியிட்ட பொது முயற்சிகள் திணைக்களத்தின் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டு கையேடு. | |

| | |
|---|---|
| (i) பிரிவு 3.5 | 2022 திசெம்பர் 31 வரை வரிசை அமைச்சகத்திற்கு விடுவிக்கப்பட்ட முப்பத்து மூன்று ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் சபை ரூபா 51.91 மில்லியன் தொகையை செலுத்தியுள்ளது. அதன்படி, 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையில் மட்டும் விடுவிக்கப்பட்ட ஊழியர்களுக்காக ரூபா 236.26 மில்லியன் தொகையை மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு சபைக்கு திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. |
| (ii) பிரிவு 6.6 | 2022 ஆம் ஆண்டிற்கான சபையின் வரைவு ஆண்டு அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (iii) பிரிவு 7.7 | குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒருமுறை துணை கம்பனிகளின் செயலாற்றல் குறித்து கலந்துரையாட வேண்டுமென்ற நம்பகமான கடமை பணிப்பாளர் சபைக்கு இருந்த போதிலும், 2023 ஏப்ரல் இன் இறுதியில் கூட பணிப்பாளர் சபையால் துணைக் கம்பனிகளின் மதிப்பாய்வுக் கொள்கை நிறுவப்படவில்லை. |
| (ஈ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் தொழில ஆணையாளர் நாயகத்தினால் 2015 செப்டம்பர் 12 அன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முகவரியிட்டு அனுப்பிவைத்த தெளிவு படுத்தல் கடிதம் | விதிக்கு முரணாக, ஊழியரின் உழைப்பைக் கணக்கிடும் போது வெளியேறும் கொடுப்பனவு, முதுகலை பட்டப்படிப்பு கொடுப்பனவு மற்றும் தொழில்சார் கொடுப்பனவு.·. அரை-தொழில்முறை கொடுப்பனவு ஆகியவற்றில் மிக அதிகமான தொகையைப் பயன்படுத்த சபை தீர்மானித்திருந்தது. |
| (இ) வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட 2007 சனவரி 10 ஆந் திகதிய கொள்முதல் ஒப்பந்தத்தின் பிரிவு 6.1.3. | வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு சபையால் 220kv இல் வழங்கப்படும் மின்சாரத்திற்காக 220kv இல் மின்சாரம் வழங்குவதற்குப் பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஏதுமில்லை என்றால், அது மின்சாரக் கிரயத்தில் காணப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எரிசக்தி கட்டணம் மற்றும் பிற கட்டணங்களைக் கருத்தில் கொள்ளாமல் சபையால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட விலை வீதத்தைக் கணக்கிடுவதற்கு எரிசக்தி கட்டணத்தை மட்டுமே சபை கருத்திற்கொண்டிருந்தது. |
| (க) முகாமைத்துவ சேவைகள் திணைக் களத்தின் 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் தாபனக் கோவையின் அத்தியாயம் II இன் பிரிவு 9.1. | அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறாமல் ஓய்வுபெற்ற இரண்டு ஊழியர்கள் சபையின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்காக மீளாய்வாண்டிற்கான ஆலோசனைக் கட்டணமாக ரூபா 1.2 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. |
| (ப) 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்டத்தின் பகுதி ஏ இன் பிரிவு 17. | மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் நான்காம் காலாண்டுக்கான லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பனி லிமிடெட்டிற்கு மின்சாரம் வழங்குவதற்காக அறவிடப்பட்ட ரூபா 223.31 மில்லியன் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி (எஸ்.எஸ்.சி.எல்) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு 2023 ஏப்ரல் இறுதிவரையிலும் செலுத்தப்படவில்லை. |
| (எச்) 1998 மார்ச் 31 ஆம் தேதியிட்டு பிரதிப் பொது முகாமையாளர் (நுகர்வோர் சேவை) ஆல் வெளியிடப்பட்ட 1998-4 ஆம் இலக்க டிஜிஎம்(சிஎஸ்)/ சுற்றறிக்கை | துண்டிக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குள், சட்டப் பிரிவின் மூலம் நிலுவையில் உள்ள கடன் நிலுவைத் தொகையை வசூலிக்க சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வாறாயினும், தெரிவுக் கணக்காய்வுச் சரிபார்ப்பின்படி, கொழும்பு நகரப் பிராந்தியத்தைப் பொறுத்தமட்டில் மொத்தமாக ரூபா 272.15 மில்லியனாக நிலுவையில் உள்ள கடன் (இறுதிப்படுத்தப்பட்ட) மீதியை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. |
| (i) 1998 மார்ச் 08 தேதியிட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல. 130. | வாகன கடன்கள் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வட்டி விகிதத்தில் வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், சபையின் காசோட்ட சிரமங்களைக் கருத்தில் கொள்ளாமல் சபை அதன் ஊழியர்களுக்கு 4.2 சதவீத வட்டி விகிதத்தில் வாகனக் கடன்களை வழங்கியது. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து, சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்காத விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,

(அ) “இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள்” தொடர்பாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட 2007 அக்டோபர் 31 தேதியிட்ட 07/1955/332/045 இலக்க அமைச்சரவைப் பத்திரம் 31 மார்ச் 2008 தேதியிட்ட தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் அறிக்கையுடன் 2008 ஏப்ரல் 09 ஆம் தேதி அமைச்சரவையால் பரிசீலிக்கப்பட்டதுடன் 31 மார்ச்

2008 தேதியிட்ட அதன் அறிக்கையில் தேசிய சம்பளம் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழு வகுத்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(i) மேற்படி அமைச்சரவை தீர்மானத்திற்கு மாறாக, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் பட்டியலில் சேர்க்கப்படாத பொறியாளர் கொடுப்பனவு, ஊக்குவிப்பு கொடுப்பனவு, தற்காலிக கொடுப்பனவு, தகுதி அடிப்படையிலான ஊக்க கொடுப்பனவு, OH & S ஊக்க கொடுப்பனவு, பணியாளர் கொடுப்பனவு, பரிமாற்றம் மற்றும் மின்பிறப்பாக்க திட்டமிடல் கொடுப்பனவு, கணினி கட்டுப்பாட்டு கொடுப்பனவு, தமிழ் மொழி கொடுப்பனவு மற்றும் பிற கொடுப்பனவுகள் என்பன இ.மி.ச. இன் அந்தந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில், 2009 மே 26 இன் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 39 மற்றும் 2018 யூலை 18 ஆந் திகதிய 3.ⅰ.2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைளின் படி சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளாது மேற்படி கொடுப்பனவுகளாக ரூபா 427.65 மில்லியன் தொகை 2022 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்டுள்ளது.

iii. 136 அதிகாரிகளுக்கு 2022 யூன் மாதத்துக்கான கொடுப்பனவுகளாக மட்டும் ரூபா 3.65 மில்லியன் தொகை அவர்களின் சம்பளத்தில் 65 சதவீதத்திற்கும் அதிகமாக வழங்கப்பட்டுள்ளமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டதுடன் அது மேற்படி அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணானதாகும். மேலும், குறிப்பிட்ட பதவியினால் மேற்கொள்ளப்படும் கடமைகளுடன் தொடர்புடைய பல கொடுப்பனவுகள் மேற்படி அமைச்சரவை தீர்மானத்திற்கு மாறாக வழங்கப்படுகின்றன. அதன்படி, 2022 யூன் மாதத்திற்கு மட்டும் இந்த வகையான கொடுப்பனவுகளுக்காக மொத்தம் ரூபா 21.67 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

iv. ஏப்ரல் 01 க்குப் பிறகு பணியமர்த்தப்படும் ஊழியர்களுக்கு செயலாற்றலின் அடிப்படையிலான ஊக்கத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்குப் பதிலாக 25 எண்ணிக்கையிலான அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்படி அமைச்சரவை தீர்மானத்திற்கு மாறாக, 2008

(ஆ) உழைக்கும் போதே செலுத்தும் (PAYE) வரி / முற்பண தனிப்பட்ட வருமான வரி (APIT) பொறுப்பை ஊழியர்களுக்கு மாற்றுவதற்காக 2015 மே 20 இல் கூட்டு உடன்படிக்கையை கருத்தில் கொள்ளும் போதும் 2007 திசெம்பர் 13 இல் சம்பள மீளாய்வின் போதும் அமைச்சரவை தீர்மானங்களை எடுத்திருந்தது. எனினும் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானங்களுக்கும் 3/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கும் முரணாக 2010 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியின் போது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரியை / முற்பண தனிப்பட்ட வருமான வரியை கழிக்காமல் சபை அதன் சொந்த நிதியிலிருந்து ரூபா 4.98 பில்லியன் தொகையை அவ்வாறு செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் இறுதிக்குள் கூட அந்தந்த ஊழியர்களிடமிருந்து இந்தக் கொடுப்பனவு காரணமாக சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை மீளப்பெறுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(இ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய இலங்கை மின்சார சட்டத்தின் 24 (1) (இ) பிரிவின் படி, மின்சக்திக்கான நியாயமான முன்னறிவிப்பு தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் மின் உற்பத்தி நிலையங்களில் போதுமான இயலளவு காணப்படுவதை சபை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன்படி, 2018 - 2037 இன் குறைந்த செலவில் நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின்படி, 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் முறையே 500MW, 657MW, 430MW மற்றும் 445MW புதிய மின்பிறப்பாக்க செயற்திட்டங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டது. இருப்பினும், திட்டமிடப்பட்ட புதிய மேலதிக இயலளவான 2,032 மெகாவாட்களில், 661.6 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்கள் மட்டுமே இயக்கப்பட்டன. அத்துடன், அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட மின்சாரத் தொழில் தொடர்பான அரசாங்கக் கொள்கையின் அடிப்படையில் 2022 - 2041 க்கான குறைந்த விலை நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்டத்திற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு 2021 ஒக்தோபர் 05 அன்று நிபந்தனைக்குட்பட்ட ஒப்புதலை வழங்கியது. 2022 - 2041 இன் நிபந்தனையுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட குறைந்த செலவில் நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின்படி, 2022 ஆம் ஆண்டில் 544 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிறப்பாக்க இயலளவை செயல்படுத்த திட்டமிடப்பட்டது. இருப்பினும், 211 மெகாவாட் திறன் கொண்ட புதிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் நிலையங்கள் மட்டுமே இயக்கப்பட்டன. எனவே, புதிய பிறப்பாக்க திட்டத்தை செயல்படுத்துவதிலான முன்னேற்றம் கணிசமாகக் குறைந்திருந்ததுடன் குறைந்த செலவில் மின்சாரம் வழங்கும் திட்டங்களின் நோக்கத்தை அடைய முடியவில்லை. இதன் விளைவாக, மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் ரூபா 5.07 பில்லியன் மதிப்புள்ள 60.33 Gwh அளவு மேலதிக அனல் மின்சக்தியை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

2.2.4 பின்வருவனவற்றைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பேரவையின வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக காலஎல்லைக்குள் சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என.

(அ) 2018-2037 வரையான நீண்ட கால மின்பிறப்பாக்கத் திட்டத்தின் படி, சீதாவ கங்கை நீர் மின்வலு செயற்திட்டம் 2022 க்குள் தொடங்கப்படுதல் வேண்டும். இந்த செயற்திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 301.19 மில்லியன் கிரயம்

ஏற்பட்டிருந்தது. இருப்பினும், 2020 திசெம்பர் 20 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு சபை தீர்மானித்தது. மேலும், மேற்குறித்த செயற்திட்டத்தை ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஏப்ரல் 2023 இறுதிக்குள் கூட சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கூறிய திட்டத்திற்கான செலவினம் சிக்கனமற்றதாக மாறியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

(ஆ) சரியான நேரத்தில் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால் முறையே மின்சாரம் கொள்முதல் மற்றும் எரிபொருள் கொள்முதல் (CPC) மீதான தாமத வட்டியாக மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் ரூபா 6.55 பில்லியன் மற்றும் ரூபா 8.92 பில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், உள்நாட்டு வங்கிக் கடன்கள் தொடர்பாக சபையால் கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால் ரூபா 11.17 மில்லியனுக்குச் சமமான தொகையும் இயல்புநிலை வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய மின்சார சட்டத்தின் படி, 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் மரபுசாராத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (என்சிஆர்இ) செயற்திட்டங்களின் கொள்வனவுகளிற்காக கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும், அதைப் பொருட்படுத்தாமல், கழிவுகளிலிருந்து எரிசக்தி தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ஒரு கிலேவொட்சுக்கு ரூபா 36.20 வீதத்தில் (20 ஆண்டுகளுக்கு சமவிகித கட்டணம்) ஐந்து மாநகரசபைகளின் திடக்கழிவு மின்வலு ஆலைகளை செயலப்படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அமைச்சரவை ஒப்புதல் அளித்தபடி, கிலோவாட் ஒன்றுக்கான கட்டணமான ரூபா 36.20 இல் ஒரு kWh-க்கு ரூபா 13.10 வீத கட்டணம் பொது திறைசேரியினால் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். அதன்படி, ஒரு திடக்கழிவு ஆலைக்கான மின் கொள்முதல் ஒப்பந்தம் 2020 டிசம்பரில் ஒரு சுயாதீன மின் உற்பத்தியாளருடன் கையெழுத்திடப்பட்டது, எனவே மொத்த கட்டணமாக முறா ஒன்றுக்கு ரூபா 36.20 எரிசக்தி கொள்வனவுக் கிரயம் சபையால் ஏற்கப்பட்டது. ஆனால், ஒரு முறாக்கு ரூபா 13.10 தொகை பொது திறைசேரியால் திருப்பிச் செலுத்தப்படவில்லை. எனவே, 31 டிசம்பர் 2022 நிலவரப்படி, பொது திறைசேரியிலிருந்து பெற வேண்டிய மொத்த மதிப்பு ரூபா 1.85 பில்லியனாக இருந்தது.

(ஈ) மேலே குறிப்பிட்டுள்ளபடி, 390 மெகாவாட் மொத்த திறன் கொண்ட என்சிஆர்இ திட்டங்களுக்கான 7 கொள்முதல் மட்டுமே 2021 டிசம்பர் 31 வரை தொடங்கப்பட்டிருந்தது. இருப்பினும், மேற்கூறிய மின் உற்பத்தி நிலையங்களில், 81 மெகாவாட் மொத்த திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்கள் மட்டுமே 31 டிசம்பர் 2022 வரை இயக்கப்பட்டிருந்தன.

(உ) உத்தேச தலைமையக கட்டிட வளாகத்தின் பைலிங் பணிகளுக்கான ஒப்பந்தம் 22 அக்டோபர் 2012 அன்று ஒப்பந்தத் தொகையான ரூபா 304.6 மில்லியன் தொகைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. தலைமையக கட்டிட வளாகத்தின் கட்டுமானம் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான ஒப்பந்தம் 02 ஆகஸ்ட் 2021 அன்று ஒப்பந்தத் தொகையான ரூபா 4,774.6 மில்லியன் (VAT தவிர்த்து) வழங்கப்பட்டதுடன் தொடக்க தேதி 2021 ஆகஸ்ட் 16 ஆகும். கட்டுமான வேலைகள் (தொடக்க தேதியிலிருந்து 730 காலண்டர் நாட்களில் இருந்து) 2023 ஆகஸ்ட் 15 அன்று நிறைவடையும். முன்மொழியப்பட்ட தலைமையக கட்டிட வளாகத்தின் ஆரம்ப மதிப்பீடு 2011 இல் ரூபா 1,000 மில்லியனாக காணப்பட்டதுடன், இரண்டு ஒப்பந்தங்களுக்கிடையில் உள்ள முக்கிய நேர இடைவெளி காரணமாக 02 ஆகஸ்ட் 2021 இல் அத்தொகை ரூபா 5,079.2 மில்லியனாக (இரண்டு ஒப்பந்தங்களின் மொத்த ஒப்பந்தத் தொகை) அதிகரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியில், நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 1.19 பில்லியன் செலவழிக்கப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாணத்தின் பௌதீக முன்னேற்றம் 12.7 வீதமாகவே காணப்பட்டது. நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல், புதிய கட்டிடத்தை 2023 இல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ள போதிலும், 2017 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தற்போதைய தலைமைக் காரியாலயக் கட்டிடத்தைப் புனரமைப்பதற்காக ரூபா 319.19 மில்லியன் செலவழிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) மீளாய்வாண்டில் மூன்று ஓய்வுபெற்ற IPP மின்வலு உற்பத்தி நிலையங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மின்வலு அலகு ஒன்றுக்கான கிரயங்கள் முறையே (kWh அலகொன்றுக்கு) முறையே ரூபா 63.51, ரூபா 78.20 மற்றும் ரூபா 122.50 ஆகக் காணப்பட்டதுடன், சராசரி விற்பனை விலை ரூபா 33.65 ஆகும். எனவே, அதிக செலவில் அவசர மின்வலு நிலையங்களை பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக, நிகழ்நேரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், குறைந்த கிரயத்திலமைந்த நீண்ட கால மின்வலு உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின்படி மின்வலு உற்பத்தி ந ிலையங்களை இயக்கிச்செல்ல முடிந்திருந்தால், எரிசக்தி கொள்வனவுக்கான இந்த அதிகப்படியான செலவைக் குறைத்திருக்கலாம்.

(எ) மரபுசாரா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (என்சிஆர்இ) திட்டங்களுக்கு (குறிப்பாக மினி ஹைட்ரோ ஆலைகளுக்கு) 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் தவிர்க்கப்பட்ட கிரய அடிப்படையிலான கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தகைய கட்டணமானது 2007 ஆம் ஆண்டுக்கு முன் அங்கீகரிக்கப்பட்ட என்சிஆர்இ திட்டங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதுடன் தற்போது அதுபோன்ற 28 செயற்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தவிர்க்கப்பட்ட கிரய முறையானது வெப்ப ஆலை அனுப்புதலை அடிப்படையாகக் கொண்டதுடன் அது எரிபொருள் செலவில் இருந்து வேறுபட்டது. 2020 ஜனவரி 16 தேதியிட்ட DGM/SYC/TCH/41 ழக னுபுஆ (கணினி கட்டுப்பாடு) கடிதத்தின்படி, நீர்மின் ஆலைகளின் உண்மையான அலகு விலை புதிய ஆலைகள் உட்பட ரூ. 10.00 க்கும் குறைவாக இருந்திருக்க வேண்டும். இருப்பினும், 2022 ஆம் ஆண்டிற்கான சிறியரக நீர்மின் ஆலைகளுக்கான தவிர்க்கப்பட்ட கிரய முறையில் நிர்ணயிக்கப்பட்ட விலை மழைக்காலத்திற்கு ரூபா 18.19 ஆகவும் வறண்ட பருவத்திற்கு ரூபா 18.67 ஆகவும் காணப்பட்டன. மேலும், 2022 யூன் இற்கு PUCSL இனால் வெளியிட்ட ஆலை வாரியான கிரயங்களின் படி, சபையின் ஒரு அலகுக்கான நீர்மின் கிரயம் ரூபா 4.85 ஆகும்.

எவ்வாறாயினும், 2022 ஆகஸ்ட் 16 அன்று சபையின் தீர்மானமும் அதே விதத்தில் வழங்கப்பட்டிருந்த போதிலும், மதிப்பாய்வின் ஆண்டின் இறுதியில் கூட சிறியரக நீர்மின் ஆலைகளுக்காக தவிர்க்கப்பட்ட கிரய முறையை அடிப்படையாகக் கொண்ட நியாயமான உச்சவரம்பு விலையைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) லக்ஷபான நீர்மின் நிலையத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட டர்பைன்களைப் பயன்படுத்தி களனிதிஸ்ஸ மின் நிலையத்தில் நினைவுச்சின்னம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமானது அதன் கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 04 வருட கால தாமதத்திற்குப் பின்னர் 2017 இல் வழங்கப்பட்டது. ஒப்பந்தம் ரூபா 25.12 மில்லியனுக்கு வழங்கப்பட்டதுடன் 180 நாட்கள் ஒப்பந்த காலத்துடன் 2018 சனவரி 05 அன்று முடிக்க திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு முடிவதற்குள் கூட நிர்மாண நடவடிக்கைகளை நிறைவு செய்யத் தவறியிருந்ததுடன், அன்றைய நிலவரப்படி நிர்மாண நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் 43 வீதமாகவே காணப்பட்டது. மேலும், ஒப்பந்ததாரருக்கு எந்த நேரத்திலும் நீட்டிப்புகள் வழங்கப்படவில்லை என்பதும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதி வரையில் ரூபா 19.65 மில்லியன் (ஆலோசனைக் கட்டணம் உட்பட) செலுத்திய பிறகும் 1746 நாட்கள் தாமதம் காணப்பட்டது. அதுமட்டுமின்றி, கணக்காய்வு மூலம் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது, பூர்த்தி செய்யப்படாத நினைவுச்சின்னம் அமைந்துள்ள வளாகம் களைகள் மண்டி கிடப்பதையும், கட்டுமான பணிகள் கைவிடப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது. இதன்படி, நிர்மாணத்தின்நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற சபை தவறியிருந்ததுடன், செலவழிக்கப்பட்ட பணமும் சிக்கனமற்றதாகியிருந்தது.

(ஐ) சபையிடம் இருந்து பெறப்பட்ட தகவலின்படி, சபைக்குச் சொந்தமான ஏழு வாகனங்கள் மதிப்பாய்வின் ஆண்டின் இறுதியில் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது. எவ்வாறாயினும், அமைச்சிலிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வு ஆண்டின் இறுதியில் ஒரு வாகனம் மட்டுமே அமைச்சினால் பயன்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஒ) களனிதிஸ்ஸ மின் நிலையத்தில் நான்கு V எரிவாயு விசையாழி ஜெனரேட்டர்களை புனரமைத்தல் வேலைகள் 2017 யூலை 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆகஸ்ட் 11 ஆம் திகதி நிறைவு செய்ய திட்டமிடப்பட்டது. எனினும், தொடங்கிய நாளிலிருந்து 5 ஆண்டுகளும் 5 மாதங்களும் கடந்த பின்னரும் மீளாய்வு ஆண்டின் இறுதியில் 3 மின் உற்பத்தி இயந்திரங்கள் மட்டுமே புனரமைக்கப்பட்டுள்ளன. ஆயினும்கூட, ஆண்டு இறுதியில் அனைத்து விசையாழிகளுக்கும் ரூபா 752.22 மில்லியன் செலவழித்த பின்னரும், புனரமைக்கப்பட்ட 3 ஜெனரேட்டர்களில் ஒரே ஒரு எரிவாயு விசையாழி மட்டுமே செயல்பாட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டது.

(ஓ) மூன்று வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களைப் பொறுத்தமட்டில், திட்டமிடப்பட்ட நிறைவு தேதியிலிருந்து 2022 டிசம்பர் 31 வரை 14 மாதங்கள் முதல் 39 மாதங்கள் வரை கணிசமான காலதாமதம் காணப்பட்டது. ஒப்பந்தக்காரர்களிற்கு முதலாவது காலநீடிப்பு வழங்கப்பட்ட பின்னரும் கூட செயற்திட்ட வேலைகள் பூரணப்படுத்தப்படாதுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஔ) பிராந்திய பொறியியலாளர் அலுவலகம், பாவனையாளர் சேவை நிலையங்கள் மற்றும் உபமின் நிலையங்களை நிர்மாணிப்பதற்கான செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக 2000 ஆம் ஆண்டில் ரூபா 188.38 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 18 காணிகள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் 01 ஆண்டு முதல் 22 ஆண்டு காலமாக குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. அவற்றில் ரூபா 86.52 பெறுமதியுடைய 8 காணிகள் விநியோகப் பிரிவுகளினதும் செயற்திட்ட பிரிவுகளினதும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தன. மேலும், 5 ஆண்டுகளிற்கு முன்னரே வா்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்த போதிலும் பின்வரும் செயற்திட்டங்களிற்காக கையேற்கப்பட்ட காணிகளின் கையேற்றல் செயற்பாடுகளை பூரணப்படுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்காமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

(ஃ) காணிகளிற்கான தீர்வுகள் கிடைத்த திகதியிலிருந்து (2018 மே 31) இரத்தினபுரியிலுள்ள சிறிபாகான கார்னே தோட்டக் காணியில் கோபுரங்கள் மற்றும் கேபில்களை அமைப்பதற்கான காணித் தீர்வையக கோரிக்கையை மேற்கொள்வதற்கு 1,898 நாட்கள் அல்லது 5 ஆண்டுகளும் இரண்டு மாதங்களும் (2023 ஆகஸ்ட் 11) தாமதிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன்காரணமாக, இலங்கையின் தென் மாகாணத்திற்கு நம்பகரமாக மின்சாரம் வழங்கப்படுவதற்கான 220 kV இயலளவுடைய 150 கி.மீ. மின்கம்ப பொல்பிடிய-அம்பாந்தோட்டை சிக்கலான உட்கட்டமைப்பு வேலைகள் குறிப்பிடத்தக்க காலம் தாமதடைந்திருந்ததுடன் இந்தத் தாமதமானது மின்வலு வழங்கலின் பற்றாக்குறைத் தன்மைக்கு வழிவகுத்திருந்தது. மேலும், இந்தச் சிக்கலை 2016 சனவரி 25 ஆந் திகதிய PUCSL இன் விதிகளிலுள்ள ஏற்பாடுகளின் படி முன்கூட்டியே சபையின் முகாமைத்துவத்தினால் PUCSL இன் கவனத்திற்கு கொண்டு வந்திருப்பின், இலங்கையின் தென் மாகாணத்திற்கு நம்பகரமாக மின்சாரம் வழங்கப்படுவதற்கான சிக்கலான உட்கட்டமைப்பு வேலைகளை தாமதமின்றி பூரணப்படுத்த முடிந்திருக்கும் என்பதுடன் இதனால் ஆர்வமுடைய தரப்பினர்களிற்கு ஏற்பட்டிருந்த பிரதிகூலங்களை இயன்றளவு குறைத்திருக்கவும் முடிந்திருக்கும். அத்துடன், காணிகளின் உரிமையாளர்கள் இழப்பீடு எதுவும் இன்றி காணிகளை வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்திருந்த போதிலும், காணி உரிமையாளர்களிற்கு இழப்பீடுகளைச் செலுத்துவதற்காக இரத்தினபுரி பிரதேச செயலகத்திலும் மாவட்டச் செயலகத்திலும் வைப்புச் செய்யப்பட்டிருந்த முறையே ரூபா 1.7 மில்லியன் மற்றும் 7.9 மில்லியன் தொகைகள் 2023 ஒக்தோபர் இறுதிவரை மீளப்பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.3 ஏனைய அவதானிப்புகள்

(அ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 46.41 மில்லியன் வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்புடைய ரூபா 4,003 மில்லியன் மீதி ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அதிலுள்ள ரூபா 2,210 மில்லியன் தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்கூறிய மொத்த கடன்பட்டோர் மீதியில், ரூபா 2.4 பில்லியன் அல்லது 4.9 சதவீதம் நீண்ட காலமாக நிலுவையாக இருப்பதுடன் அத்தொகையை மீளப்பெறாததன் காரணமாக இறுதி செய்யப்பட்டதாக வகைப் படுத்தப்பட்டுள்ளது. இதில் ரூபா 984 மில்லியன் அல்லது 43 சதவீதம் விநியோகப் பிரிவு 01 உடன் தொடர்புடையதாகும்.

(ii) DD 01 இலுள்ள இறுதி செய்யப்பட்ட சாதாரண விநியோகக் கடன்பட்டோர் மீதியிலுள்ள ரூபா 872.39 மில்லியனில், அதிகபட்சமாக ரூபா 230.58 மில்லியன் கொழும்பு நகரப் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் அந்த மீதியில் 13,710 நுகர்வோர் கணக்குகள் தொடர்பான ரூபா 41.58 மில்லியன் கடனாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. சபையின் DCC/COM/03/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அடிப்படையில் தீர்வு காண எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இந்த மீதி வைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, மொத்தக் கடன்பட்டோரிலுள்ள (இறுதிப்படுத்தப்பட்ட) 216 நுகர்வோர் கணக்குகளுடன் தொடர்புடைய ரூபா 13.15 மில்லியன் கடன் நிலுவைகளையும் தீர்ப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அப்படியே வைக்கப்பட்டுள்ளன.

(iii) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் படி, இறுதி செய்யப்பட்ட மொத்த விநியோக இணைப்புகளான 413 இல், 137 நுகர்வோருக்கு எந்தவித வைப்புத்தொகையும் பெறாமல் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்தக் கணக்குகளின் மொத்த நிலுவைத் தொகை ரூபா 266.84 மில்லியன் ஆகும். மேலும், இறுதி செய்யப்பட்ட 413 மொத்த விநியோக இணைப்புகளில், 147 நுகர்வோரின் மொத்த நிலுவைத் தொகையான ரூபா 203.15 மில்லியன் அந்தக் கணக்குகளின் மொத்த வைப்புத் தொகையினை விஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

iv. மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின்படி, நாடாளுமன்ற பிரதிநிதிகளின் உத்தியோகபூர்வ விடுதிகளுக்கு வழங்கப்பட்ட 74 மின் இணைப்புகளிற்காக ரூபா 16.32 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதியில் மீளப் பெறப்படாமல் இருப்பது அவதானிக்கப்பட்டது. அதில் 29 இணைப்புகள் தொடர்பான ரூபா 5.31 மில்லியன் ஆறு ஆண்டுகளாக மீளப்பெறாமல் நிலுவையில் உள்ளதுடன் 30 இணைப்புகள் தொடர்பான ரூபா 3.13 மில்லியன் ஒரு வருடத்திற்கும் மேலாக மீட்கப்படாமல் நிலுவையில் உள்ளது

(ஆ) ஏனைய கடன்பட்டோரான ரூபா 38.38 பில்லியனில், ரூ.14.59 பில்லியன் அல்லது 38 சதவீதம் மதிப்பாய்வின் ஆண்டின் இறுதியில் 2 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

i. ஏனைய கடன்பட்டோர் நிலுவைத் தொகையில், விநியோக பிரிவு 04 தொடர்பாக அரசு நிறுவனங்களில் இருந்து ரூபா 12.67 மில்லியனுக்கு சமமான தொகை 5 ஆண்டுகளுக்கும் மேலாக மீட்கப்படாமல் நிலுவையில் இருந்தது.

ii 31 டிசம்பர் 2022 நிலவரப்படி சொத்து முகாமைத்துவப் பிரிவின் பாரந்தூக்கி, காற்றுச் சீராக்கி மற்றும் மின்வலு பிறப்பாக்கிகளை வழங்கியமைக்காக 93 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 346.95 மில்லியன் தொகையொன்று நிலுவையில் உள்ளதுடன் அதில் ரூபா 114.04 மில்லியன் மற்றும் ரூபா 82.84 மில்லியன் தொகை முறையே ஒரு வருடத்திற்கும் ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாது வைக்கப்பட்டுள்ளது. மேலும், ஏனையவற்றின் மீளப்பெறக்கூடிய சாத்தியத்தை மதிப்பிடாமல், ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள நிலுவைத் தொகைக்கு மட்டுமே பெறுமதி குறைபாடுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

iii டவுரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனி (ரூ. 478.18 மில்லியன்) மற்றும் லிபர்ட்டி கமாடிடீஸ் லிமிடெட் (ரூ. 236.78 மில்லியன்) இன் ஊடாக லங்கா நிலக்கரி நிறுவனத்திடம் இருந்து பெறவேண்டிய ரூபா 714.96 மில்லியன் பணத்தை மீட்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாமல் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது

iv. பரிசீலனைக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் மின்சாரம் வழங்கியமைக்காக புனித ஸ்தலங்களிலிருந்து ரூபா 253.7 மில்லியன் நிலுவையில் உள்ளதுடன் அதில் ரூபா 81.58 மில்லியன் தொகை ஐந்தாண்டுகளுக்கு மேலாக அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நிலுவையில் உள்ளது.

(இ) ரூபா 26.67 பில்லியன் தொகையான செலுத்த வேண்டிய கேள்விப்பண வைப்புக்கள், பாதுகாப்பு வைப்புகள் மற்றும் ஏனைய வைப்புத்தொகைகளிலுள்ள ரூபா 2.79 பில்லியன் தொகையானது 5 ஆண்டுகளுக்கும் மேலாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நிலுவையில் உள்ளது. மேலும் 5 ஆண்டுகளுக்கும் மேலான தொகையிலுள்ள ரூபா 1,312.94 மில்லியன் மற்றும் ரூபா 2.57 மில்லியன் அல்லது 47 சதவீதமானவை முறையே விநியோக பிரிவு 01 மற்றும் தலைமையகத்தில் மூலதன வேலைகளுக்காக பெறப்பட்ட நுகர்வோர் வைப்புத்தொகையை குறிக்கிறது. இருப்பினும், அந்தந்த மூலதன வேலைகள் முடிக்கப்பட்டதா இல்லையா என்பதைக் கண்டறிய எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை.

(உ) 2013/14 மதிப்பீட்டின் ஆண்டிற்கான ரூபா 1.27 பில்லியன் மீட்கப்பட்ட பங்கிலாப வரி தொகை மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதி வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்படவில்லை.

(ஊ) ரூபா 230.63 மில்லியன் (2,161.98 மெட்ரிக் டன்) நிலக்கரி இருப்பு பற்றாக்குறையானது 2022 திசெம்பர் 31 இல் வருமான அறிக்கைக்கு சாட்டப்பட்டிருந்தது. நிலக்கரி இருப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலகட்டத்தில் பெய்த கனமழை காரணமாகவும், நிலக்கரி முற்றத்தில் நீர் அளவு கணிசமாக அதிகமாக இருந்தமையாலும் சராசரி நிலக்கரி அடர்த்தியில் சிறிது அதிகரிப்பு ஏற்பட்டமையால் 19 நவம்பர் 2022 அன்று மேற்கொள்ளப்பட்ட நிலக்கரி இருப்பு ஆய்வின்படி, 1,046.32 மெட்ரிக் டன் நிலக்கரி கையிருப்பு அதிகமாக இருந்தது. எனவே, இந்த ஆண்டின் சராசரி நிலக்கரி அடர்த்திக்குப் பதிலாக கடந்த ஆண்டின் சராசரி நிலக்கரி அடர்த்தியைப் பயன்படுத்தி நிலக்கரி இருப்பைக் கணக்கிட கணக்கெடுப்புக் குழு முடிவு செய்திருந்தது. அதன்படி, 31 டிசம்பர் 2022 இல் நிலக்கரி கையிருப்பின் பற்றாக்குறை 2,161.98 மெட்ரிக் தொன்களாக இருந்தது. இருப்பினும், ஒரு பெரிய அளவிலான நிலக்கரியை சரிபார்க்க குழிகளில் இருந்து தோண்டியெடுக்கப்பட்ட சுமார் 35 கிலோ நிலக்கரியின் ஒரு கன மீட்டருக்கான சராசரி நிலக்கரி அடர்த்தி மட்டுமே அளவிடப்பட்டதால், கடந்த ஆண்டு சராசரி நிலக்கரி அடர்த்தியின் சரியான தன்மையை மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

(எ) சபையின் பதிவேடுகளின்படி, பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்திட்டம் (கூறு 01) மற்றும் பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்திட்டம் (கூறு 02) ஆகியவற்றுக்கு விடுவிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூபா 6,253.39 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் பதிவுகளின்படி, அது ரூபா 4,488.06 மில்லியனாகக் காட்டப்பட்டுள்ளது. எனவே, ரூபா 1,765.33 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது.

(ஏ) 01 பிப்ரவரி 2023 தேதியிட்ட 3/0154/504/014 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மற்றும் 17 பிப்ரவரி 2023 தேதியிட்ட பொது முயற்சிகள் திணைக்களத்தின். PED/1/CEB/02/11(i) கடிதத்தின்படி, ஏழு செயற்திட்டங்களின் ரூபா 60.97 பில்லியன் கடனுதவிதகள் அரசாங்க பங்கு மூலதனத்திற்கு மாற்றப்பட வேண்டியிருந்தது. மேற்கூறிய கடன்களில், ஹபரன வெயாங்கொட டிரான்ஸ்மிஷன் லைன் திட்டம் தொடர்பான 31 டிசம்பர் 2022 இல் காணப்பட்ட ரூபா 13,736.28 மில்லியன் கடன் வழங்கல்கள் திறைசேரியால் பங்கு மூலதனத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், சபையின் பதிவுகளின்படி, ரூபா 13,729.29 மில்லியன் மட்டுமே அரசாங்க பங்கு மூலதனத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே, ரூபா 6.99 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது.

(ஐ) சபை லெகோ இற்கு மின்சாரத்தை விற்று, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து பல வருடங்களாக எரிபொருளை கொள்வனவு செய்த போதிலும், இவ்விரு நிறுவனங்களுக்கிடையில் சுமூகமான செயற்பாடுகளை உறுதி செய்வதற்காக அந்த இரு தரப்பினருடனும் விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஒ) உதுருவசந்தய திட்டத்தின் கீழ் 2014 இல் அடையாளம் காணப்பட்ட ரூபா 37.27 மில்லியன் இருப்பு பற்றாக்குறை தொடர்பில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒரு புலனாய்வை மேற்கொண்டது. பின்னர் மேற்கொண்ட இந்த சிறப்பு விசாரணையின்படி, பற்றாக்குறை 46.33 மில்லியன் என்று தெரியவந்துள்ளதுடன் அத்தொகை அதனுடன் சம்பந்தப்பட்ட களஞ்சியக் காப்பாளரிடமிருந்து பெறவேண்டியதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அந்தத் தொகையில் ரூபா 8.29 மில்லியன் 2019 முதல் 2020 வரையிலான காலப்பகுதியில் பணிப்பாளர் சபையின் அனுமதி பெறாமல் துணைப் பொது முகாமையாளர் (வடக்கு) மற்றும் மேலதிக பொது முகாமையாளர் ஆகியோரின் ஒப்புதலின் பேரில் மாத்திரம் பதிவழிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து ஆண்டு இறுதியில் கூட ரூபா 46.33 மில்லியன் இருப்புப் பற்றாக்குறையை வசூலிக்க சபை தவறியிருந்தது.

(ஓ) சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட விசாரணையின்படி, 2020 ஆம் ஆண்டு ஹெய்யந்துடுவ களஞ்சியசாலையில் இருப்புக் கணக்கெடுப்பின் போது ரூபா 12.65 மில்லியன் இருப்புப் பற்றாக்குறை அடையாளம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் களஞ்சியக் காப்பாளரும் வேறு இரண்டு மின்சார அத்தியட்சகர்களும் முறையே ரூபா 6.47 மில்லியன் மற்றும் ரூபா 2.49 மில்லியன் தொகைக்கு பொறுப்புடையவர்கள் ஆவர். எவ்வாறாயினும், 2023 பெப்ரவரி மாத இறுதியில் முறையான விசாரணையை மேற்கொண்டு அவர்களிடமிருந்து நட்டத்தை மீட்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ஔ) 20 நவம்பர் 2006 முதல் 20 பிப்ரவரி 2012 வரையிலான காலகட்டத்தில், சொத்து முகாமைத்துவப் பிரிவில் (மின் நிலையம்) இடம்பெற்றிருந்த ரூபா 3.67 மில்லியன் இருப்புப் பற்றாக்குறை தொடர்பில் முறையான விசாரணை முடிந்த பிறகும் அதற்குப் பொறுப்பான நபருக்கு எதிராக ஆண்டு இறுதி வரை கூட சபையால் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஃ) இருப்புப் பற்றாக்குறையுடன் சம்பந்தப்பட்ட விசாரணைக்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி, சொத்து முகாமைத்துவப் பிரிவில் ரூபா 3.79 மில்லியன் இருப்புப் பற்றாக்குறைக்கு பொறுப்பான அதிகாரியிடமிருந்து இந்த இழப்பை வசூலிக்காமல் 15 அக்டோபர் 2011 அன்று ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டிருந்தார். மேலும், 12 செப்டம்பர் 2022 அன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில், பற்றாக்குறை ரூபா 2,537,695 ஆக இருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, அவரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய நிதியிலிருந்து வசூலிக்க சபையின் பதிற்கடமை பொது முகாமையாளர் அறிவுறுத்தப்பட்டார். எவ்வாறாயினும், பொறுப்புவாய்ந்த அலுவலரிடம் இருந்து அதனை மீளப்பெறுவதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாமல், கணக்குப் புத்தகங்களில் இத்தொகை மதிப்பாய்வில் ஆண்டில் தீர்க்கப்படாமல் இருப்பது அவதானிக்கப்பட்டது.

(க) துணைப் பொது முகாமையாளர் (மேற்கு வடக்கு மாகாணம்) இன் கீழுள்ள தலைமைப் பொறியாளர் (வணிகம்) பிராந்தியத்திலுள்ள களஞ்சியத்தில் 2014 செப்டம்பரில் அடையாளம் காணப்பட்ட ரூ.1.15 மில்லியன் இருப்பு பற்றாக்குறைக்கு காரணமான களஞ்சியக் காப்பாளர் சம்பந்தமாக நடத்தப்பட்ட முறையான விசாரணை மதிப்பாய்வின் ஆண்டு இறுதி வரையிலும் முடிக்கப்படவில்லை என்பதைக் காண முடிந்தது.

(கா) விநியோகம் 02 மற்றும் 03 தொடர்பான இருப்புப் பற்றாக்குறைக்கான இருப்புச் சீராக்கல் கணக்கிற்கு வசூலிக்கப்பட்ட முறையே ரூபா 14.98 மில்லியன் மற்றும் ரூபா 60.44 மில்லியன் தொகைகள் குறித்து விசாரணை செய்து தீர்வு காண எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் 2004 முதல் கணக்குப் புத்தகங்களில் வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இந்த இருப்புப் பற்றாக்குறை தொடர்பான விவரங்கள் கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை.

(கி) 31 டிசம்பர் 2022 நிலவரப்படி பிறப்பாக்கப் பிரிவில் ரூபா 22.42 மில்லியன் தொகையான முடிவுறா மூலதனப் பணிகள் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக அசையாது காணப்பட்டு வருகின்றன.

(கீ) 31 டிசம்பர் 2022 நிலவரப்படி, நிதிநிலை அறிக்கைகளிலுள்ள ரூபா 32.54 பில்லியன் தொகையான மொத்த நுகர்வுப் பொருள்களில் 6.5 சதவீதத்தைக் குறிக்கின்ற ரூபா 2.12 பில்லியன் பெறுமதியானவை மெதுவாக நகரும், நகராத மற்றும் சேதமடைந்த இருப்புகளாக காட்டப்பட்டதுடன் இது இருப்புச் சேதங்களுக்கும், வைத்திருக்கும் செலவு அதிகரிப்பதற்கும் மற்றும் மோசடிகளுக்கான வாய்ப்பை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும். மேலும், 2019 முதல் 2022 வரை பல சந்தர்ப்பங்களில், ரூபா 217.7 மில்லியன் மதிப்பிலான சேதமடைந்த மற்றும் வழக்கற்றுப் போன இருப்புக்களை அகற்றுவதற்காக சபையின் அனுமதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், நான்கு விநியோக பிரிவுகளிலும் சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவிலும் அவை தொடர்ந்தும் காணப்பட்டமை தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்க முடிந்ததுடன் மீளாய்வாண்டு முடிந்தும் கூட அவற்றை அப்புறப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

(கு) சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட விசாரணையின் பிரகாரம், 09 ஜூன் 2022 அன்று சபையின் தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கைகளின் காரணமாக ரன்தெனிகல மற்றும் ரன்தம்பே நீர்த்தேக்கங்கள் மூலம் வெளியிடப்பட்ட நீரைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய முறையே 160,000 Kwh மற்றும் 35,000 Kwh மின்சார அலகுகளை சபை இழந்துள்ளமை தெரியவந்துள்ளது. எனவே, அன்றைய தினம் தனியார் மின் கொள்முதல்களுக்காக சபை ரூபா 262.6 மில்லியன் மேலதிக செலவை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 08 டிசம்பர் 2022 அன்று எடுக்கப்பட்ட சபைத் தீர்மானத்தின்படி முறையான விசாரணையை மேற்கொண்டு 2023 பெப்ரவரி மாத இறுதியில் கூட பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து இழப்பை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(கூ) ரூபா 3.15 பில்லியன் வியாபார செலுத்த வேண்டிய நிலுவை தொகையானது 3 ஆண்டுகளுக்கும் மேலாக கணக்குப் புத்தகங்களில் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் இறுதியில் கூட தீர்க்க நடவடிக்கை எடுக்காமல் இருந்தது. மேலே உள்ள தொகையில் ரூபா 2.9 பில்லியன் நொர்தர்ன் பவர் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் என்ற அனல் மின்சார வழங்குனருக்கு 4 ஆண்டுகளுக்கு முன்னர் விநியோகப் பிரிவு தொடர்பாக செலுத்தப்பட்டதாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து சட்டமா அதிபரிடமிருந்து பெறப்பட்ட விளக்கங்களின்படி, இந்த விலைப்பட்டியல்களைத் தீர்ப்பதற்கான பொறுப்பு சபைக்கு இல்லை என்று தீர்மானிக்கப்பட்டது. இருந்தபோதிலும், மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தின் இறுதி வரையிலும் இந்த செலுத்த வேண்டிய மீதியில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(கெ) மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியிலுள்ள இடர் மற்றும் போக்குவரத்துக் கடன் மீதி ரூபா 10.36 பில்லியன் தொகையில் ரூபா 446 மில்லியன் என்பது தலைமையகப் பிரிவின் நிலுவையில் உள்ள கடன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் இதில் ரூபா 41.88 மில்லியன் கடன் நிலுவைத் தொகை 4 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது. ஆயினும்கூட, சம்பந்தப்பட்ட ஊழியர்கள் ஏற்கனவே இராஜினாமா செய்து 2 ஆண்டுகளுக்கும் மேலாக ஊதிய விடுப்பு பெறாததால், ரூபா 2.32 மில்லியன் கடன்களை வசூலிப்பது சந்தேகத்திற்குரியதாகக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(கே) 3 வருடங்களுக்கு முன்னர் கணக்குப் புத்தகங்களில் காணப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் நிலுவைத் தொகையான ரூபா 30.95 மில்லியனை விசாரித்து தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எவ்வாறாயினும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி வருடாந்த அறிக்கையின்படி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ஏதும் சபையால் செலுத்தப்பட வேண்டியதில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(கொ) ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் இடமிருந்து சபையால் மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பில் 2023 சனவரி 20 அன்று வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கையில் பின்வரும் அவதானிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன.

i. ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் இடமிருந்து 10 வருட காலத்திற்கு மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்காக 09 மே 2003 அன்று அக்கம்பனியுடன் சபை ஒப்பந்தம் செய்து கொண்டது. ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் காலம் 06 ஏப்ரல் 2005 முதல் 06 ஏப்ரல் 2015 வரை நடைமுறையில் இருந்ததுடன் 06 ஏப்ரல் 2015 அன்று ஒப்பந்தம் முடிவடைந்த பின்னர், 23 மார்ச் 2016 அன்று அமைச்சரவையால் (அமைச்சரவை) மேற்படி ஆலையை சபைக்கு கொள்வனவு செய்வதற்கான அதிகாரத்தை பரிசீலிக்க முடிவு செய்யப்பட்டது. சபையின் கோரிக்கையை அடுத்து, அரசு மதிப்பீட்டாளர் இந்த மின் நிலையத்தின் மதிப்பை ரூபா 2,370 மில்லியன் என மதிப்பீடு செய்திருந்தார். மொத்த இலாபமான 55 சதவீதத்திலிருந்து 66.9 சதவீத இயலளவு மதிப்பையும் ஏனைய

செயற்பாட்டுச் செலவையும் மாற்றுவதன் மூலம் அந்த மதிப்பை மதிப்பிடும்போது கணக்காய்வில் இந்த ஆலையின் மதிப்பு சுமார் ரூபா 4,176 மில்லியன் என மதிப்பிடப்பட்டது. எனவே, ஆலையின் மதிப்பான ரூபா 2,370 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 1,806 மில்லியனால் தேய்மானம் அடைந்துள்ளதை அவதானிக்க முடிந்தது. மறுபுறம், 10 வருட ஆரம்ப ஒப்பந்த காலத்தின் அடிப்படையில் கணக்கிற்கு கொண்டுவரப்பட்ட தேறிய இலாபத்தின் சராசரியை 9.5 சதவீத கழிவீட்டுக் காரணியில் கழிவீடு செய்து மதிப்பிடுகையில் எதிர்வரும் 8 ஆண்டுகளில் மின் உற்பத்தி நிலையத்தின் மதிப்பு கிட்டத்தட்ட ரூபா 4,192 மில்லியன் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் மதிப்பிடப்பட்ட பெறுமதியுடன் ஒப்பிடுகையில் ஆலையானது ரூபா 1,822 மில்லியன் பெறுமானத்தேய்வு அடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

ii. அதன்படி, அனல்மின் நிலைய உரிமையாளரால் சபைக்கு விற்பனை செய்வதற்காக வழங்கியுள்ள விலையைக் காட்டிலும் மதிப்பிடப்பட்ட கேள்வி விலையானது ரூபா 2,446 மில்லியன் குறைவாக இருந்தது. எனவே, ஆலையைக் கொள்வனவு செய்யாது ஆரம்ப ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் காலத்தை 05 ஆண்டுகளிற்கும் 06 மாதங்களுக்கும் 06 ஏப்ரல் 2016 முதல் 08 செப்டம்பர் 2022 வரை 04 சந்தர்ப்பங்களில் காலநீடிப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனவே, அரசாங்க மதிப்பீட்டாளரால் மதிப்பிடப்பட்ட பெறுமதியைக் காட்டிலும் உரிமையாளரின் கேள்வி விலை குறைவாக இருந்ததமையால் மின் ஆலையை சபையால் கையகப்படுத்திய பின்னர் அதனை அரசுக்குச் சாதகமாகப் பராமரிக்கும் வாய்ப்பு சபையால் இழக்கப்பட்டிருந்தது.

iii. 2003 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட ஆரம்ப ஒப்பந்தம் 10 ஆண்டுகளுக்குப் பிறகு காலாவதியாகியிருந்ததுடன் ஆரம்ப ஒப்பந்தத்தின் நிபந்தனை இல. 11 இன் கீழ் "நிகழ்வுகளை வாங்குதல்" தொடர்பான மேற்படி ஒப்பந்தத்தில் கூறப்பட்ட காலாவதி நிபந்தனை சேர்க்கப்படவில்லை. எனவே, "நிகழ்வுகளை வாங்குதல்" எனும் அடிப்படையில் (கம்பனி மின் உற்பத்தி நிலையத்தை சபைக்கு விற்பனை செய்ய உத்தேசித்திருக்காத போதிலும்) இந்த மின் உற்பத்தி நிலையத்தை வாங்குவதற்கான உரிமைகளை சபை இழந்திருந்தது. மேலும், 20 வருடங்கள் பயனுள்ள ஆயுள் கொண்ட அந்தச் சொத்தின் மொத்தப் பெறுமதியானது 10 வருட காலத்திற்குள் ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் இற்கு சபையால் செலுத்தப்பட்டது.

iv. ஐந்து வருடங்கள் நீட்டிக்கப்பட்ட காலம் தொடர்பான இயலளவுக் கட்டணமாக அமெரிக்க டாலர் 29,085,134 செலுத்தப்பட்டது. அதில், அமெரிக்க டாலர் 21,701,362 (ரூபா 3,650 மில்லியன்) உரிமைத்துவ மூலதனத்தின் மீதான வருவாயில் செலுத்தப்பட்ட இயலளவு கட்டணங்களில் அதிகரிக்க முடியாத பகுதிக்கு மட்டுமே செலுத்தப்பட்டது. மின் உற்பத்தி நிலையத்தின் உரிமையாளர்கள் அதை சபைக்கு விற்பதற்காக சமர்ப்பித்த அமெரிக்க டாலர் 17,000,000 (ரூபா 2,446 மில்லியன்) கேள்வி விலையில் 127.7 சதவீதமாக அது காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

v. உடன்படிக்கையின் ஆரம்ப காலப்பகுதியில் ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் தேறிய இலாபமாக ரூபா 8,572 மில்லியன் ஈட்டியிருந்ததுடன் அது 2003 ஆம் ஆண்டில் கம்பனி முதலீடு செய்திருந்த ஆரம்ப முதலீடான ரூபா 1,676 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 511 சதவீதமாக இருந்தது. மேலும், ஒப்பந்தத்தை நீட்டித்த பிறகு, ஐந்து வருட காலப்பகுதியில் தேறிய இலாபமாக ரூபா 6,270 மில்லியன் ஈட்டப்பட்டுள்ளதுடன் ஆரம்ப முதலீட்டின் சதவீதமாக இது 406 சதவீதமாகும். அதன்படி, ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் ஈட்டிய மொத்த தேறிய இலாபம் 31 மார்ச் 2021 இல் ரூபா 14,841 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன் இது ஆரம்ப முதலீட்டுடன் ஒப்பிடுகையில் 885 சதவீதமாக இருந்தது.

vi. ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய தனியார் மின் உற்பத்தி நிலையத்தின் உடன்படிக்கைக் காலத்தை நீடித்து மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும், தனியார் கம்பனிகளிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்வது தொடர்பில் 2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்திய) சட்டத்தின் 43 ஆவது பிரிவின் பிரகாரம் பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் குறித்து போதிய கவனம் செலுத்தப்பட்டமையினை அவதானிக்க முடியவில்லை.

vii. திருத்தப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் விதிகளின்படி, மின் உற்பத்திக்கான உரிமங்கள் இலங்கையின் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட வேண்டும். அதன்படி, மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 43 (1) இன் படி, உரிமம் பெற்ற நிறுவனங்களால் மட்டுமே மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட வேண்டும். இருந்தபோதிலும், உற்பத்தி உரிமம் பெறாத ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் இடமிருந்து 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

viii. திருத்தப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் விதிகளின்படி, 100 வீத உரிமையைக் கொண்ட தனியார் நிறுவனங்களுக்கு 25 மெகாவாட்டிற்கும் அதிகமான மின் உற்பத்தி நிலையங்களை இயக்குவதற்கு எந்தவொரு ஏற்பாடும் இல்லை. எவ்வாறாயினும், குறுகிய கால அடிப்படையில் மின்சாரம் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் 100 வீதம் தனியார் உரிமையைக் கொண்ட 100 மெகாவாட் இயலளவுடைய ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் உடன் 06 ஏப்ரல் 2016 அன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.



**ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்

**இலங்கை மின்சார சபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதிலளிப்புகள்**

**1.** **நிதிக்கூற்றுக்கள**

**1.1** **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தகவல் பந்தி

**1.2** **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

தகவல் பந்தி

**1.2.1** **ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை**

தகவல் பந்தி

**1.2.1.1**

**(அ) லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட்**

**(i)** **உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட விவரங்களின்படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி மீதி ரூபா 1,436.33 மில்லியனாக இருந்ததுடன் 2017/2018, 2018/2019 மற்றும் 2019/2020 மதிப்பீட்டு ஆண்டுகளில் அதன் மீது செலுத்த வேண்டிய அபராதம் ரூபா 1,436.33 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், வருமான வரி தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 12) 88 ஆம் பந்தியின் படி, செலுத்த வேண்டிய அபராதத் தொகை குறித்த தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் (ஐஆர்டி) வெளியீட்டு பெ.சே.வரி கணப்பீட்டுடன் கம்பனி உடன்படாததால் பெறப்பட்ட பெ.சே.வரி மதிப்பீடுகளுக்கான மேல்முறையீட்டுடன் இணைத்து, திருத்தப்பட்ட பெ.சே.வ. வருமானத் திரட்டை ஐஆர்டிக்கு கம்பனி சமர்ப்பித்துள்ளது. இந்த விவகாரம் குறித்தும் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி தேவைப்பட்டால், அடுத்த நிதியாண்டில் இது வெளிப்படுத்தப்படும். மேலும், பணிப்பாளர் சபையின் அனுமதியுடன், பொருத்தமான அபராதங்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளமையால் டூஊஊ 8/11/2021 தேதியிட்ட ஐஆர்டி இன் பட்டோலையின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட அபராதங்களை முற்றிலுமாக கம்பனி தள்ளுபடி செய்துள்ளது

**(ii)** **SLFRS 9 - நிதிக் கருவிகளின் எனும் கணக்கீட்டு நியமத்தின் பந்தி 5.5.15 (அ) இன் படி, ஒரு நிறுவனம் எப்போதும் நட்டக் கொடுப்பனவை SLFRS 15 இன் நோக்கெல்லைக்கு உட்படட்டு, வாழ்நாள் முழுவதும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள், வியாபாரப் பெறவேண்டியவை அல்லது ஒப்பந்தச் சொத்துக்களுக்குச் சமமான தொகையில் அளவிட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனி அதன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள ரூபா 1,095.6 மில்லியன் வியாபாரப் பெறவேண்டியவை தொடர்பில் நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.**

நீண்டகால பெறவேண்டியவைகளின் பெறுமதி குறைபாட்டு குறிகாட்டிகளை மறுமதிப்பீடு செய்ய இ.மி.ச. கம்பனியை அறிவுறுத்த உள்ளதுடன் எதிர்கால நிதி அறிக்கைகளில் பெறுமதி குறைபாட்டு குறிகாட்டிகளின் அடிப்படையில் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும

**(iii)** **நிலக்கரியை இறக்குமதி செய்யும் போது, சுங்கத்தின் நோக்கத்திற்கான பெறுமதியை மதிப்பிடுகையில், ஒரு கற்பனையான சீராக்கமாக உண்மையில் ஏற்பட்டிருக்காத 10 சதவீத வரி எல்லை சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், கம்பனி மீளாய்வாண்டில் ரூபா 9,419.6 மில்லியன் என்ற 10 சதவீத இலாப எல்லையினை வருவாயில் சேர்த்துள்ளதுடன் பின்னர் கம்பனி கடன்பட்டோருக்கான கழிவாக அத்தொகையை வழங்கி அதனை விற்பனை கிரயத்துக்கு சாட்டுதல் செய்துள்ளது. இதன் விளைவாக, விற்பனை கிரயம் மற்றும் வருவாய் என்பன ஒத்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.**

இ.மி.ச. இற்கு கம்பனி விலைப்பட்டியல்களை வழங்குகையில் அதன் கிரயத்தில் 10 சதவீத சுங்க வரம்பை சேர்ப்பதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் (ஐஆர்டி) கம்பனிக்கு பணிப்புரை வழங்கப்பட்டது. 2019 யூன் 28 அன்று ஐஆர்டி இன் அதிகாரி ஒருவருடன் அமைச்சகத்தில் நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து இந்த விலையிடல் வழிமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஐஆர்டி அதிகாரிகளின் கூற்றுப்படி, இ.மி.ச. இற்கான விலைப்பட்டியல் மீதான பெ.சே.வரிக்கான அடிப்படைத் தொகை, சுங்க நோக்கங்களுக்கான மதிப்பை விட குறைவாக இருக்கக்கூடாது. எனவே, 10 சதவீதத் தொகையானது ஐஆர்டியின் உத்தரவின் பேரில் மட்டுமே சேர்க்கப்படுகிறது. வருவாயின் உள்ளடக்கங்களான 10 சதவீத வரம்மை நீக்கி வெளியீட்டு பெ.சே.வரியைக் கணக்கிடுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஐஆர்டி இடம் கம்பனி வினவியுள்ளதுடன் அதற்கான பதில் இன்னும் பெறப்படவில்லை. மேலும், 2022 ஏப்ரல் 4 அன்று, இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர், நிலக்கரி இறக்குமதி மற்றும் விநியோகத்திற்காக பெ.சே.வரி விலக்கு கோரி நிதி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

வருவாய் மற்றும் விற்பனைக் கிரயத்தை மிகைப்படுத்துவது தொடர்பான சிக்கலைத் தீர்ப்பதற்காக, கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க, நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கல்களை செய்யுமாறு 2023 சனவரி 17, ஆம் தேதியிட்ட கடிதம் மூலம் இ.மி.ச. கம்பனியை அறிவுறுத்தியுள்ளது.

**(iv)** **கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, 2016 செப்தெம்பர் 19 முதல் 2018 ஏப்ரல் 09 வரையிலான கால கட்டத்தில் நிலக்கரி இறக்குமதியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதியை அறிவிக்காதது குறித்து ரூபா 205 மில்லியன் தொகையை கம்பனி இலங்கை சுங்கத்திற்கு தண்டமாக செலுத்தியிருந்தது. 2019 இல் கம்பனி செலுத்திய தண்டத் தொகையினை குறித்த ஆண்டிற்கான செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக இலங்கை சுங்கத்தின் பெ.சே.வ. (VAT) கணக்கின் கீழுள்ள பெ.சே.வ. கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கிற்கும் தவறுதலாக வரவு வைத்திருந்தது. அதன் விளைவாக, நிறுத்திவைத்த உழைப்புக்கள் ரூபா 205 மில்லியன் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் இலங்கை சுங்கத்தின் பெ.சே.வ. கணக்கு, பெ.சே.வ. கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கு என்பன முறையே ரூபா 158.2 மில்லியன் ரூபா 39.97 மில்லியன் மற்றும் ரூபா 6.8 மில்லியன் தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.**

கணக்காய்வாளரின் பரிந்துரைக்கு அமைய, நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கல்களை செய்யுமாறு 2023 சனவரி 17, ஆம் தேதியிட்ட கடிதம் மூலம் இ.மி.ச. கம்பனியை அறிவுறுத்தியுள்ளது.

**(v)** **கம்பனி கப்பலேற்றல் இல. 123 இற்கான சுங்க பெ.சே.வ. ஆக ரூபா 136.2 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது. எனினும், சுங்கத்தின் வெளிப்படுத்தல் சான்றிதழின் படி, உண்மையான பெ.சே.வ. தொகை ரூபா 106.97 மில்லியன் ஆகும். எனவே, கம்பனி மேலதிகமாகச் செலுத்தியிருந்த தொகை ரூபா 29.2 மில்லியன் என்பது அவதானிக்கப்பட்டதுடன் இந்தத் தொகையை நிலுவையாக உள்ள தொகைக்கு எதிராக எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.**

இந்த அதிகமாக செலுத்திய பெ.சே.வரியை ஐஆர்டி ரூபா 29,266,965.00 ஆக பதிவு செய்துள்ளமையை கம்பனி கண்டறிந்துள்ளதுடன் கம்பனியின் நிலுவையில் உள்ள சுங்க வரி நிலுவைகளுக்கு எதிராக இந்த மிகையாகச் செலுத்திய பெ.சே.வரியை எதிரீடு செய்வதற்கான தகுந்த முறைகளை கம்பனி தொடங்கவுள்ளது.

**(vi)** **மீளாய்வாண்டின் இறுதியில் இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய நான்கு நிலுவைத் தொகைகள் ரூபா 273.3 மில்லியனாக இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இ.மி.ச. இன் நிதிக்கூற்றுக்களின் படி நேரொத்த செலுத்த வேண்டிய நிலுவைகள் எதும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கூறப்பட்டுள்ள பெறவேண்டிய நிலுவைகளின் சரியான மற்றும் காணப்படும் தன்மையை நிச்சயிக்க முடியவில்லை.**

இவ்வாறு செலுத்த வேண்டிய மீதியொன்று இ.மி.ச. இன் நிதிக்கூற்றுக்களில் காணப்படவில்லை என 2023 சனவரி 17 ஆம் தேதியிட்ட கடிதம் மூலம் இ.மி.ச. கம்பனியை அறிவுறுத்தியுள்ளது

**(vii)** **கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் லிமிடெட் இற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 547.7 மில்லியன் ஆன போதிலும், சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் லிமிடெட் சமர்ப்பித்த மீதி உறுதிப்படுத்தலின் படி, அத்தொகை ரூபா 1,271.9 மில்லியன் ஆகும். அதன்படி, ரூபா 724.2 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.**

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில் உள்ள வேறுபாட்டிற்கான விடயங்களை அடையாளம் கண்டு அதற்கான கணக்கிணக்க அறிக்கையைத் கம்பனி தயாரித்தது. பெரும்பாலான விடயங்கள் நியாயமான காரணங்களுக்காக கம்பனியால் புத்தகத்தில் பதிவு செய்யப்படாதிருந்ததுடன் அவை குறிப்பு 24 “கடப்பாடுகள் மற்றும் நிகழத்தக்கவைகள்” என்பதன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. 31 டிசம்பர் 2022 நிலவரப்படி, ஆண்டு இறுதி நிலுவைகளில் இருக்கும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு கம்பனி மற்றும் CSC ஆகியவை தற்போது கலந்துரையாடி வருவதுடன் தற்போது பின்வரும் வேறுபாடுகள் தீர்க்கப்பட்டுள்ளன.

i. CSC இன் மீதி உறுதிப்படுத்தலின் படி 31.12.2022 இல் உள்ள செலுத்த வேண்டிய மீதி ரூபா அகற்றும் துறைமுகத்தின் அகற்றல் கட்டணம் ரூபா 256,153,519 ஆன போதிலும் 31.12.2022 இன் படி லேடைம் கணக்கீடுகளுக்கு தொடர்புடைய தரப்பினராக கம்பனி அதனை இன்னும் ஒப்புக் கொள்ளவில்லை. முகாமைத்துவ கலந்துரையாடல்களின் அடிப்படையில், 4 ஜனவரி 2023 இல் உள்ளவாறு இ.மி.ச. இடமிருந்து பெறப்பட்ட நிதியிலிருந்து ரூபா 107 மில்லியன் தொகையினை முற்பணமாக கம்பனி செலுத்தியுள்ளது.

ii. 2021-2022 நிலக்கரி பருவகாலத்திற்கான நாணயமாற்று ஆதாயங்கள் மற்றும் இழப்புகளுக்காக மொத்தம் ரூபா 187 மில்லியன் விலைப்பட்டியல்களை கம்பனி வழங்கியுள்ளது. அதில் ரூபா 155 மில்லியன் தொகை மட்டுமே இ.மி.ச. இனால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்தத் தொகையில் ரூபா 75 மில்லியன் ஏற்கனவே அதாவது 26.5.2023 நிலவரப்படி செலுத்தப்பட்டுள்ளது

**(viii)** **மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு லிபர்ட்டி கொமடிடீஸ் லிமிடெட் இடமிருந்து பெறவேண்டிய 50 சதவீத ஜீஎஸ் கட்டணங்கள் மற்றும் முறையே ரூபா 8 மில்லியன் மற்றும் ரூபா 9.8 மில்லியன் சில்லறைக் கடன்பட்டோருடன் தொடர்புடைய சான்றுகளும் ஜீஎஸ் லங்கா லிமிடட் இற்குச் செலுத்த வேண்டிய ரூபா 87.9 மில்லியன் மற்றும் ரூபா 12.2 மில்லியன் வியாபாரக் கடன்கொடுத்தோருடன் தொடர்புடைய சான்றுகளும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.**

லிபர்ட்டி கமாடிடீஸ் லிமிடெட் இடமிருந்து பெறவேண்டிய 50 சதவீத SGS கட்டணங்கள்- ரூ. 8,048,531.00

2015/16 பருவத்தில் 17 கப்பல்களுக்கான் வரைவு ஆய்வுக் கட்டணங்கள் கப்பலேற்றல் துறைமுகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. M/s Liberty Commodities Pvt Ltd கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தக் கட்டணத்தைச் செலுத்துமாறு 2019 இல் மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. இந்த விவகாரம் தொடர்பில் நடுவர் மன்றம் இடம்பெற்று வருகிறது.

ii. சில்லறைக் கடன்பட்டோர் - ரூ. 9,808,968.00
மீளப்பெற முடியாத NBT மற்றும் PAL ஆகியவை இதில் அடங்கியுள்ளன என்பது ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

iii. வியாபாரக் கடன்கொடுத்தோர்
அ. செலுத்த வேண்டிய கணக்குகள் - ரூபா 3,193,886.36

ரூபா 2,362,129.03 - இ.மி.ச. இன் உள்ளகக் கணக்காய்வுக் கிளையால் வெளியிடப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கையின்படி, 2018 மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் செய்யப்பட்ட தவறான கணக்கியல் பதிவுகள் காரணமாக இந்த செலுத்த வேண்டியவை ஏற்பட்டது. இ.மி.ச. இன் உள்ளகக் கணக்காய்வுக் கிளையின் பரிந்துரைகளுக்கு இணங்க, திருத்தப்பட்ட பதிவுகளை அனுப்புமாறு கம்பனியை இ.மி.ச. அறிவுறுத்தியது

ரூபா 831,757.33 - 2022 ஆம் ஆண்டு தொடர்பான அட்டுறு செலவுகள் பின்னர் தீர்க்கப்படும்.

ஆ. ரூபா 84,771,789.21- நோபல் ரிசோர்சஸ் இன்டர்நேஷனலுக்குச் செலுத்த வேண்டியவை
மீதியானது நாணயக்கடிதத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்ததன் விளைவாக Nobel Recourses Intl பிரைவேட் லிமிடெட் க்குக் குறைத்துச் செலுத்திய தொகையைக் கொண்டுள்ளது. நிலக்கரி தொடர்பான கொடுப்பனவுகள் மற்றும் நிர்வாகக் கட்டணங்கள் போன்றவற்றுடன், சில காலமாக இ.மி.ச. இல் நிலுவையில் இருந்த சில கொடுப்பனவுகள் காரணமாக, செயல்பாட்டுத் தேவைகளின் அடிப்படையில் பிற செலுத்த வேண்டியவற்றைத் தீர்க்க இந்த நிதி பயன்படுத்தப்பட்டது

iv. எஸ்ஜிஎஸ் லங்கா (பிரைவட்) லிமிடட் - ரூபா 12,161,313.00
எஸ்ஜிஎஸ் லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய இந்த நிலுவைத் தொகையை நிறுவனம் உறுதி செய்துள்ளதுடன் விரிவான அட்டவணை கணக்காய்விற்கு கிடைக்கக் கூடியதாக உள்ளது.

### (ஆ) ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (பிரைவட்) லிமிடட

**(i)** **முந்தைய ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 7.39 மில்லியன் தொகையான சில நிர்வாக மற்றும் நேரடி செலவுகள் டுமுயுளு 08 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் எனும் கணக்கீட்டு நியமத்தின் 42 ஆம் பந்தியின் பிரகாரம் முந்தைய ஆண்டுச் சீராக்கமாக நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படாது மீளாய்வாண்டுச் செலவினமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான இலாபம் அதே அளவு தொகையால் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.**
கணக்காய்வின் விவரப்படி, ஏற்கனவே நேரடிச் செலவுகளுக்கு மட்டுமே சீராக்கம் செய்யப்பட்டதுடன் நிர்வாகச் செலவுகளிற்கு எந்த சீராக்கமும் செய்யப்படவில்லை. நேரடி செலவினங்களின் கீழுள்ள குறிப்பு இல. 22 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி சீராக்கம் செய்யப்பட்டதுடன், அதன்போது 2021 ஆம் ஆண்டின் தொடக்க நிலுவைகளும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்துக்கான குறிப்பில் சீராக்கம் செய்யப்பட்டன, மேலும் இரண்டாவது சீராக்கமானது அலுமினியத்தை மறுசுழற்சி செய்வதற்கான திட்டச் செலவுகளின் வகைப்படுத்தல் திருத்தமாகும்.

**(ii)** **ரூபா 79.5 மில்லியன் பெறுமதியான இன்ஜெக்ஷன் மோல்டிங் மெஷினரி உட்பட ரூபா 100.08 மில்லியன் மதிப்புள்ள முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள், LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் எனும் நியமத்தின் 51 ஆம் பந்தியின் அடிப்படையில் அந்த சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுள்காலம் என்பவற்றை மீள மதிப்பாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படாமல் மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனியால் தொடர்ந்தும் பயன்படுத்தி வரப்பட்டிருந்தன.**
மறுமதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(iii)** **கம்பனி அதன் கலிகமுவ காணிக்கான குத்தகை ஒப்பந்தத்தை 2017 யூலை 07 இலிருந்து 35 வருடங்களுக்கு மேற்கொண்டுள்ளது. எவ்வாறாயினும், குறித்த குத்தகை SLFRS – 16 இன் படி குத்தகைச் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமை மற்றும் குத்தகைப் பொறுப்பு ஆகியவை நிறுவனத்தின் நிதிநிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.**
இந்த பிழை கண்டறியப்பட்டதுடன் எதிர்கால நிதிநிலை அறிக்கைகளில் SLFRS-16 உடன் இணங்கின்ற வகையில் சரி செய்யப்படும்.

**(iv)** **கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறுதி தாய் நிறுவனமான இலங்கை மின்சார சபை (இ.மி.ச.) இடமிருந்தான வியாபாரப் பெறவேண்டியவை ரூபா 165.31 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், இ.மி.ச. இன் நிதிக்கூற்றுக்களின் படி அந்தத் தொகை ரூபா 28.21 மில்லியன் ஆகக் காணப்பட்டமையால் ரூபா 137.1 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது**
எதிர்கால நிதிநிலை அறிக்கைகளில் உள்ள வேறுபாடுகளை அடையாளம் காணவும், வேறுபாடுகளை சரிசெய்யவும் கணக்கிணக்கம் தயாரிக்கப்படும்.

(v) **கம்பனி நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பெறத்தக்க பிடித்துவைத்தல் வரி (WHT) நிலுவை தொகையான ரூ. 2.12 மில்லியனை மீளாய்வாண்டின் இறுதியிலேனும் செலுத்த வேண்டிய வருமான வரிக்கு எதிராக சாட்டியிருக்கவில்லை. மேலும், மூர்வு சான்றிதழ்கள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவுமில்லை.**
பிடித்துவைத்தல் வரிச் சான்றிதழ் கணக்காய்விற்கு ஒப்படைக்கப்பட்டது. 2022/2023 மதிப்பீட்டு வருடத்துக்கான வருமான வரிக்கு எதிராக பெறத்தக்க பிடித்துவைத்தல் வரி நிலுவையை எதிரீடு செய்யுமாறு ஸ்ரீலங்கா எரிசக்தி நிறுவனத்திற்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(vi) **கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி, 2022 திசெம்பர் இல் உள்ளவாறு தனியார் வணிக வங்கியொன்றில் இருந்து பெறப்பட்ட 06 காலக் கடன்களின் மொத்த மீதி ரூபா 80.86 மில்லியன் ஆனதுடன் மீதி உறுதிப்படுத்தலின் படி, அக்கடன் மீதி ரூபா 87.65 மில்லியன் ஆகும். அதன்படி, நிதிக் கூற்றுக்களிற்கும் மீதி உறுதிப்பாட்டிற்கும் இடையில் ரூபா 6.78 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது**
இந்த வேறுபாடு கண்டறியப்பட்டதுடன் கணக்கிணக்கச் செயல்முறை நடந்து வருகிறது

(vii) **2019 முதல் திரட்டப்பட்டு முன்கொண்டுவரப்படிருந்த ரூபா 7.06 மில்லியன் இனங்காணப்படாத மொத்த வைப்புத்தொகையை அங்கீகரிக்க கம்பனி முறையான நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அத்தொகை நிதிக்கூற்றுக்களில் வியாபார மற்றும் பிற செலுத்த வேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது.**
இந்த மீதியின் பெரும்பகுதி ஏற்கனவே பதிவழிக்கப்பட்டுள்ளது. அதன்படி ERP முறைமை மீளப் புதுப்பிக்கப்படும்.

(viii) **2020 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா 30.77 மில்லியன் ஆனதுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமான வரிக் கணக்குகளின்படி (மதிப்பீட்டு ஆண்டு 2020/2021 வரை) அந்தக் காலகட்டத்துடன் தொடர்புடைய வருமான வரி ரூபா 15.2 மில்லியன் ஆகும். அதன்படி, ரூபா 15.57 மில்லியன் வேறுபாடு காணப்பட்டதுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான சீராக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதிக்கூற்றுக்களின்படி, 2022 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய வருமான வரி மீதி ரூபா 43.88 மில்லியன் ஆனதுடன் கம்பனி 2015/2016 மதிப்பீட்டு ஆண்டிலிருந்து வருமான வரி செலுத்தவில்லை**
வருமான வரி கணக்கின் ஒரு தொகையான கோவைப்படுத்தல் வேலைகள் 2023 ஏப்ரல் இல் நிறைவடைந்ததுடன், முன்பு நிதிநிலை அறிக்கைகளில் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும், இப்போது நிதிநிலை அறிக்கைகள் வருமான வரி அறிக்கையின்படி சரிசெய்யப்படவுள்ளன.

(ix) **கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருளிருப்பு ரூபா 39.22 மில்லியனாக இருந்தது. இந்த பொருளிருப்பானது, ஆண்டு முடிவிற்குப் பிந்தைய தேதியில் கணினியால் வழங்கப்பட்ட விகிதங்களின் அடிப்படையில் நிறையளித்த சராசரி கிரயத்தை பயன்படுத்தி பெறப்பட்டுள்ளது. அதன்படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பொருளிருப்புத் தொகையின் சரியான தன்மையை கணக்காய்வில் கண்டறிய முடியவில்லை.**
பொருளிருப்பு மதிப்பீடானது ஈஆர்பி கிளவுட் முறைமையின் கீழ் நிறையளித்த சராசரி விலையிடல் முறையை பின்பற்றி இடம்பெற்று வருகிறது. அதன்படி, ஒரு பொருளின் அலகு விலை சரக்கு நகர்வுகளுக்கு ஏற்ப மாறுகிறது. 31 டிசம்பர் 2022 இன் படியான பௌதீக மதிப்பீட்டின் சுயாதீன அறிக்கையையும் கணினி அறிக்கையின்படியான ஒவ்வொரு சரக்குப் பொருளின் அளவையும் கணக்காய்வாளர் கோரினால், அதனை வழங்கலாம் என்பதுடன் அளவுகளில் எந்த விலகலும் அடையாளம் காணப்படவில்லை.

### (இ) லங்கா மின்சார (தனியார்) கம்பனி லிமிடட்

(i) **நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கருச் சட்டகத்தின் 5.5 ஆம் பந்தியின் படி, கொடுக்கல் வாங்கல்கள் அல்லது பிற நிகழ்வுகளிலிருந்து எழும் சொத்துக்கள் அல்லது பொறுப்புகளின் ஆரம்ப அங்கீகாரமானது வருமானம் மற்றும் தொடர்புடைய செலவுகள் இரண்டிலும் ஒரே நேரத்தில் அங்கீகரிக்கப்படும். வருமானம் மற்றும் தொடர்புடைய செலவுகளை ஒரே நேரத்தில் அங்கீகரிப்பது சில நேரங்களில் வருமானத்துடன் செலவுகளின் ஒப்பிடுதல் என குறிப்பிடப்படுகிறது. எவ்வாறாயினும், கம்பனி 2017, 2018, 2019, 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கொள்முதல் செய்யப்பட்ட சூரிய சக்தி விற்பனை வருமானத்தை அந்தந்த வருடங்களில் விற்பனையாக அங்கீகரித்திருந்த போதிலும், ரூபா 2,819.6 மில்லியன் தொகையான சூரிய சக்திக் கொள்வனவு கிரயத்தை (நிகர கணக்கீட்டு மற்றும் நிகர சேர்த்தல்) அந்தந்த ஆண்டுகளிற்கான விற்பனைக் கிரயமாக இனங்கண்டிருக்கவில்லை (அதற்கு பதிலாக, இலங்கை மின்சார சபையிடமிருந்து பெறத்தக்கது என கம்பனி அங்கீகரித்துள்ளது). இதன் விளைவாக, நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள், ஆண்டிற்கான இலாபம் மற்றும் பெறத்தக்க மீதி என்பன முறையே ரூபா 1,336.9 மில்லியன், ரூபா 1,482.7 மில்லியன் மற்றும் ரூபா 2,819.6 மில்லியன் தொகையால் 2022 திசெம்பர் 31 உள்ளவாறு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.**
இந்த சூரிய மின் உற்பத்தி கட்டணச் செலவு தனித்தனியாக வாங்கும் செலவாகக் கருதப்படுவதில்லை என்பதுடன் சூரிய ஒளி மின்சாரத்தின் மொத்த உற்பத்தியும் பிராந்தியத்திற்குள் நுகரப்படும் பட்சத்தில் வருவாயாகக் கருதப்படலாம். சில நேரங்களில் அது தேசிய கட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படலாம். எனவே அதே மதிப்பில் இலாபம் மற்றும் நட்டம் மிகைப்படுத்தப்பட்டதாகக் கூற முடியாது. சீரான தேசிய தீர்வைகள் (UNT) சரிசெய்தல் மூலம் இந்தச் சிக்கல் சமாளிக்கப்படும். UNT ஆனது PUCSL ஆல் அங்கீகரிக்கப்பட்டதும், இது விற்பனைக் கிரயத்தின் சீராக்கமாகக் கருதப்படும்.

**(ii)** **LKAS - 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் எனும் நியமத்தின் பிரிவு 51 இன் படி, ஒரு சொத்தின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயனுள்ள ஆயுள் ஆகியவை குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்பதுடன், எதிர்பார்ப்புகள் முந்தைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபட்டால், அந்த மாற்றம்(கள்) LKAS 8 க்கு இணங்க கணக்கிட்டு மதிப்பீட்டில் ஏற்பட்ட மாற்றமாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். இருப்பினும், கம்பனியால் 2022 திசெம்பர் 31 இல் பயன்படுத்தப்படுகின்ற முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ரூபா 9,554.6 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் அவ்வாறு மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை**

கணக்காய்வாளரின் கருத்துடன் உடன்பட்டாலும், பொருந்தக்கூடிய தேய்மான விகிதங்கள் தொழில்துறை விகிதங்களுக்கு இணையானவை என்பதை நினைவில் கொள்ளவும். மேலும், பரந்த புவியியல் பகுதியில் பரவியுள்ள முழு சொத்து வகுப்புகளின் பயன்படுத்தக்கூடிய வாழ்நாளை மதிப்பாய்வு செய்வது நடைமுறைக்கு சாத்தியமற்றதாகும். (லெகோவில் உள்ள உள்கட்டமைப்பு சொத்துக்கள் பெறுமதி கூடியவையாகும்).

**(iii)** **2022 திசெம்பர் 31 இல் உள்ளபடி இலங்கை மின்சார சபை (இ.மி.ச.) இடமிருந்து இதர சேவைகளுக்காக பெறவேண்டிய மீதி ரூபா 2,826.6 மில்லியன் ஆனதுடன் இந்த மீதி 2017, 2018, 2019, 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக நிகர கணக்கீட்டு மற்றும் நிகர சேர்த்தல் முறைகளைப் பயன்படுத்தி எரிசக்தியை கொள்வனவு செய்தமைக்காக இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய ரூபா 2,819.6 மில்லியன் தொகையும் அதில் உள்ளடங்கியிருந்தது. இருப்பினும், இ.மி.ச. இன் மீதி உறுதிப்படுத்தலின் படி, கம்பனிக்குச் செலுத்த வேண்டிய தொகைகள் எதுவும் காணப்படாததுடன் நிகர கணக்கீட்டு மற்றும் நிகர சேர்த்தல் முறைகளைப் பயன்படுத்தி மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்காக இரு தரப்பினருக்கும் இடையே முறையான ஒப்பந்தம் காணப்படவில்லை. எனவே, அந்த நிலுவையின் அறவிடக்கூடிய தன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக கண்டறிய முடியாதிருந்ததுடன், கம்பனி மேற்படி தொகைக்கு எதிராக ரூபா 2,449.3 மில்லியன் மதிப்பிழப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தது**

ஒழுங்கமைப்பாளர் (PUCSL) மற்றும் அமைச்சகத்தின் அறிவுறுத்தல்களின்படி இந்தத் தொகை கணக்குகளில் எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும், பெறத்தக்க நிலுவையின் ஆபத்துக் காரணியை ஒப்பிடுகையில், தொடர்புடைய ஒதுக்கீடு கம்பனியின் கணக்குகளில் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது. முறையான ஒப்பந்தம் எதுவும் இல்லை என்பதுடன் இ.மி.ச. ஆல் இன்னும் உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(iv)** **இ.மி.ச. இன் முதன்மை துணை மின் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தும் நிலங்கள் மற்றும் கட்டிடங்களை கொள்வனவு செய்வதற்காக கம்பனி ரூபா 206.9 மில்லியன் தொகையை செலவிட்டிருந்ததுடன், அந்த தொகையானது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இ.மி.ச. இடமிருந்து பெறப்பட வேண்டிய மீதியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், கம்பனியின் நிலங்களில் முதன்மை துணை மின்நிலையங்களை அமைப்பது தொடர்பிலும் மேற்கூறிய நிலங்கள் மற்றும் கட்டிடங்களைப் பயன்படுத்துவது குறித்து இ.மி.ச. இடமிருந்து அறவிட வேண்டிய வேண்டிய கட்டணங்கள் தொடர்பிலும் கம்பனிக்கும் இ.மி.ச. க்கும் இடையில் முறையான ஒப்பந்தம் எதுவும் காணப்படவில்லை.**

இ.மி.ச. உடன் இணைந்து ஐந்து முதன்மை துணை மின்நிலையங்களை கம்பனி நிர்மாணித்துள்ளது. அவை கிரிபத்கொட, கட்டுநாயக்க, கொட்டிகாவத்தை, நாவல மற்றும் ஹிக்கடுவ ஆகிய இடங்களில் உள்ளன. இந்த நிலையில், நிறுவனத்தினால் ஐந்து காணிகள் கொள்வனவு செய்யப்பட்டு, ADB இன் நிதியைப் பயன்படுத்தி இ.மி.ச. ஆல் ஆரம்ப உப மின் நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டன. மேற்படி காணிகளை இன்னும் இ.மி.ச. கையகப்படுத்தாதிருப்பதுடன் இந்த காணிகளுக்கான விலையை கம்பனிக்கு செலுத்தவுமில்லை. கம்பனியின் நிதிநிலை அறிக்கைகளில் இது பெறத்தக்கதாக அங்கீகரிக்கப்பட்டது. இ.மி.ச. இற்கும் கம்பனிக்கும் இடையில் கலந்துரையாடல் நடந்து வருவதுடன் பிரச்சினை இன்னும் இறுதி செய்யப்படவில்லை. சுமுக தீர்வு எட்டப்பட்ட பிறகு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**(v)** **சுய மின்வலு உற்பத்திக்காக இ.மி.ச. இடமிருந்து பெற வேண்டிய ரூபா 3.9 மில்லியன் ஐந்து வருடங்களுக்கும் மேலாக அறவிடப்படாமல் இருந்தது. சுய-மின்வலு உற்பத்தி தொடர்பாக கம்பனிக்கும் இ.மி.ச. க்கும் இடையில் முறையான ஒப்பந்தம் எதுவும் காணப்படாததுடன் அந்தத் தொகையின் மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு கிடைக்கவில்லை. எனவே, அந்த நிலுவையின் அறவிடக்கூடிய தன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக கண்டறிய முடியவில்லை**

இ.மி.ச. இற்கும் கம்பனிக்கும் இடையிலான தகராறு காரணமாக இந்த மீதித் தொகை அகற்றப்படாமல் உள்ளது (இ.மி.ச. மற்றும் கம்பனி ஆகிய இரண்டையும் கவனிக்கின்ற வரிசை அமைச்சகத்தின் அறிவுறுத்தல்கள் என்பதால்). எவ்வாறாயினும், முறையான ஒப்பந்தம் இல்லை என்றாலும், கம்பனியின் கணக்குகளில் ஏற்கனவே தொடர்புடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**(vi)** **கொள்வனவுக் கட்டளைகளின் பெறுமதிக்கும் உண்மையான கொடுப்பனவிற்கும் இடையே உள்ள வேறுபாடானது, கொள்வனவு முரண் கணக்கில் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதன்படி, தொடர்புடைய இருப்பு, சொத்து அல்லது இலாபம் அல்லது நட்டம் என அதனை அங்கீகரிப்பதற்குப் பதிலாக இலாபம் அல்லது நட்டத்தில் செயற்பாட்டுச் செலவுகளாக ரூபா 149.2 மில்லியன் சாட்டப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட சீராக்கல் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் அல்லது நட்டம், இருப்பு மற்றும் சொத்துக்கள் மீது தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதை கணக்காய்வில் நிராகரிக்க முடியாதுள்ளது.**

இது ஈஆர்பி அமைப்பின் உள்ளார்ந்த பிரச்சினையாகும். PO மதிப்பிற்கு மேல் செலுத்தப்படும் எந்த அதிகப்படியான தொகையும் (விலை மாறுபாடு மாற்றங்கள் ∴ புதிய வரி செயலாக்கங்கள், SSCL போன்றவை) தொடர்புடைய பொருள் பெறுவனவுப் பத்திரத்தின் மதிப்புக்கு மாற்ற முடியாது. எனவே மீதித் தொகை வருமான அறிக்கைக்கு வசூலிக்கப்படுகிறது.

**(vii)** **2022 திசெம்பர் 31 நிலவரப்படி காணப்பட்ட இனங்காணப்படாத வைப்புத்தொகையான ரூபா 6.7 மில்லியன் சில்லறைக் கடன்கொடுத்தோரில் சேர்க்கப்பட்டுள்ளது.**

2021 ஆம் ஆண்டில் நிராகரிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் கணக்குகளின் நிலுவைத் தொகையை சில்லறைக் கடன்பட்டோர் கணக்கிற்கு மாற்றியதால் இந்த நிலுவைத் தொகைகள் கணக்குகளில் தோன்றின. அதனைத்தொடர்ந்து ரூபா 10 மில்லியன் இ.மி.ச. இடம் அடையாளம் காணப்பட்டு அகற்றப்பட்டது. இந்தக் கணக்கில் இன்னும் ரூபா 6 மில்லியன் தொகை மீதம் உள்ளது. இது தொடர்ந்து இடம்பெறும் செயலாகும் என்பதுடன் புதிய நிலுவைகள் அவ்வப்போது சேர்க்கப்பட்டு அழிக்கப்படுவதால் முழுவதுமாக பதிவழிக்க முடியாதுள்ளது.

**(viii)** **நிதிக்கூற்றுக்களின் படி, களனி, மொரட்டுவை, நுகேகொட மற்றும் நீர்கொழும்பு கிளைகளிலுள்ள நடைபெற்றுவரும் மூலதனப் பணிகளின் நிலுவைகள் 2022 திசெம்பர் 31 நிலவரப்படி முறையே ரூபா 45.7 மில்லியன், ரூபா 56 மில்லியன் ரூபா 183.5 மில்லியன் மற்றும் ரூபா 41.3 மில்லியன் ஆகும். இருப்பினும், நடைபெற்றுவருகின்ற மூலதன வேலைகளின் அறிக்கையின்படி, மேற்கூறிய நிலுவைகள் முறையே ரூபா 43.8 மில்லியன், ரூபா 55.3 மில்லியன் ரூபா 181.7 மற்றும் ரூபா 46.7 மில்லியன் ஆகும். அதன்படி, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நிலுவைகளிற்கும் நடைபெற்றுவருகின்ற மூலதன வேலைகளின் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள நிலுவைகளிற்கும் இடையே முறையே ரூபா 1.9 மில்லியன் ரூபா 0.7 மில்லியன் ரூபா 1.8 மில்லியன் மற்றும் ரூபா 5.4 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது**

இந்த வேறுபாடுகள் இரண்டு அமைப்புகளுக்கும் (வேலைக் கிரயம் மற்றும் பொது பேரேடு) இடையே உள்ள நேர இடைவெளியின் காரணமாக ஏற்பட்டதுடன் கம்பனியின் தொழிநுட்ப பிரிவின் உதவியுடன் அவற்றை அகற்றுவதற்கு தொடர்புடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**(ix)** **ரூபா 1.9 பில்லியன் திறைசேரி முறியுடன் தொடர்புடைய 2022 செப்டம்பர் 15 முதல் 2022 திசெம்பர் 31 வரையிலான காலத்திற்குரிய திறைசேரி முறிக் கொள்வனவுக் கழிவு மீதான காலத்தேய்மானத் தொகையான ரூபா 3.3 மில்லியன் தவறாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, 2022 திசெம்பர் 31 இல் உள்ளபடியான வட்டி வருமானம் ரூபா 6.6 மில்லியன் தொகையால் குறைத்தும் திறைசேரி முறிகள் மீதான முதலீடு அதே அளவு தொகையால் குறைத்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.**

கணக்காய்வாளரின் அவதானிப்புடன் உடன்படுகின்றோம். 2023 ஆம் ஆண்டில் சீராக்கல் செய

**(x)** **2022 ஆம் ஆண்டிற்காக ஒரே மாதிரியான தேசிய தீர்வைச் சீராக்கல் ஏற்பாடுகளை கம்பனி செய்திருக்கவில்லை. இருப்பினும், தகவல் இல்லாததால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளிற்கான தாக்கத்தை கணக்காய்வில் கண்டறிய முடியவில்லை.**

இறுதி உறுதிப்படுத்தல் இன்னும் ஒழுங்குபடுத்துனரிடமிருந்து (PUCSL) பெறப்படவில்லை என்பதால் நாட்குறிப்புப் பதிவுச் சீராக்கல் எதுவும் செய்யப்படவில்லை.

**(xi)** **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லங்கா பிராட் பேண்ட் நெட்வொர்க் (பிரைவேட்) லிமிடெட்டின் சாதாரண பங்குகளில் செய்யப்பட்ட ரூபா 5 மில்லியன் முதலீட்டுடன் தொடர்புடைய பங்குச் சான்றிதழ்கள் அல்லது வேறு போதியளவு பொருத்தமான ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.**

இந்த விவகாரம் சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது. சட்டமா அதிபரிடமிருந்து அறிவுறுத்தல்கள் கிடைத்தவுடன் சட்டப் பிரிவினால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**(xii)** **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மின்சாரம் கொள்வனவு செய்தமைக்காக இ.மி.ச. க்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,799.3 மில்லியன் ஆன போதிலும், இ.மி.ச. இன் மீதி உறுதிப்படுத்தலின்படி, அந்த நிலுவைத் தொகை ரூபா 2,912.7 மில்லியன் ஆகும். அதன்படி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களிற்கும் மீதி உறுதிப்படுத்தலிற்கும் இடையே ரூபா 1,113.4 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.**

ரூபா 1,113,389,481 இன் வேறுபாடு பின்வருமாறு சரிசெய்யப்படுகிறது. இந்த வேறுபாட்டிற்கு மூன்று காரணங்கள் உள்ளன

1. 2021 ஆம் ஆண்டிற்கான PUCSL UNT சரிசெய்தல் அறிக்கையின்படி, அவர்கள் சோலா தேறிய சேர்ப்பனவு மற்றும் தேறிய கணக்கீட்டுத் தொகையுடன் தொடர்புடைய UNT இலிருந்து ரூபா 1,112,404,347 கழித்துள்ளனர். இ.மி.ச. அதை அதன் கணக்குப் புத்தகங்களில் கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகையாகக் கணக்கிடவில்லை.
2. இ.மி.ச. ஆல் 2022 இற்கு கணக்கிடப்பட்ட UNT தொகையான ரூபா 3,163,131, கம்பனிக்குச் க்கு செலுத்த வேண்டியதாக இ.மி.ச. ஆல் கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும், PUCSL அதனை அதிகாரப்பூர்வமாக வெளியிடாததால், கம்பனி அதை கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை
3. 2020 இன் 04 ஆம் காலாண்டுடன் தொடர்புடைய UNT சரிசெய்தலின் படி இ.மி.ச. இற்கு செலுத்த வேண்டிய தாகை ரூபா 84,941,899.79 ஆகும். இந்தத் தொகை டிசம்பர் 2022 இல் பட்டியல் செய்யப்பட்டது. இருப்பினும், இந்த SSCL தொகையானது ரூபா 2,177,997.43 இல் சேர்க்கப்படவில்லை. எனவே, கம்பனி அதை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

31 டிசம்பர் 2022 நிலவரப்படி - இ.மி.ச. இன் கணக்கிலுள்ள மீதி ரூபா 2,912,676,629.00

| | |
|---|---|
| நிகர கணக்கியல்/சேர்ப்பனவு - காலாண்டு1,2021 | (266,668,917.50) |
| நிகர கணக்கியல்/சேர்ப்பனவு - காலாண்டு2,2021 | (278,529,555.00) |
| நிகர கணக்கியல்/சேர்ப்பனவு - காலாண்டு3,2021 | (277,006,208.00) |
| நிகர கணக்கியல்/சேர்ப்பனவு - காலாண்டு4,2021 | (290,199,667.00) |
| யூனிட் - 2022 (3,163,131.00) க்கு மதிப்பிடப்பட்டுள்ளது | (3,163,131.00) |
| SSCL UNT, 20204இன் 4 ஆம்காலாண்டுக்கு | 177,997.43 |
| 31 டிசம்பர் 2022 இல் மீதி - கம்பனியின் கணக்கின் படி | 1,799,287,147.93 |

**(xiii) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் படி காணப்பட்ட இனங்காணப்படாத வங்கி வைப்புத் தொகையான ரூபா 16.2 மில்லியன் மற்றும் இனங்காணப்படாத பற்று வைத்தல் தொகை ரூபா 6.2 மில்லியன் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவற்றில், முறையே ரூபா 14.3 மில்லியன் மற்றும் ரூபா 5 மில்லியன் முறையே 06 மாதங்களுக்கும் மேலாக காணப்பட்டதுடன், அந்த இனங்காணப்படாத வங்கி வைப்பு மற்றும் பற்றுகள் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை**

திறைசேரித் திணைக்களம் சம்பந்தப்பட்ட வங்கிகளுடன் தொடர்பு கொண்டு அவ்வப்போது இந்த கொடுக்கல் வாங்கல்களைக் கண்டறிந்து அதற்கேற்ப தேவையான மாற்றங்களைச் செய்து வருகிறது

**(xiv) கணக்கிணக்கம் செய்யப்படாத ரூபா 5.9 மில்லியன் வரவு மீதி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளில் சேர்க்கப்பட்டுள்ளது**

இது கிளைக் கணக்குகளுக்கு இடையே கணக்கிணக்கம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கல் நிலுவைகளுடன் தொடர்புடையது. சரியான நேரத்தில் அவற்றை கணக்கிணக்கம் செய்ய கம்பனி தேவையான நடவடிக்கை எடுக்கும்.

**(xv) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு என்டெ லொகோ மீற்றரிங் கம்பனி (பிரைவட்) லிமிட் இற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 38.6 மில்லியன் ஆகும். கம்பனியால் பதிவுசெய்யப்பட்ட இந்தத் தொகையானது என்டெ லொகோ மீற்றரிங் கம்பனி (பிரைவட்) லிமிட் இன் நிதிக்கூற்றுக்களில் கம்பனியிடமிருந்து பெறவேண்டிய தொகையாக ரூபா 22.8 மில்லியன் எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரு நிறுவனங்களுக்கிடையில் ரூபா 15.8 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| இல. 12 (அ) | | | |
| | | | |
| 2022.12.31 இல் உள்ளவாறு கம்பனியின் கணக்கிலுள்ள செலுத்த வேண்டிய தொகை | | | 38,614,045.41 |
| | | | |
| கூட்டுக | | | |
| பட்டியல் இல. லெகோ/T029 | | 9,093.60 | |
| பட்டியல் இல. 2022லெகோ/DN/01 (3 இணைப்பு பரிசோதனை) | | 659,509.20 | |
| பட்டியல் இல. லெகோ/GS/01 (ஆய்வுச்சேவை காலி) | | 1,019,807.22 | |
| பட்டியல் இல. லெகோ/GS/02 (ஆய்வுச்சேவை, மொரட்டுவ) | | 3,546,241.82 | |
| | | | 5,234,651.84 |
| | | | |
| கழிக்க: | | | |
| PO இல.: 459505A | | (17,573,305.10) | |
| PO இல.: 459505 AB (தீர்க்கப்படாத தொகை) | | (3,461,814.15) | |
| | | | (21,035,119.25) |
| 2022.12.31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தொகை | | | 22,813,578.00 |

கணக்கிணக்கம் பின்வருமாறு

இந்தப் பட்டியல்கள் 2023 இல் தீர்க்கப்பட்டுள்ளதால் கணக்ககளை சீராக்க வேண்டிய தேவை இல்லை

**(xvi) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு என்டெ லொகோ மீற்றரிங் கம்பனி (பிரைவட்) லிமிட் இற்கு வழங்கப்பட்ட முற்பணம் ரூபா 136.3 மில்லியன் ஆகும். இருப்பினும், கம்பனியால் பதிவுசெய்யப்பட்ட இந்தத் தொகையானது என்டெ லொகோ மீற்றரிங் கம்பனி (பிரைவட்) லிமிட் இன் நிதிக்கூற்றுக்களில் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய தொகையாக ரூபா 113.3 மில்லியன் எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரு நிறுவனங்களுக்கிடையில் ரூபா 23 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.**

கீழே காட்டப்பட்டவாறு என்டெ லெகோ கம்பனிக்கு முற்பணமாகச் செலுத்திய கொடுப்பனவே இதற்கான காரணமாகும். அத்துடன் முற்பணத் தீர்ப்பனவும் கீழே காட்டப்படுகின்றது.

| | |
|---|---|
| இல. 12 (ஆ) | |
| 2022.12.31 இல் உள்ளவாறு கம்பனியின் கணக்கிலுள்ள செலுத்த வேண்டிய தொகை | 136,278,265.26 |
| | |
| கழிக்க | |
| PO இல.: 458596 | (22,891,404.36) |
| PO இல.: 457519 மற்றும் GIS முற்பணம | (97,128.23) |
| | |
| 2022.12.31 இல் உள்ளவாறு அன்டெ லெகோ கணக்கிலுள்ள முற்பணம் | 113,289,732.67 |

### 1.2.2 இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்குதல

#### (அ) நிதிசார் அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்க சட்டகம்

**(i)** **சபையின் கீழ் தனிப்பட்ட ஒரு பிரிவாக இயங்குகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் (ஊ.சே.நி.) ரூபா 51.82 மில்லியன் தொகையான செலவுகள் சட்டகத்தின் 4.1 (ஆ) பந்திக்கு முரணாக, சபையின் வருமானக் கூற்றில் அதற்குரிய செலவினமாக இனங்காணப்பட்டிருந்தது.**
அறிக்கையிடப்படும் நிறுவகத்தின் நிதிசார் செயலாற்றலுடன் “வருமானம் மற்றும் செலவுகள்” தொடர்புபட்டுள்ளன என்பதாகவே நிதிசார் அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்க சட்டகத்தின் 4.1 (ஆ) ஆம் பந்தியில் குறிப்பிடப்படுகின்றது.

2003 திசெம்பர் 31 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சேமலாப நிதியத்தின் 5 ஆம் இலக்க விதியின் படி, சபையால் நியமிக்கப்பட்ட குழுவால் நிதியம் முகாமை செய்யப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றமையால் நிதியத்தை முகாமைத்துவம் செய்து நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு சபைக்கு காணப்படுகின்றது. ஆகையால், நிதியத்தை முகாமைத்துவம் செய்து நிர்வகிப்பதற்கான செலவுகள் இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படுகின்றது.

மேலும், மேற்படி விதிகளின் 20 (ஐ) ஆம் இலக்க உட்பிரிவின் படி, வீட்டுக் கடன்களை பரிசோதிப்பதுடன் தொடர்புடைய செலவுகளைத் தவிர்த்து, நிதியத்தின் அனைத்து நிர்வாகச் செலவுகளும், இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படுவதுடன் இந்தக் கொள்கை நிதியத்தின் ஆரம்பத்தில் இருந்தே (1969 நவம்பர் 01 முதல்) நடைமுறையில் இருக்கின்றது. எனவே சேமலாப நிதியம் சார்பாக இ.மி.ச. ஆல் செய்யப்பட்ட செலவுகள் நிதியத்தின் நிதி கூற்றுக்களில் பதிவு செய்யப்படவில்லை.

**(ii)** **சட்டகத்தின் 4.3 ஆம் பந்திக்கு முரணாக, சபைக்குச் சொந்தமான ரூபா 7.06 மில்லியன் பெறுமதியான 51 சொத்துக்கள் ஊ.சே.நி. இன் செயற்பாடுகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.**
அறிக்கையிடப்படும் நிறுவகத்தின் நிதிசார் செயலாற்றலுடன் “வருமானம் மற்றும் செலவுகள்” தொடர்புபட்டுள்ளன என்பதாகவே நிதிசார் அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்க சட்டகத்தின் 4.1 (ஆ) ஆம் பந்தியில் குறிப்பிடப்படுகின்றது

2003 திசெம்பர் 31 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சேமலாப நிதியத்தின் 5 ஆம் இலக்க விதியின் படி, சபையால் நியமிக்கப்பட்ட குழுவால் நிதியம் முகாமை செய்யப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றமையால் நிதியத்தை முகாமைத்துவம் செய்து நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு சபைக்கு காணப்படுகின்றது. ஆகையால், நிதியத்தை முகாமைத்துவம் செய்து நிர்வகிப்பதற்கான செலவுகள் இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படுகின்றது.

மேலும், மேற்படி விதிகளின் 20 (i) ஆம் இலக்க உட்பிரிவின் படி, வீட்டுக் கடன்களை பரிசோதிப்பதுடன் தொடர்புடைய செலவுகளைத் தவிர்த்து, நிதியத்தின் அனைத்து நிர்வாகச் செலவுகளும், இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படுவதுடன் இந்தக் கொள்கை நிதியத்தின் ஆரம்பத்தில் இருந்தே (1969 நவம்பர் 01 முதல்) நடைமுறையில் இருக்கின்றது. எவ்வாறாயினும், நிதி அறிக்கையின் கருத்தியல் கட்டமைப்பில் உள்ள விடயத்தை அறிக்கையிடுதல் அடுத்த நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

**(ஆ) எல்கேஏஎஸ் 1 - நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

**(i)** **நியமத்தின் பந்தி 69 க்கு முரணாக, இருப்புச் சீராக்கல் கணக்கின் வரவு மீதியான ரூபா 139.48 மில்லியன் தொகையினை இருப்பின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்புகளின் கீழுள்ள ஏனைய செலுத்த வேண்டிய நிலுவைகளுக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டுள்ளது.**

இருப்புச் சீராக்கல் கணக்கு என்பது, வருடாந்த இருப்பு மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்ட இருப்புக்களில் உள்ள அதிகப்படியான அல்லது இருப்புக்களில் ஏதேனும் பற்றாக்குறையுடன் தொடர்புடைய தற்காலிக மீதியைக் குறிப்பதுடன், உண்மையில் அது ஆண்டின் இறுதிக்கு முன்னர் நீக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், இருப்புச் சீராக்கல் கணிசமாகக் குறைக்கப்பட்டு அது செப்டம்பர் 2023 நிலவரப்படி ரூபா 78 மில்லியன் ஆக நிதிநிலை அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளதுடன், செப்டம்பர் 2023 நிதிநிலை அறிக்கைகளில் இருப்புப் பற்றாக்குறையானது ஏனைய பெறத்தக்கவைகளாகவும், இருப்பு மேலதிகங்கள் ஏனைய செலுத்த வேண்டியவைகளாகவும் காட்டப்பட்டுள்ளது.

**(ii)** **மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் சோதனையின்படி, DD 01 இன் கீழுள்ள கொழும்பு நகரப் பிராந்தியத்தின் மேலதிகக் கொடுப்பனவு காரணமாக ரூபா 41.58 மில்லியன் அசாதாரண செலவு நிலுவை உருவானதுடன், விநியோகப் பிரிவுகளின் இறுதிப்படுத்திய மொத்தக் கடன்பட்டோரிலுள்ள இறுதிப்படுத்திய சாதாரணக் கடன்பட்டோரின் அசாதாரண செலவு மீதியான ரூபா 13.16 மில்லியன் தொகையினை விசாரணை செய்து தீர்ப்பதற்கு அல்லது சபையின் வருமானத்திற்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படுவதற்குப் பதிலாக நியமத்தின் 32 வது பந்திக்கு முரணாக பெறத்தக்கவைகளுக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டுள்ளது.**

DCC/COM/03/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி, AGM(DD1) ஒப்புதலுடன் கடன்பட்டோரிலுள்ள செலவு நிலுவைகளை தரவுத்தளத்தில் இருந்து அகற்ற தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மொத்த நுகர்வோரின் இறுதி செய்யப்பட்ட செலவு நிலுவைகளை அகற்ற மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

DD2 இன் ரூபா 4.75 மில்லியன் செலவு மீதி தொடர்பில், DCC இன் DDC/COM/03/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி செலவு நிலுவைகளை பதிவழிக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. செலவு நிலுவைகளின் 08 கணக்குகளில், 2 ஐ மத்திய மாகாணம் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் 03 கணக்குகள் (மதிப்பு ரூபா 157,288.32) ஏற்கனவே பதிவழிக்கப்பட்டுள்ளன (வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது) மற்றவை இந்த ஆண்டில் பதிவழிக்கப்படும். ரூபா 898,751.84 மதிப்புள்ள செலவு மீதிகளின் 07 கணக

DD3 மீதியானது, WPS 2 இன் இறுதியான கடன்பட்டோர் மீதியை உள்ளடக்கியுள்ளது. 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான WPS2 இன் அவ்வாறான செலவு நிலுவைகள் ரூபா 124,616.25 ஆனதுடன் இதில் ரூபா 108,092.00 கணக்கு இல. 4270003545 இலிருந்து கொண்டுவரப்பட்டது. அதிகப்படியான கட்டணத்தை சரிபார்க்க நுகர்வோரை தொடர்பு கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நுகர்வோரிடமிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை. செலவு நிலுவைகளை சரி செய்ய மேலும் நடவடிக்கை எடுக்கப்படும். சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணத்தில் உள்ள பதிவுகளின்படி, மொத்த விநியோக இறுதி செய்யப்பட்ட கடன்பட்டோரில் செலவு நிலுவைகள் எதுவும் இல்லை.

**(இ) எல்கேஏஎஸ் 2 - இருப்புக்கள் மற்றும் எல்கேஏஎஸ் 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

**சபையானது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக மேற்படி நியமங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்குப் பதிலாக நியமக் கிரய முறையை பிரயோகிக்கின்றது. இதன் விளைவாக, அவற்றின் மீது ஏற்பட்ட சாதக மேந்தலை விலை மற்றும் பொருள் விலை முரண்கள் முறையே ரூபா 2.93 பில்லியன் மற்றும் ரூபா 6.54 பில்லியன் கூட்டுத்தொகையாக காணப்பட்டது. அத்துடன் ரூபா 6.57 பில்லியன் கூட்டுத்தொகையான பாதக களஞ்சிய விலை முரணும் காணப்பட்டது. எனினும், அந்த மூலதன வேலைகள் தொடர்பில் தேவையான தகவல்கள் காணப்படாததன் காரணமாக நிதிக்கூற்றுக்களிலுள்ள செயற்பாட்டு விளைவுகள், சொத்துக்கள் மற்றும் உரிமைத்துவத்திற்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தை மதிப்பிட முடியாதிருந்தது..**

எல்கேஏஎஸ் - 2 இருப்புக்கள் என்பதன் 25 ஆம் பந்தியின் படி இருப்பினை அளவிடுவதற்காக நியமக் கிரய முறை முதல் வந்தது முதல் செல்லல் முறை (FIFO) அல்லது நிறையளித்த சராசரி முறை பரிந்துரைக்கப்படுகின்றது. ஒரு நிறுவனம், அந்த நிறுவனத்திற்கு ஒத்த தன்மையுடைய மற்றும் பயன்பாடுடைய அனைத்து இருப்புகளுக்கும் ஒரே கிரய சூத்திரத்தைப் பயன்படுத்த வேண்டும். அதன்படி, இ.மி.ச. அதன் இருப்புகளை மதிப்பிடுவதற்கு FIFO முறையைப் பயன்படுத்துவதுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 79% முடிவுறா வேலைகள், 63% ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் 47% இருப்புக்களை உள்ளடக்கிய இ.மி.ச. இன் பிறப்பாக்கம், பரிமாற்றம், சொத்து முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் பிரிவிலுள்ள ஊழியக் கிரயத்தை பதிவு செய்ய உண்மையான கிரய முறை பயன்படுத்தப்படுகிறது. எனவே, ஆதனம், பொறி மற்றும் உபகரணம், இருப்புகள் மற்றும் முடிவுறா வேலைகள் ஆகியவற்றின் பெரும்பகுதி தொடர்புடைய கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க கிரயத்தில் வழங்கப்படுகிறது.

இருப்பினும், இருப்புகளின் சிக்கலான தன்மை மற்றும் பெரிய அளவுகள் காரணமாக, இ.மி.ச. இல் உள்ள விநியோக பிரிவுகள் நியமக் கிரய முறையை பயன்படுத்துகின்றன

விலைகள் கிரயத்திற்கு கிட்டியதாக காணப்படுமாயின் ("விளைவுகள் கிரயத்திற்கு கிட்டியதாக காணப்படுமாயின் சரக்கிருப்புகளின் கிரயத்தை அளவிடுவதற்கான நுட்பங்களிற்காக நியமக் கிரய முறை போன்றவற்றைப் பயன்படுத்தலாம்") **எல்கேஏஎஸ் - 2 இருப்புக்கள் என்பதன் 25 ஆம் பந்தியானது சரக்கிருப்புகளின் மதிப்பீட்டிற்காக நியமக் கிரய முறையைப் பயன்படுத்த அனுமதித்துள்ளது.** இ.மி.ச. இன் சரக்கிருப்புகளை மதிப்பிடுவதற்கு நியமக் கிரய முறையைப் பயன்படுத்துவதற்கான மற்றொரு காரணம் என்னவென்றால், பொருட்களின் விலை மாற்றங்களைப் பொருட்படுத்தாமல் எந்தவொரு பகுதியிலும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் ஒரு நியமக் கிரய அடிப்படை இருக்க வேண்டும் என்பதனாலாகும். இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் **(PUCSL)** "**கட்டணங்களுக்கான வழிமுறை**" **க்கான வழிகாட்டுதல்களின் படியும்** "**ஒவ்வொரு உரிமதாரரும் அவர்கள் செயற்படும் பகுதிகளில் மின்சார வழங்கல் சேவைகளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் அனைத்து பொருட்களினதும் விலைகளைக் கணக்கிட நியமக் கிரய முறையை பயன்படுத்த வேண்டும்**" என்று வரையறுத்துள்ளது.

இருப்பினும், பொருள் மற்றும் பிற கட்டணங்களின் விலை அதிகரிப்பு காரணமாக முரண்கள் ஏற்படலாம் என்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பராமரிப்புச் செலவானது வருமானக் கூற்றில் குறிப்பிடப்பட்டால், நியமக் கிரயத்திற்கும் உண்மைக் கிரயத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு அதே வருமானக் கூற்றிலுள்ள முரண்கள் கணக்குகளில் பிரதிபலிப்புச் செய்யப்பட்டு முடிவுகள் பூச்சியமாக காட்டப்படும்.

மேலும், **எல்கேஏஎஸ் - 2** (பந்தி 21) இன் படி, தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தத்திற்கு உட்பட்டதாக சரக்கிருப்புகளை மதிப்பிடுவதற்கு நியமக் கிரய முறையைப் பரிந்துரைக்கின்றது. அதன்படி, நியமக் கிரயத்திற்கும் உண்மைக் கிரயத்திற்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்காக ஆண்டுக்கு இருமுறை நியமக் கிரயத்தை மீளாய்வு செய்ய விலை நிர்ணயக் குழுவிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மேற்கூறியவற்றைத் தவிர, இ.மி.ச. நிறையளித்த சராசரி சரக்கிருப்பு மதிப்பீட்டு முறையுடன் இணைந்ததாக ERP முறையை நடைமுறைப்படுத்தும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளது. இ.மி.ச. இல் ERP முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

மேலும், மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளின் மேந்தலைக் கிரயத்தை உறிஞ்சுவதற்கான ஒதுக்கீட்டு முறையொன்று காணப்படுதல் வேண்டும்.

மேந்தலைக் கிரய விகிதமானது அந்தந்த மூலதன அல்லது பராமரிப்பு வேலைகளிற்கு குறித்த மேந்தலையை நேரடியாக பகிரத்தக்க முறையைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுவதுடன் அந்த வேலைகளுக்கு அது உறிஞ்சப்படுகின்றது.

**(இ) எல்கேஏஎஸ் 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்**

**(i)** **இ.மி.ச. இனால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாகத் தேய்விடப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலமானது ஆதனம், பொறி மற்றும் உபகரண கணக்காய்வு நியமம் (எல்கேஏஎஸ் 16) இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முன்னைய மதிப்பீட்டிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றவை வேறுபட்டுக் காணப்படின் அது எல்கேஏஎஸ் 08 இன் படி சீராக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், ரூபா 211.81 பில்லியன் தொகையான முழுமையாகத் தேய்விடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றின் உண்மையான ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பிடப்பட்டு அதற்கமைய கணக்கீடு செய்யப்படாது தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.**

LKAS -16 இன் பந்தி 51 இலுள்ள தேவையின்படி, சொத்தின் பயனுள்ள வாழ்க்கை காலம் குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டுமென்பதுடன் எதிர்பார்ப்புகள் முந்தைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபட்டால் மாற்றங்கள் கணக்கிடப்பட வேண்டும். 2021 ஆம் ஆண்டில் மோட்டார் வாகனங்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுளை உபகரண உற்பத்தியாளரின் பரிந்துரைகளிற்கு அமைய இ.மி.ச. மதிப்பாய்வு செய்ததுடன், அதன்படி, மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் ஜெனரேட்டர்கள் போன்ற முக்கிய முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துகளின் பயனுள்ள வாழ்க்கை பெரும்பாலும் நிதிநிலை அறிக்கைகளில் சீராக்கப்பட்டது. மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் ஜெனரேட்டர்களை இ.மி.ச. நன்கு பராமரித்து வருவதால், OEM-இன் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலத்தையும் தாண்டி அவை இயக்கப்படுகின்றன. மறுபுறம், மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் முடிந்த பிறகு, இ.மி.ச. அந்த சொத்துக்களை அதிக பராமரிப்பு செலவில் பயன்படுத்துவதுடன் இது தேய்மானத்தின் மூலம் ஈடுசெய்யப்படுகிறது. மேலும் இ.மி.ச. ஆனது ரூபா 900 பில்லியன் சொத்துத் தளத்தைக் கொண்ட ஒரு அமைப்பாக இருப்பதுடன், மின் உற்பத்தி நிலையங்கள் போன்ற முக்கிய சொத்துக் கூறுகளின் தனித்துவத்தன்மை மற்றும் சிக்கலான தன்மையைக் கருத்தில் கொண்டு, சொத்துக்களின் பயனுள்ள ஆயுளை ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்வது எளிதானது அல்ல என்பதுடன் அது நடைமுறைக்கு சாத்தியமானதுமல்ல. எவ்வாறாயினும், நிதிநிலை அறிக்கைகளின் குறிப்பு இல. 13.11 இல் LKAS-16 இன் பந்தி 79 இலுள்ள தேவையின்படி, தனித்தனியாக முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களின் மொத்த முன்கொண்டு செல்லும் தொகையை இ.மி.ச. வெளிப்படுத்துகிறது.

**(ii)** **நியமத்தின் பந்திகள் 41 மற்றும் 42 க்கு முரணாக, முந்தைய ஆண்டுகளில் 12 செயற்திட்டங்கள் தொடர்பில் நடைமுறையிலுள்ள வேலைகளாக அடையாளம் காணப்பட்ட ரூபா 1.47 பில்லியன் நிகர நாணயப் பரிவர்த்தனை இழப்பினை பின்னோக்கிச் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் கட்டணமாக அந்த ஆண்டின் நட்டத்திற்குச் சீராக்கப்பட்டிருந்தது. எனவே மீளாய்வாண்டுக்கான நட்டம் அதே அளவு தொகையால் அதிகமாகக் கூறப்பட்டுள்ளது.**

| பேரேட்டுக் குறியீடு | செயற்திட்டப் பெயர் | நடப்பாண்டு நட்டத்திற்கு சாட்டப்பட்ட நாணயமாற்று ஆதாயம்/ (இழப்பு) ரூபா |
|---|---|---|
| 980.30 | ஹபரண - வெயாங்கொட மின்கடத்தல் வழிச் செயற்திட்டம் | 106,255,486.57 |
| 980.45 | பிராட்லேண்ட் நீர் மின் திட்டம் | (1,018,906,434.26) |
| 980.62 | மொரகொல்ல நீர்மின் திட்டம் | 45,850,099.35 |
| 980.63 | பசுமை எரிசக்திசக்தி மற்றும் எரிசக்தி திறன் மேம்பாட்டு திட்டம் (பிரிவு 1-பகுதி 2) | (147,988,708.47) |
| 980.70 | பசுமை எரிசக்திசக்தி மற்றும் எரிசக்தி திறன் மேம்பாட்டு திட்டம் - கூறு 2 | (143,264,745.37) |
| 980.71 | SPMU 1- மன்னார், வாழைச்சேனை, மற்றும் அம்பாந்தோட்டை லைன் மற்றும் கிரிட் | (124,541,824.50) |
| 980.72 | SPMU 2- துணை மின்நிலையங்கள்- கொழும்பு, கொட்டுகொட, கொலன்னாவ மற்றும் பியகம | (3,837,239.87) |
| 980.73 | SPMU 3 - துணை மின்நிலையங்கள்- பியகம, பன்னிபிட்டிய லைன் மற்றும் கிரிட் | 9,480,927.04 |
| 980.74 | PM-SPMU 4 - 220kv மாறுதல் நிலையம் | (16,831,368.69) |
| 980.75 | PM-PACKAGE 7 SESRIP திட்டம் | 19,760,879.37 |
| 980.80 | தேசிய பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பு மேம்பாடு | (264,903,382.66) |
| 980.85 | மன்னார் காற்றாலை மின் திட்டம் | 65,466,710.39 |
| | | (1,473,459,601.10) |

மேலே குறிப்பிடப்பட்ட தவறானது நவம்பர் 2022 இல் கண்டறியப்பட்டதுடன் குறிப்பிட்ட கால அளவு காரணமாக, வழங்கப்பட்ட முந்தைய காலங்களுக்கான ஒப்பீட்டுத் தகவல்களின் அடிப்படையில் வழுக்களின் கால விளைவுகளை தீர்மானிக்க முடியவில்லை. எனவே, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் (2022 நிதிநிலை அறிக்கைகள்) இது சரிசெய்யப்பட்டது. முந்தைய காலங்களில் வழுக்களின் விளைவுகளை பின்னோக்கிச் சரிசெய்வதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(iii)** **2020 முதல் 2022 வரையிலான காலப்பகுதியில் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு சபையால் 220மஎ இன் கீழ் வழங்கப்பட்ட ரூபா 1.83 பில்லியன் மின்வலுவின் கிரயமானது சபை கம்பனியிடமிருந்து மின்வலுவை வாங்கியதற்காகப் பெற்ற ஒவ்வொரு மாத விலைப்பட்டியலிலும் இருந்து கழிக்கப்பட்டிருந்ததுடன் சபையால் மேற்படி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட மின்சாரத்தின் நிகர விலைப்பட்டியல் மதிப்பு கொள்வனவு செய்யப்பட்ட மின் வலுவின் கிரயமாக கணக்கிடப்பட்டது. எவ்வாறாயினும், நியமத்தின் பிரிவு 41 மற்றும் 42 இன் அடிப்படையில் மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1.83 பில்லியன் தொகையினை 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட மின் வலுவின் கிரயமான ரூபா 530.95 மில்லியனுக்கு பின்னோக்கிச் சீராக்குவதற்குப் பதிலாக, கொள்வனவு செய்யப்பட்ட பவர் தெர்மல் கணக்கில் (விற்பனைக் கிரயம்) வரவு வைக்கப்பட்டு சபையின் மேற்கு மாகாண வடக்கின் கீழுள்ள விநியோகப் பிரிவு 2 இன் செலுத்த வேண்டிய வர்த்தகக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மேற்படி தொகை 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் விநியோகப் பிரிவு 2 இல் பெற வேண்டியதாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.**

விநியோக உரிமத்தின் கீழுள்ள வழங்கல் சேவைகள் குறியீட்டு இல. DD – 2 இன் 3.1.1 இன் படி, சமமான அல்லது 132kV க்கு மேல் இருக்கும் சேவை இணைப்புகள், விநியோக சேவைக் குறியீட்டின் கீழ் வருவதில்லை. வெஸ்ட் கோஸ்ட் (பிரைவேட்) லிமிடெட்டின் மின் உற்பத்தி நிலையமானது கெரவலப்பிட்டி 220kV GIS துணை மின்நிலையத்திலுள்ள 220kV அடிப்படையில் பரிமாற்றல் வலைப்பின்னலுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த மின் உற்பத்தி நிலையத்தின் அனைத்து எரிசக்தியினதும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் 220kV இன்டர்கனெக்ஷன் மையத்தில் ஒரே மாதிரியான மின்மானிகளை பயன்படுத்தி அளவிடப்படுகிறது. எனவே, விநியோக பிரிவு 2 இன் விநியோக உரிமதாரரின் கீழ் பட்டியல்களை வழங்க சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்படவில்லை. எனவே, வெஸ்ட் கோஸ்ட் (பிரைவேட்) லிமிடெட் ஆனது பரிமாற்ற உரிமம் மற்றும் பிரிவு மின் கொள்முதல் ஒப்பந்தத்தின் பிரிவு 6.1.3 இன் படி இனிமேலும் விநியோக பிரிவு 02 இன் வாடிக்கையாளராக இல்லை. எனவே விநியோக பிரிவு 2 இதை வியாபார பெறவேண்டியவையாக பதிவு செய்ய முடியாது. எதிர்கால நிதிநிலை அறிக்கைகளில் விநியோக பிரிவு -2 க்கு வியாபார செலுத்த வேண்டியதாக பரிமாற்ற எரிசக்தி கொள்முதல் பிரிவால் காண்பிப்பதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படும்.

**(ஈ) LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

**சொத்து முகாமைத்துவப் பிரிவிலுள்ள ரூபா 4.92 மில்லியன் மதிப்புள்ள அலுவலக உபகரணங்கள் மற்றும் நிதிப் பிரிவிலுள்ள ரூபா 12.34 மில்லியன் மதிப்புள்ள சொத்துக்கள் முறையே 2021 மற்றும் 2022 கணக்கெடுப்பின் போது பௌதீக ரீதியாக இல்லாதும், சேதமடைந்தும், பயன்படுத்த முடியாதும் செயலற்றும் காணப்பட்டமை அடையாளம் காணப்பட்டன. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியில் கணக்குப் புத்தகங்களை அதற்கேற்ப திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.**

நிலையான சொத்துகள் மெய்மாய்விலிருந்து அடையாளம் காணப்பட்ட பொருள்களை அகற்றும் செயல்முறையை மேற்கொள்ளுமாறு, சொத்துகள் முகாமைத்துவப் பிரிவின் மேலதிக பொது முகாமையாளர் அவரது AGM(AM)/AFM(AM)/Acct (L,P&I)/PPE 2021 ஆம் ஆண்டுக்கான சேதமடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத நிலையான சொத்துக்களை அகற்றுவதற்கான - பௌதீக மெய்மையாய்வு 2021 என்ற கடிதத்தின் மூலம், ஏற்கனவே சம்பந்தப்பட்ட கிளைத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார். அகற்றும் நடைமுறைகளை உடனடியாக தொடங்குமாறு அந்தந்த கிளைக்கு அறிவுறுத்தப்பட்டதுடன் அதன்படி 2023 நிதிநிலை அறிக்கைகளில் தேவையான மாற்றங்கள் செய்யப்படும். 960.10 கிளையின் நிலையான சொத்துகளை அகற்றும் செயல்முறை 2023.07.20 அன்று நிறைவடைந்தது. சமீபத்திய நிலையான சொத்துகள் மெய்மையாய்வு முடிவுகளின் அடிப்படையில் ஏனைய கிளைகளின் அகற்றல் செயல்முறைகள் கிளை மட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

AFM (HQ) கிளையில் பராமரிக்கப்படுகின்ற ஆதனம், பொறி மற்றும் உபகரணப் பதிவேட்டின்படி சொத்துகளின் மொத்த மதிப்பு ரூபா 2,197,464,491 ஆனதுடன் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர சரிபார்ப்பில், அந்தந்த கிளைகள் ரூபா 2,184,961,820 ஆன சொத்துக்களை அவர்கள் ஏற்கனவே பயன்படுத்தி வருவதாக உறுதிப்படுத்தியிருந்தனர். எவ்வாறாயினும், கணக்காய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டபடி அந்தந்த கிளைகளால் ரூபா 12,502,671 பெறுமதியான சொத்துக்கள் உறுதிப்படுத்தப்படவில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளமையால் அதற்கேற்ப பதிவேடுகளை கணக்கிணக்கம் செய்து திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(உ) LKAS 20- அரசாங்க மானியங்களுக்கான கணக்கு மற்றும் அரசாங்க உதவியை வெளிப்படுத்துதல**

**இலங்கை அரசாங்கம் மற்றும் இரண்டு வெளிநாட்டுக் கடன் வழங்கும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகளின் கீழ் இரண்டு செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக மீளச் செலுத்துவதற்கான பொறுப்பை ஏற்கும் வகையில் மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் இறுதியில் சபைக்கு ரூபா 40.9 பில்லியன் பெறப்பட்டதுடன் நியமத்தின் பந்தி 3 இன் அடிப்படையில் அதனை அரசாங்க மானியங்களாகக் கணக்கிடுவதற்குப் பதிலாக, இலங்கை அரசாங்கத்திடம் (சபையுடனான துணைக் கடன் உடன்படிக்கைகள் இல்லை) இருந்து பெறப்பட்ட வட்டிக் கடன்களாகவும் சபையின் கடன்களாகவும் கணக்கிடப்பட்டிருந்தது. அதுமட்டுமல்லாமல் ஏனைய இரண்டு செயற்திட்டங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் மற்றும் இரண்டு வெளிநாட்டு கடன் வழங்கும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகளின் கீழ் பெறப்பட்ட ரூபா 8.2 பில்லியன் தொகையினை துணைக் கடன் ஒப்பந்தங்களின்படி சபையின் உரிமைத்துவமாக எடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் இணங்கியிருந்த போதிலும் அத் தொகையும் சபையின் வட்டிக் கடன்களாக காட்டப்பட்டிருந்தன.**

LKAS 20 இன் பந்தி 3 இல் உள்ளவாறு, அரசாங்கத்தின் மானியங்கள் என்பது நிறுவனத்தின் செயல்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான சில நிபந்தனைகளுடன் கடந்த அல்லது எதிர்கால இணக்கத்திற்கு ஈடாக ஒரு நிறுவனத்திற்கு வளங்களை மாற்றும் வடிவத்தில் அரசாங்கத்தின் உதவியாகும். ரூபா 40.9 பில்லியன் மதிப்பிலான இரண்டு கடன்களையும் அரசாங்க மானியங்களாகக் கணக்கிட திறைசேரியிடமிருந்து பணிப்புரை கிடைக்கவில்லை. மீதமுள்ள கடன்களை உரிமைத்துவமாக மாற்றுவது குறித்து பரிசீலிக்குமாறு திறைசேரிக்கு 2023 செப்தெம்பர் 21 அன்று கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டது. எனவே, இலங்கை அரசுக்கும் வெளிநாட்டு கடன் வழங்கும் நிறுவனங்களுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட வெளிநாட்டு கடன் ஒப்பந்தங்கள் மூலம் சபைக்கு கிடைத்த மேற்கூறிய ரூபா 40.9 பில்லியனை அரசாங்க மானியமாக கருத முடியாது.

குறிப்பிடப்பட்டுள்ள கடன் உடன்படிக்கைகள் தொடர்பில், ரூபா 8.2 பில்லியன் தொகையான இரண்டு கடன்களுக்காக இலங்கை அரசாங்கத்தின் சார்பாக திறைசேரி திணைக்களத்துடன் உபகடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உப கடன் உடன்படிக்கைகளின் படி, இ.மி.ச. இந்த கிடைப்பனவுகளை உரிமைத்துவத்தின் ஒரு பகுதியாகக் கருதி அதனை உரிமைத்துவமாக கணக்கீடு செய்தல் வேண்டும். இது குறித்து திறைசேரியிடமிருந்து பணிப்புரை கிடைக்கவில்லை.

**(ஊ) LKAS 21 - அந்நிய செலாவணி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்களின் விளைவுகள**

**நியமத்தின் பிரிவு 23 (அ) இன் அடிப்படையில், வெளிநாட்டு நாணய விடயங்களை அறிக்கையிடல் காலத்தின் முடிவிலுள்ள நாணயப் பரிமாற்று விகிதத்தைப் பயன்படுத்தி ரூபாவிற்கு மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், சபையால் நேரடியாகப் பெறப்பட்ட நான்கு செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ஆறு வெளிநாட்டு நாணயக் கடன்களின் மதிப்பை இறுதி நாணயமாற்று விகிதங்களைப் பயன்படுத்தி சபை ரூபாவிற்கு மாற்றியமைத்திருக்காததுடன், நியமத்தின் பிரிவு 28 இன் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் அதற்கேற்ப அந்நிய செலாவணி இலாபம்/நட்டம் எதுவும் அங்கீகரிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், மேற்கூறிய ஆறு செயற்திட்டங்களில் இரண்டு செயற்திட்டங்களிற்கு கடனாகப் பெறப்பட்ட தொகைக்குரிய மீதி உறுதிப்படுத்தல்களின் படி, மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் வட்டியுடன் கூடிய கடன் மீதி மற்றும் வருடத்திற்கான நட்டம் ஏறத்தாழ ரூபா 6,485 மில்லியனால் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.**

கடன்களுக்கான வெளிநாட்டு கடன் வழங்கும் முகவரின் உறுதிப்படுத்தல் பரிசோதனைக்கு கிடைக்கக்கூடியதாக இருப்பதுடன் அதன் நகல்களை இ.மி.ச. கணக்காய்வு அறிக்கைக்கான பதில்களுடன் சமர்ப்பிக்கின்றது. நிதியாண்டின் இறுதியில் கடன்களின் மாற்றங்களின் அந்நிய செலாவணி தாக்கம் அளவிடப்பட்டு பின்னர் கணக்கிடப்படும்.

வெளிநாட்டு நாணயத்தால் பரிந்துரைக்கப்பட்ட கடன்களை இலங்கை ரூபாவுக்கு மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டின் இறுதி நிதிநிலை அறிக்கைகளில் நாணயமாற்று விகித இலாபம் அல்லது ஏற்படும் இழப்புகள் தொடர்பில் தேவையான சீராக்கங்கள் செய்யப்படும்.

**(எ) SLFRS 09 - நிதிக் கருவிகள்**

**(i)** **வியாபாரக் கடன்பட்டோர் மதிப்பிழப்பு ஏற்படுத்துதல் தொடர்பாக வெளியிடப்பட்ட 610 ஆம் இலக்க 2023 பெப்ரவரி 02 ஆம் தேதியிட்ட கணக்குச் சுற்றறிக்கை மற்றும் 2.4.5.4 ஆம் இலக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் படி, 1 வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள வியாபாரக் கடன்பட்டோர் மீது 100 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், மூன்று விநியோக பிரிவுகளில் உள்ள 4 மாகாணங்களுடன் தொடர்புடைய ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள வியாபாரக் கடன்பட்டோர் மீதிக்காக ரூபா 10.28 மில்லியன் குறைவாகவும் ரூபா 56.59 மில்லியன் அதிகமாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. எனவே, மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான நட்டம் ரூபா 46.31 மில்லியனால் அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.**

2022 ஆம் ஆண்டின் தொடர்புடைய பட்டோலையில் ஏற்கனவே குறைவான/மிகையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்கால நிதிநிலை அறிக்கைகளில் இந்தப் பிழைகள் தவிர்க்கப்படும்.

**(ii)** **எதிர்பார்த்த கடன் இழப்பைக் கருத்தில் கொண்டு மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியிலுள்ள ரூபா 250 மில்லியன் நுகர்வோருக்கான கடன்கள் தொடர்பில் மதிப்பிழப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 196.87 மில்லியன் அல்லது மொத்த நுகர்வோர் கடன்களில் 79 சதவீதம் 5 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது..**

மதிப்பிழப்பு செயல்முறையை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நுகர்வோர் கடன்களுக்கான மதிப்பிழப்புக்கான ஏற்பாடுகள் அடுத்தடுத்த நிதிநிலை அறிக்கைகளில் செய்யப்படும். விநியோகப் பிரிவு 4 இன் வியாபாரக் கடன்பட்டோர் மதிப்பிழப்பு பட்டோலையில் நுகர்வோர் கடன்களுக்கான மதிப்பிழப்பு ஏற்பாடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும், நுகர்வோர் கடன்களின் 5 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள நிலுவைகளை நீக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும

**(iii)** **நிதிக்கூற்றுக்களிற்கான கணக்கீட்டுக் கொள்கைகளின் கொள்கை இல. 2.4.5.2 இன் படி, சபையின் நிதிச் சொத்துக்கள், வியாபார மற்றும் பிற பெறத்தக்கவைகள், வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் ஊழியர்களுக்கான கடன்கள் ஆகியவை சபையின் வியாபாரக் கடன்பட்டோரின் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பை அங்கீகரிப்பதற்கான நிதிச் சொத்துக்களில் உள்ளடங்குகின்றன. இதற்காக சபை ஒரு குறிப்பிட்ட அணுகுமுறை மற்றும் வழிமுறையை அறிமுகப்படுத்தியிருந்த போதிலும், ஏனைய கடன்பட்டோர் தொடர்பில் எந்த குறிப்பிட்ட நடைமுறையும் அறிமுகப்படுத்தப்படாததுடன், இதில் சில்லறைக் கடன்பட்டோர், புனித இடங்களிலிருந்து பெறவேண்டிய நிலுவைகள் போன்றவை அடங்குகின்றன. அதன்படி, விநியோக பிரிவு 01 மற்றும் விநியோக பிரிவு 04 இலுள்ள முறையே ரூபா 208.06 மில்லியன் மற்றும் ரூபா 49.24 மில்லியன் தொகையான ஓராண்டிற்கும் மேலான நிலுவைக் கடன்பட்டோர் மீது முறையே ரூபா 33.95 மில்லியன் மற்றும் ரூபா 3.1 மில்லியன் மட்டுமே கடன்பட்டோர் மதிப்பிழப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், விநியோகப் பிரிவு 02 மற்றும் விநியோகப் பிரிவு 03 இல் முறையே ரூபா 148.47 மில்லியன் மற்றும் ரூபா 66.6 மில்லியன் என ஒரு வருடமாக நிலுவையில் உள்ள நிலுவைத் தொகைக்கு எந்த ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. அதேபோன்று ஐந்தாண்டுகளாக நிலுவையில் உள்ள ரூபா 300.24 மில்லியனுக்கு இணையான எதிர்பார்த்த கடன் இழப்பை சரியாகக் கண்டறியாமல் ரூபா 64.31 மில்லியன் மதிப்பிழப்பு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இந்த அவதானிப்புகளின் காரணமாக, நிதிக்கூற்றுக்களிலுள்ள நிதிச் சொத்துகளின் முன்கொண்டு செல்லும் மதிப்பின் சரியான தன்மையை கணக்காய்வில் கண்டறிய முடியாதுள்ளது.**

ஏனைய கடன்பட்டோரின் கடன் மதிப்பிழப்பை அங்கீகரிக்க குறிப்பிட்ட அணுகுமுறை அல்லது வழிமுறை வரைவு செய்யப்படுகிறது. மேலும், நீண்ட காலமாக அறவிட முடியாதுள்ள நிலுவைகளை மீளப்பெற அல்லது பதிவழிப்புச்செய்ய பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன

ஏனைய கடன்பட்டோரிலுள்ள முக்கியமாக புனித ஸ்தலங்கள் மற்றும் சில்லறைக் கடன்பட்டோர்கள் இலவச சேவை இணைப்புகளை பெற்றுக் கொண்டவர்களாவர்.

**இலவச சேவை இணைப்புகள்**

"அனைவருக்கும் மின்சாரம்" என்ற அரசின் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட இணைப்புகள் இவையாவதுடன், மின்வலு அமைச்சகத்திடம் இருந்து இதற்காக நிதி பெறப்படவில்லை. எதிர்காலத்தில் அதை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**புனித ஸ்தலங்களிலிருந்து நிலுவையாக உள்ளவை**

இது இ.மி.ச. ஆல் தீர்க்கப்பட்ட புனித ஸ்தலங்களுக்கு ஏற்படும் எரிசக்தி செலவாவதுடன் இது அரசாங்கத்திடமிருந்து மீட்கப்பட உள்ளது. அரசாங்கத்திடம் இருந்து எந்த நிதியும் பெறப்படாததால், 31 டிசம்பர் 2022 இல் நிலுவையில் உள்ள தொகையை பதிவழிப்புச் செய்வதற்கான ஒப்புதலுக்காக சபைக்கு ஏற்கனவே ஒரு குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், புதிய கட்டண விகிதங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் இ.மி.ச. எரிசக்தி செலவினங்களைத் தீர்ப்பதை நிறுத்தியுள்ளது

**சில்லறைக் கடன்பட்டோர்**

ஒவ்வொரு நிலுவைத் தொகையையும் ஆய்வு செய்து, உரிய முறையில் ஏற்பாடுகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**(iv)** **சபையின் பரிமாற்றல் பிரிவிலுள்ள ரூபா 1.38 பில்லியன் தொகையான சில்லறைக் கடன்பட்டோர் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக காணப்படுவதுடன் அதிலுள்ள ரூபா 1.37 பில்லியன் தொகையானது AES Kelanithissa (Pvt) Ltd இடமிருந்து 2011 ஆம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ளது. இருப்பினும், மேற்கூறிய நியமத்தின் அடிப்படையில் அந்தக் கடனுக்காக எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பை சரியாக அங்கீகரிக்காமல், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் குறைபாட்டிற்காக ரூபா 563,330 மட்டுமே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.**
பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) எரிபொருள் விலை வேறுபாட்டை AES kelanitissa (Pvt) Ltd க்கு செலுத்திய பிறகு,இந்த தொகை இ.மி.ச. க்கு வழங்கப்படும் என்று 2022 வரை இ.மி.ச. உறுதியாக இருந்தது. மதிப்பிழப்பு குறிகாட்டிகளை மதிப்பீடு செய்த பிறகு இதற்காக ஏற்பாடு செய்யப்படவில்லை. இருப்பினும் 2023 இல் சபை தீர்மான இல. 23.08. 228.G இன் படி இத்தொகை இ.மி.ச. இற்கு கிடைக்காது என்ற அடிப்படையில் 2023 ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கைகளில் இருந்து ரூபா 1,368,964,445 ஏற்கனவே பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளது.

### 1.2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) இருப்பு பற்றாக்குறையுடன் தொடர்புடைய ரூபா 162.5 மில்லியன் வரவு மீதி மற்றும் இருப்பு மிகையுடன் தொடர்புடைய ரூபா 70.3 மில்லியன் செலவு மீதி என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.**

| பிரிவுகள் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு மிகை/ பற்றாக்குறை – தேறியது – | பதிலளிப்பு |
|---|---|---|
| DD01 | (13.96) மில். தேறியது | 30.09.2023 இல் உள்ள DD1 இன் இருப்புச் சீராக்கல் கணக்குகளின் மீதித் தொகை ரூ. 15.16 மில்லியன் ஆனதுடன் இதில் 1 ஆண்டுக்கான மீதி ரூ. 12.43 (பற்றாக்குறை) இது P&HM ஹெய்யந்துடுவ களஞ்சியத்துக்கு சொந்தமானது. PHM இன் கீழ் உள்ள ஹெய்யன்துடுவ களஞ்சியங்களின் இருப்பு பற்றாக்குறை குறித்து,<br>உள்ளக கணக்காய்வு கிளையால் விசாரணை நடத்தப்பட்டு, அந்த அறிக்கையின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். |
| DD02 | தேறியது : (9.00) மில்<br>மிகை : 8.4 மில்.<br>பற்றாக்குறை : (17.54) மில். | DD2 தொடர்பான மீதியானது முக்கியமாக EP மற்றும் WPN ஐக் கொண்டுள்ளது. WPN ஐப் பொறுத்தவரை, 2-3 ஆண்டுகள் மற்றும் 3-4 ஆண்டுகளிற்கான நிலுவைகள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் IT அதிகாரிகளின் உதவியுடன் அந்த ஆண்டில் பதிவழிக்கப்படும் மற்றும் 4-5 ஆண்டுகளுக்கான மிகுதியான ரூபா 8,417,459.03 இன்னும் விசாரணைக் கட்டத்தில் உள்ளதுடன் அது இன்னும் இறுதி செய்யப்படவில்லை.<br>மேலும், 5 ஆண்டுகளுக்கும் மேலான பற்றாக்குறை இருப்பு மீதியான ரூ (14,984,464) தொடர்பில் இரண்டு வழக்குகள் காணப்படுகின்றன. அதன்படி, ரூ.(14,033,469.83) ஆனது பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட எச்.பி. கருணாரத்ன உடன் சமப்ந்தப்பட்டுள்ளதுடன் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் (சிஐடி) இந்த வழக்கைக் கையாள்கின்றனர். மீதமுள்ள ரூ (950,995) ஆனது 2022 நவம்பரில் ஓய்வு பெற்ற டி.பி. ஆனந்த குமார உடன் தொடர்புடையதாகும். இந்தத் தொகை மீட்கப்பட்டு, 2023 ஆம் ஆண்டில் தொடர்புடைய பதிவுகள் பேரேட்டில் செய்யப்படும |
| DD03 | தேறியது: (51.69) மில் மிகை: 11.3மில். பற்றாக்குறை :63 மில். | DD3 பிரிவில் ரூபா 11.3 மில். மேலதிக இருப்பு காணப்படுவதுடன் ரூ.63 மில்லியன் இருப்பு பற்றாக்குறையும் காணப்பணடுகின்றது. (நிகர இருப்பு ரூ. 51 மில்.).<br>தேறிய இருப்புச் சீராக்கல் மீதித் தொகையான ரூ. 51 மில்லியன் இல் ரூபா 3.3 மில்லியன் என்பது ஊவா மாகாணத்துடன் தொடர்புடையது. இது கணக்கிணக்கம் செய்யப்படாதுள்ளதுடன் அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br>சப்ரகமுவ மாகாணம் தொடர்பான ரூ.1.7 மில்லியன் மீதி ஏற்கனவே பதிவழிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ. 0.5 மில்லியன் தொகையை அறவிட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.<br>மீதமுள்ள நிலுவைத் தொகை WPS 2 உடன் தொடர்புடையதுடன் 5 ஆண்டுகளாக இருப்புச் சீராக்கல் கணக்கில் மீதமுள்ள ரூ.60 மில்லியன் நிலுவைத் தொகைகளை தேவையான ஒப்புதலுடன் பரிசோதிக்கவும் பரிந்துரைகளை வழங்கவும் ஒரு குழு நியமிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| DD04 | தேறியது (0.04) மில். | நிலுவை தொகை ரூ. 35,400 ஆனது 2021 ஆம் ஆண்டிற்கான SP1 க்கு தொடர்புடைய இருப்புச் சீராக்கல் கணக்கின் மீதியாகும். இந்த பற்றாக்குறையானது 10 வகை LED ∴ப்ளட் லைட் 100W உருப்படியில் இருந்து ஏற்பட்டது. இந்த இருப்புப் பொருட்கள் அமைச்சகத்திடம் கொடுக்கப்பட்டன. CE (வர்த்தக)-SP1 ஆம் இலக்க 2023.09.04 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சகத்தின் செயலாளருக்கு இந்த விளக்குகளை திருப்பித் தருமாறு கடிதம் அனுப்பப்பட்டது. இன்றுவரை இந்தப் பொருட்களை அமைச்சகம் திருப்பித் தரவில்லை. |
| பிறப்பாக்கம் | தேறியது: (12.58) மில்.<br>மிகை 50.46 மில்.<br>பற்றாக்குறை -63மில் | <u>லக்விஜயா மின்வலு ஆலை</u><br>31 டிசம்பர் 2022 நிலவரப்படி காணப்பட்ட மேலதிக இருப்பு ரூபா 57,497,143 மற்றும் பற்றாக்குறை இருப்பு ரூ. 52,212,611 ஆகும். அவை இருப்புச் சீராக்கல் கணக்கில் உள்ளது. மேலதிக மற்றும் பற்றாக்குறைக்கான காரணங்களை ஆய்வு செய்ய குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. குழுவின் முடிவுகள் பெறப்பட்டதும், குழுவின் அறிக்கை ஒன்று சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டு, 2023 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபையின் ஒப்புதலுடன் இந்த நிலுவைத் தொகை பதிவழிக்கப்படும்.<br><u>அனல் மின் ஆலை</u><br>2023 ஆம் ஆண்டில் தெர்மல் காம்ப்ளக்ஸ் தொடர்பான நிலுவைத் தொகைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.<br><u>சமனல மின் ஆலை</u><br>2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறை மற்றும் மேலதிகங்களுக்கான விளக்கங்கள் களஞ்சியக் காப்பாளர்களிடமிருந்து அழைக்கப்பட்டு நிலுவையில் உள்ளன. 2021 ஆம் ஆண்டிற்கான குகுலே கங்கை மின் உற்பத்தி நிலையத்திற்கான பற்றாக்குறை மற்றும் மேலதிகக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. |
| சொத்து முகாமைத்துவம | தேறியது 4.93 மில் | இந்த மீதி முக்கியமாக பிரதேச அலுவலகம் வெதகெதர உடன் சம்பந்தப்பட்ட ஆர்.பி. வெடகெதர மற்றும் என்.பி.எல். சமரசிங்க ஆகியோரிடமிருந்து மீளப்பெறவேண்டிய இருப்பு பற்றாக்குறையைக் கொண்டுள்ளது. இந்த இருப்புப் பற்றாக்குறையை அறவிடுவதற்கு இ.மி.ச. இன் சட்டப் பிரிவானது சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை நடத்தி வருவதுடன் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், N.P.L சமரசிங்க இடமிருந்து மீளப்பெறக்கூடிய மீதியைப் பொறுத்தவரை இ.மி.ச. இன் ஓய்வூதிய நிதியத்தின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய நிதியிலிருந்து இதனை மீளப்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| **மொத்தம்** | **(92.20)** | |

**(ஆ) 2016/17 மதிப்பீட்டின் ஆண்டிலிருந்து 2019/20 வரை செலுத்தப்பட்ட கோரக்கூடிய கால அளவைத் தாண்டிய பொருளாதார சேவைக் கட்டணங்கள் (ESC) ரூபா 3.91 பில்லியன் விரிவான வருமான அறிக்கைகளில் செலவுகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, ஆண்டின் தொடக்கத்தில் காணப்பட்ட நிறுத்திவைக்கப்பட்ட நட்டம் மற்றும் மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டுக்கான நட்டம் என்பன முறையே ரூபா 2.7 பில்லியன் மற்றும் ரூபா 1.21 பில்லியனால் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.**

வருமான வரிப் பொறுப்புகளைக் கணக்கிடுவதற்கான வரிக்கு எதிராக சாட்டுதல் செய்வதற்கு ஈஎஸ்சி இனைக் கோர முடியாது, ஏனெனில் உரிமைகோரக்கூடிய காலம் தாண்டியிருப்பதுடன் உரிமை கோரக்கூடிய காலத்திற்குள் இ.மி.ச. வரி விதிக்கக்கூடிய நட்டங்களை ஈட்டியிருப்பதுமாகும். அதன்படி, பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெற்ற பிறகு, குறிப்பிடப்பட்ட தொகை 2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகளில் விரிவான வருமானத்திற்கு செலவினமாக அறவிடப்படும். 2023 நவம்பர் 20 ஆம் தேதி நடைபெறும் அடுத்த பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பரிசீலிப்பதற்கான சபைபத்திரம் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.

**(இ) விநியோகப் பிரிவுகளிலுள்ள ரூபா 16.9 பில்லியன் மதிப்பில் பூரணப்படுத்திய பல்வேறுபட்ட 11,429 வேலைகள், தொடர்புடைய சொத்துக் கணக்குகளுக்கு மாற்றப்படாமல், இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக முடிவுறா வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், 5 ஆண்டுகளுக்கும் மேலாக சொத்து முகாமைத்துவப் பிரிவின் முடிவுறா வேலைகள் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ள ரூபா 6.2 மில்லியன் மதிப்பிலான மூன்று முடிக்கப்பட்ட வேலைகளை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இவற்றிற்கான தேய்மானத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யாததால், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான நட்டத்தின் மீதான தாக்கத்தை தகவல் பற்றாக்குறையால் கண்டறிய முடியவில்லை.**

<table>
<tr><th>பிரிவுகள</th><th>வேலை களின் எண்ணிக்கை</th><th>2 ஆண்டுக்கு மேற்பட்ட மீதிகளின் பெறுமதி</th><th>பதிலளிப்பு</th></tr>
<tr><td>DD-01</td><td>1816</td><td>1,800</td><td>
<table>
<tr><th>மாகாணம்</th><th>2022.12.31 இல் வேலைகளின் எண்ணிக்கை</th><th>2022.12.31 இல் பெறுமதி ரூபா மில்.</th><th>2023.03.31 இல் வேலைகளின் எண்ணிக்கை</th><th>2023.03.31 இல் பெறுமதி ரூபா மில்.</th></tr>
<tr><td>CC</td><td>14</td><td>95.79</td><td>114</td><td>741.81</td></tr>
<tr><td>NWP 1</td><td>1049</td><td>986.92</td><td>6657</td><td>1830.70</td></tr>
<tr><td>NWP 2</td><td>15</td><td>42.16</td><td>3694</td><td>567.02</td></tr>
<tr><td>NCP</td><td>643</td><td>135.09</td><td>7904</td><td>1027.23</td></tr>
<tr><td>NP</td><td>85</td><td>373.67</td><td>1340</td><td>1066.11</td></tr>
<tr><td>PHM</td><td>10</td><td>170.85</td><td>42</td><td>415.55</td></tr>
<tr><td>SESRIP</td><td>1</td><td>-</td><td>-</td><td>-</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>1816</td><td>1804.48</td><td>19751</td><td>5648.42</td></tr>
</table>
<br>SESRIP செயற்திட்டத்தின் முடிவுறா வேலைகளின் பெறுமதி 2023 மே மாத நிதிக்கூற்றுக்களின் மூலம் செயற்திட்டப் பிரிவுக்கு மாற்றப்பட்டது. மேலும், கால அடிப்படையில் பூரணப்படுத்திய வேலைகளை சொத்துக்களிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>DD-02</td><td>3240</td><td>5,510</td><td>அறிக்கையின் படி, DD2 இன் 4-5 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட முடிவுறா வேலைகளின் ரூபா 1இ596இ732இ204.60 கிரயமான 904 வேலைகள் பூரணப்படுத்திய வேலைகளாவதுடன் அவை இன்னும் சொத்துக்களிற்கு மாற்றப்படவில்லை. மேற்படி காலப்பகுப்பாவில் காட்டப்படுகின்றவை முடிவுறா வேலைகளான போதிலும், மூன்றாம் தரப்பினரின் எதிர்ப்புகள், அகற்றல்களிற்கான அனுமதிகள் கிடைக்காமை, பாவனையாளர்களின் தேவைகளின் மாற்றங்கள் போன்றன காரணமாக பூரணப்படுத்தப்படாதுள்ள முடிவுறா வேலைகளே அவையாகும் என்பதைக் கவனித்தல் வேண்டும்.<br><br>2022.12.31 இல் உள்ளவாறான 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட 3240 வேலைகளில் ரூபா 2,490,295,105 பெறுமதியான 1656 வேலைகள் தற்போது நிலையான சொத்துக்களிற்கு மாற்றப்படுகின்றன</td></tr>
<tr><td>DD-03</td><td>5200</td><td>4,170</td><td>அந்த வேலைகளில், 2023 செப்தெம்பர் அளவில் ரூபா 1,562 மில்லியன் பெறுமதியான 3,946 வேலைகள் அகற்றப்பட்டுள்ளதுடன் எஞ்சிய வேலைகளையும் அகற்றுவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.</td></tr>
<tr><td>DD-04</td><td>1171</td><td>4,419</td><td>2022.12.31 இல் காணப்பட்ட முடிவுறா வேலைகளில் 2023 ஆம் ஆண்டில் பெறுமளவு வேலைகள் அகற்றப்பட்டுள்ளதுடன் நிர்மாணப் பிரிவு/ வர்த்தகப் பிரிவு மற்றும் கணக்கியல் பிரிவுள்ள எஞ்சிய வேலைகளையும் பூரணப்படுத்திலின் பின்னர் சொத்துக்களிற்கு மாற்றுவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆகையால், அந்தப் பிரிவுகளிலுள்ள முடிவுறா வேலைகளின் எண்ணிக்கையில் குறிப்பிடக்களவு குறைவைக் (26.4%) காணலாம்.</td></tr>
<tr><td>AM</td><td></td><td>6.2</td><td>DGM -DD3 பிரிவானது மின்பிறப்பாக்கியை பொருத்துமாறு கோரியிருந்ததுடன், அதற்கமைய னுனு3 சார்பாக CE (PP) பிரிவு மின்பிறப்பாக்கியை கொள்வனவு செய்தது. அதனைத் தொடர்ந்து, DGM - DD3 பிரிவு அந்த மின்பிறப்பாக்கியை எடுத்துக் கொண்டது. இந்த சிக்கல் காரணமாக CE (PP) பிரிவில் ரூபா 6.1 மில்லியன் பெறுமதியான முடிவுறா வேலை காண்பிக்கப்படுகின்றது. இருப்பினும், இந்த சிக்கலைத் தீர்ப்பதற்காக CE ( PP) பிரிவு DGM- DD3 பிரிவுடன் கலந்துரையாடி வருகின்றது.</td></tr>
</table>

**(ஈ) அசாதாரண செலவு நிலுவைகள் எதிரீடு செய்யப்பட்டதன் காரணமாக விநியோகப் பிரிவுகளிலுள்ள முடிவுறா வேலைகள் மீதி ரூபா 12.82 மில்லியனால் குறைத்துக் குறப்பட்டிருந்தது.**

| பிரிவுகள் | முடிவுறா வேலையிலுள்ள செலவு மீதி | பதிலளிப்பு |
|---|---|---|
| DD-01 | 2.03 | இது முக்கியமாக 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட பொருண்மையான திரும்பல்கள் மற்றும் சாதகமான விலை முரண் கணக்கீடு காரணமாக ஏற்பட்டதாகும். கொழும்பு நகர மீதிகள் ஏற்கனவே அகற்றப்பட்டுள்ள துடன் வடமத்திய (NCP) மாகாணத்தின் மாகாண செலவினக் கணக்காளர்களுக்கும் நிலுவைத் தொகையை அகற்ற அறிவுறுத்தப்பட்டதுடன் இந்த நிலுவைகள் 2023 இல் அகற்றப்பட்டன |
| DD-02 | 9.16 | முடிவுறா வேலைகள் கணக்கில் செய்யப்பட்ட பெரும்பாலான செலவுப் பதிவ-கள், வேலைகளின் பொருட்கள் திரும்பிவருதல் மதிப்பை அல்லது பல்வேறு காரணங்களால் வேலைகள் இரத்து செய்யப்பட்டதால் திரும்பிய பொருட்களின் கிரயத்தைக் குறிக்கிறது. |
| DD-03 | 1.63 | மொத்த மீதியும் சப்ரகமுவ மாகாணத்துடன் தொடர்புடையது என்பதுடன் 2023 ஆம் ஆண்டின் நிதிக் காலப்பகுதியில், அசாதாரணமான செலவு நிலுவை-களை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன, மேலும் முடிக்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்ட முடிவுறா வேலை மீதிகளை சொத்துக் கணக்குகளுக்கு மாற்றும் செயல்முறையின் மூலம் இரத்தினபுரி வெளிச்சமூட்டல் திட்டத்தின் முடிவுறா வேலைகள் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள செலவு நிலு-வைகளை (கிரய மையம் 710.00) பேரேட்டில் இருந்து அகற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| | 12.82 | |

**(உ) 2018 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட கம்பஹா பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தின் நிர்மாணத்திற்காக ரூபா 107.47 மில்லியன் செலவானதுடன், மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் இறுதிக்குள் கூட அதனை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல், முடிவுறா வேலைகள் கணக்கில் சேர்க்கப்பட்டிருந்தது. மேலும், கணக்காய்வின் மூலம் செய்யப்பட்ட கணிப்பீடுகளின் படி, நிறுத்திவைக்கப்பட்ட நட்டம் மற்றும் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான நட்டம் என்பன முறையே ரூபா 9.12 மில்லியன் மற்றும் ரூபா 2.69 மில்லியனாகக் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது.**

2023 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கைகளில் இந்த மீதித் தொகையை மூலதனமாக்கி சொத்துகளுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ஊ) புத்தளம் நிலக்கரி மின் திட்டத்திற்காக (ii) கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 124.30 மில்லியன் பெறுமதியான நான்கு வாகனங்கள் 2014 இல் திட்டம் நிறைவடைந்த பின்னரும் மூலதனமாக்கப்படாது அதற்குப் பதிலாக, அந்தத் தொகையானது முடிவுறா வேலைகள் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், அந்த வாகனங்களின் தேய்மானம், திட்டம் முடிவடைந்த நாளிலிருந்து அங்கீகரிக்கப்படவில்லை. அதற்கு மேலதிகமாக இவ்வருட இறுதிவரை கூட இந்த வாகனங்களின் உரிமையை சபைக்கு மாற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.**

இந்த வாகனங்கள் இன்னும் சிஎம்இசி (ஒப்பந்ததாரர்) மூலம் இ.மி.ச. இடம் ஒப்படைக்கப்படாததுடன் வாகனங்களின் உரிமை இன்னும் இ.மி.ச. இக்கு மாற்றப்படவில்லை. எனவே அவை இ.மி.ச. இன் சட்டப்பூர்வ உரிமையின் கீழ் இல்லாத போது அதை மூலதனமாக்கவோ அல்லது தேய்மானம், செய்யவோ முடியாது. இ.மி.ச. இக்கு உரிமையை மாற்றிய பின்னர் மேற்கண்ட வாகனங்கள் மூலதனமாக்கப்படும் என்பதுடன் அதற்கேற்ப தேய்மானம் வசூலிக்கப்படும். இந்த பிரச்சனை தொடர்பாக CMEC உடனான தொடர் நடவடிக்கையை தலைமை உள்ளக கணக்காய்வாளர் ஏற்கனவே எடுத்துள்ளார் அத்துடன புரிந்துணர்வு ஒப்பந்த நிபந்தனைக்கு அமைய் இ.மி.ச. இற்கும் CMEC இடையே கையொப்பமிடப்பட்ட செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு ஒப்பந்தம் முடிவடைந்த பின்னர் வாகனங்கள் ஒப்படைக்கப்படும் என்று CMEC கூறியுள்ளது.

**(எ) 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிற்கான முன்னைய ஆண்டுச் சீராக்கல்களை 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் சபை செய்திருப்பது அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ள நிறுத்திவைக்கப்பட்ட நட்டம் ரூபா 89.6 பில்லியனால் திரிவுபடுத்தப்பட்டிருந்தது. எனவே, எதிர்வரக்கூடிய ஆண்டுகளில் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான இலாபத்தில் மாற்றங்களைச் செய்வதற்கான சாத்தியக்கூறுகளை கணக்காய்வில் நிராகரிக்க முடியாதுள்ளது.**

| | 2021<br>ரூபா 000 | 2022<br>ரூபா 000 |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னைய ஆண்டுச் சீராக்கம் | 8,088,753 | - |
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னைய ஆண்டுச் சீராக்கம் | (6,602,605) | (78,397,384) |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னைய ஆண்டுச் சீராக்கம் | - | (12,688,648) |
| **மொத்தம்** | **1,486,148** | **(91,086,032)** |

எதிர்காலத்தில் இதுபோன்ற மீள்வைத்தல்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இ.மி.ச. இன் சிக்கலான செயல்பாடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் தன்மை காரணமாக, நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான தவறான அறிக்கைகளிலிருந்து விடுபட்டிருப்பதை இருப்பதை உறுதி செய்வதற்காகவும், முந்தைய ஆண்டுகளில் ஏதேனும் தவறான கூற்றுகள் ஏற்பட்டிருந்தால் அதைத் திருத்துவதற்கும் நிதிக்கூற்றுக்கள் மீளமைக்கப்பட வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன.

மேலும், 2023-02-01 தேதியிட்ட அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் பொது முயற்சிகள் திணைக்களம் 2023-02-17 தேதியிட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு இணங்க 2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் செய்யப்பட்ட கடன் கொடுப்பனவுகளுக்காக 2022 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் புத்தளம் நிலக்கரி மின் கடன் மற்றும் 2022.12.31 இல் இறுதியில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் நிலுவையில் உள்ள மொத்த கடனை மூலதனமாக மாற்றுவதற்காக முந்தைய ஆண்டுச் சீராக்கலை மேற்கொள்ள வேண்டியிருந்தமை தவிர்க்க முடியாததும் எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதுமாகும்.

அத்துடன், 2022-07-18 தேதியிட்ட PED/I/CEB/02/11(i) ஆம் இலக்க கடிதத்தின் மூலம், 2022 ஆம் ஆண்டின் முதல் கடன் தவணையை உரிமைத்தவமாக மாற்றுமாறு பொது முயற்சிகள் திணைக்களம் இ.மி.ச. இக்கு உத்தரவிட்டது. அதன்படி மொத்தம் ரூபா 12.18 பில்லியன் 2021 இல் சரி செய்யப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டுக்கு முன்னரான ரூபா 77.4 பில்லியன் தொகை 2022 ஆம் ஆண்டில் மேற்கூறிய கடனின் கீழ் மாற்றப்பட்டது.

**(ஏ) வடமேல் மாகாணம் 2 இலுள்ள அசாதாரன செலவு நிலுவைகளை எதிரீடுசெய்ததன் காரணமாக விநியோக பிரிவு 01 இலுள்ள வாடிக்கையாளர் கடன் மீதிகள் ரூபா 23.97 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டுள்ளன**

பொதுவாக வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் வரவு மீதியாகக் காணப்படுகின்ற அதேசமயம், அதிக பணம் செலுத்துதல், சரிசெய்தல் போன்றவற்றின் காரணமாக, சில வாடிக்கையாளர் கடன் கணக்குகள் செலவு மீதிகளைக் கொண்டுள்ளன. கணக்கீட்டு நியமங்கள் வரவு மீதிகளை செலவு மீதிகளிற்கு ஈடுசெய்ய அனுமதிக்கின்றன. மேலும், இ.மி.ச. இன் 2010/GM/23/FM ஆம் இலக்க 23.12.2010 தேதியிட்ட சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி, பெறத்தக்க கடன் கணக்குகளை அவற்றின் செலவு நிலுவைகளுடன் ஈடுசெய்வதை அனுமதிக்கின்றது. .

**(ஐ) ரூபா 89.57 மில்லியன் தொகையான வழிச் சரக்குகள் ஒரு வருடத்திற்கும் மேலாக கணக்குப் புத்தகங்களில் தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கப்படாமல் வைக்கப்பட்டுள்ளன. விநியோகப் பிரிவு 01 இலுள்ள வழிச் சரக்குத் தொகையான ரூபா 65.26 மில்லியன் பொருட்களிலுள்ள ரூபா 60.38 மில்லியன் என்பது லங்கா டிரான்ஸ்ஃபார்மர்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 5 ஆண்டுகளுக்கு முன்பு கால்வனிசங் செய்வதற்காக அனுப்பப்பட்ட மின்மாற்றிகளைக் குறிக்கின்ற போதிலும், மீளாய்வாண்டின் இறுதிரையிலும் அத்தொகை பெறப்பட்டிருக்கவில்லை.**

| பிரிவு | 01 ஆண்டுக்கு மேற்பட்ட GIT தொகை (ரூபா) | பதிலனிப்பு |
|---|---|---|
| DD01 | 65.3 மில். | ரூபா 65.26 மில்லியன் மீதியானது DD1 உடன் தொடர்புடையதுடன் அதில் ரூ.60.38 மில்லியன் லங்கா டிரான்ஸ்பார்மர்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட மின்மாற்றிகளுடன் தொடர்புடையதாகும். ஆவணச் சான்றுகளைக் கண்டறிவது கடினமாக இருப்பதுடன் ஆவணச் சான்றுகள் கிடைத்தவுடன் அவற்றை தீர்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| DD02 | 17.8 மில். | வழிச்சரக்கு கணக்குகளில் உள்ள பொருட்கள், LTL கால்வனிசர்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களைக் குறிக்கும். அந்த கையிருப்பு பொருட்கள் இ.மி.ச. க்கு திரும்பும் வரை வழிச்சரக்கு கணக்கில் கணக்கிடப்படுகின்றது. ஒவ்வொரு கேள்வி கோரலின் படியான வழிச்சரக்குக் கணக்கில் உள்ள பொருட்களின் விரிவான பட்டியல் டிசம்பர் 2022 முடிவடைந்த ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த நிலுவைகளை தீர்ப்பதற்காக DD2 இன் P&D கிளை மூலம் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br>2022 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ரூபா 1,298,448.25 பெறுமதியான 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட வழிச்சரக்குகள் 2023 இல் தீர்க்கப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| DD03 | 2.1 மில். | ரூபா 2 மில்லியன் தொகையானது DD3 இன் சப்ரகமுவ மாகாணத்துடன் தொடர்புடையதுடன் மீதியை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| DD04 | 4.3 மில். | 1 வருடத்திற்கும் மேலான GIT நிலுவைகளை தீர்ப்பதற்கு க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது |
| மொத்தம் | 89.5 மில். | |

**(ஒ) வினியோக பிரிவு 03 இன் கீழுள்ள கூட்டிணைப்பு அலுவலகம் மற்றும் சப்ரகமுவ (துணைப் பொது முகாமையாளர்) அலுவலகம ஆகியவற்றிலுள்ள வழிச்சரக்குகளின் மீதியில் ரூபா 26.97 மில்லியன் அசாதாரண செலவு மீதி அவதானிக்கப்பட்டது.**

கூட்டிணைப்பு அலுவலகத்திலுள்ள கணக்கீட்டு வழு காரணமாக ஏற்பட்ட ரூபா 24 மில்லியன் மீதியானது ஏற்கனவே சரிசெய்யப்பட்டது. சப்ரகமுவ மாகாணத்துடன் தொடர்புடைய எஞ்சிய ரூபா 2 மில்லியன் தொகை தீர்க்கப்படவுள்ளது.

**(ஓ) 2002 ஆம் ஆண்டு முதல் பிரிவுகளுக்கிடையேயான நடப்புக் கணக்குகளிலுள்ள நிலுவைகள் புலனாய்வு செய்யப்பட்டு தீர்த்து வைக்கப்படாது, 2004 ஆம் ஆண்டில் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றப்பட்டதால், விநியோகப் பிரிவு 01 மற்றும் விநியோக பிரிவு 02 இலுள்ள ரூபா 557.94 மில்லியன் வரவு மீதியும் ரூபா 556.81 மில்லியன் செலவு மீதியும் தீர்க்கப்படாமல் உள்ளது.**

2004 இல் நடைபெற்ற பிரிவுகளின் அதிகாரப் பரவலாக்கத்தின் போது DD1 முதல் DD2 வரையிலான ரூபா 556.81 மில்லியன் செலவு மீதியும் ரூ.557.94 மில்லியன் வரவு மீதியும் பரிமாற்றக் கணக்கில் காணப்பட்டன. இந்த வரவு மற்றும் செலவு மீதிகளின் தன்மை மற்றும் விவரங்களைச் சரிபார்க்க ஆவணச் சான்றுகள் கிடைக்கவில்லை. எனவே, நிதிநிலை அறிக்கைகளில் சிறந்த வெளிப்படுத்தல் நோக்கத்திற்காக இவை வியாபார கடன்பட்டோர் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கணக்காய்வாளரின் பரிந்துரைகளுக்கு இணங்க, மேலே உள்ள நிலுவைகள் மறுவகைப்படுத்தப்பட்டு, மிட்ஃபின் முறைமையில் வெளிப்படைத் தன்மையுடன் எதிரீடு செய்யப்படாது காட்டப்பட்டுள்ளது.

**(ஔ) 2019 செப்டம்பர் 24 ஆம் தேதியிட்ட 19/2622/113எ074 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் படி லக்விஜய மின் உற்பத்தி நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கான செயற்திட்ட முகாமைத்துவ அலகு ஒன்றை சபை நிறுவியுள்ளது. இருப்பினும், ரூபா 167.31 மில்லியன் தொகை செலவிடப்பட்ட பின்னர் 2021 யூலை 26 அன்று அமைச்சரவையால் எடுக்கப்பட்ட அரசாங்கக் கொள்கையின் அடிப்படையில் 2021 அக்டோபர் 26 அன்று செயற்திட்டத்தை முடுவதற்கான முடிவை பணிப்பாளர் சபை எடுத்தது. எவ்வாறாயினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் பதிவழிப்பதற்கு அல்லது உரிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் ரூபா 167.62 மில்லியன் தொகை மூலதன முடிவுறா வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.**

செலவினங்களை பதிவழிப்புச் செய்வதற்கான சபைப் பத்திரம் கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் கணக்காய்வுக் குழு அதை மதிப்பாய்வு செய்துள்ளது. கணக்காய்வுக் குழுவின் முடிவு கிடைத்ததும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஃ) 23 வாகனங்களின் பெறுமதி மற்றும் அதன் மீதான திரட்டப்பட்ட தேய்மானம் என்பன லக்விஜய மின் நிலையத்தின் சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்படாததுடன் அதன் விளைவாக, போதிய தகவல் இல்லாததால் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்படவில்லை.**

இந்த 23 வாகனங்களிற்கான கிரயங்கள் கிடைக்காததால், சொத்துப் பதிவேட்டில் அவற்றை பதிவு செய்யக் கூடிய தகுந்த கணக்கீட்டுப் பரிகாரத்தை பரிந்துரைக்க ஒரு குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு சமீபத்தில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. 23 வாகனங்களில் 21 வாகனங்களின் கிரயத்தை இந்தக் குழுவால் கண்டறிய முடிந்தது, மேலும் கீழே கொடுக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைகள் 2023 ஆம் ஆண்டிற்கான அடுத்த நிதிநிலை அறிக்கைகளில் அதற்கேற்ப சரிசெய்யப்படும்.

- 21 வாகனங்களின் கிரயமானது அவற்றின் உரிமையானது இ.மி.ச. க்கு மாற்றப்பட்ட உரிய திகதியில் காணப்பட்ட கிரயத்தில் பதிவு செய்யப்பட்டு தொடக்கத்திலிருந்தே தேய்மானம் பதிவு செய்யப்பட வேண்டும்.

- இந்த வாகனங்களின் கிரயமானது, LVPP கணக்குப் புத்தகங்களில் உள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் (PPE) ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள சொத்துக்களின் கிரயத்தில் சேர்க்கப்பட்டுள்ளது எனக் கருதி, வாகனங்களைத் தனித்தனியாக அங்கீகரிக்க PPE க்கு தொடர்புடைய பதிவுகள் செய்யப்படும்.

- கிரயத்தைக் கண்டுபிடிக்க முடியாத இரண்டு வாகனங்களின் மதிப்பு மற்றும் பயனுள்ள ஆயுளைக் கண்டறிய ஒரு குழு நியமிக்கப்படும்.

இந்த வாகனங்களின் கிரயம் இல்லாத காரணத்தால் 2022 இல் இவை கணக்குப் புத்தகத்தில் சேர்க்கப்படவில்லை. இருப்பினும், இந்த வாகனங்களின் மதிப்பு ஒரு குழுவால் தீர்மானிக்கப்பட்டதுடன் அதன்படி ஆகஸ்ட் 2023 இல் கணக்குப் புத்தகங்களில் சேர்க்கப்பட்டது.

**(க) 2022 பெப்ரவரி 15 அன்று வெளியிடப்பட்ட 2267/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு சமர்ப்பித்த விலைப்பட்டியல்களின் படி, விநியோகப் பிரிவுகள், பிறப்பாக்கப் பிரிவு மற்றும் விநியோகப் பிரிவு தொடர்பான 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த ஒழுங்குபடுத்தல் வரித் தொகை ரூபா 209.68 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 167.25 மில்லியன் மட்டுமே கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையால் ரூபா 42.43 மில்லியன் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**2022 இன் வருடாந்த தீர்வைக் கொடுப்பனவு மீதான கணக்காய்வு ஐயவினாவுக்கான பதில்கள்**

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 46(2) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 35 ஆம் இலக்க பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு சட்டத்தின் 33 ஆம் பிரிவு ஆகிவற்றின் படி, எந்தவொரு ஆண்டினதும் வருடாந்த தீர்வை தொடர்பில் ஆணைக்குழு பின்வருவனவற்றை கருத்திற்கொள்கின்றது.

- முன்னைய ஆண்டுக்கான ஏதேனும் அறவிடப்படாத செலவினங்கள் காணப்படுகின்றதா என்பதாக
- தொடர்ந்துவரும் வருடத்தின் செலவினங்களை சமாளிப்பதற்காக குறித்தவொரு ஆண்டின் ஆணைக்குழுவின் செலவினத்தை மிகுத்த வருமானம் காணப்படுகின்றதா என்பதாக

ஆகையால், வருமாந்த தீர்வையைக் கணிப்பிடுவதற்குத் தேவையான அவ்வாறான தகவல்களை இ.மி.ச. இற்கு சமர்ப்பிக்குமாறு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவை இ.மி.ச. கோரியது. ஆதற்கமைய கோரப்பட்ட தகவல்கள் PUC/LIC/CEB/2022/74 ஆம் இலக்க 2022.10.03 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் ஆணைக்குழு சமர்ப்பித்திருந்தது. சமர்பித்திருந்த தகவல்களின் படி 2021 ஆம் ஆண்டில் ரூபா 212.5 மில்லியன் தொகையை மின்சாரத் துறையின் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் சார்பாக இந்த ஆணைக்குழு செலவிட்டுள்ளது. இருப்பினும், 2021 ஆம் ஆண்டில் இ.மி.ச. செலுத்திய தீர்வைத் தொகை ரூபா 159.9 மில்லியன் ஆனதுடன் அது ஆணைக்குழு செலவிட்ட தொகையிலும் குறைவானதாகும்.

அதேவேளை, நிதி நிலைமை அறிக்கையானது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 784,517,162.00 திரட்டிய நிதியத்தையும் ரூபா 109,578,047 செயற்பாட்டு மிகையையும் காட்டுகின்றது. அதன்படி, 2002 இன் 35 ஆம் இலக்க ஆணைக்குழு சட்டத்தின் 33(1) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதாவது **'தொடர்ந்துவரும் வருடத்தின் செலவினங்களை சமாளிப்பதற்காக குறித்தவொரு ஆண்டின் ஆணைக்குழுவின் செலவினத்தை மிகுத்த வருமானம் முன்கொண்டு செல்லப்படுதல் வேண்டும்'** என்பதற்கு முரணாக ஆணைக்குழு தனது மிகையை முன்கொண்டு செல்லாது திரட்டி வைத்துள்ளது.

அத்துடன், 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டிற்கான இயலளவு வீதம், கேள்வி மற்றும் எரிசக்தியினை ஆணைக்குழு 25 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

மேற்படி நிலைமைகளின் கீழ், 2021 ஆம் ஆண்டிற்கான வர்த்தமானி அறிவித்தலில் (2224/47 ஆம் இலக்க 2021.04.23 ஆந் தேதியிட்ட) வெளியிடப்பட்ட வீதங்களிற்கு அமைய வருடாந்த தீர்வையை மீள மதிப்பீடு செய்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்தது. அதற்கமைய, 2022 ஆம் ஆண்டிற்காக ஆணைக்குழுவிற்கான மொத்த வருடாந்த ஒழுங்குபடுத்தல் தீர்வைத் தொகையும் அதில் ஆணைக்கு 2022 ஆம் கோரிப்பெற்ற தொகையும் கீழே தரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்கான இ.மி.ச. இன் கணிப்பீட்டின் படி மொத்த தீர்வை ஸ்ரீ ரூபா | | 167,252,510.00 |
| 2022 ஆம் ஆண்டிற்காக ஆணைக்குழுவால் பட்டியலிடப்பட்ட தீர்வை | = ரூ. | 209,676,300.00 |
| **வேறுபாடு** | = ரூ. | 42,423,790.00 |

அதற்கமைய, 2022 ஆம் ஆண்டிற்கான இ.மி.ச. இன் கணிப்பீட்டின் படியான ரூபா 167,252,510.00 மொத்த தீர்வைத் தொகை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது.

| | பிரிவு | உரிம இல. | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 1 | பிறப்பாக்கம் | EL/GB/09-001 | 41,869,000 .00 |
| 2 | மின்கடத்தல | ELfr/09-002 | 25,778,400.00 |
| 3 | DD - 1 | EL/D/09-003 | 30,088,400.00 |
| 4 | DD - 2 | EL/D/09-004 | 35,003,110.00 |
| 5 | DD - 3 | EL/D/09-005 | 19,772,800.00 |
| 6 | DD - 4 | EL/D/09-006 | 14,740,800.00 |
| | மொத்தம் | | **167,252,510.00** |

மேற்படி விடயத்திற்காக 2022.12.08 ஆந் திகதி இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் அங்கீகாரமும் பெறப்பட்டது.

**கா) மகாவலி வளாகத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழுள்ள சிவில் வேலைகளின் கீழ் ரூபா 63.54 பில்லியன் பெறுமதியான அணைப் பணிகள், சுரங்கப் பணிகள், டெயில்ரேஸ் பணிகள் மற்றும் உட்செலுத்தக் கால்வாய் ஆகியவை காட்டப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், கூறப்பட்ட தொகையின் சரியான தன்மை மற்றும் கையகப்படுத்துதல் அல்லது சபைக்கு அந்தந்த சொத்துக்களின் உரிமை ஆகியவை குறித்த தகவல்கள் இல்லாததால் கணக்காய்வில் அதனை மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.**

| கிரய நிலையம | மின்வலு நிலையம் | விபரம் | சொத்தின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| 831.00 | விக்டோரியா மின்வலு நிலையம் | சுரங்க வேலைகள் | 9,287,094,251.25 |
| | | அணைக்கட்டு வேலைகள் | 5,125,656,824.00 |
| | | மொத்தம் | 14,412,751,075.25 |
| 832.00 | கொத்மலை மின்வலு நிலையம் | சுரங்க வேலைகள் | 11,712,155,418.43 |
| | | அணைக்கட்டு வேலைகள் | 10,374,925,875.87 |
| | | மொத்தம் | 22,087,081,294.30 |
| 833.00 | கொத்மலை மின்வலு நிலையம் | கல்பதித்தல் வேலைகள் | 65,534,014.42 |
| | | சுரங்க வேலைகள் | 1,965,525,213.05 |
| | | அணைக்கட்டு வேலைகள் | 550,353,662.58 |
| | | மொத்தம் | 2,581,412,890.05 |
| 834.00 | போவதென்ன மின்வலு நிலையம | சுரங்க வேலைகள் | 1,867,251,703.63 |
| | | கல்பதித்தல் வேலைகள் | 101,574,971.11 |
| | | மொத்தம் | 1,968,826,674.74 |
| 835.00 | ரன்தெனிகல மின்வலு நிலையம் | சுரங்க வேலைகள் | 1,735,715,967.72 |
| | | அணைக்கட்டு வேலைகள் | 11,011,007,493.48 |
| | | மொத்தம் | 12,746,723,461.20 |
| 836.00 | ரன்தம்பே மின்வலு நிலையம் | கல்பதித்தல் வேலைகள் | 2,075,133,740.94 |
| | | அணைக்கட்டு வேலைகள் | 7,075,885,264.60 |
| | | மொத்தம் | 9,151,019,005.54 |
| 837.00 | நில்லம்பே மின்வலு நிலையம் | நீரேந்து கால்வாய் | 347,258,744.71 |
| | | அணைக்கட்டு வேலைகள் | 248,957,723.10 |
| | | மொத்தம் | 596,216,467.81 |
| **கூட்டு மொத்தம்** | | | **63,544,030,868.89** |

சபை ஏற்கனவே நிலம்பே அணையை கையகப்படுத்தியுள்ளதுடன் இ.மி.ச. இன் மூலம் முழுமையாக இயக்கி, பராமரித்து, நிர்வகிக்கிறது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட மின் நிலையங்கள் தொடர்பான ஏனைய அணைக்கட்டுக்கள் அனைத்தும் இலங்கை மகாவலி அதிகாரசபையால் அதன் சட்டத்தின் மூலம் இயக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. ஆனால், சம்பந்தப்பட்ட மின் நிலையங்களால் முழுமையாக இயக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வந்த நீர்த்தேக்கங்களில் உள்ள மின் உட்கொள்ளும் வரையிலான நீர்வழிகளை மட்டுமே வாரியம் கையகப்படுத்தியுள்ளது.

ஆவண ஆதாரங்களின்படி நீர்மின் சொத்து மதிப்பு 1991 ஆம் ஆண்டில் MASL ஆல் இ.மி.ச. க்கு மாற்றப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டில் MASL அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் சொத்து பரிமாற்றம் தொடர்பான சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(கி) 2018 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் வங்கிக் கணக்கு இல. 85135 இலுள்ள ரூபா 7.29 மில்லியன் நேரடி வங்கி செலவு வைத்தல்கள் குறித்து விசாரணை செய்து முறையான கணக்குகளுக்குக் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல், தற்காலிகமாக வழிக்காசுக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.**

2022 இல் இது வருமானத்திற்கு அங்கீகரிக்கப்பட்டது.

**((கி) தரப்படுத்தப்பட்ட மின் கொள்முதல் ஒப்பந்தத்தின் பந்தி 5.2 (ஆ) இன் படி, விற்பனையாளருக்கு நிலுவைத் தேதியில் அல்லது அதற்கு முன்னதாக அதாவது இ.மி.ச. இன் மின் நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள அதன் மின்மானியை வாசித்த தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குப் பின்னர், இ.மி.ச. பணம் செலுத்த வேண்டுமென்பதுடன் அவ்வாறு நிலுவைத் தொகைகள் குறித்த தேதிக்குப் பிறகு செலுத்தப்படாமல் இருந்தால், அவற்றிற்கு மாதாந்த முதன்மை விகிதத்தில் வட்டி செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், உரிய திகதிக்குள் பணம் செலுத்தாது 310 மின் உற்பத்தியாளர்களுக்கு 2023 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு ரூபா 26.9 பில்லியன் தொகை நிலுவையில் உள்ளமை அவதானிக்கப்பட்டது. மேலும், மின் உற்பத்தியாளர்களால் இ.மி.ச. க்கு விலைப்பட்டியல்களை சமர்ப்பிக்கையில், உரிய தேதிகளுக்குப் பிறகு செலுத்தப்படாத நிலுவைகளுக்கான வட்டிகள், மின் உற்பத்தியாளர்களால் குறித்த விலைப்பட்டியல்களில் அவ்வப்போது கோரப்பட்டதை கணக்காய்வில் அவதானிக்க முடிந்தது. அத்துடன், 2019 ஏப்ரல் முதல் 2023 ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில் 109 மின் உற்பத்தியாளர்களால் அவ்வாறு செலுத்தப்படாத நிலுவைத் தொகைக்கான வட்டியாக ரூபா 2.6 பில்லியன் கோரப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், மின் உற்பத்தியாளர்கள் கோரப்பட்ட வட்டியில் எந்தத் தொகையும் செலுத்தப்படவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் செலுத்த வேண்டிய வட்டிக்கான எந்த ஏற்பாடும் மதிப்பாய்வின் ஆண்டின் இறுதியில் கூட இ.மி.ச. இன் கணக்குப் புத்தகங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.**

2021 ஆம் ஆண்டு முதல் இ.மி.ச. இன் மோசமான நிதி நிலை காரணமாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி விலைப்பட்டியலைத் தீர்ப்பதில் கணிசமான தாமதம் ஏற்பட்டது. தாமதமானது 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் கிட்டத்தட்ட 15 மாதங்களை எட்டியது. இருப்பினும் இப்போது தாமதம் குறைக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கு முன், தாமதமான வட்டிக்காக மிகக் குறைவான அபிவிருத்தியாளர்களால் பட்டியல் செய்யப்பட்டது. ஆனால் அதிக வங்கி வட்டி விகிதங்களுடன் விலைப்பட்டியலைத் தீர்ப்பதன் காரணமாக ஏற்பட்ட தாமதம் காரணமாக, அதிகமான அபிவிருத்தியாளர்கள் தாமதமான வட்டி கோரியிருந்தனர். ஆகஸ்ட் 2023 நிலவரப்படி, அபிவிருத்தியாளர்களால் மொத்தம் ரூபா 2.6 பில்லியன் கோரப்பட்டுள்ளன. இ.மி.ச. இப்போது அத்தகைய உரிமைகோரல்களின் தகுதியை மதிப்பிட்டு வருவதுடன் நிதிநிலை அறிக்கைகளில் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்காக அத்தகைய வட்டி கோரிக்கைகளின் தேவையான கணக்கியல் பணிகளைத் தயாரித்து வருகிறது.

### 1.2.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

**(அ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் (சீபிசீ) செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட மீதிக்கும் அத்திகதியில் உள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் சபையிடமிருந்து பெறவேண்டியதாக காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 4.62 பில்லியன் வித்தியாசம் காணப்பட்டது. மேலும், மேற்படி தொகையில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் ஏய்ப்புச் செய்யப்பட்ட ரூபா 753.61 மில்லியன் தொகையும் காணப்படுவதுடன், இந்த விடயம் 2013 முதல் தொடர்ச்சியாக கடந்தகால கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2022 திசெம்பர் 22 அன்று பொது முயற்சிகள் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டத்தில், பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்கு உட்பட்டு சபையால் 2013 ஏப்ரல் 19 க்குப் பின்னரான ரூபா 330 மில்லியன் (ஏறத்தாழ) வட்டிக் கூறுகளை ஏற்குமாறு பணிப்பாளர் நாயகம் பரிந்துரைத்தார். எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் கூட பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெற்று அதன்படி செயல்படுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.**

CPC க்கு செலுத்த வேண்டிய மீதிக்கும் CPC இன் கணக்குகளில் உள்ள பெறத்தக்க மீதிக்கும் 31 டிசம்பர் 2020 வரை கணக்கிணக்கம் செய்யப்பட்டது

2020.12.31க்குப் பிறகு வேறுபாட்டிற்கான காரணங்கள் வருமாறு:

- CPC பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச முடிவின் அடிப்படையில் 2021 முதல் இ.மி.ச. ஆல் செய்யப்படும் வழக்கமான கொடுப்பனவுகளில் இருந்து தாமதமான வட்டியை அறவிட CPC தொடங்கியமை.
- எவ்வாறாயினும், இ.மி.ச. ஆனது CPC இன் முடிவை ஏற்றுக்கொள்ளாததுடன் CPC முடிவை திரும்பப் பெறுமாறு பல முறை

கோரிக்கை விடுத்துள்ளது.

- இ.மி.ச. இன் கணக்குகளில், CPC க்கு செய்யப்படும் வழக்கமான கொடுப்பனவுகள் நிலுவையிலுள்ள பெறுமதிகளிற்கு எதிராக தீர்க்கப்பட்டு, மீதமுள்ள தொகைக்கு தாமதமான வட்டி கணக்கிடப்பட்டு செலுத்தப்படுகின்றமை.
- CPC ஒருதலைப்பட்சமாக கடன் காலத்தை அவ்வப்போது குறைத்துள்ளது

இருப்பினும், CPC இன் மீதிகளுடன் இணைந்த அனைத்து பணம் செலுத்துதல் தொடர்பான ஆவணங்களும் உள்ளன. இந்த விவகாரத்தில் மேலதிக அறிவுறுத்தல்களை கோரி பணிப்பாளர் சபைக்கு பிரேரணை அனுப்பப்படும்.

**சர்ச்சைக்குரிய தொகை ரூ.753.61 மில்லியன்**

2023.04.2023 நிலவரப்படி CPC க்கு இ.மி.ச. செலுத்த வேண்டிய தொகையை திறைசேரிக்கு மாற்றுவதற்கு 2023.06.26 அன்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் மூலம் முடிவு செய்யப்பட்டுள்ளது. அமைச்சரவையின் முடிவின்படி, 2023 ஏப்ரல் 30 ஆம் தேதியின்படி CPC நிதிநிலை அறிக்கையிலிருந்து பெறப்பட்ட இ.மி.ச. இடமிருந்தான நிலுவைத் தொகை ரூபா 84.3 பில்லியன் தொகையை உரிமைத்துவ முதலீட்டின் மூலம் இ.மி.ச. க்கு ஒதுக்கப்படும். இந்த சர்ச்சைக்குரிய தொகையும் மேற்கண்ட தொகையில் சேர்க்கப்பட்டுள்ளது, எனவே ரூபா 330 மில்லியன் (தோராயமாக) தொகையை இனிமேலும் இ.மி.ச. ஏற்க வேண்டியதில்லை.

எவ்வாறாயினும், ரூபா 330 மில்லியன் நிதிநிலை அறிக்கைகளில் செலவினமாக அங்கீகரிக்கப்பட்டு திறைசேரியிலிருந்து வழிகாட்டுதல்களைப் பெற்ற பிறகு இந்தத் தொகை இ.மி.ச. இன் நிதிநிலை அறிக்கைகளில் அரசாங்க உரிமைத்துவமாக மாற்றப்படும்.

**(ஆ) மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் படி, சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள துணை மின்சார விநியோக நம்பகத்தன்மை மேம்பாட்டுத் திட்டத்தின் முடிவுறா வேலைத் தொகைக்கும் திட்டத்தின் நிதிநிலை அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள தொடர்புடைய நிலுவைகளிற்கும் இடையே ரூபா 4.49 பில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.**

இ.மி.ச. இன் சட்டரீதியான நிதிநிலை அறிக்கைகளில், நிர்வாக வழிகாட்டுதலின்படி கொடுக்கல் வாங்கல்கள் பதிவுசெய்யப்பட்டு செயற்திட்ட வாரியாக WIP நிலுவைகளை ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், செயற்திட்ட நிதி அறிக்கைகள் நன்கொடையாளரின் தேவைகளின் அடிப்படையில் கடன் வாரியாக தயாரிக்கப்படுகின்றன. எனவே, செயற்திட்ட நிதி அறிக்கைகள் ஒரு குறிப்பிட்ட கடனிலிருந்து நிதியைப் பயன்படுத்தி அனைத்து பிரிவுகளின் றுஜீ ஐ ஒருங்கிணைத்துள்ளன. எனவே, வேறுபாடுகள் இருப்பது வெளிப்படையானது.

மின்சாரம் வழங்கல் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துதல் திட்டமானது விநியோக பிரிவு 01, விநியோக பிரிவு 02 மற்றும் திட்டப் பிரிவு ஆகியவற்றால் செயல்படுத்தப்படுகிறது.

| SESRIP - 3409 | WIP (ரூபா) |
|---|---|
| DD1 | 4,700,485,723.53 |
| DD2 | 4,244,417,042.18 |
| செயற்திட்டம் | 5,219,744,391.04 |
| மொத்தம் | 14,164,647,156.75 |

எனவே, மேற்படி திட்டங்களின் WIP ஒவ்வொரு பிரிவின் கீழும் (கடன் வாரியாக அல்லாமல்) இ.மி.ச. இன் நிதிநிலை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

SESRIP திட்டத்தின் DD2 பகுதியானது இ.மி.ச. இன் விநியோக வேலைகளுக்கான பொருள் கொள்முதல் (ரூ. 4.24 பில்லியன்) ஆவதுடன் ஆகையால் இ.மி.ச. இன் நிதிநிலை அறிக்கைகளில் மீதியை தனித்தனியாக அடையாளம் காண முடியாது, ஏனெனில் இது வெவ்வேறு வேலைகளுக்காக வாங்கப்பட்டு வழங்கப்படுகிறது..

**(இ) ரூபா 423.76 மில்லியன் இனங்காணப்படாத வரவு மீதி விநியோக பிரிவு 1 இல் 2012 முதல் அறவிடப்படாமல் வைத்திருக்கப்பட்டுள்ளது. இருப்பினும், பாதிக்கப்பட்ட தனிப்பட்ட கடன்பட்டோர் கணக்குகளை ஆராய்ந்து சரி செய்யாமல் 2015 முதல் 2022 வரை அதிலிருந்து ரூபா 185.41 மில்லியன் தொகை விநியோகப் பிரிவுகளின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்குகள், பிற பொறுப்புக் கணக்குகள் போன்றவற்றுக்கு மாற்றப்பட்டிருந்தது.**

அசல் மதிப்பு தொகையில் ரூபா 423.76 மில்லியன் கடன்பட்டோர் மீதியாவதுடன் ரூபா 185.41 மில்லியன் தொகையானது AFM(DD1)/Acct(A&MI)/ Revenue Debtors /2018 ஆம் இலக்க 17 ஆகஸ்ட் 2018 தேதியிட்ட கடிதத்தின் மூலம் AFM DD3 கிளைக்கு அப்பிரிவின் சொந்த பட்டியலிடல் மற்றும் பேரேட்டு அமைப்பைச் சரிசெய்த பிறகு பேரேட்டு மீதியுடன் இணைத்து மாற்றப்பட்டது. 2002 இல் இடம்பெற்ற அதிகாரப் பரவலாக்கத்தின் போது இந்தத் தொகை எங்கேனும் மாற்றப்பட்டிருக்கக் கூடும்.

மேலும், நிலுவைத் தொகையை மாற்றுவதற்கு ஏதேனும் மீதிகள் தங்கள் பிரிவுகளுக்குச் சொந்தமானதா என்பதைச் சரிபார்ப்பதற்காக, அனைத்துப் பிரதேச யுகுஆஆ-களுக்கும் இது மீண்டும் தெரிவிக்கப்படவுள்ளது.

**(ஈ) பட்டியலிடல் முறைமை மற்றும் சில கிரய மையங்கள் தொடர்பில் பட்டியலிடல் கடன்பட்டோராக கணக்கிணக்க கூற்றுக்களிற்கு எடுக்கப்பட்ட தொகைகளின் படி மொத்தக் கடன்பட்டோரிற்கும் சாதாரண கடன்பட்டோர் நிலுவைகளுக்கும் இடையே சில வேறுபாடுகள் காணப்பட்டன. அதன்படி, மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான மொத்த கடன்பட்டோர் மற்றும் சாதாரண கடன்பட்டோர் தொடர்பாக முறையே ரூபா 5.28 மில்லியன் மற்றும் ரூபா 423.85 மில்லியன் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. அதன்படி, வியாபாரக் கடன்பட்டோரின் சரியான தன்மையை கணக்காய்வில் நியாயமான முறையில் கண்டறிய முடியவில்லை.**

<table>
<tr><td>பிரிவு</td><td colspan="2">பதிலளிப்பு</td></tr>
<tr><td rowspan="4">DD01</td><td colspan="2">பட்டியலிடல் முறைமையிலும் மொத்த மற்றும் சாதாரண பேரேட்டு மீதிகளிலும் சில வேறுபாடுகள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டது. இருப்பினும், மாகாண வாரியாக கீழே விவரிக்கப்பட்டுள்ள கணக்காய்வு கண்டுபிடிப்புகளுடன் இத்தகைய வேறுபாடுகள் வேறுபடுகின்றன.</td></tr>
<tr><td>கொழும்பு நகரம</td><td>கொழும்பு நகரம் தொடர்பான கணக்காய்வு வினவல் உண்மையில் தவறானது போல் தெரிகிறது. எனவே, கணக்காய்வு வினவல் மற்றும் உண்மையான நிலுவைகளின் வேறுபாடு பகுப்பாய்வு செய்யப்படலாம்.<br>பட்டியலிடல் முறையின்படி மீதி ரூ.:2,905.77 மில்லியன் ஆனதுடன் HS மற்றும் சாதாரண விநியோக நிலுவைகளில் உள்ள வேறுபாடு பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.<br>முறைமையுடன் ஒப்பிடுகையில் மொத்த வழங்கல் கடன்பட்டோர் மீதி வேறுபாடு<br>HS செயற்பாட்டு பேரேட்டின் படி மீதி — ரூ. 2,872,030,520.28<br>ஐடி சிஸ்டம் எச்எஸ் செயற்பாட்டின் படி மீதி — ரூ. 2872,029,106.32<br>வேறுபாடு — ரூ. 1,413.96<br>HS இன் படி பேரேட்டு மீதி இறுதி செய்யப்பட்டது — ரூ. 33,997,534.69<br>ஐடி சிஸ்டம் எச்எஸ் இறுதி மீதி — ரூ. 33,737,372.48<br>வேறுபாடு — ரூ. 260,162.21<br>(கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடு 2022 இறுதிக் கணக்குகளில் இணைப்பு-5 இல் காட்டப்பட்டுள்ளது).</td></tr>
<tr><td>NWP 2</td><td>31.12.2022 இல் உள்ள சாதாரண கடன்பட்டோர் மிதி ரூ.5,521,883 ஆனதுடன் இதில் அத்தேதியில் அடையாளம் காணப்படாத தொங்கல் கணக்கு மீதியும் உள்ளது. அதைத் தொடர்ந்து, வாடிக்கையாளரின் கோரிக்கையின் பேரில் தொங்கல் கணக்கு மீதித் தொகை தீர்க்கப்பட்டு வருகின்றது. இது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும், இதன் மூலம் தொங்கல் கணக்கின் மீதி இன்றைய நிலவரப்படி குறைக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>NCP</td><td>சாதாரண விநியோகம் — ரூ. மில்<br>கணக்கிணக்கத்தின் படி மீதி - 1,562.03<br>பட்டியலிடலின் படி மீதி - 1,569.87<br>வேறுபாடு - (7.83)<br>இது தொங்கல் கணக்கின் வேறுபாடாகும்<br><br>மொத்த விநியோகம் — ரூ. மில்<br>கணக்கிணக்கத்தின் படி மீதி - 775.78<br>31-12-2022 -இல் உள்ள பட்டியலிடல் முறையின்படி மீதி - 747.53<br>வித்தியாசம் - 28.25<br><br>இந்த அறிக்கையின்படி, முறைமையின் படி மீதி 745.58 ஆகும். ஆனால் 31-12-2022 இல் கணினியிலிருந்து நாங்கள் பெற்ற அறிக்கையின்படி (12-01-2023 அன்று உருவாக்கப்பட்ட அறிக்கை) மீதி 747.53 ஆகும். எனவே, மேலே உள்ள வேறுபாடு இறுதி செய்யப்பட்ட கணக்கு மீதியின் காரணமாக ஏற்பட்டதாகும்.</td></tr>
</table>

| | |
|---|---|
| **DD02** | பேரேட்டு மற்றும் பட்டியலிடல் முறையின்படி அனைத்து சாதாரண மற்றும் மொத்த வழங்கல் கடன்பட்டோர் மீதிகள் கணக்கிணக்கம் செய்யப்பட்டு நிதி அறிக்கைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன<br><br>சாதாரண வழங்கல் பட்டியலிடல் முறை சமநிலையில் இறுதி செய்யப்பட்ட கடன்பட்டோர் மீதியில் உள்ளடங்குக-ின்ற அதே சமயம் மொத்த விநியோக கடன்பட்டோரின் பட்டியலிடல் சுருக்கம் செயலில் உள்ள கடன்பட்டோர் மீதிகளை மட்டுமே உள்ளடக்கியுள்ளது. சாதாரண கடன்பட்டோர் பேரேட்டு மீதியானது செயலில் உள்ள மற்றும் மொத்த விநியோக நிலுவைகளைக் கொண்டிருப்பதால், பேரேட்டு மற்றும் பட்டியலிடல் சுருக்கத்தின்படியான மொ-த்த விநியோக கடன்பட்டோரின் வேறுபாட்டுக்கு பிரதான காரணம் இறுதி செய்யப்பட்ட மொத்த விநியோக மீதி-யேயாகும்.<br><br>சாதாரண விநியோக கடன்பட்டோரின் கணக்கிணக்க வடிவங்களுக்கு, பட்டியலிடல் சுருக்கத்தில் உள்ள சா-தாரண விநியோகத்தின் இறுதி நிலுவையைப் புறக்கணித்து, பட்டியலிடல் சுருக்கத்தின்படியான, செயலில் உள்ள கடன்பட்டோர் மீதி மட்டுமே மீதித் தொகையாகக் கருதப்படுகிறது. எனவே, பேரேட்டு மற்றும் உண்மையான பட்-டியலிடல் சுருக்கத்தின்படி நிலுவைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளின் ஒரு பகுதி தொங்கல் கணக்கு நிலுவையைத் தவிர்த்து இறுதி செய்யப்பட்ட சாதாரண விநியோக கடன்பட்டோரின் மீதியை பிரதிபலிக்கிறது. (தொங்கல் கணக்கின் மீதி பேரேட்டில் பதிவு செய்யப்படாததால்).<br><br>அதன்படி, கணக்காய்வு வினவலில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிணக்கத்திற்காக எடுக்கப்பட்ட பட்டியலிடல் சுருக்க நிலுவையின்படியான வேறுபாடுகளானது ஒவ்வொரு மாகாணத்தின் சாதாரண விநியோகத்தின் இறுதி செய்யப்பட்ட கடன்பட்டோர் மீதி ஆகும். 2023 ஆம் ஆண்டு முதல் தேவைக்கேற்ப வடிவம் மாற்றப்படும். |
| **DD03** | முகவர்கள் மூலம் செய்யப்பட்ட அறவிடல்கள் காரணமாக ஏற்படுகின்ற பிராந்திய தொங்கல் கணக்கினால் இந்த வித்தியாசம் ஏற்படுகிறது. எனவே, இது தலைமை அலுவலகப் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. |
| **DD04** | பேரேட்டு மீதிக்கும் முறைமையிலுள்ள மீதிக்கும் இடையே உள்ள வித்தியாசம் ஏற்படுவதற்கான காரணம் என்ன-வென்றால், தொங்கல் மீதி பட்டியலிடல் சுருக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும், அதற்கு பதிலாக பிரிவுகளின் பேரேடுகளில் பதிவு செய்யப்படாது தலைமை அலுவலக தொங்கல் பேரேட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படுகின்றமையாகும். |

**(உ) 2022 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சேகரிப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கில் ரூபா 278.54 மில்லியன் வரவு மீதியும் ரூபா 1.52 மில்லியன் செலவு மீதியும் காணப்பட்டன. இருப்பினும், தீர்க்கப்படாதுள்ள ரூபா 273.32 மில்லியன் வரவு மீதி மற்றும் ரூபா 913.25 மில்லியன் செலவு மீதிகளிற்கான கணக்கிணக்கம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே சேகரிப்புக் கட்டுப்பாட்டு கணக்கிலுள்ள மீதிகளின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. அத்துடன், ரூபா 38.05 மில்லியன் இனங்காணப்படாத ஆரம்ப மீதியொன்று சேகரிப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கில் (அடையாளம் தெரியாத தொடக்கக் கடன் நிலுவை தவிர) உள்ளடக்கப்பட்டுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டதுடன் தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்காமல் ரூபா 3.14 மில்லியன் மற்றும் ரூபா 3.44 மில்லியன் தொகையான ஒரு வருடத்திற்கும் மேலான முறையே வரவு மற்றும் செலவு மீதிகள் சேகரிப்புக் கட்டுப்பாட்டு கணக்கில் இருந்ததையும் அவதானிக்க முடிந்தது.**

<table>
<tr><th>பிரிவு</th><th>கணக்கிணக்கம் செய்யப்படாத மீதி</th><th>பதிலளிப்பு</th></tr>
<tr><td>DD01</td><td>(227)</td><td>
சேகரிப்புக் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் கணக்கிணக்க அறிக்கைகள் ஒரு வழக்கமான செயற்பாடாக இருப்பதுடன் சேகரிப்புக் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மாதாந்த இணக்க அறிக்கைகளைத் தயாரிக்குமாறு மாகாண வருவாய்க் கணக்காளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.
DGM கொழும்பு நகர பிரிவைப் பொறுத்தவரை, கலண்டர் மாதத்தில் சாதாரண விநியோக நுகர்வோர் மற்றும் மொத்த நுகர்வோரின் பண சேகரிப்பு சுழற்சியின் காரணமாக வேறுபாடு ஏற்பட்டுள்ளது. அதன்படி, அறவிடுதல் கட்டுப்பாட்டு கணக்குகளின் மீதி ரூ. 3,727,977.37 ஆனதுடன், இதில் 30-12-2022 மற்றும் 31-12-2022 இற்கான வசூல் தொகையும் அடங்கும். இது சம்பந்தமாக, வருவாய் வழிகாட்டுதல் குழுவின் வழிகாட்டுதல்களின்படி தகவல் தொழில்நுட்ப அமைப்பை உருவாக்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
DGM NWP 2 இல் வழக்கமான சேகரிப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கின் கணக்கிணக்க அறிக்கை தயாரிக்கப்பட்டதுடன் அது கீழே காட்டப்பட்டுள்ளது.
<table>
<tr><th colspan="3">2022 டிசம்பர் 31 இன் படி சேகரிப்பு கட்டுப்பாட்டுக் கணக்கின் கணக்கிணக்கம்</th></tr>
<tr><td>L5105 - NWP 2</td><td>ரூபா</td><td>ரூபா</td></tr>
<tr><td>31.12.2022 இல் உள்ளபடி மீதி</td><td></td><td>(192,860,964.18)</td></tr>
<tr><td>தலைமை அலுவலகம் மேலதிகமாக மாற்றியது</td><td>(247,414,941.72)</td><td></td></tr>
<tr><td>ஏனைய மாகாணம் மீதியிலும் குறைவாக எடுத்தல்</td><td>8,804,696.27</td><td></td></tr>
<tr><td>தீர்க்கப்பட வேண்டிய இனங்காணாத மீதி</td><td>45,749,281.27</td><td>(192,860,964.18)</td></tr>
<tr><td>வேறுபாடு</td><td></td><td>-</td></tr>
</table>
மாதாந்த கணக்கிணக்க அறிக்கைகளைத் தொடர்ந்து தயாரிக்கத் தொடங்குமாறு கணக்காளர் வருவாய் NWP 1 அறிவுறுத்தப்பட்டார்.
DGM (NCP) விடயத்தில் கணக்கிணக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, பின்வரும் காரணங்களால் வசூல் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ.160.9 மில்லியன் வேறுபாடுகள் இருந்தன
<ol>
<li>2011-12-31 அன்று காணப்பட்ட அடையாளம் தெரியாத கணினி சரிசெய்தல் தொகை ரூ. 196.5</li>
<li>NCP சார்பாக ஏனைய மாகாணங்களிலிருந்து எழுகின்ற சாதாரண வசூல் மற்றும் பட்டியலிடல் சுருக்கத்தைப் பயன்படுத்தி ஒவ்வொரு மாதமும் மாற்றப்பட்ட நிலுவைகளுக்கு இடையிலான வேறுபாடுகள்.</li>
<li>ஒவ்வொரு சுழற்சித் தேதிகளலும் உள்ள வேறுபாடு (பட்டியலிடல் சுழற்சி மற்றும் சேகரிப்பு சுழற்சி). சேகரிப்பு சுழற்சி ஒரு கலண்டர் மாதத்திற்கு (1-30/31) சமமானதுடன் சாதாரண விநியோக பட்டியலிடல் சுழற்சி தேதியானது ஒரு கலண்டர் மாதத்தின் நடுவில் உள்ளது (உதாரணமாக சேகரிப்பு சுழற்சி மாதத்தின் 31வது தினத்தில் முடிவடைவதுடன் அதே மாதத்திற்கான பட்டியலிடல் சுழற்சி ஏப்ரல் 15 அன்று முடிவடைகிறது.)</li>
</ol>
</td></tr>
<tr><td>DD02</td><td>(193)</td><td>
வசூல் கட்டுப்பாட்டு கணக்கு நிலுவைகளை சீரமைக்கும் நோக்கத்துடன், சாதாரண மற்றும் மொத்த வழங்கல் கடன்பட்டோரின் பட்டியலிடல் காலம் கலண்டர் மாதமாக மாற்றப்பட்டுள்ளது.
இந்த பணியை வெற்றிகரமாக முடிக்க, மாதத்திற்கான அனைத்து CEB POS சேகரிப்புகளும் பட்டியலிடல் முறைமையில் பிரித்தெடுக்கப்பட வேண்டுமென்பதுடன் மாகாண வருவாய் கணக்காளர்களால் நாளிற்கான இறுதி செயல்முறையை இயக்குவதற்கு முன்னர் இந்த பிரித்தெடுக்கும் செயல்முறை உறுதி செய்யப்பட வேண்டும். கணினி மூலம் இந்த செயல்முறையை சரிபார்க்க, பணம் செலுத்தும் அதே நேரத்தில் வாடிக்கையாளர் கட்டணங்களை பிரித்தெடுக்கும் வசதி இருக்க வேண்டுமென்பதால் இந்த அமைப்பு மாற்றம் நடைபெற்று வருகிறது.
</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| DD03 | (230) | WPS 2 மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிற்காக தயாரிக்கப்பட்ட கணக்கிணக்கங்கள் வருமாறு:. |

**WPS 2 –** 2022 டிசம்பர் 31 இன் படி சேகரிப்பு கட்டுப்பாட்டுக் கணக்கின் கணக்கிணக்கம்

| | |
|---|---|
| 2022.01.01 இல் ஆரம்ப மீதி | 98,757,289.26 |
| கணக்குகளின் மீதான முன்னைய ஆண்டு தாக்கம் | 5,100,726.90 |
| சீராக்கிய மீதி | 93,656,562.36 |
| பட்டியல் பொழிப்பில் உள்ளடக்கப்படாத HQ POS இன் திசெம்பர் சேகரிப்பு | 120,907,424.58 |
| பட்டியல் பொழிப்பில் உள்ளடக்கப்படாத மாகாண POS நிலையங்களின் சேகரிப்பு | 20,985,689.46 |
| **2022 திசெம்பர் 31 இல் மீதி** | **235,549,676.40** |

சேகரிப்பு கட்டுப்பாட்டுக் கணக்கின் கணக்கிணக்கம -
சப்ரகமுவ மாகாணம்

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| பேரேட்டு மீதி 2022.12.31 - செலவு | | 5,217,355.80 |
| கூட்டுக | | |
| 31.10.22 NWP 11 சப்ரகமுவவால் சேகரிக்கப்பட்ட சாதாரண சேகரிப்பு | 3,000.00 | |
| 31.12.2021 இரத்தினபுரி தலைமை அலுவலகத்தால் சேகரிக்கப்பட்ட சாதாரண விநியோக சேகரிப்பு | 16,156,670.74 | |
| 31.12.2021 கஹவத்த தலைமை அலுவலகத்தால் சேகரிக்கப்பட்ட சாதாரண விநியோக சேகரிப்பு | 15,705,242.87 | |
| 31.12.2021 ருவன்வெல்ல தலைமை அலுவலகத்தால் சேகரிக்கப்பட்ட சாதாரண விநியோக சேகரிப்பு | 15,586,907.81 | |
| 31.12.2021 எஹலியகொட தலைமை அலுவலகத்தால் சேகரிக்கப்பட்ட சாதாரண விநியோக சேகரிப்பு | 13,569,214.51 | |
| 31.12.2021 எம்பிலிபிட்டிய தலைமை அலுவலகத்தால் சேகரிக்கப்பட்ட சாதாரண விநியோக சேகரிப்பு | 15,371,083.32 | |
| 31.12.2022 டிசம்பர் மாதத் தொகுப்பு | 2,638,731.89 | |
| பாதுகாப்பு வைப்பு இறுதி செய்யப்பட்ட கணக்குகள் | 1,004,700.00 | |
| தொங்கல்-மொத்த விநியோகம் 2019/2020/2021/2022 | 230,081.18 | |
| டேபுலேஷன் மற்றும் HQ TV இடையே உள்ள வேறுபாடு | 6,713,082.95 | |
| தாவல் வழு | 53,626.47 | 87,032,341.74 |
| | | 92,249,697.54 |
| கழிக்க<br>O/S கட்டணத்திற்கான வேறுபாடு - மார்ச் 2020 சப்ரகமுவ (கணினி பிழை) | 1,320,503.30 | |

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| கழிக்க:<br>O/S கட்டணத்திற்கான வேறுபாடு - மார்ச் 2020 சப்ரகமுவ (கணினி பிழை) | 1,320,503.30 | |
| சப்ரகமுவ மாகாணத்துடன் தொடர்புடையது அல்ல - தென் மாகாணம் 520.70/ TVB/20/0088 (கணினி பிழை) | 789,885.90 | |
| சப்ரகமுவ மாகாணத்துடன் தொடர்புடையது அல்ல - வட மத்திய மாகாணம் 420.70/ TVB/20/0038 (கணினி பிழை) | 2,845,883.80 | |
| பணத் தொகை மீதியை மாற்றுதல் | 33,523.89 | |
| 570/SD/20/12/16-க்கான பாதுகாப்பு வைப்புத்தொகைக்கான டிவி - கஹாவத்தை | 67,812.07 | |
| எஸ்.எஸ்.சி.எல் | 86,565,310.12 | |
| tvb/22/0395- WPS 2க்கு அதிகமாக மாற்றப்பட்டது | 10,478.00 | |
| இறுதி செய்யப்பட்ட கணக்கு பாதுகாப்பு வைப்பு | 142,739.00 | |
| திருத்தம் (நவம்பர், மே) | 246,781.76 | |
| கணக்கிட்ட PIV 554.20/P58/22/0087 இன் கீழ் | 8,279.70 | |
| டேபுலேஷன் மற்றும் HQ TV இடையே உள்ள வேறுபாடு | 218,500.00 | 92,249,697.54 |
| 31.12.2022 இல் POS சேகரிப்பு, தலைமை அலுவலகம் மற்றும் வங்கி சேகரிப்பு மீதி | | 0.00 |

| | | |
|---|---|---|
| DD04 | (315) | WPS 1 – தகவல்கள் மற்றும் பெறுமதிகள் கிடைக்காததால் கணக்கிணக்கம் செய்ய முடியாத ஒரு தொடக்க மீதி உள்ளது. இருப்பினும், 01.05.2022 முதல் சரியான கணக்கிணக்கம் செய்யப்படுகிறது. SP 1 மற்றும் SP 2 இற்கான சேகரிப்பு கட்டுப்பாட்டு கணக்கின் கணக்கிணக்கம் இடம்பெற்று வருகின்றது. |
| HQ | (38) | நிதியாண்டின் இறுதியில் உள்ள வசூல் கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூபா 38.05 மில்லியன் ஆனது, 2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் முறைமையில் உருவாக்கப்பட்ட அடையாளம் காணப்படாத மீதியுடன் தொடர்புடையது. மேற்கூறிய மீதிக்கான கணக்கிணக்கம் செய்யப்பட்டதுடன் அனைத்து கொடுக்கல் வாங்கல் பரிவர்த்தனை வரலாறும் மதிப்பாய்வு செய்யப்பட்டு, பிழைகள் அடையாளம் காணப்பட்டது. 2023 இன் இறுதி கணக்குகளில் பிழைகள் திருத்தப்படும். |

<table>
<tr>
<td>பிறப்பாக்கல்</td>
<td>(21)</td>
<td>31.12.2022 தேதியின்படி, பிறப்பாக்கல் பிரிவுக்குரிய வசூல் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ. 21,024,590.11
<table>
<tr><td>பிறப்பாக்கல் தலைமையகம்</td><td>சேகரிப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கில் உள்ள ரூ.8,601,448.62 மீதி புர்ஞ ஐக் குறிப்பதுடன் ரூ.6,156,120 என்பது ஒரு பணியாளரிடமிருந்து பெறப்பட்ட தொகையைக் குறிக்கிறது. இந்த மீதி 2023 இன் இறுதியில் தீர்க்கப்பட்டது.</td></tr>
<tr><td>சமனல தொகுதி</td><td>வசூல் கட்டுப்பாட்டு கணக்கில் உள்ள ரூ.97,000 மீதியானது சமனல தொகுதியை குறிப்பதுடன் 2023 இல் ரூபா 67,000 தீர்க்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ. 30,000 ஐ அகற்றும் பணி இடம்பெற்று வருகின்றது.</td></tr>
<tr><td>மகாவலி தொகுதி</td><td>0.04.2023 நிலவரப்படி ரூ.90,408.00 தீர்க்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள தொகை 2023 இல் தீர்க்கப்படும்.
<table>
<tr><td>2022.01.01 இல் ஆரம்ப மீதி</td><td>(329,019.00)</td></tr>
<tr><td>வங்கி வைப்பு (2022.01.01 வழ 2022.12.31)</td><td>(25,605,365.01)</td></tr>
<tr><td>இனங்காணப்பட்டு அகற்ற-ப்பட்டவை (2022.01.01 வழ 2022.12.31)</td><td>24,219,532.15</td></tr>
<tr><td>2022.12.31 இல் இறுதி மீதி</td><td>(1,714,851.86)</td></tr>
</table>
30.04.2023 நிலவரப்படி ரூ.90,408.00 தீர்க்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள தொகை 2023 இல் தீர்க்கப்படும்.</td></tr>
<tr><td>அனல்மின் தொகுதி</td><td>Tமொத்த மீதி ரூபா. 23,359<br>கேள்வி ஆவணங்களுக்காக வங்கியில் வைப்புச் செய்த போதிலும், பிஜவிகளை உருவாக்குவதற்காக வைப்புச் செய்பவர்கள் தங்கள் வைப்புச் சீட்டுகளை சமர்ப்பிக்காததால் இந்த மீதி உருவாக்கப்படுகிறது. ரூ. 14,134.19 என்பது 01.01.2021 -31.12.2021 காலப்பகுதியைச் சேர்ந்ததுடன் ரூ. 9,225 என்பது 01.1.2022 -31.12.2022 காலகட்டத்தைச் சேர்ந்தது, அந்த நிலுவைகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.</td></tr>
</table>
</td>
</tr>
</table>

**(ஊ) 1998 முதல் 2021 வரையான காலத்தில் சேகரிக்கப்பட்ட ரூபா 68.99 மில்லியன் தொகையினை அகற்றுவதற்கு எரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாது தொங்கல் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.**

தொங்கல் கணக்கில் உள்ள குறிப்பிட்ட தொகையான ரூபா 68.99 மில்லியன் கொடுக்கல் வாங்கலை வாடிக்கையாளருக்குக் கடன் அல்லது வருமானத்திற்குக் கட்டணம் என அங்கீகரிக்க இ.மி.ச. இற்கு எந்த சான்றும் இல்லை என்பதை பிரதிபலிக்கிறது. வாடிக்கையாளரின் புகாரைப் பெற்ற பிறகு தொங்கல் கணக்கு மீதி நீக்கப்படும். வாடிக்கையாளர் சரியான வாடிக்கையாளர் கணக்கு இலக்கத்தை தெரிவிக்கும் போது தொடர்புடைய தொகையை வாடிக்கையாளர் கணக்கிற்கு மாற்ற முடியும். மேலும், சேகரிப்பு முகவர்களிடமிருந்து விவரங்களைப் பெறுவதன் மூலம் தொங்கல் கணக்கு சேகரிப்புகளைத் நீக்குவதற்கு தொடர் நடவடிக்கை செயல்படுத்தப்படுகின்ற போதிலும், குறிப்பிட்ட நுகர்வோர் முன் வந்து திருத்தத்தை கோரும் வரை சேகரிப்பு முகவர்களும் இந்த விடயத்தில் உதவியளிக்க முடியாது. வணிக வங்கிகள் மற்றும் பிற வணிகர்களால் பண வைப்பு இயந்திரங்களை (சிடிஎம்) அறிமுகப்படுத்தியதன் மூலம், தொங்கல் கணக்கு ஏற்படும் நிகழ்வுகள் உயர்ந்துள்ளன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், சிடிஎம் இயந்திரம் நுகர்வோரால் இயக்கப்படுவதாலும், சரியான கணக்கு எண்ணை நிறுவுவதற்கு வேறு எந்த ஆவண ஆதாரமும் இல்லாததாலும், வங்கிகளால் இந்த தொங்கல் மீதிகளை அகற்ற மேலதிக தகவலை எங்களுக்கு வழங்க முடியாதுள்ளது.

பணம் செலுத்தும் தேதியிலிருந்து 2 ஆண்டுகள் வரை மட்டுமே கட்டண வினவல்கள் கேட்கப்படும். இ.மி.ச. பட்டியலில் நாங்கள் தெளிவாகக் கூறியிருப்பதால், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள தொங்கல் கணக்கு மீதி தொடர்பாக, நீண்ட காலமாக நிலுவையில் உள்ள தொங்கல் கொடுப்பனவுகளை (இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு செய்த பணம்) இதர வருமானத்திற்கு உள்வாங்குவதற்கான அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கடந்த காலங்களில் அயராத முயற்சியுடன், வாடிக்கையாளர்களின் கோரிக்கையின் அடிப்படையில் தொங்கல் கணக்கில் பின்வரும் வரவுகளை அடையாளம் கண்டு நீக்குவதில் இ.மி.ச. வெற்றி பெற்றுள்ளது.

| ஆண்டு | கணக்கு எண்ணிக்கை | தொகை ரூபா |
|---|---|---|
| 2014 | 285 | 13,402,956.51 |
| 2015 | 478 | 5,514,790.32 |
| 2016 | 2401 | 10,292,659.07 |
| 2017 | 2813 | 11,107,169.99 |
| 2018 | 3343 | 8,916,510.66 |
| 2019 | 2245 | 8,619,676.30 |
| 2020 | 3033 | 10,852,609.45 |
| 2021 | 4246 | 13,180,531.03 |
| **மொத்தம்** | **18844** | **81,886,903.33** |

**(எ) WPS II- (விநியோகப் பிரிவு 03) இலிருந்து மின்சாரம் விநியோகப்பட்டமைக்காக Sojitz Kelanithissa (Pvt) Ltd இலிருந்து பெற வேண்டிய ரூபா 38.76 மில்லியன் 2019 ஆம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ளது. இருப்பினும், அந்தக் கம்பனியின் பதிவுகளின்படி, அத்தொகை சபைக்குச் செலுத்த வேண்டியதாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.**

மின்வலு (தகராறு தீர்க்கும் நடைமுறை) விதிகளின் அடிப்படையில், DGM (WPS 2) Sojitz Kelanitissa (Pvt) Ltd (SKPL) முகாமைத்துவத்துடன் பல சந்திப்புகளை நடத்திய போதிலும், இந்த விவகாரம் தீர்க்கப்படவில்லை. SKPL நிர்வாகம் தீர்வுக்கு உடன்படவில்லை. 22.02.2023 அன்று பியுசிஎஸ்எல்-க்கு இந்த விடயம் எடுத்து செல்லபட்டது . பியுசிஎஸ்எல் 28.03.2023 அன்று சர்ச்சையைத் தீர்க்க மத்தியஸ்தக் கூட்டத்தை நடத்தியது. இருப்பினும், கட்சிகள் ஒரு உடன்பாட்டிற்கு வர முடியவில்லை. CEB (SKPL உடன் PPA இன் கீழ்) செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளுடன் CEB தகராறுத் தொகையை தீர்த்துக்கொள்ள முடியுமா என்பதைக் கண்டறிந்து இறுதி முடிவை அனைத்து தரப்பினருக்கும் தெரிவிக்க ஊடூடீ முடிவு செய்யப்பட்டது. அதன்படி, DGM (WPS 2) PPA க்காக ஊடூடீ செலுத்த வேண்டிய குறைவான கொடுப்பனவுகள் இருந்தாலும், சாத்தியமான தீர்வுக்கு AGM (டிரான்ஸ்மிஷன் - நான் வயர்டு ஆபரேஷன்) க்கு தகவல் அளித்துள்ளது.

எனவே, இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், Sojitz Kelanithissa (Pvt) Ltd நிறுவனத்திடம் இருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகையை மீட்பதற்கும் இ.மி.ச. அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என்பது தெளிவாகிறது.

**(ஏ) சபையின் நிதிக்கூற்றுக்களின் படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 752.22 மில்லியனுக்குச் சமமான தொகை களனிதிஸ்ஸ சட்டகம் V மறுசீரமைப்புத் திட்டத்தின் (860.25) முடிவுறா வேலையில் காணப்படுகின்றது. இருப்பினும், பிறப்பாக்கச் செயற்திட்டப் பிரிவில் பராமரிக்கப்படும் பதிவுகளின்படி அத்தொகை ரூபா 992.77 மில்லியனாக இருந்ததால், ரூபா 240.55 மில்லியனான கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.**

DGM (GP) கிளையால் அங்கீகரிக்கப்பட்ட பணம் மற்றும் பரிமாற்ற வவுச்சர்களின்படி, 31.12.2022 வரை இந்த திட்டத்திற்கான செலவாக ரூபா 752.22 மில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2023 கணக்குகளில் ஏதேனும் உள்ளிடப்பட்டால், வேறுபாடு சரிசெய்யப்பட்டு கணக்குகள் திருத்தியமைக்கப்படும்.

**(ஐ) சபையின் சொத்து முகாமைத்துவ பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பாக இரண்டு அரசு நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகைகளிற்கும் அந்தந்த அரசு நிறுவனங்கள் தொடர்பான சபையின் கணக்குப் புத்தகங்களுக்கும் இடையே ரூபா 22.24 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது.**

| விபரம் | இ.மி.ச. இன் பதிவேடுகளின் படி மீதி ரூ. | நிறுவனத்தின் பதிவேடுகளின் படி மீதி ரூ. | வேறுபாடு ரூ. |
|---|---|---|---|
| சனாதிபதி செயலகம் | 23,370,196 | 28,214,891 | 4,844,695 |
| பிரதமர் அலுவலகம் | 36,536,343 | 53,936,886 | 17,400,543 |
| **மொத்தம்** | | | **22,245,238** |

DGM (W&AS) பதிவுகளின்படி, இ.மி.ச. இன் பேரேட்டிலுள்ள மீதி சரியானதாகும

**(ஓ) சபையின் கணக்குப் புத்தகங்களின்படி, மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் பொது திறைசேரியிலிருந்து ரூபா 865.16 பில்லியன் பங்களிப்பு மூலதனமாகப் பெறப்பட்டிருந்தமை காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பொது திறைசேரியின் பதிவுகளின்படி, ரூபா 864.14 பில்லியனுக்கு சமமான தொகையானது சபைக்கான மூலதனப் பங்களிப்பாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே, மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் ரூபா 1.01 பில்லியன் வித்தியாசம் காணப்பட்டது.**

**வேறுபாட்டுக்கான கணக்கிணக்கம் பின்வருமாறு.**

| | | |
|---|---|---|
| இ.மி.ச. இன் கணக்குகளின்படி 31-12-2022 இன் இறுதி மீதி | : | 865,159,371,359 |
| திறைசேரியால் பதிவு செய்யப்படாத தொகை - CPC கட்டணம் | : | (1,022,280,600) |
| HVPTL செயற்திட்டம் தொடர்பாக திறைசேரியால் சீராக்க வேண்டிய தொகை | : | 6,938,206 |
| திறைசேரிப் புத்தகங்களின்படி 31 -12-2022 இல் இறுதி மீதி | : | 864,144,028,965 |

இ.மி.ச. இற்கான முதலீடாக திறைசேரியால் 2022 நிதிநிலை அறிக்கைகளில் பதிவு செய்யப்படாத தொகை (CPC கொடுப்பனவு ரூபா 1,022,280,600) 2023 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று திறைசேரி தெரிவித்துள்ளது. எனவே இந்த வேறுபாடு இப்போது தீர்க்கப்பட்டுள்ளது. ஹபரன வெயாங்கொட திட்டம் தொடர்பாக திறைசேரியால் திருத்தப்பட வேண்டிய தொகை அவர்களின் கணக்குப் புத்தகங்களை திருத்துவதற்காக பொது திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**(ஓ) சபையின் கணக்குப் புத்தகங்களில் காட்டப்பட்டுள்ள தொகைகள் மற்றும் குறித்த நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள புள்ளிவிவரங்களின் படி தொடர்புடைய தரப்பினரிடமிருந்து பெறத்தக்கவைகள் மற்றும் தொடர்புடைய தரப்பினருக்குச் செலுத்த வேண்டியவைகளிற்கு இடையே முறையே ரூபா 1,126.29 மில்லியன் மற்றும் ரூபா 447.78 மில்லியன் என கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் காணப்பட்டன.**

**லெகோ வேறுபாடு**

31/12/2022 இல் லங்கா எலெக்ட்ரிசிட்டி கோ. (பிரைவேட்) லிமிடெட் (லெகோ) க்கு தொடர்புடைய டிரான்ஸ்மிஷன் பிரிவின் பதிவுகளின்படி நிலுவைகளை உறுதிப்படுத்துவது தொடர்பான கணக்கிணக்கமானது கணக்காய்விற்கான பதில்களுடன் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இ.மி.ச. இன் கணக்குப் புத்தகங்களின்படி பெறத்தக்க மீதித் தொகை ரூ. 2,912.67 மில்லியன் ஆக காணப்பட்ட போதிலும், பெறப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின்படி லெகோ இலிருந்து செலுத்த வேண்டிய நிலுவைகள் ரூ. 1799.28 மில்லியன் ஆகும். அதன்படி வித்தியாசம் ரூ. 1,113.38 மில்லியன்கள் ஆனதுடன் இது 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட UNT சரிசெய்தல்களை லெகோ கணக்கிடாததாலும் கூரை மேல் சோலார் கொள்முதல் தொடர்பாக லெகோ பதிவு செய்த தொகையாலும் இது ஏற்பட்டுள்ளது.

**LCC வேறுபாடு**

2016 முதல் 2021 வரையிலான ஆண்டுகளுக்கான நிர்வாகக் கட்டணங்கள் தொடர்பான அனைத்து நிலுவைத் தொகைகளையும் இ.மி.ச. செலுத்தியுள்ளது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரிவு இல. 2.3 (LCC முகாமைத்துவக் கட்டணம் செலுத்துதல்) இன் படி மீதமுள்ள செலுத்தப்படாத தொகையை இ.மி.ச. செலுத்த ஒப்புக்கொள்ளவில்லை. இது ஏற்கனவே LCC க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், 2019, 2020,2021 ஆம் ஆண்டுகளுக்கான சில வரி பட்டியல்கள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

### 1.2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

**சபையால் நேரடியாகப் பெறப்பட்ட நான்கு வெளிநாட்டு நிதியுதவி கடன்களின் மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை. நிதிக்கூற்றுக்களின் படி இந்தக் கடன்களின் மொத்த நிலுவைத் தொகை ரூபா 55,078.65 மில்லியன் ஆகும்..**

ADB இன் கடன் நிலுவைகளை ADB LFIS முறைமையிலிருந்து எந்த தேதியிலும் பதிவிறக்கம் செய்ய முடியும். அதன்படி, 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான அறிக்கைகள் கணக்காய்வுக் கிளையில் சமர்ப்பிக்கப்பட்டன. இருப்பினும், கணக்காய்வாளரிடம் நேரடியாக நிலுவையை உறுதிப்படுத்துமாறு ADB, HNB மற்றும் ICBC க்கு தனித்தனி கோரிக்கை கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், கணக்காய்வாளர் ADB க்கு கோரிக்கையை அனுப்பினால் நேரடியாக உறுதிப்படுத்தல்களை அனுப்ப முடியும் என்றும் அது ஏற்கனவே கணக்காய்வாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் நிதியளிப்பு நிறுவனமான ADB இ.மி.ச. க்கு பதிலளித்தது.

**1.3** **நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**
தகவல் பந்தி

**1.4** **நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள**
தகவல் பந்தி

**2.** **ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**
தகவல் பந்தி

2.2.2 பின்வருவனவற்றைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது சபையின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

| விதிகள் / வழிகாட்டல்களுக் கான தொடர்பு | விபரம் | பதில |
|---|---|---|
| **(அ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய இலங்கை மின்சார சபை அதிகாரச் சட்டம் .**<br>**(ை) (ை) 7(1) மற்றும் 43(1) ஆம் பிரிவு** | **ஒழுங்குபடுத்தல் தரப்பிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது ரூபா 5.07 பில்லியன் பெறுமதியான 60.33 Gwh எரிசக்தி, மின் பிறப்பாக்கத்திற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத 3 சுயாதீன மின்வலு உற்பத்தியாளர் களிடமிருந்து (IPPs) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.** | ஓய்வு வழங்கப்பட்ட IPP ஆலைகள்: ஏஸ் எம்பிலிபிடிய, ஏஸ் பவர் ஜெனரேசன் மாத்தறை மற்றும் ஆசியா பவர்<br><br>நாட்பட்ட IPP மின் நிலையங்களில் இருந்து மின்சக்தியை கொள்வனவு செய்வதற்காக எந்தவொரு பரிமாற்றல் அனுமதிப் பத்திரத்தையும் பெறுவதற்கு, 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் (மின்சாரச் சட்டம்) பிரிவு 7 (1) அல்லது 43 (1) இல் தடைகளும் இல்லை. இந்த மூன்று நாட்பட்ட IPP மின் நிலையங்களின் காலாவதியான மின்வலு கொள்வனவு ஒப்பந்தங் களை (பிபிஏ) நீடிக்க இ.மி.ச. பியூசிஎஸ்எல் இன் ஒப்புதலை கோரியதுடன் கால நீடிப்புச் செய்யப்பட்ட பிபிஏக்களை அதன் ஒப்புத லுக்காக சமர்ப்பித்தது.<br><br>மின்சாரச் சட்டத்தின் பிரிவு 24 (1) (உ) இன் கீழுள்ள இ.மி.ச. இன் (பரிமாற்றல் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்) கடமை க்கு இணங்க எதிர்வு கூறப்பட்ட மின்சாரத் தேவையினை பூர்த்தி செய்வதற்கு போதியளவு மின்சார இயலளவு காணப்படுவதனை உறுதி செய்வதற்காக இ.மி.ச. இந்த மின் நிலையங்க ளின் பிபிஏ களை காலநீடிப்புச் செய்தல் வேண்டும். மின் வெட்டு ஏதேனும் விதிக்கப்பட்டால், தொழிற்சாலைகள்/ ஹோட்ட ல்கள் மற்றும் வணிக கட்டிடங்களுக்கு மின்சக்தி வழங்கப்படா ததன் காரணமாக நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கத்தை இ.மி.ச. மேலும் கருத்தில் கொண்டது. அமைச்சர வையின் அங்கீகாரத் துடன் இ.மி.ச. இதனை செய்துள்ளது. |

| விதிகள் / வழிகாட்டல்களுக் கான தொடர்பு | விபரம் | பதில |
|---|---|---|
| (ii) 28(3) ஆம் பிரிவு | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நுகர்வோர் வைப்புத் தொகைக்கான வட்டிக்கு சபை பணம் செலுத்தவில்லை அல்லது கணக்குப் புத்தகங்களில் ஏற்பாடு செய்யவில்லை. 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்ட விகிதத்தின் அடிப்படை யில் கணக்காய்வில் செய்யப்பட்ட கணக்கீட்டின்படி, அதற்கு செலுத்த வேண்டிய வட்டி ரூபா 976 மில்லியன் ஆனதுடன் அதன்படி, 2022 திசெம்பர் 31 இல் செலுத்தப்படாத திரட்டப்பட்ட வட்டி ரூபா 9.06 பில்லியன் ஆகும். | 2023 ஜூன் 20, 2023 அன்று நடைபெற்ற சபைக் கூட்ட த்தில் எடுக்கப்பட்ட 23.09.251 ஆம் இலக்க தீர்மானத்தின் படி, மொத்த வாடிக்கையாள ர்கள் மற்றும் சில்லறை வாடிக்கையாளர்களுக்கு 2023 பெப்ரவரி 15 முதல் வட்டி செலுத்தப்படுகிறது. 2023 பெப்ரவரி 15 முதல் 2023 -ஜூன் 30 வரையான பாதுகாப்பு வைப்புத் தொகைக்கு பொருந்தக் கூடிய மாதாந்த வட்டி மொத்த வாடிக்கையாளர் களின் ஜூலை 2023 மின் கட்டணத்தில் வரவு வைக்கப்பட்டது.<br><br>சில்லறை வாடிக்கையாளர்க ளுக்குரிய 15 பிப்ரவரி 2023 முதல் 2023 டிசம்பர் 31, வரையிலான வட்டி ஜனவரி 2024 முதல் வாடிக்கையாள ரின் சரிபார்க்கப்பட்ட மின் சாரக் கணக்கில் ஆண்டு தோறும் வரவு வைக்கப்படும். 15 பெப்ரவரி 2023 முதல்' 31 டிசம்பர் 31, வரையிலான வட்டிக்கு ஏற்பாடு செய்யபட்டுள்ளது |
| (ஆ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 13(1)(இ) (எ) (ஆ) பிரிவின் கீழ் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட மின்சாரப் பரிமாற்றம் மற்றும் மொத்த விநியோக உரிமத்தின் நிபந்தனை 30 இன் உப பிரிவு 10. | ஆணைக்குழுவின் முன் அனுமதி பெறாமல், மீளாய்வாண்டின் சனவரி 6 முதல் ஏப்ரல் 04 வரையிலான 11 நாட்களில் 9 மணி நேரம் 30 நிமிடங்களுக்கு மின் விநியோகத்தில் தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது | CEB மற்றும் IPP அனல் மின் நிலையங்களின் எரிபொருள் பற்றாக்குறை, நீர் கட்டுப்பாடுகள் மற்றும் நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களின் செயலிழப்பு காரணமாக 2022 ஜனவரி 3 முதல் முகாமைத்துவம் செய்ய வேண்டிய தேவை யை இ.மி.ச. கண்டறிந்து ள்ளது.<br><br>இ.மி.ச. அதனது தினசரி தேவை முகாமைத்துவ அட்டவணையை தேவைப் படும் போதெல்லாம் முன் கூட்டியே அனுப்பியுள்ளது. அந்த காலகட்டத்தில் PUCSL இலிருந்து தேவை யான அனுமதிகளைப் பெற்ற பின்னரே இ.மி.ச. நிர்வாகத்திடம் கோரிக்கை செய்துள்ளது.<br>இருப்பினும், எதிர்பாராத ஜெனரேட்டர் செயலிழப்பு கள் மற்றும் டிரான்ஸ்மி ஷனின் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள் காரணமாக, ஒட்டுமொத்த கணினி நிலைத்தன்மையைப் பராமரிக்க, கைமுறையாக வேலை செய்வதற்கு இ.மி.ச. நிர்ப்பந்திக்கப்பட்டது. |

| விதிகள் / வழிகாட்டல்களுக் கான தொடர்பு | | விபரம் | பதில |
|---|---|---|---|
| **(இ)** | **2021 நவம்பர் 17 ஆந் தேதியிட்ட பொது முயற்விகள் திணைக்களத்தின் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டு கையேடு.** | | |
| (i) | **பிரிவு 3.5** | **2022 திசெம்பர் 31 வரை வரிசை அமைச்சகத்திற்கு விடுவிக்கப்பட்ட முப்பத்து மூன்று ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் சபை ரூபா 51.91 மில்லியன் தொகையை செலுத்தியுள்ளது. அதன்படி, 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையில் மட்டும் விடுவிக்கப்பட்ட ஊழியர்களுக்காக ரூபா 236.26 மில்லியன் தொகையை மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு சபைக்கு திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது.** | ஊழியர்களை விடுவிக்குமாறு வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளை இ.மி.ச. இற்கு நிராகரிக்க முடியாதுள்ளமையால், ஏற்பட்டுள்ள செலவினத்தை இ.மி.ச. இனால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. இருப்பினும், அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் சார்பாக இ.மி.ச. செலுத்திய சம்பளங்கள் மற்றும் ஏனைய நலன்களை மீளளிப்புச் செய்யுமாறு கோரி ஒரு கடிம் மின்வலு அமைச்சிற்கு இ.மி.ச. இன் பொது முகாமையாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (ii) | **பிரிவு 6.6** | **2022 ஆம் ஆண்டிற்கான சபையின் வரைவு ஆண்டு அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை.** | 2022 ஆம் ஆண்டிற்கான வரைவு ஆண்டு அறிக்கையின் மென்பொதி 27 ஜுன் 2023 அன்று அரசாங்க கணக்காய்வுக் கிளையின் கணக்காய்வு அத்தியட்சகருக்கு அனுப்பப் பட்டது. |

| விதிகள் / வழிகாட்டல்களுக் கான தொடர்பு | விபரம் | பதில |
|---|---|---|
| **(iii) பிரிவு 7.7** | **குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒருமுறை துணை கம்பனிகளின் செயலாற்றல் குறித்து கலந்துரையாட வேண்டுமென்ற நம்பகமான கடமை பணிப்பாளர் சபைக்கு இருந்த போதிலும், 2023 ஏப்ரல் இன் இறுதியில் கூட பணிப்பாளர் சபையால் துணைக் கம்பனிகளின் மதிப்பாய்வுக் கொள்கை நிறுவப்படவில்லை** | பிரிவு 2.2.5 (நிறுவனத்தின் துணை நிறுவனங்களுட னான உறவை நிர்வகித்தல்) இன் படி, பொது முயற்சிகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மேற்கண்ட வழிகாட்டுதலின்படி, . பங்கிலாபம், உரிமைத்துவம் மற்றும் பங்குகள் மற்றும் முக்கிய கொடுக்கல் வாங்கல் மாற்றங்கள் போன்ற உள்ளக சிக்கல்களைத் தீர்ப்பதற்காக பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப் பட்ட துணைக் கொள் கையை வைத்திரு ப்பது கட்டாயம் என்று சபை குறிப்பிட்டது. அதன்படி, ஒழுங்குபடுத்தல் மற்றும் சட்ட கட்டமைப்பிற்குள் துணை நிறுவனங்களின் விவகாரங்களை மீளாய்வு செய்வதனை சபை பொறுப் பேற்க வேண்டும்.<br><br>இ.மி.ச. இன் துணைக் கொள்கை தொடர்பான தகவல்களை கணக்காய் வாளர் நாயகம் கோரியுள்ள தாகவும் ஆனால் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட கொள் கை எதுவும் தற்போது இல்லை எனவும் தலைவர் சபைக்கு தெரிவித்தார்.<br><br>மின்சாரத் துறையின் முன்மொழியப்பட்ட நிறுவன சீர்திருத்தங்களின்படி, இ.மி.ச. ஐ துண்டிக்கும் பணிகள் தொடங்கப்படும் என்றும், இ.மி.ச. இன் வணிகத்தை கையகப்படுத்து வதற்கு கம்பனிகள் சட்டத்தின் கீழ் புதிய சுயாதீன நிறுவனங்கள் உருவாக்கப்படும் என்றும் சபை வலியுறுத்தியது. முன்மொழியப்பட்ட சீர்திருத் தங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு, மின்சாரத் துறையின் அனைத்து அம்சங்களையும் கையாள்வதற்காக புதிய மின்சாரச் சட்டம் இயற்றப்படும். எனவே, கலந்துரையாடலின் பின்னர் இ.மி.ச. ஒரு நிறுவன கட்டமைப்பு மாற்றத்தின் இருப்பதால், மேலே உள்ள பந்தி (ஐ) இல் குறிப்பிடப் பட்டுள்ளபடி துணைக் கொள்கையை உருவாக் குவது இந்த நேரத்தில் தேவையில்லை என்று சபை முடிவு செய்தது. |
| **(ஈ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் தொழில ஆணையாளர் நாயகத்தினால் 2015 செப்டம்பர் 12 அன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முகவரியிட்டு அனுப்பிவைத்த தெளிவு படுத்தல் கடிதம** | **விதிக்கு முரணாக, ஊழியரின் உழைப்பைக் கணக்கிடும் போது வெளியேறும் கொடுப்பனவு, முதுகலை பட்டப்படிப்பு கொடுப்பனவு மற்றும் தொழில்சார் கொடுப்பனவு∴ அரை-தொழில்முறை கொடுப்பனவு ஆகியவற்றில் மிக அதிகமான தொகையைப் பயன்படுத்த சபை தீர்மானித்திருந்தது.** | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் பிரிவு 47 இன் துணைப்பிரிவு (ஊ) இன் படி, ஊழியர் சேமலாப நிதிக்கு செலுத்த வேண்டிய தொகையை கணக்கிடுவ தற்காக “பரிந்துரைக்கப்ப டக்கூடிய ஏனைய வகையான ஊதியங்கள்” பயன்படுத்தப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது. இந்த விதிக்கு இணங்க, ஊழியர் சேமலாப நிதிக்கான வருவாயைக் கணக்கிடும் போது, வருகைக் கொடுப்ப னவு, முதுகலை பட்டப்படிப்பு கொடுப்பனவுகள் அல்லது தொழில்முறை கொடுப்பனவு / அரை-தொழில்முறை கொடுப்பனவுகளில் மிக உயர்ந்ததைக் கருத்தில் கொள்ள பணிப்பாளர் சபை தீர்மானித்தது. அதன்படி, இது சட்டத்திற்கு எதிரானது அல்ல. |

| விதிகள் / வழிகாட்டல்களுக் கான தொடர்பு | விபரம் | பதில |
|---|---|---|
| **(உ) வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட 2007 சனவரி 10 ஆந் திகதிய கொள்முதல் ஒப்பந்தத்தின் பிரிவு 6.1.3.** | **வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு சபையால் 220மஎ இல் வழங்கப்படும் மின்சாரத்திற்காக 220மஎ இல் மின்சாரம் வழங்குவதற்குப் பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஏதுமில்லை என்றால், அது மின்சாரக் கிரயத்தில் காணப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எரிசக்தி கட்டணம் மற்றும் பிற கட்டணங்களைக் கருத்தில் கொள்ளாமல் சபையால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட விலை வீதத்தைக் கணக்கிடுவதற்கு எரிசக்தி கட்டணத்தை மட்டுமே சபை கருத்திற்கொண்டிருந்தது.** | கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்திலுள்ள வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் 220 kV மின்னழுத்த மட்டத்தில் இ.மி.ச. இன் வலைப்பின்னலுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் அதே மின்னழுத்த மட்டத்தில் மின் மானி அளவீட்டு முறைமை நிறுவப்பட்டுள்ளது. 2021-12-16 ஆந் தேதியிட்ட AGM (DD 2) கடிதத்தின் மூலம் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் இனை டிரான்ஸ்மிஷன் வாடிக்கையாளராகக் கருதுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டது. இது தொடர்பாக 2022-01-24 அன்று DGM (EM) கிளையில் இந்த விடயத்தைப் பற்றி கலந்துரையாட ஒரு கூட்டம் நடத்தப்பட்டதுடன், அக்கூட்டத்தில் பின்வருமாறு முடிவு செய்யப்பட்டது,<br><br>அ) இப்போது நடைமுறையிலுள்ள எதிரீடு செய்தல் முறையைப் பின்பற்றுவதற்கு வழங்கப்பட்ட உத்தரவுகளைத் தேடுதல் மற்றும்;<br><br>ஆ) சம்மந்தப்பட்ட முழு காலத்திற்குமான எதிரீடு செய்தல் முறை மற்றும் ஐ3 கட்டணத்திலிருந்து இ.மி.ச. ஆல் வெஸ்ட் கோஸ்ட் இற்கு விதிக்கப்படும் கட்டணங்களை ஒப்பிடுதல்.<br><br>மின்சார கொள்முதல் உடன்படிக்கையின் பிரிவு 6.1.3 இன் படி, 2014-11-12 ஆந் தேதியிட்ட AGM (கூட்டிணைப்பு உபாயம்) கடிதத்தின் மூலம், இ.மி.ச. இல் இருந்து நுகரப்படும் மின்சார சக்தியின் எதிரீட்டை, வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் இற்கு செலுத்த வேண்டிய எரிசக்தி கட்டணத்தில் இருந்து மட்டுமே ஈடுசெய்ய முடியும். அந்த திசையில் இருந்து இ.மி.ச 2014 ஒக்தோபர் முதல் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் மின் உற்பத்தி நிலையத்தால் இறக்குமதி செய்யப்படும் எரிசக்தியின் அளவை இ.மி.ச. எதிரீடு செய்யத் தொடங்கியது.<br><br>ஒப்பீட்டின்படி, 13 கட்டண முறையின் கட்டணத் தொகையை காட்டிலும் சம்பந்தப்பட்ட முழு காலத்திற்கும எதிரீடு முறையில் இ.மி.ச. ஆல் வெஸ்ட் கோஸ்ட்டிற்கு விதிக்கப்பட்ட கட்டணத் தொகையானது அதிகமாகும். எனவே, தற்போது டிரான்ஸ்மிஷன் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முறையைத் தொடர்வதற்கும், வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட்டை டிரான்ஸ்மிஷன் வாடிக்கையாளராகக் கருதுவதற்கும், அங்கீகரி க்கப்பட்ட டிரான்ஸ்மிஷன் வாடிக்கையாளர் கட்டணம் கிடைக்கும் பட்சத்தில் டிரான்ஸ்மிஷன் பிரிவுக்கு அதனை மாற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. |

| விதிகள் / வழிகாட்டல்களுக் கான தொடர்பு | விபரம் | பதில |
|---|---|---|
| (ஊ) முகாமைத்துவ சேவைகள் திணைக் களத்தின் 2018 யூலை 18 ஆந் திகதிய 03∴2018 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் தாபனக் கோவையின் அத்தியாயம் II இன் பிரிவு 9.1 | அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறாமல் ஓய்வுபெற்ற இரண்டு ஊழியர்கள் சபையின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்காக மீளாய்வாண்டிற்கான ஆலோசனைக் கட்டணமாக ரூபா 1.2 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. | 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இ.மி.ச. சட்டத்தின் 13 வது பிரிவின்படி, சபை அவ்வப் போது பொறியாளர்களாக அல்லது ஆலோசகர்களாக செயல்பட தகுதியுள்ள நபர்களை நியமித்து, சரியானது என நினைக்கும் ஊதியத்தை அவர்களுக்கு வழங்கலாம்". அதன்படி ஓய்வு பெற்ற இரண்டு பொறியாளர்களை ஆலோசகர்களாக சபை நியமித்துள்ளது. |
| (எ) 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்டத்தின் பகுதி ஏ இன் பிரிவு 17. | மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் நான்காம் காலாண்டுக்கான லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பனி லிமிடெட்டிற்கு மின்சாரம் வழங்குவதற்காக அறவிடப்பட்ட ரூபா 223.31 மில்லியன் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி (எஸ்.எஸ்.சி.எல்) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு 2023 ஏப்ரல் இறுதிவரையிலும் செலுத்தப்படவில்லை | பதில் இணைப்பு-01 இல் இணைக்கப்பட்டுள்ளது |
| (ஏ) 1998 மார்ச் 31 ஆம் தேதியிட்டு பிரதிப் பொது முகாமையாளர் (நுகர்வோர் சேவை) ஆல் வெளியிடப்பட்ட 1998-4 ஆம் இலக்க டிஜிஎம்(சிஎஸ்)∴ சுற்றறிக்கை. | துண்டிக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குள், சட்டப் பிரிவின் மூலம் நிலுவையில் உள்ள கடன் நிலுவைத் தொகையை வசூலிக்க சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வாறாயினும், தெரிவுக் கணக்காய்வுச் சரிபார்ப்பின்படி, கொழும்பு நகரப் பிராந்தியத்தைப் பொறுத்தமட்டில் மொத்தமாக ரூபா 272.15 மில்லியனாக நிலுவையில் உள்ள கடன் (இறுதிப்படுத்தப்பட்ட) மீதியை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | மின்சாரம் துண்டிக்கப்பட்ட பின்னர் நிலுவையில் உள்ள இறுதிக் கடனாளிகளை மீட்பதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் சில காரணங்களால் சட்ட நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. துணைப் பொது முகாமை யாளரால் (நுகர்வோர் சேவை) வெளியிடப்பட்ட 31 மார்ச் 1998 தேதியிட்ட DGM(CS)/ 1998-4 சுற்றறிக்கை ஐக் கடைப் பிடிக்குமாறு பொறுப்பு அலுவலர்களுக்கு அறிவு றுத்தப்பட்டது. |

| விதிகள் / வழிகாட்டல்களுக் கான தொடர்பு | விபரம் | பதில |
|---|---|---|
| **(ஐ) 1998 மார்ச் 08 தேதியிட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல. 130.** | **வாகன கடன்கள் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வட்டி விகிதத்தில் வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், சபையின் காசோட்ட சிரமங்களைக் கருத்தில் கொள்ளாமல் சபை அதன் ஊழியர்களுக்கு 4.2 சதவீத வட்டி விகிதத்தில் வாகனக் கடன்களை வழங்கியது.** | 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின்படி, சபையின் அதிகார ங்கள் பிரிவு 12 இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.<br><br>பிரிவு 12 (க): சபையின் விவகாரங்களை நிர்வகிப்பது தொடர்பான விதிகளை உருவாக்குதல்<br><br>பிரிவு 12(கா): சபையின் கருதுகின்ற விதத்தில் அதன் வணிகத்தை முறையாகச் செயல்படுத்து வதற்குத் தேவையான மற்ற எல்லா விடயங்க ளையும் செய்தல்<br><br>அதன்படி, குறிப்பிடப்பட்டு ள்ள வட்டி விகிதங்கள் அதன் ஊழியர்களுக்கு நிறுவன த்தின் மேம்பாட்டிற்காக பணியாற்றுவதற்கு ஊக்குவிப்பதற்காக சபையால் வழங்கப்படும் நன்மைகள் தொடர்பானவை. மேலும், இந்தச் சட்டமே சபை விவகாரங்களின் நிர்வாகம் தொடர்பான விதிகளை உருவாக்குவ தற்கான அதிகாரத்தை சபைக்கு வழங்குகிறது. |

**2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து, சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்காத விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,**

**(அ) "இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள்" தொடர்பாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட 2007 அக்டோபர் 31 தேதியிட்ட 07/1955/332/045 இலக்க அமைச்சரவைப் பத்திரம் 31 மார்ச் 2008 தேதியிட்ட தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் அறிக்கையுடன் 2008 ஏப்ரல் 09 ஆம் தேதி அமைச்சரவையால் பரிசீலிக்கப்பட்டதுடன் 31 மார்ச் 2008 தேதியிட்ட அதன் அறிக்கையில் தேசிய சம்பளம் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழு வகுத்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன**

(i) **மேற்படி அமைச்சரவை தீர்மானத்திற்கு மாறாக, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் பட்டியலில் சேர்க்கப்படாத பொறியாளர் கொடுப்பனவு, ஊக்குவிப்பு கொடுப்பனவு, தற்காலிக கொடுப்பனவு, தகுதி அடிப்படையிலான ஊக்க கொடுப்பனவு, OH & S ஊக்க கொடுப்பனவு, பணியாளர் கொடுப்பனவு, பரிமாற்றம் மற்றும் மின்பிறப்பாக்க திட்டமிடல் கொடுப்பனவு, கணினி கட்டுப்பாட்டு கொடுப்பனவு, தமிழ் மொழி கொடுப்பனவு மற்றும் பிற கொடுப்பனவுகள் என்பன இ.மி.ச. இன் அந்தந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில், 2009 மே 26 இன் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 39 மற்றும் 2018 யூலை 18 ஆந் திகதிய 3:.2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைளின் படி சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளாது மேற்படி கொடுப்பனவுகளாக ரூபா 427.65 மில்லியன் தொகை 2022 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்டுள்ளது.**

2022 ஜூலை 27 முதல் ஊழியர்களின் கொடுப்பனவுகளை சம்பளத்தில் 65% ஆக வரையறுக்க பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

(ii) **மேற்படி அமைச்சரவை தீர்மானத்திற்கு மாறாக, நிபுணத்துவ கொடுப்பனவுக்கு உரித்துடைய அதிகாரிகளுக்கு எக்ஸே ாடஸ் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. அதன்படி, இரண்டு கொடுப்பனவுகளும் அதாவது எக்ஸோடஸ் கொடுப்பனவு மற்றும் தொழில்முறை கொடுப்பனவு ஆகியவை குறிப்பிட்ட அதிகாரிகளிற்கு வழங்கப்படுகின்றன. 2022 யூன் மாதத்திற்கான தொழில்சார் கொடுப்பனவுக்கு மட்டுமே உரித்துடைய 487 அதிகாரிகளுக்கு எக்ஸோடஸ் கொடுப்பனவாக ரூபா 11.99 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.**

2022 ஜூலை 27 முதல் ஊழியர்களின் கொடுப்பனவுகளை சம்பளத்தில் 65% ஆக வரையறுக்க பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

(iii) **136 அதிகாரிகளுக்கு 2022 யூன் மாதத்துக்கான கொடுப்பனவுகளாக மட்டும் ரூபா 3.65 மில்லியன் தொகை அவர்களின் சம்பளத்தில் 65 சதவீதத்திற்கும் அதிகமாக வழங்கப்பட்டுள்ளமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டதுடன் அது மேற்படி அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணானதாகும். மேலும், குறிப்பிட்ட பதவியினால் மேற்கொள்ளப்படும் கடமைகளுடன் தொடர்புடைய பல கொடுப்பனவுகள் மேற்படி அமைச்சரவை தீர்மானத்திற்கு மாறாக வழங்கப்படுகின்றன. அதன்படி, 2022 யூன் மாதத்திற்கு மட்டும் இந்த வகையான கொடுப்பனவுகளுக்காக மொத்தம் ரூபா 21.67 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.**

2022 ஜுலை 27 முதல் ஊழியர்களின் கொடுப்பனவுகளை சம்பளத்தில் 65% ஆக வரையறுக்க பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

(iv) **மேற்படி அமைச்சரவை தீர்மானத்திற்கு மாறாக, 2008 ஏப்ரல் 01 க்குப் பிறகு பணியமர்த்தப்படும் ஊழியர்களுக்கு செயலாற்றலின் அடிப்படையிலான ஊக்கத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்குப் பதிலாக 25 எண்ணிக்கையிலான அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.**

2022 ஜுலை 27 முதல் ஊழியர்களின் கொடுப்பனவுகளை சம்பளத்தில் 65% ஆக வரையறுக்க பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) **உழைக்கும் போதே செலுத்தும் (PAYE) வரி / முற்பண தனிப்பட்ட வருமான வரி (பீஜவு) பொறுப்பை ஊழியர்களுக்கு மாற்றுவதற்காக 2015 மே 20 இல் கூட்டு உடன்படிக்கையை கருத்தில் கொள்ளும் போதும் 2007 திசெம்பர் 13 இல் சம்பள மீளாய்வின் போதும் அமைச்சரவை தீர்மானங்களை எடுத்திருந்தது. எனினும் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானங்களுக்கும் 3/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கும் முரணாக 2010 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியின் போது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரியை ∴ முற்பண தனிப்பட்ட வருமான வரியை கழிக்காமல் சபை அதன் சொந்த நிதியிலிருந்து ரூபா 4.98 பில்லியன் தொகையை அவ்வாறு செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் இறுதிக்குள் கூட அந்தந்த ஊழியர்களிடமிருந்து இந்தக் கொடுப்பனவு காரணமாக சபைக்கு ஏற்பட்**

நவம்பர் 2020 முதல், இ.மி.ச. இன் ஊழியர்களால் முற்பண தனிநபர் வருமான வரி (APIT) செலுத்தப்பட்டது

(இ) **2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய இலங்கை மின்சார சட்டத்தின் 24 (1) (இ) பிரிவின் படி, மின்சக்திக்கான நியாயமான முன்னறிவிப்பு தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் மின் உற்பத்தி நிலையங்களில் போதுமான இயலளவு காணப்படுவதை சபை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன்படி, 2018 - 2037 இன் குறைந்த செலவில் நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின்படி, 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் முறையே 500MW, 657MW, 430MW மற்றும் 445MW புதிய மின்பிறப்பாக்க செயற்திட்டங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டது. இருப்பினும், திட்டமிடப்பட்ட புதிய மேலதிக இயலளவான 2,032 மெகாவாட்களில், 661.6 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்கள் மட்டுமே இயக்கப்பட்டன. அத்துடன், அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட மின்சாரத் தொழில் தொடர்பான அரசாங்கக் கொள்கையின் அடிப்படையில் 2022 - 2041 க்கான குறைந்த விலை நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்டத்திற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு 2021 ஒக்தோபர் 05 அன்று நிபந்தனைக்குட்பட்ட ஒப்புதலை வழங்கியது. 2022 - 2041 இன் நிபந்தனையுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட குறைந்த செலவில் நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின்படி, 2022 ஆம் ஆண்டில் 544 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிறப்பாக்க இயலளவை செயல்படுத்த திட்டமிடப்பட்டது. இருப்பினும், 211 மெகாவாட் திறன் கொண்ட புதிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் நிலையங்கள் மட்டுமே இயக்கப்பட்டன. எனவே, புதிய பிறப்பாக்க திட்டத்தை செயல்படுத்துவதிலான முன்னேற்றம் கணிசமாகக் குறைந்திருந்ததுடன் குறைந்த செலவில் மின்சாரம் வழங்கும் திட்டங்களின் நோக்கத்தை அடைய முடியவில்லை. இதன் விளைவாக, மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் ரூபா 5.07 பில்லியன் மதிப்புள்ள 60.33 Gwh அளவு மேலதிக அனல் மின்சக்தியை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.**

2022 ஆம் ஆண்டிற்குள், 216 மெகாவாட் திறன் கொண்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன

2030 ஆம் ஆண்டளவில் 70% புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அடைவதற்கான கொள்கை இலக்கை முன்வைத்து 2023-2042 ஆம் ஆண்டின் நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்டம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. LTGEP 2023-2042 திட்டம் இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2X 350 மெகாவாட் ஒருங்கிணைந்த சுழற்சி மின் நிலையங்கள், 230 மெகாவாட் எரிவாயு விசையாழி மின் நிலையங்கள் மற்றும் 200 மெகாவாட் எரிவாயு இயந்திர மின் நிலையம் ஆகியவை 2027 ஆம் ஆண்டளவில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சூரிய ஒளி, காற்று மற்றும் உயிரித் தாவரங்கள் போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களில் இருந்து 3,335 மெகாவாட் பாரிய மேலதிக இயலளவு அடுத்த 5 ஆண்டுகளுக்குள் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், பயன்பாட்டு அளவிலான பேட்டரி சேமிப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அடுத்த ஐந்து ஆண்டுகளில் முதல் பம்ப் செய்யப்பட்ட ஹைட்ரோ திட்டம் தொடர்பான ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும்.

**2.2.4 பின்வருவனவற்றைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பேரவையின வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக காலஎல்லைக்குள் சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என.**

(அ) **2018-2037 வரையான நீண்ட கால மின்பிறப்பாக்கத் திட்டத்தின் படி, சீதாவ கங்கை நீர் மின்வலு செயற்திட்டம் 2022 க்குள் தொடங்கப்படுதல் வேண்டும். இந்த செயற்திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 301.19 மில்லியன் கிரயம் ஏற்பட்டிருந்தது. இருப்பினும், 2020 திசெம்பர் 20 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு சபை தீர்மானித்தது. மேலும், மேற்குறித்த செயற்திட்டத்தை ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஏப்ரல் 2023 இறுதிக்குள் கூட சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கூறிய திட்டத்திற்கான செலவினம் சிக்கனமற்றதாக மாறியிருந்ததை அவதானிக்க முடிந்தது.**

செலவினங்களை பதிவழிப்புச் செய்வதற்கான சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அது கணக்காய்வுக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டது. இலங்கை எரிசக்தி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்துடன் நியாயமான விலைக்கு பேச்சுவார்த்தை நடத்தி நடைமுறைப்படுத்துவதற்கான உரிமையைக் கருத்தில் கொண்டு, திட்டத்தில் உருவாக்கப்பட்ட சொத்துக்களை வழங்கி, அந்தத் தொகையால் இ.மி.ச. இன் முதலீட்டை அதிகரிக்க கணக்காய்வுக் குழு பரிந்துரைத்துள்ளது. எவ்வாறாயினும், திட்டத்தின் முந்தைய மற்றும் தற்போதைய கட்டங்களுக்கு இடையில் கொள்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வுக் குழுவிற்கு எடுத்துக்காட்டப்பட்டதுடன் திட்டங்களுக்கிடையில் உள்ள அடிப்படை வேறுபாடுகள் காரணமாக, இ.மி.ச. க்கு ஏற்படும் சாத்தியமான செலவுகளை ஸ்ரீலங்கா எனர்ஜிக்கு மாற்றுவது கருத்தில் கொள்ளப்படவில்லை என்று வலியுறுத்தப்பட்டது. எனவே, செலவினங்களை பதிவழிப்புச் செய்வதற்கான ஒப்புதலைக் கோரி சபை பத்திரத்தை சமர்ப்பிக்குமாறு கணக்காய்வுக் குழு உத்தரவிட்டது. இ.மி.ச. ஆல் இது தொடர்பான சபை ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் ஒப்புதல் பெற்ற பிறகு இந்த தொகை நிதிநிலை அறிக்கைகளில் இருந்து பதிவழிக்கப்படும்.

**(ஆ) சரியான நேரத்தில் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால் முறையே மின்சாரம் கொள்முதல் மற்றும் எரிபொருள் கொள்முதல் (CPC) மீதான தாமத வட்டியாக மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் ரூபா 6.55 பில்லியன் மற்றும் ரூபா 8.92 பில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், உள்நாட்டு வங்கிக் கடன்கள் தொடர்பாக சபையால் கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால் ரூபா 11.17 மில்லியனுக்குச் சமமான தொகையும் இயல்புநிலை வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்தது.**

பல ஆண்டுகளாக செலவு-பிரதிபலிப்பு கட்டண முறை பெறப்படாததால் 2016 முதல் இ.மி.ச. பெரும் நட்டத்தைச் சந்தித்துள்ளது. எனவே எரிபொருளுக்கான கொடுப்பனவுகள் உட்பட அனைத்து காசுப் பாய்ச்சலையும் பூர்த்தி செய்ய இ.மி.ச. இன் காசோட்டத்தின் அடிப்படையில் மிகவும் கடினமான சூழ்நிலை காணப்பட்டது. எவ்வாறாயினும், பெப்ரவரி 2022 வரை இ.மி.ச. உரிய கொடுப்பனவுகளைச் செய்துள்ளதுடன் பல ஆண்டுகளாக இந்த தாமதமான வட்டிக் கூறுகளை எதிர்கொள்வதற்கு பொதுத் திறைசேரி தனி நிதியை வழங்கியுள்ளது. மேலும், 2023.06.26 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் மூலம், 30.04.2023 நிலவரப்படி, CPC-க்கான இ.மி.ச. இன் நிலுவைத் தொகையை CPCக்கு வழங்க முடிவு செய்துள்ளது. அமைச்சரவை முடிவின்படி, CPC நிதிநிலை அறிக்கையில் இருந்து வந்துள்ள 30 ஏப்ரல் 2023 நிலவரப்படி இ.மி.ச. இலிருந்தான நிலுவைத் தொகை (பட்டியல் பெறுமதி மற்றும் தாமதமான வட்டி) ரூபா 84.3 பில்லியன் உரிமைத்துவ முதலீட்டின் மூலம் இ.மி.ச. க்கு ஒதுக்கப்படும்.

மேலும், இ.மி.ச. அதிக வட்டி விகிதத்துடன் கூடிய வங்கி மேலதிகப்பற்றில் இயங்குவதுடன் இந்த வட்டியானது தாமத வட்டியுடன் ஒப்பிடுகையில் மிக அதிகமாக உள்ளது. கடன் திருப்பிச் செலுத்துவதற்கான ரூபா 11.17 மில்லியன் மேலே உள்ள ஏய்ப்புச் செய்யப்பட்ட வட்டியில் சேர்க்கப்பட்டுள்ளது

**(இ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய மின்சார சட்டத்தின் படி, 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் மரபுசாராத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (என்சிஆர்இ) செயற்திட்டங்களின் கொள்வனவுகளிற்காக கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும், அதைப் பொருட்படுத்தாமல், கழிவுகளிலிருந்து எரிசக்தி தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ஒரு கிலோவொட்சுக்கு ரூபா 36.20 வீதத்தில் (20 ஆண்டுகளுக்கு சமவிகித கட்டணம்) ஐந்து மாநகரசபைகளின் திடக்கழிவு மின்வலு ஆலைகளை செயல்படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அமைச்சரவை ஒப்புதல் அளித்தபடி, கிலோவாட் ஒன்றுக்கான கட்டணமான ரூபா 36.20 இல் ஒரு kWh-க்கு ரூபா 13.10 வீத கட்டணம் பொது திறைசேரியினால் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். அதன்படி, ஒரு திடக்கழிவு ஆலைக்கான மின் கொள்முதல் ஒப்பந்தம் 2020 டிசம்பரில் ஒரு சுயாதீன மின் உற்பத்தியாளருடன் கையெழுத்திடப்பட்டது, எனவே மொத்த கட்டணமாக முறா ஒன்றுக்கு ரூபா 36.20 எரிசக்தி கொள்வனவுக் கிரயம் சபையால் ஏற்கப்பட்டது. ஆனால், ஒரு Kwhக்கு ரூபா 13.10 தொகை பொது திறைசேரியால் திருப்பிச் செலுத்தப்படவில்லை. எனவே, 31 டிசம்பர் 2022 நிலவரப்படி, பொது திறைசேரியிலிருந்து பெற வேண்டிய மொத்த மதிப்பு ரூபா 1.85 பில்லியனாக இருந்தது.**

நகராட்சி திடக்கழிவுகளை செயலாக்குவதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கான kWh ஒன்றுக்கு ரூபா 36.20 கட்டணத்திற்கு 2017-02-21 அன்று அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. நாட்டில் உருவாகும் கழிவுகளை திறம்பட அகற்றும் அல்லது அழித்து சுற்றுச்சூழலுக்கு உகந்த கழிவு செயலாக்க வசதிகளை செயல்படுத்துவதற்கான தேசிய தேவையை கருத்தில் கொண்டு, கழிவினை எரிசக்தியாக மாற்றும் தொழில்நுட்பத்தின் கீழ் பின்வரும் அபிவிருத்தியாளர்களுடன் தரப்படுத்தப்பட்ட மின் கொள்முதல் ஒப்பந்தங்களில் கையெழுத்திட இ.மி.ச. இன் பணப்பாளர் சபை 2017-07-24 இல் ஒப்புதல் அளித்துள்ளது.

- KCHT லங்கா ஜேங் (பிரைவேட்) லிமிடெட்
- பெயார்வே ஹோல்டிங் (பிரைவேட்) லிமிடெட்
- வெஸ்டர்ன் பவர் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்
- சொல்வென்டர் லிமிடெட்இ AC&RF (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ரீசைகில் எனர்ஜி (பிரைவேட்) லிமிடெட்

மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள், பெருநகர மற்றும் மேற்குப்பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் மிகவும் கணிசமான வகையில் பதிலளிக்கக்கூடிய ஏலதாரராக கேள்விகோரல் முறையின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இருப்பினும், வெஸ்டர்ன் பவர் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் மட்டுமே தற்போது வணிகச் செயல்பாட்டைத் தொடங்கியுள்ளதுடன் வேறு எந்த திட்டமும் கட்டுமான நிலையிலும்கூட இல்லை. தேசிய முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு இந்த திட்டத்தை எளிதாக்க இ.மி.ச. பரிசீலித்துள்ளதுடன் கழிவை எரிசக்தியாக மாற்றுகின்ற தொழில்நுட்பம் தொடர்பான கட்டணத்தில் கடைசியாக அங்கீகரிக்கப்பட்ட விலைக்கு இணையான ரூ. 23.10 kWh கட்டணத்தை மட்டுமே செலுத்த வேண்டும். மீதித் தொகையான ரூ. 13.10 kWh பொது திறைசேரியிலிருந்து மீளளிக்கப்பட வேண்டும். இன்றைய நிலவரப்படி, மொத்தம் ரூபா 1,913,129,240.00 திறைசேரியிலிருந்து மீள்நிரப்பாலாக கோரப்பட்டுள்ள போதிலும், இ.மி.ச. இற்கு எந்த தொகையும் கிடைக்கவில்லை. இ.மி.ச. பணம் செலுத்தாததன் காரணமாக, கொழும்பு மாநகர சபையில் இருந்து திடக்கழிவுகளை ஏற்றுக்கொள்வதை வெஸ்டர்ன் பவர் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் நிறுத்தியதால், பல கலந்துரையாடல்கள் / சந்திப்புகள் நடைபெற்றன. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கொழும்பு

மாநகர ஆணையாளரால் நிதிச் செயலாளருக்கு பல கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ள போதிலும், தற்போதைய நிதி நெருக்கடி நிலைமை காரணமாக இந்த ஆண்டில் மேற் குறித்த தொகையை வழங்க வாய்ப்பு இல்லை என்பதாக 2023-04-11 அன்று பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இதற்கான பொறுப்பை ஏற்கும் போது தெரிவித்தார்

(ஈ) **மேலே குறிப்பிட்டுள்ளபடி, 390 மெகாவாட் மொத்த திறன் கொண்ட என்சிஆர்இ திட்டங்களுக்கான 7 கொள்முதல் மட்டுமே 2021 டிசம்பர் 31 வரை தொடங்கப்பட்டிருந்தது. இருப்பினும், மேற்கூறிய மின் உற்பத்தி நிலையங்களில், 81 மெகாவாட் மொத்த திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்கள் மட்டுமே 31 டிசம்பர் 2022 வரை இயக்கப்பட்டிருந்தன.**

தற்போது 101 மெகாவாட் மொத்த திறனுடன் இயக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சட்டத்தின் புதிய திருத்தங்களுக்கு அமைவாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் நிலையங்களுக்கான 86.8 மெகாவாட் (சூரிய சக்தி, காற்று, உயிரியல் வாயு, விவசாய கழிவுகள், நகராட்சி கழிவுகள், மினி ஹைட்ரோ) மொத்த இயலளவுடைய 28 தரப்படுத்தப்பட்ட மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் தரப்படுத்தப்பட்ட மின் கொள்முதல் கட்டணத்தின் கீழ் கையெழுத்திடப்பட்டுள்ளன.

(உ) **உத்தேச தலைமையக கட்டிட வளாகத்தின் பைலிங் பணிகளுக்கான ஒப்பந்தம் 22 அக்டோபர் 2012 அன்று ஒப்பந்தத் தொகையான ரூபா 304.6 மில்லியன் தொகைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. தலைமையக கட்டிட வளாகத்தின் கட்டுமானம் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான ஒப்பந்தம் 02 ஆகஸ்ட் 2021 அன்று ஒப்பந்தத் தொகையான ரூபா 4,774.6 மில்லியன் (VAT தவிர்த்து) வழங்கப்பட்டதுடன் தொடக்க தேதி 2021 ஆகஸ்ட் 16 ஆகும். கட்டுமான வேலைகள் (தொடக்க தேதியிலிருந்து 730 காலண்டர் நாட்களில் இருந்து) 2023 ஆகஸ்ட் 15 அன்று நிறைவடையும். முன்மொழியப்பட்ட தலைமையக கட்டிட வளாகத்தின் ஆரம்ப மதிப்பீடு 2011 இல் ரூபா 1,000 மில்லியனாக காணப்பட்டதுடன், இரண்டு ஒப்பந்தங்களுக்கிடையில் உள்ள முக்கிய நேர இடைவெளி காரணமாக 02 ஆகஸ்ட் 2021 இல் அத்தொகை ரூபா 5,079.2 மில்லியனாக (இரண்டு ஒப்பந்தங்களின் மொத்த ஒப்பந்தத் தொகை) அதிகரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியில், நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 1.19 பில்லியன் செலவழிக்கப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாணத்தின் பௌதீக முன்னேற்றம் 12.7 வீதமாகவே காணப்பட்டது. நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல், புதிய கட்டிடத்தை 2023 இல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ள போதிலும், 2017 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தற்போதைய தலைமைக் காரியாலயக் கட்டிடத்தைப் புனரமைப்பதற்காக ரூபா 319.19 மில்லியன் செலவழிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.**

பைலிங் ஒப்பந்தம் 2012-02-23 அன்று சியரா கன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதுடன் ஒப்பந்த வேலை தொடங்கப்பட்ட தேதி 2012-03-12 ஆகும். 2021.08.02 அன்று சன்கென் கன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு தலைமைச் செயலகக் கட்டிடத்தின் கட்டுமானப் பணி வழங்கப்பட்டதுடன் அதன் தொடக்கத் தேதி 2021.08.16 ஆகும். எனவே இவை வெவ்வேறு கட்டுமானப் பணிகளுக்காக வழங்கப்பட்ட இரண்டு தனித்தனி ஒப்பந்தப் பணிகள் ஆகும்.

முந்தைய ஆலோசகரால் 2015 இல் தயாரித்த கட்டிடத்தின் மதிப்பீடு ரூபா 2542 மில்லியன் ஆகும். இந்த மதிப்பீடு 2018 இல் அதே ஆலோசகரால் 27,750 சதுர மீட்டர் பரப்பளவிற்கு ரூபா 3149 மில்லியன் என மாற்றப்பட்டதுடன் இந்த மாற்றமானது 23 மே 2019 தேதியிட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டது.

தலைமை அலுவலகக் கட்டிடத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அதிகபட்ச பயன்பாட்டுக்கான அலுவலக இடத்தை அதிகரிக்கும் நோக்குடன், அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகரால் உள்ளக ஒழுங்குகள் திருத்தப்பட்டுள்ளது. எனவே தரைப்பரப்பு 6068 சதுரமீட்டரால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் இப்போது மொத்த தரைப்பரப்பு 33,818 சதுரமீட்டராக உள்ளது. மேலதிக இடத் தேவைகள், நோக்கெல்லை மாற்றங்கள் மற்றும் விலை அதிகரிப்பு பணவீக்கம் காரணமாக மதிப்பிடப்பட்ட செலவு அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், கார் சார்ஜிங் வசதிகள், பண கவுண்டர்கள், ஏடிஎம் வசதிகள், உள்ளக பகிர்வு ஏற்பாடு, கேட்போர்கூட தளபாடங்கள் போன்றவையும் சேர்க்கப்பட்டன. மார்ச் 2021 இல் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகரால் தயாரிக்கப்பட்ட இறுதி மதிப்பீடு ரூ. 4910 மில்லியன் (ஆலோசனை கட்டணம், தற்செயல்கள் மற்றும் வரிகள் தவிர) ஆகும். எவ்வாறாயினும், இ.மி.ச. ரூபா 4774 மில்லியன் (ஆலோசனை கட்டணம், தற்செயல்கள் மற்றும் வரிகள் தவிர) மதிப்பீடு செய்யப்பட்ட தொகைக்கு கட்டுமான ஒப்பந்தத்தை வழங்க முடிந்தது..

2022.12.31 இல் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் 11 சதவீதமாகவும் வரிகள் தவிர்த்து 31 டிசம்பர் 2022 வரை செலுத்தப்பட்டுள்ள மொத்தத் தொகை முற்பணம் உள்ளடங்கலாக ரூ.947,330,534.19 ஆகும்.

தற்போதுள்ள தலைமை அலுவலக கட்டிடம் ஏறக்குறைய ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் கட்டப்பட்டு இன்றும் இயங்கி வருகிறது. CECB ஆலோசகரின் பரிந்துரையின்படி, இன்னும் இருபது ஆண்டுகளுக்குத் தாங்கும் வகையில், தற்போதுள்ள கட்டிடத்திற்குள் பல பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எனவே, தற்போதுள்ள கட்டிடத்தை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் என்பது நாரஹேன்பிட்டியில் புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதுடன் தொடர்பில்லாத வேறுபட்ட செயற்பாடாகும்.

(ஊ) **மீளாய்வாண்டில் மூன்று ஓய்வுபெற்ற ஜீ மின்வலு உற்பத்தி நிலையங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மின்வலு அலகு ஒன்றுக்கான கிரயங்கள் முறையே (kWh அலகொன்றுக்கு) முறையே ரூபா 63.51, ரூபா 78.20 மற்றும் ரூபா 122.50 ஆகக் காணப்பட்டதுடன், சராசரி விற்பனை விலை ரூபா 33.65 ஆகும். எனவே, அதிக செலவில் அவசர மின்வலு நிலையங்களை பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக, நிகழ்நேரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், குறைந்த கிரயத்திலமைந்த நீண்ட கால மின்வலு உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின்படி மின்வலு உற்பத்தி நிலையங்களை இயக்கிச்செல்ல முடிந்திருந்தால், எரிசக்தி கொள்வனவுக்கான இந்த அதிகப்படியான செலவைக் குறைத்திருக்கலாம்.**

03 ஓய்வு பெற்ற மின் உற்பத்தி நிலையங்களின் அலகுக் கிரயம்
வருடத்தின் முதல் 04 மாதங்களின் போது வறட்சியான காலநிலை நிலவுகின்றமையால் நீர்மின் உற்பத்தி குறைவடைந்து முறைமையின் தேவைப்பாடு அதிகரிப்பதன் காரணமாக இக்காலப்பகுதியில் அனைத்து அனல்மின் ஆலைகளும் உச்ச இயலளவில் இயங்குகின்றன. ஆகையால், அந்த காலகட்டத்தில் அனைத்து அனல் மின் நிலையங்களிலும் மின்சார உற்பத்திக்கான அலகுக் கிரயம் (இயலளவு மற்றும் எரிசக்தி கட்டணங்கள் இரண்டையும் கருத்தில் கொள்கையில்) ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது. பின்னர், மழைக்காலம் தொடங்கியவுடன் முறைமை தேவைப்பாடு குறைவடைந்து, நீர் மின்வலு உற்பத்தி நிலையங்கள் அதிகபட்ச இயலளவுடன் இயக்கப்படுவதன் காரணமாக அனல் மின் நிலையங்களின் தேவைப்பாடு குறைவடைகின்றது. அந்தக் காலத்தில் எரிபொருளின் விலையானது செலுத்த வேண்டிய இயலளவுக் கட்டணம் மற்றும் எரிசக்தி கட்டணத்தைக் காட்டிலும் குறைவாக இருக்கும். மேலும், இந்த மின் உற்பத்தி நிலையங்களை மழைக்காலங்களில் கூட இரவுகால உச்ச தேவையை பூர்த்தி செய்வதற்கும் பயன்படுத்த வேண்டும். வருடத்தின் வெவ்வேறு காலங்களில் மின்சாரம் கொள்வனவு செய்யப்படுவதால், மேலே குறிப்பிட்டுள்ள எந்த ஒரு முறையிலும் மின்சார உற்பத்திக்கான அலகுக் கிரயம் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ காணப்படும்.

ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட், ஏஸ் பவர் ஜெனரேஷன் மாத்தறை (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ஏசியா பவர் (பிரைவேட்) லிமிடெட் ஆகிய மின்வலு உற்பத்தி நிலையங்களின் ஒப்பந்த காலம் வறட்சி காலத்தில் காலாவதியானதுடன் மற்றும் உச்ச இயலளவு ஆலைக் காரணியின் கீழ் ஆகக்குறைந்த அலகுக் கிரயம் (50% - 70%) (கிலோவாட் ஒன்றுக்கு ரூபா 21.00 - ரூபா 25.00 வரை) காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கொவிட் 19 தாக்கத்தினால் மின் தேவை குறைவடைந்தமை மற்றும் குறித்த காலத்தில் நிலவிய அதிக மழைவீழ்ச்சி காரணமாக வாழைச்சேனை அனல்மின் நிலையம் ஒட்டுமொத்தமாக மிகக் குறைந்த ஆலை இயலளவுக் காரணியின் கீழ் (5.4%) இயக்கப்பட்டது. எனவே, இந்த அனல் மின் நிலையத்தில் மின் உற்பத்திக்கான அலகுக் கிரயம் ரூபா 88.00 ஆகக் காணப்பட்டு உயர் அலகுக் கிரயத்தை காண்பித்தது.

IPP ஓய்வு பெற்ற மின் உற்பத்தி நிலையங்கள் குறைந்த கிரயத்தில் சுமை மின் நிலையங்களின் அடிப்படையில் இயக்கப்படுகின்றன. எரிசக்தி கட்டணத்தின் அலகுக் கிரயமானது இ.மி.ச.HFO இனால் இயக்கப்படும் சில மின் உற்பத்தி நிலையங்களை விட குறைவாக உள்ளது. இந்த ஆலைகளை அவசர மின் நிலையங்களாக கருத முடியாது.

**(எ) மரபுசாரா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (என்சிஆர்இ) திட்டங்களுக்கு (குறிப்பாக மினி ஹைட்ரோ ஆலைகளுக்கு) 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் தவிர்க்கப்பட்ட கிரய அடிப்படையிலான கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தகைய கட்டணமானது 2007 ஆம் ஆண்டுக்கு முன் அங்கீகரிக்கப்பட்ட என்சிஆர்இ திட்டங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதுடன் தற்போது அதுபோன்ற 28 செயற்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தவிர்க்கப்பட்ட கிரய முறையானது வெப்ப ஆலை அனுப்புதலை அடிப்படையாகக் கொண்டதுடன் அது எரிபொருள் செலவில் இருந்து வேறுபட்டது. 2020 ஜனவரி 16 தேதியிட்ட DGM/SYC/TCH/41 of DGM (கணினி கட்டுப்பாடு) கடிதத்தின்படி, நீர்மின் ஆலைகளின் உண்மையான அலகு விலை புதிய ஆலைகள் உட்பட ரூ. 10.00 க்கும் குறைவாக இருந்திருக்க வேண்டும். இருப்பினும், 2022 ஆம் ஆண்டிற்கான சிறியரக நீர்மின் ஆலைகளுக்கான தவிர்க்கப்பட்ட கிரய முறையில் நிர்ணயிக்கப்பட்ட விலை மழைக்காலத்திற்கு ரூபா 18.19 ஆகவும் வறண்ட பருவத்திற்கு ரூபா 18.67 ஆகவும் காணப்பட்டன. மேலும், 2022 யூன் இற்கு PUCSL இனால் வெளியிட்ட ஆலை வாரியான கிரயங்களின் படி, சபையின் ஒரு அலகுக்கான நீர்மின் கிரயம் ரூபா 4.85 ஆகும். எவ்வாறாயினும், 2022 ஆகஸ்ட் 16 அன்று சபையின் தீர்மானமும் அதே விதத்தில் வழங்கப்பட்டிருந்த போதிலும், மதிப்பாய்வின் ஆண்டின் இறுதியில் கூட சிறியரக நீர்மின் ஆலைகளுக்காக தவிர்க்கப்பட்ட கிரய முறையை அடிப்படையாகக் கொண்ட நியாயமான உச்சவரம்பு விலையைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை**

தவிர்க்கப்பட்ட செலவுக் கட்டணம் என்பது நாட்டின் மரபுசாரா புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களின் முழுமையான தனியார் துறை முதலீடுகளின் வளர்ச்சியுடன் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் கட்டண வகையாகும். இந்தக் கட்டணமானது 1997 ஆம் ஆண்டு முதல் இ.மி.ச. ஆல் ஆண்டுதோறும் கணக்கிடப்பட்டு வெளியிடப்படுவதுடன இது எரிபொருள் செலவு, ஆண்டின் அனுப்பும் முன்னறிவிப்பு, வரத்து முன்னறிவிப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முன்னறிவிப்பு மற்றும் சராசரி நாணயமாற்று விகிதங்கள் போன்ற பல காரணிகளில் தங்கியுள்ளது. தவிர்க்கப்பட்ட செலவு என்பது ஒரு குறிப்பிட்ட நிகழ்வில் என்சிஆர்இ ஆலைகளால் மாற்றப்பட்ட விளிம்புநிலை வெப்ப ஆலையின் அலகுக் கிரயத்தை ஒதுக்கும் கொள்கையின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. எனவே, தவிர்க்கப்பட்ட செலவுக்கும் உண்மையான விலைக்கும் எந்த நேரடித் தொடர்பும் இல்லை. இருப்பினும், 2008 முதல், அனைத்து என்சிஆர்இ தொழில்நுட்பங்களுக்கும் கிரயப் பிரதிபலிப்புடன் கூடிய மூன்று அடுக்கு கட்டணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் மின் கொள்முதல் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட தவிர்க்கப்பட்ட செலவு பிரிவின் கீழ் இன்னும் 20 ஆலைகள் செயல்பாட்டில் உள்ளன. தற்போதைய தரவுகளின்படி, 2013-09-24 முதல் வணிகச் செயல்பாட்டைத் தொடங்கியுள்ள Aqua Jet (Pvt) Ltd இன் கோனகமுவ மினி நீர் மின் நிலையத்தின் காலாவதியாவதுடன் 2028-09-23 வரை தவிர்க்கப்பட்ட செலவுக் கட்டணம் தொடர்ந்து செயல்பாட்டில் இருக்கும்.

2023-10-10 தேதியிட்ட இ.மி.ச. பணப்பாளர் சபையின் முடிவின் மூலம், 2028 ஆம் ஆண்டு வரை ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள திட்டங்களுடன் ஒப்பந்த ரீதியாகவோ அல்லது இணக்கமாகவோ பேச்சுவார்த்தை நடத்தி தவிர்க்கப்பட்ட செலவுக் கட்டணத்தை விசாரிக்க ஒரு குழுவை நியமிக்க உத்தரவிட்டுள்ளது.

**(ஏ) லக்ஷபான நீர்மின் நிலையத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட டர்பைன்களைப் பயன்படுத்தி களனிதிஸ்ஸ மின் நிலையத்தில் நினைவுச்சின்னம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமானது அதன் கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 04 வருட கால தாமதத்திற்குப் பின்னர் 2017 இல் வழங்கப்பட்டது. ஒப்பந்தம் ரூபா 25.12 மில்லியனுக்கு வழங்கப்பட்டதுடன் 180 நாட்கள் ஒப்பந்த காலத்துடன் 2018 சனவரி 05 அன்று முடிக்க திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு முடிவதற்குள் கூட நிர்மாண**

**நடவடிக்கைகளை நிறைவு செய்யத் தவறியிருந்ததுடன், அன்றைய நிலவரப்படி நிர்மாண நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் 43 வீதமாகவே காணப்பட்டது. மேலும், ஒப்பந்ததாரருக்கு எந்த நேரத்திலும் நீட்டிப்புகள் வழங்கப்படவில்லை என்பதும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதி வரையில் ரூபா 19.65 மில்லியன் (ஆலோசனைக் கட்டணம் உட்பட) செலுத்திய பிறகும் 1746 நாட்கள் தாமதம் காணப்பட்டது. அதுமட்டுமின்றி, கணக்காய்வு மூலம் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது, பூர்த்தி செய்யப்படாத நினைவுச்சின்னம் அமைந்துள்ள வளாகம் களைகள் மண்டி கிடப்பதையும், கட்டுமான பணிகள் கைவிடப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது. இதன்படி, நிர்மாணத்தின் நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற சபை தவறியிருந்ததுடன், செலவழிக்கப்பட்ட பணமும் சிக்கனமற்றதாகியிருந்தது.**

தற்போதைய நிலைமையை ஆராய்ந்ததில், தற்போதுள்ள ஒப்பந்தத்தின்படி திட்டத்தை முடிக்க முடியாது என கண்டறியப்பட்டது. திட்டம் மீண்டும் தொடங்கப்பட வேண்டுமானால், தற்போதைய சூழ்நிலையில் கணிசமான விலை உயர்வு வழங்கப்பட வேண்டும். அதே நேரத்தில், ஒப்பந்ததாரர் பல்வேறு காரணங்களை முன்வைத்து ஒப்பந்தத்தை பரஸ்பரம் நிறுத்துமாறு கோரியுள்ளார். எனவே, ஒப்பந்தத்தை பரஸ்பரம் முடிப்பதற்கும், எந்தவொரு கோரிக்கையும் இல்லாமல் செயலாற்றல் பிணைமுறியை விடுவிப்பதற்கும் DPC (பிறப்பாக்கல் பிரிவு) அனுமதியை கொள்முதல் நிறுவனம் கோரியது. அதன்படி, DPC (பிறப்பாக்கல் பிரிவு) ஒரு தொழில்நுட்பக் குழுவை நியமித்து, நிலைமையை மறுபரிசீலனை செய்து, முன்னோக்கி செல்லும் வழியை பரிந்துரைத்தது. குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், DPC (பிறப்பாக்கல் பிரிவு) கீழ்க்கண்டவற்றுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

1) இலங்கை மின்சார சபைக்கும் ஒப்பந்ததாரருக்கும் இடையிலான ஒப்பந்தத்தை பரஸ்பரம் நிறுத்துதல்
2) நிறைவு செய்யாத காரணத்தினால் ரூபா 200,000.00 செலுத்துவதை நிறுத்துதல்
3) நியாயமான முகப் பரப்பில் உள்ள குறைகளை சரிசெய்வதற்காக பிடிகாசுத் தொகையிலிருந்து ரூபா 789,000.00 கழித்தல்.
4) எந்தவொரு கோரிக்கையும் இல்லாமல் செயலாற்றல் பிணைமுறியை விடுவித்தல்
5) ரூபா 529,148.37 ஆன எஞ்சிய பிடிகாசை விடுவித்தல்
6) மீதமுள்ள திட்டப் பணிகள் முடிவடையும் வரை வலுவூட்டல் சிதைவைத் தவிர்த்து, தற்போதுள்ள கட்டமைப்பை வெயில் மற்றும் மழையிலிருந்து பாதுகாப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துதல்.
7) பாதுகாப்பு நடவடிக்கைகள் முடிந்தபின் சொத்துக்களை (இதுவரை திட்டத்தால் முடிக்கப்பட்டவை) களனிதிஸ்ஸ மின் நிலையத்திற்கு மாற்றுதல்.

**(ஐ) சபையிடம் இருந்து பெறப்பட்ட தகவலின்படி, சபைக்குச் சொந்தமான ஏழு வாகனங்கள் மதிப்பாய்வின் ஆண்டின் இறுதியில் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது. எவ்வாறாயினும், அமைச்சிலிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வு ஆண்டின் இறுதியில் ஒரு வாகனம் மட்டுமே அமைச்சினால் பயன்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.**

இந்த 7 வாகனங்களில் 3 வாகனங்களை கண்டுபிடிக்க முடியாதிருப்பதுடன் இன்னும் இ.மி.ச. என்ற பெயரில் உள்ளன. மேலும் இது குறித்து விசாரணை செய்து 2022-12-28 அன்று நினைவூட்டல் அனுப்புமாறு CID க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த வாகனங்கள் தொடர்பான விவரங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் விசாரணை நடைபெற்று வருவதாகவும் சிஐடி பதிலளித்துள்ளது.

| தொடர் இல. | வாகன இல | குறிப்புகள் |
|---|---|---|
| 1 | 32-1492 | சி.ஐ.டி.க்கு விசாரணை நடத்துமாறு தெரிவித்துள்ளோம் |
| 2 | 32-2761 | சி.ஐ.டி.க்கு விசாரணை நடத்துமாறு தெரிவித்துள்ளோம் |
| 3 | 32-5009 | சி.ஐ.டி.க்கு விசாரணை நடத்துமாறு தெரிவித்துள்ளோம் |

மேலும், இ.மி.ச. இன் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணை நடத்தப்பட்டதுடன், இந்த 7 வாகனங்களில், 4 வாகனங்கள் தொடர்பாக அவர்கள் பின்வருமாறு அறிக்கை அளித்துள்ளனர். 2011 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பௌதீக சரிபார்ப்பின் போது இந்த வாகனங்கள் பௌதீக ரீதியாக கிடைக்காததால், இந்த வாகனங்கள் பூஜ்ஜிய விலையில் கணக்குப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

| தொடர் இல. | வாகன இல | குறிப்புகள் |
|---|---|---|
| 1 | 50-3665 | முதல் பதிவு மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரின் பெயரில் இருந்ததுடன், பின்னர் அது நிலைபேறான எரிசக்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்டது |
| 2 | 32-3463 | இந்த வாகனம் சென்ட்ரல் இன்ஜினியரிங் கன்சல்டன்சி பீரோ என்ற பெயரில் உள்ளது |
| 3 | 32-2760 | இ.மி.ச. இந்த வாகனத்தை சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சின் செயலாளருக்கு மாற்றியுள்ளது |
| 4 | 32-4554 | இந்த வாகனம் பொலிஸ் மா அதிபரின் பெயரில் உள்ளது |

இந்த வாகனங்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் அனுமதி பெற்ற பிறகு இந்த நான்கு வாகனங்கள் சம்பந்தமாக நிலையான சொத்து பதிவேடு மற்றும் நிதிநிலை அறிக்கைகளில் தேவையான மாற்றங்களைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஒ) களனிதிஸ்ஸ மின் நிலையத்தில் நான்கு V எரிவாயு விசையாழி ஜெனரேட்டர்களை புனரமைத்தல் வேலைகள் 2017 யூலை 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆகஸ்ட் 11 ஆம் திகதி நிறைவு செய்ய திட்டமிடப்பட்டது. எனினும், தொடங்கிய நாளிலிருந்து 5 ஆண்டுகளும் 5 மாதங்களும் கடந்த பின்னரும் மீளாய்வு ஆண்டின் இறுதியில் 3 மின் உற்பத்தி இயந்திரங்கள் மட்டுமே புனரமைக்கப்பட்டுள்ளன. ஆயினும்கூட, ஆண்டு இறுதியில் அனைத்து விசையாழிகளுக்கும் ரூபா 752.22 மில்லியன் செலவழித்த பின்னரும், புனரமைக்கப்பட்ட 3 ஜெனரேட்டர்களில் ஒரே ஒரு எரிவாயு விசையாழி மட்டுமே செயல்பாட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டது.**

புனரமைப்புத் திட்டம் ஜுலை 2017 இல் தொடங்கப்பட்டதுடன் ஆரம்பத்தில் இதனை ஆகஸ்ட் 2018 க்குள் முடிக்க திட்டமிடப்பட்டது. ஆரம்ப தொழில்நுட்ப ஆய்வின்படி கிட்டத்தட்ட நான்கு மாத காலம் ஒரே இயந்திரத்திற்கு ஒதுக்கப்பட்டது.

இருப்பினும், நான்கு எரிவாயு விசையாழிகளும் (GTs) வெவ்வேறு செயல்பாட்டு நிலைகளில் இருந்தமையால் அவற்றின் உண்மையான புனரமைப்புக் காலம் மற்றும் நோக்கத்தை இயந்திரத்தை அகற்றிய பின்னரே அடையாளம் காண முடியும். அடுத்த ஐந்தாண்டு செயல்பாட்டிற்கான குறைந்தபட்ச புனரமைப்புத் தேவையை அடையாளம் காண பல் நிபந்தனை மதிப்பீட்டு பரிசோதனை நடத்தப்பட்டது.

திட்டப் பொறியாளர்கள் மற்றும் தொடர்புடைய துறைகளின் நிபுணத்துவப் பொறியாளர்களால் மதிப்பீடுகள் செய்யப்பட்டதுடன் நான்கு இயந்திரங்களின் (GT1, GT2, GT4 மற்றும் GT5) இன்லெட் ஏர் ∴பில்டர்கள், ∴பைன்ட் டியூப் கூலர்கள், ஜீரோ சீல் மற்றும் எக்ஸாஸ்ட் டக்ட் ஆகியவற்றில் முக்கிய புனரமைப்புத் தேவைகளை அவர்கள் கண்டறிந்துள்ளனர். அதே நேரத்தில், புதிய தானியங்கி மின்னழுத்த சீராக்கி அமைப்புகள், புதிய மின் பாதுகாப்பு அமைப்புகள், பழைய கட்டுப்பாட்டு கேபிள்களை மாற்றுதல் மற்றும் புதிய ர்ஆஐ கட்டுப்பாட்டு அலகுகளை நிறுவுதல் போன்றவற்றின் தேவைகளை அவர்கள் அடையாளம் கண்டனர்.

இந்த எதிர்பாராத நோக்க மாறுபாடானது திட்ட தாமதத்திற்கு நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்தியதுடன் இது கொரோனா தொற்று சூழ்நிலையுடன் மிகைப்படுத்தப்பட்டது.

இருப்பினும், மூன்று எரிவாயு விசையாழிகள் GT1, GT2 மற்றும் GT4) முற்றிலும் புனரமைக்கப்பட்டு வணிக நடவடிக்கைகளுக்கு விடுவிக்கப்பட்டன. எரிவாயு விசையாழியின் அடுத்தடுத்த தோல்வியானது புனரமைப்பு பணியுடன் தொடர்புடையது அல்ல, அது ஒரு செயல்பாட்டு தோல்வி மட்டுமே.

GT 5 இல் 95 சதவீத புனரமைத்தல் பணிகள் நிறைவடைந்துள்ளன. இயந்திரத்தின் முன்-நிருவல் செயல்பாட்டின் போது, துணை கியர் பாக்ஸின் கியர் சக்கரத்தில் ஒரு தவறு ஏற்பட்டது. உள்நாட்டில் அதனை திருத்துவதற்காக எடுக்கப்பட்ட பல சீரமைப்பு நடவடிக்கைகள் தோல்வியடைந்தன. எனவே, இறுதியாக மாற்றாக புதிய கியர் வீலை வாங்க முடிவு செய்யப்பட்டு கட்டளை இடப்பட்டது.

**(ஓ) மூன்று வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களைப் பொறுத்தமட்டில், திட்டமிடப்பட்ட நிறைவு தேதியிலிருந்து 2022 டிசம்பர் 31 வரை 14 மாதங்கள் முதல் 39 மாதங்கள் வரை கணிசமான காலதாமதம் காணப்பட்டது. ஒப்பந்தக்காரர்களிற்கு முதலாவது காலநீடிப்பு வழங்கப்பட்ட பின்னரும் கூட செயற்திட்ட வேலைகள் பூரணப்படுத்தப்படாதுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது**

| | செயற்திட்டப் பெயர் | மானியம்/ கடன் வழங்குனர் பெயர் | தொடக்க திகதி | பட்டியலிட்ட பூரணப் படுத்தல் தேதி | இறுதி நீடிப்புத் திகதி: நீடிப்பு தடவைகள் | 2022.12.31 இல் முன்னேற்ம் | 22022.12.31 இல் தாதக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பசுமை எரிசக்தி மற்றும் மின்வலு திறன் மேம்பாட்டுத் திட்டப் பகுதி 1 - கட்டம் 1 (மொர்கொல்ல நீர்மின் திட்டம்) | ADB | 02.07.2014 | 31.03.2021 | 31.07.2024 (02) | 44.4 % | 21 மாதங்கள் |
| 2 | ஹபரன - வெயங்கொட டிரான்ஸ்மிஷன் லைன் திட்டம் | JICA | 20.06.2017 | 18.02.2018 | 30.06.2023 (02) | 98.50 % | 58 மாதங்கள் |
| 3 | துணை மின்சாரம் வழங்கல் நம்பகத்தன்மை மேம்பாடு திட்ட தொகுப்பு 4 | ADB | 28.10.2019 | 27.10.2021 | 29.11.2023 (02) | 45.10% | 14 மாதங்கள் |

**மொரகொல்ல நீர்மின் திட்டம் 02.07.2014 இல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பின்வரும் காரணங்களால் பௌதிக நிர்மாணப் பணிகள் 2020 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டன.**

- முக்கியமாக ஆலோசனை சேவைகள் மற்றும் முக்கிய சிவில் வேலை ஒப்பந்தங்களில் கொள்முதல் தாமதங்கள
- திட்ட ஒப்புதல் ஆணையத்தின் கோரிக்கையின் காரணமாக அணையின் மறுவடிவமைப்பு; இலங்கை மகாவலி அதிகாரசபை
- அழிந்துவரும் மீன் டுயடிநழ Fisheri புதிய கண்டுபிடிப்புகள் காரணமாக மேலதிக சுற்றுச்சூழல் ஆய்வுகள்
- 2020 ஜனவரியில் கட்டுமானப் பணிகள் தொடங்கிய பிறகும், பின்வரும் காரணங்களால் திட்டப் பணிகள் மேலும் தாமதமாகின.
- சீனாவில் ஜனவரி 2020 முதல் கோவிட் 19 தொற்றுநோய் ஏற்பட்டது. முக்கிய ஒப்பந்ததாரர்களும் சீனாவைச் சேர்ந்தவர்கள் என்பதால் திட்டப் பணிகள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன.
- தீவில் ஊரடங்கு உத்தரவு உட்பட நீட்டிக்கப்பட்ட பூட்டுதல் காலங்கள்.
- வெளிநாட்டவர்களுக்கும் உள்நாட்டு மக்களுக்கும் பயணக் கட்டுப்பாடுகள்
- பொருள் ஏற்றுமதியில் தாமதம் மற்றும் கட்டுமானப் பொருட்களின் பற்றாக்குறை

**HVTLP லாட் டீ: 02.05.017 அன்று டிரான்ஸ்மிஷன் லைன் தொடங்கப்பட்டதுடன் திட்டமிடப்பட்ட நிறைவு 02.11.2020 அன்று**

எவ்வாறாயினும், நிலுவையில் உள்ள வழக்குகள் காரணமாக மீரிகமவில் உள்ள இடத்தைத் தவிர அசல் ஒப்பந்தத்தின் இரட்டை சுற்று நோக்கம் பூர்த்தி செய்யப்பட்டது. (நீதிமன்ற வழக்கு தீர்க்கப்படும் வரை, பாதையை இயக்க முடியாது)

ஒப்பந்தம் திருத்தப்பட்ட பின்னர் 05.10.2020 அன்று 4-சுற்று மாறுபாடு உத்தரவு வழங்கப்பட்டது. இந்த மாறுபாடு நோக்கத்திற்கான நிறைவு தேதி 30.06.2023 வரை நீட்டிக்கப்பட்டது, எனவே இது 58 மாத தாமதம் அல்ல. ஏப்ரல் 2022 இல் JICA மூலம் வழங்கல்களை நிறுத்தியதன் காரணமாக ஒப்பந்ததாரர்களுக்கு ஊதியம் வழங்கப்படாததால், இந்தப் பணி இன்னும் முழுமையடையாமல் உள்ளது. மேலும் 2024 ஜனவரி 30 ஆம் தேதி வரை மேலும் 6 மாதங்கள் நீட்டிக்க வேண்டும்.

**SESRIP தொகுப்பு 4 இன் பௌதீக் செயல்திறன் தாமதமானது பல காரணங்களால் ஏற்படுகிறது**

- நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட் தொற்றுநோய் காரணமாக, கும்பல்களை அனுப்ப முடியவில்லை, அதே நேரத்தில், நடைமுறையில் உள்ள அரசாங்க விதிமுறைகளால் கும்பல்களின் வேலையை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது
- கோவிட் காரணமாக பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக ஒப்பந்ததாரரால் திட்டமிட்டபடி சீனாவிலிருந்து ஊழியர்களை அனுப்ப முடியவில்லை
- நாட்டில் பாதகமான காலநிலை
- எரிபொருள் பற்றாக்குறை பிரச்சினை 2022 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகளை பாதித்துள்ளது
- 2022 ஆம் ஆண்டில் இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக பொருள் பற்றாக்குறை நிலவியது
- அரசாங்க அதிகாரிகளிடமிருந்து (அதாவது வனத்துறை, இலங்கை) அனுமதிகளைப் பெறுவதற்கு கணிசமான நேரம் எடுக்கப்பட்டது

இவை தாமதத்திற்கு தவிர்க்க முடியாத காரணங்களாகும், தற்போது திட்டத்தின் நிதி முன்னேற்றம் 64.44 சதவீதமாக அதிகரித்துள்ளது.

**(ஔ) பிராந்திய பொறியியலாளர் அலுவலகம், பாவனையாளர் சேவை நிலையங்கள் மற்றும் உபமின் நிலையங்களை நிர்மாணிப்பதற்கான செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக 2000 ஆம் ஆண்டில் ரூபா 188.38 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 18 காணிகள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் 01 ஆண்டு முதல் 22 ஆண்டு காலமாக குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. அவற்றில் ரூபா 86.52 பெறுமதியுடைய 8 காணிகள் விநியோகப் பிரிவுகளினதும் செயற்திட்ட பிரிவுகளினதும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தன. மேலும், 5 ஆண்டுகளிற்கு முன்னரே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்த போதிலும் பின்வரும் செயற்திட்டங்களிற்காக கையேற்கப்பட்ட காணிகளின் கையேற்றல் செயற்பாடுகளை பூரணப்படுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்காமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.**

| நோக்கம் | வர்த்தமானி அறிவித்தல் திகதி | வைப்புச்செய்த தொகை ரூபா | வைப்புச் செய்த ஆண்டு |
|---|---|---|---|
| **புரோட்பேண்ட நீர் மின்வலு செயற்திட்டம்** | | | |
| பிரதான அணை, சுரங்கப்பாதை, கெஹல்கமு ஓயா அணை மற்றும் சுரங்கப்பாதை மற்றும் நிர்வாக குடியிருப்புகள் ஆகியவற்றின் கட்டுமானம் | | 750,000 | 2007-2021 |
| **புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உறிஞ்சல் மற்றும் மின்கடத்தல் செயற்திட்டம்** | | | |
| ருாகல இல் (ரஹதுங் கொடவத்த காணி) கிரிட் துணை மின் நிலையத்தை நிர்மாணித்தல் | 14-10-2016 | 825,000 | 29 -02-2016 |

| | | | |
|---|---|---|---|
| முாலிபொடவில் (உடபொல வத்த காணி) கிரிட் துணை மின் நிலையத்தை நிர்மாணித்தல | 15-05-2017 | 870,000 | 08-09-2016 |
| **தேசிய மின்கடத்தல் மற்றும் விநியோக வலைப்பின்னல் அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டம** | | | |
| மாலபே இல் கிரிட் துணை மின்நிலையத்தின் கட்டுமானம் (எதஹெரலியகஹகும்புர காணி) | | 311,250 | 08-12-2015 |

இந்த 18 நிலங்களில் 3 நிலங்கள் திட்டப் பிரிவுக்கு உரியவை. நிலங்களின் கிரயத்தை நிலையான சொத்துகளாக சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு நிலம் கையகப்படுத்தும் பணியை முடித்து, நிலங்களின் உரிமையைப் பெற அறிவுறுத்தப்படும். அதன்பின் நிலையான சொத்துப் பதிவேடுகளை அதற்கேற்ப புதுப்பிக்க வேண்டும்.

**(ஃ) காணிகளிற்கான தீர்வவுகள் கிடைத்த திகதியிலிருந்து (2018 மே 31) இரத்தினபுரியிலுள்ள சிறிபாகான கார்னே தோட்டக் காணியில் கோபுரங்கள் மற்றும் கேபில்களை அமைப்பதற்கான காணித் தீர்வையக கோரிக்கையை மேற்கொள்வதற்கு 1,898 நாட்கள் அல்லது 5 ஆண்டுகளும் இரண்டு மாதங்களும் (2023 ஆகஸ்ட் 11) தாமதிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன்காரணமாக, இலங்கையின் தென் மாகாணத்திற்கு நம்பகரமாக மின்சாரம் வழங்கப்படுவதற்கான 220 kV இயலளவுடைய 150 கி.மீ. மின்கம்ப பொல்பிடிய-அம்பாந்தோட்டை சிக்கலான உட்கட்டமைப்பு வேலைகள் குறிப்பிடத்தக்க காலம் தாமதடைந்திருந்தவுடன் இந்தத் தாமதமானது மின்வலு வழங்கலின் பற்றாக்குறைத் தன்மைக்கு வழிவகுத்திருந்தது. மேலும், இந்தச் சிக்கலை 2016 சனவரி 25 ஆந் திகதிய "ருஊளுடு இன் விதிகளிலுள்ள ஏற்பாடுகளின் படி முன்கூட்டியே சபையின் முகாமைத்துவத்தினால் PUCSL இன் கவனத்திற்கு கொண்டு வந்திருப்பின், இலங்கையின் தென் மாகாணத்திற்கு நம்பகரமாக மின்சாரம் வழங்கப்படுவதற்கான சிக்கலான உட்கட்டமைப்பு வேலைகளை தாமதமின்றி பூரணப்படுத்த முடிந்திருக்கும் என்பதுடன் இதனால் ஆர்வமுடைய தரப்பினர்களிற்கு ஏற்பட்டிருந்த பிரதிகூலங்களை இயன்றளவு குறைத்திருக்கவும் முடிந்திருக்கும். அத்துடன், காணிகளின் உரிமையாளர்கள் இழப்பீடு எதுவவும் இன்றி காணிகளை வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்திருந்த போதிலும், காணி உரிமையாளர்களிற்கு இழப்பீடுகளைச் செலுத்துவதற்காக இரத்தினபுரி பிரதேச செயலகத்திலும் மாவட்டச் செயலகத்திலும் வைப்புச் செய்யப்பட்டிருந்த முறையே ரூபா 1.7 மில்லியன் மற்றும் 7.9 மில்லியன் தொகைகள் 2023 ஒக்தோபர் இறுதிவரை மீளப்பெறப்பட்டிருக்கவில்லை.**

இந்த டிரான்ஸ்மிஷன் லைன் இலங்கையின் மிக நீளமான டிரான்ஸ்மிஷன் லைன் ஆகும், மேலும் இது 150 கிமீ நீளம் கொண்டது, இது பாதுகாப்பு மற்றும் மின்சார அனுமதிக்காக 35 கிமீ அகலத்தில் வே லீவ் காரிடாரைக் கொண்டுள்ளது. அதன்படி, இழப்பீடு வழங்குவதற்கான 2,000 க்கும் மேற்பட்ட வழக்குகள் திட்ட முகாமைத்துவப் பிரிவினால் கையாளப்பட்டதுடன் கார்னி எஸ்டேட், சிறிபாகம, இரத்தினபுரியின் பிரச்சினை மட்டுமே இறுதியாக ஆகஸ்ட் 11, 2023 அன்று PUCSL இல் முடிக்கப்பட்டது. மேலும், இந்த வழக்கு ஆசியன் டெவலப்மென்ட் வங்கி - ADB க்கு தெரிவிக்கப்பட்டது, மேலும் அவர்கள் நிதி வழங்கும் நிறுவனமாக தங்கள் பொது பாதுகாப்புக் கொள்கை மேட்ரிக்ஸின் கீழ் செயல்முறையில் தலையிட்டனர். எனவே, இ.மி.ச. நாட்டின் விதிமுறைகள் மற்றும் யுனுடீ பொது பாதுகாப்பு கொள்கை வழிகாட்டுதல்கள் ஆகிய இரண்டையும் நிறைவேற்ற வேண்டும். ADB பொது பாதுகாப்பு கொள்கை மேட்ரிக்ஸின் படி, டிரான்ஸ்மிஷன் லைன் காரணமாக சேதம் ஏற்பட்டால், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு மாற்று செலவு செலுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட தரப்பினரால் கோரப்பட்ட இந்த மாற்று செலவை விட சேதத்திற்கான அரசாங்க மதிப்பீடு குறைவாக இருந்தது. இந்தக் கட்டுப்பாடுகளுடன், PUCSL இல் இந்த விடயத்தைத் தீர்த்துவைப்பதற்காக 2023 ஆகஸ்ட் 11 வரை இழுத்தடிக்கப்பட்டது. மேலும், இந்த காலகட்டத்தில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், கோவிட் 19 தொற்றுநோய் மற்றும் நாட்டின் எதிர்மறையான பொருளாதார நிலைமை ஆகியவற்றால் திட்டத்தின் முன்னேற்றம் கடுமையாக பாதிக்கப்பட்டது. மேலும், செப்டம்பர் 2023 இறுதியில், இந்த வைப்புத்தொகைகள் மீட்கப்பட்டன.

## 2.3 2.3 ஏனைய அவதானிப்புகள

**அ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 46.41 மில்லியன் வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்புடைய ரூபா 4,003 மில்லியன் மீதி ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அதிலுள்ள ரூபா 2,210 மில்லியன் தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(i) மேற்கூறிய மொத்த கடன்பட்டோர் மீதியில், ரூபா 2.4 பில்லியன் அல்லது 4.9 சதவீதம் நீண்ட காலமாக நிலுவையாக இருப்பதுடன் அத்தொகையை மீளப்பெறாததன் காரணமாக இறுதி செய்யப்பட்டதாக வகைப் படுத்தப்பட்டுள்ளது. இதில் ரூபா 984 மில்லியன் அல்லது 43 சதவீதம் விநியோகப் பிரிவு 01 உடன் தொடர்புடையதாகும்.**

அக்டோபர் 2023 இல் இறுதியில் மொத்தக் கடன்பட்டோர் மீதியானது 4.9மூ இலிருந்து 3.6மூ ஆகக் குறைந்துள்ளது

| பிரிவுகள | பதில் - இறுதியாக்கப்பட்ட கடன்பட்டோர் தொடர்பில் |
|---|---|
| **DD-01** | 1. DCC/COM/03/2009 சுற்றறிக்கையின்படி, சட்ட நடவடிக்கைகளை எடுத்து, வைப்பிலிருந்து மீட்டெடுப்பதுடன், முந்தைய மத்தியஸ்த குழுவின் மூலம் இறுதி செய்யப்பட்ட கணக்கின் நிலுவைத் தொகையை மீட்டெடுத்தல்.<br>2. மாகாண வருவாய் குழுக்களின் நியமனங்கள்.<br>3. நிலுவையில் உள்ள நிலுவைகளை செலுத்துமாறு நுகர்வோருக்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டன.<br>4. இறுதி செய்யப்பட்ட கணக்குகள் என வகைப்படுத்தப்படாமல் நிலுவையில் உள்ள நிலுவைகளை மீட்பதற்காக துண்டிப்பு திட்டங்கள், நுகர்வோர் விழிப்புணர்வு திட்டங்கள் மற்றும் பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன |
| **DD-02** | **WPS -11.**<br>1. 31.12.2021 நிலவரப்படி 5 ஆண்டுகளில் மொத்தமாக வழங்கல் இறுதி செய்யப்பட்ட கடனாளிகள் ரூ. 21,819,241.28 ஆக இருந்தது மேலும் அந்த மீதி 2022.31.12 இல் ரூபா 11,914,583.61 ஆகும். நிலுவையில் உள்ள நிலுவைகளை மீட்பதற்கும், பதிவழிக்கவும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.<br>2. சாதாரண விநியோக கடனாளிகளின் வயது பகுப்பாய்வு செயலில் உள்ள கணக்குகள் மற்றும் இறுதி செய்யப்பட்ட கணக்குகள் இரண்டையும் உள்ளடக்கியது. இறுதி செய்யப்பட்ட கணக்குகளின் நிலுவைத் தொகைகளை மீட்பதற்காக, அந்தந்த பகுதி பொறியாளர்களால் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, நிலுவைத் தொகை வசூலின் மாதாந்த முன்னேற்றத்தின் விவரங்கள் DGM கிளைக்கும் கணக்காளர் (வருவாய்) பிரிவுக்கும் அனுப்பப்படுகிறது.<br>3. மேலும், இறுதி செய்யப்பட்ட கணக்குகள் தொடர்பாக, சுற்றறிக்கை இல. DCC/ COH/ 03/ 2009 இன் அறிவுறுத்தலின்படி, இருக்கும் பாதுகாப்பு வைப்புத் தொகையை விட வரவு மீதிகள் குறைவாக உள்ளவற்றை பாதுகாப்பு வைப்புகளுக்கு எதிராக எதிரீடு செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br><br>**கிழக்கு**<br>5 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்ட வயது வரம்பில் 90 சதவீதத்துக்கும் அதிகமான தொகையானது மொத்த விநியோக பிரிவில் பின்வரும் வாடிக்கையாளர்களின் மீதியைக் குறிக்கிறது.<br>1. வாழைச்சேனை கடதாசி கம்பனி லிமிடெட்<br>2. கந்தளாய் சீனி கூட்டுத்தாபனம்<br>மேலே உள்ள இரண்டு முக்கிய வாடிக்கையாளர்களின் நிலுவைத் தொகைகள் தொடர்பாக, இ.மி.ச. இன் பணிப்பாளர் சபையால் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன;<br><br>1. வாழைச்சேனை கடதாசி கம்பெனி லிமிடெட் - நிலுவையில் உள்ள தொகையின் ஒரு பகுதியை பதிவழித்துவிட்டு, வாடிக்கையாளரிடம் இருந்து மீதியை தவணை அடிப்படையில் மீட்டெடுத்தல்.<br>ரூபா 361,992,685.22 தொகையை தள்ளுபடி செய்ய சபை ஒப்புதல் அளித்துள்ளதுடன் மீதித்தொகையை மீளமைக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஆறு மாத காலத்திற்குள் தவணை அடிப்படையில் மீட்டெடுக்க வேண்டும். எவ்வாறாயினும், இந்தச் சபையின் தீர்மானத்தை முன்னெடுப்பதற்காக, வாழைச்சேனை கடதாசி கம்பனி லிமிடெட் மற்றும் இ.மி.ச. இற்கு இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை<br><br>அதன்படி, 2023 டிசம்பர் மாதம் ரூபா 361,992,685.22 தள்ளுபடி செய்யப்பட்டதுடன் 21.03.2023 தேதியிட்ட சபை பத்திரத்தால் (BM/2023/05) அங்கீகரிக்கப்பட்ட அமைச்சரவை முடிவின்படி, 2023 முதல் ரூபா 202612 நிலுவைத் தொகையை செலுத்துவதற்கான காலக்கெடு பின்வருமாறு நீட்டிக்கப்பட்டுள்ளது<br><br>2023- மாதத்திற்கு ரூபா 1 மில். வருடத்திற்கு 12 மில்<br>2024 - மாதத்திற்கு 2 மில்லியன் 24 மில்லியன்<br>2025 - மாதத்திற்கு 3 மில்லியன் 36 மில்லியன்<br>2026- மாதத்திற்கு 4.17 மில்லியன் 50 மில்லியன்<br><br>122 மில்லியன்<br>அதன்படி, 2023 இல் ஏப்ரல் 2 மில்லியன் பெறப்பட்டதுடன் தொடர்ந்து பின்பற்றப்பட்டது. |

| | |
|---|---|
| | **2. கந்தளாய் சீனி கூட்டுத்தாபனம் - நிலுவைத் தொகையின் ஒரு பகுதியை மீளப்பெற்று பின்னர் கணக்குப் புத்தகங்களிலிருந்து மீதியை பதிவழித்தல்**<br><br>கந்தளாய் சீனி கூட்டுத்தாபனத்தின் (A/C இல. 3470100217) நீண்டகாலமாக நிலுவையில் உள்ள கடனாளிகள் தொகை ரூ.76,331,246.03 மற்றும் மீதி நிலுவைத் தொகையைத் தீர்த்த பிறகு, ரூ.44,839,186.53 இனை பதிவழிக்க சபை ஒப்புக்கொண்டது. எவ்வாறாயினும், இ.மி.ச. இனால் முன்வைக்கப்பட்ட இந்த தீர்வு முன்மொழிவுக்கு சீனிக் கூட்டுத்தாபனம் இதுவரை பதிலளிக்கவில்லை.<br><br>**மத்திய மாகாணம் 1 மற்றும் 2**<br>மொத்த வழங்கல் மற்றும் சாதாரண வழங்கல் இறுதி செய்யப்பட்ட கடனாளிகளின் நிலுவைத் தொகையை மீட்பதற்காக, அந்தந்த பகுதி பொறியாளர்களால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, நிலுவைத் தொகையின் மாதாந்த முன்னேற்றம் குறித்த விவரங்கள் மாகாண DGM மற்றும் கணக்காளர் (வருவாய்) க்கு அனுப்பப்பட்டது. )<br>மேலும், இறுதி செய்யப்பட்ட கணக்குகள் தொடர்பாக, சுற்றறிக்கை இல. DCC/ COH/ 03/2009 இன் அறிவுறுத்தலின்படி, பாதுகாப்பு வைப்புத் தொகையை விட நிலுவைத் தொகை குறைவாக இருக்கும்போது, பாதுகாப்பு வைப்புத்தொகைகளுக்கு எதிராக நிலுவைத் தொகைகளை எதிரீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| **DD-03** | **இறுதி செய்யப்பட்ட கடனாளிகள் தொடர்பாக பின்வரும் மீட்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது**<br>1. சாதாரண மற்றும் மொத்த கடனாளிகளின் பாதுகாப்பு வைப்புத்தொகையிலிருந்து இறுதி செய்யப்பட்ட கணக்குகளில் உள்ள நிலுவைகளை மீட்டெடுத்தல்<br>2. நீண்ட நிலுவைத் தொகைகள் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவான கணக்குகளை இறுதி செய்ததற்கான நினைவூட்டல்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது<br>3. இயல்புநிலை நுகர்வோரின் செயலில் உள்ள கணக்குகளை அடையாளம் காணவும், நிலுவைத் தொகையை செயலில் உள்ள கணக்குகளுக்கு மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது<br>4. நிலுவைத் தொகையை மீட்பதற்காக இராணுவ முகாம்கள் போன்ற அரசாங்க அமைப்புகளுக்கு தொடர்ச்சியான நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன. இந்த செயல்முறையின் மூலம் கணிசமான தொகை மீட்கப்பட்டுள்ளது |
| **DD-04** | WPS1 - நிலுவைகளை பதிவழிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. பதிவழிப்பதற்காக ஒரு சபைப் பத்திரமும் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கான கடிதமும் அனுப்பப்பட்டன.<br>SP1- சாதாரண சப்ளை இறுதி செய்யப்பட்ட கணக்குகளின் நீண்ட நிலுவைத் தொகைகளை மதிப்பாய்வு செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டு, அதற்கான அனுமதி நடைபெற்று வருகிறது. பாதுகாப்பு வைப்புத் தொகையை விட நிலுவைத் தொகை குறைவாக இருக்கும்போது, பாதுகாப்பு வைப்புத்தொகைகளுக்கு எதிராக நிலுவைத் தொகைகளை எதிரீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.<br>ஸ்ரீ2- இறுதி செய்யப்பட்ட கணக்குகளிலிருந்து நிலுவைத் தொகையைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் ஒட்டுமொத்த பெறத்தக்க நிலை 2.5 முதல் 1.45 வரை மேம்பட்டுள்ளது, இது வசூல் செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது. |

**(ii)** **DD 01 இலுள்ள இறுதி செய்யப்பட்ட சாதாரண விநியோகக் கடன்பட்டோர் மீதியிலுள்ள ரூபா 872.39 மில்லியனில், அதிகபட்சமாக ரூபா 230.58 மில்லியன் கொழும்பு நகரப் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் அந்த மீதியில் 13,710 நுகர்வோர் கணக்குகள் தொடர்பான ரூபா 41.58 மில்லியன் கடனாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. சபையின் DCC/COM/03/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அடிப்படையில் தீர்வு காண எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இந்த மீதி வைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, மொத்தக் கடன்பட்டோரிலுள்ள (இறுதிப்படுத்தப்பட்ட) 216 நுகர்வோர் கணக்குகளுடன் தொடர்புடைய ரூபா 13.15 மில்லியன் கடன் நிலுவைகளையும் தீர்ப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அப்படியே வைக்கப்பட்டுள்ளன.**

| பிரிவுகள் | பதில் |
|---|---|
| DD-01 | நீண்டகாலமாக நிலுவையில் உள்ள இறுதி செய்யப்பட்ட வர்த்தக கடனாளி கடன் நிலுவைகளை மீட்டெடுக்க பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br><br>1. அட்டவணைகள் மற்றும் கடிதங்கள் தயாரிக்கப்பட்டு மாகாண DGMகள் மூலம் நுகர்வோருக்கு தெரிவிக்கப்பட்டது.<br>2. சுற்றறிக்கைக்கு இணங்க, சாதாரண வழங்கல் இறுதி செய்யப்பட்ட கடன் நிலுவைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br>**கொழும்பு நகரம்**<br>1. அட்டவணைகள் மற்றும் கடிதம் தயாரிக்கப்பட்டு DGM CCக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. 30.06.2023 இல் 23 வாடிக்கையாளர் கணக்குகளுடன் தொடர்புடைய மொத்த விநியோக கடன் நிலுவைகள் 1.63 மில்லியன் மட்டுமே. இது கடன் நிலுவைகளில் குறிப்பிடத்தக்க குறைப்பைக் காட்டுகிறது.<br>**NWP-1**<br>மேற்கூறிய சுற்றறிக்கையின்படி, 2019 ஆம் ஆண்டு வரையிலான சாதாரண வழங்கல் இறுதி செய்யப்பட்ட கடன் நிலுவைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் 2020 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ரூ 1.09 மில்லியன் மதிப்புள்ள 1815 கணக்குகள் 2023 ஏப்ரல் 10 ஆம் தேதி AGM (DD1) ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளன.<br>மொத்த வழங்கல் 13 கணக்குகளின் மதிப்பு ரூபா 6990.58 ஆனது 2022 அக்டோபர் 14, அன்று யுபுஆ (னுனு1) ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது<br>**(NWP1)**<br>2022 ஆம் ஆண்டு DCC/COM/03/2009 சுற்றறிக்கையின் அடிப்படையில் 4679 நுகர்வோர் கணக்குகள் தொடர்பான ரூ.2.89 மில்லியன் கடன் நிலுவைகள் பதிவழிக்கப்பட்டுள்ளன. |
| DD-04 | கடன் நிலுவைகளை மற்ற வருமானங்களுக்கு உள்வாங்குவதற்கும், தீர்வு செய்யப்பட்ட கணக்குகளை அமைப்பிலிருந்து அகற்றுவதற்கும் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன |

**(iii)** **தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் படி, இறுதி செய்யப்பட்ட மொத்த விநியோக இணைப்புகளான 413 இல், 137 நுகர்வோருக்கு எந்தவித வைப்புத்தொகையும் பெறாமல் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்தக் கணக்குகளின் மொத்த நிலுவைத் தொகை ரூபா 266.84 மில்லியன் ஆகும். மேலும், இறுதி செய்யப்பட்ட 413 மொத்த விநியோக இணைப்புகளில், 147 நுகர்வோரின் மொத்த நிலுவைத் தொகையான ரூபா 203.15 மில்லியன் அந்தக் கணக்குகளின் மொத்த வைப்புத் தொகையினை விஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது.**

கொழும்பு நகரம் 409 இணைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் 4 இணைப்புகள் NWP 2 க்கு சொந்தமானது. 31.12.2022 இன் கணக்குப் புத்தகத்தின்படி கொழும்பு நகரத்தின் மொத்த இறுதி கடனாளி மீதி ரூ.33, 997,534.69 ஆனதுடன் மொத்த பாதுகாப்பு வைப்புத்தொகை ரூ.44.85 ஆகும்.

NWP 2 ஐப் பொறுத்தவரை, 4 எண்ணிக்கையிலான நுகர்வோர் கணக்குகளுக்கு பாதுகாப்பு வைப்புத்தொகை எதுவும் பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பாதுகாப்பு வைப்புத்தொகையை கூடிய விரைவில் பெறுவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

**(iv)** **மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின்படி, நாடாளுமன்ற பிரதிநிதிகளின் உத்தியோகபூர்வ விடுதிகளுக்கு வழங்கப்பட்ட 74 மின் இணைப்புகளிற்காக ரூபா 16.32 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதியில் மீளப் பெறப்படாமல் இருப்பது அவதானிக்கப்பட்டது. அதில் 29 இணைப்புகள் தொடர்பான ரூபா 5.31 மில்லியன் ஆறு ஆண்டுகளாக மீளப்பெறாமல் நிலுவையில் உள்ளதுடன் 30 இணைப்புகள் தொடர்பான ரூபா 3.13 மில்லியன் ஒரு வருடத்திற்கும் மேலாக மீட்கப்படாமல் நிலுவையில் உள்ளது**

| பிரிவுகள் | பதில |
|---|---|
| DD01 | நாடாளுமன்றப் பிரதிநிதிகளிடம் இருந்து நிலுவையில் உள்ள நிலுவைத் தொகைகள், மீதம் பெறப்படாமல் உள்ளன என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், மேலதிக பொது முகாமையாளர் மற்றும் DGM கொழும்பு நகரின் நெருக்கமான மேற்பார்வை மற்றும் அறிவுறுத்தல்களுடன், இ.மி.ச. இற்கு தற்போதைய பாராளுமன்ற பிரதிநிதிகளின் நிலுவைத் தொகையான ரூ.32 மில்லியனை மீட்டெடுக்க முடிந்ததுடன் பின்வருவனவற்றை உள்ளடக்கிய தொடர்ச்சியான மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br><br>1. நபர்களின் விவரங்களின் பட்டியல் பொது நிர்வாக, உள்துறை அமைச்சகம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டது<br>2. நுகர்வோர் கோப்புகளை சரிபார்த்தல்.'.பரிசோதித்தல் மற்றும் பாராளுமன்ற பிரதிநிதிகளின் ஒவ்வொரு காலாண்டிலும் தற்போதைய மற்றும் முந்தைய குடியேற்றங்களை அடையாளம் காணுதல்.<br>3. நீண்டகாலமாக நிலுவையில் உள்ள வர்த்தகக் கடனாளியின் நிலுவைத் தொகையை வசூலிக்க வருவாய்க் குழுக்களை நியமித்தல<br>நிலுவையில் உள்ள நிலுவைகளை செலுத்துமாறு நுகர்வோருக்கு நினைவூட்டல் கடிதங்களை அனுப்புதல |
| DD04 | WPS I: பில் மீட்பு செயல்முறைக்கு வரும்போது இந்தக் கணக்குகளும் சாதாரண கணக்குகளைப் போலவே கருதப்படுகின்றன.<br><br>SP2: ஸ்ரீ2- தங்காலை பகுதியில் அரசியல் கலாசாரத்தின் உணர்திறன் தன்மை காரணமாக விநியோகத் தொடர்பைத் துண்டிக்க முயற்சிக்காமல் நிலுவைத் தொகையைத் தீர்வைக் கோரும் நினைவூட்டல்களை இ.மி.ச. அனுப்பியுள்ளது. மீதமுள்ள பகுதிகளில், எங்களுக்கு இதுபோன்ற பிரச்சினை இல்லை. |

**(ஆ)** **ஏனைய கடன்பட்டோரான ரூபா 38.38 பில்லியனில், ரூ.14.59 பில்லியன் அல்லது 38 சதவீதம் மதிப்பாய்வின் ஆண்டின் இறுதியில் 2 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.**

**(i)** **ஏனைய கடன்பட்டோர் நிலுவைத் தொகையில், விநியோக பிரிவு 04 தொடர்பாக அரசு நிறுவனங்களில் இருந்து ரூபா 12.67 மில்லியனுக்கு சமமான தொகை 5 ஆண்டுகளுக்கும் மேலாக மீட்கப்படாமல் நிலுவையில் இருந்தது**

இந்த நிலுவைத் தொகைகள் தொடர்பாக பௌத்த விவகார அமைச்சுக்கு தொடர்ச்சியான நினைவூட்டல்கள் அனுப்பப்பட்ட போதிலும் இந்த நிலுவைகள் தீர்க்கப்படவில்லை. மேலும் பிற கடனாளிகளில் எரிபொருள் வைப்புத் தொகையும் இதில் அடங்கும்.

**(ii)** **31 டிசம்பர் 2022 நிலவரப்படி சொத்து முகாமைத்துவப் பிரிவின் பாரந்தூக்கி, காற்றுச் சீராக்கி மற்றும் மின்வலு பிறப்பாக்கிகளை வழங்கியமைக்காக 93 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 346.95 மில்லியன் தொகையொன்று நிலுவையில் உள்ளதுடன் அதில் ரூபா 114.04 மில்லியன் மற்றும் ரூபா 82.84 மில்லியன் தொகை முறையே ஒரு வருடத்திற்கும் ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாது வைக்கப்பட்டுள்ளது. மேலும், ஏனையவற்றின் மீளப்பெறக்கூடிய சாத்தியத்தை மதிப்பிடாமல், ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள நிலுவைத் தொகைக்கு மட்டுமே பெறுமதி குறைபாடுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.**

பெறத்தக்கவைகளில் பெரும்பாலானவை அரசு மருத்துவமனைகள், மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சகம் மற்றும் பிற அரசு நிறுவனங்களில் உள்ளன. இருப்பினும், கடிதங்களை அனுப்புவதன் மூலம் மீட்பதற்கான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தாலும், அந்த வரவுகளை மீட்பது கேள்விக்குரியது. அந்த மீள முடியாத நிலுவைகளை தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(iii)** **டவுரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனி (ரூ. 478.18 மில்லியன்) மற்றும் லிபர்ட்டி கமாடிடீஸ் லிமிடெட் (ரூ. 236.78 மில்லியன்) இன் ஊடாக லங்கா நிலக்கரி நிறுவனத்திடம் இருந்து பெறவேண்டிய ரூபா 714.96 மில்லியன் பணத்தை மீட்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாமல் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது.**

இந்த மீதியான ரூபா 478,179,795.00 தூரியன் ஐயன் லிமிடட் நிறுவனத்துடன் தொடர்புடையதாகும் என்பதுடன் Liberty Commodities Ltd தொடர்பான ரூபா 236,785,639.43 தொகையும் காணப்படுகின்றது. தூரியன் ஐயன் லிமிடட் நிறுவனத்தின் நிலுவைத் தொகை தொடர்பாக அமைச்சரவை குழு ஒன்று நியமிக்கப்பட்டு, தீர்வுக்காக துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் செயலாளரிடம் இறுதி அறிக்கை ஒப்படைக்கப்பட்டது. லிபர்ட்டி கமாடிட்டிஸ் விடயத்தில், LCC ஒரு நடுவர் செயல்முறையைத் தொடங்கியுள்ளது. லிபர்ட்டி கமாடிடீஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு எதிராக லங்கா நிலக்கரி நிறுவனம் எடுத்த நடுவர் நடவடிக்கையின் முடிவின் அடிப்படையில் இது அனுமதிக்கப்படும்.

**(iv)** **பரிசீலனைக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் மின்சாரம் வழங்கியமைக்காக புனித ஸ்தலங்களிலிருந்து ரூபா 253.7 மில்லியன் நிலுவையில் உள்ளதுடன் அதில் ரூபா 81.58 மில்லியன் தொகை ஐந்தாண்டுகளுக்கு மேலாக அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நிலுவையில் உள்ளது**

| **(v)**<br>**D**<br>**பிரிவு** | 2022.12.31<br>**இல்**<br>**உள்ளவாறு மீதி**<br>**ரூபா மில்** | **5 ஆண்டு களிற்கு மேற்பட்ட மீதி**<br>**ரூபா மில்** | **பதில்** |
|---|---|---|---|
| DD01 | 79 | 34 | DD 1 இல் உள்ள புனித ஸ்தலங்களிலிருந்து செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.79.81 மில்லியன் ஆனதுடன் மேலே உள்ள ரூ.34.07 மில்லியன் 5 ஆண்டுகளுக்கு மேல் எஞ்சியிருந்தது.<br>இது சம்பந்தமாக, மேற்கூறிய வரவுகளை தள்ளுபடி செய்ய ஒரு சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் சபை இந்த விடயத்தை கணக்காய்வுக் குழுவின் பரிந்துரைகளுக்கு அனுப்பியது.<br>புனித ஸ்தலங்களில் இருந்து வரவுகள் பிரிப்பது கீழே கொடுக்கப்பட்டுள்ளது.<br>31.03.2023 இல் மீதி இல்லை |
| DD02 | 67 | 17 | புனித ஸ்தலங்களின் நிலுவைகள் மற்றும் மீள் அபிவிருத்தியடைந்து வரும் பாடசாலை களுக்கான மின்சார விநியோகத்திற்கான கட்டணங்களை (மஹிந்தன சிந்தனை) தள்ளுபடி செய்வதற்கான சபை பத்திரம் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சபையின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது |

| S/NO | PLACE | 31.03.2023 **இல் மீதி இல்லை** |
|---|---|---|
| 1 | ஸ்ரீமஹா போத்தி ஆவாசா | 13.87 |
| 2 | அபயகிரி தாகப | 5.87 |
| 3 | சண்டவாசா போமலுவா நூலகம் - ஸ்ரீமஹா போதி | 0.01 |
| 4 | ஜேதவனராம | 0.27 |
| 5 | லோவாமபய | 0.01 |
| 6 | அபயகிரி விஹாரை | 0.09 |
| 7 | அபயகிரிய ஸ்தூபம | 0.25 |
| 8 | அபயகிரி விஹாரை | 0.71 |
| 9 | லங்காராம விஹாரை | 0.31 |
| 10 | லங்காராம விஹாரை | 1.21 |
| 11 | மிரிசவெட்டிய அலுவலகம | 2.63 |
| 12 | மிரிசாவெட்டிய சங்கராமையா | 1.68 |
| 13 | துப்பராம ஸ்தூபி | 1.79 |
| 14 | துப்பராம டெம்பேல | 0.61 |
| 15 | சிங்கேகனுவா, ஸ்ரீ மஹாபோதி ஆர்.டி | 2.13 |
| 16 | ருவன்வெலிசாய (தெரு விளக்கு) | 10.06 |
| 17 | உடமலுவ விஹாரை (சதுக்கம்) | 0.18 |
| 18 | ருவன்வெலிசாய விஹாரை | 0.04 |
| 19 | மிஹிந்தலா விஹாரை | 11.83 |
| 20 | இசுருமுனி ராஜா மஹா விஹாரை | 0.01 |
| 21 | இசுருமுனி மஹா விஹாரை | 1.34 |
| 22 | இசுருமுனி விஹார சங்கராமய | 0.07 |
| 23 | திம்புலாகல கோவில | 7.43 |
| 24 | ஜெதவானா திட்டம | 17.40 |
|  | **மொத்தம்** | **79.81** |

| | | | |
|---|---|---|---|
| DD03 | 49 | 14 | புனித இடங்களிலிருந்து செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில், வாரியத்தின் முடிவின் அடிப்படையில் CEB தீர்த்து வைக்கும் மின்சார நுகர்வுச் செலவும் அடங்கும். இந்த பாக்கியை அரசிடம் இருந்து பெற வேண்டும். இதுவரை நிதி வராததால், நிலுவைத் தொகையை தள்ளுபடி செய்ய சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| DD04 | 56 | 15 | மின்சாரம் வழங்குவதற்காக புனித ஸ்தலங்களில் இருந்து பெற வேண்டிய நிலுவையை தள்ளுபடி செய்ய சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது |
| **மொத்தம்** | **253** | **81** | |

**(இ) ரூபா 26.67 பில்லியன் தொகையான செலுத்த வேண்டிய கேள்விப்பண வைப்புக்கள், பாதுகாப்பு வைப்புகள் மற்றும் ஏனைய வைப்புத்தொகைகளிலுள்ள ரூபா 2.79 பில்லியன் தொகையானது 5 ஆண்டுகளுக்கும் மேலாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நிலுவையில் உள்ளது. மேலும் 5 ஆண்டுகளுக்கும் மேலான தொகையிலுள்ள ரூபா 1,312.94 மில்லியன் மற்றும் ரூபா 2.57 மில்லியன் அல்லது 47 சதவீதமானவை முறையே விநியோக பிரிவு 01 மற்றும் தலைமையகத்தில் மூலதன வேலைகளுக்காக பெறப்பட்ட நுகர்வோர் வைப்புத்தொகையை குறிக்கிறது. இருப்பினும், அந்தந்த மூலதன வேலைகள் முடிக்கப்பட்டதா இல்லையா என்பதைக் கண்டறிய எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை.**

| பிரிவு | தொகை ரூபா மில். | பதிலளிப்பு |
|---|---|---|
| DD01 | 1,469 | கேள்விப்பண வைப்பு, பாதுகாப்பு மற்றும் 5 ஆண்டுகளில் செலுத்த வேண்டிய மற்ற வைப்புத்தொகை DD1 என்பது மேலே உள்ள நிலுவைகளைக் கொண்ட ரூ.1.469 பில்லியனைக் குறிக்கிறது. |

| விபரம் | தொகை |
|---|---|
| நுகர்வோர் வைப்பு - மூலதன வேலை | 1,312,944,129.41 |
| மீளளிக்கப்பட வேண்டிய கேள்வி வைப்பு | 14,360,860.92 |
| சட்டவிரோத மின்சார நுகர்வுக்கான நீதிமன்ற வசூல | 36,236,584.97 |
| பிற இதர வைப்புத்தொகைகள் | 59,124,355.19 |
| ஜி.டி. வைப்புத்தொகை | 46,466,640.85 |
| | **1,469,132,571.34** |

| பிரிவு | தொகை ரூபா மில். | பதிலளிப்பு |
|---|---|---|
| DD01 (தொடர்ச்சி) | | பொதுவாக, மேலே உள்ள வைப்புத்தொகைகள் நுகர்வோர்∴வைப்பாளரின் கோரிக்கையின் அடிப்படையில் திருப்பியளிக்கப்படும். கோரிக்கை விடுக்கப்பட்டவுடன், அத்தகைய வைப்புத்தொகையை திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்படும். இது தவிர, மூலதன வேலைகள் முடிந்து சொத்துகளுக்கு மாற்றப்பட்டவுடன், மூலதன வேலைகளுக்கு எதிரான டெபாசிட்கள் அழிக்கப்படும். |
| DD02 | 415 | 5 ஆண்டுகளில் பெரும்பாலான வைப்புத்தொகைகள் (P&HM) கிளையால் கையாளப்பட்ட திட்டங்களில் இருந்து பிரதிபலிக்கிறது மற்றும் எதிர்காலத்தில் நிலுவைகளை அழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| DD03 | 798 | சேவை முதன்மை வைப்புத்தொகை: மீதமுள்ள செலவில் கட்டப்பட்ட கட்டுமானப் பணிகள் முடிந்ததும், வைப்புத்தொகை நுகர்வோர் பங்களிப்புக்கு மாற்றப்படும்.<br>டெண்டர் வைப்புத்தொகை: சப்ளையர் கோரிக்கையின் பேரில் மட்டுமே சப்ளையர்களுக்குத் திருப்பியளிக்கப்படும். |
| DD04 | 0.032 | இந்த வைப்புத்தொகைகள் மூன்றாம் தரப்பினருடனான வைப்புத்தொகையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது மற்றும் தொடர்புடைய 3வது தரப்பினர் கோரினால் மட்டுமே, இந்த வைப்புத்தொகை திரும்பப் பெறப்படும |

<table>
<tr><td>பரிமாற்றம்</td><td>57</td><td>31/12/2022 அன்று செலுத்த வேண்டிய மொத்த வைப்புத் தொகை ரூ. 67.24 மில்லியன், அதில் ரூ. 57.76 மில்லியன் 5 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது, இதில் ரூ. 52.7 மில்லியன், களனிதிஸ்ஸ, 132 KV கிரிட் துணை மின்நிலையத்தில் நிறுவப்பட்ட குறைபாடுள்ள பேட்டரி வங்கி அமைப்பை எதிர்காலத்தில் சரிசெய்வதற்காக திட்டப் பிரிவிலிருந்து பரிமாற்றப் பிரிவுக்கு மாற்றப்பட்ட வைப்புத்தொகையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. பரிவர்த்தனைகளை நியாயப்படுத்திய பிறகு மற்றும் 5 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்த டெபாசிட்களின் மீதமுள்ள நிலுவைகள் குறித்து எதிர்காலத்தில் டெபாசிட் கணக்கை அழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.</td></tr>
<tr><td>பிறப்பாக்கம்</td><td>3</td><td>தலைமுறைக் கணக்குகளில் டெண்டர் வைப்புத்தொகையாக கணக்குப் புத்தகங்களில் ரூ.3.6 மில்லியன் மட்டுமே நிலுவையில் உள்ளது. 2023 ஆம் ஆண்டில் அந்த நிலுவைகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.</td></tr>
<tr><td>சொத்து முகாமைத்துவம்</td><td>16</td><td>AM பிரிவில் 5 ஆண்டுகளில் செலுத்த வேண்டிய டெபாசிட் தொகை ரூ. 16,033,950.00 DGM(W&AS) பிரிவிற்கு சொந்தமானது, இது பொது மருத்துவமனையிலிருந்து கணக்குப் பிரிவை நிறுவுவதற்கு தலைமை பொறியாளர் (கணக்கு) பிரிவால் எடுக்கப்பட்டது. ஆனால், பொது மருத்துவமனை ஏ.்.சி பொருத்துவதற்கு உரிய இடத்தை வழங்கவில்லை.</td></tr>
<tr><td>செயல் திட்டம்</td><td>2</td><td>இந்த வைப்புகளில் பெரும்பாலானவை ஏஜிஎம் (திட்டங்கள்) பிரிவை நிறுவும் போது டிரான்ஸ்மிஷன் பிரிவிலிருந்து மாற்றப்பட்டன மற்றும் சில குறியீட்டு பிழைகள். 2023 ஆம் ஆண்டில் அந்த நிலுவைகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.</td></tr>
<tr><td>தலைமையகம்</td><td>32</td><td>முறிவு மற்றும் டெபாசிட் காலத்தின் படி, பரிவர்த்தனையின் தன்மை கண்டறியப்பட்டு, அடுத்த ஆண்டில் பாதிக்கப்பட்டவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட<br><br>
<table>
<tr><th>விபரம்</th><th>தொகை ரூபா</th><th>5 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல்</th></tr>
<tr><td>எல் 5610 பாவனையாளர் வைப்புகள் - மூலதன வேலைகள்</td><td>2,568,099</td><td>2,568,099</td></tr>
<tr><td>எல் 5640 டென்டர் வைப்புகள்- மீளளிக்கத்தக்க</td><td>1,978,194</td><td>468,694</td></tr>
<tr><td>எல் 5660 நானாவித வைப்புகள்</td><td>273,626</td><td>273,626</td></tr>
<tr><td>எல் 5650 சட்டவிரோத மின்சாரத்திற்கான நீதிமன்ற அறவீடு</td><td>28,890,558</td><td>28,890,558</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>33,710,477</td><td>32,200,977</td></tr>
</table>
<u>நுகர்வோர் வைப்பு - மூலதன வேலைகள்</u><br>பொலன்னறுவை திட்டத்தின் இரண்டாம் கட்ட நிலத்தடி மின்விளக்குகளுக்கு மத்திய கலாசார நிதியத்திலிருந்து 2017.01.18 அன்று ரூபா 3,426,522.75 பெறப்பட்டது. பின்னர், 2017 இல் ரூ.768,423.60 DGM (NCP) க்கு மாற்றப்பட்டது. DGM (R&D) இலிருந்து நிறைவு அறிக்கைகளைப் பெற்ற பிறகு மாற்றப்பட வேண்டிய நிலுவைத் தொகை<br><br><u>டெண்டர் டெபாசிட் மற்றும் இதர வைப்பு</u><br>இந்த டெண்டர் டெபாசிட் மற்றும் இதர வைப்புத்தொகையில், 5 ஆண்டுகளுக்கும் மேலான தொகையை வருமான அறிக்கையில் திருப்பி எழுத நடவடிக்கை எடுக்கப்படும்.<br><u>முறைகேடான மின்சாரத்திற்காக நீதிமன்ற வசூல்</u><br>நீதிமன்றங்கள் சம்பந்தப்பட்ட மாகாணங்களுக்கு முறைகேடான மின்சாரம் பெறுவதற்காக விசாரணை மேலாளருக்கு ரூபா 28,890,558 தொகையை மாற்றுவதற்காக அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>2,794</td><td></td></tr>
</table>

**(ஈ) வினியோகப் பிரிவு 01 இன் சேமிப்புக் கணக்கில் ரூபா 12.34 மில்லியன் அசாதாரண செலவு மீதி காணப்பட்டதுடன் அதனை விசாரித்தறிவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இருப்பினும், அந்த வங்கி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.**

இந்தத் தொகையானது மக்கள் வங்கியால் SESRIP திட்டத்தின் சப்ளையருக்கு டெலிகிரா.்.பிக் டிரான்ஸ்.்.பர்களில் வசூலிக்கப்படும் கமிஷனைத் திரும்பப் பெறுவதைக் குறிக்கிறது. வங்கி உறுதிப்படுத்தல் ஏற்கனவே எங்களால் கோரப்பட்டுள்ளது. மேலும், 2023 மே மாதத்தில் கணக்குப் புத்தகங்களிலிருந்து மேற்படி தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(உ) 2013/14 மதிப்பீட்டின் ஆண்டிற்கான ரூபா 1.27 பில்லியன் மீட்கப்பட்ட பங்கிலாப வரி தொகை மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதி வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்படவில்லை.**

1985 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 33 (1) (உ) இன் படியும் அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் படியும் பொது நிறுவனங்களுக்கு அதன் மீதி இலாபத்தில் 25 சதவீதத்துக்கு சமமான தொகையை வரியாக செலுத்த வேண்டும். அதே சட்டத்தின் பிரிவு 33 (1) அ இன் கீழ் செலுத்த வேண்டிய வரியில் இருந்து கழித்தலலும் கூறப்பட்டுள்ளது. அதன்படி, 2010/2011 மதிப்பீட்டு ஆண்டு வரை வரி நோக்கங்களுக்காக சரிசெய்யப்பட்ட இலாபத்தின் அடிப்படையில் இ.மி.ச. ஆனது கணக்கியல் இலாபத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பட வேண்டும் என்ற கோரிக்கையை புறக்கணித்து மதிப்பிடப்பட்டது. எவ்வாறாயினும், 2013.ஃ.2014 மதிப்பீட்டில் இ.மி.ச. இன் கணக்கியல் இலாபம் ரூ.16,133,182,036 ஆனதுடன் வரிக்குட்பட்ட வணிக நட்டம் ரூ. 8,913,400,992 ஆகும். அந்த மதிப்பீட்டின் படி ஆண்டிற்கான, இ.மி.ச. இன் வரிக் கோப்பை உ.இ.தி. விசாரணைக்காக எடுத்துக்கொண்டதுடன் 30-05-2016 தேதியிட்ட ITA 16300500067 V2 என்ற மதிப்பீட்டில் மொத்த வரி விதிக்கக்கூடிய வருமானம் ரூபா 1,265,020,130 எனவும் அந்த வரிக்குரிய வருமானத்தின் மீதான வரி ரூபா 354,208,156 எனவும் ஒப்புக்கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்டது. இருப்பினும், அதே மதிப்பீட்டில் கணக்கியல் இலாபத்தின் அடிப்படையில் ரூ. 3,585,289,319 DDT பொறுப்பு தீர்மானிக்கப்பட்டது. கணக்கியல் இலாபத்தை அடிப்படையாகக் கொண்ட பங்கிலாபத்தொகை வரிக்கான முந்தைய ஆண்டு மதிப்பீடுகளுக்கு மாறாக DDT கணக்கீடு அடிப்படையில் மாற்றப்பட்டதால், அது இ.மி.ச. ஆல் ஒப்புக் கொள்ளப்படவில்லை. 30-01-2013 அன்று வெளியிடப்பட்ட இலங்கை துறைமுக அதிகாரசபையின் DDT தீர்மானத்தின் அடிப்படையில் ஐசுனு ஆனது பங்கிலாபத் தொகை வரியை மதிப்பீடு செய்துள்ளதுடன் அது 2007/2008 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. இ.மி.ச. இன் அதிகாரிகள் மற்றும் ஐசுனு அதிகாரிகளால் பல விவாதங்கள் நடத்தப்பட்டதுடன் பல்வேறு விவாதங்களுக்குப் பிறகு, ளுடுPயு நிர்ணயத்திற்கு உட்பட்ட கணக்கியல் இலாபத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட DDT பொறுப்பை இ.மி.ச. ஏற்றுக்கொண்டதுடன் 2007/2008 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அதனை இ.மி.ச. க்கு பயன்படுத்தப்பட வேண்டும். அத்துடன் வரிக்காக சரிசெய்யப்பட்ட இலாபத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்ட பங்கிலாப வரி இ.மி.ச. க்கு மீண்டும் கணக்கிடப்பட வேண்டும். 2009/2010 மற்றும் 2010/2011 கணக்கியல் இலாபத்தின் அடிப்படையில் மற்றும் சரிசெய்யப்பட்ட இலாபத்தின் அடிப்படையில் அதிகமாக-செலுத்தப்பட்ட தொகை இ.மி.ச. க்கு திருப்பித் தரப்பட வேண்டும். அதன்படி, 2009/2010 மற்றும் 2010/2011 இற்காக எதிர்பார்க்கப்படும் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான நிலுவைத் தொகைகள் குறித்து சிரேஷ்ட துணை ஆணையர் - புலனாய்வுக் கிளை கோரியபடி நிகர தீர்வுத் திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்டது. எங்கள் கோரிக்கையின்படி 2009/2010 க்கான வரி திரும்பப்பெறுதல் அறிவிப்பு உருவாக்கப்பட்டது ஆனால் ஐசுனு ஆல் இறுதி செய்யப்படவில்லை. பின்னர், 31-10-2017 தேதியிட்ட கடிதத்தின் மூலம் யூனிட் 6டீ இன் ஆணையாளர் எங்கள் விசாரணைக்கு பதிலளிக்கும் விதமாக, 2009/2010 மற்றும் 2010/2011 க்கான வரி திருப்பிச் செலுத்துதல் பணத்தைத் திரும்பப்பெறுவதற்கான கோரிக்கையின் போது ஏற்கனவே தடைசெய்யப்பட்ட நேரத்தில் அந்த ஆண்டுகளில் இருந்து வழங்கப்படவில்லை என்று இ.மி.ச. க்கு தெரிவித்தார். 2007/2008 இலிருந்து நடைமுறைக்கு வரும் SLPA நிர்ணயத்தின்படி கணக்கியல் இலாபத்தின் அடிப்படையில் DDT கணக்கீட்டைப் பயன்படுத்துவதன் மூலம் IRD தானே சர்ச்சையை உருவாக்கியதுடன் இ.மி.ச. க்கு அதே உறுதிப்பாடு பயன்படுத்தப்பட்டதன் மூலம், IRD இன் மறுபரிசீலனை கோரிக்கையை நிராகரிக்கும் முடிவில் இ.மி.ச. உடன்படவில்லை. 2013/2014 மற்றும் 2013/2014க்கான மதிப்பீடு 30-05-2016 அன்று IRD ஆல் வழங்கப்பட்டது, அந்த நேரத்தில், 2009/2010 மற்றும் 2010/2011 க்கான DDT மேலதிகப் பணத்தை திரும்பப்பெறுவதற்கான கோரிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் காலாவதியானது. 30-05-2016 இல் 2013/2014 க்காக வழங்கப்பட்ட DDT மதிப்பீட்டின் காரணமாக சர்ச்சை எழுந்ததால் இ.மி.ச. இன் கட்டுப்பாட்டில் அது காணப்படவில்லை. மார்ச் 2022 இல், இப்பிரச்சினைக்கு விளக்கமளிக்கும் வகையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு இ.மி.ச. கடிதம் அனுப்பியுள்ளதுடன், இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணுமாறு கோரப்பட்டுள்ளது.

மேலும் பிடித்துவைத்த பங்கிலாப வரி விவகாரம் தொடர்பாக பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் இ.மி.ச. மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் பங்குபற்றிய கூட்டம் 11.08.2023 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, பொது முயற்சிகளின் பணிப்பாளர் நாயகம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார், பொருந்தக்கூடிய காலகட்டங்களுக்கு இ.மி.ச. இன் பங்கிலாப வரியை மதிப்பிடுவதற்கு வரி விதிக்கக்கூடிய இலாபத்தின் நிலையான அடிப்படையைப் பயன்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**(ஊ) ரூபா 230.63 மில்லியன் (2,161.98 மெட்ரிக் டன்) நிலக்கரி இருப்பு பற்றாக்குறையானது 2022 திசெம்பர் 31 இல் வருமான அறிக்கைக்கு சாட்டப்பட்டிருந்தது. நிலக்கரி இருப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலகட்டத்தில் பெய்த கனமழை காரணமாகவும், நிலக்கரி முற்றத்தில் நீர் அளவு கணிசமாக அதிகமாக இருந்தமையாலும் சராசரி நிலக்கரி அடர்த்தியில் சிறிது அதிகரிப்பு ஏற்பட்டமையால் 19 நவம்பர் 2022 அன்று மேற்கொள்ளப்பட்ட நிலக்கரி இருப்பு ஆய்வின்படி, 1,046.32 மெட்ரிக் டன் நிலக்கரி கையிருப்பு அதிகமாக இருந்தது. எனவே, இந்த ஆண்டின் சராசரி நிலக்கரி அடர்த்திக்குப் பதிலாக கடந்த ஆண்டின் சராசரி நிலக்கரி அடர்த்தியைப் பயன்படுத்தி நிலக்கரி இருப்பைக் கணக்கிட கணக்கெடுப்புக் குழு முடிவு செய்திருந்தது. அதன்படி, 31 டிசம்பர் 2022 இல் நிலக்கரி கையிருப்பின் பற்றாக்குறை 2,161.98 மெட்ரிக் தொன்களாக இருந்தது. இருப்பினும், ஒரு பெரிய அளவிலான நிலக்கரியை சரிபார்க்க குழிகளில் இருந்து தோண்டியெடுக்கப்பட்ட சுமார் 35 கிலோ நிலக்கரியின் ஒரு கன மீட்டருக்கான சராசரி நிலக்கரி அடர்த்தி மட்டுமே அளவிடப்பட்டதால், கடந்த ஆண்டு சராசரி நிலக்கரி அடர்த்தியின் சரியான தன்மையை மெய்மையாய்வு செய்ய முடியவில்லை**

2021 நிலக்கரி யார்ட் இருப்பு சரிபார்ப்பில், நிலக்கரி யார்ட் பகுதியின் மேற்பரப்பு கிட்டத்தட்ட சமமாக, மட்டமிடப்பட்டு, ஒரே மாதிரியாக இருந்தது. மேலும், புலத்தின் அடர்த்தியை அளவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முறை மிகவும் துல்லியமானது. எனவே, மெய்மையாய்வு செய்யப்பட்ட அளவானது (35 கிலோ) இருப்பிடத்தின் அடர்த்தியை அளவிட போதுமானதாகக் கருதப்பட்டது. நிலக்கரி மேற்பரப்பின் முழுப் பகுதியிலும் 114,290T அளவு நிலக்கரி பரவுண்டு (85,358T காது கேளாத நிலக்கரி உட்பட) காணப்படுகின்றது. எனவே, 2022 ஆம் ஆண்டில் நிலக்கரி அளவைக் கணக்கிடுதல், தெரிவு 2 இற்கு உட்பட்டு 2021 ஆம் ஆண்டின் சராசரி நிலக்கரி அடர்த்தியின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது.

(எ) **சபையின் பதிவேடுகளின்படி, பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்திட்டம் (கூறு 01) மற்றும் பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்திட்டம் (கூறு 02) ஆகியவற்றுக்கு விடுவிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூபா 6,253.39 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் பதிவுகளின்படி, அது ரூபா 4,488.06 மில்லியனாகக் காட்டப்பட்டுள்ளது. எனவே, ரூபா 1,765.33 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது**

இந்த வேறுபாடு 3 காரணங்களால் ஏற்படுகிறது

1. 2022 இல் கணக்கிடப்பட்ட 2021 இன் நாணயமாற்று விகித வேறுபாடு
   இ.மி.ச. ஆனது நிதி நிறுவன உறுதிப்படுத்தல்களின் அடிப்படையில் கடன் வழங்கல்களைக் கணக்கிடுகின்றது. 2021 ஆம் ஆண்டில் மத்திய வங்கி நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில் AFD வழங்கலுக்கு இ.மி.ச. கணக்கிட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை இறுதி செய்த பின்னர் 2021 ஆம் ஆண்டின் ERD வழங்கல் அறிக்கைகளில் வழங்கல் புதுப்பிக்கப்பட்டது. எனவே இ.மி.ச. இன் 2022 நிதிநிலை அறிக்கைகளில் ரூபா 23,082,400 நாணயமாற்று விகித வேறுபாடு கணக்கிடப்பட்டது.
2. மார்ச் 2022 இல் EURO 6,000,000 (ரூபா 1,754,160,00) தொகையான AFD பண வழங்கல் 2022 இன் ERD விநியோக அறிக்கைகளில் புதுப்பிக்கப்படாததுடன் அ.மி.ச அதனை 2022 ஆம் ஆண்டில் நிதி அறிக்கைகளில் நியாயமான மற்றும் தற்போதுள்ள மத்திய வங்கி மாற்று விகிதங்களின் அடிப்படையில் கணக்கிட்டுள்ளது
3. நிலைபேறான எரிசக்தி அதிகாரசபையால் கையாளப்பட்ட ரூபா 11,915,158 விநியோகம் இ.மி.ச. ஆல் பதிவு செய்யப்படவில்லை. இ.மி.ச. அச்செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்ட அதே கடனிலிருந்து இது வழங்கப்பட்டாலும், இ.மி.ச. இன் செயற்திட்டங்களின் வரம்பிற்குள் வராததால், இ.மி.ச. அதன் நிதி அறிக்கைகளில் இக் கொடுக்கல் வாங்கலை கணக்கிட முடியாது. இது நிறுவனத்தின் நிதி செயல்திறன் அறிக்கை தொடர்பான பரிவர்த்தனைகளைக் கூறு என்பதால் LKAS-01 எண்ணக்கருவாக்கச் சட்டகத்தின் அடிப்படையில் இ.மி.ச. இதனை கணக்கீடு செய்யவில்லை

| **கணக்கிணக்கம்** | | **ரூபா மில்** |
|---|---|---|
| **இ.மி.ச. நிதி அறிக்கைகளின்படி பண வழங்கல்கள்** | : | 6,253.39 |
| கழிக்க: இ.மி.ச. இன் நிதி அறிக்கைகளில் 2022 இல் குறைவாக பதிவு செய்யப்பட்ட நாணயமாற்று வேறுபாடு | : | (23.08) |
| ERD ஆல் பதிவு செய்யப்படாத குறைவான விநியோகம் | : | (1,754.16) |
| கூட்டுக: இ.மி.ச. ஆல் பதிவு செய்யப்படாத நிலைபேறான எரிசக்தி அதிகாரசபையின் பண விநியோகம | : | 11.91 |
| **நுசுனு இன் படி பண வழங்கல்கள் :** | : | 4,488.06 |

(ஏ) **01 பிப்ரவரி 2023 தேதியிட்ட 3/0154/504/014 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மற்றும் 17 பிப்ரவரி 2023 தேதியிட்ட பொது முயற்சிகள் திணைக்களத்தின். PED/1/CEB/02/11(i) கடிதத்தின்படி, ஏழு செயற்திட்டங்களின் ரூபா 60.97 பில்லியன் கடனுதவிகள் அரசாங்க பங்கு மூலதனத்திற்கு மாற்றப்பட வேண்டியிருந்தது. மேற்கூறிய கடன்களில், ஹபரன வெயாங்கொட டிரான்ஸ்மிஷன் லைன் திட்டம் தொடர்பான 31 டிசம்பர் 2022 இல் காணப்பட்ட ரூபா 13,736.28 மில்லியன் கடன் வழங்கல்கள் திறைசேரியால் பங்கு மூலதனத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், சபையின் பதிவுகளின்படி, ரூபா 13,729.29 மில்லியன் மட்டுமே அரசாங்க பங்கு மூலதனத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே, ரூபா 6.99 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது.**

ERD பண வழங்கல் அறிக்கைகளின் அடிப்படையில் வெளிநாட்டு நாணயத்தின் நேரடி கடன் வழங்கல்களை இ.மி.ச. பதிவு செய்கிறது. இருப்பினும் உள்ளக இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழில் (IPC) குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டு நாணயத் தொகையின்படி கொடுப்பனவுகள் பதிவு செய்யப்படுகின்றன. மத்திய வங்கி IPC இல் குறிப்பிடப்பட்டுள்ள சரியான மதிப்பை ஒப்பந்தக்காரருக்கு அனுப்புவதால், இ.மி.ச. வேறு எந்த மதிப்பையும் பதிவு செய்ய முடியாத நிலையில் உள்ளது. எனவே உள்நாட்டு நாணயக் கொடுப்பனவுகளுக்கான விநியோக போர்ட்டலில் சரியான உள்நாட்டு நாணய மதிப்பை பதிவேற்றுமாறு ERD க்குத் தெரிவிக்கப்படும். எனவே, இ.மி.ச. பணம் அனுப்புவதற்கான ஆலோசனையைப (சுநஅவைவயஉந யனஎஉைந) பெற்றுள்ளதால், அதை பதிவேற்றம் செய்யாததற்காக நுசுனு யிடம் விசாரிக்கப்பட வேண்டும்.

இதன் காரணமாக நுசுனு மற்றும் இ.மி.ச. இற்கு இடையே ரூபா 6.99 மில்லியன் வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. திறைசேரி நுசுனு நிலுவைகளை மாற்றியுள்ள போதிலும், இ.மி.ச. பதிவு செய்த உண்மையான கடன் நிலுவையை இ.மி.ச. உரிமைத்துவத்துக்கு மாற்றியுள்ளது.

**(ஐ) சபை லெகோ இற்கு மின்சாரத்தை விற்று, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து பல வருடங்களாக எரிபொருளை கொள்வனவு செய்த போதிலும், இவ்விரு நிறுவனங்களுக்கிடையில் சுமுகமான செயற்பாடுகளை உறுதி செய்வதற்காக அந்த இரு தரப்பினருடனும் விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.**

மின்வலு விற்பனை ஒப்பந்தம் (PSA) 2016 இல் ஒரு குழுவால் தயாரிக்கப்பட்டதுடன் அதன்போது அக் குழு LECO இன் ஒரு உறுப்பினரை உள்ளடக்கியிருந்தது. இருப்பினும், உறுப்பினர் வரைவு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. எனவே 2022 இல் ஒரு புதிய குழு நியமிக்கப்பட்டதுடன் வரைவானது LECO இன் PSA பொது முகாமையாளருக்கு அவரது கருத்துகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. LECO இலிருந்து கருத்துகளைப் பெற்ற பிறகு, அந்தக் கருத்துகளைப் பற்றி விவாதிக்க PUCSL ரூ LECO உடன் ஒரு கூட்டுக் கூட்டம் நடைபெற்றது. அவை சம்பந்தப்பட்ட தரப்பினரால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, இறுதி வரைவு அறிக்கை கிடைத்தவுடன் LECO க்கு அனுப்பப்படும்

**CPC ஒப்பந்தம்**

எதிர்காலத்தில் போட்டி கூறுவிலை முறையைப் பயன்படுத்தி எரிபொருள் வாங்கப்படும். எனவே, CPC உடன் ஒப்பந்தம் தேவைப்படுவதில்லை.

**(ஒ) உதுருவசந்தய திட்டத்தின் கீழ் 2014 இல் அடையாளம் காணப்பட்ட ரூபா 37.27 மில்லியன் இருப்பு பற்றாக்குறை தொடர்பில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒரு புலனாய்வை மேற்கொண்டது. பின்னர் மேற்கொண்ட இந்த சிறப்பு விசாரணையின்படி, பற்றாக்குறை 46.33 மில்லியன் என்று தெரியவந்துள்ளதுடன் அத்தொகை அதனுடன் சம்பந்தப்பட்ட களஞ்சியக் காப்பாளரிடமிருந்து பெறவேண்டியதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அந்தத் தொகையில் ரூபா 8.29 மில்லியன் 2019 முதல் 2020 வரையிலான காலப்பகுதியில் பணிப்பாளர் சபையின் அனுமதி பெறாமல் துணைப் பொது முகாமையாளர் (வடக்கு) மற்றும் மேலதிக பொது முகாமையாளர் ஆகியோரின் ஒப்புதலின் பேரில் மாத்திரம் பதிவழிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து ஆண்டு இறுதியில் கூட ரூபா 46.33 மில்லியன் இருப்புப் பற்றாக்குறையை வசூலிக்க சபை தவறியிருந்தது..**

2014 ஆம் ஆண்டு விசேட விசாரணையின் மூலம் உதுருவசந்தய திட்டத்தின் கீழ் ரூ.46.33 மில்லியன் இருப்பு பற்றாக்குறை கண்டறியப்பட்டது. இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட வழக்கு எண்: டீ/164/15 இன் கீழ் திரு. உ.பி. குணரத்னவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னர் வழக்கு எண் HCV/2980/20 உடன் சம்பந்தப்பட்ட தொகையாக இது காணப்பட்டமையால் இந்த வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கின் தீர்ப்பு, திரு. உ.பி. குணரத்ன குற்றத்தை ஒப்புக்கொண்டார். எனவே, சிவில் நீதிமன்ற வழக்கு மூலம் மீதி இழப்புகளை மீட்பதற்கு இ.மி.ச. சட்டக் கிளை நடவடிக்கை எடுக்க வேண்டும். (திரு. குணரத்ன உதுருவசந்தய திட்டத்தின் முன்னாள் களஞ்சியக் காப்பாளர்).

மேலும், தற்போதைய நிலையைத் தெரிவிப்பதற்காக ஒரு சபைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டதுடன் சபை அதனை 28-08-2023 அன்று கவனத்திற்கு எடுத்து, மேலதிக பொது முகாமையாளர் (DD1), தலைமைச் சட்ட அதிகாரி மற்றும் தலைமை உள்ளக கணக்காய்வாளரிடம் சில விளக்கங்களை கோரியுள்ளது.

**(ஓ) சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட விசாரணையின்படி, 2020 ஆம் ஆண்டு ஹெய்யந்துடுவ களஞ்சியசாலையில் இருப்புக் கணக்கெடுப்பின் போது ரூபா 12.65 மில்லியன் இருப்புப் பற்றாக்குறை அடையாளம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் களஞ்சியக் காப்பாளரும் வேறு இரண்டு மின்சார அத்தியட்சகர்களும் முறையே ரூபா 6.47 மில்லியன் மற்றும் ரூபா 2.49 மில்லியன் தொகைக்கு பொறுப்புடையவர்கள் ஆவர். எவ்வாறாயினும், 2023 பெப்ரவரி மாத இறுதியில் முறையான விசாரணையை மேற்கொண்டு அவர்களிடமிருந்து நட்டத்தை மீட்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.**

ரூ. 12.65 மில்லியன் ஹெய்யன்துடுவ களஞ்சியசாலையில் இடம்பெற்ற இருப்பு பற்றாக்குறை குறித்து, AGM (DD1) அவர்களால் விசாரணைக் குழுவிற்கு உத்தரவிட்டுள்ளார். அறிக்கையின் பரிந்துரையின் அடிப்படையில், பொது மேலாளர் - இ.மி.ச., இந்த விடயத்தை உள்ளக கணக்காய்வுக் கிளைக்கு உத்தரவிட்டுள்ளார். உள்ளக கணக்காய்வுக் கிளை விசாரணை நடத்தி அதன் அறிக்கையை பொது மேலாளர் இ.மி.ச. க்கு சமர்ப்பித்தது. (தொடர்பு. CEB/CIA/SI-02/2022-03 தேதி 2022.11.03).

**(ஔ) 20 நவம்பர் 2006 முதல் 20 பிப்ரவரி 2012 வரையிலான காலகட்டத்தில், சொத்து முகாமைத்துவப் பிரிவில் (மின் நிலையம்) இடம்பெற்றிருந்த ரூபா 3.67 மில்லியன் இருப்புப் பற்றாக்குறை தொடர்பில் முறையான விசாரணை முடிந்த பிறகும் அதற்குப் பொறுப்பான நபருக்கு எதிராக ஆண்டு இறுதி வரை கூட சபையால் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.**

ஆதாரங்கள் மற்றும் பொருந்தக்கூடிய நேரக் கட்டுப்பாடுகள் இரண்டையும் கருத்தில் கொண்டு, இந்த விவகாரத்தில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து சட்டமா அதிபரிடம் எழுத்துப்பூர்வ விளக்கத்தைப் பெறுமாறு பொது மேலாளருக்கு இ.மி.ச. இன் கணக்காய்வுக் குழு உத்தரவிட்டுள்ளது.

(ஃ) **இருப்புப் பற்றாக்குறையுடன் சம்பந்தப்பட்ட விசாரணைக்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி, சொத்து முகாமைத்துவப் பிரிவில் ரூபா 3.79 மில்லியன் இருப்புப் பற்றாக்குறைக்கு பொறுப்பான அதிகாரியிடமிருந்து இந்த இழப்பை வசூலிக்காமல் 15 அக்டோபர் 2011 அன்று ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டிருந்தார். மேலும், 12 செப்டம்பர் 2022 அன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில், பற்றாக்குறை ரூபா 2,537,695 ஆக இருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, அவரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய நிதியிலிருந்து வசூலிக்க சபையின் பதிற்கடமை பொது முகாமையாளர் அறிவுறுத்தப்பட்டார். எவ்வாறாயினும், பொறுப்புவாய்ந்த அலுவலரிடம் இருந்து அதனை மீளப்பெறுவதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாமல், கணக்குப் புத்தகங்களில் இத்தொகை மதிப்பாய்வில் ஆண்டில் தீர்க்கப்படாமல் இருப்பது அவதானிக்கப்பட்டது**

பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய நிதியில் இருந்து பற்றாக்குறையை மீட்டெடுக்க இ.மி.ச. இன் ஓய்வூதிய நிதிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், 2023 செப்டம்பர் 15 அன்று நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில், ஓய்வூதிய நிதி விதிமுறைகளின்படி, திரட்டப்பட்ட ஓய்வூதிய நிதியில் இருந்து இருப்புப் பற்றாக்குறையின் மதிப்பை மீட்டெடுப்பது சாத்தியமில்லை என்று தெளிவுபடுத்தப்பட்டது. எனவே, ஓய்வூதிய நிதி விதிகளில் உள்ள விதிகள் குறித்து எழுத்துப்பூர்வ விளக்கத்தைப் பெறுமாறு கணக்காய்வுக் குழு உத்தரவிட்டுள்ளதுடன் இது அடுத்த கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் மேலும் விவாதிக்கப்படும்.

(க) **துணைப் பொது முகாமையாளர் (மேற்கு வடக்கு மாகாணம்) இன் கீழுள்ள தலைமைப் பொறியாளர் (வணிகம்) பிராந்தியத்திலுள்ள களஞ்சியத்தில் 2014 செப்டம்பரில் அடையாளம் காணப்பட்ட ரூ.1.15 மில்லியன் இருப்பு பற்றாக்குறைக்கு காரணமான களஞ்சியக் காப்பாளர் சம்பந்தமாக நடத்தப்பட்ட முறையான விசாரணை மதிப்பாய்வின் ஆண்டு இறுதி வரையிலும் முடிக்கப்படவில்லை என்பதைக் காண முடிந்தது.**

கொடுகொட மத்திய களஞ்சியத்தில் ரூ.1,595,450 இருப்புத் தட்டுப்பாடு கண்டறியப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட களஞ்சியக் காப்பாளர் 2016 இல் இ.மி.ச. இல் இருந்து பணிநீக்கம் செய்யப்பட்டார். முறையான விசாரணைகளின் அடிப்படையில், இ.மி.ச. இன் EPF பிரிவு அவரது ஊழியர் சேமலாப நிதியில் இருந்து நிலுவைத் தொகையை வசூலிக்க கோரப்பட்டது.

(கா) **விநியோகம் 02 மற்றும் 03 தொடர்பான இருப்புப் பற்றாக்குறைக்கான இருப்புச் சீராக்கல் கணக்கிற்கு வசூலிக்கப்பட்ட முறையே ரூபா 14.98 மில்லியன் மற்றும் ரூபா 60.44 மில்லியன் தொகைகள் குறித்து விசாரணை செய்து தீர்வு காண எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் 2004 முதல் கணக்குப் புத்தகங்களில் வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இந்த இருப்புப் பற்றாக்குறை தொடர்பான விவரங்கள் கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை**

5 ஆண்டுகளாக இருப்புச் சீராக்கல் கணக்கில் எஞ்சியிருக்கும் நிலுவைத் தொகைகளை தேவையான ஒப்புதலுடன் சரிபார்த்து பரிந்துரைகளை வழங்க ஒரு குழு நியமிக்கப்படும்.

(கி) **31 டிசம்பர் 2022 நிலவரப்படி பிறப்பாக்கப் பிரிவில் ரூபா 22.42 மில்லியன் தொகையான முடிவுறா மூலதனப் பணிகள் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக அசையாது காணப்பட்டு வருகின்றன.**

2023 ஆம் ஆண்டில் அந்த நிலுவைகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(கீ) **31 டிசம்பர் 2022 நிலவரப்படி, நிதிநிலை அறிக்கைகளிலுள்ள ரூபா 32.54 பில்லியன் தொகையான மொத்த நுகர்வுப் பொருள்களில் 6.5 சதவீதத்தைக் குறிக்கின்ற ரூபா 2.12 பில்லியன் பெறுமதியானவை மெதுவாக நகரும், நகராத மற்றும் சேதமடைந்த இருப்புகளாக காட்டப்பட்டதுடன் இது இருப்புச் சேதங்களுக்கும், வைத்திருக்கும் செலவு அதிகரிப்பதற்கும் மற்றும் மோசடிகளுக்கான வாய்ப்பை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும். மேலும், 2019 முதல் 2022 வரை பல சந்தர்ப்பங்களில், ரூபா 217.7 மில்லியன் மதிப்பிலான சேதமடைந்த மற்றும் வழக்கற்றுப் போன இருப்புக்களை அகற்றுவதற்காக சபையின் அனுமதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், நான்கு விநியோக பிரிவுகளிலும் சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவிலும் அவை தொடர்ந்தும் காணப்பட்டமை தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்க முடிந்ததுடன் மீளாய்வாண்டு முடிந்தும் கூட அவற்றை அப்புறப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.**

| | |
|---|---|
| DD01 | 2022.12.31 இல் உள்ளவாறு DD1 பிரிவிலுள்ள மெதுவாக நகர்கின்ற, பழுதடைந்த, பயன்படுத்த முடியாத மற்றும் விளைவற்ற இருப்புகள் ரூபா 486,203,073.73 ஆகும். அத்துடன், பொது மேலாளரின் (DD-1) அறிவுறுத்தலுடன் DD-1 இன் இருப்பு அளவைக் குறைக்க தொடர்ச்சியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டிற்கான களஞ்சியங்களின் வருடாந்திர சரிபார்ப்பு கடந்த வாரம் நிறைவடைந்துள்ளதுடன், நகராத மற்றும் சேதமடைந்த இருப்புகளை அகற்றுவதற்கான செயல்முறையை விரைவுபடுத்துவதற்கு இருப்பு மதிப்பீட்டுக் குழு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளது. |

DD02

சேதமடைந்த மற்றும் காலாவதியான கையிருப்புகளுக்காக ஒவ்வொரு மாகாணத்தினாலும் சபை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, அதற்கேற்ப இ.மி.ச. இன் நடைமுறைப்படி இருப்புக்களை அகற்றும் செயல்முறை மேற்கொள்ளப்படுகிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை 2022/2021 இல் சமர்ப்பி-க்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட குழு ஆவணங்களின் நிலையைக் கூறுகிறது.

| Division | Description | BoardPaperNo. | Status |
|---|---|---|---|
| EASTERN PROVINCE | Disposal/SellingofNM,SM& damage stock items of Kalmunai Stores, CSC Samanthurai CSC & Nintharur CSC in Eastern Province | EP/DGM/25/BP (Kalmunai area) | Completed |
| TRINCOMALEE | Disposal of NM, SM & Damage stock items at Trincomalee area stores & CSC stores | EP/DGM125/ BP(Trincomalee) | Completed |
| BATTICALOA | Disposal of NM, SM & Damage stock items at Batticaloa area stores, Erawur, Walachchinai, Kalawanchikudi, Kaththankudi CSC storesin EP | EP/DGM/25/ BP(Batticaloa) | Completed |
| AMPARA | Disposal of NM, SM & Damage stock items at Ampara & CSC stores | EP/DGM/25/ Boardpapers (AmparaArea) | Completed |
| DGM(EP) | Disposal of Damaged NM, SM stock items of Provincial storesTrincomalee & Provincial Sub stores of Batticoloa, Amparain Eastern Province | EP/DGM/25/ Boardpapers | Pending |
| AGM(DD-02)-DGM(EP) | To obtain approval of the board for selling of NM, SM & damaged single phase & three phase meters Provincial storesTrinco PS stores Ampara area office of EP | EP/DGM/25/ Boardpapers | Completed |
| AGM(DD-02)/ DGM(WPN) | Disposal of Damage & unserviceable stock items of provincial stores and CSC of WPN | WPN/GM(BP) /2021/08 | Partly completed |
| AGM(DD02)/DGM (P&HM) -DD02 | Disposal of Damage, obsolete and idle stock items in P &HM-DD 02 Siyabalape Stores | DGM(P&HM)-DD02 / Stores/Disposal | Pending |
| AGM(DD 02)/ DGM(CP 02) | Disposal & Selling of NM/SM & damaged stock items at Kegalle area/Mawanella/ Haguranketha / Nuwara Eliya/Nawalapitiya/Ginigathhena/ Peradeniya DGM(CP-02)AGM(DD02) | CP2/DGM/25/BP (Nawalapitiya) | Disposed March2023. Material issues pending for Balances writeoff is pending |
| AGM(DD02)/ DGM(CP02) | Disposal & Selling of NM/SM & damaged stock items at Thawalamthenna, LidulaCSCin Nuwara eliya Area | CP2/DGM/25/BP (Nuwaraeliya) | Disposed March2023. Material issues pending for Balances writeoff is pending |
| AGM(DD02)/ DGM(CP02) | Disposal & Selling of NM/SM & damaged stock items at Rikillagaskada & Walapane CSC in Haguranketha area | CP2/DGM/25/BP (Haguranketha) | Pending |
| AGM(DD02)/ DGM(CP02) | Disposal & Selling of NM/SM & damaged stock items at Mawanella Area office | CP2/DGM/25/ BP(Mawanell a) | Pending |
| AGM(DD 02)/ DGM(CP 02) | Disposal & Selling of NM/SM & damaged stock items at Kegalle,Thulhiriya, Rambukkana, & Moronthota CSC Eliya/ Nawalapitiya/Ginigathhena/ Peradeniya- DGM(CP- 02)AGM(DD02) | CP2/DGM/25/ BP(Kegalle) | Disposed March 2023. Material issues pending for Balances writeoffis pending |
| AGM(DD02)/ DGM(CP02) | Disposal & Selling of NM/SM & damaged stock items at Yatinuwara & Eriyagama CSC's in Peradeniya | CP2/DGM/25/ BP(Peradeniya) | Disposed March 2023. Material issues pending for Balances writeoffis pending |
| AGM(DD 02)/ DGM(CP 02) | Disposal & Selling of NM/SM & damaged stock items at Northern Bridge CSC in Ginigathhena area | CP2/DGM/25/BP (Ginigathhena) | Pending |

2023 வரை ரூபா 101இ453இ029.45 பெறுமதியான இருப்புக்கள் கைதவிர்க்கப்பட்டன.

CP -02-2,494,120

CP-01-18,859,681.86

EP- 43,580,891.16

WPN- 36,518,336.43.

<table>
<tr><td>DD03</td><td>மேலே உள்ள நிலுவைத் தொகையானது, WPS 2 இன் காலாவதியான கையிருப்பில் உள்ளடங்கிய ரூ. 25 மில்லியன் மதிப்புடையதாகும், அதற்கு சபை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சபை பத்திர இல.: DD3/ DGM(WPSII)/BP/2021/03க்கு பெறப்பட்ட ஒப்புதலின்படி, இரண்டு பொருட்களை அகற்றும் டெண்டர்கள் தொடங்கப்பட்டுள்ளன (WPSII/T/2022/084 மற்றும் (WPSII/T/2022/107). மேலே குறிப்பிடப்பட்ட டெண்டர்கள் அதிக விலைக்கு ஏலம் எடுக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அகற்றும் பொருட்களின் மொத்த மதிப்பு ஏற்கனவே இ.மி.ச. க்கு செலுத்தப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட டெண்டர்களின் காலாவதியான மற்றும் சேவை செய்ய முடியாத பொருட்களை அகற்றுவது முடிக்கப்பட்டு தேவையான பதிவுகள் பேரேட்டில் செய்யப்பப்பட்டுள்ளன.<br>சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள மீதியில், கொடுக்கப்பட்ட சபை அனுமதியின்படி ரூ. 8.8 மில்லியன் இருப்புகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன (மொத்த பங்கு புத்தக மதிப்பு 9.9 மில்லியன்) மற்றும் மீதமுள்ள இருப்பு நிலுவைத் தொகையை அப்புறப்படுத்த டெண்டர் செயல்முறை முடிக்கப்பட்டுள்ளது.<br>ஊவா மாகாணம் மற்றும் மீட்டர் ஆய்வகத்திற்கான அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.</td></tr>
<tr><td>DD04</td><td>PHM - PHM கிளையில் நகராத மற்றும் சேதமடைந்த இருப்புகளை அப்புறப்படுத்த சபை பத்திரம் செயலாக்கப்படுகிறது. மெதுவாக நகரும் கையிருப்பில் உள்ள சில பொருட்கள் கிளை மற்றும் பிற பிரிவுகளுக்கு அவ்வப்போது தேவைப்படுகின்றன. எனவே, அவை மெதுவாக நகரும் பொருட்களாக இருப்பு வைக்கப்படுகின்றன.<br>WPS1 - நிலுவைகளை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் குழு ஒப்புதல் வழங்கப்பட்டது.<br>SP1 - நியமிக்கப்பட்ட குழுக்கள் வழங்கிய கருத்துகளின் அடிப்படையில் சபை பத்திரம் அனுப்பப்பட்டதுடன் கணக்காய்வுக் குழு முடிவு பெறப்பட்டது. சபை அனுமதி கிடைத்ததும் நடவடிக்கை எடுக்கப்படும்<br>SP2 - 2021 இருப்புச் சரிபார்ப்பின் அடிப்படையில் அகற்றுவதற்கான அனுமதியைப் பெற்றதுடன் பல யூனிட்களை அகற்றும் பணி முடிந்தது. 2022 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட பொருட்களுக்கு, இப்போது கணக்கெடுப்பு சபை வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில் சபை பத்திரம் தயாரிக்கும் பணியில் உள்ளது</td></tr>
<tr><td>பிறப்பாக்கம்</td><td>வெறும் ரூ. 39.3 மில்லியன் மொத்த நுகர்வுப் பங்கான சுஎ1.51 பில்லியனில் 2.6 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது, இது 31 டிசம்பர் 2022 வரை தலைமுறை பிரிவில் மெதுவாக நகரும், நகராத மற்றும் சேதமடைந்த பங்குகள் என நிதிநிலை அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளது.<br><table>
<tr><td>லக்விஜய மின்வலு ஆலை</td><td>LVPP இல் உள்ள சில நுகர்பொருட்கள் மெதுவாக நகரும். இந்த உருப்படிகள் நிலை "A" அல்லது நிலை "B" பழுதுபார்க்கும் பராமரிப்புக்காகப் பயன்படுத்தப்படுவதால், இந்த மாற்றங்கள் முறையே 05 ஆண்டுகள் மற்றும் 02 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படுகின்றன.</td></tr>
<tr><td>சமனல தொகுதி</td><td>மெதுவாக நகரும் - நிலுவைகளை பதிவழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>நகராதது- நிலுவைகளை பதிவழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்<br>காலாவதியானது - பரிந்துரையைப் பெற ஏற்கனவே நான்கு உறுப்பினர்களைக் கொண்ட கணிப்பீட்டுச் சபை நியமிக்கப்பட்டுள்ளது</td></tr>
<tr><td>மகாவலி தொகுதி</td><td>நகராதது- நிலுவைகளை பதிவழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.</td></tr>
<tr><td>அனல்மின் தொகுதி</td><td>காலாவதியானது - பரிந்துரையைப் பெற ஏற்கனவே நான்கு உறுப்பினர்களைக் கொண்ட கணிப்பீட்டுச் சபை நியமிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>லக்ஷபான தொகுதி</td><td>ஒவ்வொரு செலவு மையத்திற்கும் மூன்று பேர் கொண்ட குழுவை நியமிப்பதன் மூலம் வருடாந்திர இருப்பு சரிபார்ப்பின் போது தெரிவிக்கப்படும் மெதுவான.∵ சேதமற்ற மற்றும் காலாவதியான இருப்புப் பொருட்களைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>துணைப் பொது மேலாளர் (லக்சபனா வளாகம்) மின் உற்பத்தி நிலையக் கடைக்காரர்கள் மற்றும் நிலையப் பொறியாளர்களுடன் ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுத்து இதற்கான தீர்வைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தினார். மேலும், மின் உற்பத்திப் பிரிவின் பிற வளாகங்களுக்கு ஏதேனும் இருப்புத் தொகை மாற்றப்பட வேண்டுமானால், மீதமுள்ள தொகையை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும். சேதமடைந்த மற்றும் காலாவதியான கையிருப்புகளை அகற்ற, மீதமுள்ள உதிரி பொருட்கள் இ.மி.ச. இன் அப்புறப்படுத்தும் நடைமுறையைப் பின்பற்றுகின்றனவா.</td></tr>
</table></td></tr>
</table>

| | |
|---|---|
| சொத்து முகாமை | 2021 ஆம் ஆண்டின் இருப்புச் சரிபார்ப்பின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் DGM (குடிமைப் பணிகள் மற்றும் கட்டிடம்) சபை பத்திர இல.: CW&B/CC/16/Verifi/2021க்கான ஒப்புதலின்படி, ரூ.255,300.77 மதிப்புள்ள இருப்புகளை அகற்றும் செயல்முறை ஏற்கனவே முடிந்துவிட்டது.<br><br>இருப்புச் சரிபார்ப்பின் சமீபத்திய முடிவுகளின் அடிப்படையில் 2022-12-31 இல் காலாவதியான மற்றும் சேவை செய்ய முடியாத இருப்புக் கணக்கிற்கான ஒதுக்கீட்டில் மீதமுள்ள நிலுவைகளுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் நிலை பின்வருமாறு..<br>• DGM (CW&B) அகற்றுவதற்கான ஒப்புதலைப் பெற சபை படிவம் அனுப்பியுள்ளது.<br>• DGM (W&AS) DGM (W&AS) கிளைக்கு தொடர்புடைய கையிருப்பில் அடையாளம் காணப்பட்ட சேதமடைந்த மற்றும் காலாவதியான பங்குகளை அப்புறப்படுத்த குழுக்களை நியமித்துள்ளது<br>• சமீபத்திய இருப்புச் சரிபார்ப்பு முடிவுகளுக்கு அமைய கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் |

**(கு) சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட விசாரணையின் பிரகாரம், 09 ஜூன் 2022 அன்று சபையின் தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கைகளின் காரணமாக ரன்தெனிகல மற்றும் ரன்தம்பே நீர்த்தேக்கங்கள் மூலம் வெளியிடப்பட்ட நீரைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய முறையே 160,000 Kwh மற்றும் 35,000 Kwh மின்சார அலகுகளை சபை இழந்துள்ளமை தெரியவந்துள்ளது. எனவே, அன்றைய தினம் தனியார் மின் கொள்முதல்களுக்காக சபை ரூபா 262.6 மில்லியன் மேலதிக செலவை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 08 டிசம்பர் 2022 அன்று எடுக்கப்பட்ட சபைத் தீர்மானத்தின்படி முறையான விசாரணையை மேற்கொண்டு 2023 பெப்ரவரி மாத இறுதியில் கூட பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து இழப்பை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.**

பெரும்பாலான இ.மி.ச. மின் உற்பத்தி நிலையங்கள் அன்று கிடைக்காத காரணத்தால், கணினிக் கட்டுப்பாடு, சேவை செய்யப்படாத சுமைகளைக் குறைக்கும் அதே வேளையில், கணினித் தேவையைப் பூர்த்தி செய்ய, கிடைக்கக்கூடிய குறைந்த விலை ஜெனரேட்டர்களை அனுப்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

**(கூ) ரூபா 3.15 பில்லியன் வியாபார செலுத்த வேண்டிய நிலுவை தொகையானது 3 ஆண்டுகளுக்கும் மேலாக கணக்குப் புத்தகங்களில் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் இறுதியில் கூட தீர்க்க நடவடிக்கை எடுக்காமல் இருந்தது. மேலே உள்ள தொகையில் ரூபா 2.9 பில்லியன் நொர்தர்ன் பவர் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் என்ற அனல் மின்சார வழங்குனருக்கு 4 ஆண்டுகளுக்கு முன்னர் விநியோகப் பிரிவு தொடர்பாக செலுத்தப்பட்டதாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து சட்டமா அதிபரிடமிருந்து பெறப்பட்ட விளக்கங்களின்படி, இந்த விலைப்பட்டியல்களைத் தீர்ப்பதற்கான பொறுப்பு சபைக்கு இல்லை என்று தீர்மானிக்கப்பட்டது. இருந்தபோதிலும், மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தின் இறுதி வரையிலும் இந்த செலுத்த வேண்டிய மீதியில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.**

| **பிரிவு** | **பதிலளிப்பு** |
|---|---|
| DD03 | DD3 தொடர்பான நிலுவைத் தொகையானது தொடர்புடைய நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய ரூ.14.6 நிலுவைத் தொகையைக் கொண்டுள்ளது. ஙீளு2 ஆல் மாகாணத்தின் (வர்த்தகம்) நிலுவையில் உள்ள பணம் செலுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்து வருகிறது |
| பிறப்பாக்கம | இ.மி.ச. இற்கும் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் படி நொர்தர்ன் பவர் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் (NPCPL) இன் செயல்பாட்டை நீர் மாசுபடுத்தும் ஒரு விடயத்தால் 2015-01-22 இடைநிறுத்தப்பட்டது.<br><br>2015-01-27 அன்று, நீதிமன்ற வழக்கு எண் ஆஊ 2892.∴ ீடு.∵.14 தொடர்பான, NPCPL இன் செயல்பாட்டை நிறுத்துமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.<br><br>மேற்படி நீதிமன்ற உத்தரவின் பேரில், NPCPL இலங்கைப் force Major என அறிவிக்கப்பட்டது.<br><br>2016-09-02 அன்று இ.மி.ச. ஆனது NPCPL ஆல் செய்யப்பட்ட தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டக் கருத்தைப் பெற்றது.<br><br>இது NPCPL க்கு இ.மி.ச. இன் DGM (EPT) /Norஅதிகாரம் -11 ஆம் இலக்க 2016-09-26 ஆந் திகதிய கடிம் மூலம் தெரிவிக்கப்பட்டது. 2015-01-27 நீதிமன்ற உத்தரவு "Sri Lanka Force Majeure" நிகழ்வாக இல்லை என்றும் எனவே இ.மி.ச. ஆனது NPCPL க்கு நிலையான கட்டணங்களை செலுத்துவதற்கு பொறுப்பில்லை என்றும் அந்த கடிதத்தின் மூலம் இ.மி.ச. NPCPL க்கு வலியுறுத்தியது.<br><br>NPCPL ஆனது 2018 ஆம் ஆண்டு வரை திறன் கட்டணங்களுக்காக மாதாந்திர விலைப்பட்டியல்களை இ.மி.ச. க்கு அனுப்பியுள்ளதுடன் இ.மி.ச. அதை வழங்கியுள்ளது. நீதிமன்ற வழக்குக்கான முடிவு கிடைக்கும் வரை பணம் மட்டுமே நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, இந்தக் கடனாளியின் இருப்பு கணக்குப் புத்தகங்களில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது.<br><br>ஆயினும்கூட, 2016-09-02 தேதியிட்ட கடிதத்தின் மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்ட சட்டக் கருத்தின்படி, இந்த வழக்கு "Sri Lanka Force Majeure" நிகழ்வாக இல்லாததால், இந்தத் தொகையை நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு இ.மி.ச. எந்தப் பொறுப்பையும் கொண்டிருக்கவில்லை.<br><br>ரூபா 2,886,675,795 தொகை இ.மி.ச. இன் கணக்குப் புத்தகங்களிலிருந்து NPCPL க்கு, கணக்காய்வுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டதுடன் செலுத்த வேண்டிய நிலுவையை அகற்ற சபை ஒப்புதல் பெறப்பட்டு 2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளை இறுதி செய்யும் போது தேவையான பதிவுகள் செயல்படுத்தப்படும். |

**(கெ) மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியிலுள்ள இடர் மற்றும் போக்குவரத்துக் கடன் மீதி ரூபா 10.36 பில்லியன் தொகையில் ரூபா 446 மில்லியன் என்பது தலைமையகப் பிரிவின் நிலுவையில் உள்ள கடன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் இதில் ரூபா 41.88 மில்லியன் கடன் நிலுவைத் தொகை 4 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது. ஆயினும்கூட, சம்பந்தப்பட்ட ஊழியர்கள் ஏற்கனவே இராஜினாமா செய்து 2 ஆண்டுகளுக்கும் மேலாக ஊதிய விடுப்பு பெறாததால், ரூபா 2.32 மில்லியன் கடன்களை வசூலிப்பது சந்தேகத்திற்குரியதாகக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது**

விதிமுறைகளின்படி, ஊழியர்கள வெளிநாட்டில் பணிபுரியும் போது, கடன்களின் மாதாந்த தவணைகளை செலுத்துவதற்கான வழிமுறையை வழங்க வேண்டும். அவர்களால் பணம் செலுத்த முடியாவிட்டால், நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளின்படி மீட்பு செயல்முறை மேற்கொள்ளப்பட வேண்டும். நீண்டகாலமாக நிலுவையில் உள்ள கடன்களின் நிலை ஏற்கனவே கண்டறியப்பட்டு, அவற்றின் இறுதி நிலுவைத் தொகையில் இருந்து வசூலிக்க தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

**(கே) 3 வருடங்களுக்கு முன்னர் கணக்குப் புத்தகங்களில் காணப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் நிலுவைத் தொகையான ரூபா 30.95 மில்லியனை விசாரித்து தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எவ்வாறாயினும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி வருடாந்த அறிக்கையின்படி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ஏதும் சபையால் செலுத்தப்பட வேண்டியதில்லை என்பது அவதானிக்கப்பட்டது.**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி வருடாந்த அறிக்கையின்படி, தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரியாக சபையால் செலுத்த வேண்டிய வரி ஏதும் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. சில இடுகையிடல் பிழைகள் காரணமாக இந்த சமநிலை ஏற்பட்டதுடன் வேறுபாடு ஏற்கனவே சரிசெய்யப்பட்டது.

**(கொ) ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் இடமிருந்து சபையால் மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பில் 2023 சனவரி 20 அன்று வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கையில் பின்வரும் அவதானிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன.**

(i) **ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் இடமிருந்து 10 வருட காலத்திற்கு மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்காக 09 மே 2003 அன்று அக்கம்பனியுடன் சபை ஒப்பந்தம் செய்து கொண்டது. ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் காலம் 06 ஏப்ரல் 2005 முதல் 06 ஏப்ரல் 2015 வரை நடைமுறையில் இருந்ததுடன் 06 ஏப்ரல் 2015 அன்று ஒப்பந்தம் முடிவடைந்த பின்னர், 23 மார்ச் 2016 அன்று அமைச்சரவையால் (அமைச்சரவை) மேற்படி ஆலையை சபைக்கு கொள்வனவு செய்வதற்கான அதிகாரத்தை பரிசீலிக்க முடிவு செய்யப்பட்டது. சபையின் கோரிக்கையை அடுத்து, அரசு மதிப்பீட்டாளர் இந்த மின் நிலையத்தின் மதிப்பை ரூபா 2,370 மில்லியன் என மதிப்பீடு செய்திருந்தார். மொத்த இலாபமான 55 சதவீதத்திலிருந்து 66.9 சதவீத இயலளவு மதிப்பையும் ஏனைய செயற்பாட்டுச் செலவையும் மாற்றுவதன் மூலம் அந்த மதிப்பை மதிப்பிடும்போது கணக்காய்வில் இந்த ஆலையின் மதிப்பு சுமார் ரூபா 4,176 மில்லியன் என மதிப்பிடப்பட்டது. எனவே, ஆலையின் மதிப்பான ரூபா 2,370 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 1,806 மில்லியனால் தேய்மானம் அடைந்துள்ளதை அவதானிக்க முடிந்தது. மறுபுறம், 10 வருட ஆரம்ப ஒப்பந்த காலத்தின் அடிப்படையில் கணக்கிற்கு கொண்டுவரப்பட்ட தேறிய இலாபத்தின் சராசரியை 9.5 சதவீத கழிவீட்டுக் காரணியில் கழிவீடு செய்து மதிப்பிடுகையில் எதிர்வரும் 8 ஆண்டுகளில் மின் உற்பத்தி நிலையத்தின் மதிப்பு கிட்டத்தட்ட ரூபா 4,192 மில்லியன் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் மதிப்பிடப்பட்ட பெறுமதியுடன் ஒப்பிடுகையில் ஆலையானது ரூபா 1,822 மில்லியன் பெறுமானத்தேய்வு அடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.**

*இதற்கான பதில் பின்னிணைப்பு 2 இல் தரப்பட்டுள்ளது.*

(ii) **அதன்படி, அனல்மின் நிலைய உரிமையாளரால் சபைக்கு விற்பனை செய்வதற்காக வழங்கியுள்ள விலையைக் காட்டிலும் மதிப்பிடப்பட்ட கேள்வி விலையானது ரூபா 2,446 மில்லியன் குறைவாக இருந்தது. எனவே, ஆலையைக் கொள்வனவு செய்யாது ஆரம்ப ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் காலத்தை 05 ஆண்டுகளிற்கும் 06 மாதங்களுக்கும் 06 ஏப்ரல் 2016 முதல் 08 செப்டம்பர் 2022 வரை 04 சந்தர்ப்பங்களில் காலநீடிப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனவே, அரசாங்க மதிப்பீட்டாளரால் மதிப்பிடப்பட்ட பெறுமதியைக் காட்டிலும் உரிமையாளரின் கேள்வி விலை குறைவாக இருந்ததமையால் மின் ஆலையை சபையால் கையகப்படுத்திய பின்னர் அதனை அரசுக்குச் சாதகமாகப் பராமரிக்கும் வாய்ப்பு சபையால் இழக்கப்பட்டிருந்தது.**

*இதற்கான பதில் பின்னிணைப்பு 2 இல் தரப்பட்டுள்ளது*

(iii) **2003 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட ஆரம்ப ஒப்பந்தம் 10 ஆண்டுகளுக்குப் பிறகு காலாவதியாகியிருந்ததுடன் ஆரம்ப ஒப்பந்தத்தின் நிபந்தனை இல. 11 இன் கீழ் 'நிகழ்வுகளை வாங்குதல்' தொடர்பான மேற்படி ஒப்பந்தத்தில் கூறப்பட்ட காலாவதி நிபந்தனை சேர்க்கப்படவில்லை. எனவே, 'நிகழ்வுகளை வாங்குதல்' எனும் அடிப்படையில் (கம்பனி மின் உற்பத்தி நிலையத்தை சபைக்கு விற்பனை செய்ய உத்தேசித்திருக்காத போதிலும்) இந்த மின் உற்பத்தி நிலையத்தை வாங்குவதற்கான உரிமைகளை சபை இழந்திருந்தது. மேலும், 20 வருடங்கள் பயனுள்ள ஆயுள் கொண்ட அந்தச் சொத்தின் மொத்தப் பெறுமதியானது 10 வருட காலத்திற்குள் ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் இற்கு சபையால் செலுத்தப்பட்டது.**

*இதற்கான பதில் பின்னிணைப்பு 2 இல் தரப்பட்டுள்ளது.*

(iv) **ஐந்து வருடங்கள் நீட்டிக்கப்பட்ட காலம் தொடர்பான இயலளவுக் கட்டணமாக அமெரிக்க டாலர் 29,085,134 செலுத்தப்பட்டது. அதில், அமெரிக்க டாலர் 21,701,362 (ரூபா 3,650 மில்லியன்) உரிமைத்துவ மூலதனத்தின் மீதான வருவாயில் செலுத்தப்பட்ட இயலளவு கட்டணங்களில் அதிகரிக்க முடியாத பகுதிக்கு மட்டுமே செலுத்தப்பட்டது. மின் உற்பத்தி நிலையத்தின் உரிமையாளர்கள் அதை சபைக்கு விற்பதற்காக சமர்ப்பித்த அமெரிக்க டாலர் 17,000,000 (ரூபா 2,446 மில்லியன்) கேள்வி விலையில் 127.7 சதவீதமாக அது காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.**

*இதற்கான பதில் பின்னிணைப்பு 2 இல் தரப்பட்டுள்ளது.*

(v) **உடன்படிக்கையின் ஆரம்ப காலப்பகுதியில் ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் தேறிய இலாபமாக ரூபா 8,572 மில்லியன் ஈட்டியிருந்ததுடன் அது 2003 ஆம் ஆண்டில் கம்பனி முதலீடு செய்திருந்த ஆரம்ப முதலீடான ரூபா 1,676 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 511 சதவீதமாக இருந்தது. மேலும், ஒப்பந்தத்தை நீட்டித்த பிறகு, ஐந்து வருட காலப்பகுதியில் தேறிய இலாபமாக ரூபா 6,270 மில்லியன் ஈட்டப்பட்டுள்ளதுடன் ஆரம்ப முதலீட்டின் சதவீதமாக இது 406 சதவீதமாகும். அதன்படி, ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் ஈட்டிய மொத்த தேறிய இலாபம் 31 மார்ச் 2021 இல் ரூபா 14,841 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன் இது ஆரம்ப முதலீட்டுடன் ஒப்பிடுகையில் 885 சதவீதமாக இருந்தது.**

*இதற்கான பதில் பின்னிணைப்பு 2 இல் தரப்பட்டுள்ளது.*

(vi) **ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய தனியார் மின் உற்பத்தி நிலையத்தின் உடன்படிக்கைக் காலத்தை நீடித்து மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும், தனியார் கம்பனிகளிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்வது தொடர்பில் 2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்திய) சட்டத்தின் 43 ஆவது பிரிவின் பிரகாரம் பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் குறித்து போதிய கவனம் செலுத்தப்பட்டமையினை அவதானிக்க முடியவில்லை.**
*இதற்கான பதில் பின்னிணைப்பு 2 இல் தரப்பட்டுள்ளது*

(vii) **திருத்தப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் விதிகளின்படி, மின் உற்பத்திக்கான உரிமங்கள் இலங்கையின் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட வேண்டும். அதன்படி, மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 43 (1) இன் படி, உரிமம் பெற்ற நிறுவனங்களால் மட்டுமே மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட வேண்டும். இருந்தபோதிலும், உற்பத்தி உரிமம் பெறாத ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் இடமிருந்து 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.**
*இதற்கான பதில் பின்னிணைப்பு 2 இல் தரப்பட்டுள்ளது*

(viii) **திருத்தப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் விதிகளின்படி, 100 வீத உரிமையைக் கொண்ட தனியார் நிறுவனங்களுக்கு 25 மெகாவாட்டிற்கும் அதிகமான மின் உற்பத்தி நிலையங்களை இயக்குவதற்கு எந்தவொரு ஏற்பாடும் இல்லை. எவ்வாறாயினும், குறுகிய கால அடிப்படையில் மின்சாரம் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் 100 வீதம் தனியார் உரிமையைக் கொண்ட 100 மெகாவாட் இயலளவுடைய ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் உடன் 06 ஏப்ரல் 2016 அன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.**
*இதற்கான பதில் பின்னிணைப்பு 2 இல் தரப்பட்டுள்ளது*



தி.கே லியனகே
நிதி முகாமையாளர்
இலங்கை மின்சார சபை



நளிந்த இலங்ககோன்
தலைவர்
இலங்கை மின்சார சபை



பொறியியலாளர்/கலாநிதி நரேந்திர டி சில்வா
ஆக்டிங் பொது முகாமையாளர்
இலங்கை மின்சார சபை

## இணைப்பு 01

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு LECO க்கு வழங்கப்பட்ட மாதாந்த விலைப்பட்டியல்களில் SSCL தொகை இணைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், விலைப்பட்டியல்களில் உள்ள குறித்த SSCL தொகைகள் LECO ஆல் தீர்க்கப்படவில்லை. அதன்படி, நிதி சிக்கல்கள் காரணமாக, IRD க்கு அனுப்புவதற்கு இ.மி.ச. இடம் நிதி காணப்படவில்லை.

மேலும், LECO இடமிருந்து SSCL தொகை கிடைக்காமையால் LECO இற்கான விற்பனை மீதான SSCL ஐத் தீர்ப்பதற்கான இயலாமை குறித்து 10 ஜனவரி 2023 மற்றும் 04 செப்டம்பர் 2023 தேதியிட்ட DGM/EMT/SSCL கடிதம் மூலம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

SSCL சட்டத்திற்கு இணங்க, இ.மி.ச. ஆனது SSCL வரிக்கு பொறுப்புடையதாக இருப்பதுடன் 2022-10-01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் LECO உட்பட அதன் வாடிக்கையாளர்களிடமிருந்து இது அறவிடப்படுகிறது. எவ்வாறாயினும், வாடிக்கையாளர்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான விநியோக உரிமத்தை வைத்திருக்கும் LECO ஆனது SSCL சட்டத்தின்படி SSCL இனைச் செலுத்துவதற்கு பொறுப்பாகாது. அதன்படி, இ.மி.ச. இன் இறுதிப் பயனர்களாக உள்ள வாடிக்கையாளர்கள் SSCL ஐ செலுத்துவதற்குப் பொறுப்பானவர்களாக காணப்படுகின்ற அதேவேளை LECO இன் இறுதிப் பயனர்களாக உள்ள வாடிக்கையாளர்கள் அதனைச் செலுத்தத் தேவையற்றவர்களாக காணப்படுகின்றமையால் LECO மற்றும் இ.மி.ச. இன் மின்சார நுகர்வோர் இடையே பாகுபாடு உருவாக்கப்பட்டுள்ளது. எனவே இரு நுகர்வோரையும் நியாயமான களத்திற்கு கொண்டு வருவது முக்கியம். அனைத்து விநியோக உரிமதாரர்களையும் SSCL க்கு பொறுப்பாக்குவதன் மூலம் இதை செயற்படுத்தலாம். அதற்கிணங்க, மின்சார வாடிக்கையாளர்களுக்கு ஏற்பட்டுள்ள வேறுபாடுகள் குறித்து கொள்கை வகுப்பாளர்களுக்கு தெரியப்படுத்தவும், மின்சார சட்டத்தில் திருத்தம் செய்யவும் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் இ.மி.ச. எடுத்துள்ளது. இச்சட்டத்தை திருத்துவதற்கு இ.மி.ச. மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகளுக்குப் பின்னர், 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க SSCL வரிச் சட்டத்தின் திருத்தம் தொடர்பான 23/0190/604/016 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் 30.01.2023 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. SSCL சட்டத்தில் பின்வருமாறு திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது;

**"2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட விநியோக உரிமத்தை வைத்திருக்கும் எந்தவொரு நபராலும் மின்சாரம் விநியோகத்தை தவிர வேறு மின்சார உற்பத்தி மற்றும் பரிமாற்றம் செய்வதற்கு SSCL இலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது".** மேலும், இந்தச் சட்டத்திலுள்ள திருத்தம் 2023 செப்டம்பர் முதல் அமலுக்கு வருவதுடன் 2023 செப்டம்பர் முதல் இ.மி.ச. இன் மின்சார பரிமாற்ற உரிமதார் SSCL க்கு பொறுப்பாக மாட்டார். எவ்வாறாயினும், 2023 செப்டம்பர் இற்கு முந்தைய காலத்திற்காக IRD க்கு செலுத்த வேண்டிய SSCL தொகையைத் தீர்ப்பதற்காக, FM(CEB)/AFM(HQ)/Tax Unit/SSCL ஆம் இலக்க 2023 அக்டோபர் 24 ஆந் தேதியிட்ட கடிதத்தின் மூலம் திறைசேரியின் தலையீட்டைக் இ.மி.ச. கோரியுள்ளது. IRD க்கு செலுத்த வேண்டிய SSCL பொறுப்பானது SSCL சட்டத்தில் உள்ள சிக்கலின் காரணமாக ஏற்பட்டு, அதனால் மின்சார வாடிக்கையாளர்களிடையே பாகுபாடு உருவாகியுள்ளதால் திறைசேரியின் தலையீடு கோரப்படுகிறது.

# இணைப்பு 02

**100MW ஏஸ் பவர் எம்பிலிபிடிய (பிரைவட்) லிமிடட் இடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்தல்**

**அறிமுகம்**

ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் ஆனது கட்டியமைத்து, உரித்தாக்கப்பட்டு, இயக்குதல் (BOO- பில்ட்-ஓன்-ஓபரேட்) முறையில் கூட்டிணைக்கப்பட்டதுடன் அதிசக்திவாய்ந்த எரிபொருள் (HFO) இயக்கப்பட்டு மறுபரிசீலனை செய்யும் இயந்திரத்தால் இயக்கப்படுகின்ற ஜெனரேட்டிங் செட்களை (DG Sets) பராமரிக்கும் நோக்கத்திற்காக 2003 ஆம் ஆண்டு அவசரகால மின் நிலையமாக அல்லாமல் அடிப்படை சுமை மின் நிலையமாக 100 மெகாவாட் உத்திரவாதம் அளிக்கப்பட்டு கூட்டிணைக்கப்பட்டுள்ளது. ஏஸ் பவர் எம்பிலிப்பிட்டிய மின் உற்பத்தி நிலையம் எம்பிலிப்பிட்டிய 132kV துணை மின் நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய மின் உற்பத்தி நிலையம் டெண்டர் நடைமுறையின் அடிப்படையில் மின்சாரம் கொள்வனவு செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இதற்கான ஆரம்ப ஒப்பந்தம் 09-05-2003 அன்று அமைச்சரவையின் ஒப்புதலுடன் கையெழுத்தானது. மின் உற்பத்தி நிலையம் கிரிட்டுடன் இணைக்கப்பட்டு 06-04-2005 அன்று இ.மி.ச. க்கு மின்சாரம் வழங்கப்பட்டது.
மூல மின் கொள்முதல் ஒப்பந்தம் (PPA) மற்றும் குறுகிய கால மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் (காலநீடிப்புகள்) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இந்த வசதி மூலம் உருவாக்கப்பட்ட மின்சார எரிசக்தி இ.மி.ச. ஆல் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஐந்து சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டது.

| விபரம் | PPA கைச்சாத்திட்ட திகதி | காலப்பகுதி | ஆண்டுகள் |
|---|---|---|---|
| மூல ஒப்பந்தம் | 2003-05-09 | 2005-04-05 முதல் 2015-04-04 வரை | 10 |
| முதல் நீடிப்பு | 2016-04-06 | 2016-04-05 முதல் 2017-04-04 வரை | 1 |
| இரண்டாம் நீடிப்பு | 2017-03-17 | 2017-04-06 முதல் 2018-04-05 வரை | 1 |
| மூன்றாம் நீடிப்பு | 2018-04-05 | 2018-04-06 முதல் 2021-04-05 வரை | 3 |
| நான்காம் நீடிப்பு | 2022-03-28 | 2022-03-28 முதல் 2022-09-28 வரை | 6 ஆழவொள |

PPA இன் படி, அளவீட்டு புள்ளியில் (எம்பிலிபிட்டிய கிரிட் துணை மின்நிலையம்) ஆலையின் ஆண்டுக்கான குறைந்தபட்ச உத்தரவாத எரிசக்தி அளவு (MGEA) 697.67 புறூ ஆகும்.

**மின் கொள்முதல் ஒப்பந்தத்தின் கட்டண அமைப்பு**

இ.மி.ச. க்கு மின்சாரத்தை வழங்குவதற்கான கட்டணமானது இயலளவுக் கட்டணம் மற்றும் எரிசக்தி கட்டணம் ஆகியவற்றை உள்ளடக்கியது. இயலளவுக் கட்டணமானது அதிகரிக்கின்ற கூறு மற்றும் அதிகரிக்க முடியாத என்ற இரண்டு கூறுகளைக் கொண்டுள்ளது;
கூறு. மின் கொள்முதல் ஒப்பந்தத்தின் (பிபிஏ) விதிமுறை மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க, இயலளவுக் கட்டணமானது குறைந்தபட்ச உத்தரவாத ஆற்றல் தொகையை (எம்ஜிஇஏ) அடிப்படையாகக் கொண்டது. இயலளவுக் கட்டணத்தின் அதிகரிக்கக்கூடிய கட்டணமானது அமெரிக்க நுகர்வோர் விலைக் குறியீடு (USCPI) கூறு முறை மற்றும் குறியீட்டு முறையின்படி கணக்கிடப்படும். இயலளவுக் கட்டணத்தின் அதிகரிக்க முடியாத கூறு நிலையானதாக இருப்பதுடன் அதிகரிப்புக்கு உட்படுத்தப்படாது.

எரிசக்திக் கட்டணமானது மூன்று கூறுகளைக் கொண்டுள்ளது அவையாவன; எரிபொருள் அல்லாத கூறு, எரிபொருள் எண்ணெய் கூறு மற்றும் எரிபொருள் போக்குவரத்து கூறு என்பனவாகும். எரிபொருள் அல்லாத கூறுகளில் மாறும் செயல்பாடு மற்றும் பராமரிப்பு கிரயங்கள் அடங்கும். எரிபொருள் எண்ணெய் கூறு என்பது ஆலையின் வெப்ப விகிதம் மற்றும் எரிபொருள் விலையின் அடிப்படையில் எரிசக்திக் கிரயத்தைக் குறிக்கிறது. வெப்ப விகிதம் என்பது ஒரு குறிப்பிட்ட காரணியாவதுடன் இது ஒரு வெப்ப ஆலையின் ஆலை இயலளவு (MW), தொழில்நுட்பம் மற்றும் எரிபொருள் வகை ஆகியவற்றால் தீர்மானிக்கப்படுகிறது. எரிபொருள் போக்குவரத்து கூறு என்பது மின் நிலையத்திற்கு எரிபொருளைக் கொண்டு செல்லும் போது ஏற்படும் செலவை உள்ளடக்கியது.

ஆரம்பித்து நிறுத்தும் கட்டணம்; ஒரு ஒப்பந்த காலத்திற்கு இலவச நிறுத்தங்களின் எண்ணிக்கையானது PPA இல் குறிப்பிடப்பட்டுள்ளது. ாயு இல் குறிப்பிடப்பட்டுள்ள இலவச நிறுத்தங்களை விட உண்மையான நிறுத்தங்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படும் போது; அனுப்புதலுக்குத் தேவைப்படும் ஒவ்வொரு மின் உற்பத்தித் தொகுப்பின் ஒவ்வொரு நிறுத்தத்திற்கும் நிறுத்தக் கட்டணம் காணப்படும்.

ஒவ்வொரு பட்டியலிடல் காலத்திற்கான மொத்த கொள்ளளவு கட்டணம் மற்றும் ஆற்றல் கட்டணமானது மூல PPA இன் IV ஆம் உறுப்புரை மற்றும் மூல ாயு இன் நான்காவது அட்டவணையில் உள்ள சூத்திரங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

US$/kWh இலுள்ள கொள்ளளவு கட்டணம் (அதிகரிக்க முடியாத கூறு), US$/kWh இலுள்ள இயலளவுக் கட்டணம் (எரிபொருள் அல்லாத கூறு), US$/kWh இலுள்ள அடிப்படை எரிசக்தி கட்டணம் (எரிபொருள் அல்லாத கூறு), எரிபொருள் நுகர்வு விகிதம் போன்ற ஒப்புக்கொள்ளப்பட்ட பெறுமதிகள் மற்றும் முதன்மை எரிபொருளின் அடிப்படை குறைந்த வெப்ப மதிப்பு என்பன PPA இல் உள்ள ஒவ்வொரு விதிமுறைகளிலும் ஒப்புக் கொள்ளப்படும்.

பட்டியலிடல் காலத்திற்கான ஒவ்வொரு விநியோகத்தினதும் எரிபொருள் விலைகள், அத்தகைய விநியோகத்துக்கான எரிபொருளின் அடர்த்தி, எரிபொருளின் குறைந்த வெப்ப மதிப்புகள் போன்ற மாறக்கூடிய அளவுருக்களானது CPC பட்டியல்கள் மற்றும் மூன்றாம் தரப்பு எரிபொருள் ஆய்வக அறிக்கைகளின் அடிப்படையில் சேகரிக்கப்படும். மீட்டர் அளவீடுகளின் புகைப்படங்களுடன் இரு கட்சிகளின் பிரதிநிதிகளால் கையொப்பமிடப்பட்ட கட்டண ஆற்றல் மீட்டர் வாசிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் வழங்கப்பட்ட மின் ஆற்றல் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**கூட்டத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட இ.மி.ச. இன் உரிமைகோரல் அலகு விலைக்கும் சட்டமா அதிபரின் உரிமைகோரல் அலகு விலைக்கும் இடையே உள்ள வேறுபாடு பற்றிய கருத்து**

கையொப்பமிடப்பட்ட PPA, சூத்திரங்கள், ஒப்புக்கொள்ளப்பட்ட மதிப்புகள் மற்றும் கிடைக்கக்கூடிய அளவுருக்கள் ஆகியவற்றின் அடிப்படையில், இ.மி.ச. பட்டியலிடல் காலத்திற்கான மொத்தக் கட்டணங்களைக் கணக்கிட்டதுடன் (சரிபார்ப்பு நோக்கத்திற்காக இரண்டு பொறியாளர்களால் தனித்தனியாகக் கணக்கிடப்பட்டது) கம்பனி சமர்ப்பித்த விலைப்பட்டியல் மூலம் சரிபார்க்கப்பட்டது.

பட்டியலிடல் காலத்திற்கான அலகு விகிதத்தை கணக்கிடப்பட்ட மேலே உள்ள மொத்தக் கட்டணங்களைப் பயன்படுத்தி நிர்ணயித்து குறிப்பிட்ட மாதத்திற்கு இ.மி.ச. க்கு எரிசக்தியை வழங்கலாம். ஆலையை தகுதி வரிசையில் அனுப்புவதற்கு சிஸ்டம் கன்ட்ரோல் கிளையால் கொள்ளளவு கட்டணம் கருத்திற் கொள்ளப்படுவதில்லை, ஏனெனில் இயலளவுக் கட்டணம் என்பது இ.மி.ச. க்கு குறிப்பிட்ட காலத்திற்கான நிலையான கிரயமாக காணப்பட்டு இது MGEA இன் அடிப்படையில் கணக்கிடப்படுவதனால் ஆகும்.

மின் உற்பத்தி நிலையங்களின் எனர்ஜி சார்ஜ் யூனிட் விகிதத்தை கருத்தில் கொண்டு மிகவும் சிக்கனமான அனுப்புதல் கட்டளை தயாரிக்கப்படுகிறது. 2022 ஜுன் 09 நிலவரப்படி, சமீபத்திய எரிபொருள் விலை லிட்டருக்கு ரூபா 369.00 ஆகவும் நாணயமாற்று விகிதம் LKR/USD 365.02 ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, சிஸ்டம் கட்டுப்பாட்டு மையத்தால் ஒரு kWhக்கு LKR 95.73 என எனர்ஜி சார்ஜ் யூனிட் கணக்கிடப்பட்டது.

கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்ட எரிசக்தி கட்டண அலகு விலையில் எந்த முரண்பாடும் இல்லை.

**முதன்மை ஒப்பந்தம் காலாவதியான பின்னர் இயலளவுக் கட்டணத்தை சாட்டுவதற்கான விளக்கம்**

இயலளவுக் கட்டணமானது 2 முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது

i அதிகரிக்கக்கூடிய இயலளவுக் கட்டணம் - நிர்வாக செலவுகள், நிலையான செயல்பாட்டுச் செலவுகள், கட்டிட மற்றும் வாகன பராமரிப்பு, மின்சார மற்றும் தண்ணீர் கட்டணங்கள்

ii அதிகரிக்காத இயலளவு மாறும் கிரயம் - இது 4 முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது
- அ) மூலதனம் திருப்பிச் செலுத்துதல்
- ஆ) உரிமைத்துவம் மீதான வருமானம்
- இ) காப்புறுதி
- ஈ) பெற்ற கடனுக்கான வட்டி

மூல ஒப்பந்தத்தின் 7வது ஆண்டிற்குப் பின்னர், மூலதனத் திருப்பிச் செலுத்தும் கூறு மற்றும் வட்டிக் கூறு 0 ஆகிவிடும்.
மூல ஒப்பந்தத்தின் 10வது ஆண்டுக்கு பின்னர் மட்டுமே காப்புறுதிக் கூறு பூஜ்ஜியமாக (0) மாறும்.
எனவே, மூல ஒப்பந்தக் காலத்தின் முடிவில், உரிமைத்துவக் கூறுகளின் மீதான வருமானம் மட்டுமே அதிகரிக்க முடியாத இயலளவுக் கட்டணமாக மீளச் செலுத்தப்படும்.

அதன்படி, முதல் நீடிப்பு ஒப்பந்தத்துடன் (1வது நீட்டிப்பு) தொடர்புடைய ஒரு ஆண்டுக்குரிய (ஏப்ரல் 2016 முதல் ஏப்ரல் 2017 வரை) இயலளவுக் கட்டணமானது (USD/kWh) ஒப்பந்தத்தை ஒரு காலத்திற்கு நீடிப்பதற்கான மூல ஒப்பந்தத்தின் பத்தாம் ஆண்டிற்குரிய இயலளவுக் கட்டணத்தில் (USD/kWh) 95% ஆக ஒப்புக் கொள்ளப்பட்டது. அத்துடன், அமெரிக்க நுகர்வோர் விலைக் குறியீட்டுடன் (USCPI) மாறுபடுகின்ற இரண்டு கூறுகளான அதிகரிக்கக்கூடிய இயலளவுக் கட்டணம் (குறைந்தபட்ச உத்தரவாத ஆற்றல் அளவு (MGEA) மற்றும் எரிபொருள் அல்லாத இயலளவுக் கட்டணம் (ஒரு kWhக்கு யூனிட் வீதம்) என்பன முதல் நீட்டிப்பின் ஆரம்பத்தில் நிலையானதாக்கப்பட்டன. (குறிப்பு: மூல ஒப்பந்தத்தின்படி, மூலதனத் திருப்பிச் செலுத்துதல், கடன் வட்டி மற்றும் காப்புறுதிக் கூறுகளின் கட்டணப் பெறுமதிகள் 10 ஆம் ஆண்டில் பூஜ்ஜியத்திற்குச் சமமாக உள்ளன.) மூல PPA ஒப்பந்த காலத்தின் போது செய்யப்பட்ட கட்டணங்களின் சுருக்கம் பின்வருமாறு;

| வழங்கப்பட்ட | | இயலளவுக் கட்டணம் | | ஏரிசக்தி கட்டணம் | |
|---|---|---|---|---|---|
| அதிகரிக்கும் கூறு | | அதிகரிக்காத கூறு | எரிபொருள் அல்லாத கூறு | எரிபொருள் எண்ணெய் கூறு | எரிபொருள் போக்குவரத்து கூறு |
| GWh | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 5,568.46 | 1,677.5 | 11,669.6 | 4,265.6 | 69,235.4 | 1,357 |
| 13,347.12 | | | 74,857.78 | | |

அதன்படி, PPA இன் மூல காலத்தின் போது எரிபொருள் எண்ணெய் கூறுக்காக நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட கட்டணம் ரூபா 69,235.4 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், PPA இன் மூல காலத்தின் போது எரிபொருள் விநியோகத்திற்காக CPC க்கு நிறுவனம் செலுத்திய பணம் ரூபா 65,332.8 மில்லியன் என்பதாக நிறுவனத்தின் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

❖ இதில் நிறுத்தக் கட்டணங்கள், தாமதமான வட்டி செலுத்துதல்கள் மற்றும் திருப்பிச் செலுத்தக்கூடிய வரிகள் உள்ளடக்கப்படவில்லை.

இரண்டாவது (ஏப்ரல் 2017-ஏப்ரல் 2018), மூன்றாவது (ஏப்ரல் 2018-ஏப்ரல் 2021) மற்றும் 4ஆவது (மார்ச் 2022 செப்டம்பர் 2022) கால நீடிப்புகளிற்கான இயலளவுக் கட்டணக் கூறுகளிலுள்ள அதிகரிக்க முடியாத இயலளவுக் கட்டணக் கூறு மற்றும் எரிபொருள் அல்லாத இயலளவுக் கட்டணக் கூறுகளுக்கான கட்டணங்கள் என்பன 1வது நீட்டிப்பின் தொடக்கத்தில் உள்ள பெறுமதிகளுக்கு நிலையானதாக்கப்பட்டது. நீடிப்புகளின் போது செய்யப்படும் கொடுப்பனவுகளின் சுருக்கம் பின்வருமாறு;

| வழங்கப்பட்ட | | இயலளவுக் கட்டணம் | | எரிசக்தி கட்டணம் | |
|---|---|---|---|---|---|
| அதிகரிக்கும் கூறு | | அதிகரிக்காத கூறு (உரிமை மீதான திரும்பல் + காப்புறுதி) | எரிபொருள் அல்லாத கூறு | எரிபொருள் எண்ணெய் கூறு | எரிபொருள் போக்குவரத்து கூறு |
| GWh | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2,285.6 | 1,243 | 3,653 | 3,312.8 | 46,760.6 | 879.8 |
| 4,896 | | | 50,953.2 | | |

அதன்படி, பிபிஏ இன் பிரகாரம் நீட்டிக்கப்பட்ட காலத்தில் எரிபொருள் எண்ணெய் கூறுக்காக நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட கட்டணம் ரூபா 46,760.6 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், நீட்டிக்கப்பட்ட காலப்பகுதியில் எரிபொருள் விநியோகத்திற்காக CPC க்கு நிறுவனம் செலுத்திய பணம் ரூபா 44,131.5 மில்லியன் என நிறுவனத்தின் விலைப்பட்டியல் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் நிறுத்தக் கட்டணங்கள், தாமதமான வட்டி செலுத்துதல்கள் மற்றும் திருப்பிச் செலுத்தக்கூடிய வரி செலுத்துதல்கள் உள்ளடக்கப்படவில்லை.

எரிபொருள் எண்ணெய் கூறு என்பது பயன்பாட்டிற்கான ஒரு அலகின் செலவாகும். எரிபொருள் நுகர்வு விகிதத்தில் (எ.்.ப்சிஆர்) பெறப்பட்ட எரிபொருள் எண்ணெய் கூறானது, 0.2217 கிலோ.்.கிலோவாட் என கொடுக்கப்பட்ட முதன்மை எரிபொருளின் (ஹெவி .்.ப்யூயல் ஆயில்) அடிப்படை குறைந்த வெப்ப மதிப்பில், ஏஸ் பவர் எம்பிலிபிட்டியவின் பிபிஏ இன் படி 42,677 கிலோஜே.்.கிலோ என கருதப்படுகிறது. எரிபொருள் நுகர்வு விகிதம் போட்டி கேள்விகோரல் முறையால் தீர்மானிக்கப்படுவதால், மூல ஒப்பந்தம் குறிப்பிட்ட விதிமுறைகளை மதிப்பாய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்காமையால், கணக்கீட்டின் விளைவைக் கருத்திற்கொள்ள முடியாதுள்ளது. எதிர்கால கேள்விகோரல்களில், அரசாங்கத்திற்கு அதிகபட்ச நிதிப் பலனை அடைவதற்காக எரிபொருள் நுகர்வு விகிதத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

### ஏஸ் பவர் எம்பிலிப்பிட்டிய கம்பனியிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான நடைமுறை

கேள்விகோரல் நடைமுறையின் அடிப்படையில் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்காக ஆலை தேர்வு செய்யப்பட்டு, அமைச்சரவையின் ஒப்புதலுடன் 09-05-2003 அன்று முதற்கட்ட ஒப்பந்தம் கையெழுத்தானது. மின் உற்பத்தி நிலையம் கிரிட்டுடன் இணைக்கப்பட்டு 06-04-2005 அன்று இ.மி.ச. க்கு மின்சாரம் வழங்கப்பட்டது. முதன்மை ஒப்பந்தத்தின் காலம் 10 ஆண்டுகளாகும்.

2016 மார்ச் 18 அன்று மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய கம்பனியை கையகப்படுத்துவதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு (CANC) மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (TEC) ஆகியவை பொது நிதித் திணைக்களத்தின் ஊடாக நியமிக்கப்பட்டன. ஒப்புதலுக்காக நடவடிக்கைகள் கோரப்பட்டுள்ளன. அதன்படி, 2016 மார்ச் 23 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவைப் பரிந்துரை பெறப்பட்டது.

இந்த ஆலையின் மதிப்பை நிர்ணயிக்க, அரசாங்கத்தின் தலைமை மதிப்பீட்டாளரிடம் இருந்து மதிப்பீட்டைப் பெறுவதற்கு CANC முடிவு செய்தது. வறட்சியின் போது நீர் மின் நிலையங்களில் இருந்து மின்சாரம் பெற முடியாததால் மின்சார நெருக்கடி ஏற்பட்டது. தலைமை மதிப்பீட்டாளர் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நேரம் எடுக்கும் என்பதால், மின்சார நெருக்கடியைத் தீர்க்க மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சானது அவசரகால அடிப்படையில் ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய கம்பனியிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்ய CANC மற்றும் TEC க்கு அறிவுறுத்தியுள்ளது.

மூல ஒப்பந்தத்தின் அடிப்படையிலும் விலை திருத்தத்துடனும், இந்த நிறுவனத்திடம் இருந்து மின்சாரம் வாங்குவதற்கு பேச்சுவார்த்தையை நடத்த மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் CANC இனை அறிவுறுத்தியது. மின் உற்பத்தி நிலையத்தை கொள்வனவு செய்வதற்கு CANC க்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதால், ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய கம்பனியிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சினால் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரம் 29-03-2016 அன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 30-03-2016 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய மின் உற்பத்தி நிலையத்திலிருந்து மின்சாரம் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முதல் நீட்டிப்பு ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் கோரப்பட்ட 01-04-2016 மற்றும் 06-04-2016 தேதியிட்ட கடிதங்கள், அமைச்சரவையின் ஒப்புதலுக்கு உட்பட்டு மின்சார சபையால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 06-04-2016 முதல் 06-04-2017 வரையிலான காலகட்டத்திற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஆலையில் இருந்து மின்சாரம் வாங்குவதற்கு ஆட்சேபனை இல்லை என்று பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு 07-04-2016 தேதியிட்ட கடிதம் மூலம் தெரிவித்துள்ளது.

மூல ஒப்பந்தக் காலத்தின் பத்தாம் ஆண்டில், அதிகரிக்க முடியாத இயலளவு கட்டணத்திலுள்ள உரிமைத்துவ கூறுகளின் வருமானம் மட்டுமே அடங்கும். மூல ஒப்பந்தத்தின் பத்தாவது வருடத்தின் அதிகரிக்க முடியாத இயலளவுக் கட்டணமாக 95% அதிகரிக்க முடியாத கட்டணத்தில் (USD/kWh) நீட்டிப்பு காலத்தின் 0.00627 USD/kWh என நிர்ணயிக்கப்பட்டது. 1 வது நீட்டிப்பு காலத்திற்கான கையொப்பமிடப்பட்ட அதிகரிக்க முடியாத இயலளவுக் கட்டணம் இரண்டு கூறுகளைக் கொண்டுள்ளது; உரிமைத்துவ மற்றும் காப்புறுதி மீதான வருமானம். 1வது நீட்டிப்புக் காலத்திற்கு மூலதனத் திருப்பிச் செலுத்துதல் மற்றும் கடன் வட்டிக் கூறு செலுத்துதல் ஆகியவை பூஜ்ஜியமாக அமைக்கப்பட்டுள்ளன.

09-12-2016 அன்று ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய ஆலையில் இருந்து மின்சாரம் கொள்வனவு செய்வதற்கான காரணங்களை முன்வைத்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு இலங்கை மின்சார சபை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

மார்ச் 2017 இல், நீர்த்தேக்கங்கள் வரண்டு, நீர்மின் நிலையங்களின் உற்பத்தித் திறன் குறைய வாய்ப்பு இருப்பதால், மீண்டும் ஓராண்டுக்கு (இரண்டாவது நீட்டிப்பாக) இந்த நிறுவனத்திடமிருந்து மின்சாரம் வாங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. மீண்டும், 29-12-2016 அன்று மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சினால் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 10-01-2017 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய மின் உற்பத்தி நிலையத்திலிருந்து மின்சாரம் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. மேலும் அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கைகள் இன்னும் அமைச்சினால் பெறப்படவில்லை.

இதன்படி, இரண்டாவது நீடிப்பு உடன்படிக்கைக்கு அனுமதி கோரி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு 17-03-2017 தேதியிட்ட கடிதத்தை இ.மி.ச. அனுப்பியது. எவ்வாறாயினும், 04-04-2017 தேதியிட்ட கடிதத்தின் மூலம், பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதிக்கு மேலதிக தகவல்களைக் கேட்டுள்ளது. அமைச்சரவை முடிவின்படி இந்த மின் கொள்முதல் செய்யப்பட்டதால், அனுமதி பெறுவதற்கு அமைச்சுச் செயலாளரின் ஆலோசனை மற்றும் தலையீட்டை எதிர்பார்ப்பதாக மின்சார சபை 05-18-2017 அன்று கடிதம் அனுப்பியுள்ளது

06-04-2017 முதல் 06-04-2018 வரையிலான காலக்கட்டத்தில், 2016 ஆம் ஆண்டின் முதல் நீட்டிப்பு ஒப்பந்தத்தைப் போலவே, இரண்டாவது நீட்டிப்பு ஒப்பந்தமும் 17-03-2017 அன்று கையெழுத்தானது. 2வது நீட்டிப்பு காலத்திற்காக கையொப்பமிடப்பட்ட அதிகரிக்க முடியாத இயலளவுக் கட்டணமானது 1வது நீட்டிப்புக் காலத்தைப் போன்றே காணப்பட்டதுடன், இதில் உரிமைத்துவ மீதான வருமானமும் காப்புறுதியும் மட்டுமே அடங்கியிருந்தது. 2 வது நீட்டிப்பு காலத்தின் எரிசக்தி கட்டண மதிப்புகளின் அதிகரிக்கக்கூடிய இயலளவுக் கட்டணம் (0.002133339 USD/kWh) மற்றும் எரிபொருள் அல்லாத கூறுகள் (0.008454097 USD/kWh) 1வது நீட்டிப்பு காலத்தின் 1வது ஆண்டின் பெறுமதிகளுக்கு (மூல ஒப்பந்தத்தின் பத்தாவது வருடத்தின் அதிகரிக்க முடியாத இயலளவுக் கட்டணமான 95%) சமமாக காணப்பட்டது.

2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், அரசாங்க விலை மதிப்பீட்டு அறிக்கையின் படி பெறுமதி ரூபா 2,370.00 மில்லியன் ஆகும். நிறுவனம் வழங்கிய பெறுமதியானது (17 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) அரசாங்க மதிப்பீட்டை விட அதிகமாக இருப்பதால், வழங்கப்படும் விலையை குறைக்க CANC இற்கும் நிறுவனத்திற்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதுடன் நிறுவனம் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. இது 2018-03 -15 தேதியிட்ட அமைச்சரவைப் பத்திரத்தில் தெளிவாக உள்ளது.

மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கான போதிய தகவல்கள் இ.மி.ச. இனால் அரசாங்க மதிப்பீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதுடன் போதிய தகவல்கள் இன்மை காரணமாக மதிப்பீடு குறைக்கப்பட்டது என்பதற்கான எவ்வித ஆதாரமும் இல்லை.

மேலும், 100 மெகாவாட் ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட்டின் கால நீட்டிப்பானது, கடந்த காலாவதியான பிபிஏவின்படி அளவுருக்களின் அடிப்படையில், இ.மி.ச. ஆல் பகுப்பாய்வு செய்யப்பட்டது. திட்டமிடப்பட்ட பாரிய அனல் மின்சார ஆலையான LTGEP ஆனது பட்டியலிடப்பட்ட படி 2018-2037 இல் இயக்கப்படுமாயின் 2023 ஆம் ஆண்டிற்குப் பிறகு, ஏஸ் பவர் எம்பிலிப்பிட்டிய இன் மினவலு கட்டுப்படுத்தப்படும் என்று அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. அதிகரிக்க முடியாத கூறுகளின் இயலளவுக் கட்டணங்களின் தேறிய தற்போதைய பெறுமதியை ஆராய்வதன் மூலம், குறுகிய கால நோக்கங்களுக்காக மட்டுமே ஆலையிலிருந்து மின்சாரம் அனுப்பப்படும் என்று கருதப்பட்டால், பிபிஏவை மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிப்பது இ.மி.ச. க்கு நன்மை பயக்கும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

22-02-2018 தேதியிட்ட CANC அறிக்கையிலுள்ள பரிந்துரைகளுடன், 15-03-2018 அன்று மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 27-03-2018 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 3 வருடங்களுக்கு மின்சாரம் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

2018-04-05 மற்றும் 2018-05-01 தேதியிட்ட கடிதங்கள் மூலம், இ.மி.ச. மூன்றாவது நீட்டிப்பு ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் கோரி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு கடிதங்களை அனுப்பியுள்ளது.

அதேபோல், மூன்றாவது நீட்டிப்பு ஒப்பந்தமும் 04-05-2018 அன்று இரண்டாவது நீட்டிப்பு ஒப்பந்தமாக 03 ஆண்டுகளுக்கு கையெழுத்தானது. 3 வது நீட்டிப்பு காலத்திற்கான கையொப்பமிடப்பட்ட அதிகரிக்க முடியாத இயலளவுக் கட்டணமானது 1 வது நீடிப்பு மற்றும் 2 வது நீட்டிப்பு காலத்தைப் போன்று காணப்பட்டது. இது இரண்டு கூறுகளையும் கொண்டுள்ளது; உரிமைத்துவம் மீதான வருமானம் மற்றும் காப்புறுதி. 3வது நீட்டிப்புக் காலத்தின் எரிசக்தி கட்டண மதிப்புகளின் அதிகரிக்கக்கூடிய இயலளவுக் கட்டணம் மற்றும் எரிபொருள் அல்லாத கூறு என்பன 1வது மற்றும் 2வது நீட்டிப்புக் காலத்தின் பெறுமதிகளுக்குச் சமமானதாகும். இந்த ஒப்பந்தம் 2021-04-06 இல் முடிவடைந்தது.

இதன்படி, 05 வருட காலத்திற்கான நீடிப்பு உடன்படிக்கைகள் மூலம் மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான கொடுப்பனவுகளின் சுருக்கம் இணைக்கப்பட்டுள்ளது (பின்னிணைப்பு 04). இங்கு காட்டப்பட்டுள்ள இயலளவுக் கட்டணத்திற்கான கட்டணம் ஒரு அலகுக் கட்டணத்தை அல்லது அது மின்சார உற்பத்திக்கான செலவை திருப்பிச் செலுத்துவதாகும்.

அதன்பிறகு, 2021 ஏப்ரல் பிற்பகுதியில் இருந்து ஏஸ் பவர் எம்பிலிப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தால் மின்சாரம் வாங்குவதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன. இது தொடர்பான அமைச்சரவை குறிப்புகள் மற்றும் ஒப்புதல்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

I. 2021-04-07 அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் 2021-04-19 அமைச்சரவை ஒப்புதல்
II. 2021-10-22 அமைச்சரவை விஞ்ஞாபனம்
III. 2022-01-26 அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் 2022-01-31 அமைச்சரவை ஒப்புதல்
IV. 2022-03-07 அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் 2022-03-07 அமைச்சரவை ஒப்புதல்

2021-04-07 தேதியிட்ட அமைச்சரவைப் பத்திரம் மூலம் அடுத்த ஆண்டு வரக்கூடிய மின் நெருக்கடியை எதிர்கொள்ளும் தீர்வுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டு முதல் புதிதாக பெரிய அளவிலான மின் உற்பத்தி நிலையங்கள் எதுவும் கணினியுடன் இணைக்கப்படாததால், மின் உற்பத்தி நிலையங்கள் எதிர்பாராத விதத்தில் பழுதடைந்தால், 2022 ஆம் ஆண்டு முதல் கேள்வியை முகாமைத்துவம் செய்யும் பொருட்டு மின்வெட்டு ஏற்படலாம் என்றும், அதற்கு மற்றுவழித் தேவை ஒன்று ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய மின் நிலையம் அமைக்க 03 ஆண்டுகள் தேவப்படுகின்றது. ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 06 மாத காலத்திற்கு மின்சாரத்தை கொள்வனவு

செய்வதற்கும், அந்த காலப்பகுதியின் இறுதியில் மின் நிலையத்தை கொள்வனவு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கும் 19-04-2021 அன்று அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து நடந்து வரும் கோவிட் 19 நெருக்கடி மற்றும் பிற காரணங்களால் புதிய மின் உற்பத்தி நிலையங்களின் கட்டுமானம் தாமதமானது. புதிய மின் உற்பத்தி நிலையங்கள் கட்டுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2022 ஆம் ஆண்டு வறட்சி காலத்துக்கு உற்பத்தித் திறன் போதுமானதாக இல்லை.

எனவே, நீர் மின் நிலையங்களின் செயல்பாடு அதிகரித்துள்ளதால், நீர்த்தேக்கங்கள் வேகமாக வறண்டு வருகின்றன. 2022 மார்ச் மாதத்திற்குள் தென் மாகாணத்தில் 07 மணித்தியாலங்களுக்கு மேலாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

அதன்படி, மின்சாரம் வாங்குவதற்கு, 04-03-2022 அன்று, மின் அமைச்சகத்தின் செயலாளர், பொது நிதித் துறை இயக்குநர் ஜெனரலுக்கு, நிலையான அமைச்சரவை நியமனம் செய்யப்பட்ட கொள்முதல் குழு (SCAPC) மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை (TEC) நியமிக்குமாறு தெரிவித்தார். அதன்படி, வுநுஊ குழு 08-03-2022 தேதியிட்ட கடிதம் மூலம் நியமிக்கப்பட்டது.

அதன்படி, இலங்கையில் ஏற்கனவே உள்ள மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து 06, 12, 24 மாதங்களுக்கு வரையறுக்கப்பட்ட மேற்கோள்கள் வழங்கப்பட்டு குறுகிய காலத்தில் செயல்பட முடியும். ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் மூன்றாவது நீட்டிப்பு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட அதே விலைகளை சமர்ப்பித்தது.

07-03-2022 அன்று, அமைச்சரவைப் பத்திரம் (24/2022/PE) மற்றும் அமைச்சரவை முடிவு எண். 22/0381/318/024 மின் விநியோகப் பற்றாக்குறை அவசரகால நிலையாகக் கருதப்பட்டது. மேலும்,

ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய ஆலையிலிருந்து 06 மாத காலத்திற்கு மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் உற்பத்தி மற்றும் ஏனைய பொருளாதார நடவடிக்கைகளை இடையூறு இன்றி பேணக்கூடிய வகையில், தீவு முழுவதும் தொடர்ச்சியான மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்த மின்சக்தி அமைச்சும் இலங்கை மின்சார சபையும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என 22/-381/318/024 இலக்கம் கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மின்சாரத்தை கொள்வனவு செய்யும் போது இலங்கை மின்சார சபை ஒரு மின்சார அலகுக்கான மேலதிக செலவையோ அல்லது கொள்ளளவு கட்டணத்தையோ சுமக்க வேண்டியிருந்தால், நிதி அமைச்சு மேற்படி மேலதிக செலவினங்களை மீள வழங்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

09-03-2022 அன்று, இ.மி.ச. இன் பொது முகாமையாளர், மின் உற்பத்தி நிலையத்திலிருந்து மின்சாரம் கொள்வனவு செய்வதற்கான அனுமதிக்கான கோரிக்கையையும் அதற்கான ஒப்பந்தத்தின் வரைவையும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தார்.

நான்காவது மின் கொள்முதல் நீட்டிப்பு ஒப்பந்தம் 28-03-2022 அன்று பின்வரும் உட்பிரிவுகள் உட்பட கையெழுத்திடப்பட்டது.

28-03-2022 அன்று கையொப்பமிடப்பட்ட பிபிஏவி இல் கட்டணத்தைக் கணக்கிடுவதற்குப் பயன்படுத்தப்படும் அனைத்து அளவுருக்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

i) இந்த ஒப்பந்த காலத்தில் எரிபொருள் பற்றாக்குறை இருப்பதால், எரிபொருள் கிடைக்காத காரணத்தால், மின் உற்பத்தி நிலையத்தை நிறுத்தும் போது, இயலளவுக் கட்டணத்தின் அதிகரிக்க முடியாத கூறு செலுத்தப்பட மாட்டாது.

ii) ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் தேதியில் (288.75 LKR/USD) அதிகரிக்க முடியாத கூறு மதிப்பை இலங்கை ரூபாவுக்கு மாற்றும் போது மாற்று விகித மதிப்பை சீராக்க வேண்டும்.
2022 ஆம் ஆண்டு இந்த குறுகிய கால மின்சாரத்தை கொள்வனவு செய்வதுடன் தொடர்புடைய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தொடர்பான கடிதங்கள் பின்வருமாறு.

I. ஆணைக்குழுவின் தலைவருக்கு முகவரியிட்ட இ.மி.ச. இன் 09-03-2022 தேதியிட்ட கடிதம்.
II. ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்துக்கு முகவரியிட்ட பிரதி பொது முகாமையாளர் (CS&RA) இன் 11-03-2022 தேதியிட்ட கடிதம்
III. பொது முகாமையளருக்கு முகவரியிட்ட ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் 12-03-2022 தேதியிட்ட கடிதம்
IV. இ.மி.ச. இன் தலைவரிடமிருந்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பிய 14-03-2022 தேதியிட்ட கடிதம்.
V. இ.மி.ச. இன் தலைவருக்கு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுப்பிய 14-03-2022 தேதியிட்ட கடிதம்.
VI. இ.மி.ச. இன் தலைவரிடமிருந்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பிய 28-03-2022 தேதியிட்ட கடிதம்.
VII. இ.மி.ச. இன் பொது முகாமையாளர் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பிய 27-04-2022 தேதியிட்ட கடிதம்.

**பொதுவான தகவல்கள்**

2016-04-06 முதல், திட்டத்தின் மூலதனத் திருப்பிச் செலுத்துதல் மற்றும் அதன் கடன் வட்டியைச் செலுத்துவதற்கான நீட்டிப்பு ஒப்பந்தம் எதுவும் கையெழுத்திடப்படவில்லை. 2016-04-06 முதல் 2021-04-06 வரை, முதல் மூன்று நீட்டிப்புகளின் போது, நிறுவனத்தின் உரிமைத்துவ வருமானம் (ஏப்ரல் 2016 இன் தற்போதைய மதிப்பு) 12.046 மில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும். 2016 ஆம் ஆண்டில், நிறுவனம் 17 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு ஆலையை விற்க ஒப்புக்கொண்டது. மின் உற்பத்தி நிலையத்தை கையகப்படுத்துவதற்குப் பதிலாக கடந்த 5 ஆண்டுகளில் (முதல் மூன்று நீட்டிப்புகளின் போது) மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டமையால் எந்த நட்டமும் ஏற்படவில்லை என்பதை இது காட்டுகிறது.

இதேபோன்ற (இயலளவு மற்றும் தொழில்நுட்பம்) 'புதிய' அனல் மின்நிலையத்தின் கொள்ளளவுக் கட்டணத்துடன் ஒப்பிடும்போது, பழைய அனல்மின் நிலையத்தின் கொள்ளளவுக் கட்டணச் செலவு குறைவாக உள்ளது. எனவே, பழைய அனல் மின் நிலையத்திலிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்வது, இ.மி.ச. இற்கு நிதி ரீதியாக நன்மை பயக்கும். எவ்வாறாயினும், PPA இல் உள்ள காலத்தின் முடிவில் ஏஸ் பவர் (பிரைவட்) லிமிடட் இடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்யும் மூல ஒப்பந்தம் இல்லாதொழிவதால் பொருத்தமான கொள்விலையை (BOO வகை IPP மாதிரி) செயல்படுத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு எந்தவொரு நிதி சாதகமான நிலைப்பாட்டையும் உறுதிப்படுத்த முடியும்.

மேலும், மின்சார எரிசக்தி மற்றும் மின்சார உற்பத்தி திறனைக் கொள்வனவு செய்வதை ஒழுங்குபடுத்தும் விதிகள் மற்றும் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட கட்டளைக்கு அப்பாற்பட்டு மின் உற்பத்தி நிலையங்களைக் கொள்முதல் செய்வதுடன் தொடர்புடைய எந்த ஏற்பாடும் இலங்கை மின்சாரச் சட்டத்தின் 43 வது பிரிவில் குறிப்பிடப்படவில்லை. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, பிபிஏ (BOOT - பில்ட்-ஓன்-ஆபரேட்-ட்ரான்ஸ்/பர் வகையுடன் சம்பந்தப்பட்ட IPP மாதிரிகள்) காலாவதியாகும் போது, கொள்வனவு விருப்பத்தை செயல்படுத்தி மின்சாரம் வாங்குவதற்கு இ.மி.ச. சமர்ப்பித்த முன்மொழிவுகளை இ.மி.ச.-க்கு தெரிவிக்க ஆணைக்குழு முடிவு செய்துள்ளது. இது இலங்கை மின்சார சட்டத்தின் பிரிவு 43 இன் விதிகளுக்கு இணங்கவில்லை.

BOOT வகை IPP மாதிரிகள் முதலீடு மற்றும் ஒப்பந்தத்தின் ஆரம்ப காலத்தின் போது ஏற்படும் மூலதன செலவுகளை ஈடுகட்ட வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த வகையான திட்டங்களுக்கு, PPA முடிவடையும் மற்றும்/அல்லது காலாவதியாகும் பட்சத்தில் ஒவ்வொரு வருடமும் வாங்கும் விலை உட்பட வசதியை வாங்குவதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளன. நிதி மாதிரியின் விடயத்தில் முதலீடு மற்றும் ஒப்பந்தத்தின் ஆரம்ப காலத்தின் போது ஏற்படும் மூலதனச் செலவுகளை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டிருந்தால், இந்த வசதியின் வாங்குதல் விலையானது காலாவதியாகும் போது பெயரளவில் ஒரு அமெரிக்க டாலராக இருக்கும். எவ்வாறாயினும், ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய விடயத்தில் இந்த அம்சம் கவனிக்கப்படவில்லை.

அனல் மின்நிலையத்தின் அலகு விலையானது, மின் உற்பத்தி நிலையத்தின் வெப்ப வீதம் மற்றும் எரிபொருள் விலையை அடிப்படையாகக் கொண்டது. எனவே, நீண்ட கால மின்சார உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின் (எல்டிஜிஇபி) கீழ் இயங்கும் 'புதிய' ஆலையின் அலகு விலையானது, பழைய அனல்மின் நிலையத்தின் அலகு விலையை விட குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கும் என்று உறுதியாகக் கூற முடியாது.

இந்த பேஸ் லோட் அனல் மின்நிலையத்தின் மின்சாரம் வறட்சிக் காலத்தில் மின் பற்றாக்குறையை சமாளிக்க அவசர அடிப்படையில் வாங்கப்பட்டமையால் கொள்முதல் செயல்பாட்டின் போது பேரம்பேசும் ஆற்றல் குறைவாக காணப்பட்டு, அரசிற்கு மிகவும் சாதகமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் ஒப்பந்தம் செய்வதற்கான வாய்ப்பு இழக்கப்பட்டது.

**தற்போதைய நிலைமை**

வறட்சிக் காலத்தில் பாரிய நீர் மின் நிலையங்களில் மின் உற்பத்தி குறைக்கப்பட்டதால் 2023 ஆம் ஆண்டில் இதேபோன்ற மின் உற்பத்தி பற்றாக்குறை ஏற்பட்டதுடன் அதன் விளைவாக போட்டி ஏல முறையில் தென் பிராந்தியத்திற்கு 100 மெகாவாட் துணை மின்சாரம் வாங்கப்பட்டது. எவ்வாறாயினும், நிலைமையை சமாளிக்க இ.மி.ச. க்கு சொந்தமான 30 MW மொத்த கொள்ளளவான துள்கிரிய, கொலன்னாவவில் நிறுவப்பட்ட டீசல் மின் உற்பத்தி நிலையங்களை தென் பிராந்திய மின்சார தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மிகக் குறுகிய காலத்தில் ஹம்பாந்தோட்டை GSS க்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும், புதிய லக்ஷபான முதல் ஹம்பாந்தோட்டை வரையிலான மின் கடத்தல் பாதையின் 900 மீற்றர் தூரம் தவிர்ந்த ஏனைய நிர்மாணப் பணிகள் கிட்டத்தட்ட நிறைவடைந்துள்ளன. இந்தப் பாதையை முடிக்காமை தென் பிராந்தியத்தை திறம்பட பூர்த்தி செய்வதற்கும் தடையாக உள்ளது. நிலங்களை கையகப்படுத்துதல் மற்றும் வழி விடுவது தொடர்பான சட்ட அம்சம் தொடர்பான பல்வேறு சிக்கல்களால் திட்டம் தாமதமானது. மீதமுள்ள 900 மீட்டர் பகுதியும் இதேபோன்ற நிலம்.ஃவழிச்சாலை பிரச்சினைக்கு உட்பட்டுள்ளது. தற்போதுள்ள தடைகள் களையப்பட்டு, மே 2023 இறுதிக்குள் இறுதி நிறைவு அடையலாம்.

ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நீண்ட கால உற்பத்தித் திட்டம் 2023-2042 க்கு இணங்க, இது 2030 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து 70மூ மின்சார உற்பத்தியில் கவனம் செலுத்துவதுடன் 223-2026, நீண்ட கால மின் உற்பத்தித் திட்டம் 2023-2042-ஐ அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி திறன், தென் பிராந்தியத்தில் மேலதிகமாக 320 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க மின் திறனைக் கண்டறிந்துள்ளது. தற்போது டெவலப்பர்கள் கூட்டமைப்பினால் 130 மெகாவாட் நிலத்தில் பொருத்தப்பட்ட சோலார் பிவி மின் உற்பத்தி நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# சுருக்கக் குறியீடுகள்

AC - காற்று பதனமாக்கி
ADB - ஆசிய அபிவிருத்தி வங்கி
AFM - மேலதிக நிதி முகாமையாளர்
AGM - மேலதிகப் பொது முகாமையாளர்
B&OS - வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயம்
BOQ - கணியப் பட்டியல்
BSC - சுற்றுமுறிப்பான் இணைப்பிக் கொள்ளளவிகள்
CA - நிறுவன அலுவல்கள்
CANC - அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு
C&C - வர்த்தகம் மற்றும் நிறுவனம்
CDM - நிருமாணம் வடிவமைப்பு மற்றும் முகாமை
CE - பிரதம பொறியியலாளர்
CEA Act. - மத்திய சுற்றாடல் அதிகாரசபை சட்டம்
CEB - இலங்கை மின்சார சபை
CEBPF - இலங்கை மின்சார சபை சேம நிதியம்
CEMS - தொடர்ச்சியான புகைக் கண்காணிப்பு முறைமைகள்
CMDS - சுற்றறிக்கைகள், கையேடுகள் மற்றும் ஆவண முறைமை
CMT - நிறுவன முகாமைத்துவ அணி
CO - காபனோரோட்சைட்டு
COPE - பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழு
CP - மத்திய மாகாணம்
CPC - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
CPD - தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி
CRR - நிறுவனம் மற்றும் ஒழுங்குபடுத்தல் உறவுகள்
CS&RA - நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள்
CSC - நுகர்வோர் சேவை நிலையம்
CSE - கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம்
CSR - நிறுவன சமூகப் பொறுப்புடமை
CW&B - குடியியல் வேலைகள் மற்றும் கட்டடங்கள்
DC - நேர் மின்னோட்டம்
DD1 - விநியோகப் பிரிவு 1
DD2 - விநியோகப் பிரிவு 2
DD3 - விநியோகப் பிரிவு 3
DD4 - விநியோகப் பிரிவு 4
DFM - பிரதி நிதி முகாமையாளர்
DGM - பிரதிப் பொது முகாமையாளர்
DGM(P) - பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி)
DGEU - அரசாங்க மின் பொறுப்பேற்றல் திணைக்களம்
DNCC - விநியோக வலையமைப்பு கட்டுப்பாட்டு நிலையங்கள்
DSCR - கடன் - சேவை உள்ளடக்க வீதம்
EGC - ஊழியர்கள் குறைதீர் குழு
EMS - சக்தி முகாமைத்துவ முறைமை
EMU - சுற்றாடல் கண்காணிப்பு அலகு
ERD - வெளிவாரி வளத் திணைக்களம்
FD - கட்டாய வரைவு
FS&PD - தொழிற்பாட்டு உபாயம் மற்றும் செயன்முறை அபிவிருத்தி
FSUR - மிதப்புக் களஞ்சியம் மற்றும் மீள்வாயுவாக்கல் அலகு
GC - இணைக்கப்பட்ட மின்தொகுப்பு
GIS - வாயு காப்பிடப்பட்ட உபமின் நிலையம்
GIS - புவியியல்சார் தகவல் முறைமை
GOSL - இலங்கை அரசாங்கம்
GS - மின்தொகுப்பு உபமின் நிலையம்
GT - எரிவாயு விசையாழி
HR - மனித வளம்
HR - மனித வள முகாமையாளர்
ICASL - இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம்
IPP - சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்கள்
IT - தகவல் தொழில்நுட்பவியல்
ITI - தொழில்துறை தொழினுட்ப நிறுவகம்
JICA - யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை
KPS - களனிதிஸ்ஸ மின்வலு நிலையம்
LC - நாணயக் கடிதம்
LECO - வரையறுக்கப்பட்ட லங்கா (தனி.) மின்சாரக் கம்பனி
LKAS - இலங்கை கணக்கீட்டு நியமங்கள்
LKR - இலங்கை ரூபா
LOI - நோக்கக் கடிதம்
LNG - திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு
LTGEP - நீண்ட கால பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம்
LTL - லங்கா டிரான்ஸ்போமர்ஸ் லிமிட்டெட்
LV - தாழ் மின்னழுத்தம்
LVPP - லக்விஜய மின்வலு ஆலை
MEPA - கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை
MLKR - மில்லியன் இலங்கை ரூபாய்
MLTS - நடுத்தர மட்டத் தொழில்நுட்ப பணித்தொகுதியினர்
MMT - மில்லியன் மெற்றிக் தொன்
MOI - நீர்பாசன அமைச்சு
MT - பிரதான மின்மாற்றி
MV - இடைநிலை மின்னழுத்தம்
MVA - மெகா வோல்ட் அம்பியர்
NARA - தேசிய நீர் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவராண்மை
NBQSA - தேசிய சிறந்த தர மென்பொருள் விருது
NCP - வட மத்திய மாகாணம்

# சுருக்கக் குறியீடுகள் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| NCRE | - | மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி |
| NGO | - | அரசு சாரா நிறுவனங்கள் |
| NO2 | - | நைதரசனீரொட்சைட்டு |
| NVQ | - | தேசிய தொழில்த் தகைமை |
| NWP | - | வட மேல் மாகாணம் |
| NWSDB | - | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை |
| O3 | - | ஓசோன் |
| OEM | - | மூல உபகரண தயாரிப்பு |
| PD | - | செயற்றிட்டப் பணிப்பாளர் |
| PM | - | குறிப்பிட்ட விடயம் |
| PMU | - | செயற்றிட்ட முகாமைத்துவ அலகு |
| PPA | - | மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கை |
| PP | - | மின்வலு ஆலை |
| PS | - | மின்வலு நிலையம் |
| PUCSL | - | இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு |
| PV | - | ஒளி மின்னழுத்தம் |
| R&D | - | ஆய்வு மற்றும் அபிவிருத்தி |
| RCL | - | ஒளியூட்டலுக்கான பிராந்திய நிலையம் |
| RE | - | கிராமிய மின்னூட்டம் |
| ROE | - | உரிமையாண்மை மீதான திரும்பல் |
| SAIDI | - | முறைமைச் சராசரி குறுக்கீட்டுக் காலச் சுட்டெண் |
| SAIFI | - | முறைமைச் சராசரி குறுக்கீட்டு அதிர்வெண் சுட்டெண் |
| SESRIP | - | ஆதரவு மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்பாட்டுச் செயற்றிட்டம் |
| SLAS | - | இலங்கை நிருவாக சேவை |
| SLFRS | - | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் |
| SLIDA | - | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் |
| SO2 | - | சல்பரீரொட்சைட்டு |
| SP | - | தென் மாகாணம் |
| SPPA | - | நியமப்படுத்தப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகள் |
| ST | - | நீராவி விசையாழி |
| SVS | - | நிலைக்கூற்று வார் முறைமை |
| TL | - | மின் பரிமாற்ற மார்க்கம் |
| UNT | - | சீரான தேசிய விதிப்பனவு |
| UNFCCC | - | காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு மாநாடு |
| UOMDP | - | உமா ஓயா பல நோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டம் |
| USA | - | ஐக்கிய அமெரிக்கா |
| USAID | - | சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மை |
| USD | - | அமெரிக்க டொலர் |
| VAT | - | பெறுமதி சேர் வரி |
| WPLR | - | நிறையேற்றிய முதன்மைக் கடன் வீதம் |
| WPN | - | மேல் மாகாணம் வடக்கு |
| WPS | - | மேல் மாகாணம் தெற்கு |
| WRB | - | நீர் வளச் சபை |
| WRB | - | நீர் வளச் சபை |

இலங்கை மின்சார சபை
கொழும்பு 00200, இலங்கை
www.ceb.lk

Designed by BC Advertising